R6
N20

ஸ்ரீராமஜெயம்.

ஸ்ரீமந் நிகமாந்த குரவே நம:

பராசர ஸ்மிருதி

என்னப்படுகிற

கலியுக தர்ம சாஸ்திரம்

மாதவீய வியாக்கியா[illegible]துடன்

ஈகை

வித்துவான்

ஸ்ரீமத். வரதாசாரியருடைய

உதவியைக்கொண்டு,

களக்காட்டூர்

கருணா. வரதாசாரியரால்

மொழிபெயர்க்கப்பட்டு,

Accn. No: 225353
No of Pages: 834

சென்னை: ஆல்பீனியன் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

225353

விரோதி-ஹு

இதன்விலை ரூபா. 1—அணா—12. தபால்சார்ஜ் அணா—3.

Copy right Registered.

Madras.

ஸ்ரீரஸ்து.

முகவுரை.

பிரணவத்தின் பரம்பொருளான பரமபுருஷன் "దాసభూతాః స్వ
స్సర్వే హ్యాత్మానః పరమాత్మనః" என்கிறபடி தனக்கடியார்களான ஸம
்த பிராணிகளின் அநிஷ்டங்களை நிவர்த்திசெய்து இஷ்டங்களை
ளிப்பது தனதேயானபின்பு உலகத்தில் பூபாலர்கள் தம்முடைய பி
ஜைகளின் நன்மையைக்கோரிச் சட்டமிடுவதுபோல அவர்களின்
்த்தையே உத்தேசித்து விதி விலக்கு ரூபமான வேதமென்னும்
ட்டத்தைத் தந்து அதனுடைய அரும் பொருளைச் செவ்வே உணர்த்
வான் மநு முதலானோருக்கு ஆணையிட அவர்களும் ஸ்மிருதி ரூப
ாய் வேதத்திற்கு உபப்பிரமாணங்களைச் செய்தனர்கள்.

அவைகளில் மந்வாதி ஸ்மிருதிகளின்படி நடப்பது கிருதாதி யுக
ங்களிலன்றி இந்தக் கலியுகத்தில் ஜனங்களுக்கு அஸாத்தியமென்னு
ிடத்தை ஆலோசித்துப்பரமகாருணிகராயும் "స హోవాచ వ్యాసః పా
రాశర్యః" பராசர புத்திரரான வியாஸர் சொன்னாரென்று விஷ்ணுவி
ன் அவதாரமான வியாஸ பகவானுக்கும் ஏற்றமூட்டவல்ல மகிமையு
டையவராயும் ஸர்வஞ்ஞராயு மிருந்துள்ள பகவான் பராசரர் அருளிச்
செய்த பாராசரமென்கிற ஸ்மிருதி "కలౌ పారాశరాస్స్మృతాః" என்று
இந்தக்கலியுகத்தில் சாரிதார்த்தமுடையதானதுபற்றி மன்னுயிர்க்கு
அத்தியந்தம்ஆவசியகமாகையால், அதுவும் கீர்வாண பாஷையில் அறி
வுடையோர்க்கேயன்றிவனையோர்க்குப் பயன்படாமலிருப்பதைச்சிந்
தித்த யான் தூய நான்மறைக்கும் பொருளுரைத்து அதைவியாஸ பக
வானிடம் அரங்கேற்றிப் பெரும் புகழ்படைத்து விளங்கும் ஸ்ரீமாத
வாசாரியர் இதற்குச்செய்த வியாக்கியாநத்தை அனைவருக்கும் விஷ
யங்கள் எளிதில் புலப்படும்வண்ணம் பண்டிதராகிய ஸ்ரீமான், ஈகை,
வரதாசாரியருடைய உதவியைக்கொண்டு முக்கியமான விஷயங்
களை விடாமல் சுருக்கமாய்ச் செந்தமிழில் சுலபமான நடையில் மொ
ழிபெயர்த்து அதை மூலத்துடன் அச்சியற்றினன்.

மிக்குளவேனும் விஷத்தைக் கழுத்தில் மறை
முடியில் நிறுத்தி மகிழ்கின்ற மகேசுவரனைப்
... மதியுடையோர் வெளிக்காட்டாது உள்ளொடுக்
கிப் பெண்களும் பேதைகளும் எளிதில் உணர்ந்துய்யுமாறு இங்ஙன
மியற்றியதோர் நன்மைக்குச் சிரம் குலுக்குவரென மகிழ்ச்சியடைவ
தன்றியும், அப்பிழைகளை இவ்வெளியனுக்குத் தயைசெய்து அறிவி
த்தால் அவரை எனக்குப் பேருதவி செய்தவராகப் பாவிக்கச் சி...
மாயிருக்கின்றனன்.

ஸ்ரீபராசர பகவான் ஆங்காங்குச் சுருக்கிச்சொன்ன விடங்க...
ல் மாதவாசாரியர் ஸ்காந்தம், பாத்மம், நாரதீயம் முதலான மகாபு...
ணங்களிலும் மநு, தேவலர், யாக்கியவல்கியர் முதலான மகா ரிஷி...
ளால் அருளிச்செய்யப்பட்ட ஸ்மிருதிகளிலு மிருந்தெடுத்துச் சொ...
ன விசேஷ விஷயங்களாலேயே இவருடைய மகிமை விளங்கு...

இதுவரையிலும் தமிழில் வசந நடையில் அச்சிடப்படாத பு...
ஹைதிகளை வெளியிட முயன்ற யான் சுதேச வித்தியாபிமானிகளா...
சில ஹிந்து கனவான்களின் ஆதரவினால் முதலில் இந்தப் பராச...
ஸ்மிருதியை ஒருவாறு முடித்தனன்.

இப்போது ஸ்காந்த மகா புராணத்தின் முதலாவது ஸநத்குமா...
ஸம்ஹிதை, பாத்மபுராணத்தின் உத்தரகண்டம், ஹரிவம்சம், போஜ...
சம்பு ஆகிய இவைகளையும் மேற்காட்டிய கனவான்கள் கைகொ...
ப்பார்களென்று எதிர்பார்த்தே கீர்வாணத்தினின்று தமிழில் மொழி
பெயர்த்து வருகின்றனன்.

இங்ஙனம்,

சருணு. வரதாசாரியன்.

கெ - எ. வெங்கிடராயர்சந்து, பெத்துநாயகன்பேட்டை, சென்னை.

ஸ்ரீயைநம:

நூலாசிரியரான

பராசரர் சரித்திரம்.

சிருஷ்டிகர்த்தாவான நான்முகக்கடவுளுடைய புத்திரரும் ஸர்வஞ்ஞரும் சூரியகுல குருவுமான வஸிஷ்டமகாரிஷிக்குப் பௌத்திரராகிய பராசரர் இளம்பருவத்திலேயே தபோநிஷ்டராய்த் தேவலோகம் முதலான விடங்களில் ஸஞ்சாரம்செய்து ஆங்காங்குள்ள விசித்திரவிநோதங்களைக் கண்ணுற்று மீண்டும் தமது ஆச்சிரமமேற வருவதற்குள் தம்முடைய பிதாவாகிய சக்தியென்பவரை விசுவாமித்திரரால் ஏவப்பட்ட ராட்சஸனொருவன் பட்சித்துப்போட்டானென்கிற வார்த்தையைக்கேட்டுக் கோபமூண்டு ராட்சஸர்களை அழிக்கத்தக்க யாகமொன்றுஆரம்பித்துச் செய்கையில் அந்த யாகத்தில் அநேகமாயிரம் ராட்சஸர்கள் சாம்பராய்ப்போவதை அசுரர்கள் பார்த்துப் பயந்து இனி மிச்சமாயிருப்பவராகிலும் பிழைக்க வழிதேடவேண்டுமென்று யோசித்துத் தங்கள் குலபதியான புலஸ்திய பிரஜாபதியைச் சரணமடைய அவர் இதைக் கிருபையுடன் வஸிஷ்டருக்கு அறிவித்து அவருடன் பராசரர் யாகஞ்செய்யு மிடத்துக்குச் சென்றனர்.

அப்போது பராசரர் அந்த மகாத்துமாக்களுடைய ஸேவையினல் பரம ஸந்துஷ்டராய்ப் பக்தியோடு கிரமமாய் அவர்களைப்பூசித்து யோகக்ஷேமங்களை விசாரிக்க, வஸிஷ்டர் பராசரரைநோக்கிக் குழந்தாய், நீ இப்போது கொண்டிருக்கிறமிகுந்த கோபத்தை விட்டுவிடு, ராட்சஸர்மேல் குற்றமில்லை, உன்தகப்பனுக்கு அப்படி விதியிருந்தது, இந்தக்கோபம் மூடருக்கே யன்றி ஞானிகளுக்கு வராது, அவனவன் தான்செய்த பாபபுண்ணியங்களுக்கீடாகப் பலனை அனுபவிக்கிறன், மிகவும் சிரமப்பட்டு ஸம்பாதித்த கீர்த்தியையும் தவத்தையும் கோபம் அழிக்கும், அபராதம் பண்ணுமலிருக்கிற பேதையரான ராட்சஸர் அநேகர் நீறுய்ப்போனதுபோதும், இனிஇந்த யாகத்தை நிறுத்திவிடு, பெரியோர்களெல்லாம் பொறுமையுடையவன்றே

ஆசர்ரமாகப் பிடித்திருக்கிறார்கள் என்றிந்தப்பிரகாரம் சொன்னதை க்கேட்டுப் பராசரர் உடனேயாகத்தை ஒழித்தார்.

அதனால் வஸிஷ்டபகவான் திருவுள்ளமுகத்தலும், அருகிலுள்ள புலஸ்தியர் பராசரரை நோக்கி அப்பா,மகத்தான வைர மிருக்கையும் அந்தக் குருவினுடைய வாக்கியத்தினால் நீ பொறுமையடைந்து நமது ஸந்ததியை வேரோடு நாசஞ் செய்யாமையினாலே நம்முடைய அநுக்கிரகத்தினால் உனக்கு ஸகலசாஸ்திரஞானமும்ஸ்மிருதி புராணாதிகளைச் செய்கிற சக்தியும் இன்னதே மேலான தேவதை என்னும் தத்துவஞானமும் உண்டாகக் கடவனவென்று அநுக்கிரகித்த பிறகு தபோநிதியான வஸிஷ்டரும் அங்ஙனமே யாகுகவென்று அருளிச்செய்தார்.

அவ்வாறு புலஸ்தியராலும் வஸிஷ்டராலும் அநுக்கிரகிக்கப்பட்டு விசேஷஞானவானான பராசரர் தம்முடைய புத்திரரும், ஸ்ரீமந் நாராயணாம்ச பூதரும், நான்குவேதங்களையும் சிக்கறுத்தமையால் வேதவியாஸரென்று சிறப்புப் பெயர்பெற்றவரும், பதினெண்புராணங்களையும் உலகத்தாருய்யப் பிரஸித்தஞ்செய்தவருமாகிய வியாஸபகவான் பிரார்த்திக்கக் கருணைகூர்ந்து கலியுகத்திற்கேற்ற தர்மங்களை யுணர்த்துவதான இந்த ஸ்மிருதியை அவர் மூலமாக வெளியிட்டருளினார். இன்னும் இவருடைய பெருமையைப் புராணரத்தினமாகிய ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் பரக்கக் காணலாம்.

க. வ.

ஸ்ரீ

உரையாசிரியரான

மாதவாசாரியர் சரித்திரம்.

வடதேசத்தில் துங்கபத்திரா நதிக்கரையிலுள்ள வொரு பட்டணத்தில் எறக்குறைய ௫00-வருஷங்களுக்கு முன் பாரத்வாஜ குலதிலகராய் மாயணாசாரியரென்னும் பெயர்பூண்டு விளங்கிய ஒரு பிராம்மணசிரேஷ்டர் தர்மசாரிணியான ஸுகீர்த்தி என்னும் பத்நியுடன் வாழ்ந்துகொண்டிருக்கையில் அவர்களுக்குத் தெய்வகடாக்ஷத்தினால் முச்சுடர்போல மூன்று புத்திரர் தோன்றினர். அவர்களில் சாயணர் போகநாதர் என்னும் இருவர் கணாதசூத்திரம் முதலியவைகளுக்குப் பாஷியாதிகளைச்செய்து உலகத்தில் பெரும்புகழ் அடைந்தனர். மூன்றாவது புதல்வரான மாதவாசாரியர் இளமையிலேதானே ஸகல சாஸ்திர நிபுணராய் பராசரஸ்மிருதி முதலிய அருமையான கிரந்தங்களுக்கு வியாக்கியானம் செய்தருளி ஆங்காங்குள்ள வித்துவான்களைத் தமது கல்வித்திறத்தால் ஜயித்து வித்தியாரண்ணியரென்னும் பிருதுபெற்று ஞானதேஜசு நாளுக்குநாள் அபிவிர்த்தியடையப் பூர்ண சந்திரன்போலப் பிரகாசித்துவந்தனர்.

ஒருநாள் இவர் தமது குடும்பத்தை வறுமைநோய் இடைவிடாது வருத்துவதை மனதினால் சிந்தித்து இதை எங்ஙனமாவது துரத்துவது முக்கியகாரியமென்று தீர்மானித்து ஒருமலைமுழைஞ்சில் மன்னி மஹேசுவரியை நோக்கிக் கடுந்தவம் செய்யாநிற்புழி, உமாதேவி இவருடைய தவத்திற்குமெச்சிப் பிரஸன்னையாய் மாதவரை நோக்கி நீர் வேண்டும் வரம் யாதென்ன, அவர் வணங்கி லோகமாதாவே, பிறவி தொடங்கி என்னை வருத்திவருகின்ற வறுமையைத்துரந்து யான் பெரும்பொருள்படைக்குமாறு அருள்வாயென்று வேண்டலும், உமக்கு இப்பிறப்பிலின்றி மறுபிறப்பில் அங்ஙனமே அளிப்போமென்று சொல்லி அன்னை மறைந்தனள்.

மாதவாசாரியர் அதைக்கேட்டு இதேயோ யாம்பெற்றபேறு என்று மனம் வெறுத்து அக்கணமே துறவறம்பூண்டு சின்னாட்சென்றபின்னர் நாலு வேதத்திற்கும் பாஷியம்செய்து அக்காலத்தில் கோதாவரி நதிக்கரையிலோரிடத்திருந்த மகாவித்துவானாகிய எலேசுவர உபாத்தியாயரென்னும் யோகியினிடம் அதைக் கொடுபோய் இதில் பிழையுளவேல் திருத்தியருளவேண்டுமென்று பிரார்த்திக்க,

விஷயம்.	பக்கம்.
ஹோம விதி	௪௪
ஹோமத்திரவியங்களின் பிரகரணம்...	௪௫
தேவபூஜாகாலம்	௪௬
அபிவாதநப் பிரகரணம்	,,
வேதமோதுங் காலம்	௪௯
திரவியார்ஜநப் பிரகரணம்	,,
பிர்ம்ம யக்கிய விதி...	௫௧
தர்ப்பண விதி..	,,
யமதர்ப்பணம்	௫௩
பீஷ்ம தர்ப்பணம்	,,
தேவதார்ச்சநப் பிரகரணம்	௫௪
விஷ்ணு பூஜாக்கிரமம்	,,
சிவபூஜாக்கிரமம்	,,
குருபூஜாப் பிரகரணம்	௫௫
வைசுவதேவப் பிரகரணம்	,,
அநக்நிகன்வைசுவதேவம்..	௫௬
நித்திய சிராத்த விதி..	,,
அதிதி பூஜாவிதி	,,
அதிதி நிருபணம்	,,
போஜநப் பிரகரணம்	௬௧
தாம்பூல விதி	௬௫
கிரகணகால போஜந விதி..	௬௬
புசித்தபின் செய்யவேண்டிய விதி	,,
சயந விதி	௬௭
க்ஷத்திரிய தர்மம்	,,
வைசியதர்மப் பிரகரணம்...	௬௯
சூத்திரதர்மப் பிரகரணம்	,,

இரண்டாவது அத்தியாயம்.

அவதாரிகை	௭௧
பயிர்த்தொழிலின் பிரகரணம் (இரண்டாவது சுலோகம்) ...	௭௨
கர்ப்பாதாநப் பிரகரணம்	௭௮
பும்ஸவநப் பிரகரணம்	,,

விஷயம். பக்கம்.

ஸீமந்தோந்நயநப் பிரகரணம் ... ... எஅ
ஜாதகர்மப் பிரகரணம் ... ... எகூ
நாமகரணம் அ0
குழந்தையைப் பிரஸவ கிருகத்தினின்று வெளியே எடுத்து வருவது ... ... ,,
அந்நப் பிராசநப் பிரகரணம் ... ... அக
சூடாகர்மப் பிரகரணம் .. .. ,,
வித்தியாரம்பப் பிரகரணம் ... ... அஉ
உபநயநப் பிரகரணம் ... ... ,,
யக்கியோபவீதப் பிரகரணம் ... ... அரு
பிர்ம்மசாரியின் அக்நி சிசுரூஷைப் பிரகரணம் ... ... அடு
பிக்ஷாடநப் பிரகரணம் ... ... அசு
நைஷ்டிக பிர்ம்மசாரிப் பிரகரணம் ... ... அஎ
ஸ்நாதகப் பிரகரணம் ... ... அஅ
விவாகப் பிரகரணம் ... ... அகூ
வரனுடைய தோஷங்கள் ... ... கூகூ
கந்நியாதோஷப் பிரகரணம் க00
அநுலோம பிரதிலோம ஜாதி நிரூபணப் பிரகரணம் ... ... க0சு
உபாகர்மப் பிரகரணம் ... ... கக௲
உத்ஸர்ஜனம் ... ... ,,
வாநப்பிரஸ்த தர்ம நிரூபணம் ... ... ககரு
ஸந்நியாஸாச்சிரம நிரூபணம் ... ... ,,
ஸந்நியாசியின்தர்மங்கள் ... ... ககசு

மூன்றாவது அத்தியாயம்.

அவதாரிகை ... ... கககூ
ஆசௌசப்பிரகரணம் (க, உ. சுலோகங்கள்) க௨0
ஆசௌசத்தில் ஸந்தியாவந்தனதிகளை அநுஷ்டிக்கும் கிரமம் க௨க
ஜநநாசௌசத்தில் ஸ்பரிசிக்கத் தக்கதும் தகாதது மிவை யென்பது க௨௨
பாலர்கள் மரித்தலைப்பற்றிய ஆசௌசம் ... ... கரூக
தேசாந்தரத்தில் மரணமடைந்த ஸபிண்டனைப் பற்றிய ஆசௌசம் . ... ,,

விஷயம். பக்கம்.

பல் முளையாதது முதலிய குழந்தைகளின் தீட்டு ... ௧௩௩
கர்ப்பஸ்ராவம் கர்ப்பமழிந்து விழுதல், பிரஸவம் இவைகளின் ஆசௌசம் ... ... ,,
பால ஸம்ஸ்காரமும் ஆசௌசமும் ௧௩௪
வயதை அநுசரித்த ஆசௌசம் ... ... ,,
கந்நியாமரண ஆசௌசப் பிரகரணம் ௧௩௫
குரு முதலியவர்களின் ஆசௌசம் ௧௩௬
அக்நி ஹோத்திரம் செய்தவன் பிரமசாரி இவர்களுக்கு ஆசௌச மில்லையென்பது ௧௩௯
சூதிகை யென்னும் பிரஸவித்தவளுடைய ஸம்பந்தத்தில் ஆசௌசம் ௧௪௧
ஆசௌசத்திற்கு முன் தாநம் முதலியவற்றிற்காக உத்தேசித்த திரவியத்தின் சுத்தி ... ... ,,
ஒரு ஆசௌசத்தின் நடுவில் வந்த வேறு ஆசௌசத்தின் பிரகரணம் ௧௪௨
இன்னார் மரணத்தில் பத்துநாள் தீட்டில்லை யென்பது ... ௧௪௩
யுத்தத்தில் மரித்தவனைப் புகழுதல் ௧௪௪
அநாத சவத்தைச் சுமந்தவனுக்கு ஆசௌச மில்லையென்பது ௧௪௬
தன்ஜாதி சவத்தையும் அந்நியஜாதி சவத்தையும் சுமத்தலின் பிராயச்சித்தம் ௧௪௭
பிரமசாரியானவன் சவத்தை வகிக்கக் கூடாதென்பது ... ௧௪௮
சவத்தைப்பின் செல்லுவதின் ஆசௌச நிர்ணயம் ௧௪௯
ஆதுர வியஞ்சநத்தில் ஆசௌசநிர்ணயம் ௧௫0
பிண்டதாநப் பிரகரணம் ௧௫௧
பத்துநாள் நடுவில் அமாவாஸை வந்தால் செய்யத்தக்கது ,,
பந்துமரணத்தினால் துக்கிப்பவனைத் தேற்றுதல் ௧௫௪
தீட்டுக்காரர்கள் தீட்டில் அநுஷ்டிக்க வேண்டிய நியமங்கள் ,,
அஸ்தி ஸஞ்சயந காலம் ௧௫௫
க்ஷௌரவிதி ... ... ,,
ஏகோத்திஷ்டவிதி ... ... ,,
சிராத்தம் செய்யவேண்டிய தேசங்களாவன ௧௫௭
கயையில் கொடுத்த பிண்டதாநத்தின் பலன் ... ... ,,
கயாஸுரனுடைய தலையினளவு ௧௫௮

விஷயம்.	பக்கம்.
சிராத்தம் செய்யவேண்டும் காலம்	கரு௮
யுகாதிகள்	கருகூ
மந்வாதிகள்	,,
காமிய சிராத்தத்திற்குரிய நட்சத்திர வாராதிகள் ...	,,
மஹாளய விஷயம்	கசுO
ஏகோத்திஷ்டப் பிரகரணம்	கசுஉ
சிராத்த தினத்தில் ஆசௌசம் ஸம்பவித்தால் செய்யவேண்டுவது	கசுரு
ஆசௌச நாவிலகப்பட்ட மாஸிகத்தைச் செய்யுங்காலம்...	,,
ஆம சிராத்தம் செய்யுங் காலம்	,,
சிராத்தத்தில் நிமந்திரணம் சொல்லத்தக்க பிராம்மணர்களின் பரிக்ஷை	கசுசு
யதிகளைச் சிராத்தத்தில் நிமந்திரணம் சொல்லலா மென்பது	கசுரு
சிராத்தத்தில் நிமந்திரணம் சொல்லத்தகாத பிராம்மணர்கள்	கசுஎ
பரிவித்தி பரிவேத்தாக்களின் பிரகரணம்	,,
சிராத்தத்தில் பிராம்மணரை நிமந்திரணம் சொல்லும் வகை	கசு௮
சிராத்தத்திற்குரிய திரவியங்கள்	கஎO
எப்போதும் புசிக்கத்தகாதவைகள் இவையென்பது ...	கஎக
பர்யுஷித தோஷமற்ற வஸ்துக்களிவை யென்பது	,,
நிமந்திரணம் சொல்லப்பட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டிய எண்ணெய் முதலியவைகளின் பிரகரணம் ...	கஎஉ
சிராத்தம் செய்யுமிடத்தில் ஸ்தாபிக்கத்தக்க வஸ்துக்கள் ...	,,
சிராத்தத்தில் விலக்கிய புஷ்பங்கள் இவை என்பது... ...	கஎந
பாதப்பிரக்ஷாளநம் செய்யும்வகை	கஎச
உட்காரவைக்கவேண்டிய பிரகரணம்	,,
உட்கார்ந்த பிராம்மணர்களின் நியமம்	,,
விசுவேதேவர்களின் விபாகம்	கஎரு
அக்நியில் ஹோமம்செய்வது	,,
அந்நாதிகளைப் பரிமாறுவது	,,
சிராத்தத்தில் நிமந்திரணம் புசிக்கையில் பதார்த்தங்களை யாசிக்கும் வகை	கஎசு
போஜனகாலத்தில் சிராத்த கர்த்தாவானவன் அநுஷ்டிக்க வேண்டிய நியமங்கள்	,,
பிண்டங்கொடுத்தலின் கிரமம்	கஎஎ

விஷயம்.	பக்கம்.
மூன்று பிண்டங்களின் நடுவிலிருக்கும் பிண்டத்தைக் கொடுக்கும்வகை	கஎஎ
எச்சில் இலையை யெடுத்துச் சுத்திசெய்யத் தக்கவிதி ...	கஎஅ
புசித்தபின் கர்த்தாவும் புசித்தவர்களும் அநுஷ்டிக்க வேண்டிய நியமங்கள்	,,
ஸங்கல்ப சிராத்த விதி	,,
பிரத்தியாப்திக விதி	,,
ஏகோத்திஷ்ட விதி	கஎகூ
நவசிராத்தம் முதலிய	,,
ஊனமாஸிகம் முதலியவைகள் செய்யவேண்டுங்காலம் ...	கஅ௦
ஸபிண்டீ கரணம்	,,
அநுமரணம் செய்தவளின் ஸாபிண்டிய விதி	கஅக
மாதிர் ஸாபிண்டியத்தில் கோத்திர நியமம்	,,
யதிகளுக்கு ஸாபிண்டிய மில்லையென்பது	,,
விருத்தி சிராத்தப் பிரகரணம்	,,
நாந்தீ சிராத்த பிரகரணம்	கஅஉ
கீழ்ச்சொல்லிவந்த சிராத்தங்களுக்குக் கர்த்தா இன்னுரென்பது	,,
உபநயநம் செய்யப்படாதவனுக்குச் சிராத்தம்செய்ய அதிகாரமுண்டென்பது	கஅரு
மாதா மஹாதிகளின் சிராத்தத்தில் அதிகாரம்	,,
கும்பலாக மரித்தவர்களின் சிராத்தவிதி	,,
ஒருதிநத்தில் இரண்டு சிராத்தங்கள் செய்யக் கூடாதென்பது	கஅச

பிராயச்சித்தகாண்டம்.

முதல் அத்தியாயம்.

விஷய சூசிகை.

விஷயம்.	பக்கம்.
அவதாரிகை	க
உச்சுருக்கினுல் மரணமடைந்தவன் விஷயம். (க. சுலோகம்)	௫
துர்மரண சவங்களை வகிப்பது முதலியவற்றின் பிராயச்சித்தம்	௫
தப்த கிருச்சிரமென்பது	௬
பாபிகளின் சேர்க்கைக்குப் பிராயச்சித்தம்	,,
பிராஜாபத்திய கிருச்சிரமாவது...	எ
ஸாந்தபந கிருச்சிரமாவது....	,,
பராககிருச்சிரமென்பது	அ
ருதுகாலத்தில் சேராத ஸ்திரீ புருஷர்களின் தோஷமும் பிராயச்சித்தமும்	௯
ருதுகாலத்தில் சேராதஸ்திரீ புருஷர்களின் பிராயச்சித்தம்	க0
கிருச்சிரமென்பது	கக
கர்ப்பவதத்திற்குப்பிராயச்சித்தம்	க௨
வேதத்தில் விசுவாசமற்றவனுக்குப் பிராயச்சித்தம்	க௩
குண்ட கோளக லக்ஷணம்	,,
ஜாரப்பிராயச்சித்தம்...	க௪
பரிவித்தியாதிகளின் பிராயச்சித்தம்...	க௫
கிருச்சிராதி கிருச்சிரமாவது	,,
அக்ரேதிதிஷுபிராயச்சித்தம்	க௬

இரண்டாது அத்தியாயம்.

விஷயம்.	பக்கம்.
அவதாரிகை—	௨0
நாய்கடித்தல் முதலியவற்றின் பிராயச்சித்தம்	,,
கோ சிருங்க ஜல ஸ்நாநமாவது	,,
துர்மரண மடைந்த யக்கியஞ் செய்தவனைத் தகநம்செய்வதின் பிராயச்சித்தம்...	௨௩
தேசாந்தரத்தில் மரித்த யாகசிலனை ஸம்ஸ்கரித்தலின் விதி	௨௪

விஷயம். பக்கம்.

மூன்றாவது அத்தியாயம்.

அவதாரிகை ... ... உஎ
மலிநீகரண பாப விசேஷமான பக்ஷிவதத்திற்குப் பிராயச்சித்தம் ... ... உஈ
மலிநீகரணப் பிராயச்சித்தம் உ௫
ஸங்கலீகரணப் பிராயச்சித்தம் ... ... உஅ
யானைமுதலியவற்றின் வதத்தின் பிராயச்சித்தம் ... ... உகூ
உபபாதகங்களின் பிராயச்சித்தம் ... ... ஙo
சண்டாள ஸம்பாஷணுதிகளின் பிராயச்சித்தம் ... ... ஙஈ
அந்திய ஜாதியின் பாண்டத்து ஜல முதலியவைகளைக் குடித்ததற்குப் பிராயச்சித்தம் ... ... ஙகூ
அறியாமல் சண்டாளாந்நத்தைப் புசித்ததற்குப் பிராயச்சித்தம்... ... ... ,,
அசேதநங்களான தாம்பிரம் முதலியவைகளின் சுத்தி ... சஉ
சண்டாளன் ஒருதரம் வீட்டில் புகுந்ததற்குப் பிராயச்சித்தம் ச௫
புண்வாயில் புழுவுண்டானுல் அதற்குப் பிராயச்சித்தம் ... ,,
சுவர்ணத்தின் பிரமாணம்... ... ... சஈ
பிராம்மண வசனத்தின் மகிமை ... ... சஎ
பெரியோர்களுடைய அநுக்கிரகத்தின் பெருமை ... ... ,,
தேசம், காலம் முதலியவற்றை அநுசரித்துப் பிராயச்சித்தம் சொல்லவேண்டுமென்பது ... ... சஅ
தன்புத்தியினுல் செய்கிற பிராயச்சித்தம் வீணுகும் ௫o
புழுமயிர் முதலியவைகள் கலந்த அந்நத்தின்சுத்தி ... ௫க
போஜநகாலத்தில் பாதத்தை ஸ்பரிசித்தல் முதலியவை ஆகாதென்பது ... ... ,,
எண்ணெய் பால் முதலியவற்றின் சுத்தி.. ... ... ௫ச

நான்காவது அத்தியாயம்.

அவதாரிகை ... ... ,,
ஸ்ருக்கு ஸ்ருவை முதலிய பாத்திர சுத்தி... ... ... ௫௫
வியபிசார ஸ்திரீசுத்தி ... ... ,,
நதிசுத்தி... ... ... ௫எ
நடைபாவி கிணறு முதலியவற்றின் சுத்தி ... . ,,
ஜலத்தின்சுத்தி ௫அ

விஷயம்.	பக்கம்.
கங்கையின்சுத்தி	ருஅ
ரஜஸ்வலைகள் ஒருவர்க்கொருவரை ஸ்பர்சித்தலின் சுத்தி	கூo
ரஜஸ்வலைக்குச் சண்டாளர் முதலியவர்களின் ஸ்பர்சத்தில் பிராயச்சித்தம்	கூக
சண்டாளர் முதலியவர்களைப் பார்ப்பதில் சுத்தி ...	கூஉ
ரஜஸைப்பற்றியசுத்தி	கூரு
ரஜஸின்பேதங்கள்	,,
ஜ்வரம் முதலியவைகளால் பீடிக்கப்பட்டவன் ஸ்நாநம் செய்யும் விதி	கூடு
ஜ்வராதிகளால் பீடிக்கப்பட்ட ஸ்திரீகளுக்கு மந்திரஸ்நாநம்	கூகூ
பிரஸவித்தவள் ரஜஸ்வலை இவர்கள் மரித்தால் செய்யும்விதி	,,
அசுத்தர்களான பிராம்மணர்கள் ஒருவர்க்கொருவர் ஸ்பரிசித்தலின் சுத்தி	,,
பிராம்மணனுக்குச் சூத்திர ஸ்பர்சத்தில் சுத்தி	கூஎ
பின்னும் வெண்கலமுதலிய பாத்திரங்களின் சுத்தி ...	,,
தந்தம் முதலியவைகளின் சுத்தி	கூஅ
மண்பாத்திரம் தானியம் இவைகளின் சுத்தி	கூகூ
வீடு தீப்பட்டு எரிகையில் கிரகித்துக்கொள்ளத் தக்கவைகள்	,,
மூங்கில் முதலியவைகளின் சுத்தி	எo
முஞ்சிப்புல் முதலியவற்றின் சுத்தி	எக
பூனை முதலிய ஜந்துக்களின் ஸ்பர்சத்தில் சுத்தி ...	எஉ
தாம்பூலம் முதலியவைகளின் சுத்தி	,,
தெரு வெள்ளம் முதலியவைகளின் சுத்தி	,,
வாயில் தாரையாக விழுகிறஜலம் முதலியவைகளின் சுத்தி	எரு
சுத்தமான தூளிகள் முதலியவை	,,
பூமியின் சுத்தி	எடு
கிருகத்தின் சுத்தி	எகூ
தேக சுத்தி	,,

ஐந்தாவது அத்தியாயம்.

அவதாரிகை	எஅ
பாபத்தைச்செய்தவன் பரிஷத்தை அடைவது	அக
நாமதாரக பிராம்மண ஸ்வரூபம்	அஉ
பிராம்மண ப்ருவலக்ஷணமும் இன்னார் பரிஷத்தாக மாட்டார்களென்பதும்	,,

விஷயம்.	பக்கம்.
பாபம் க்ஷயிக்கும்வகை	௮௫
பரிஷத்தின் தாரதம்மியம்	௮௬
வேதத்தை ஓதாத பிராம்மண ஸ்வரூபம்	,,
வேதத்தைப்புகழ்தல்...	௮௯
சூத்திரவாக்கியதூஷணம்...	௯௧
கோவதம் முதலிய பிராயச்சித்தவிஷயத்தில் பரிஷத்தின் ச ங்கியை	௯௨
அரசனுடைய அநுமதியைப் பெறவேண்டுமென்பது ...	௯௩
பரிஷத்தால் அநுஷ்டிக்கத்தக்க நியமவிஷயங்கள்	௯௪
பரிஷத்தின் தர்மங்கள்	௯௫
கோவதப் பிராயச்சித்தம்	௯௬

ஆறாவது அத்தியாயம்.

அவதாரிகை	௧௦௧
ரோதமென்னும் நிமித்தம் இது வென்பது...	௧௦௩
பந்தமென்னும் நிமித்தம் இது வென்பது	,,
யோக்திரமென்னும் நிமித்தம் இதுவென்பது...	௧௦௪
நிபாதமென்னும் நிமித்தம் இது வென்பது	,,
தண்டலக்ஷணம்	௧௦௫
பசுவின்கர்ப்பத்தை அழித்தலின்பிராயச்சித்தம்... ...	௧௦௬
க்ஷௌரவிசேஷங்கள்...	,,
அவயவங்களைச் சேதித்தலின் பிராயச்சித்தம்	௧௦௭
கட்டை முதலியவைகளால் செய்த பசுவதத்திற்குப் பிராயச் சித்தம்	௧௧௧
ராஜாக்களைப்பற்றியக்ஷௌரவிலக்கு...	௧௧௩
ஸ்திரீகளைப்பற்றிய க்ஷௌரவிசேஷம்	௧௨௦
பிராயச்சித்தம் செய்யாத பக்ஷத்தில் தோஷமுண்டென்பது	௧௨௧

ஏழாவது அத்தியாயம்.

அவதாரிகை	௧௨௨
சாந்திராயண கிருச்சிரத்தின் லக்ஷணம்	,,
சண்டாளஸ்திரீ முதலியவர்களைப்புணர்தலின் பிராயச்சித் தம்	௧௨௪
தாய் முதலியவர்களைப்புணர்தலின் பிராயச்சித்தம்	௧௨௭
ஸ்வைரிணீயென்னும் வியபிசார ஸ்திரீகமநப் பிராயச்சித்தம்	௧௬௫

விஷயம். பக்கம்

புல்கஸீகமநப் பிராயச்சித்தம் ... ... கநசு
கர்ப்பத்தை உண்பெண்ணுதலின் பிராயச்சித்தம் ... கநஎ
ரஜஸ்வலையைப் புணருவதின் பிராயச்சித்தம் ... ... ,,
அத்தைமகள் அம்மான்மகள் முதலியவர்களின் விவாகத்தின் பிராயச்சித்தம்... ... ... கநஅ
பசுவையும் தாஸி முதலியவர்களையும் புணர்தலின் பிராயச்சித்தம் ... ... கநகூ
எப்போதும் தன்மனைவியை ரக்ஷிக்கவேண்டு மென்பது (கசு-வது சுலோகம்) ... ... கசக
பதிதார்த்த சரீர பிராயச்சித்தம் ... ... கசரு
ஸாந்தபந கிருச்சிரத்தின் லக்ஷணம் ... ... ,,
வியபிசாரியை நீக்கிவிடுதல் ... ... ,,
வியபிசாரி பிரவேசித்த வீட்டின்சுத்தி ... ... கசசு

எட்டாவது அத்தியாயம்.

புசிக்கத்தகாததைப் புசிப்பதின் பிராயச்சித்தம் ... ... கருக
ஒருபந்தியில் புசிக்கையில் ஸம்பவிக்கும் எச்சில் போஜனத்தின் பிராயச்சித்தம் ... ... கருரு
புதிதான பால் முதலியவைகளைப் புசித்தலின்பிராயச்சித்தம் ,,
பிராம்மணன் க்ஷத்திரியாதிகளின் கிருகத்தில் புசிக்கலாமென்பது (கஉ-வது சுலோகம்) ... ... கருசு
நாந்தீ சிராத்தபோஜந பிராயச்சித்தம் ... ... கருஅ
சூத்திரஜாதிகளிடத்தில் அரிசி முதலியவைகளை வாங்குவது கருகூ
ஸத் சூத்திர விசாரம் ... ... ,,
பஞ்சகவிய பிரமாணம் ... ... கசுக
பிரம கூர்ச்சத்திற்குக் கால நிர்ணயம் ... ... கசுஙு
பரிபாக நிவிர்த்தன் முதலியவர்களுடைய அந்ந போஜநத்தின் பிராயச்சித்தம் ... ... கசுச
பரிபாக நிவிர்த்தன் முதலியவர்களின் லட்சணம் ... கசுரு
பரிபாக நிவிர்த்தன் முதலியவர்களுடைய அந்நபோஜந விசேஷ பிராயச்சித்தம் ... ... கசுசு
பிராம்மண திரஸ்கார பிராயச்சித்தம் ... ... கசுஎ
அதிகிருச்சிர லட்சணம் ... ... ,,

விஷயம். பக்கம்.

ஒன்பதாவது அத்தியாயம்.

அவதாரிகை ... ... கசுஅ
கெட்டகனு முதலியவைகளைப் பார்ப்பதின் பிராயச்சித்தம் ,,
மைதுந நிமித்த ஸ்நாநம்... ... ... கசுகூ
புநருபநயநம் செய்யவேண்டிய நிமித்தங்கள் ... ... ,,
மலமூத்திரபாநத்தின்சுத்தி (சு-வ துசுலோகம்) கஎ0
தற்கொலையினின்றும் ஒழிந்தவனுக்குப் பிராயச்சித்தம் ... ,,
ஸ்நாந லக்ஷணம் ... ... கஎக
ஹோமம் முதலியவைகளைத் தவிர்ந்தவன் விருஷளன் என் பது ... ... கஎசு
வேதமோதுவது ஆவசியகமென்பது... ... ... ,,
சூத்திரர்களது அந்நம் முதலியவைநிந்திக்கத் தக்கனவென்பது ,,
ஆசௌசமுடையவனதும் சூத்திரனதுமான அந்நத்தைப் புசித்தவன் இன்ன கதியை அடைகிறானென்பது ... கஎஎ
ஸங்கல்பித்துக்கொண்ட மௌநவிரதத்தின் நியமம் ... கஎஅ
போஜநம்செய்கிற பாத்திரத்தினால் ஜலம் குடிக்கக் கூடா தென்பது... ... ... ,,
தான்புசிக்கிற பந்தியிலிருப்பவர்களை எச்சிலாகச் செய்கிற வனைப்பற்றிய நிஷேதம்... ... ... ,,
நித்தியமும் காணத்தக்க புண்ணியவஸ்து நிர்ணயம்... ... கஎகூ
சுத்திக்காக வீட்டில் ரட்சிக்கத்தக்க வஸ்துக்கள் ... கஅ0
கோ சர்மத்தின் லக்ஷணம்... ... ... ,,
தானத்திற்கு அதிகபலனைத்தருவதான பாத்திரவிசேஷம்... ,,
அயலாருடைய பூமியை அபகரிப்பதில் அதிக தோஷமுண் டென்பது ... ... கஅக
ரஜஸ்வலையின் நியமங்கள் ... ... ,,
சண்டாளன் முதலியவர்களுக்கு ஒதுங்க வேண்டிய அளவு ,,
கீழ்ச்சொன்னபடி ஒதுங்காவிட்டால் அதின் சுத்தியின் கிரமம் ... ... கஅஉ
கவிழ்ந்துகொண்டு ஜலத்தை வாயினால் குடிப்பதின் பயன் ,,
தன் பத்நியைப் புணரமாட்டேனென்று சபதம்செய்து பின்பு புணருவதின் பிராயச்சித்தம் ... ... ,,
துர்ப்பிராம்மண கிருக போஜந பிராயச்சித்தம் கஅ௩
ஸத் பிராம்மண கிருக போஜந பிரயோஜநம் ... ... ,,

விஷயம்.	பக்கம்.
ஆகாசமரண பிராயச்சித்தம்	கஅ௪
பிராஜாபத்திய கிருச்சிரத்திற்குப் பதில் இது என்பது ...	கஅரு
பூமியில் சுக்கிலத்தை விடுவதின் பிராயச்சித்தம்	,,
பிரமஹத்தியின் பிராயச்சித்தம்	கஅசு
பிரமஹத்தியை அநுமதி செய்தவன் முதலியவர்களின் பிராயச் சித்தம்	கஅஅ
பாலன் கிழவன் முதலியவர்கள் செய்யத்தக்க பிராயச்சித்தம்	கஅக
மத்தியபாந பிராயச்சித்தம்	,,
ஸுராபாந பிராயச்சித்தம்	ககூ0
பிராம்மணனுடைய ஸ்வர்ணத்தைத் திருடுவதின் பிராயச்சித் தம்	,,
பாபியோடு உட்காருவது முதலியவற்றின் பயன் ...	ககூக
ஸகல பாபத்திற்கும் செய்யத்தக்க பிராயச்சித்தம் ...	ககூஉ
ஓதிய வேதத்தை மறந்தவனுக்குப் பிராயச்சித்தம் ...	,,
பொய்சொல்லுவதின் பிராயச்சித்தம்	ககூரு
வேதநிந்தையின் ஸ்வரூபம்	,,
உபபாதகங்களின் பிராயச்சித்தம்	,,
அக்கி பரித்தியாக பிராயச்சித்தம்	ககூ௪
பத்திநியைக் கைவிட்டவனுக்குப் பிராயச்சித்தம்	,,
அயலாருடைய பொருளை அபகரிப்பதின் பிராயச்சித்தம் ...	,,
யாகம் செய்விக்கத்தகாதவர்களுக்கு யாகம் செய்வித்தலின் பிராயச்சித்தம்	,,
அஸத்துக்களிடத்தினின்று தாநம் வாங்குதலின் பிராயச் சித்தம்	ககூரு
விக்கிரயம் செய்யத்தகாத வஸ்துவைவிக்கிரயித்தலின் பிரா யச்சித்தம்	,,
வேதம் வேதாங்கம் முதலியவைகளின் விக்கிரயத்தின் பிரா யச்சித்தம்	ககூசு
விராத்திய பிராயச்சித்தம்	,,
கூலிக்கு வேதத்தை ஓதுவிப்பதற்கும் கூலிவாங்கி வேத மோதுவதற்கும் பிராயச்சித்தம்	,,
பலிக்கின்ற மரத்தை வெட்டுதலின் பிராயச்சித்தம் ...	,,
நாஸ்திகனுக்குப் பிராயச்சித்தம்	ககள

விஷயம்.	பக்கம்.
அவகீர்ணி என்னும் விரதத்தைத் தவிர்ந்தவனுக்குப் பிராயச்சித்தம்	ககூஎ
பெண்முதலியவர்களை விக்கிரயித்தலின் பிராயச்சித்தம் ...	ககூஅ
சொக்கட்டான் முதலியவைகளை ஆடுதலின் பிராயச்சித்தம்	,,
சூத்திரனையடுத்துப் பிழைத்தல் முதலியவற்றின் பிராயச்சித்தம்	,,
ஜாதிப்பிரம்சகரங்களென்னும் பாபங்களின் பிராயச்சித்தம்	,,
ஸங்கலீகரணமென்னும் பாபத்தின் பிராயச்சித்தம் ...	,,
அபாத்திரீகரணமென்னும் பாபத்தின் பிராயச்சித்தம் ...	ககூகூ
மலினீகரணமென்னும் பாபத்தின் பிராயச்சித்தம்... ...	,,
பிரகீர்ணக ஸாதாரண பிராயச்சித்தம்	,,
பதிதன் முதலானவர்களோடு ஸம்பாஷித்தலின் பிராயச்சித்தம்	,,
புசிக்கத்தகாதவனோடு கூடப்புசித்தலின் பிராயச்சித்தம் ...	,,
நீலிச்சாயமேற்றிய வஸ்திரத்தைத் தரித்தலின் பிராயச்சித்தம்...	உ00
சூரியோதயாஸ்தமய கால சயந பிராயச்சித்தம்	,,
ரகஸிய பிராயச்சித்தம்...	உ0க
யமநியமங்களின்ஸ்வரூபம்...	உ0உ
பிராஜாபத்திய கிருச்சிர லட்சணம்	,,
அதிகிருச்சிர லட்சணம்	,,
கிருச்சிராதி கிருச்சிர லட்சணம்	,,
பராக கிருச்சிர லட்சணம்...	,,
பர்ண புஷ்ப பல மூல கிருச்சிர லட்சணம்...	,,
வாருண ஸ்ரீ ஸௌமிய கிருச்சிர லட்சணம்	உ0ரூ
துலாபுருஷ கிருச்சிர லட்சணம்	,,
வாருணுஹமர்ஷண யக்ஞிய கிருச்சிர லட்சணம் ...	,,
தேவ கிருச்சிராதி லட்சணம்...	,,
கிருச்சிரகிரகண பிரகாரம்...	உ0ச
பிராஜாபத்திய கிருச்சிரத்திற்குப் பதிலானவைகள் ...	,,
தீர்த்தயாத்திரை முதலிய கிருச்சிரப் பிரதிநிதிகள்	,,
கர்ம விபாகம்	உ0ரு
மாநஸாதி கர்ம விபாகம்...	,,
இந்த ஸ்மிருதியின் அத்தியாய சுலோக ஸங்கியை	உ0கூ
இந்த ஸ்மிருதியை அத்தியயநம் செய்யும் விதமும் பயனும்	உ0கூ
	உகூ0

ஸ்ரீ

பராசரஸ்மிருதி.

அவதாரிகை.

*சுருதி ஸ்மிருதிகளென்னும் சிறந்த பிரமாண சாஸ்திரங்களில் சுருதிக்கு வியாக்கியாநஞ் செய்த ஸ்ரீமான் மாதவாசாரியரென்கிற மஹா வித்துவான், இந்தக் கலியுக தரும சாஸ்திரமாகிய பராசர ஸ்மிருதிக்கும் வியாக்கியாநஞ் செய்யத்தொடங்கி, இந்தஸ்மிருதி வியாக்கியாநஞ் செய்யத்தக்கதா, இது பிரமாணமா, என்பதைப் பின்வருமாறு விசாரித்து இது பிரமாணம் என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளும்படி ஸ்தாபிக்கிறார்.

எப்படியெனில் சுருதி ஒரு புருஷனால் செய்யப்படாததாகையால் தனக்கொருமூலப் பிரமாணம் வேண்டாமல் சுவயம்பிரகாசமாகிச் சகலத்திற்கும் தானே பிரமாணமாகிற தென்பது வியாஸமகாரிஷியினுடையமதம். இதைஜைமினியும் அங்கீகரித்துத் தமது சூத்திரத்தில் வெளியிட்டிருக்கிறார். அப்படிப்பட்ட வேதத்தில் ஸ்மிருதிகளில் சொல்லப்பட்ட நல்லொழுக்கங்களுக்கு †விதியைக்கண்டிலோமானாலும், அளவற்றவேதத்துள் எவ்விடத்திலாகிலும் அந்த விதியிருக்கலாமென்று அநுமாநிக்கக்கூடும்; அவ்வாறாகில் இவ்வண்ணமே சாக்கியர் முதலிய நாஸ்திகர் ஆசாரத்திற்கும் வேதத்தில் விதி அநுமானிக்கக்கூடுமென்றேவெனில், மனுமுதலியஸ்மிருதிகளுக்கும் நாஸ்திகர்நூல்களுக்கும் விசேஷபேதமிருப்பதாலும், பிறந்ததுமுதல் தபோபலத்தினால்சித்திபெற்ற மனு, பராசரர் முதலிய சிறந்தரிஷிகளிடத்தில் அசத்தியம், பிரமித்தல் முதலிய தோஷங்கள், இல்லாமையாலும், "యద్వైకించమనురవదత్తద్భేషజం" (மனு எதைச் சிறிதுகூறினரோ அது மருந்துபோலாகும்) என்று மனுவையும் "సహోవాచవ్యాసః పారాశర్యః" (பராசரர்மகனார் வியாஸர்) என்று பராசர சம்பந்தம்

---

*சுருதி=வேதம். ஸ்மிருதி=தருமசாஸ்திரம்.

† விதி செய்யவேண்டுமென்பது. விலக்கு செய்யவேண்டாமென்பது.

யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டமகிமையையுடைய வேதவியாஸ பகவானுக்குப் பெருமையைக் கூறுவதால் பராசரனாயும், வேதம் புகழ்ந்ததுபோல் நாஸ்திகனை யெங்கும் புகழாமையாலும் அவ்வாறு ஊகிக்க இடமில்லை.

அன்றியும்,ஸ்மிருதியில்விதிக்கப்படுகின்ற தேவயக்கியம்,பிதிர்யக்கியம்,பூதயக்கியம்,மனுஷியயக்கியம்,பிரமயக்கியம் என்னும் பஞ்சமகாயக்கியங்களை வேதமும், "పంచవా ఏతే మహాయజ్ఞాః" என்று தொடங்கி உபதேசிக்கையாலும், பாரதம் ஆநுசாஸனிக பருவத்தில் தருமத்தை யறிய விரும்புவோருக்குச் சுருதி முதல் பிரமாண மென்றும், தருமநூலாகிய ஸ்மிருதி இரண்டாவது பிரமாணமென்றும் மூன்ருவது உலகத்தில் பெரியோர்களுடைய அனுஷ்டானம் பிரமாணமென்றும் சொல்லப்பட்டிருத்தலாலும் நாஸ்திகர் நூல்கள் பிரமாணங்களல்லவென்றும் மனு, பராசராதி ஸ்மிருதிகளே பிரமாணங்களென்றும் கொள்ளத் தட்டில்லை என்பதேயாம்.

இப்பராசர ஸ்மிருதியில் ஆசாரகாண்ட மென்றும் பிராயச்சித்த காண்டமென்றும் இரண்டு காண்டங்களும், பன்னிரண்டு அத்தியாயங்களும், ஐந்நூற்றுத் தொண்ணூற்றிரண்டு சுலோகங்களும் அடங்கியிருக்கின்றன.இவற்றுள் ஆசாரகாண்டம் மூன்றுஅத்தியாயங்களில் இச்சித்த சுவர்க்கமுதலான பலன்களைத்தருவனவாகிய ஆசாரங்களும், பிராயச்சித்தகாண்டம் ஒன்பது அத்தியாயங்களில் யம யாதனைகளை யுண்டாக்கும் பாபத்தைப் போக்கத் தக்கவையான பிராயச்சித்தங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன ; எனவே முதலாவது காண்டம் இஷ்டலாபத்தையும் இரண்டாவது காண்டம் அநிஷ்ட நிவர்த்தியையுங் கூறுகின்றது என்பது கருத்து.

இந்தஆசாரமும், பிராயச் சித்தமும் மறுமை இன்பத்துக்குக்காரணங்களாகிய தருமங்களாம். வேதமும் தான் நல்லொழுக்கங்களை விதித்து அந்த விதிக்குமாருக ஒருவன் ஒரு கருமத்தைச்செய்தால் அதனல் வரும்தோஷத்திற்குப் பிராயச்சித்தத்தை மட்டும் கூறிற்று. கற்ப சூத்திரங்களைச்செய்த பெரியோர்களும் ஆசாரத்தையும் பிராயச்சித்தத்தையுமே சூத்திரங்களால் செய்தார்களேயன்றி வியவஹாரங்களைக் கூறினர்களில்லை. அப்படியே ஸ்ரீ பராசரரும் இந்த ஸ்மிருதியில் இம்மைப்பயனுக்கே பெரும்பாலும் உபயோகிப்பதாகிய வியவஹாரத்தை ஓரிடத்தில் குறிப்பித்தாரேயன்றி விரிவாகக் கூறினரில்லை. ஆசாரம் இச்சித்ததைப் பெறுவதற்கு நேரே காரண

மிகையால் அது முன்னும் அந்த ஆசாரந்தவறினல் செய்ய வேண்டியதாகையால் பிராயச்சித்தம் பின்னும்கூறப்பட்டன. இந்தத்தரும சாஸ்திரம் கலியுகத்தைப் பற்றியதாகையால் இந்த யுகத்தில் பாபங்களின் மிகுதியை நினைத்து அவைகளைப்போக்கும் உபாயங்களைத் தெரிவிப்பதாகிய பிராயச்சித்தகாண்டத்தை ஒன்பது அத்தியாயங்களால் பராசரமுனிவர் விரித்துரைத்தார்.

ஆசாரகாண்டம் முதல் அத்தியாயத்தில் நான்கு ஜாதிகளுக்குமுரிய * சாதாரண தருமங்களும் விசேஷ தருமங்களும் சொல்லப்பட்டன. பெரியோர் நடக்கையே சாதாரண தருமமென்றும், வேதமோதல், ஓதுவித்தல், யாகஞ்செய்தல், செய்வித்தல், ஈதல், ஏற்றல் என்னும் அறுவகைத்தொழிலும், பூமி ரக்ஷணம் முதலியவைகளும் விசேஷ தருமமென்றும் சொல்லப்படும். இரண்டாவது அத்தியாயத்தில் உழவு முதலான ஜீவனோபாயங்களும், பிரமசரியம், காருகஸ்தியம், வானப்பிரஸ்தம், சன்னியாசம் என்னும் ஆச்சிரமதருமங்களும், மூன்ரும் அத்தியாயத்தில், ஆசௌச (தீட்டு) வகைகளும் சிராத்த விதிகளுங் கூறப்பட்டன; இம்மூன்று அத்தியாயங்களும் ஆசாரகாண்டமாம்.

நாலாவது அத்தியாயத்தில் பிரகீர்ண பாபங்களுக்குப் பிராயச்சித்தமும், புத்திரபேதமும், பரிவேதனப் பிராயச்சித்தமும், ஐந்தாவது அத்தியாயத்தில் நாய்கடித்தல் முதலியவற்றின் பிராயச்சித்தமும், துர்மரணப் பிராயச்சித்தமும், யாகஞ் செய்தவன் விஷயத்தில் செய்யவேண்டும் பிரேத கிருத்தியமும், பிறவும், ஆருவது அத்தியாயத்தில் மலிநீகரணப் பிராயச்சித்தமும், சண்டாளனுடைய அன்னத்தைப்புசித்தல் முதலியவற்றின் பிராயச்சித்தமும், தாம்பிரம், பித்தளை முதலிய பாத்திரங்களின் சுத்தியும், அன்னசுத்தியும், என்ணெய் பால் முதலான வஸ்துக்களின் சுத்தியும், ரஸசுத்தியும், பிறவுஞ் சொல்லப்பட்டன. ஏழாவது அத்தியாயத்தில் பூமிசுத்தி,கிருஹசுத்தி முதலியவைகளும், எட்டாவது அத்தியாயத்தில், சாமானியமாகப் பசுவைக்கொல்லுதலின் பிராயச்சித்தமும், பெரியோர் சபையின் லக்ஷணமும், ஒன்பதாவது அத்தியாயத்தில், பசுவினைக்கட்டுதல் அடித்தல் முதலியவற்றைப்பற்றிச் செய்யத்தக்க விசேஷப்பிராயச்சித்தமும், பிறவும் கூறப்பட்டன. பத்தாவது அத்தியாயத்தில் புண

---

* சாமானியம்,சாதாரணம்,பொது என்பவை ஒருபொருட்சொற்கள். விசேஷம்,அசாதாரணம்,சிறப்பு என்பவைகளும் அப்படியே.

ரத்தகாத மாதரைப் புணர்தலின் பிராயச்சித்த முதலியவைகளும், பதி ஞோராவது அத்தியாயத்தில் புசிக்கத் தகாதவைகளைப்புசித்தல் முத லியவற்றின் பிராயச்சித்தமும், பன்னிரண்டாவது அத்தியாயத்தில் முன் சொல்லாதொழிந்த சகல பாபங்களுக்கும் பிராயச்சித்தமும் விதிக்கப்பட்டன. இவ்வொன்பது அத்தியாயங்களும் பிராயச் சித்த காண்டம் என்று சொல்லப்படும்.

இந்தக் கலியுகத்தில் உண்டாகும் பாபமிகுதியைப் போக்கத்த க்க உபாயங்களின்றி அற்பசக்தியும் அற்பபுத்தியும் அற்ப ஆயுளும் உடையவர்களாகி வருந்துகின்ற மனிதரிடத்தில் கருணையினல் பரா சரமகாமுனிவர் பிராமணன் வேதத்தில் முழுது மோதாமல் சிலபா கம் ஓதினுலும் அமையுமென்றும், பயிர்த்தொழிலினல் பிராமணன் ஜீவிக்கலாமென்றும், பசுக்கொலைக்கு பிராஜாபத்திய கிருச்சிரமும், பிரமஹத்திக்குச் சேது தரிசனமும், பிராயச்சித்த மாகுமென்றும் மனிதருக்குச் செய்து முடித்தற்குச் சுலபமானவைகளும் பெரிய பாபங்களைப் போக்கத் தக்கவைகளுமான சிறிய பிராயச்சித்தங்களை யே ஆராய்ந்தெடுத்துக்கூறினர். மேலும் பிரம க்ஷத்திரிய வைசியர்கள் பாபத்தொழிலில் முயல்வது யுகவல்லமையே யாதலால் அவர்கள் குற்றமன்று என்றும் அதனுல் அவர்களை நிந்தைசெய்தல் தகா தென்றும் முதலிலும் முடிவிலுங் கூறியிருக்கிருர்.

ஸ்ரீரஸ்து.

பாராசரஸ்மிருதி.

முதலாவது ஆசாரகாண்டம்.

முதல் அத்தியாயம்.

మూలం. ౧॥ అ॥

అథాతోహిమశైలాగ్రేదేవదారువనాలయే।
వ్యాసమేకాగ్రమాసీనమపృచ్ఛన్నృషయః పురా॥
మానుషాణాంహితంధర్మం వర్తమానేకలౌయుగే।
శౌచాచారంయథావచ్ఛ వదసత్యవతీసుత॥

(இதன்பொருள்.) மஹாரிஷிகள் வேதமோதியபின்பு சுருதிகளில் "தருமத்தால் பாபத்தைப் போக்குகிறான்" என்றும், "தருமத்தைச்செய்" என்றும்பொருள்தருகின்ற வேதவாக்கியங்களால் சாதாரணமாகத் தருமத்தையறிந்து அந்தத்தருமத்தை விசேஷமாக அறியாமையாலே அதை அறியவேண்டுமென்கிற இச்சைபிறந்து முற்காலத்தில் ஏகாந்தமாகிய இமயமலைச் சிகரத்தில் தேவதாருவனத்தில் ஒருவழிப்பட்ட மனத்தினராய்ச்சுகமாகவீற்றிருந்த ஸ்ரீவியாஸ முனீந்திரரை நோக்கி, ஓ ஸத்தியவதீகுமாரா, இந்தக் கலியுகத்தில் மனிதருக்கு இதமாகிய தருமத்தையும் பரிசுத்தமாகிய ஆசாரத்தையும் உள்ளபடி அருளிச்செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். (எ-று.)

தாம் எடுத்துக்கொண்ட நூல் இனிது முடிதற் பொருட்டு மங்கள வசனத்தால் அதைத் தொடங்க வேண்டுவது பெரியோர்கள் ஆசாரமாகையால், பராசரமுனிவர் மங்களசப்தங்களென்று பிரசித்தமான ஓம்,(ఓం), அத,(అథ)என்னும்சப்தங்களில் ஓம் என்பதுவேதத்திற்கு முக்கியமாயும் வேதவிஷயத்தில் மாத்திரம் பிரயோகிக்கப்பட்டுப் பிரம, க்ஷத்திரிய, வைசியர்களுக்கே சொல்லத் தகுந்ததாய், ஸ்திரீ சூத்திரருக்குச் சொல்ல அதிகாரமில்லாததாயிருப்பதாலும், "அத" என்னும்பதம் அப்படிக்கில்லாமல் எல்லாருஞ்சொல்லத் தகுந்ததென்று அதை இந்தஸ்மிருதியின் முதலில்மங்களமாகக் கூறினார்.

இமயமலைச் சிகரத்தில் தேவதாரு வனத்தில் என்றதனால் அது மற்றுள்ள பிராணிகள் கிட்டவொண்ணாத இரகசியமான ஸ்தானமாகையால் தவத்திற்கு எற்ற இடத்தில் என்பதாயிற்று. ஒருவழிப்பட்ட மனத்தினர் என்றதனால் ஐந்து விதமான மன நிலைகளில் ஐம்பொறிகளாலும் அறியப்படாத வஸ்துவை அறிவதற்குரிய நான்காவது மனநிலையையுடையவர் வியாஸர் என்று கூறப்பட்டது. மனநிலை க்ஷிப்தம், மூடம், விக்ஷிப்தம், ஏகாக்கிரம், நிருத்தம் என ஐந்து வகைப்படும். அவற்றுள் க்ஷிப்தமாவது பலபொருளிலும் ஆசையுடையதாய் இருவினைக்காற்றினால் விரைவில் சுழலும்படி செய்யப்பட்ட மனநிலை. மூடமாவது நித்திரை, சோம்பல் முதலியவைகளோடு கூடியிருக்கும் மனநிலை. விக்ஷிப்த மென்பது எப்போதாகிலும் ஒருவேளை சமாதியோடு கூடி மற்றைப்போதெல்லாம் விஷயங்களில் உழலுகின்ற மனநிலை. ஏகாக்கிரமென்பது இயமம், நியமம் முதலிய அஷ்டாங்க யோகாப்பியாசத்தினால் இடைவிடாமல் செல்லும் வெள்ளம்போல் ஒரே பொருளில் செல்லும் மனநிலை. நிருத்தமாவது விஷயங்களில் செல்லாமலும், செல்லுவதற்குரிய பூர்வவாசனையோடு மிகுந்தும் இருப்பதாகிய மனநிலை. இந்த ஐந்தனுள் க்ஷிப்தம், மூடம், ஆகிய இரண்டும் யோகத்திற்கு உரியவை அல்ல. பலகாலும் விஷயங்களில் உழல்கின்றமனம் ஒருபோது சமாதியில் கூடுவதாயிருக்கிற விக்ஷிப்தமென்பதும் விஷய சம்பந்தத்தினால் மனநிலை கெட்டிருப்பதால் வறுத்த வித்து முளைத்துப் பயன்கொடாததுபோல் யோகத்திற்குத் தக்கதல்ல. ஏகாக்கிரமென்னும் ஒருவழிநிலை உண்மைப்பொருளை விளக்குவதும், கவலைகளையும் கர்மபந்தங்களையும் போக்குவதும் உத்தேசித்தபொருளைத் தன் எதிர்முகமாக்கத் தக்கதுமான தன்மைகளையுடைய தாகையால் இதுவே யோகத்திற்கு எற்றது. வீற்றிருப்பவரை என்பதினால் படுத்திருப்பவனுக்குக் காரணந்தோன்றாமல் நித்திரை வருகிறபடியாலும், நின்றிருப்பவனுக்குத் தேகத்தைத்தாங்குவதில் மனம்முயல்கின்றமையாலும், நடப்பவனுக்கும் ஓடுகின்றவனுக்கும் மனந்தவறுதல் மிகுதியாயிருக்கின்றமையாலும், இக்குற்றங்களின்றியே சுகமாக ஆஸனத்தில் இருப்பவனுக்கே மனம் ஒருவழிப்படுமென்பது சொல்லப்பட்டது. ரிஷிகளென்றால் எல்லாத்தருமங்களையும் அறிந்தவர்களென்பது பொருள். அவ்வாறுயின் தருமங்களை யறியாத இவர்களை ரிஷிகள் என்று எப்படி சொல்லக்கூடுமெனில் இவர்கள் இனிமேல் எல்லாத்தருமங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளப்போகி

றூர்கள் என்னும் உறுதியினுல் முன்னமே ரிஷிகளென்று கூறப்பட்டார்களெனக்கொள்க. எனவே ரிஷிகள் தாங்கள் தெரிந்து கொள்வதற்காகவாகிலும், அல்லது மந்த புத்தி யுடையவர்கள் தெரிந்து கொள்வதற்காகவாகிலும், எதையும் பெரியோர்களைக் கேட்டே தெரிந்து கொள்ளவேண்டுமென்னும் நீதியை சிஷியருக்கு உணர்த்துவதற்காகவாகிலும் ரிஷிகள் கேட்டார்கள் என்பது கருத்து. இவ்விதமாக மஹாரிஷிகள் கேள்விசெய்தே தருமசாஸ்திரங்கள் வெளிப்பட்டதுகள். வியாஸனா ஸத்தியவதீ குமாரரே என்றழைத்ததினுல், தாய் எப்படி ஸத்தியவதியோ அப்படியே மகனுன வியாஸரும் ஸத்தியத்தையே கூறுகின்றவர் என்பதுகருத்து. (க-உ)

౩॥౪॥ తచ్ఛ్రుత్వామునివాక్యంతు సశిష్యోఽగ్న్యర్కసన్నిభః।
ప్రత్యువాచమహాతేజా శ్రుతిస్మృతివిశారదః॥
నచాహంసర్వతత్వజ్ఞః కథంధర్మంవదామ్యహమ్।
అస్మత్పితైవప్రష్టవ్యఇతి వ్యాససుతోఽబ్రవీత్॥

(இ-ள்.) சிஷியர்களோடு கூடினவரும், அக்கினிதேவனுக்கும் சூரியனுக்கும் ஒப்பானவரும், மிக்க ஒளியையுடையவரும், சுருதி ஸ்மிருதிகளை நன்ருய்உணர்ந்தவரும்,பராசரமுனி குமாருமான வியாஸர் அந்த முனிக்கூட்டத்தின் வாக்கியத்தைக்கேட்டு ரிஷிகளே,நான் எல்லாத் தத்துவங்களையும்அறிந்தவனல்லன்,ஆகையால் நான் தருமத்தை எவ்வாறுகூறுவேன் இது விஷயத்தைப்பற்றி என் பிதாவையே கேட்க வேண்டுமென்று சொன்னுர். (எ-று.)

வியாஸர் நான் எல்லாத் தத்துவங்களையும் அறிந்தவனல்லன் என்றதனுல் சுருதிஸ்மிருதிகளைக் கற்றுணர்ந்தவரென்பது விரோதியாதோவெனில், இந்தவாக்கியம் தன் தந்தையாகிய பராசரரது ஞானத்தைச் சிறப்பிப்பதற்கு வந்ததேயன்றி வியாசருடைய ஞானவிசேஷத்தை விலக்கவந்ததன்று. அன்றியும் ஆசாரியன் விஷயத்தில் பக்தி செய்ய வேண்டுமென்பதைத் தம் சிஷியருக்குத்தாமே அனுஷ்டித்துக் காண்பித்தாரெனவுமாம். மேலும், என்பிதாவையே கேட்கவேண்டும் என்றதினுல் கலிதருமத்தைக் கேட்கின்றீர்கள், நானும் இக்கலிதருமத்தை என் தந்தை பராசர முனிவரிடத்தில் கேட்டுணர்ந்தவன், கலியுகத்தில் பராசரர் கூறிய தருமங்களே சிறந்தவை யென்று சொல்லப்படுகின்றன, ஆதலால் அவரே வினவத் தக்கவர், முதலில் உபதேசித்தவரே இருக்கையில் அவருடைய சிஷிய பரம்பரையைக் கொண்டு தருமங்களையுணர்வது அவ்வளவுசிறந்ததன்று

என்பதாயிற்று. இதனால் ஒருவன் பெரியோர்கள்முன் தன்னைப் பெருமைப்படுத்த நினையாமல் அவர்களைப் பெருமைப் படுத்தவேண்டுமென்பது சொல்லப்பட்டது. (௩-௪)

ரு॥ తతస్తేఋషయస్సర్వే ధర్మతత్త్వార్థకాంక్షిణః।
ఋషింవ్యాసంపురస్కృత్య గత్వాబదరికాశ్రమమ్॥

(இ-ள்.) பின்பு அம்முனிகள் அனைவரும் தருமத்தின் தத்துவத்தை அறிய விரும்பினவர்களாய், வியாஸரிஷியை முன்னிட்டுக்கொண்டு பதரிகாச்சிரமத்தை அடைந்து, (எ-று.)

தருமத்தின் தத்துவத்தையறிய விரும்பினவர்கள் என்றதினால் யாவருக்கும் சாமானியவகையால் அறியப்பட்டதும், விசேஷவகையால் அறியப்படாததுமாகிய தருமங்களை யறிய வேண்டுமென்னும் விருப்பமுண்டாகிறதென்றும், தருமதத்துவத்தை என்பதில் தருமம் என்பது பொதுவாக அறியப்பட்ட தருமமென்றும், தத்துவமென்பது அறியப்படாத தரும விசேஷமென்றும் பொருள்படும். தருமம் என்பது சுருதிகளில் விதிவாக்கியத்தால் அறியப்படுவதும் யாவரும் பயனுள்ளதாக இச்சிக்கத்தக்கதுமாம். இதனால் சத்துருமரணத்தை விரும்பினவன் சியேந (பருந்து) யாகத்தைச் செய்யக்கடவனென்று வேதவிதியிருந்தும், எந்தவுயிரையுங் கொல்லலாகாதென்று அந்த வேதத்தினால் விலக்கப்பட்டதாகையால் அந்த யாகந்தருமமாகாது. இப்படியாகில் யாகத்தில் பசுக்கொலை விதிக்கப்பட்டதேயாகிலும், உயிரைக் கொல்லலாகாதென்னும் வேதவிலக்கினால் அதுவும் அதருமமாகமுடியுமெனில் அப்படியன்று. வேதவிதிகளை மீமாம்ஸகர் சாமானிய விதி, விசேஷ விதி என்று இருவகையாகவும் சாமானிய விதியினால் விசேஷவிதி தடுக்கப்படாதென்றும் விசேஷவிதி வலியுடையதென்றுங் கூறியிருத்தலால் உயிரைக் கொல்லலாகாதென்று ஸாமானியமாக விதித்தவேதம்யாகத்தில் பசுவதத்தை விசேஷமாக விதித்தமையால் அதுமாத்திரந் தருமமென்பதுகருத்து.

வியாஸரை முன்னிட்டுக் கொண்டு என்பதினால் தருமங்களை விசேஷமாகக் கேட்பதில் வியாஸர் வல்லமை யுடையவரென்பதுகருத்து. பதரிகாச்சிரமத்தை யடைந்து என்றதினால்பதரிகாச்சிரமத்தில் அநாதியான ஸ்ரீமந்நாராயணன் நரனோடு எழுந்தருளியிருத்தலால் அது கலிதோஷத்தைப் போக்கத்தக்கதென்றும் அந்தப் பதரிகாச்சிரமத்தில் சகலமும் பலிக்குமென்றும் கூர்மபுராணத்தில் சொல்லுகிறபடியால் அவ்விடத்தில் பராசரர் தவஞ்செய்தருளுகிறாரென்பது சொல்லப்பட்டது. (ரு)

௬॥௪॥ నానాపుష్పలతాకీర్ణం ఫలపుష్పైరలంకృతమ్।
నదీప్రస్రవణోపేతం పుణ్యతీర్థోపశోభితమ్॥
మృగపక్షినినాదాఢ్యం దేవతాయతనావృతమ్।
యక్షగంధర్వసిద్ధైశ్చ నృత్తగీతైరలంకృతం॥

(இ-ள்.) (அந்தப்பதரிகாச்சிரமம்) பலவிதப்பூங்கொடிகளால்சூழப்பட்டும், பழங்களாலும் புஷ்பங்களாலும் அலங்கரிக்கப்பட்டும், ஆறுகளாலும் அருவிகளாலும் வியாபிக்கப்பட்டும், புண்யதீர்த்தங்களாலும் மிருகம், பக்ஷி இவைகளின் சப்தங்களாலும் நிரப்பப்பட்டும், தேவாலயங்களால் சூழப்பட்டும், இயக்கர், கந்தருவர், சித்தர் இவர்களின் ஆடல்பாடல்களால் அலங்கரிக்கப் பட்டுமுள்ளது. (எ-று.)

தேவாலயங்களால் அலங்கரிக்கப்பட்டதென்றதினால் மகாரிஷிகள் இந்த ஆச்சிரமத்தில் தவஞ்செய்து தங்கள் தங்கள் காலத்தில்பிரதிஷ்டைசெய்த தேவாலயங்கள் அங்கு உண்டென்பதும், அன்றியும், சந்திரசூரியர் முதலிய தேவர்கள் முற்பிறப்பில் இங்குத் தவஞ்செய்து தெய்வத்தன்மையைப் பெற்றார்களாகையால் அவர்களது ஆச்சிரமங்களே அவரவர்பேரால் தேவாலயங்களாகப் பிரசித்தி யடைந்திருக்கின்றன என்பதும் சொல்லப்பட்டது. இயக்கர்முதலானவர் இங்குச்செய்த தவத்தினால் தெய்வப் பிறப்பினையடைந்து இவ்வாச்சிரமத்தின் பெருமைக்கு மனமகிழ்ந்து இங்குவந்து ஆடல் பாடல் செய்கின்றனர் என்பதும், அன்றியும் இயக்கர் முதலியோர் மோக்ஷத்தை விரும்பினவர்களாய் ஆடல் பாடல்களால் ஸ்ரீமந்நாராயணனை ஸ்துதிக்கிறார்களென்பதும் கூறப்பட்டன. (சு-எ)

௭॥௫॥ తస్మిన్నృషిసభామధ్యే శక్తిపుత్రంపరాశరమ్॥
సుఖాసీనంమహాతేజా మునిముఖ్యగణావృతమ్॥
కృతాంజలిపుటోభూత్వా వ్యాసస్తుఋషిభిస్సహ।
ప్రదక్షిణాభివాదైశ్చ స్తుతిభిస్సమపూజయత్॥

(இ-ள்.) அவ்விடத்தில் அந்த முனி கணத்தின் நடுவில் முனிசிரேஷ்டர்களுடைய கூட்டத்தால் சூழப்பட்டுச் சுகமாக வீற்றிருக்கிறவரும், சக்தி என்னும் ரிஷிக்குப் புத்திரருமாகிய பராசர முனியை மிகுந்த தேஜஸையுடைய வியாசர் முனிகளுடன் அடைந்து அஞ்சலிசெய்தவராய், தன் கோத்திரம், பெயர் முதலியவற்றைச் சொல்லிச் செய்யும் நமஸ்காரமாகிய அபிவாதனங்களாலும் பிரதக்ஷிணங்களாலும், ஸ்தோத்திரங்களாலும் நன்றாகப் பூசித்தார். (எ-று.)

முனிகணத்தின் நடுவில் என்றதனுல் சொல்லப்போகிற தரும மானது எல்லா ரிஷிகளாலும் ஒப்புக்கொள்ளத் தக்கதென்பதுசொல்லப்பட்டது. முனிசிரேஷ்டர்கள் கூட்டத்தில் என்றதினுல் ஸ்மிருதிகளைச் செய்தவரும் கோத்திரங்களை வளர்த்தவருமாகிய அத்திரி, யாக்கியவல்கியர் முதலானுருடைய அங்கீகாரமும் கூறப்பட்டது.

பராசரர் என்னுந்திருநாம மகிமையாலும் இவர் பெருமைவிளங்கு கின்றது. எப்படி யெனில் (పరాకృతాశ్శరాయస్మా ద్రాక్షసానాంవధార్థినాం। అతఃపరాశరోనామ ఋషిరుక్తోమనీషిభిః॥) தன்னைக் கொல்ல வேண்டிவந்த அரக்கர்களால் விடப்பட்ட அம்பைப்பின்னிட்டுப் போகும்படி செய்ததால் பராசரரென்றும், (పరస్యకామదేవస్య శరాస్సమ్మోహనాదయః। నవిద్యంతేయతస్తేన ఋషిరుక్తఃపరాశరః॥) யாவரினும் சிறந்த மன்மதனுடைய சம்மோகநம் முதலிய அம்பின் வேதனை இவர்க்கு இல்லை என்னுங் காரணத்தினுல் பராசரரென்றும்(పరేషుపాపచిత్తేషు నాదత్తేకోపలక్షణం। శరంయస్మాత్తతఃప్రోక్త ఋషిరేవపరాశరః॥) பாபத்தில் மனமுடைய அன்னியரிடத்தில் தமது கோபம் என்னும் சரத்தைச் செலுத்தாதவராதலால் பராசரர் என்றும், (పరంమాతుర్బ్జాయాయదుదరంతదయంయాతః। ఋచముచ్చార్యనిర్భిదక్ నిరగాత్సపరాశరః॥) தாயின் வயிற்றிலிருக்கும்போது ஒரு இருக்கைச் சொல்லி அந்த மந்திரபலத்தால் தாயின்வயிற்றைப் பிளந்து கொண்டு அவ்வழியால் வெளிப்பட்டவராதலால் பராசரரென்றும், பரர்களாகிய வேதபாஹியர்களைப் பிரமாணங்களென்னும் பாணங்களால் கொல்லுபவராகையால் பராசரரென்றும் இவ்விதமாகப் பெரியோர்கள் பராசரர் என்னும்பதத்திற்குப் பொருளுரைத்திருக்கின்றனர்.

கைகளைக்குவித்து அஞ்சலி பண்ணிக்கொண்டு என்பதினுல் விசேஷ குருபக்தியுடைமை தோற்றுகிறது. சிறந்த குருபக்தி யிருப்பவர்களுக்கே குரு உபதேசித்த உண்மைப்பொருள் விளங்குமென்றும் குருபக்தி யில்லாவிட்டால் பொருள் உபதேசிக்கப்பட்டாலும் பலிக்கமாட்டாது என்றும் வேதத்தில் சொல்லப்பட்டது. ஆதலால் கடவுளைப்போலக் குருவையும் பூஜிக்கவேண்டுவதை நினைத்து ஸ்ரீபராசரனைச் சிஷியராகிய வியாசர் பிரதக்ஷிண நமஸ்காரங்களால் உபசரித்தார் என்பது கருத்து. (அ-க)

౧౦॥ తతస్సంతుష్టహృదయః పరాశరమహామునిః।
ఆహాసుస్వాగతం బ్రూహి త్వ్యాసీనో మునిపుంగవః॥

(இ-ள்.) அதன் பின்பு பேரானந்தமடைந்த மனதையுடைய பராசரமுனீந்திரர் முனிகளில் சிறந்தவராதலால், தாம் ஆசனத்தில் வீற்றிருந்தபடியே க்ஷேமமாகவந்தாயோ சொல் என்று அன்போடு விசாரித்தார்.

பேரானந்தமடைந்த மனமுடையவர் என்பதினால் புராணசார மென்னும் நூலில் ஆசாரியன் சகல தேவதாசுரூபியாகையால் அவர் சந்தோஷித்தால் சகல தேவதைகளும் சந்தோஷத்தை அடைகின்றன ரென்றும் தன் விருத்தியையும் ஞானசம்பத்தையுங் கோரினவன் ஆசாரியனது கட்டளையை மனத்தினாலுந் தவறாமல் நடக்கவேண்டுமென்றும் சொல்லியபடியே அவரைத்தான் பக்தியினால் சந்தோஷப்படுத்தினார் என்பது கருத்து. ஆசனத்தில் வீற்றிருந்தே விசாரித்தார் என்பதினால் பராசரர் வயதினாலுங் கல்வியினாலுஞ் சிறந்தவராகையால் அம்முனிகளைப்பார்த்துத் தானெழுந்திராமலே வியாசனை க்ஷேமம் வினவினார் என்பதும், அன்போடு நல்வரவை விசாரித்தார் என்றதினால் மிகுந்த தயவுள்ளவரென்பதும் சொல்லப்பட்டது.

౧౦౹॥ కుశలం సన్నిత్యుక్త్వా వ్యాసః పృచ్ఛత్యతః పరం॥

(இ-ள்.) வியாசர் க்ஷேமம் நன்றாக இருக்கிறதென்று சொல்லி அதன்பின்பு இவ்விதமாகக் கேட்டார். (க0உ)

౧౧౹॥ యదిజానాసిభక్తిం మే స్నేహాద్వాభక్తవత్సల।
ధర్మం కథయ మే తాత హ్యనుగ్రాహ్యో హ్యహం తవ॥

(இ-ள்.) பக்தரிடத்தில் வாற்சல்லியகுண முடையவரே, என்னுடைய பக்தியை திருவுள்ளத்தில்கொண்டாகிலும், தந்தையே, புத்திர ஸ்நேகத்தினாலாகிலும், எனக்குத்தருமங்களைஉபதேசித்தருளும், எவ்வண்ணமாகிலுந் தேவரீரால் அடியேன் உபதேசிக்கத்தக்கவன். (எ-று)

சாமவேதத்தில் மது வித்தையில் இரகசியமான தருமத்தைப் பிதா மூத்தமகனுக்கும், தன்பிராணனிலும் சிறந்தவனான சிஷியனுக்கும் சொல்லக்கடவன், அன்னியனுக்கு உபதேசிக்கத்தகாது என்றுசொல்லியிருப்பதினால் வியாஸர் பராசரருக்குப்புத்திரரும் பிரியமுள்ள சிஷியருமாதலால் எவ்வண்ணமாயினும் அடியேன் தேவரீரால் தருமங்களை உபதேசிக்கத் தக்கவனென்கிறார். (ககஉ)

౧౨ప॥ శ్రుతా మేమానవాధర్మావాసిష్ఠాఃకాశ్యపాస్తథా।
గార్గీయాగౌతమీయాశ్చ తథాచౌశనసాశ్రుతాః॥

౧౩ప॥ అత్రేర్విష్ణోశ్చ సంవర్తాద్దక్షాదంగిరసస్తథా।
శాతాతపాచ్చహారీతాద్యాజ్ఞవల్క్యాత్తథైవచ॥

౧౪ప॥ ఆపస్తంబకృతాధర్మా శ్శంఖస్యలిఖితస్యచ।
కాత్యాయనకృతాశ్చైవ తథాప్రాచేతసాన్మునేః॥

(இ-ள்.) ஓ பராசரமுனியே, மனு, வசிஷ்டர், கசியபர், கார்க்கர், கௌதமர், உசனர், அத்திரி, விஷ்ணு, சம்வர்த்தர், தக்ஷர், அங்கிரசு, சாதாதபர், ஹாரீதர், யாக்கியவற்கியர், ஆபஸ்தம்பர், சங்கர், லிகிதர், காத்தியாயநர், பிராசேதஸர், இப்பத்தொன்பதின்மரும் தனித்தனியே கூறியிருக்குந் தருமசாஸ்திரங்களை அந்தந்த ரிஷிகளிடத்தினின்றும் நான் கேட்டறிந்திருக்கிறேன். (எ-று.) (கஉ,கஙு,கச)

౧౫ప॥ శ్రుతా హ్యేతేభవత్ప్రోక్తాశ్శ్రుత్యర్థామేనవిస్మృతాః।
అస్మిన్మన్వంతరేధర్మాః కృతత్రేతాదికేయుగే॥

(இ-ள்.) தேவரீரால் அருளிச்செய்யப்பட்ட வேதங்களும் வேத தருமங்களும் என்னால் கேட்கப்பட்டன வன்றோ, இந்த மனுவந்தரத்தில், கிருதயுகம், திரேதாயுகம், முதலிய யுகங்களில் ஆசரிக்கப்பட்ட அந்தத் தருமங்களை நான் மறக்கவில்லை. (எ-று.) (கரு)

౧౬ప॥ సర్వేధర్మాఃకృతేజాతా స్సర్వేనష్టాఃకలౌయుగే।
చాతుర్వర్ణ్యసమాచారంకించిత్సాధారణంవద॥

(இ-ள்.) எல்லாத் தருமங்களும், கிருதயுகத்தில் பிறந்தன. கலியுகத்தில் இறக்கின்றன. ஆதலால் நான்கு வருணத்தினருடைய பொதுத்தருமங்களைச் சிறிது சொல்லவேண்டும். (எ-று)

எல்லாத் தருமங்களும் என்றது தேசம், காலம், அவஸ்தை முதலிய பேதத்தால் தருமம் பலவிதமாயிருக்குமென்பதைக் குறிக்கின்றது. மகாபாரதம் ஆநுசாஸநிக பருவத்தில் உலகத்தில் வேதங்கள் வெகுவாகையால் அவைகளால் ஒவ்வொரு நிமித்தத்தை முன்னிட்டு வெவ்வேறாகத் தருமங்கள் உபதேசிக்கப் பட்டிருக்கின்றன என்றும், அவை தேசதருமங்கள், குலதருமங்கள், சாதிதருமங்கள் வயதிற்குரியதருமங்கள், குணதருமங்கள், தேக தருமங்கள், கால தருமங்கள், ஆபத்தருமங்கள் என்று பலவகைப் பட்டனவாக உலகத்தாரால் அநுஷ்டிக்கப் படுகின்றனவென்றும் சொல்லப் பட்டிருக்கிறது. இந்தத் தருமங்கள் கிருதயுகத்தில் வேறொரு நிமித்தத்தினால்

திடைபடாமல் அந்த யுகத்தின் மகிமையால் முழுதுங்கூடி ஒரு விருஷப வடிவாகி நான்குபாதங்களுடன் நிலைபெற்றிருந்தது, திரேதாயுகத்தில் தருமம் ஒருகால் குறைந்து மூன்றுபங்கோடு இருந்தது, துவாபரயுகத்தில் தருமம் இரண்டுகால் குறைந்து அரைப்பங்காகி அதருமத்தோடு கூடியிருந்தது, கலியுகத்திலோ தருமம் மூன்றுகால் குறைந்து இருக்கின்றமையால் சகல தருமங்களும் நசித்துவிட்டன என்று சொல்லப்பட்டது. பிருகஸ்பதியும் கிருதயுகத்தில் தருமங்கள் எல்லாம் அநுஷ்டிக்கப்பட்டன, திரேதாயுகத்தில் தருமம் மூன்று பாதங்களை யுடையதா யிருந்தது, அப்போது அயலாருடைய துக்கத்தைக் கண்டு களித்தலாகிய மத்ஸரம், பகையைப்பாராட்டுவதாகிய துவேஷம் முதலிய துர்க்குணங்களுக்குப் பிறப்பிடமாகிய அதருமத்தின் ஒருபாதம் அந்தத் தருமத்துடன் கலந்திருந்தது, துவாபரத்தில் தருமம்,அதருமம் இவ்விரண்டும் இரண்டிரண்டு கால்களோடு சமமாக இருந்தன, கலியுகத்தில் அதருமம் மூன்றுகாலுடனும், தருமம் ஒருகாலுடனும் நிற்கின்றன என்று சொல்லியிருக்கிறார். இப்படியே லைங்கிய புராணத்திலும், விஷ்ணுபுராணத்திலும்,ஆதித்தியபுராணத்திலும்சொல்லப்பட்டிருக்கின்றது. இதனால் கலிகாலத்தில் ஜீவர்களுக்குப் பிரயாசத்தினால் செய்யத்தக்க தருமங்களில் சிரத்தை உண்டாவதில்லை யாதலால் செய்வதற்கு எளியதாகிய தருமத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்பது வியாசர்கருத்து.

அந்தத் தருமம் நான்கு ஜாதியாருக்கும் சாமானியமெனவும், விசேஷமெனவும் இருவகைப்பட்டிருக்கின்றது. அவற்றுள் பிருகஸ்பதி, விஷ்ணு இவர்களால் சொல்லப்பட்ட சாமானிய தருமங்களாவன;தயை,பொறுமை, அசூயையில்லாமை, சுத்தி,ஆயாஸமில்லாமை,மங்களமுடைமை, லோபமில்லாமை,ஆசையற்றிருக்கை,ஸத்பாத்திரத்தில்தானம்,இந்திரியங்களை ஜயித்தல்,கொல்லாமை,குருபணிவிடைசெய்தல், தீர்த்தயாத்திரை, நல்லநினைவு, அல்லது தன் நிலையறிந்திருக்கை,கடவுளைப்பூசித்தல்இவைகளாம்.இனிபிரகஸ்பதியால் சொல்லப்பட்ட விசேஷதருமங்களாவன:— யாகஞ்செய்தல், செய்வித்தல், வேதமோதுதல், ஓதுவித்தல், ஈதல், ஏற்றல் இந்த ஆறு கருமங்களும் பிராம்மணனுக்கு விசேஷதருமங்கள். யாகஞ்செய்தல், வேதமோதுதல், ஈதல், பிரஜைகளை ரக்ஷித்தல், ஆயுதசாஸ்திரங்களை அப்பியசித்தல், தேவர், பிராம்மணர், அதிதிகள், குரு, பசுக்கள் இவர்களுக்குப் பணிவிடைசெய்தல், க்ஷத்திரியனுக்கு விசேஷதருமங்கள்; வேதமோதல், யாகஞ்செய்தல், தானம், பசுபரிபா

லநம், வட்டிசம்பாதித்தல், பயிர்த்தொழில் செய்தல், வர்த்தகஞ் செய்தல், இவ்வேழுகருமங்களும் வைசியனுக்கு விசேஷதருமங்கள்; சுசியாயிருக்கை, பிராம்மணருக்குப் பணிவிடை, ஸத்தியம், கோபமில்லாமை, வேதத்தில் விதிக்கப்படாத நமஸ்கார மந்திரங்கள் இவை சூத்திரனுக்கு விசேஷதருமங்கள் என்பவைகளே. பகவத்கீதையில் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரருடைய கருமங்கள் அவரவரது சுபாவ குணங்களான ஸத்வாதி குணங்களாலே பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதம் தருமம் ஸாதாரணமென்றும் விசேஷமென்றும் இருவகைப்பட்டிருப்பதால் அவற்றுள் இந்தக்கலியுகத்தில் அநுஷ்டிக்கத்தக்க ஸாதாரணதருமத்தையும், கிஞ்சித் என்றதினாலே அந்த ஸாதாரணதருமத்தைச் சிறிது சுருக்கிக் கூறவேண்டுமென்றும் வியாஸர் வினவினரென்பது சொல்லப்பட்டது. (௧௭௪)

౧౭౫॥ చతుర్ణామపివర్ణానాం కర్తవ్యంధర్మకోవిదైః।
బ్రూహిధర్మస్వరూపజ్ఞ సూక్ష్మంస్థూలంచవిస్తరాత్॥

(இ-ள்.) தருமசுரூபத்தை யறிந்த பிதாவே, பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களில் தருமங்களை நன்றாய் அறிந்தவர்களால் செய்யத்தக்கதும் பெரியதும் சிறியதுமாகிய தருமத்தை விஸ்தாரமாக அருளிச்செய்யவேண்டும். (எ-று.)

தருமமாவது வேதத்தால் விதிக்கப்பட்ட கருமங்களை அனுஷ்டித்து அதனால் அடையத்தக்க ஆத்தும குணமென்றும், **அதருமமாவது** நிஷித்த கருமத்தால் அடையத்தக்க ஆத்துமகுண மென்றும் தார்க்கிகரும், வேதவிதியை லக்ஷணமாக வுடையது தருமமென்று மீமாம்ஸகரும், காமம் முதலான குற்றமற்றவர்களும் வித்துவான்களுமான பெரியோர்கள் நித்தியமும் எதை அநுஷ்டிக்கிறார்களோ எதைச் செய்யப் பிறருக்கு விதிக்கிறார்களோ அதுவே தருமமென்று மனுவுங் கூறினார்கள். தருமம் மயிர் கழிக்கும் கத்தி நுனியிலும் சூக்ஷ்மமாயிருக்குமாதலால் அதை எவன் சொல்லத்தக்கவன் என்று பாரதத்தில் ராஜதருமத்தில் சொல்லப்பட்டது. இந்த வாக்கியங்களால் அதருமத்தினின்று வேறுபட்ட ஒரு தருமசொரூபம் தோற்றுகிறது. அது வேதவிதிப்படி செய்த யாகாதிகளால் ஆத்மாவில் உண்டாகும் அதிசயம். இதையே ஆத்மகுணமென்றும், அபூர்வமென்றும் சொல்லுவார்கள். இது சொர்க்காதிபலத்திற்கு நேரே காரணமாய் பலன் உண்டாகும் வரையில் நெடுங்காலம் ஆத்மாவிலிருக்கின்றது. சௌசம், ஆசமனம், ஸந்தியாவந்தநம் முதலானவைகள் ஸ்தூல

தருமமென்றும், உலகநீதிக்கும் வேதநீதிக்கும் விருத்தமென்று சில ருக்குத்தோற்றுவதாயும் தருமத்தை முழுதும் உணர்ந்தவர்களுக்குத் தருமமாகத் தோற்றுவதாயும் இருக்கிற துரௌபதிவிவாஹம்முதலிய வை சூக்ஷ்மதருமமென்றும் பாரதத்தில் துருபதனை நோக்கித் தருமபுத்திரர் சொன்னவாக்கியத்தாலும், தாய் தந்தைகளுக்குப் பணிவிடை செய்வதைக்காட்டிலும் வித்தையை அப்பியாசம் செய்வது விசேஷமன்று இந்தப்பணிவிடை செய்தவனுக்குச் சிறந்த ஞானமுண்டாகும் இதுவே சூக்ஷ்ம தருமமென்று தரும வியாதர் உபதேசித்ததாலும், அப்படிப்பட்ட ஸ்தூல சூக்ஷ்ம தருமங்களை உபதேசிக்க வேண்டுமென்று வியாஸர் வினவினரென்பது கருத்து. (கஎ)

౧౮॥ వ్యాసవాక్యావసానేతు మునిముఖ్యఃపరాశరః।
ధర్మస్యనిర్ణయంప్రాహ సూక్ష్మంస్థూలంచవిస్తరాత్॥

(இ-ள்.) வியாஸருடைய வினவின்முடிவில்ரிஷி சிரேஷ்டரான பராசரர் ஸ்தூலமும், சூக்ஷ்மமுமாகிய தருமத்தின் நிச்சயத்தை விஸ்தரித்துச் சொன்னார். (எ-று.) (கஅ)

மூ॥౧౯॥ శ్రుణుపుత్రప్రవక్ష్యామి శృణ్వంతుమునయస్తథా।

(இ-ள்.) குமாரா, நன்றாகச் சொல்லுகிறேன் கேள், ரிஷிகளே நீங்களும் அவ்விதமாகக் கேளுங்கள். (எ-று.)

ரிஷிகள் நடுவில் முதலில் குமாராவென்று பராசரர் தன் பிள்ளையைத் தனித்து அழைத்ததினால் இவர் முகமாகத் தான் உபதேசிக்கும் தருமங்கள் வெளிப்படுமென்பது பராசரர் திருவுள்ளம். (கக)

౨౦॥ కల్పేకల్పేక్షయోత్పత్త్యా బ్రహ్మవిష్ణుమహేశ్వరాః।
శ్రుతిస్మృతిసమాచార నిర్ణేతారశ్చసర్వదా॥

(இ-ள்.) கல்பங்கள் தோறும் க்ஷயத்தோடும் உத்பத்தியோடும் சேர்ந்த பிரம விஷ்ணு ருத்திரர்கள் எப்போதும் சுருதி ஸ்மிருதிகளின் ஆசாரங்களை நிர்ணயிக்கிறவர்களாகிறார்கள், (எ-று.)

கல்பமென்பது.— இன்ன காலத்தில் உலகம் சிருஷ்டிக்கப்படுகிறது என்னும் வித்பத்தியால் சிருஷ்டி காலந்தொடங்கி பிரளயத்தொடக்கம் வரையில் உள்ளகாலம். இந்தக்கல்பமானது மஹா கல்பமென்றும் அவாந்தர கல்பமென்றும் இருவகைப்படும், மூலப்பிரகிருதியினின்று உண்டாகும் சிருஷ்டிமுதல் பிரமனுயுள் வரையிலுமுள்ள காலம் மஹாகல்பம். ஆயிரஞ் சதுர்யுககாலம் பிரமனுக்கு ஒருபகல், அது அவாந்தரகல்பமாம், இரவும் அவ்வளவுகாலமாம். இந்

தக்கணக்கினல் பிரமனுடையநூறுவருஷம் மஹா கல்பமென்றுகூர்ம புராணத்திலும் வேறு புராணங்களிலும் கூறப்பட்டது. இவ்வித மான இரண்டு கல்பத்தினடுவில் ஒரு பிரளயமுண்டு, அது நித்தியம், நைமித்திகம், பிராகிருதம், ஆத்தியாந்திகம் என்று நாலுவகைப்படும். உலகத்தில் பிராணிகளுக்கு நித்தியம் காணப்படுகிற தேகவியோகம் நித்தியப்பிரளயம், பிரமனுடைய தின முடிவில் நடக்கும் பிரளயம் நைமித்திகம், பிரமனது ஆயுள் முடிவில் மஹத்தத்துவந் தொடங்கி சகலத்திற்கும் உண்டாகும் பிரளயம் பிராகிருதப் பிரளயம், ஞானி க்குப்பிரமத்தில் உண்டாகும் லயம் ஆத்தியந்திகம், இவ்விதமாகப்பிர ளயம் நடந்து அதன்முடிவில் ஸத்தியமும், ஞானமும், முடிவற்ற துமான பிரமத்திற்கு உலகத்தைச் சிருஷ்டிக்க ஸங்கல்பமுண்டாக, அப்படிப்பட்ட பிரமத்தினின்று ஆகாசமும், ஆகாசத்தினின்று வாயுவும், வாயுவினின்று அக்கினியும், அக்கினியினின்று அப்புவும், அப்புவினின்று பிருதிவியும், பிருதிவியினின்று ஓஷதிகளும், ஓஷதிகளினின்று அன்னமும், அன்னத்தினின்று புருஷனும், (தலை கை முதலிய அங்கங்களையுடைய பிரமாதி ஸ்தம்பம் வரையிலுமுள் ள பிராணிகளுடைய சரீரம்) ஆகிய இவைகளெல்லாம் உண்டா யின வென்று வேதம் சொல்லுகிறது. இவ்விதமாகப் பிரம விஷ்ணு ருத்திரர்கள் தங்கள் மஹா கல்பத்தின் கடைசியில் க்ஷயி த்துப் பின்னும் தங்கள் கல்பாதியில் ஜனிக்கிறார்கள். மேலும் தங்கள் அவாந்தர கல்பங்கள் முடிவிலும் முதலிலும் வேதத்தின் ஆ சாரங்களை நிர்ணயம் செய்கிறார்கள். இவ்வண்ணம் ஸ்மிருதியை நிர்ணயித்தவர்கள் மனு, ஆங்கீரசு, வியாசர், வசிஷ்டர், பராசரர், போ தாயனர், ஆபஸ்தம்பர் முதலாக முப்பத்தாறு ரிஷிகளென்றுபைடீநசி ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும், வத்ஸர், மரீசி, மு தலானவர்களும் அவரவர் சொல்லிய தருமங்களும் உண்டென்று பாரதம் அசுவமேதபருவத்தில் சொல்லியிருக்கிறது. (உ0)

உ௧॥ న కశ్చిద్వేదకర్తా చ వేదంస్మృత్వా చతుర్ముఖః।
తథైవధర్మాన్ స్మరతి మనుః కల్పాంతరేంతరే।

(இ-ள்.) ஒருவனும் அனுதியான வேதத்திற்குக் கர்த்தாவன்று. பிரமன் வேதங்களைக்கேட்டு அவைகளின் தருமங்களை யெடுத்து ஸ் மிருதிகளைச்செய்கிறார். கல்பங்களின் இடைக்கிடையில் அப்படியே மனுவும் ஸ்மிருதிகளைச்செய்கிறார். (எ-று,)

வியாஸர் வேதத்தைப் பிரித்தவர், பிரமன் ஸர்வேசுவரனால் உப தேசிக்கப்பட்ட வேதங்களை வெளியிட்டவர், அந்த ஸர்வேசுவரனும் அநாதியானவேதத்தைத் தோற்றுவித்தவரே யன்றிச் செய்தவரல்ல வென்று மச்சபுராணம் கூறுகின்றது. பிரமன் ஸ்மிருதிகளைச் செய்து தனக்குக் கற்பித்தாரென்று சுவாயம்புவ மனு கூறினார். (உக)

౨౨॥ అన్యేకృతయుగేధర్మా స్త్రేతాయాంద్వాపరేయుగే।
అన్యేకలియుగేనౄణాం యుగరూపానుసారతః॥

(இ-ள்.) கிருதயுகத்தில் தருமங்கள் வேறு, திரேதாயுகத்திலும் துவாபரயுகத்திலும் கலியுகத்திலும் வேறு, அந்தந்தத் தருமங்கள் அந்தந்த யுகங்களை அநுசரித்திருக்கின்றன. எ-று.

தருமங்கள்வேறு என்பதற்குத்தருமத்தின் அநுஷ்டாநம் வேறுபட்டிருக்குமென்பது கருத்து. (உஉ)

౨3॥ తపఃపరంకృతయుగే త్రేతాయాంజ్ఞానముచ్యతే।
ద్వాపరేయజ్ఞమేవాహు ర్దానమేవకలౌయుగే॥

(இ-ள்.) கிருதயுகத்தில் தவமும், திரேதாயுகத்தில் ஞானமும், துவாபரயுகத்தில் யக்கியமும், கலியுகத்தில் தானமும் முக்கியமானவை என்று பெரியோர்கள் சொன்னார்கள். (எ-று.)

வேத விதியின்படி கிருச்சிரம், சாந்திராயணம் முதலிய விரதங்களால் சரீரத்தை உலரச்செய்வது தவமென்று ஸ்காந்தபுராணம் கூறுகின்றது. இந்தச் சுலோகத்தில் அந்தந்தயுகத்தின் வல்லமை சொல்லப்பட்டதேயன்றி இந்த யுகத்தில் இதுவே செய்யவேண்டுமென்று விதிக்கப்படவில்லை. வஸந்தகாலத்தில் புஷ்பங்களும், கோடைகாலத்தில் வெப்பமும் அதிகமாக உண்டாவது அந்தந்தக்காலத்தின் வல்லமையினாலேபோலக் கிருதயுகத்தில் தவம் அதிகமாவது அந்தயுகத்தின் வல்லமையினாலென்றும் இதுபோல் மற்ற யுகங்களிலுங் கண்டுகொள்க. (உ௩)

౨౪॥ కృతేతుమానవాధర్మా స్త్రేతాయాంగౌతమాస్మృతాః।
ద్వాపరేశంఖలిఖితాః కలౌపారాశరాఃస్మృతాః॥

(இ-ள்.) கிருதயுகத்தில் மனுவினால் சொல்லப்பட்ட தருமங்களும், திரேதாயுகத்தில் கௌதமர்சொல்லிய தருமங்களும், துவாபரயுகத்தில் சங்க லிகிதர்களின் தருமங்களும், கலியுகத்தில் பராசரர் கூறிய தருமங்களும் பிரமாணங்களாக விருக்கின்றன, (எ-று.) (உச)

౨౫॥ త్యజేద్దేశంకృతయుగే త్రేతాయాంగ్రామముత్సృజేత్।
ద్వాపరేకులమేకంతు కర్తారంతుకలౌయుగే॥

(இ-ள்.) கிருதயுகத்தில் பாபிஷ்டன் வசிக்கும் தேசத்தைவிட வேண்டும், திரேதாயுகத்தில் பாபஞ்செய்தவன் கிராமத்தைவிடவேண்டும், துவாபரயுகத்தில் பாபஞ்செய்தவன் குலத்தைவிடவேண்டும், கலியுகத்தில் பாபஞ்செய்தவனை மட்டும் விடவேண்டும். (எ-று.)

கிருதயுக வல்லமையினால் ஒருவன் செய்தபாபம் தேசமெங்கும் வியாபிக்கு மாகையால் அந்தத்தேசத்தைவிடவேண்டும், இப்படியே மற்றயுகங்களுக்கும் கண்டுகொள்க. பாபிஷ்டன் குலத்தைவிடவேண்டுமென்றால் அவனுடைய வம்சத்தில் கொள்ளுதல், கொடுத்தல், புசித்தல் முதலியவைகளை விடவேண்டுமென்பது கருத்து. (௨௫)

౨౬॥ కృతేసంభాషణాదేవ త్రేతాయాంస్పర్శనేనచ।
ద్వాపరేత్వన్నమాదాయ కలౌపతతికర్మణా॥

(இ-ள்.) கிருதயுகத்தில் பாபியோடு சம்பாஷணம் செய்வதாலும், திரேதாயுகத்தில் பாபியைத் தொடுவதினாலும், துவாபரயுகத்தில் அவனது அன்னத்தைப் புசிப்பதினாலும், கலியுகத்தில் தான்செய்த பாபத்தினாலும் மனிதன் பாபியாகிறான். (எ-று.) (௨௬)

౨౭॥ కృతేతాత్క్షణికశ్శాప స్త్రేతాయాందశభిర్దినైః।
ద్వాపరేచైకమాసేన కలౌసంవత్సరేణతు॥

(இ-ள்.) பெரியோர்களிட்ட சாபம் கிருதயுகத்தில் அந்த க்ஷணத்திலும், திரேதாயுகத்தில் பத்து நாள்களிலும், துவாபரயுகத்தில் ஒருமாஸத்திலும், கலியுகத்தில் ஒருவருஷத்திலும் பலிக்கும். (எ-று.)

మూ॥౨౮॥ అభిగమ్యకృతేదానం త్రేతాస్వాహూయదీయతే।
ద్వాపరేయాచమానాయ సేవయాదీయతేకలౌ॥

(இ-ள்.) கிருதயுகத்தில் தாநம்செய்பவர்கள் யாசிப்பவனிடத்திற்குத் தாமேசென்று உபசரித்தும், திரேதாயுகத்தில் யாசிப்பவனை அழைப்பித்தும், துவாபரயுகத்தில் தம்மையடைந்து யாசிப்பவனுக்கும், கலியுகத்தில் தம்மையடுத்துக் காத்திருப்பவனுக்கும் தானம் செய்வார்கள். (எ-று.) (௨௮)

మూ॥౨౯॥ అభిగమ్యోత్తమందాన మాహూయైవతుమధ్యమం।
అధమంయాచమానాయ సేవాదానన్తునిష్ఫలం॥

(இ-ள்.) தானே சென்றுகொடுப்பது உத்தமம், அழைத்துக் கொடுப்பது மத்தியமம்,யாசித்த பின்கொடுப்பது அதமம்,அவன் காத்தபின் கொடுப்பது நிஷ்பலம். (எ-று.)

கடலுக்கும் அளவு உண்டு, தானேசென்று கொடுக்குந் தானத்திலும் கேட்காமல் கொடுக்குந் தானத்திலும் உண்டாகும் பலனுக்கு அளவில்லையென்று புராணஸாரம் கூறுகின்றது. (உக)

౩౦॥౩౧॥ జితోధర్మోహ్యధర్మేణ సత్యంచైవానృతేనచ।
జితాశ్చోరైస్తురాజాన స్త్రీభిశ్చపురుషాఃకలౌ॥
సీదంతిచాగ్నిహోత్రాణి గురుపూజాప్రణశ్యతి।
కుమార్యశ్చప్రసూయంతే తస్మిన్కలియుగేసదా॥

(இ-ள்.) கலியுகத்தில் அதருமத்தினல் தருமமும், அஸத்தியத்தினல் ஸத்தியமும், திருடர்களால் அரசர்களும், ஸ்திரீகளால் புருஷர்களும் ஜயிக்கப்படுகிருர்கள். அக்கினி ஹோத்திரங்கள் வரவரச்சுருங்கி ஒழிந்துவிடுகின்றன. ஆசாரியன் பணிவிடை நசிக்கின்றது. கன்னிகைகள் பிள்ளைகளைப் பெறுகிருர்கள். அந்தக் கலியுகத்தில் எப்போதும் இவ்விதமாக நடக்கும். (எ-று.)

கன்னிகைகள் பிள்ளைகளைப் பெறுதலாவது விவாகம் செய்வதற்குமுன் பிதாவின் கிருகத்தில் புஷ்பிணியாவதே. அந்தப் பருவம் வரையில் பெண்ணுக்கு விவாகம் செய்விக்காத பிதா சிசுஹத்தி தோஷத்தை அடைகிருனென்று ஸ்மிருதியில் கூறப்பட்டது.

தருமம் கால்பங்காகையால் முக்கால் பங்காயுள்ள அதருமத்தினல் ஜயிக்கப்படுகிறதென்பதுகருத்து. வேதவிதிப்படி நடப்பவர்களுக்குக் குறைவுவந்தாலும் பிரஜைகளுக்கு வேதவிதிகளில் அசிரத்தையுண்டானலும் கலி விருத்தியடைந்ததென்று அறியவேண்டுமென்று ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் சொல்லப்பட்டது. (௩0, ௩க)

౩౨॥ కృతేత్వస్థిగతాఃప్రాణాః త్రేతాయాంమాంసమాశ్రితాః।
ద్వాపరేరుధిరంచైవ కలౌత్వన్నాదిషుస్థితాః॥

(இ-ள்.) கிருதயுகத்தில் பிராணன் தேகத்தில் எலும்பைப்பற்றி அது அழியாமலிருக்குமளவு மிருக்கின்றது, திரேதாயுகத்தில் மாம்சத்தைப் பற்றியும், துவாபரயுகத்தில் ரக்தத்தைப்பற்றியும், கலியுகத்தில் அன்னமுதலானவற்றைப் பற்றியுமிருக்கிறது. (எ-று.)

பிராணன் அந்தந்த யுகவல்லமையினல் எலும்புமுதலானவைகளைப்பற்றியிருக்கிறதென்று சொல்லப்பட்டது. பிராணன் என்பது

பிராணன், அபானன், ஸமானன், உதானன், வியானன் என்று ஐந்து ரூபமாகப் பிரிந்து ஹிருதயம், குதம், நாபி, கண்டம், ஸகல சரீரம் இந்த ஐந்து ஸ்தானங்களிலும் கிரமமாக நிற்பவனென்றும் அந்தந்த வாயுவுக்குரிய தொழில்கள் இவையென்றும் மைத்திரேய சாகை கூறுகின்றது. கிருதயுகத்தில் எலும்பைப் பற்றியிருப்பதால் அந்தக் காலத்தில் தவத்தினல் சரீரமுலர்ந்தாலும் பிராணுதாரமான அஸ்திக்கு ஒடுக்கமில்லாமையால் தவம் சிறந்ததாயிற்று, மற்ற யுகங்களுக்கும் இவ்விதமே கண்டுகொள்க. (௩௨)

33॥ యుగేయుగేచయేధర్మాస్తత్రతత్రచయేద్విజాః।
తేషాంనిందానకర్తవ్యా యుగరూపాహితేద్విజాః॥

(இ-ள்.) யுகங்கள்தோறும் தருமங்கள் எந்தவிதங்களோ, அந்த யுகங்களில் இருபிறப்பாளர் யாரோ, அவர்கள் அந்த யுகங்களுக்குத் தக்கவர்களாயிருக்கையால் அவர்களை நிந்திக்கலாகாது. (எ-று.)

அந்தந்த யுகங்களில் பிறக்கும் வஸ்துக்களுக்குப் பலம், நிறம் பெருமை முதலானவைகள் அந்தந்த யுகத்திற்கேற்க உண்டாகிறதுகள் என்று பாரதம் ஆரணிய பருவத்தில் சொல்லப்பட்டது. (௩௩)

34॥ యుగేయుగేతుసామర్థ్యం శేషంమునిభాషితం।
పరాశరేణచాప్యుక్తం ప్రాయశ్చిత్తంవిధీయతే॥

(இ-ள்.) யுகங்கள்தோறும் பராசரரால் சொல்லப்படாத யுக வல்லமை மற்ற ரிஷிகளால் சொல்லப்பட்டிருக்கிறது. முன்விருத்த பராசரரால் சொல்லப்பட்டிருக்கிற பிராயச்சித்தமும் விதிக்கப்படுகிறது. (எ-று.)

மற்ற ரிஷிகளால் சொல்லப்பட்டிருக்கிறதாவது பாரதம் ஆரணியபருவத்தில் கிருதம் என்னும் யுகம் எல்லாயுகங்களிலும் சிரேஷ்டமானது, அதில் தருமம் குறைவின்றியிருக்கும், ஒருதடவை செய்தவளவே தருமம் பலிக்கின்றமையால் செய்யவேண்டியதாக ஒன்றுமில்லை, அதில் பிரஜைகள் கிழத்தனத்தை அடைகிறதில்லை, தருமம் நான்கு பாதங்களுடன் நிற்கும், நான்குவர்ணங்களும் நிலைபெற்றிருக்கும், அதருமம் தருமத்தின் ஒரு பாதத்தை விழுங்குவதாயிருக்கும், விஷ்ணு சிவந்த நிறமுடையவராயிருப்பர், திரேதாயுகத்தில் மனிதர் தருமம், யக்கியம், ஞானம் இவைகளையுடையவர்களாயும், விஷ்ணு பொன்னிறமாயும் இருப்பார்கள், துவாபரயுகத்தில் வேதம் நாலாகப் பிரிக்கப்படும், சத்தியம் தவறுதிருக்கும், ஒருவனுவது சத்தியத்தில்

நிலைத்திருப்பன், ஸத்தியத்தினின்று தவறினால் அவர்களுக்கு வெகு வித ரோகங்கள், காமம் முதலியவைகள் தெய்வீகமாய் சம்பவிக்கும், ஒருபலனைக் கோரி யக்கியம் செய்வார்கள், பாபமிகுதியால் பிரஜைகள் க்ஷயிப்பார்கள், கலியுகத்தில் தருமம் ஒற்றைக்காலுடனிருக்கும், வேதத்தில் சொல்லிய ஆசாரங்கள் அடங்கிவிடும், பிரஜைகளுக்கு வியாதி, மனோவியாதி, நித்திரை, சோம்பல்முதலிய பல குற்றங்கள் விர்த்தியாகும், நான்குவர்ணத்தவரும் சூத்திரர்களுக்குச் சரியாவார், அந்த யுகமுடிவில் பிரஜைகள் ஒருவர்க்கொருவர் பயமற்றுக் கொடுந் தொழிலைச்செய்வார்கள் என்பதே.

கலியுகத்தில் செய்யத்தகாதவையாகச் சிலவற்றைப் பிரமபுராணம், கிரது ஸ்மிருதி இவைகள் கூறுகிறதோடு பெரியோர்களுடைய அநுஷ்டாநமுங் காணப்படுகிறது. அவையாவன;—நெடுங்காலம் பிரமசாரியாயிருக்கை, சன்னியாசம், தாய் கோத்திரத்திற்குச் சபிண்டன் (அம்மான்) பெண்ணை விவாகம் செய்வது, கோவதம், நரமேதம், அசுவமேதம், மதுபானம், ஒருவன் விவாகம் செய்தவளைப் பின்னொருவன் விவாகம்செய்வது, ஜேஷ்டபுத்திரனென்றுதாயத்தில் அதிகபாக மெடுப்பது, தமையன்மனைவியோடு தம்பி புணர்ந்து சந்ததியுண்டாக்குவது, ருதுவாகாத பாலிகைக்கும் ருதுவாயும் புருஷனோடு ஸம்பந்த மில்லாதவளுக்கும் வைதவியம் நேரிட்டால் மறுபடியும் வேறு ஒருவனோடு விவாகம் செய்வது, பிராம்மண க்ஷத்திரிய வைசியர்கள் மற்ற வர்ணங்களில் பெண்ணை விவாகம்செய்வது, பிராம்மணன் சமுத்திரத்தில் யாத்திரைசெய்வது இவை முதலானவைகளே. இவ்விதமாக அந்தந்தயுகங்களில் முனிகளால் விதித்தவற்றைச் செய்யாமல் விலக்கியவற்றைச்செய்தால் இவைகளுக்கு விருத்த பராசரர் பிராயச்சித்தம் கூறியிருக்கிறார். அதில் எலும்புஇல்லாத சிறிய ஜந்துக்களைக்கொன்றால் ஒருநாள் பட்டினியிருந்து பதினாறு பிராணாயாமமும் மூன்று கால ஸ்நாநமும் செய்தால் சுத்தனாகிறானென்றும், எலும்புடைய ஜந்துவைக்கொன்றால் அதற்கு இரட்டிப்புப்பிராயச்சித்தம் விதிக்கப்படுகிறதென்றும், மனதினால் செய்த பாபம் ஒரு பங்கு என்றும், வாயால் சொன்னபாபம் இரண்டுபங்கு என்றும், தேகத்தால் செய்தால் நாலுபங்கு அதிகமென்றும், இவ்விதமாகக்கூறியிருப்பதை இந்தப்பராசரர் எடுத்துக்காட்டியிருப்பதால் எல்லாக் கல்பத்திலும் பராசரஸ்மிருதியே கலியுகதருமத்தைக் கூறுவதென்றும் பிராயச்சித்தங்களைப்பற்றிக் கலியுகத்தில் பராசரரே முக்கியராகக் கொள்ளவேண்டியவரென்றும், "பராசரேணச" பராசரராலும் சொல்

லப்பட்டது என்றதினல் யாக்கிய வல்கியர், மனு முதலியவர்களா லும் பிராயச்சித்தங்கள் சொல்லப்பட்டிருக்கின்றனவென்றும் அர்த்த மாதலால் பெரியோர்கள் மநு, பராசராதிகள் கூறிய பிராயச்சித்தங்க ளேயே ஆலோசித்து அந்தந்தப்பாபத்திற்கு விதிக்கிருர்கள். ஒருவன் பாபத்தில் முயல்வது யுகவல்லமையாதலால் அவனை நிந்திக்கலாகா தென்கிற வசனம் பிராயச்சித்தம் செய்துகொள்ளச் சக்தி யில்லாத வனைப்பற்றியதாகும். இதற்கு நிதரிசனமாக அரசர், கள்ளர், வியாதி முதலிய பய நிமித்தங்களால் நல்லொழுக்கங்களைத் தவறினவன் குற்றத்தை அடைந்தவனாகமாட்டான் என்று சைவாகமம் கூறு கின்றது. (௩௪)

౩౫॥ అహమద్యైవ తత్సర్వ మనుస్మృత్య బ్రవీమి వః।
చాతుర్వర్ణ్యసమాచారం శృణ్వంతు మునిపుంగవాః॥

(இ-ள்.) நான் இப்போதே அவையெல்லாவற்றையும் நினைத்து (பலதரும சாஸ்திரங்களையும் ஆராய்ந்து) உங்களுக்குச் சொல்லுகி றேன், முனீந்திரர்கள் நான்கு வருணங்களினுடைய ஆசாரங்களையும் கேட்கக்கடவர்கள். (எ-று.) (௩௫)

మూ॥ ౩౬॥ పరాశరమతం పుణ్యం పవిత్రం పాపనాశనమ్।
చింతితం బ్రాహ్మణార్థాయ ధర్మసంస్థాపనాయ చ॥

(இ-ள்.) புண்ணியத்தைத்தருவதும், பரிசுத்தமானதும், பாபங் களை யொழிக்கத்தக்கதுமான பராசருடைய சாஸ்திரம் பிராம்மணர் களுக்காகவும், (மற்றவர்களுக்கு உபதேசித்துத்) தருமங்களை நிலை நிறுத்துவதற்காகவும் அர்த்தத்துடன் ஆராயப்பட்டிருக்கிறது. (எ-று)

புண்ணியத்தைத்தருவதும், பாபங்களை யொழிக்கத்தக்கது மெ ன்பதினல் வசிஷ்டர், புலஸ்தியர் இவர்களுடைய வரத்தினல் பர தேவதையை உள்ளபடி அறிந்த புராண கர்த்தாவான பராசரமுனி செய்தருளிய தரும சாஸ்திரத்தைப் படித்தமாத்திரத்தில் இஷ்ட சித்தியும் அநிஷ்டநிவர்த்தியும் உண்டாகுமென்பது கருத்து. (௩௬)

౩౭॥ చతుర్ణామపి వర్ణానా మాచారో ధర్మపాలకః।
ఆచారభ్రష్టదేహానాం భవేద్ధర్మః పరాఙ్ముఖః॥

ஆசார நிருபணம்.—(இ-ள்.) நான்கு வருணத்திற்கும் தருமத் தைக் காக்கத்தக்கது ஆசாரம், அதைத் தவறின தேக முடையவர்க ளுக்குத் தருமம் முகங்காட்டாதொழியும். (எ-று.)

ஆசாரத்தினல் சகலரும் ஆயுள், செல்வம், இகலோக சுகம், பர லோக சுகம் இவைகளைப்பெறுவார்கள், ஆசாரந் தவறினவர் இ

ஸ்வைகளைப்பெறுவதில்லை,ஸத்புருஷருக்கு ஆசாரம் லக்ஷணமாமென்று பாரதம் ஆநுசாஸநிக பருவம் கூறுகின்றது. ஆரணிய பருவத்தில் கோபம், பொறாமை, அகங்காரம், பிடிவாதம் இவைகளற்று நடுவு நிலைமை, சாந்திமுதலிய குணங்களையுடையவர்களே சிஷ்டர், அவர்களது அநுஷ்டானமே ஆசாரமாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதமாக மனு, போதாயனர் முதலானோர் கூறினார்கள். இதனால் நான்கு வருணத்திற்கும் பொதுத் தருமத்தைச்சிறிது கூறவேண்டுமென்று கேள்விசெய்த வியாசருக்குத் தருமத்திற்குக் காரணமாகிய நல்லொழுக்கத்தைப் பொதுத் தருமமென்று பராசரர் உத்தரம் அருளிச்செய்தார். (௩௮)

3౮|| షట్కర్మాభిరతో నిత్యం దేవతాతిథి పూజకః।
హుతశేషం తు భుంజానో బ్రాహ్మణో నావసీదతి॥

பிராம்மணரது விசேஷதருமம். (இ-ள்.) அறுவகைத்தொழிலில் அதிக சிரத்தை யுடையவனும், தினந்தோறும் தேவதைகள், அதிதிகள் இவர்களைப் பூசிப்பவனும், யக்கியஞ்செய்து மிகுந்த அவிஸைப்புசிப்பவனுமாகிய பிராம்மணன் துன்பப்படுவதில்லை (எ-று.)

அறுவகைத்தொழில்;—வேதமோதல், ஓதுவித்தல், யாகஞ்செய்தல், செய்வித்தல், ஈதல், ஏற்றல் இவைகளே.

வேதம் ஓதல் ஓதுவித்தலின் பிரகாரணம். ஓதுவித்தலைப்பற்றிக் கூர்மபுராணம் கடவுளுண்டு என்கிற நம்பிக்கையுடையவன், அல்லது மனதை அடக்கினவன் அல்லது தன்னை உணர்ந்தவன், இவ்விதமான சிஷியனுக்குத் தருமம், புராணம், வேதம், அதின் அங்கங்கள் இவைகளை விதிப்படி நாடோறும் ஓதுவிக்க வேண்டுமென்றும், ஒரு வருஷகாலம் குருவினிடத்தில் காத்திருந்த சிஷியனுக்குக் குரு ஞானத்தை உபதேசிக்காவிடில் சிஷியனுடைய பாபத்தைத்தான் அடைகிறானென்றும், குரு புத்திரன், சாஸ்திரங்களைக்கேட்க விருப்பமுடையவன், தான் ஒரு நூலை உபதேசித்து அதற்குப் பதிலாக வேறு நூலை அபேக்ஷிப்பவன், தருமத்திற்குக் கட்டுப்பட்டவன், சுசியாயிருப்பவன், உண்மையுரைப்பவன், உபதேசித்ததை உள்ளபடி கிரகிக்க, அல்லது பிறரை ஓதுவிக்கச் சக்தியுடையவன், தனக்கு வேண்டும் பொருளைத் தருமமாகக் கொடுப்பவன், சாந்தன், தன்னைச் சேர்ந்தவன், (ஜேஷ்டபுத்திரன், பேரன் முதலானோர்) ஆக இப்பதின்மரும் தருமத்தால் உபதேசிக்கத் தக்கவரென்றுசொல்லிற்று. வசிஷ்டர் வித்யாதேவதை சப்தரூபமாக எதிரேதோன்றிப் பிராம்மணனிடத்துவந்து இரகசியமாக என்னை ரக்ஷிப்பவனிடத்தும், எல்லை கடவாதவனி

டத்தும், இருக்கத்தக்கவ ளானேன், பொறுமையுள்ளவன், நடுவு நிலைமையும் சிரத்தையுமில்லாதவன் இவர்களுக்கு என்னைச் சொல்லாதிருப்பையாகில் நான் உனக்கு எல்லாவற்றையும் சாதித்துக் கொடுக்கச் சக்தியுள்ளவளாயிருப்பேன், எடுக்கக் குறையாத பொன் நிதியைப்போல் என்னைக்காப்பாற்றெனச் சொல்லிற்றென்று கூறினர். யமஸ்மிருதி நாடோறும் ஆசாரியன் தன் நித்தியகருமங்களை முடித்துச் சிஷியனுக்கு வேதம்ஓதுவிக்கவேண்டுமென்றும், சுருதி எட்டு வயதினையுடைய பிராம்மண புத்திரனுக்கு உபநயனஞ் செய்துபின்பு அவனுக்கு வேதம் ஓதுவிக்கவேண்டுமென்றும் விதித்தன. உபநயனம் செய்து அந்தச் சிஷியனுக்கு வேதத்தை அங்கங்களோடும் ரஹஸியங்களோடும் விதிப்படி ஓதுவிக்கிற பிராம்மணன் ஆசாரியனாகின்றானென்று மனுவும் கூறினர்.

வேதத்தை ஓதாமல் வேறுவித்தையில் சிரமப்படுகிற பிராம்மணன் பிழைத்திருக்கும்போதே தன் சந்ததியோடு சூத்திரனாகின்றான் என்றும்,முன்சொன்ன அறுதொழிலில் பிராம்மணனுக்கு யாகஞ் செய்வித்தல்,ஓதுவித்தல், சுசியாயிருப்பவனிடத்துத் தானம்பெறுதல் ஆகிய இம்மூன்றுதொழிலும் ஜீவனத்தின் பொருட்டாக விருக்கின்றது என்றும் மனு கூறினர். வேதமோதுதலும் அதன் பொருளை.விசாரித்தலுமின்றி யிருக்கை பாபமென்று கூர்மபுராணத்திலும், ஆசாரியனை அடைந்து அவர் விதித்தபின்பு அவருக்கு இஷ்டனாயிருந்து அத்தியயநம் செய்யவேண்டுமென்று விஷ்ணுபுராணத்திலும்,யாக்கிய வல்கிய ஸ்மிருதியிலும் கூறப்பட்டது. தன் குலத்தில் கிரமமாகவந்த சாகையையே ஓதவேண்டுமென்றும், அதில் சொல்லியதருமங்களையே செய்யவேண்டுமென்றும் தன் சாகை முழுதுமோதியபின் இதர சாகை ஓத வேண்டுமென்றும் வசிஷ்டர் கூறினர். முன்னே தன் புத்திரனுக்கு வேதத்தையும் பின்பு ஸ்மிருதிகளையும் ஓதுவிக்க வேண்டுமென்று பிரகஸ்பதியும், குருமுகமாக ஓதவேண்டுமே யன்றிப் புஸ்தகபாடம் தகாதென்று நாரதரும், அநத்தியயந (ஓதக்கூடாத) காலங்களிலும், சூத்திரன் முன்னும், பொருளாசையாலும் வேதம் ஓதுவது நரகத்துக்குக்காரணமா மென்று வியாசரும் கூறினர்கள்.

அநத்தியயநப்பிரகரணம். பிரதமை, சதுர்த்தசி, அஷ்டமி, இரண்டுபருவகாலம்,அநத்தியாய தினத்தின் முதல்நாள் இராத்திரி இந்தக் காலங்களில் வேதம் ஓதக்கூடாதென்று ஹாரீதரும், நாய், நரி, கழுதை, கோட்டான், இவைகள் கூச்சலிடும்போதும்,ஸாமவேதம் சொல்லு மிடத்திலும், ஒருவன் அபாயத்தினால் கூச்சலிடும்போதும்,

மலம், பிணம், சூத்திரன், அழுகிறவன், சண்டாளன்,ஸ்மசானம், பாபி இவர்கள் சமீபத்திலும், தான் அசுசியாயிருக்கையிலும், மின்னல் இடி பெருமழை இவைகள் உண்டாயிருக்குமிடத்திலும்,புசித்த கை அலம்பின ஈரத்தோடும்,ஜலத்திலும், பாதிராத்திரியிலும்,பெருங்காற்றிலும், மண்மாரியிலும், சந்தியாகாலத்திலும், பெரியோர்கள் வந்தபோதும், வாகனத்தின் மேலிருக்கும்போதும் வேதமோதக் கூடாதென்று யாக்கியவல்கியரும்,கடக ஸங்கிரமணம், மகர ஸங்கிரமணம் ஆகிய அயநங்கள், மேஷ சங்கிரமணம், துலா சங்கிரமணம் ஆகிய விஷு புண்ணியகாலம்,ஆஷாட சுத்த ஏகாதசியாகிய விஷ்ணு சயந காலம்,கார்த்திகசுத்த ஏகாதசியாகிய திருப்பள்ளி எழுச்சிகாலம், பதினான்கு மனுவாதிகள், நான்கு யுகாதிகள் ஆகிய இந்தநாள்களிலும் வேதமோதல் கூடாதென்று நாரதரும் கூறினார்கள்.

சிராவண சுத்த பௌர்ணமியில்வேதமோதத்தொடங்கி அதுமுதல் ஒருமாஸம் பிரதோஷகாலத்தில் அத்தியயநம் செய்யலாகாதென்று ஆபஸ்தம்பர் கூறினார். சூக்ஷ்மபுத்தியை அபேக்ஷித்தவன் திரயோதசி, சப்தமி, சதுர்த்தி இந்தப் பிரதோஷங்களில் வேதத்தைச் சொல்லவும் நினைக்கவும் ஆகாதென்று ஆதித்திய புராணம் கூறுகின்றது. சிராத்தம் புசித்த தினத்திலும் தானம் வாங்கின தினத்திலும் குருவுக்கும் சிஷியனுக்கும் நடுவில் பசு, தவளை, நாய், பாம்பு, பூனை, எலி ஆகிய இந்த ஜந்துக்கள் குறுக்காகப்போனால் அந்தத்தினத்திலும் வேதமோதக்கூடாதென்று யாக்கிய வல்கியரும்,நித்தியம் செய்யும் மந்திர ஜபம், காமியஜபம், யக்கியம், பாராயணம், உபாகருமம், உபதேசித்தல், அதைப்பெறுதல் இவைகளுக்கு அநத்தியயநமில்லை என்று சௌனகரும் கூறினார்கள். வேதத்தின் ஆறு அங்கங்கள், இதிகாசம், புராணம், தருமசாஸ்திரம் முதலிய மற்ற சாஸ்திரங்களுக்கு அமாவாஸை, பருவம் இவைகள் தவிர மற்ற நாள்கள் அநத்தியயந காலமல்லவென்று கூர்மபுராணம் விதிக்கிறது.

யாகம் செய்தலின் பிரகரணம். ஆதியில் பிரமன் பிரஜைகளை யக்கியங்களோடு சிருஷ்டித்து இந்த யக்கியங்களால் நீங்கள் தேவர்களைத் திருப்திசெய்யுங்கள், அவர்கள் உங்களுக்கு வேண்டிய பலனைத் தரக்கடவர்கள், பின்னுமந்தப் பலன்களைப்பெற்றுத் தேவர்களை யக்கியத்தினால் பஜனைசெய்யுங்கள், அப்படி பஜிக்காதவர்கள் கள்ளராவீர்கள் என்றும், அந்தயக்கியத்தைப் பலனைக்கோராமலே செய்வது ஸாத்துவிகமென்றும், பலனை விரும்பி அல்லது டம்பத்திற்காவது செய்வது ராஜஸமென்றும், சிரத்தை, தக்ஷிணை,அன்

னதாநம் இவைகளின்றியே செய்வது தாமஸமென்றும் சொன்னதா க ஸ்ரீகண்ணபிரான் கீதையில் அருளிச்செய்தார். மஹாபாரதம்அசுவ மேதபருவத்தில் பிராம்மணர்,பசுக்கள், பொன்,வெள்ளி,ஓஷதிமுதலி யவைகள் யக்கியத்திற்காகவே சிருஷ்டிக்கப் பட்டனவாகையால் அந்த யக்கியத்தைச் செய்யாவிட்டால் பாபம் ஸம்பவிக்குமென்று சொல்லப்பட்டிருக்கிறது. வசந்தகாலத்தைப் பிராம்மணனுக்கும், கிரீஷ்மத்தை க்ஷத்திரியனுக்கும், சரத்காலத்தை வைசியனுக்கும் யாகஞ்செய்ய வேதம் விதித்தது.

யாகம் செய்வித்தலின் பிரகரணம். திரவியத்தை அபேக்ஷித்த பிராம்மணன் தானம்வாங்கவும், யக்கியத்தைச்செய்விக்கவும், ஓது விக்கவும் வேண்டுமென்று வேதம் விதித்தமையாலும்,மார்க்கண்டேய புராணத்தில் யக்கியம் செய்வித்தல் பிராம்மண கிருத்தியமென்று கூறுதலாலும், யாகஞ்செய்ய அதிகாரமில்லாத சூத்திரர், பாபிகள் முதலானவர்களைப் பொன்னாசையால் யாகம்செய்விப்பது பாதகமேயன்றித் தக்கவர்களை யாகஞ்செய்விப்பது தகுதியாகும்.

தானப்பிரகரணம். தாநமென்பது எல்லா ஜீவர்களுக்கும் சந்தோஷகரமாயும், எல்லா யக்கியங்களுக்கும் தக்ஷிணையாயும், எல்லா உயிரையும் தானஞ்செய்பவனை அடுத்துப்பிழைக்கச்செய்வதாயும், சத்துருக்களை யொழிப்பதாயும், சத்துருக்களை மித்திரமாக்குவதாயுமிருப்பதால் தானத்தினால் எல்லாப் பலனுமுண்டு என்றுவேதம் கூறிற்று. மனம்களித்து ஸத்பாத்திரத்தில் தானம்செய்யவேண்டுமென மனுவும், சக்தியிருந்து தானஞ் செய்யாதவன் நரகத்தை அடைகிறானென்று விஷ்ணு தர்மோத்தரமும்,அப்படிக்கொடாதவர்கள் தரித்திரராகப் பிறக்கிறார்களென்று பிரம புராணமும், முன்பிறப்பில் இல்லை இல்லை யென்று அப்பியாசப் படுத்தியசொல் இந்த ஜன்மத்தில் கொடு கொடு என்று வேறு உருவங்கொண்டு அவனைப் பற்றி யிருக்கிறதென்று வியாசரும்,பசு,பிராம்மணர், அக்கினி, தேவர் இவர்களுக்கு ஒருவன் கொடுக்கும்போது தடுப்பவன் நூறுதரம் இழிந்த யோனிகளில் ஜனித்து நீசனாகிறான் என்று சாதாதபரும், ஞாநம், அநுஷ்டாநம், தவம் இவைகூடியிருக்கும் பெரியோரே தான பாத்திரமென்று யாக்கியவல்கியரும், சூத்திரஸம்பந்தமான அன்னம் யார்வயிற்றில் விழுகிறதில்லையோ அது உத்தமபாத்திரமென்று வசிஷ்டரும் சொல்லுகையால் பொருளை ஸத்பாத்திரத்தில் கொடுப்பதே தானமெனப்படும்.

தானத்திற்கு ஏதுக்கள் இரண்டு,ஆதாரங்கள் ஆறு, அங்கங்கள் ஆறு, விபாகங்கள் ஆறு, பிரகாரங்கள் நான்கு,வகைகள் மூன்று,நாதங்கள் மூன்று. இவைகளையுடையதே தானமாகும். தானம் சிறிதாயினும் பெரிதாயினும் அதன் விர்த்திக்குச் சிரத்தை,தானம் வாங்குகிறவர்களிடத்தில் பக்தி என்னும் ஏதுக்களிரண்டும் அவசியமிருக்கவேண்டும். தருமம், அர்த்தம், காமம், வெட்கம், ஆநந்தம், பயம் ஆகிய இந்த ஆறும் தானத்திற்கு ஆதாரங்கள். அவற்றுள் தருமத்தை ஆதாரமாக வுடையதானம் பிரதிப் பிரயோஜனம் வேண்டாமலே ஸத்பாத்திரத்தில் நித்தமும் கொடுப்பதாம். அர்த்தத்தை ஆதாரமாக வுடைய தானம் ஒரு பிரயோஜனத்தை வேண்டிக் கொடுப்பதாம். காமத்தை ஆதாரமாக வுடையதானம் அன்னிய ஸ்திரீகள், மதுபானம், வேட்டை, சூது இவைகளின் காமத்தினால் தகாதவர்களுக்குக் கொடுப்பதாம். வெட்கத்தை ஆதாரமாக வுடையதானம் சபையில் புகழப்படுவதினால் வெட்கப்பட்டு இரந்த பொருளை எற்போருக்குக் கொடுப்பதாம். ஆநந்தத்தை ஆதாரமாக வுடையதானம் இஷ்டமான வஸ்துக்களைக் கண்டாகிலுங் கேட்டாகிலும் மனமகிழ்ந்து கொடுப்பதாம். பயத்தை ஆதாரமாக வுடையதானம் ஒருவனுடைய கோபத்திற்காகவாயினும் இம்சையினின்று தப்புவதற்காகவாகிலும் விரோதிகளுக்குக் கொடுப்பதாம்.

கொடுப்பவன், வாங்குபவன், சிரத்தை, தருமத்தோடு கூடியபொருள், தகுந்ததேசம், தகுந்தகாலம் ஆகிய இவை ஆறும் தானத்திற்கு அங்கங்களாம். பாபமின்மை, நோயின்மை, தருமசிந்தை, காரணமின்றிக் கொடுக்க விருப்பம், சுசியான மனநிலை, பழிக்கப்படாத ஜீவனம் ஆகிய இந்த ஆறு குணங்களையுமுடையவனே கொடுப்பவனில் சிறந்தவனாகிறான். தாய், தந்தை, ஆசாரியன் இவர்களால் திருத்தப்பட்டுக் குற்ற மற்ற நடையோடும் தயவோடுங்கூடினவனும், இந்திரியங்களை ஜயித்தவனும், குற்றமற்ற பிறப்புடையவனுமான பிராம்மணனே தானத்தைப் பெற்றுக்கொள்ளத்தக்க பாத்திர மென்னப்படுவான். தேகசுத்தி, சித்தசுத்தி, யாசிக்கின்றவர்களைக் கண்டு மிகக்களித்தல், அவர்களையாதரித்தல், பிரிய வசனங்களால் உபசரித்தல், அசூயையற்றிருத்தல் இவைகள் தானத்திற்குரிய சிரத்தையாம். தருமமான தன் சீலத்திற்கு விரோதமின்றித் தன் பிரயத்தினத்தினால் தேடிய பொருள் அல்பமாயினும் பெரிதாயினும் தானத்திற்குத் தக்க பொருளாகும். எந்தத்தேசத்தில் எந்தப்பொருள் கிடைப்பது அரிதோ அந்தப்பொருளைக் கொடுக்க அது தகுந்த தேசமாகும். எந்தக்கால

த்தில் எந்தப்பொருள் கிடைப்பது அரிதோ அந்தப்பொருளைக் கொடுக்க அது தகுந்த காலமாகும். விபாகமென்பது வேருகத்திரிதல். இங்கு தானம் அல்பமாயினும் அது சில எதுக்களால் அதிகமாவதும், அதிகதானமே சில எதுக்களால் அல்பமாவதும் விபாகமாம். அவஸ்தை, தேசம், காலம், யாசிப்பவன், கொடுப்பவன் இவர்களுடைய குணத்தினுல் தானம் துஷ்பலம், நிஷ்பலம், ஹீநம், துல்லியம், விபுலம், அக்ஷயம் என்கிற ஆறு விபாகங்களைப் பெறுகிறது. அவற்றில் நாஸ்திகனுக்கும், திருடனுக்கும், கொலை செய்பவனுக்கும், அயல் மாதரை அனுபவிப்பவனுக்கும், பாபிக்கும், கோள் சொல்லுகிறவனுக்கும், சிசுக்கொலை செய்கிறவனுக்கும் கொடுத்த தானம் கெட்டபலனைத் தரும், இது துஷ்பல விபாகம். பெரிய தானமாகிலும் சிரத்தையில்லாமல் கொடுத்தால் அது பலனைத் தராமலொழியும், இது நிஷ்பலவிபாகம். பிறருக்குப் பாதையைச் செய்வதாகக் கொடுத்ததானம் பெரிதாயினும் தாழ்வையடையும், இதுஹீநவிபாகம். விதித்தபடி செய்த தானமாகிலும் அது மனங்கலங்கிக்கொடுக்கப்பட்டால் தானத்திற்குத் தக்க பலனைத்தரும்.அதிக பலனைக்கொடாது,இது துல்லிய விபாகம். மேலேசொன்னஆறு அங்கங்களோடும் செய்ததானம் விசேஷ பலனைத்தரும். இது விபுல விபாகம். தயவோடு கொடுத்த தானம் அக்ஷயபலனைத்தரும்,இது அக்ஷயவிபாகம்.

தானமானது பின்னும் ஆஜஸ்ரிகம், காமியம், திவ்யம், நைமித்திகம்,என்கிற நாலு பிரகாரங்களையுடையது. எப்பொழுதும் ஸ்திரமா யிருக்கிற தானம் ஆஜஸ்ரிகம், அதாவது தண்ணீர்ப்பந்தல், தோப்பு, எரி, குளங்கள் முதலானவற்றை உண்டாக்குவது. தன்னுடைய மக்களுக்காகவும், ஒருவனை ஜயிப்பதற்காகவும், ஐசுவரியத்தின் பொருட்டும், ஸ்திரீகள் விஷயமாகவும் கொடுப்பதுகாமியம். யக்ஞயம் செய்தகொடுப்பது திவ்யம். இன்னகாலத்தில் இன்னகிரியையில் இதன் பொருட்டுக்கொடுப்பது என்று காலம்,கிரியை,பலன் இவைகளை அபேக்ஷித்துக்கொடுப்பது நைமித்திகம். பின்னும் ஒன்பது உத்தமம், நான்குமத்தியமம், மற்றவை அதமம் என்று தாநம் மூன்றுவகைப்படும். அன்னதானம், வித்தியாதானம், கந்நிகாதாநம், வஸ்திரதானம், கோதாநம், பூதானம், சுவர்ண தாநம், அசுவதானம், கஜதானம் ஆகிய மிகுந்த திரவியங்களோடு செய்யப்பட்ட இந்த ஒன்பதும் உத்தமதானம். மனை, மற்றுமுள்ள பண்டங்கள், அவிழ்தம் முதலானவைகளைக் கொடுப்பது மத்தியமதானம். பாதரக்ஷை,வேலைக்காரர்,வாகனம்,குடை, பாத்திரங்கள், ஆசனம், விளக்குகள், விறகு, பழவகை, மற்

றும் பலர் பார்க்கத்தக்க பண்டங்களைக்கொடுப்பது அதமதானம். ஒருவன்செய்த நல்லகருமம், தானம், கற்றகல்வி இம்மூன்றையும் தானேபுகழ்ந்துகூறுவானாகில் அவை அழிந்துவிடும். தன்னைத்தானே புகழ்ந்துகொண்டால் ஒளிமழுங்கிவிடுகிறது. செய்தபின் வியஸனப்பட்டாலும் விபத்தையடைகிருன் ஆதலால் தான்செய்தகாரியங்களை வீணுகத்தானே கூறலாகாது என்று இந்தத்தான மகிமையைத் தேவலர் விரித்துரைத்தார். இது கொடுக்கத்தக்கது என்று ஞானத்துடன் பிரதியுபகாரம் வேண்டாமலே நல்லதேசத்தில் நல்லகாலத்தில் ஸத்பாத்திரத்தில் செய்ததானம் ஸாத்துவிகமென்றும், பிரதிப் பிரயோஜநத்தையும், தானபலனையும் வேண்டிமனங்கலங்கிக் கொடுப்பது ராஜஸமென்றும், தகாததேசத்தில் தகாதகாலத்தில் தகாதபாத்திரத்தில் சுத்தியில்லாத பொருளைக்கொடுப்பது தாமஸமென்றும் பகவத்கீதையில் ஸ்ரீகண்ணபிரான் அருளிச்செய்தார். ஸாத்துவிகதானத்தின் பலனைத் தேவதையாகப் பிறந்து அனுபவிக்கிருனென்றும் ராஜஸதானத்தின் பலனை மானிடஜன்மத்திலேயே அனுபவிக்கிருனென்றும் தாமஸதானத்தின்பலனை மிருகங்களாகப்பிறந்து அனுபவிக்கிருனென்றும் விஷ்ணுதர்மோத்தரம் கூறுகின்றது. தானத்தை முதலிலே குரு, பின்பு உத்தம பிராம்மணர், குரு இல்லாதபக்ஷத்தில் குருபுத்திரன் அல்லது குருபத்நினி, குருமகள், குருமகனுடைய மகன் இவர்களில்லையாகில் குருவம்சத்தில் பிறந்த வேறு ஒருவன் ஆகிய இவர்களுக்குக் கொடுக்கவேண்டும். இதைத்தவறிச்செய்தவன் நரகத்தை அடைகிருன் என்று ஸ்காந்தபுராணம் கூறுகின்றது. பிராம்மணனல்லாதவனுக்குக்கொடுத்ததானம் கொடுத்ததற்குச் சமமானபலனைத்தருமேயல்லது அதிக பலனைத்தராது. பிராம்மணோத்தமனுக்குக் கொடுத்தால் இரட்டிப்பும், வேதமோதத் தொடங்கின பிராம்மணனுக்குக் கொடுத்தால் நூருயிரம்பங்கு பலனும், வேதம் முழுதும் ஓதி யுணர்ந்த வேதியனுக்குக்கொடுத்தால் முடிவில்லாதபலனும் உண்டாகுமென்று யமஸ்மிருதி கூறுகின்றது.

தன்பொருளைத் தன் பிதாவுக்குக் கொடுத்தால் நூறுபங்கு பலனும், மாதாவுக்கானுல் ஆயிரம் பங்குபலனும், மகளுக்கானுல் முடிவில்லாத பலனும், உடன்பிறந்தாளுக்குக்கொடுத்தால் விசேஷபலனும் உண்டாகுமென்று வியாஸர் அருளிச்செய்தார். தரித்திரர்களான உடன்பிறந்தாள், அம்மான், அத்தை முதலான தன் பந்துக்களுக்குக் கொடுத்தால் கோடிபங்கு அதிகமான பலன் கிடைக்குமென்று பவிஷியோத்தர புராணத்தில் சொல்லப்பட்டது.

தரித்திரனுகிச் சிரமப்படுகிற பிராம்மணன் சமீபத்திலிருக்க அவனைவிட்டு அப்பால் தானஞ்செய்பவன் ஏழுதலைமுறை தன்வம்சத்தை நாசம் செய்கிறுனென்று சாதாதபர்கூறினுர். தான் ஒருவிரதத்தைச் செய்து அதினுல் தன் பாபத்தை மறைத்திருப்பவனுகிய பைடாலவிரதமுடையவன், கீழ்ப்பார்வை, வஞ்சனை, தன்காரியத்தை முடித்துக் கொள்வதில் விருப்பம், லோபம், அடக்கத்தை மேலுக்குப் பொய்யாகநடிப்பது இவைகளாகிய பக (கொக்கு) விருத்தியையுடையவன், இவ்விருவருக்கும் தானம் கொடுத்தவனுக்குக் கேடு உண்டாகும் என்று மனுகூறினுர்.

மூன்றுவருஷம் பொருளாசையினுல் அந்நியனுக்காகத் தேவபூஜைசெய்த பிராம்மணன் தேவலகனென்று சொல்லப்படுவான், அவனுக்குச்செய்த தானமும்,வட்டியால்ஜீவனம் செய்பவனுக்குச்செய்த தானத்தால் கொடுப்பவன் நிலையும் கெடும் என்று சாதாதபர்கூறினுர். பிராம்மணர் தான யோக்கியரேயாகிலும் அவர்களில் தானம் வாங்கிய பொருளைக் கெட்டவழியில்செலவழிப்பவனுக்கும் தருமவழியில் செலவழிக்காதவனுக்கும் சிறிதும் கொடுக்கலாகாதென்று விருத்த மனு கூறினுர்.அயலார் நிலத்தில் செய்ததானமும்,உயர்ந்தவனேயாயினும் ஆசாரத்தினுல் கீழ்ப்பட்டவனுக்குச் செய்ததானமும், பாபவழியால் ஸம்பாதித்த பொருளைக் கொடுப்பதும், பிராம்மண னல்லாதவனுக்குச் செய்ததானமும், பாபி, திருடன், குருவுக்கு இஷ்டனுகாதவன், செய்தநன்றி மறந்தவன், கிராமபுரோஹிதன், கூலிவாங்கி வேதம் சொல்விப்பவன், வியபசாரியினுடைய பதியைத் தன் வீட்டில்வைத்துக்கொண்டிருப்பவன், ஸ்திரீகள்சொல்லியபடி நடப்பவன், பாம்புபிடிப்பவன், பழிக்கப்பட்ட சீலமுடைய பிராம்மணன், புஷ்பிணியானபெண்ணை விவாகம்செய்த புருஷன், பரிசாரகன் ஆகிய இவர்களுக்குச்செய்த தானமும்,பயனற்றவைகளாமென்று விஷ்ணு தர்மோத்தரம் சொல்லுகின்றது. முடவன், குருடன், செவிடன், ஊமை, வியாதிஸ்தன் இவர்கள் தானமின்றி எப்பொழுதும் அன்னபானுதிகளால் உபசரிக்கத் தக்கவர்களென்று மஹாபாரதத்தில் சொல்லப்பட்டது. தன் குடும்பச் செலவுக்கு வேண்டிய பொருள், மூத்த மகன், மனைவி இவர்கள் தவிர மற்ற திரவியங்களைக் கொடுக்கலாமென்று யாக்கியவல்கியஸ்மிருதி கூறுகின்றது.

ஒருவன் தான் சிரமப்பட்டாவது உத்தம பிராம்மணனுக்குத் தாநமும் சன்னியாசிக்கு அன்னபிக்ஷையும் கொடுக்க வேண்டுமென்று வியாசர் அருளிச்செய்தார். தாகமுள்ளவனுக்குத் தண்ணீர்

கொடுத்தவன் திருப்தியையும், பசித்தவனுக்கு அன்னதானஞ் செய்தவன் அக்ஷயமான சுகத்தையும், திலதானஞ் செய்தவன் இஷ்டபுத்திரர்களையும், தீபத்தைக்கொடுத்தவன் நல்ல பார்வையையும், பூதானஞ்செய்தவன் பூமியையும், சுவர்ணதானஞ்செய்தவன் தீர்க்கமான ஆயுசையும், வீடுகொடுத்தவன் உயர்ந்த வீடுகளையும், வெள்ளியைக் கொடுத்தவன் திவ்வியமான ரூபத்தையும், வஸ்திரங்கொடுத்தவன் சந்திரலோகத்தையும், அசுவதானஞ் செய்தவன் அசுவினீதேவருலகத்தையும், விருஷபங்கொடுத்தவன் ஸம்பத்தையும், கோதானஞ்செய்தவன் சூரியலோகத்தையும், வாகநம், படுக்கை இவைகளைக்கொடுத்தவன் பாரியையும், அபயதானஞ்செய்தவன் ஐசுவரியத்தையும், தானியங்கொடுத்தவன் அழிவில்லாத சௌக்கியத்தையும், வேதத்தைத் தானஞ்செயதவன் பரப்பிரமத்தையும் அடைகிறார்களென்று மனுகூறினர். அயநங்கள், விஷுகாலங்கள், வைகாசி, கார்த்திகை, மாசி இந்த மாசப்பிறப்பு தினங்களாகிய விஷ்ணுபதிகள், ஆனி, புரட்டாசி, மார்கழி, பங்குனி இந்த மாஸப்பிறப்பு தினங்களாகிய ஷடசீதி, கிரகணம் இந்தப் புண்ணியகாலங்களில் தானஞ்செய்வது உத்தமமென்றும், இந்தக் காலத்தில் கொடுத்தபொருளைச் சூரியன் அவனுக்கு ஜன்மங்கள்தோறும் பிரதி திநமும் கொடுக்கிறனென்றும் சாதாதபர் கூறினர். ஆஹாரம், ஸ்திரீஸங்கம், நித்திரை, ஸந்தியா வந்தநந்தவிர வேறுகாரியம், வேதமோதல், ஓதுவித்தல், ஈதல், ஏற்றல் இவைகளைச் சந்தியாகாலத்தில் செய்யலாகாதென்று சங்கலிகிதர்கள் கூறினர்கள்.

ராத்திரியில் செய்த தானம் ராக்ஷஸப் பிரீதியாகுமென்று ஸ்காந்த புராணம் சொல்லிற்று. சந்திர கிரகணம், புத்திரஜனனம், யாத்திரைக்குப் புறப்படுதல் இந்த நிமித்தங்கள் உண்டானல் ராத்திரியில் தானஞ் செய்யலாமென்று தேவலர் விதித்தார். சூத்திரனுக்குக்கொடுத்த தானம் ஸமபலனுடையதென்றும், வைசியனுக்குச் செய்ததானம் இரட்டிப்பு பலனுடையதென்றும், க்ஷத்திரியனுக்குச்செய்த தாநம் மூன்றுபங்கு பலனுடையதென்றும், பிராம்மணனுக்குச் செய்த தானம் ஆறுபங்கு பலனுடையதென்றும், சூத்திராதிகளையும் ஸ்மிருதி வசநம் தாநபாத்திரமாகச் சொல்லுவது அன்னதாந விஷயமென்றும் கௌதமர் கூறினர். புண்ணியக்ஷேத்திரங்களில் புண்ணிய தீர்த்தங்களில் செய்த தாநம் உத்தம மாகுமென்று மத்ஸியபுராணம் சொல்லிற்று.

ஏற்றலின் பிரகரணம். திரவியத்தைத்தேட விரும்பின பிராம்மணன் தாநம் வாங்கவேண்டுமென்று வேதமும், நீசனிடத்திலின்றிப் பரிசுத்தனிடத்தில் தாநம் வாங்கலாமென்று மனுவும், ஒருவன் ஜபம், ஹோமம் இவைகளால் தாநம் வாங்குதலின் தோஷத்தைவிலக்கிச் சுத்தனுவன் என்று யமஸ்மிருதியும், முழுதும் வேதமோதித் தெளிந்த பிராம்மணன் தாநம்வாங்கினுல் தாமரையிலே ஜலத்தோடுகலவாதது போல் அவன்பாபத்தோடு சேருவதில்லை என்று ஸ்காந்தமும், குடும்ப போஷணத்திற்காகச் சூத்திரரிடத்தில் தாநம் வாங்கலாமென்று வியாசரும், ஆகிலும்தான் யக்கியம் செய்வதற்காக வாங்கலாகாதென்றும், வித்தை, தவம் இவைகளில்லாதவன் கோ, பூமி, சுவர்ணம், அன்னம்முதலான தாநங்களை வாங்கினுல் தானங் கொடுத்தவனோடு அவனும் கெடுவான் என்று யாக்கியவல்கியரும், ஆபத்காலத்தில் எப்படிப் பட்டவரிடத்திலும் தாநம் வாங்குவதும், புசிப்பதும் தோஷமல்லவென்றும், ஆபத்து இல்லாதகாலத்தில் யாகஞ்செய்வித்தும், சிஷியனிடத்தும் தானம் வாங்கலாமென்றும், யாசிக்காமலே வந்தபொருளை வாங்குவது தோஷமல்லவென்றும், ஆகிலும், பர புருஷனைச் சேருகிறவள், நபும்ஸகன், சத்துரு இவர்களிடத்திலிருந்து தானம் வாங்கலாகாதென்றும் பரத்துவாஜரும், காயத்திரீ வித்தை இந்தக் காயத்திரியில் ஒருபதத்தையாவது அர்த்தத்துடன் தியானித்து ஜபித்தால் எவ்விதமான தாநம்வாங்குவதால் உண்டாகிற தோஷமும் இவனைச் சேராதென்றும் சொல்லியிருப்பதால் பிரதிக்கிரஹம் செய்வது (எற்றல்) பிராம்மணனுக்குத் தகுமென்று சொல்லப்பட்டது.

எற்றல் பிராம்மணன் செய்யத் தகாதென்றும், தாநம் வாங்காதவனுக்குத் தாநம்செய்பவன் அடையும் புண்ணியலோகம் கிடைக்குமென்றும் சொல்லுகிற மனு யாக்கிய வல்கியர்களுடைய வசனங்களுக்கு யாகம்செய்யத் தகாதவனை யாகஞ்செய்வித்தும், கூலிக்கு வேதத்தை ஒதுவித்தும், துஷ்டரிடத்திலும் தாநம்வாங்குவதுபிராம்மணனுக்குத் தகாதென்பது கருத்தென்று அறிக.

தேவதையின் ஸ்வரூபம். சுவேதாசுவதர உபநிஷத்தில் பரமாத்துமாவே உபாசிக்கத் தக்கவன், அவனொருவனே சிருஷ்டிமுதலிய உலகவியாபாரங்களால் கிரீடிப்பவன், எல்லாப்பிராணிகளிலும் மறைந்திருப்பவன், எல்லாவற்றிலும் கலந்து நிற்பவன், யாவரிடத்திலும் அந்தர்யாமியானவன், எல்லாவற்றிற்கும் ஆதாரமானவன், சர்வ சாக்ஷியானவன், ஞாநமுடையவன், ஞானஸ்வரூபியானவன், தன்னந் தனியேயானவன், குணரஹிதன், (சிலர் பக்ஷப்படிக்கு ஹேய குண

மில்லாதவன்) இவனே அந்தந்தத் தேவதாரூபியாகிய யக்கியாதிகருமங்களால் பூஜிக்கப்பட்டுப் பிரசன்னனாகி அவரவர்களுடைய இஷ்டபலனைத்தருகிறானென்று சொல்லப்பட்டது. அறிவில்லாமையால் தேவபூஜை செய்யாமல் புசிப்பவன் நரகத்தை அடைகிறானென்று கூர்மபுராணம் கூறிற்று. அதிதி லக்ஷணத்தைப் பராசரர்மேலே சொல்லப்போகிறார்.

ஆகாரத்தை அபேக்ஷித்துவந்த விருந்து (அதிதி) தன்னுடைய அபேக்ஷாபங்கமாய் எந்தவீட்டிலிருந்து போகிறானோ அந்தவீட்டுத் தலைவனுக்குத் தன் பாபங்களைத்தந்து அவனுடைய புண்ணியங்களைக் கைக்கொண்டு போகிறானென்று மார்க்கண்டேய புராணத்தாலும், அப்பொழுதே அந்தவீட்டுத் தலைவன் குலம் நசித்துவிடுமென்று தேவலராலுஞ் சொல்லப்பட்டது. விஷ்ணுவை எப்பொழுதும் பூசிப்பவன் சகல பாபங்களையும் ஒழித்து பிரமத்தையே சேருகிறானென்று விஷ்ணு தர்மோத்தரத்திலும், தினந்தோறும் வேதாத்தியயநமும், தன் சக்திக்கீடாக யக்கியங்களும், தேவதா பூஜையும் செய்வது பாபங்களை யொழித்து விடுமென்று கூர்மபுராணத்திலும், பசித்து இளைத்துவந்த அதிதியைப் பூசித்தவன் அனேக கோதாநபலனை அடைகிறா னென்று மனுஸ்மிருதியிலும் சொல்லப்பட்டது. இந்த அர்த்தத்தையே மூலத்தில் "தேவதைகளையும் அதிதிகளையும்" பூசிப்பவன் என்று பராசரர் கூறினர். வைசுவ தேவத்திற்காக அவிஸைப் பாகம் செய்து தேவர் முதலானவர்களுக்கு ஓமம்செய்து அதில்மிகுந்த பரிசுத்தமான அன்னத்தைப் புஜிக்கவேண்டுமேயல்லது தனக்கென்று பாகம்செய்துபுஜிப்பவர்கள் பாபிகளென்று ஸ்ரீ கண்ணபிரான் அருளிச்செய்நார். (கூஅ)

౩౯॥ సంధ్యాస్నానంజపోహోమో దేవతానాంచపూజనమ్।
ఆతిథ్యంవైశ్వదేవంచ షట్కర్మాణిదినేదినే॥

ஸ்நாநாதிகளின் பிரகாணம். (இ-ள்.) ஸ்நாநத்தோடு ஸந்தியாவந்தநம், ஜபம், ஹோமம், தேவபூஜை, அதிதிபூஜை, வைசுவதேவம் என்னும் ஆறு கருமங்களும் பிரதிதிநமும் செய்யத்தக்கவையாம்.

இங்கு ஸந்தியா ஸ்நாநமென்று மூலமிருந்தபோதிலும் ஸ்நாநம் செய்தவனே ஸந்தியாவந்தநத்திற்கு அதிகாரியாகையால் பாடமுறையைவிட்டு அநுஷ்டாநக் கிரமத்தை அநுசரித்து ஸ்நாநம், ஸந்தியா என்று அர்த்தத்தை மாற்றிக்கொள்ளவேண்டும். அந்தஸ்நாநம் என்னும் பதம் அதற்கு முந்திச் செய்யத்தக்க கருமங்களைக் கு

றிக்கிறது. சூரிய உதயத்திற்கு ஐந்து நாழிகைக்கு முன் காலத்தில் அல்லது சூரிய உதயத்திற்குமுன் அரை யாமத்தில் அடங்கிய பிரா ம்மம், ரௌத்திரம் என்னும் இரண்டுமுகூர்த்தங்களில் பிராம்மமு கூர்த்தத்தில் நித்திரை விட்டெழுந்து தனக்கு ஹிதத்தை முன்னும் பின்பு தருமத்தையும் அதற்கு விரோதமின்றி அர்த்தகாமங்களையும் சிந்தித்து வேதத்தின் திரண்டபொருளான பரமாத்துமாவைத் தியா னித்து, வேதமோதினவன், யாகஞ்செய்தவன், தேவதாப்பிரதிமை, பசு, அக்கினி, கண்ணாடி, பூர்ணகும்பம் முதலிய மங்களத்திரவியங் களில் எதாவதொன்றை முதலில் பார்ப்பவன் சகல பீடைகளினி ன்று விடுபடுகிறனென்றும், பாபிகள், அங்கவீனர்கள், குரூபிகள் இவர்களைப்பார்க்கலாகாதென்றும் மனுவும் காத்தியாயநரும் சொன் ணர்கள்.

மலமூத்திரவிஸர்ஜநப்பிரகரணம். தலைக்குவஸ்திரத்தைச் சுற் றி வலக்காதில் சுற்றிய அல்லது முதுகில் மாலையாகத் தொங்கவி ட்ட பூணூலையுடையவனாகிப் பகலிலும் இரண்டு ஸந்தியாகாலங் களிலும் வடக்கு முகமும், ராத்திரியில்தெற்குமுகமுமாக யக்கியத் திற்குத் தகாத சருகுகளால் பூமியை மறைத்து அதின்மேல் மல மூ த்திரங்களை ஒழிக்கவேண்டுமென்று வசிஷ்டரும் அங்கிரசவும் கூ றினர்கள். சூரியன், அக்கினி, பசு, வாயு, பிராம்மணன், இவர்களுக் கெதிரிலும் வழியிலும் மறைவிடங்களில் ஒழிக்கத்தக்க மல மூத்தி ரங்களைவிட்டால் ஆயுசும், சம்பத்தும் க்ஷீணமாகுமென்று பாரதத் தில் சொல்லப்பட்டது. மல மூத்திரங்களைப் பந்திக்கலாகாதென்று தேவலரும், ஜனங்கள் வசிக்குமிடத்திற்கு எறிந்தஅம்புபோய் விழு ந்தூரம் தென் மேற்கிலாவது மேற்கிலாவதுசென்று மல மூத்திரங்க ளை விடவேண்டுமென்று ஆபஸ்தம்பரும் கூறினர்கள். வழி, சாம்ப ல், தொழுவம், உழுதவிடம், நீரோடுகூடியநிலம், குழி, ஆற்றங்கரை, நெல்களம்,சுடுகாடு, மரத்தின்அடி, படிக்கட்டு, பழங்கோயில், புற்று, மேடு, பள்ளம், பூந்தோட்டம் முதலான இடங்கள் கூடாதென்றும், திக்குதெரியாத அந்தகாரத்திலும் பிராணபயமுண்டாகுங் காலத்தி லும் தன்சுகத்திற்கு விரோதமின்றி மலமூத்திரங்களை விடலாமென் றும் மனு கூறினர்.

சௌசப்பிரகரணம். பின்பு உதவியற்ற செத்தை, மண்ணாங்க ட்டி இவைகளால் மலமூத்திரசேஷங்களைத் துடைத்துஇடுப்பில்வஸ் திரத்தைத்தூக்கிக்கட்டிக்கொண்டு ஆண்குறியைப் பிடித்தபடி எழுந் திருந்து வெளியிடத்து மண்ணினலும் குளத்திலிருந்து மேலே கொ

ண்டுவரப்பட்ட ஜலத்தினாலும், ஏரி, குளம், கிணறுகளிலானால் வெளிமண் கொண்டுவராமல் கணுக்கை அளவுக்கு மேலான ஆழமுள்ள அந்த ஜலத்திலிருந்து எடுக்கப்பட்ட மண்ணினாலும், நாற்றம்போமளவும் பூசிக் கழுவுதலாகிய சௌசத்தை மௌனமாய்ப் பகலில் வடக்குமுகமும் ராத்திரியில் தெற்குமுகமுமாக உட்கார்ந்து செய்யவேண்டுமென்று பரத்துவாஜ ஸ்மிருதி, பிரமாண்டபுராணம் இவைகள் கூறுகின்றன. கரையில் ஜலத்திற்குமுக்கால் முழதூரத்தில் உட்கார்ந்து குளத்திலும் கிணற்றிலும் அந்த ஜலத்தினால் சௌசம்செய்து அந்த இடத்தை அலம்பவேண்டுமென்று தக்ஷர்சொன்னார். புற்றுமண், எலிமண், ஒருவர் சௌசத்தில் மிகுந்தமண், ஜந்துக்கள் கூடியமண் இவைகள் கூடாவென்று ஸ்ரீவிஷ்ணுபுராணம் கூறுகின்றது. தருமத்தை அறிந்தவன் தொப்புளுக்குக்கீழே அலம்புவதற்கு வலக்கையையும், தொப்புளுக்குமேலே அலம்புவதற்குஇடக்கையையும் உபயோகிக்கலாகாதென்று தேவலர் சொன்னார்.

லிங்கத்திற்கு ஒருதரமும், இடக்கைக்கு மூன்றுதரமும், பின்பு இரண்டுகைகளுக்கும் இரண்டிரண்டுதரமும், மண்ணிட்டுச் சௌசம் செய்வது மூத்திர சௌசமென்று சாதாதபர் கூறினார். கிருகஸ்தன் லிங்கத்திற்கு ஒருதரமும், குதத்திற்கு மூன்றுதரமும், இடக்கைக்குப் பத்துதரமும், பின்பு இரண்டுகைகளுக்கும் எவ்வேழுதரமும் மண்ணிட்டுச் சௌசம் செய்யவேண்டுமென்றும், பிரமசாரிக்கு இரட்டிப்பும் வாநப்பிரஸ்தனுக்கு மூன்றுபங்கும், சன்னியாசிக்கு நாலுபங்கும் அதிகம் என்றும் மனுகூறினார். ஐந்துமுறை மண்ணிடவேண்டுமென்று போதாயனரும், சுத்தியானதாகத் திருப்தியுண்டாகும் வரையில் மண் ஜலங்களால் சௌசம் செய்யவேண்டுமென்று தேவலரும், ஒவ்வொரு தடவைக்கும், உலராத நெல்லிக்காயளவு மண்ணிடவேண்டுமென்று சாதாதபரும், முதல் தடவை முழுச்சோங்கை, இரண்டாவது தடவை அரைச்சோங்கை மண் என்று அங்கிராவுங் கூறினார்கள், ஸ்திரீகள், சூத்திரர்கள், கிருகஸ்தன் இவர்களுக்கு முன் சொல்லிய சௌசத்தில் அரைப்பங்கும், வழிப்போக்கனுக்குக் கால்பங்கும், அசக்தனுக்குச் சக்தியுள்ள மட்டும், சக்தியுள்ளவனுக்கு விதிப்படி முழுதுஞ் செய்யவேண்டுமென்று ஆதித்திய புராணத்திலும், அவசரப்பட்டும், ஒரு சௌசம் மற்றொரு சௌசத்தில் கலக்கும்படியாயும், அந்த ஜலங்கள் தன்மேல் தெறிக்கும்படியாயும், பீஜம் குறி இவைகளைத் தொட்டுக்கொண்டும் சௌசம் செய்யலாகாதென்று பாரதம் ஆநுசாஸநிகபருவத்திலும் சொல்லப்பட்

டது. நகங்களைச் சுத்திசெய்து ஆறுமுறை மண்ணிடவேண்டுமென்றும், மழைத்தாரையில் சௌசம் செய்யலாகாதென்றும் தக்ஷரும், பாதம், கணுக்காலின் பக்கங்கள், கைகளில் முழங்கை அளவு இந்த விடங்களில் மும்மூன்றுதரம் மண்ஜலங்களினால் சுத்திசெய்யவேண்டுமென்று மரீசி, மனு, இவர்களும் கூறினார்கள்.

வாய்கோப்புளித்தலின் பிரகரணம். மூத்திரத்தைவிடுதல், சுக்கில மொழித்தல், மலத்தைக்கழித்தல், தந்த சுத்திசெய்தல், போஜநம் செய்தல் இவ்வைந்து தொழில்களிலும் கிரமமாக நாலு, எட்டு, பன்னிரண்டு, பதினாறு, பதினாறு தரம் வாய்கொப்புளிக்கவேண்டும். பிராம்மணனுக்கு எதிரில் தேவதைகளும், வலதுபக்கத்தில் பிதிர்க்களும், பின் பக்கத்தில் ரிஷிகளும், கந்தருவரும் வசிக்கிறபடியால் இடப்புறத்தில் உமிழவேண்டுமென்றும் அக்காலத்தில் சுட்டுவிரலால் பற்களைச்சோதித்தால் ரௌரவநரகம் சம்பவிக்குமென்றும் ஆபஸ்தம்பர் விதித்தார்.

ஆசமநப் பிரகரணம். வடக்குமுகம் அல்லது கிழக்குமுகமாக உட்கார்ந்துமுழங்கால் நடுவே கைகளைவைத்துக்கொண்டு மௌநமாய்ப் பிரமதீர்த்தத்தினால் ஆசமநம் செய்யவேண்டுமென்று யாக்கியவல்கியர் உரைத்தார். சுண்டுவிரல் அடியால் வருகிறதீர்த்தம் பிரஜாபதிதீர்த்தம், சுட்டுவிரல் அடியால் வருவது பிதிர்தீர்த்தம், பெருவிரல் அடியால் வருவது பிரமதீர்த்தம், கைநுனியால் வருவது தெய்வதீர்த்தமென்று யாக்கியவல்கியர் உரைத்தார். நுரை குமிழி இவை யில்லாததும், உஷ்ணமாகாததும், உப்புமுதலான ரசங்களோடு கூடாததுமான ஜலத்தினால் ஆசமநம் செய்யவேண்டுமென்று சங்கர் உரைத்தார். தன் கையைப் பசுவின்காதுபோல் குவித்து ஜலத்தையெடுத்து அதிக ஜலத்தை விட்டு ஒரு உளுந்து முழுகும்படியான ஜலத்தை ஆசமநம் செய்யவேண்டுமென்று பரத்துவாசர் சொன்னார். வியாதியுள்ளவன் வெந்நீரில் ஆசமநம் செய்யலாமென்று யாக்கியவல்கியரும், ஆசமநம் செய்த ஜலம் மாரளவுசென்றால் பிராம்மணனும் கண்டத்தளவுசென்றால் க்ஷத்திரியனும், வாயில்பட்டதினால் வைசியனும், தொடப்பட்டதினால் சூத்திரனும் சுத்தியடைகிறார்களென்று மனுவும் கூறினார்கள். ஆசமனஞ் செய்தபின்பு முதலில் பெருவிரல் அடியாலும், பின்பு நான்கு விரல்களாலும் முகத்தையும் வாயையும் மூடிக்கொண்டு துடைத்துச் சுட்டு விரலையும் பெருவிரலையுஞ் சேர்த்து மூக்கி னிருபுறத்தையும், பெருவிரலையும் நடுவிரலையும் சேர்த்து இரண்டு கண்களையும், பெருவிரலையும் பவித்திரவிரலையும் சேர்த்து

இரண்டு காதுகளையும், பெருவிரலையும் சுண்டுவிரலையும் சேர்த்து இரண்டு தோள்களையும் நாபியையும், இருதயத்தையும் அவ்வாறே தொடவேண்டும் பின்பு உள்ளங்கையால் சிரஸைத்தொடவேண்டும் என்று விருத்த சங்கர் கூறினர். ஹீநஜாதிகள், அசுத்தர்கள் இவர்களோடு சம்பாஷித்தல், இவர்களைத்தொடுதல், கண்ணீர்விடுதல், ரக்தத்தைப் பெருக்குதல், அக்கினி, பசு, பிணம், பூனை, எலி இவைகளை ஸ்பரிசித்தல், நித்திரை, தும்மல், புசித்தல், மலமூத்திரங்களை யொழித்தல், பொய்சொல்லுதல், தெருவில் செல்லுதல், ஸ்மசானத்தை மிதித்தல், அபானவாயு விடுதல், காறிஉமிழ்தல், வஸ்திரத்தைத் தரித்தல், அவிழ்த்தல், அதிகமாகச்சிரித்தல், வேதம் ஓததொடங்குதல் இந்தக்காரணங்களில் ஆசமநம்செய்யவேண்டும் என்று மனுஸ்மிருதியும் கூர்மபுராணமும் கூறுகின்றன.

நீரில் இழியும்போதும் ஏறும்போதும் ஆசமித்தவன் வருணனால் பூசிக்கப்பட்டுத் தேஜஸை அடைகிறான் என்று யமஸ்மிருதி சொல்லுகிறது. ஆசமநம் செய்யமுடியாத பக்ஷத்தில் வலக்காதைத் தொடவேண்டுமென்று மார்க்கண்டேய புராணம் கூறுகின்றது. ஓமம், போஜநம், ஸந்தியாவந்தநம், ஜபம், பூஜை இவைகளைச் செய்யுங்காலத்தில் இரண்டுதரம் ஆசமநம்செய்ய வேண்டுமென்பது முப்பத்தறுவர்மதம். பூணூல் இல்லாமலும் வஸ்திரமில்லாமலும் அசுசியாயும் குடுமி முடியாமலும் கட்டில் வாகநங்கள் மேலிருந்தும் பாதையுடனும் கால்நீட்டிக்கொண்டும் ஆசமநம் செய்யலாகாதென்று பிருகுமுனி கூறினர்.

முழங்காலுக்கு மேலளவான ஜலத்தில் நின்றுகொண்டு ஆசமநம் செய்யலாம் அதற்குக் கீழளவான ஜலத்தில் உட்கார்ந்தே ஆசமநம் செய்யவேண்டுமென்று விஷ்ணு கூறினர். இரண்டு கைகளிலும் பவித்திரந்தரித்து ஆசமித்தால் யக்ஞத்தில் சோமபானஞ் செய்த அவ்வளவு பலனுண்டென்று கோபிலர் உரைத்தார். கால் அலம்பியிருந்த ஜலத்தால் ஆசமிக்கலாகாதென்று போதாயனரும், மழைத்தாரையில் ஆசமிக்கலாகாதென்று ஆபஸ்தம்பரும், கை நகம் பட்ட ஜலத்தால் ஆசமித்த பிராம்மணன் கள் குடித்தவனாகிறானென்று யமமுனியும், தலையில் அல்லது கழுத்தில் துணியைச் சுற்றிக்கொண்டு ஆசமிக்கலாகாதென்று பிரமாண்டபுராணமும், இருகையாலும், பூமியில் நின்றுகொண்டும், ஆசமிக்கலாகாதென்று கௌதமரும் கூறினர்கள். ஆசமநத்திற்குத் தாம்பிரம், பொன், வெள்ளி, இவைகளால் செய்த பாத்திரங்களில் ஜலம் வைத்துக்கொள்வது உத்தமமென்றும்,

இவை கிடையாத பக்ஷத்தில் மண்கலசம், இரண்டுமுகமுள்ளபாத்திரம் இவைகள் கூடுமென்றும், சிக்கடைந்த பாத்திரம் கூடாதென்றும் வேறு ஸ்மிருதிகளிலும், சங்கு, நத்தையோடு, தாமரையிலை, மூங்கில், சுரை, மரத்தோல், தேங்காயோடு, இந்தப் பாத்திரங்கள் ஆசமநஜலம் வைத்துக்கொள்ளத் தகாதனவாம் என்று கௌதமஸ்மிருதியிலும் சொல்லப்பட்டது. மூன்றுதரம் குடிப்பதினால் பிரமன், விஷ்ணு, ருத்திரன் என்னு மூவரும், பின்பு ஜலத்தினால் வாயைத் துடைப்பதினால் கங்கை யமுனைகளும், காலில் துடைப்பதினால் விஷ்ணுவும், தலையில் பிரமனும், மூக்கு ரந்திரங்களில் அசுவினீ தேவர்களும், கண்களில் அக்கினி வாயுக்களும்,தோள்களில் மற்றத்தேவர்களும், உந்தியில் நாகர்களும், இருதயத்தில் சகல தேவதைகளும், சிரஸில் புருஷனும், ஆநந்திக் கிறார்களென்று விருத்த சங்கர் சொன்னார்.

தந்தசுத்திப் பிரகாரணம். கைகால் முகங்களை அலம்பிக் கைப்பு, துவர்ப்பு, காரம், பரிமளம், முட்கள், பால், இவைகளையுடைய மரங்களில் பல்கொம்பைக் கிரகிக்கவேண்டுமென்று வியாசர் அருளிச்செய்தார். தந்தகாஷ்டத்தின் அங்குல அளவு பிராம்மணனுக்குப்பன்னிரண்டு, க்ஷத்திரியனுக்கு ஒன்பது, வைசியனுக்கு ஆறு, சூத்திரனுக்கு நாலு என்றும், கனம் சுண்டுவிரல்அளவென்றும், விஷ்ணு ஸ்மிருதி சொல்லிற்று.கைவிரலால் தந்தசுத்தியைச் செய்யலாகாது. தென் முகமாக நின்றுவது, நொச்சி,கடம்பு, புங்கு, பச்சிலை, செங்குங்கிலியம், வாழை, தேவதாரு, புல்,பருத்தி, முருக்கை, கீரைகள், இவைகளால் தந்தங்களைத் தேய்த்தால் விஷ்ணுவுக்கானாலும் செல்வங் குறையுமென்று உசநர் கூறினர். பிரதமை, ஷஷ்டி, நவமி, பானு வாரம் இவைகளில் தந்தகாஷ்டத்தினால் பல்தேய்த்தல் கூடாதென்று விஷ்ணுவும், சதுர்தசி, அஷ்டமி, அமாவாசை, பூர்ணிமை, மாசப்பிறப்பு, இவ்வைந்துதினங்களில் ஸ்திரீசங்கமம், அப்பியங்க ஸ்நாநம், மாம்சத்தைப் புசித்தல், தந்த காஷ்டத்தினால் பல்விளக்குதல், இவைகளைச் செய்யக்கூடாதென்றும், சிராத்ததினம், தான் பிறந்தநாள், கலியாணதினம், அஜீர்ணதோஷத்தினால் வருந்துகிறநாள், விரததிநம்,உபவாசமிருக்குநாள் இவைகளில் பல்விளக்க லாகாதென்றும் யமஸ்மிருதியும், ஸ்திரீகள் தம் பர்த்தா ஊரில் இல்லாதநாளில் தந்தசுத்தி செய்யக்கூடாதென்று வியாசரும்,¦செங்கல், மண்ணாங்கட்டி, கற்கள், ஓடு, கரி, சாம்பல் முதலியவற்றாலும்,பெருவிரல், பவித்திர விரல் இவைகள் தவிர மற்ற விரல்களாலும் செய்யக்கூடாதென்று

யாக்கிய வல்கியரும் சொன்னார்கள். மா, புன்னை, வில்வம், நாயுருவி, காட்டுவாழை, ஆல், வேங்கை, எருக்கு, கருங்காலி, சாதிக்காய்மரம், மருதம், கருவேல் இவைகள் பல்கோலுக்குத் தகுந்தவையல்லவென்று அங்கிரா கூறினார். நாக்கைவழித்துச் சோதிப்பதற்கும் இந்த விதிப்படி செய்யவேண்டுமென்றும், சிறியபல்லுடையவன் சிறிய கொம்பினாலும்,சரியான பல்வரிசையுடையவன் மத்தியமமான கொம்பினாலும், மேடு பள்ளமான பல் வரிசையுடையவன் பெருங்கொம்பினாலும் தந்த சுத்தியைச் செய்யலாமென்றும், தந்த காஷ்டத்தை முன்னே அலம்பி எடுத்துப் பற்களைச்சோதித்துப் பின்னும் அலம்பியே விடவேண்டுமென்றும், கிழக்கு அல்லது வடக்கு முகமாய் உட்கார்ந்து செய்யவேண்டுமென்றும் அங்கிராவும், பல்கோலுக்கு நிஷித்த நாட்களிலும் பல்கோல் கிடையாதபக்ஷத்திலும் பன்னிரண்டுதரம் வாய்கொப்புளித்தால் பல்தேய்த்தது போலாகுமென்று வியாசரும், வியாதியில்லாதபோது சூரியன் உதயமானபின் பல் விளக்கினவனுக்கு மந்திரங்கள் தேவர்கள் பிதிர்க்கள் முகங்கொடாமல் திரும்பிவிடுவார்களென்று கௌதமரும் சொன்னார்கள்.

தர்ப்பவிதிப் பிரகரணம். தர்ப்பையின் அடியில் பிரமனும், நடுவில் விஷ்ணுவும், நுனியில் ருத்திரனும் வசிக்கிறார்களென்று கோபிலரும், பாம்பின்சுருளை ஒத்திருக்கிற முடியை யுடையதும் நுனியுள்ளதும் ஒரு ஒட்டை அளவுடையதுமாகத் தர்ப்பங்களால் செய்யப்பட்டது பவித்திரமென்றும், அது ஒருவித தோஷத்தின் சாந்தியை விரும்பிச்செய்யுங் கருமத்தில் நாலுதர்ப்பங்களாலும், இன்பத்தைக்கோரிச் செய்யுங் கருமத்தில் ஐந்து தர்ப்பங்களாலும், ஒருவன் மரணத்தைக் கோரிச்செய்யும் அபிசாரககருமத்தில் நாலுதர்ப்பங்களாலும், செய்யவேண்டியதென்றும் பின்னும் நுனியோடு கூடி நடுவில் அறுதிருக்கிற நாலுதர்ப்பங்களால் பிராம்மணனும்,மூன்றுதர்ப்பங்களால் க்ஷத்திரியனும், இரண்டு தர்ப்பங்களால் வைசியனும், ஒரு தர்ப்பத்தால் சூத்திரனும் பவித்திரம் செய்து தரிக்கவேண்டியதென்றும் மார்க்கண்டேயரும், பிரமயக்கியத்திலும், ஜபத்திலும், பிரமக்கிரந்தி (பிரமமுடிச்சு) உள்ளபவித்திரமும், போஜனத்தில் வர்த்துலமுடியுள்ள பவித்திரமும் தரிக்கவேண்டுமென்று அத்திரியும், தர்ப்பப் பவித்திரத்தைக் கையில் தரித்து ஜபித்ததும், பானஞ்செய்ததும், புஜித்ததும், அக்ஷயபலனைத் தருமென்று ஹாரீதரும், பவித்திரத்தோடு பானஞ்செய்தது சோமபானத்தோடு சமானமாகுமென்று புராணாந்தரமும், பரிசுத்தனாய்க் கிழ

க்கு முகமாக அல்லது வடக்குமுகமாக நின்று பிரணவத்தைச் சொல்லிப் பிரமனோடு பிறந்தவனும் பிரமனது ஸ்வ பாவத்தோடு பிறந்தவனுமான ஓ தர்ப்பமே, என் பாபங்களை எல்லாம்போக்கி எனக்கு க்ஷேமத்தைச் செய்யவேண்டுமென்னும் பொருளையுடைய ஒரு மந்திரத்தைச்சொல்லிப் பிராம்மணன் தர்ப்பத்தைக் கிரகிக்கவேண்டுமென்று கௌசிகரும் கூறினார்கள். தர்ப்பங் கிடையாவிட்டால் தர்ப்பணாதிகளை காசமென்னும் நாணல் புற்களைக்கொண்டு செய்யலாமென்று சங்கர் விதித்தார். தர்ப்பம், நாணல், செந்நெல்லின் புல், அறுகம்புல், நெல்பயிர், முஞ்சிப்புல், வெண்டாமரை இதழ் இந்த எழும் (ப௲ஸ)பர்ஹிஸ் என்னப்படுமென்று யமஸ்மிருதியும், வழியிலும், சுடலையிலும், படுக்கையிலும், யக்ஞியசாலையிலும், தண்ணீரிலும், இருப்பதும், பிரமயக்ஞியத்திலும், பிதிர்கருமத்திலும் உபயோகித்ததுமாகிய தர்ப்பம் கூடாது என்றும் விதிப்படி ஆவணி அமாவாசையில் கிரகிக்கப்பட்ட தர்ப்பம் அப்போதைக் கப்போது உபயோகிக்கப்பட்டாலும் பழமைப்படாததாகுமென்றும் ஹாரீதஸ்மிருதியும் கூறின. மான்தோலும் மந்திரங்களும் பிராம்மணரும் எப்போதும் உபயோகிக்கத் தக்கவர்களாம் என்று சங்கர் விதித்தார். டம்பமின்றி எப்பொழுதும் பவித்திரத்தைக் கையில் தரிக்கும் பிராம்மணன் பஞ்சுப் பொதியை நெருப்புப்போல் பாபத்தை அழிப்பன் என்று மார்க்கண்டேயரும், பொன், வெள்ளி, தர்ப்பம் இவைகளில் ஏதேனுமொன்றினால் செய்த பவித்திரத்தைத் தரித்து வைதிககருமங்களைச் செய்யவேண்டுமென்று சாதாதபரும் கூறினார்கள்.

ஸ்நாநப்பிரகரணம். பிராதக்காலத்தில் தெரிந்தவன் தன் சரீரத்தைச் சுத்திசெய்வதற்காக நதியில் நீராடவேண்டும், அது துர் ஸ்வப்பநம்முதலான தோஷங்களை நீக்கி இகத்திலும் பரத்திலும் பலனைத்தரும், அவன் ஜபம் முதலான சகல கிரியைகளையும் செய்யத்தக்கவனாகிறான் என்று வியாசர் அருளிச்செய்தார். ராத்திரியில் செய்த பாபங்கள் காலையில் ஸ்நாநத்தினால் நசிக்கின்றன என்று தக்ஷர் கூறினார்.

ஸ்நாநபேதங்கள். ஸ்நாநம் கௌணம் (ஸாதாரணம்), முக்கியம்(விசேஷம்)என்று இரண்டுவிதம். அதில் வாருண ஸ்நாநம்முக்கியம், அது ஆறுவிதமென்று சங்கர் கூறினார். நித்தியம், நைமித்திகம், காமியம், கிரியாங்கம், மலாபகர்ஷணம், கிரியாஸ்நாநம் என்றும் அவற்றுள் ஸ்நாநம் செய்தே சுத்தனாகி ஜபாதி கருமங்களைச் செய்யவேண்டு மாகையால் அதற்காக உதயகாலத்தில் நித்தியமும் செ

ய்யவேண்டிய ஸ்நாநமே நித்திய ஸ்நாநமென்றும், சண்டாளன் மு தலானவர்கள் தீட்டை ஒழித்துக்கொள்வதற்காகச் செய்யும் ஸ்நா நம் நைமித்திகமென்றும் அதிலும் பதிதன், சண்டாளன், பிணம், சூத் தவள், பிரசவித்தவள் இவர்களைத்தொட்டவன் அவனைத் தொட்டவ ன் அவனைத்தொட்டவன் இம்மூவர்க்கும் அக்காலத்தில் உடுத்ததுணி யோடுநீராடுவதாகிய ஸசேல ஸ்நாநத்தாலும், நாலாவனுக்கு ஸ்நாநத் தாலும், ஐந்தாவனுக்கு ஸ்நாநமின்றியே புரோக்ஷணத்தாலும் சுத்தி உண்டாகிறதென்றும் மரீசி கூறினர். பூசம், ஜன்மநட்சத்திரம், வைதி ருதி, அமாவாசை இந்தநாட்களில் ஆறுகளில் ஸ்நாநஞ்செய்தவன் எழு தலைமுறைவரையில் குலத்தைப் பரிசுத்தமாக்குகிறுன் என்றும், கார்த் திகைமாஸத்தில் புஷ்கரக்ஷேத்திரத்திலும், மாசிமாஸத்தில்பிரயாகக்ஷே த்திரத்திலும், ஆனிமாஸத்தில் கங்கையிலும், சித்திரைமாஸம்கிருஷ்ண பக்ஷசதுர்தசியில் சிவ சன்னிதியிலும் ஸ்நாநம் செய்தவன் சகல பா பங்களினின்று விடுபடுகிறுனென்றும் புலஸ்தியர், யமர் முதலான வர்கள் விதித்த பலனை அபேக்ஷித்து அந்தந்தக்காலத்தில் செய்யும் ஸ்நாநம் காமிய ஸ்நாநமென்றும், ஜபம், தேவபிதிர்க்களுடைய பூசை இவைகளுக்கு அங்கமாகச்செய்யும் ஸ்நாநம் கிரியாங்க ஸ்நாநமென்று ம், சரீரத்தின் அழுக்குகளை யொழிக்கவேண்டிச்செய்யும் அப்பியங்க ஸ்நாநம் மலாபகர்ஷண ஸ்நாநமென்றுங்கொள்க. இதைப்பற்றிச் சோ திட சாஸ்திரத்தில் நாயிற்றுக்கிழமையில் அப்பியங்க ஸ்நாநத்தினுல் ஸந்தானமும், திங்கட்கிழமையில் சாந்திகுணமும், செவ்வாய்க்கிழமை யில் அற்பாயுசும், புதனில் ஸம்பத்தும், வியாழனில் தாரித்திரிய மும், வெள்ளிக்கிழமையில் வியாதியும், சனிக்கிழமையில் சகல பலசித்தியும் உண்டாகுமென்று கூறப்பட்டது. பின்னும் பிரதமை, ஷஷ்டி, சதுர்த்தி, சதுர்த்தசி, நவமி, அஷ்டமி, அமாவாசை, பர்வம், மாசப்பிறப்பு, இந்த நாட்களில் அப்பியங்கஸ்நாநத்தினுல் ஆயுசும் செல்வமும் அழிந்துவிடுமென்று மனுவும், திரிதியை, திரயோதசி, தசமி, இந்தத்திதிகளில் அழியாதசெல்வத்தை அபேக்ஷித்தவன் அப்பியங்கஸ்நாநம் செய்யக்கூடாதென்று கர்க்கரும் சொன்னுர்கள். நெய், ஆமணக்குநெய் முதலியவற்ருேடு கலந்து காய்ச்சின எண் ணெயாகில் எப்பொழுதும் தோஷமில்லை என்று யமஸ்மிருதி கூறு கின்றது.

கிரியாஸ்நாநமென்பது நித்தியஸ்நாநம்போல் ஜலத்திலுைம் மிருத்திகையிலுைம் செய்வதென்று சங்கரும், மத்தியானத்தில் தினந்தோறும் மாத்தியான்னிகஸ்நாநம் செய்யவேண்டுமென்று

வியாக்கிரபாதமுனிவரும், சுசியானமிருத்திகையை விதிப்படி அந்தந்த அங்கங்களில் மந்திரத்தைச்சொல்லிப் பூசிச்செய்வது மிருத்திகாஸ்நாநமென்றும், பின்னும் ஸ்மிருதி மந்திரங்களைச் சொல்லிக் கோமயத்தைச் சரீரத்தில் பூசிச்செய்யும் ஸ்நாநம் கோமயஸ்நாநமென்றும், இப்படியே அறுகம்புல்லினால் செய்வது தூருவாஸ்நாநமென்றும், நாயுருவியினால் செய்யும் ஸ்நாநம், அபாமார்க்கஸ்நாநமென்றும் வசிஷ்டரும் சௌனகரும், கிணறு முதலான இடங்களிலிருந்து மேலேஎடுத்த ஜலத்தினால் ஸ்நாநம்செய்வதிலும் பூமியிலிருக்கும் ஜலத்தில் செய்வது உத்தமம், அதிலும் மலையருவி, அதிலும் குளம், அதிலும் ஆறு, அதிலும் கங்கை உத்தமம் என்றும், அயலாருடைய குளம், கிணறுகளிலானால் நாலு கை மண்வாரி வெளியில் போட்டுப் பின்பு ஸ்நாநம் செய்யவேண்டுமென்றும் மரீசியும் விதித்தார்கள். மாகமாஸத்தில் காலையில் நீராடுபவன் விஷ்ணுலோகத்தை அடைகிறானென்று விஷ்ணு ஸ்மிருதியும், வாநப்பிரஸ்தனுக்கும் கிருகஸ்தனுக்கும் பிராதக்காலம், மத்தியாநம் ஆகிய இரண்டு காலத்திலும், சன்னியாசிக்கு ஸாயங்காலமுஞ் சேர்ந்து மூன்று காலத்திலும், பிரமசாரிக்கு பிராதக்காலத்தில் மட்டும் நீராடவேண்டுமென்று தக்ஷஸ்மிருதியும் கூறின. பிரம க்ஷத்திரிய வைசியர்கள் ஸ்நாநத்திற்குரிய அகமர்ஷணம் முதலான மந்திரங்களை ஜபித்துஸ்நாநம் செய்யவேண்டுமென்றும், ஸ்திரீகளும் சூத்திரர்களும் மந்திரஞ்சொல்லாமலே ஸ்நாநம் செய்யவேண்டுமென்றும் தருமபுத்திரருக்கு ஸ்ரீகண்ணபிரான் அருளிச்செய்தார்.

வெந்நீரில் செய்யும் ஸ்நாநமும், வைதிகமல்லாத ஜபமும், வேதமறியாதவனுக்குக் கொடுத்த தாநமும், விருந்தில்லாமல் தனித்துச்செய்யும் போஜநமும், நிஷ்பலங்களென்று யாக்கியவலகியரும், வேறுஜலங் கிடையாதபக்ஷத்திலும் தன் தேகத்தில் வியாதியிருந்தாலும், வெந்நீரில் ஸ்நாநம் செய்யவேண்டுமென்று யம முனிவரும், ஜனனமரணத்தீட்டுகளிலும், மாசப்பிறப்பு, பிதிர் தினம், தன் ஜன்மதினம், கிரகணம் இந்தக்காலங்களிலும் வெந்நீரில் நீராடலாகாது என்று விருத்தமனுவும், குளிர்ந்தஜலத்தில் வெந்நீர்விட்டு அபிமந்திரித்து நீராடினால் நதிகளில் செய்த ஸ்நாநத்திற்குச் சரியாமென்று வியாஸபகவானும் அருளிச்செய்தார்கள். இவ்வகையாக நீராடித் தேவ ரிஷி பிதிர் தர்ப்பணத்தை ஸ்நாநத்திற்கு அங்கமாகச் செய்யவேண்டுமென்று நரசிம்ம புராணமும், இரண்டு கைகளிலும் ஜலத்தை நிறைத்துக்கொண்டு பசுவின்கொம்பினுயரம் கையைத்தூக்கி ஜலத்

தில் தர்ப்பணம் செய்யவேண்டுமென்று யமஸ்மிருதியும் சொல்லின. அடிமை செய்திறந்தவர்கள் உடுத்தவஸ்திரத்தின் ஜலத்தை அபேக்ஷிக்கிறார்கள் ஆதலால் ஸ்நாநகாலத்தில் உடுத்திருந்த வஸ்திரத்தின் ஜலத்தைப் பிரயத்திநப்பட்டாவது கரையில் விடவேண்டுமென்று பரத்துவாசமுனிவர் கூறினார். எங்கள் குலத்தில் பிறந்தவர்களும், புத்திரரில்லாதவர்களும், எங்கள் கோத்திரத்தை யுடையவர்களுமாய் எவர்கள் மரித்திருக்கிறார்களோ அவர்கள் வஸ்திரம் பிழிந்து என்னால் கொடுக்கப்பட்ட ஜலத்தைப் பெற்றுக்கொள்ளக்கடவர்கள் என்னும் பொருளுள்ள மந்திரத்தைச்சொல்லி ஸ்நாநவஸ்திரத்தைக்கரையில் பிழியவேண்டுமென்றும் பரத்துவாஜரால் சொல்லப்பட்டது.

வஸ்திரந்தரித்தலின் பிரகரணம். இவ்விதமாக நீராடிப் பின்பு விதிப்படி ஆசமநஞ்செய்து கரைமேல்வந்து பரிசுத்தங்களாயுள்ள இரண்டு வெளுப்பு வஸ்திரங்களை உடுத்திக்கொண்டு ஆசமநம்செய்து நித்திய கருமங்களைச் செய்யவேண்டுமென்று வாமநபுராணமும், மேல் உத்தரீயத்தை அரையிலும் அரையிலுடுக்கும் வஸ்திரத்தை மேலுந்தரிக்கலாகாதென்று வியாசஸ்மிருதியும், நீராடியதக்ஷணமேயீர வஸ்திரத்தாலாகிலும் கையாலாகிலும் சரீரத்தைத் துடைத்தலும் தலைமயிரை உதறலும் உடுத்த வஸ்திரத்தைப் பிழியலும் ஆகாவென்று மார்க்கண்டேய புராணமும் சொல்லின. தலையினின்றுவடிகின்ற ஜலத்தைத் தேவர்களும், முகத்தினின்று விழுகின்ற ஜலத்தைப் பிதிர்க்களும், நடுவில் பெருகுகின்ற ஜலத்தை யெல்லாக்கந்தருவரும், கீழேவிழுந்த நீரை எல்லாப்பிராணிகளும் பாநஞ் செய்கின்றனராதலால் தேகத்தை முன்சொன்னபடி துடைக்கலாகாதென்று தேவலரும், நீராடி யீரவஸ்திரத்துடன் மலமூத்திரம் விடுகிறவன் மூன்று பிராணாயாமஞ்செய்து மறுபடியும் நீராடினால் சுத்தனாகிறானென்று ஜாபாலியும் சொன்னார்கள். பிராம்மணாதி வருணங்கள் நாலுக்கும் கிரமமாக வெளுப்பு சிவப்பு பொன் நீலம் இந்த நிறமுள்ள வஸ்திரங்கள் தரிக்கத்தக்கனவா மென்றும், கச்சம் இல்லாதவன், மேல் வஸ்திர மில்லாதவன், வஸ்திரமேயில்லாதவன், அழுக்குப்பட்டதும் தீப்பட்டதும் தைத்ததும் ஈரமுமாகிய வஸ்திரங்களைத் தரிப்பவன் ஆகிய இவர்கள் நக்கினர்கள் (வஸ்திரமில்லாதவர்கள்) என்றும், வைதிக கிரியைகளைச் செய்யத் தகாதவர்களென்றும் பிருகுவும், சுத்தமான வஸ்திரங்கிடையாவிட்டால் நார்மடி, பட்டு, வெண்கம்பளம், இவைகளைத் தரிக்கலாமென்றும் வஸ்திரமின்றி யக்கியம் செய்யலாகாதென்றும் யோகயாக்கிய வல்கியரும் சொன்னார்

கள். ஹோமம், தேவதார்ச்சனம், வேதாத்தியயநம், போஜநம், ஜபம், ஆசமநம் இந்தக் கிரியைகளை ஒரு வஸ்திரத்தைத் தரித்துச் செய்யக்கூடாதென்று விஷ்ணுபுராணம் விதித்தது.

ஊர்த்துவபுண்டரப்பிரகரணம். மலையின் மேலிடம், நதிக்கரை, புண்ணியபூமி, சமுத்திரக்கரை, புற்று, துளசிச்செடியின் அடி, இவ்விடங்களில் உள்ள மண்ணினால் புஷ்டியை வேண்டினவன் பெருவிரலாலும் ஆயுசைவேண்டினவன் நடுவிரலாலும் அன்னத்தை விரும்பினவன் பவித்திர விரலாலும் மோக்ஷத்தை அபேக்ஷித்தவன் சுட்டுவிரலாலும் ஊர்த்துவபுண்டரத்தைத் தரிக்கவேண்டும். நகங்களால் தொடுதல் கீறுதல் செய்யலாகாது. தீபம், மூங்கில், இலை, தாமரைமொக்கு, மத்ஸியம், கூர்மம், சங்கம் இவைகள்போன்ற ஆகாரமுடையதாய் பத்து அங்குலநீளமுடையது உத்தமம் என்றும், ஒன்பது, எட்டு, ஏழு, ஆறு, அஞ்சு, அங்குலமுடையது மத்தியமமென்றும், நான்கு, மூன்று, இரண்டு, அங்குலமளவுடையது அதமமென்றும், நெற்றியில் கேசவனையும், வயிற்றில் நாராயணனையும், மார்பில் மாதவனையும், கழுத்தில் கோவிந்தனையும், வயிற்று வலது பக்கத்தில் விஷ்ணுவையும், வலது புஜத்தில் மதுசூதனனையும், வலதுகழுத்தில் திரிவிக்கிரமனையும், வயிற்று இடதுபக்கத்தில் வாமனனையும், இடது புஜத்தில் ஸ்ரீதரனையும், இடது கழுத்தில் இருடீகேசவனையும், அடிமுதுகில் பத்மநாபனையும், பின்கழுத்தில் தாமோதரனையும், இவ்விதமாகப் பன்னிரு நாமங்களையும் தியானித்து வாசுதேவனைச் சிரஸில் தியானிக்கவேண்டுமென்றும், பூஜை ஹோமங்களில் இந்தத் திருநாமங்களை உச்சரித்து ஊர்த்துவபுண்டரத்தைத் தரிக்கக்கடவனென்றும் அவனே வைதிக கர்மங்களைச் செய்யத்தக்கவனென்றும் பிரமாண்ட புராணத்தில் சொல்லப்பட்டது. எவனுடைய நெற்றியில் ஊர்த்துவபுண்டரமானது வெளுப்பு மிருத்திகையினால் தரிக்கப்பட்டுப் பிரகாசிக்கிறதோ அவன் சண்டாளனேயாகிலும் பரிசுத்தனாகி எல்லாராலும் ஸன்மாநிக்கத்தக்கவனென்று ஸத்தியவிரதர் சொன்னார்.

ஸந்தியாவந்தனப்பிரகரணம். பகலிரவுகளின் சந்திகாலங்களில் செய்யுந் தேவதோபாசனையே சந்தியை என்று வியாசர் அருளிச்செய்தார். சூரியன் முழுதும் மறைவதற்குமுன்னும், முழுதும் உதயமாவதற்கு முன்னும், நடுப்பகலிலும் சந்தியாவந்தநம் செய்யவேண்டுமென்று யாக்கியவல்கியர் உரைத்தார். உதயாஸ்தமயங்களை அடைகிற சூரியனை (சூரிய மண்டலவாசியான பரமாத்துமா

ஷவச்) சந்தியை என்னும் பதத்திற்குப் பொருளான பிரமம் என்று தியானித்து ஸந்தியாவந்தநத்தைச் செய்யும் பிராம்மணன் இகபர போகங்களைப் பெறுகிருனென்று வேதம் சொல்லிற்று. சந்தியாவந்த நம் செய்யாதவர்கள் இருள்நரகத்தை அடைகிருர்களென்றுவிஷ்ணு புராணத்திலும் சந்தியாவந்தநம் செய்யாதவன் பிழைத்திருக்குங் காலத்திலேயே சூத்திரனுகிருனென்றும் பின்பு நாயாகப் பிறக்கிரு னென்றும் கோபில ஸ்மிருதியிலும் வியாதி முதலிய துக்கங்கள் இ ல்லாத பிராம்மணன் சந்தியாவந்தனத்தைத் தவிர்ந்தால் அநர்த்த த்தை அடைகிருனென்று யாக்ஞயவல்கியஸ்மிருதியிலும் சொல்லப் பட்டது. சூதக காலத்தில் கூட விடாமல் சந்தியாவந்தநத்தைச் செய்யவேண்டுமென்று புலஸ்தியர் சொன்னுர்.

ஜனன மரணத் தீட்டுகளில் இருபிறப்பாளரில் பிராணுயாமந்த விரமற்ற மந்திரங்களை வாக்கினுல்சொல்லாமல் மனதினுல்சிந்தித்து ஸந்தியாவந்தநம் செய்பவன் சகல பாபங்களையும்போக்கித் தீர்க்கா யுளை அடைகிருனென்று மரீசிசொன்னுர். ஆசநத்தில் ஸ்திர மாக உட்கார்ந்து பிராணவாயுவைத் தடுத்து ஆசாரியன் முதலான வர்களைத் தியானித்துக் கண்களைமூடி மௌநமாகப் பிராணுயாமத் தை அப்பியசிக்கவேண்டுமென்று பிரகஸ்பதியும், மூன்று வியாகி ருதிகளோடும் பிரணவத்தோடும் சிரோமந்திரத்தோடுங்கூட்டிக்காய த்திரி மந்திரத்தை மூன்றுதரம் பிராணவாயுவை அசையாமல் தடுத்து ஜபிப்பது பிராணுயாமமென்று மனுவும், பூரகம், கும்பகம், ரேச கம், என்று பிராணுயாமம் மூன்றுவிதமென்றும், மூக்கினுல் இழுக் கப்பட்ட மூச்சு பூரகம், அது ஸ்தம்பிக்குங்காலத்தில் கும்பகம், அதை விடுங்காலத்தில் ரேசகம் எனவும் சொல்லப்படுமென்றும் யோகயாக்ஞயவல்கியரும் கூறினுர்கள். "ஆபோஹிஷ்டா" என்னும் ருக்கின் எட்டுவாக்கியங்களிலும் பிரணவத்தைச்சேர்த்து தர்ப்பஜலத் தை எட்டுதரம் ப்ரோக்ஷித்துக்கொண்டு "யஸ்யக்ஷயாய" என்கிற வாக்கியத்தால் கீழ்தேகத்தைப் புரோக்ஷித்துக்கொள்ளுவதினுல் கிர மமாக ஜாக்கிரம், சொப்பநம், சுஷுப்தி என்னும் மூன்று அவஸ் தைகளாலும் முக்குணங்களாலும் திரிகரணங்களாலும் வந்த ஒன் பதுவித பாபங்களையும் ஒன்பது புரோக்ஷணங்கள் ஒழித்துவிடுகின் றன என்று வியாசபகவான் அருளிச்செய்தார். இந்தப் புரோக்ஷ ணம், தேவதார்ச்சனம், பலிஹரணம் செய்தல், புசிப்பது ஆகிய இந்தக் கருமங்களை உள்ளங்கையிலிருந்து ஐந்துவிரல் நுனியால் விழுகிற தெய்வ தீர்த்தத்தினுல் செய்யவேண்டுமென்று ஹாரீதர்

கூறினர். தாரையாகவிழுகிற ஜலத்தில் ஸந்தியாவந்தநம் செய்தால் பிதிர்க்களும் தேவர்களும் அதை உகக்கமாட்டார்களென்றும், தீர்த்தத்தின் கரையிலுட்கார்ந்து இடது கையில் மண், மரம், பொன், வெள்ளி, முதலியவைகளால் செய்த பாத்திரத்தில் தீர்த்தத்தை வைத்துக்கொண்டு ஸந்தியாவந்தனம் செய்யவேண்டுமென்றும் பிரமஸ்மிருதியில் சொல்லப்பட்டது. சாயங்காலத்தில் "அக்கிநிச்ச," பிராதக்காலத்தில் "சூரியச்ச," மத்தியான்னத்தில், "ஆப:" என்று சொல்லும் மந்திரங்களால் மந்திரிக்கப்பட்ட ஜலத்தைப்பாநம்செய்து ஆசமிக்கவேண்டுமென்று பரத்துவாஜரும், பிரணவத்தால் முதல்தடவை, வியாகிருதிகளால் இரண்டாந்தடவை, காயத்திரியால் மூன்றாம்தடவை, ஜலமந்திரங்களால் நாலாந்தடவை, தர்ப்பஜலத்தைச்சிரஸில் புரோக்ஷித்துக்கொள்ளவேண்டுமென்று காத்தியாயனரும், கைகளால் ஜலத்தை எடுத்து மந்திரித்து மோந்துதரையில் விட்டு வேறு ஜலத்தில் காயத்திரியை ஜபித்துச் சூரியனுக்கெதிராக நின்று மூன்றுதரம் அர்க்கியதாநம் செய்யவேண்டுமென்று வியாசரும், அர்க்கியத்தை மூக்குநுனிக்குச் சரியாகத் தூக்கிவிடவேண்டுமென்று பிரஜாபதியும், அர்க்கியதாநம் பிரதக்ஷிணம் ஆசமநம் இவைகளைச்செய்தால் சுத்தனாகிறானென்று வராகபுராணத்தில் பகவானும் அருளிச்செய்தார்கள். சந்தியோபாஸநம் செய்பவர்கள் பாபத்தை ஒழித்து அழியாத பரப்பிரமத்தை அடைகிறார்களென்றும், பகலில் திரிவிதகரணங்களாலும் செய்தபாபத்தைச் சாயம் சந்தியாவந்தநத்தில் பிராணாயாமத்தாலும், ராத்திரி செய்த பாபத்தைக் காலைப்பிராணாயாமத்தாலும் போக்குகிறார்கள் என்றும் யமஸ்மிருதி கூறிற்று.

ஜபப்பிரகரணம். தர்ப்பாஸநத்திலிருந்து கொண்டு தர்ப்பப்பவித்திரத்தைக் கையில்தரித்துச் சூரியாபிமுகமாக அல்லது வடக்குமுகமாக தேவதையைத் தியானித்துக்கொண்டு ஜபிக்கவேண்டுமென்று சங்கரும், பிரணவத்தோடும் வியாகிருதியோடுங் கூடிய காயத்திரியை ஜபிக்கவேண்டுமென்று வியாஸரும், இருபுறமும் பிரணவமுடையதாகி வியாகிருதியோடுகூடிய காயத்திரியை ஜபிக்கவேண்டுமென்று போதயநர் யோகயாக்கிய வல்கியர் இவர்களும் சொன்னார்கள். ஜபகாலத்தில் மௌநந்தப்பினால் விஷ்ணுமந்திரத்தைச்சொல்வதாவது விஷ்ணுவைத்தியானிப்பதாவது செய்யவேண்டும்என்று யாக்கியவல்கியரும், லோகவிஷயங்களைக்கேட்டுக்கொண்டும் பார்த்துக்கொண்டும்செய்த சந்தியாவந்தனம் வீணாய்விடுமென்று ஸம்வர்த்தரும், ஜபகாலத்தில் சோம்பல், தும்மல், நித்திரை, அபாநவாயுவிடுதல்,

கொட்டாவிவிடுதல், நாய், நீசர்கள் முதலானவர்களைப் பார்த்தல் ஆகிய இவைகள் சம்பவித்தால் விஷ்ணுத்தியானம், பிராணாயாமம், ஆசமனம்,பிராம்மணன், அக்கினி இவர்களைத் தரிசிப்பதுஆகிய இவைகளில் ஏதேனுமொன்றைச் செய்யவேண்டுமென்று கௌதமரும், ஜபகாலத்தில் பெரியோர்கள்வந்தால் அவர்களை நமஸ்கரித்து உபசரித்துக்ஷேமங்களை விசாரித்துஅவர்கள் அனுமதிபெற்றுப் பின்பு ஜபத்தை மௌனமாகச்செய்யவேண்டுமென்று போதாயநரும் கூறினார்கள். காயத்திரி முதலிய மந்திரஜபத்தை வாயால்சொல்லி ஜபிப்பதாகிய வாசிகமாகச்செய்தால் ஒருபங்கு பலனையும், மந்திரங்கள் அந்நியருக்குக் கேளாமல் மெதுவாக உச்சரிப்பதாகிய உபாம்சுவாக ஜபித்தால் ஒன்றுநூறுபலனையும், மந்திரத்தின் எழுத்துக்களை வரிசையாகத் தியானிப்பதாகிய மாநஸிகமாக ஜபித்தால் ஒன்றுஆயிரம்பலனையும் தருமென்று மனு, அத்திரி, பிருகு, நாரதர், இவர்கள் சொன்னார்களென்று விசுவாமித்திரர் கூறினார். காலையில் சூரியனைக்காணும் வரையில் நின்றுகொண்டும், உச்சிப்பொழுதிலும், சாயங்காலத்தில் நக்ஷத்திரங்காணுமளவும் உட்கார்ந்தும் ஜபிக்கவேண்டுமென்று மனுஸ்மிருதி வாயுபுராணங்கள் கூறுகின்றன. பிரமசாரி, யாகஞ்செய்தவன் இவர்கள் ஒவ்வொரு காலத்திற்கும் காயத்திரியை நூற்றெட்டுதரமும் வாநப்பிரஸ்தனும் சன்னியாசியும் ஆயிரத்திற்கு மேலும் ஜபிக்கவேண்டுமென்று யாக்கியவல்கியஸ்மிருதியும், அமாவாசை, சிராத்ததிநம், மஹாப்பிரதோஷம் இவைகளில் காயத்திரியைப் பத்துதரமும், வேறு அநத்தியயநங்களில் இருபத்தெட்டுதரமும், அத்தியயநகாலங்களில் கிரமப்படிக்கும் ஜபிப்பவேண்டுமென்று வேறுஸ்மிருதிகளும், ஸகல பாபங்களையும் ஒழிக்கத்தக்கதாகிய காயத்திரியை உத்தமபக்ஷம் ஆயிரந்தரமும், மத்தியமபக்ஷம் நூறுதரமும், அதமபக்ஷம் பத்துதரமும், பிரதிசந்தியைகளிலும் தப்பாமல் ஜபிக்கவேண்டுமென்று யமஸ்மிருதியும் சொல்லின. விரலால் எண்ணி ஜபிப்பதினால் ஒரு பங்கும், விரலின் ரேகைகளால் எண்ணுவதினால் எண்மடங்கும், ஜீவரத்திநங்களால் எண்ணுவதினால் பத்து பங்கும், சங்கமணியினால் நூறுபங்கும், பவளத்தால் ஆயிரம் பங்கும், ஸ்படிகத்தால் பதினாயிரம்பங்கும், முத்துக்களால் நூறாயிரம்பங்கும், தாமரை மணிகளால் பத்துலக்ஷம் பங்கும், பொன்மணிகளால் கோடி பங்கும், தர்ப்பத்தால்செய்த பவித்திரமுடிமாலையாலும் ருத்திராக்ஷங்களாலும் எண்ணி ஜபித்தால் கணக்கில்லாத பங்குமான பலனைத் தருமென்று கௌதமர் சொன்னார். ஜபமாலையில் மணிக்கணக்கு

நூற்றெட்டு உத்தமம், ஐம்பத்துநான்கு மத்தியமம், இருபத்தேழு அதமமாமென்று பிரஜாபதி கூறினர். கணக்கில்லாமலும் நடுவில் சம்பாஷித்துக்கொண்டும் நடந்துகொண்டும் செய்த ஜபம் நிஷ்பலமாமென்று ஸம்வர்த்தரும், கிருகத்தில் ஜபித்தால் ஒரு பங்கும், நதிமுதலான இடங்களில் இரட்டிப்பும், பசுத்தொழுவத்தில் பத்துப்பங்கும், அக்கினிச்சாலையில் நூறுபங்குக்கு அதிகமும், ஸித்திக்ஷேத்திரம் புண்ணியதீர்த்தம் தேவாலயம் இவைகளில் கோடிபங்கும், விஷ்ணுஸன்னிதியில் அளவற்றபங்குமானபலன் உண்டாகுமென்று சங்கரும் சொன்னர்கள். காயத்திரியைப் பத்துவிசை நியமத்துடன் ஜபித்தால் மூன்று திநத்தில்செய்த சிறுபாதகங்களும் நூறுதரம்ஜபித்தால் பாபராசிகளும் ஆயிரந்தரம் ஜபித்தால் உபபாதகங்களும் நூறாயிரந்தரம் ஜபித்தால் மஹாபாதகங்களும் நசிக்குமென்றும், கோடிதரம் ஜபித்தால் இச்சித்தபலன் ஸித்திக்கும் என்றும்வியாஸர் அருளிச்செய்தார். ஜபம்செய்தபின் காலையில் உதயமாகிற சூரியனைக்குறித்துச் சூரியமந்திரங்களால் ஸ்துதித்து உபஸ்தாநம் செய்யவேண்டுமென்று கூர்மபுராணம் கூறிற்று. தானேதுகிறசாகையில் சொல்லிய மந்திரங்களால் உபஸ்தாநம் செய்யவேண்டுமென்று வசிஷ்டரும், சாயங்காலத்தில் வருணமந்திரத்தால் உபஸ்தாநம்செய்து பின்பு பிரதக்ஷிணம்செய்து திக்குகளையும திக்குப்பாலகர்களையும் வேறுவேருக வந்தனம்செய்யவேண்டுமென்று நாராயணமுனியும் அருளிச்செய்தார்கள். கிருகத்தில் செய்யாமல் வெளியில் செய்த ஸந்தியாவந்தநம் பொய்சொன்னதினுலும் கள்ளினது மணத்தை முகர்ந்ததினுலும் பகலில் ஸ்திரீசங்கமம் செய்ததினுலும் பாபிஷ்டனது அன்னத்தைப் புஜித்ததினுலும் உண்டாகும் பாபத்தைப்போக்கிப் பரிசுத்தனுக்குமென்று சாதாதபர் கூறினர். யாகசாலையில் தகுந்தகாலங்களில் விதிப்படி அக்கினியை வளர்த்துவதற்காக இரண்டு ஸந்தியாவந்தநம் வீட்டில் செய்யத்தக்கவையென்று அத்திரி கூறினர்.

ஹோம விதி. பின்பு பிராம்மணன் தன் கிருகத்திற்குவந்து விதிப்படி ஆசமநம் செய்து அக்கினியை வளர்த்தி ஹோமம் செய்யவேண்டுமென்று கூர்மபுராணம் கூறிற்று. ஸந்தியாவந்தநம் செய்தவுடனே அக்கிஹோத்திர கருமத்தைத் தானே செய்யவேண்டும் என்றும், தன்பொருட்டு வேறொருவன் செய்தால் பாதிபலன் என்றும், தனக்காகத் தன் அநுமதிபெற்ற ருத்துவிக்கு, தன் புத்திரன், குரு, சகோதரன், உடன்பிறந்தாள் மகன், மருமகன், தன் பத்திநி, தன் சிஷியன் இவர்கள் ஓமம் செய்யலாமென்றும், முக்கியமாய்த் தான் அல்லது

புத்திரன் அல்லது சிஷியன் ஓமம் செய்யவேண்டுமென்றும் தக்ஷ ஸ்மிருதியிலும் கூர்மபுராணத்திலும் சொல்லப்பட்டது. தம்பதிகளில் ஒருவராகிலும் கிருகத்தில் இருந்தால்மாத்திரம் புத்திர சிஷியாதிகளுக்குஹோமம் செய்ய அதிகார முண்டென்றும் இல்லாவிட்டால் இல்லையென்றும் காத்தியாயநர் கூறினர். அவசியமான காரியமுடைய பிராம்மணன் தேசாந்தரம் போகவேண்டுமாகில் அக்னியை மனைவி யிடத்தில் ஒப்புவித்து ஹோமத்திற்குத்தக்க ருத்துவிக்குகளை ஏற்படுத்திப் பின்பு போகவேண்டுமென்றும் வெளியில் வீணாக நெடுநாள் வசிக்கலாகாதென்றும் ஸ்மிருதிவசந மிருக்கிறது. ஆகாசத்தில் நக்ஷத்திரம் காணப்படுவதற்குமுன்னும் அந்தியில் செம்மான மொழியாதமுன்னும் சாயங்கால ஓமம் செய்யத்தக்க தென்று காத்தியாயநரும் சூரியன் கிரணங்களோடுகூடி ஒரு ரேகையாகக் காணப்படும் பிராதக்காலத்தில் செய்யும் ஓமம் உதித ஹோமமென்றும் இராத்திரியைப் பதினறு பங்காக்கி நட்சத்திரங்கள் காணப்படுகிற கடைசி பாகம் அநுதிதகால மென்றும் அதில் காலை ஹோமம் செய்யவேண்டுமென்றும் வியாஸரும் அருளிச்செய்தார்கள். முக்கியகாலத்தில் செய்வது அரிதாகையால் கௌணகாலத்திலாவது கருமத்தைவிடாமல் செய்யவேண்டுமென்று நினைத்துச் சாயங்கால ஹோமம் வரையில் காலைஹோமமும் காலைஹோமம் வரையில் சாயங்காலஹோமமும் செய்யச் சாதாரண காலமென்று கோபிலருரைத்தார்.

ஹோமத்திரவியங்களின் பிரகரணம். கிருதம், அகிருதம், கிருதாகிருதம் என்று ஹோமத்திரவியம் மூன்று வகைப்படுமென்றும், கிருதமென்பது பாகம் செய்யப்பட்ட அன்னம், மாவு முதலானவையும், அகிருதமென்பது பாகம் செய்யப்படாத தானியம் முதலானவையும்,கிருதாகிருதம் என்பது குத்தலால் ஒருவிதபாகம் செய்யப்பட்டவையும்,அன்னம்போல் பாகம் செய்யப்படாதவையுமான அரிசி முதலானவையுமாம் என்றும் சௌநகர் சொன்னர். ஹோமத்திரவியங்களில் யவம் என்னும் தானியம் முக்கியமானது, இது கிடையாதபக்ஷத்தில் தயிர், பால், விரீஹி என்னுந் தானியம், இவை கிடையாத பக்ஷத்தில் கஞ்சி, ஜலம் இவை ஆகுதிக்குத்தகுந்தவைகளாம். முன் சொன்ன வஸ்துக்களுக்குப்பதிலாக அந்த வஸ்துக்களை அநுசரித்திருக்கும் வேறு சிலவஸ்துக்களால் ஹோமம் செய்யலாம். அதாவது யவத்திற்குக்கோதுமையும் விரீஹிக்கு நெல்லும் பிரதிநிதியாகும். இதுபோல் நெய்க்கும் ஹவிசுக்கும் பதில் கூடாது. நெய் விதித்த இடத்தில் நெய்யாலும் ஹவிசைவிதித்த இடத்தில்

ஹவிஸாலுமே ஓமம் செய்யவேண்டும் என்று காத்தியாயநர் கூறி ஞர். ஒரு படி தானியத்தால் அறுபத்து நான்கு ஆகுதிகள் செய்ய வேண்டும், எள்ளானல் அரைப்படியால் அவ்வளவு ஆகுதிகளும், நெய்யானல் கால்படியால் அவ்வளவு ஆகுதிகளும் செய்யவேண்டு மென்று பிரகஸ்பதி கூறினர். உலர்ந்த விறகுகளால் ஜொலித்துக் கொண்டு புகையில்லாமல் நாக்கை நீட்டுவதுபோல் கொழுந்துவிட் டெரிகின்ற அக்கினியில் செய்த ஹோமம் ஸித்திபெறும். அப்படி இல் லாத அக்நியில் ஓமம் செய்தவன் அக்நிமாந்திய மென்னும் வியா தியை அடைந்து தரித்திரனும் வியாதிஸ்தனுமாக ஜநிக்கிருனென் று கிருஹியபரிசிஷ்டம் என்கிற கிரந்தத்தில் சொல்லப்பட்டது.

தேவபூஜாகாலம். காலையில் ஹோமம் செய்தபின் தேவபூஜை செய்யவேண்டுமென்று மரீசியும், ஜப யக்கியமாகிய பிர்ம்மயக்கியம் செய்தபின் தேவபூஜை செய்யவேண்டுமென்று சிலரிஷிகளும் விதித் தார்கள். காலை ஹோமம் செய்தபின்பு மத்ஸியபுராணம் விஷ்ணுபுரா ணம் நாரதஸ்மிருதி மநுஸ்மிருதி இவைகளில் சொல்லியபடி பிரா ம்மணன், பசு, அக்கிநி, பொன், நெய், சூரியன், தீர்த்தம், ராஜா, குரு, அரசமரம், கண்ணடி முதலான மங்களத்திரவியங்களைப் பார்த்து அவைகளில் பூசிக்கத்தக்க வஸ்துக்களைப் பிரதக்ஷிணுதிக ளாலே உபசரிப்பவன் தீர்க்காயுளை அடைகிருன். அரசமரத்தைப் பிரதக்ஷிணமும் பசுவைச் சொரிவதும் ஆசாரியன் பிராம்மண சிரே ஷ்டர் இவர்களை அபிவாதநமும் செய்யவேண்டும்.

அபிவாதநப் பிரகரணம். பிராம்மணன் தன் வலக்கையைக் காது வரையிலும் க்ஷத்திரியன் மாரளவும் வைசியன் இடுப்பு அள வும் தூக்கியும் சூத்திரன் கீழேதாழ்த்தியும் இருகையையுங் கூப்பியு ம் அபிவாதநஞ்செய்யவேண்டுமென்று ஆபஸ்தம்ப ஸ்மிருதியும், ஒரு கையால் அபிவாதநஞ்செய்தால் ஜன்மந்தொடங்கிமனதினுல் செய்த புண்ணியங்களும் நசிக்குமென்று விஷ்ணுஸ்மிருதியும், பெரியோர் கள் எழுந்தருளுங்காலத்தில் எதிரே கண்டெழுந்திருந்து அவர் களுக்கு அபிவாதநம் செய்ய வேண்டுமென்று ஆபஸ்தம்பஸ்மிருதி யும் விதிக்கின்றன. ஆத்தும ஞாநத்தையும் லோக நீதியையும் வேதார்த்தங்களையும் தான் யாரிடத்தில் கிரகிக்கிருனே அவனை முதலில் அபிவாதநம் செய்ய வேண்டு மென்று மநு கூறினர். அபிவாதநமாவது தன் கோத்திரம், பிரவரம், தான் அத்தியயநம் செய்கிற சாகை, தன் பெயர் ஆகிய இவைகளைச் சொல்லி நமஸ்கரிப்பது. ஒருவன் இவ்விதமாக வணங்கும்போது வணங்

கப்பட்டவன் பிரதி அபிவாதநம் செய்யவேண்டும். அதாவது தீர்க்காயுஸை உடையவனுகுக நல்லவனே என்று பிராம்மணவிஷயத்தில் சொல்லவேண்டும். அப்படிச் சொல்லாதவன் அபிவாதநத்திற்குத்தக்கவ னன்று என்று ஆபஸ்தம்பர் கூறினூர். ஒருவன் தன்னை அபிவாதநம் செய்கையில் அவனுக்குப் பிரதி அபிவாதநம் செய்யாதவன் அவன் பாபத்தில் ஒரு பங்கை அடைகிறுன் ஆகையால் சண்டாளனுக்காகிலும் அவன் நமஸ்கரித்தால்“கள்ளேக்குடி”என்று இதத்தைச் சொல்லவேண்டும். இதனுல் பிரதி அபிவாதநம் தர்மம் செய்தது போலாகும். பிராம்மணனை (ஸ்வஸ்தி) க்ஷேமமாகுக என்றும், க்ஷத்திரியனை தீர்க்காயுஸை உடையவனுகுக என்றும், வைசியனை விருத்தி அடைகுக என்றும் சூத்திரனை நன்முகவந்தாயோ என்றும் சொல்லுவதே பிரதி அபிவாதநமென்று யமஸ்மிருதி சொல்லிற்று. சூத்திரனுக்கு அபிவாதநம்செய்த பிராம்மணன் அப்போது தரித்திருந்த வஸ்திரத்தோடு ஸ்நாநம் செய்து பின்பு நூறு பிராம்மணருக்கு அபிவாதநம் செய்தால் சுத்தனுகிறுன் என்று சாதாதபர்சொன்னூர். மூன்றுவருஷம் மூத்தவனுகிய வேதமோதிய பிராம்மணனை அபிவாதநம் செய்யவேண்டுமென்று ஆபஸ்தம்பர் சொன்னூர். ஆசாரியனுடைய வலது திருவடியைத் தன் வலது கையாலும் இடது திருவடியை இடது கையாலும் மாறி ஸ்பர்சிப்பது பாதோபஸங்கிரகணமென்றும், தன் காதுகளைத்தொட்டுப் பின்பு முழங்கால்களுக்குக் கீழ்ப்பாதம்வரையில் தொட்டுத் தலைவணங்கவேண்டுமென்றும் போதாயநர்விதித்தார். ருத்துவிக்கு, மாமனூர், சிறியதகப்பன், அம்மான் இவர்கள் தன்னிலும் சிறியரேயாகிலும் அவர்களுக்கு எதிரெழுந்திருந்து அபிவாதநம் செய்யவேண்டுமென்று கௌதமர் உரைத்தார். சபையிலும் யக்கியசாலையிலும் ராஜகிருகத்திலும் பிராம்மணர்களை நமஸ்கரிக்கலாமேயன்றி அபிவாதநம் செய்யலாகாதென்று விஷ்ணுஸ்மிருதி கூறுகின்றது. மாதா, பிதா, அவர்களுடைய பந்துக்கள், தமையன்மார், தமக்கை, வேதத்தை ஓதுவித்தகுரு, அவருடைய குரு இவர்களுக்கு அபிவாதநம் செய்யவேண்டும் என்று கௌதமர் சொன்னூர்.

குருவைப்போல் குருவின் சுஜாதி பத்திநிகளைச் சேவித்து அபிவாதநம் செய்யவேண்டும், அந்நியஜாதி பத்திநிகள் விஷயத்தில் வாக்கினுல் உபசாரஞ் செய்யவேண்டும், தமையன் பத்திநிக்குத் தினந்தோறும் பாதந்தொட்டு அபிவாதநம் செய்யவேண்டும், யாத்திரைசெய்து வந்தகாலத்தில் மாத்திரம் ஞாதிகள், பந்துக்கள் இவர்

களில் தனக்கு மூத்தோருடைய மனைவிகளுக்கு அபிவாதநம் செய்யவேண்டும், இருபது வயதுடைய சிஷ்யன் யௌவநபருவமுடைய குரு பத்தினிக்குப் பாதத்தைத்தொட்டு அபிவாதநம் செய்யலாகாது, அந்தக் குரு பத்நியும் அப்படிப்பட்ட சிஷியனுக்கு எண்ணெயிடுதல் முதலியவற்றைச் செய்யலாகாது, சிஷியன் பக்தியுடன் அடியேன் இன்னுனென்று சொல்லிக்கொண்டே விதிப்படி தூரத்திலிருந்து வந்தநம் செய்யவேண்டுமென்றும், யாத்திரை செய்து வந்தபோது மாத்திரம் பாதத்தைத் தொட்டும், நித்திய காலங்களில் தொடாமலும் அபிவாதநம் செய்யவேண்டுமென்றும் மனு கூறினர். காலில் பாதரக்ஷை தரித்தவனுக்கும், தலையில் வஸ்திரத்தைச் சுற்றியிருப்பவனுக்கும், கையில் தீர்த்தபாத்திரம், பிக்ஷான்னம், புஷ்பம், சமித்து, நெய், அக்கினி, அக்ஷதை, இவைகளை வைத்திருப்பவனுக்கும், தேவ பிதிர்காரியங்களைச் செய்கிறவனுக்கும்,ஜெபம் செய்கிறவனுக்கும், ஓடுகிறவனுக்கும், மயங்கினவனுக்கும், மல மூத்திர விஸர்ஜநம் செய்கிறவனுக்கும், வாந்தி எடுப்பவனுக்கும், பல் விளக்குவோனுக்கும், எண்ணெ யிட்டுக்கொள்பவனுக்கும், யோக நிஷ்டையிலிருப்பவனுக்கும், சக்தியற்றவனுக்கும், நோயாளிக்கும், பகையாளிக்கும், தனக்கு இளையவனுக்கும், அபிவாதனஞ் செய்யலாகாதென்று சங்கர் ஆபஸ்தம்பர்கள் விதித்தார்கள்.

ஓது வித்தவன், தந்தை, மூத்தசகோதரன், அரசன், அம்மான், மாமனர், ஆபத்தில் ரக்ஷித்தவன், தாயின் தகப்பன், பாட்டனர், பிதாவோடு பிறந்தவன், இவர்கள் புருஷர்களில் குருவானவர்களென்றும், தாய், அவளுக்குத்தாய், பிதாவோடு பிறந்தவள், தாயோடு பிறந்தவள், மனைவியைப் பெற்றவள், பிதாவின் தாய், தனக்கு முன் பிறந்தவள், எடுத்துவளர்த்த தாய் இவர்கள் ஸ்திரீகளில் குரு போன்றவர்களென்றும் ஆதலால் அவர்கள் குருவைப்போல உபசரிக்கத் தக்கவர்களென்றும், ஹாரீதர் கூறினர். வேதத்தில் சிலபாகத்தை அல்லது முழுவதையும் ஓதுவித்த உபாத்தியாயனைக் காட்டிலும் வேத ஸாரமாயும் இம்மை மறுமைகளில் காப்பதுமான மந்திரத்தை உபதேசித்த ஆசாரியனே பதின் மடங்கு சிறந்தவன், அவனிலும் பிதா நூறு மடங்கு அதிகம், அவனிலும் தாய் ஆயிரம் மடங்கு அதிகமானவளென்று மனு கூறினர்.

"பத்துமாதம் வயிற்றில் சுமந்து வயிற்றுநோயினல் மிக வருந்தியும், ப்ரஸவ வேதனையை யடைந்து மூர்ச்சித்தும் மக்களைப்பெற்று இவ்வருத்தங்களை நினையாமலே தன் பிராணனிலும் சிறந்தவனுக

எண்ணி ரக்ஷித்த தாயை மகன் தான் நூறு வருஷம் பிழைத்திருந்து தன் காலமெல்லாம் இடைவிடாமல் வருந்தி அவளை உபசரித்தாலும் அவளுக்குப் பிரதி யுபகாரம் செய்யச் சக்தியுள்ளவனுகான் என்று ஸ்ரீ வியாஸபகவானே மாதா வென்கிற தெய்வத்தின் பெருமையை வெளியிட்டார்.'' மூத்தவனுக்கு இளையவன் மந்திரம் முதலியவைகளை உபதேசித்தால் இளையவன் குரு ஆகிறான் என்றும், உபநயநஞ்செய்து வேதமுழுதையும் அதின் விதிகளையும் அதின் ரகசியார்த்தங்களையும் உபதேசித்தவன் ஆசாரியன் என்றும், தன்னைப்பெற்ற பிதாவைக்காட்டிலும் தனக்கு உபநயனஞ்செய்து மந்திரோபதேசத்தினுல் பிராம்மண ஜனனத்தை உண்டாக்கினவனே பிதாவென்றும், இந்தத் தருமங்களை அறிந்து பெரியோர்களுக்கு நித்தியமும் அபிவாதனம் செய்கிறவனுக்கு ஆயுள், ஞானம், கீர்த்தி, பலம் இந்நான்கும் உண்டாகுமென்றும் மனு கூறினர்.''

வேதமோதுங் காலம். ஒருபகலின் எட்டுப்பாகத்திலே "முதல்பாகத்தில்'' ஸ்நாநாதிகளை அனுஷ்டித்து "இரண்டாம்பாகத்தில்'' வேதாப்பியாசம் முதலியவைகளைச் செய்யவேண்டுமென்று தக்ஷரும், வேதாப்பியாசமே பிராம்மணனுக்குச் சிறந்த தவமென்றும் ரிஷி தேவ மநுஷியர்களுக்குக் கண்போன்ற வேதத்தைப் பிராம்மணன் ஓதக்கடவனென்றும் மனுவும், பிராம்மணன் சகலப் பிரயத்தினத்தினுலும் வேதத்தை ஆசிரயிக்கக் கடவனென்று வியாஸரும், வேதமே பிராம்மணனுக்கு மோக்ஷத்தைத்தர வல்லதென்றும் வேதமில்லாத பிராம்மணனுடைய சகல கிரியைகளும் நிஷ்பலங்களென்றும் யாக்கிய வல்கியரும் சொன்னர்கள்.

திரவியார்ஜநப்பிரகரணம். "மூன்ருவது பாகத்தில்'' பிராம்மணன் தன் குடும்ப போஷணத்திற்காகப் பொருளைச் சம்பாதிக்கவேண்டுமென்று கூர்ம புராணத்தாலும், தாய், தந்தை, ஆசாரியன் மனைவி, பிரஜைகள், தன்னையடுத்த ஏழைகள், விசேஷகாலங்களில் பலனை அபேக்ஷித்து வருபவனுகிய அப்பியாகதன், அதிதி, அக்கினி, ஆகிய போஷிய வர்க்கங்களை ரக்ஷிப்பதற்காகத் தன் விருத்தியைத் தவருமல் பொருளைத் தேடவேண்டுமென்றுதக்ஷராலும், ஓதுவித்தல், யாகம் செய்வித்தல், தானம் வாங்குதலாகிய இம்மூன்று தொழிலே பிராம்மணனுக்குப் பொருள் சம்பாதிக்க உபாயமென்றும், இம்மூன்றும் க்ஷத்திரியனுக்கும் வைசியனுக்கும் தகாதவைகளாகையால் ஆயுதங்களாலும், அஸ்திரப் பிரயோகங்களாலும், பகைவரை வென்று பிரஜைகளைக்காப்பது க்ஷத்திரியனுக்கு ஜீவனோபாயமென்றும்,

வைசியனுக்கு வர்த்தகம் செய்தல், பசுபரிபாலனம், பயிர்த்தொழில் இவைகள் ஜீவனோபாயமென்றும், பின்னும் தாயம், லாபம், கிரயம், ஜயம், பிரயோகம், கருமயோகம், ஸத்பிரதிக்கிரஹம், என்று தருமமாகச் சம்பாதிப்பது எழுவித மென்றும், அதில் தாயம் குலக்கிரமமாகக்கிடைத்த பூர்வதநம், லாபம் நிதியைக் கண்டெடுப்பது, கிரயம் விற்பது, இந்த மூன்றும் நான்கு வருணத்திற்கும் சாதாரணமாம். ஜயம், க்ஷத்திரியனுக்கே தகுந்தது, பிரயோகமென்பது வட்டியைக் கோரித் தனத்தைக்கொடுப்பது, கருமயோகமென்பது பயிரும் வர்த்தகமுமாம். இவை வைசியனுக்கே தகும், ஸத்பிரதிக்கிரகம் பரிசுத்தனிடத்துப் பரிசுத்தமான தானம் பெறுதல், இது பிராம்மணனுக்கே தகுமென்றும், நெல்வயல்களில் கீழேசிந்திவிட்ட ஒவ்வொரு தானியத்தைத் தனித்தனியே பொறுக்கியெடுப்பது உஞ்சம். கீழே சிதறி விழுந்திருக்கும் நெல் கதிர்களைத் தனித்தனியே பொறுக்கிக் கொள்வது ஸிலம், இவை இருதம் (ஸத்யஜீவனம்), இவற்றால் ஜீவிக்கக் கடவன், யாசிக்காமல் கிடைத்தபொருள் அமிர்தம் (மரணதுக்கத்தைப்போன்ற துக்கத்தைக் கொடுக்காதது), இவ்விரண்டும் உத்தம ஜீவனம். யாசித்துக் கிடைத்தபொருள் மிருதம் (மரணதுக்கம்போன்ற துக்கத்தைத்தருவது), இதினாலாவது ஜீவிக்கக்கடவன். பயிர்த்தொழிலால் கிடைத்தபொருள் ப்ரமிருதம், (வெகுப்பிராணி ஹிம்ஸையைத்தருவது), இதனால் ஜீவிக்கக்கடவன், இவ்விரண்டும் மத்தியமம். வர்த்தகத்தொழிலில் ஸத்தியாந்ருதம் (சிலபாகம் மெய்யும் சிலபாகம் பொய்யுமாயிருப்பது), இதனால் ஜீவிக்கக்கடவன், இது அதமம் ஒருவனைக் காத்து வேலைசெய்து பிழைப்பது சுவவிருத்தி. (நாய்ப்பிழைப்பு), அதனால் ஒருகாலும் ஜீவிக்கவேண்டாம், அது நிஷித்தமென்றும் களஞ்சியத்தில் அல்லது உறையில் நெல் கட்டிவைத்திருக்கும் பிராம்மணன் யாகம்செய்தல், செய்வித்தல் முதலான அறுவகைத் தொழிலைச்செய்ய அதிகாரி என்றும், குடத்தில் தானியம் வைத்திருப்பவன் யாகம்செய்வித்தல், ஓதுவித்தல், தாநம்வாங்குதல், இம்மூன்றுதொழிலுக்கும் அதிகாரி என்றும், மூன்றுநாளைக்குவேண்டிய தானியத்தை வைத்திருப்பவன் தாநம் வாங்குதலாலும் யாகம் செய்வித்தல் ஓதுவித்தல்களில் ஏதாவது ஒன்றினாலும், அன்றைய தினத்திற்கு மாத்திரம் சம்பாதிப்பவனாகிய அசுவஸ்தநிகன் ஓதுவித்தலாலும் பிழைக்கக் கடவன் என்றும் மனுவினாலும் விதிக்கப்பட்டது. பிராம்மணருக்குப் பணிவிடை, சகலமான சில்பவேலை இவைகளைச் செய்வது, ஸகலவஸ்துக்களையும் விற்பது, உழுது பயிர்செய்து

பசு பரிபாலனஞ் செய்வது,சுமையெடுப்பது,வர்த்தகம்,சித்திரவேலை, நர்த்தநம் இவைகளைச்செய்வது, வாத்தியங்களை வாசிப்பது முதலியவை சூத்திரனுக்கு ஜீவனோபாயங்களாமென்று உசநஸ்மிருதி ஹாரீத ஸ்மிருதிகள் கூறுகின்றன.

பிர்ம்மயக்கியவிதி. "நாலாவதுபாகத்தில்"மாத்தியான்னிக ஸ்நாநத்திற்காக மிருத்திகையைச்சங்கிரகித்து விதிப்படி மாத்தியான்னிகஸ்நாநத்தையும் மாத்தியான்னிக ஸந்தியோபாஸனையையும் செய்து பிர்ம்மயக்கியத்தைச் செய்யவேண்டும்.தானோதும் சாகையில் ஒரு ருக்கையாவது ஒருயஜுஸையாவது ஒரு ஸாமத்தையாவது ஓதுவதே பிர்ம்மயக்கிய மென்று அதின் ஸ்வரூபம் வேதத்தில் சொல்லப்பட்டது. காலையில் ஓமம் செய்தபின்னாவது மத்தியானம் செய்யும் தர்ப்பணத்திற்குள்ளாகவாவது வைசுவதேவத்தின் முடிவிலாவது பிர்ம்மயக்கியம் செய்யவேண்டிய காலமென்று பிருஹஸ்பதி சொன்னார். கிராமத்திற்குக் கிழக்கு அல்லது வடக்கில் சென்று நீராடிப் பரிசுத்தமான இடத்தில் சுத்தமான வஸ்திரத்தை உடுத்து உத்தரீயத்தை யக்கியோபவீதமாகத் தரித்து ஆசமனம்செய்து தர்ப்பாஸநத்தில் மூடக்கப்பட்ட இடது முழங்கால்மேல் வலதுபாதத்தை வைத்துச் சுகமாகக் கிழக்கு முகமாக உட்கார்ந்து இடதுகையை வலது முழங்கால்மேல் நிமிர்த்தியும், அதன்மேல் வலக்கையை அதோமுகமாகவும்வைத்து இரண்டு கைகளிலும் தர்ப்பப் பவித்திரங்களைத் தரித்து ஆகாசத்திற்கும்பூமிக்கும் சந்தியைப் பார்த்துக்கொண்டாவது கண்களை மூடிக்கொண்டாவது பிரணவத்தைத் தொடங்கி வியாகிருதிகளையும், காயத்திரியை முதலில் பாதம் பாதமாக நிறுத்தியும், பின்பு ஒவ்வொருபாதி ருக்கில் நிறுத்தியும், பின் நிறுத்தாமல் முழுதும், இவ்விதமாக மூன்று தரமோதவேண்டு மென்று சுசி யென்பவருடைய குமாரர் ஆஹ்நேயர் கூறினார். பின்பு யதாசக்தி வேதத்தையும் இதிஹாஸ புராணங்களையும் ஆத்துமவித்தையையும் ஜபிக்கவேண்டும். உபாகர்மத்திற்கும் பிர்ம்ம யக்கியத்திற்கும் ஹோமம் செய்யும் மந்திரங்களுக்கும் அநத்தியயந நாள் கிடையாதென்று மனுவினாலும், தானும் தானிருக்குமிடமும் அசுசியாயிருப்பதுமாத்திரம் அநத்தியயநமாகுமென்று வேதத்தாலும் சொல்லப்பட்டது. இவ்விதமாக நித்தியமும் பிர்ம்மயக்கியம் செய்யும் புருஷன் தனக்குச் சமானபுருஷர்களில் தானே உயர்ந்தவனாகிப் பரப்பிர்ம்ம ஸாயுஜ்ஜியத்தை அடைகிறானென்று வேதம் ஓதுகின்றது.

தர்ப்பணவிதி. நீராடிச் சுத்தனாய் உலர்ந்த வஸ்திரத்தையுடுத்

இக்கொண்டு தேவர்கள், ரிஷிகள் பிதிர்க்கள் இவர்களுக்கு அவ்வர வருக்கு விதித்த தீர்த்தங்களால் பொறுமையோடு தர்ப்பணம் செய்யவேண்டும், தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் ஒரு தடவையும் பிதிர்க்களுக்கு மாத்திரம் மூன்றுதடவையும் தில ஜலங்களை இறைக்க வேண்டுமென்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில்கூறப்பட்டது. ஒருவிசை, இரண்டுவிசை, மூன்றுவிசை யென்னுங் கணக்குகள் தர்ப்பணம் செய்பவன் ஓதுகின்ற ஸ்வயசாகையில் விதித்தபடி செய்யவேண்டுமென்றும், தேவ காரியங்களைச் செய்யும்போது சரியான வலதுபுறத்திலும் பிதிர்கருமங்களில் இடது புறத்திலும் மனுஷர் தர்ப்பணத்தில் கழுத்தில் மாலையாகவும் பூணூல் தரிக்கவேண்டுமென்றும், ஆக்னேயபுராணத்துள் கூறப்பட்டது. கிழக்குமுகமாய் உட்கார்ந்து வலப்புறமாகப் பூணூலைத்தரித்துக் கிழக்குமுகமான நுனியோடுகூடிய தர்ப்பத்தில் இருகையையும் அஞ்சலியாகக் கீழ்நோக்கிய விரல் நுனியால் விழுவதாகிய தேவதீர்த்தத்தினால் தேவர்களுக்கு ஜலதர்ப்பணம் செய்ய வேண்டு மென்று சங்கலிகிதர்கள் கூறினார்கள்.

பூணூலை இரண்டுதோள்நடுவே மாலையாகத் தொங்கவிட்டுப்பிராஜாபத்திய தீர்த்தத்தினால், (உள்ளங்கை நடுவாகவிடு நீரால்) ரிஷிகளுக்குத் தர்ப்பணம் செய்யவேண்டுமென்று விஷ்ணு ஸ்மிருதியில் சொல்லுகிறது. தென்முகமாயிருந்து பூணூலை இடதுபுறமாக விட்டுப் பிதிர் தீர்த்தத்தினால் (பெரு விரல் சுட்டு விரல்களின் நடுவில் விழுகிற நீரால்) பிதிர்க்களைக்குறித்துத் தர்ப்பணம் செய்ய வேண்டுமென்று போதாயனர் விதித்தார். நிலத்தின்மேலிருந்து நீரில் விழும்படி ஜல தர்ப்பணம் செய்வது பிதிர்க்களுக்கு உபயோகிப்பதில்லை யென்று விஷ்ணு ஸ்மிருதி கூறுகின்றது. அசுத்தமான நிலத்தில் தர்ப்பணம் செய்யலாகாது. தர்ப்பங்களைப் பரப்பி அதின்மேல் செய்யவேண்டும், பரப்பத்தக்க அத்தனை தருப்பங்கள்கிடையாவிட்டால் சுத்தமாகிய பாத்திரத்தில் ஜலம் வைத்துக் கொண்டு சுத்தமாகிய வேறு பாத்திரத்திலாவது குழியில் நிரப்பிய நீரிலாவது தர்ப்பிக்கலாமேயன்றித் தர்ப்பங்களைப் பரப்பாத நிலத்தில் தர்ப்பணம் செய்யலாகாதென்று ஹாரீதர் கூறினார்.

பரிசுத்தமாகிய இடங்கிடையாத பக்ஷத்தில் ஜலத்தில் தேவதைகளையும் பிதிர்க்களையும் தர்ப்பிக்கக்கடவன் என்று விஷ்ணுவும், பொன், வெள்ளி, செம்பு, வெண்கலம் இவைகளால் செய்யப்பட்ட பாத்திரங்கள் பிதிர் தர்ப்பணத்திற்குத் தக்கவைகள், மண்

பாத்திரம் தகாது என்று பிரமனும், அத்தி, வில்வமரம் இவைகளால் செய்த பாத்திரத்தில் பிதிர் தர்ப்பணஞ் செய்தால் அக்ஷய பலனைத் தருமென்றும், இரத்தினம், பொன் அல்லது தர்ப்பங்களையுடைய கையினால் எள் மந்திரங்களுடன் தர்ப்பணம் செய்ய வேண்டுமென்றும் மரீசியும், எள்ளை முன்னமே ஜலத்தில் சேர்த்து அதினால் தர்ப்பணஞ் செய்யலா மென்றும் அல்லது இடது கையில் வைத்துக் கிரகித்துக் கொள்ளலா மென்றும் யோகயாக்கிய வல்கியரும், இடதுகையில் மயிரில்லாத இடத்தில் எள்ளைவைத்து எடுத்துக்கொள்ளலாம், மயிருள்ள விடத்திலிருந்து எள்ளை எடுத்துத் தர்ப்பணம் செய்தால் ரக்தத்தினாலும் மலத்தினாலும் பிதிர்க்களைத் தர்ப்பித்தவனாகிறா னென்று தேவலரும், ஸப்தமி, ஆதிவாரம், தான் பிறந்தநாள், இவைகளில் குடும்ப விர்த்தியைக் கோரினவன் வீட்டில் திலதர்ப்பணஞ் செய்யலாகாதென்றும், விவாகம், உபநயநம், சௌளம், இவைகளைச்செய்த வீட்டில் கிரமமாய் ஒரு வருஷம், ஆறுமாஸம், மூன்றுமாஸம் தில தர்ப்பணம் செய்யலாகாதென்றும்,சிராத்த தினத்திலும் பிரேத கருமத்திலும் மாத்திரம் செய்யலாமென்றும், மாதாபிதாக்களையுடைய பிள்ளை திலதர்ப்பணஞ் செய்யக்கூடாதென்றும்,பிராம்மணனுடைய பெயர்முடிவில் சர்மன் என்கிற பதத்தையும் க்ஷத்திரியனுக்கு வர்மன் என்கிற பதத்தையும் வைசியனுக்கு குப்தன் என்கிறபதத்தையும் சூத்திரனுக்குத் தாஸன் என்கிற பதத்தையும் சேர்த்துத் தர்ப்பணஞ் செய்ய வேண்டு மென்றும் போதாயனரும், பிதிர் தர்ப்பணத்தில் பிரதி புருஷனுக்கும் அவனவனது பேர், கோத்திரம் இவைகளைச்சொல்லி எள்ளுடன் கலந்த நீரை மும்மூன்று தரம் விடவேண்டு மென்று பைடீனசியும் சொன்னார்கள்.

யமதர்ப்பணம். ஐப்பிசி மாஸம் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியிலும் செவ்வாய்க் கிழமையுடன் கூடின சதுர்த்தசியிலும் ஸ்நானம் செய்து தெற்கு முகமாக உட்கார்ந்து தேவதீர்த்தத்தினால் யமனை உத்தேசித்து விதிப்படி திலதர்ப்பணம் செய்பவன் பாதகங்களினின்று விடுபடுகிறானென்று விருத்த மனு ஸ்மிருதி ஸ்காந்த புராணம் யம ஸ்மிருதி இவைகள் சொல்லுகின்றன.

பீஷ்மதர்ப்பணம். மாகமாஸம் சுக்கிலபக்ஷம் அஷ்டமியில் வையாக்கிர பாத கோத்திரரும் ஸாங்கிருதி பிரவரரும் கங்கைக்குப் புத்திரரும் பிள்ளையில்லாதவருமான பீஷ்ம வர்மாவின் பொருட்டுத் திலோதகத்தைக் கொடுக்கிறேன் என்று சொல்லித் தர்ப்பணம் செய்

பவன் ஒரு வருஷத்திய பாதகங்களினின்று விடுபடுகிறான் என்று வியாஸபகவானும் பின்பு ஸ்நான வஸ்திரத்தைக் கரையில் பிழிய வேண்டுமென்று யாக்கிய வல்கியரும் சொன்னார்கள்.

தேவதார்ச்சனப் பிரகரணம். தீர்த்ததேவதைகளுக்கு வந்தனஞ்செய்து கிருகத்துக்கு வந்து புருஷ சூக்த மந்திரத்தினால் விஷ்ணுவைப் பூஜிக்கக் கடவனென்று நரசிங்கபுராணத்திலும், பிரமன், சங்கரன், சூரியன், விஷ்ணு இவர்களையும், இஷ்ட தேவதைகளையும், அவரவருக்குரிய மந்திரங்களால் பூஜிக்கக் கடவனென்று கூர்ம புராணத்திலும் சொல்லப்படுகிறது.

விஷ்ணுபூஜாக்கிரமம். சைவம், வைஷ்ணவம், சாக்தம், ஸௌரம், வைநாயகம், ஸ்காந்தம், ஆகிய இந்த ஆறுவித ஸித்தாந்தங்களில் வைஷ்ணவ ஸித்தாந்தத்தை அநுசரித்து விஷ்ணுபூஜை பாரதம் அசுவமேதபருவத்தில் சொல்லப்படுகிறது. சுசியான இடத்தில் ஒருவன் அரிசியைப்பரப்பி அதில் எட்டிதழ்கள் அல்லது பன்னிரண்டு இதழ்களையுடைய தாமரைப்புஷ்பங்கள் எழுதி அதில் அஷ்டாக்ஷர விதியினலாவது துவா தசாக்ஷர விதியினலாவது புருஷசூக்த வாக்கியங்களினலாவது என்னைப் பூஜிக்கக் கடவன், வைகாநஸ ஆகமத்தில் புருஷன், ஸத்தியன், அச்சுதன், அநிருத்தன் என்று எனக்கு நான்கு ரூபங்களும், பாஞ்சராத்திர மென்னும் ஆகமத்தில் வாசுதேவன், ஸங்கர்ஷணன், பிரத்தியும்நன், அநிருத்தன் என்று நான்கு ரூபங்களும் சொல்லப்பட்டன, இன்னும் எனக்கு அநேக ரூபங்களுண்டென்று ஸ்ரீகண்ணபிரான் தருமபுத்திரருக்கு உபதேசித்தார். இது ஆக்கினேயபுராணம் போதாயந சூத்திரம் முதலியவைகளால் விரித்துரைக்கப்பட்டது.

சிவபூஜாக்கிரமம். மஹாதேவனாகிய சங்கரபகவானுக்கு மன சுத்தியுடன் ருத்திரகாயத்திரியாலாவது பிரணவத்தினலாவது ஈசாந வித்தை, ருத்திரசூக்தம் அல்லது திரியம்பக மந்திரம், இவைகளாலாவது புஷ்பம், பத்திரம், தீர்த்தம், சந்தநம் இவை முதலிய உபசாரங்களைச் சமர்ப்பிக்கவேண்டும். முக்கியமாய்ச் சிவ பஞ்சாக்ஷரத்தினல் பூஜிப்பது உத்தமமென்றும், ருதம் ஸத்தியம் என்னும் மந்திரத்தினல் மஹா தேவனை நமஸ்கரித்து யோபிர்ம்மாணம் என்னும்மந்திரத்தினல் தன்னைச் சங்கரனுக்கு அர்ப்பணஞ்செய்து பிரதக்ஷிணதியாகாதிகளைச் செய்ய வேண்டுமென்றும் கூர்மபுராணத்தில் சொல்லியிருக்கிறது.

இந்தச் சிவபூஜாவிதி போதாயந சூத்திரம் கூர்மபுராணம் நந்தி தரும முதலிய சாஸ்திரங்களில் விஸ்தரித்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

குருபூஜாப்பிரகரணம். தேவதையைப்போலவே குருவையும் பூசிக்கவேண்டுமென்பது சுருதியிலும் புராணங்களிலும் விதிக்கப்பட்டிருக்கின்றது.

வைசுவதேவப்பிரகரணம். பகலின் "ஐந்தாவது" பாகத்தில் வைசுவ தேவமும், தேவயக்கியம், பிதிர்யக்கியம், பூதயக்கியம், மனுஷியயக்கியம், பிர்ம்மயக்கியம், என்கிற பஞ்ச மகா யக்கியங்களும் செய்யத்தக்கவையாம். வைசுவதேவ கருமத்தை இருபொழுதிலும் செய்யவேண்டும். கிருகஸ்தனுக்கு ஒவ்வொருபகலிலும் கண்டிநீ, பேஷிணீ, சுல்லி, சலகும்பம். உபஸ்கரம் அல்லது அபஸ்கரம், என்னும் ஐந்துவித ஸூநம் (கொலைக்கிடம்) உண்டாகிறபடியால் அந்தத்தோஷம் நீங்குவதற்கு வைசுவதேவம் விதிக்கப்பட்டது. கண்டிநீ என்பது உலக்கை, உரல், அறுக்கும் ஆயுதங்கள் இவைகளைக்கொண்டு கண்டித்தல், அறுத்தல், முறித்தல் இவைகளாலும், பேஷிணீயென்பது அம்மி முதலியவற்றைக்கொண்டு அரைத்தலாலும், சுல்லி என்பது அடுப்பு எரித்தலாலும், சலகும்பம் என்பது குடத்தில் நீர்வைப்பதாலும், உபஸ்கரம் என்பது முறம், சல்லடை இவைகளைக்கொண்டு புடைத்தல் முதலியவைகளாலும், அபஸ்கரமென்பது அலகு முதலியவற்றைக்கொண்டு விளக்குவதாலும் நேரிடுகிற ஜீவ வதையினால் வரும் தோஷங்களாம். இந்தத் தோஷங்களைப் பரிகாரஞ்செய்ய வீட்டுத்தலைவன் அன்னம் சமைத்த வுடனே எந்த அக்கினியில் அன்னம் சமைக்கப்பட்டதோ அதில் தேவதைகளுக்கு வேதவிதிப்படி தன் கையினால் தனித்தனியே ஓமஞ்செய்யவேண்டும். இது அவசியஞ் செய்யவேண்டுமாதலால் அன்னம் தனக்குக்கிடையாத பக்ஷத்தில் எதைத் தான் புசிக்கிறானோ அது காய்கறியாகவாவது இலைக்கறியாகவாவது வேறு எவ்வித கிழங்காகவாவது இருந்தாலும் அதினால் வைசுவதேவ ஓமம் செய்யவேண்டுமென்று சில சாஸ்திரங்கள் கூறுகின்றன. அதில் மிகுந்த அன்னத்தினால் பின்பு பலிஹரணம் செய்யவேண்டும். தேவதைகளைக்குறித்து அக்கினியில் அவிசை அல்லது ஸமித்தை ஓமம் செய்வது தேவயக்கியமென்றும் பிதிர்க்களை உத்தேசித்து ஸ்வதா என்று ஜலத்தை விடுவது பிதிர்யக்கியமென்றும், வாயஸம் முதலிய பூதங்களை உத்தேசித்துப் பலியைத்தருவது பூதயக்கியமென்றும், பிராம்மணருக்கு அந்நதானம் செய்வது மநுஷ்ய ய

க்கியமென்றும், தங்கள் குலத்தில் கிரமமாக ஓதப்பட்டுவருகின்ற வேதசாகையில் ஒரு ருக்கையாவது ஓதுவது பிர்ம்மயக்கியமென்றும் வேதத்தில் சொல்லப்பட்டது.

அநக்நிகன் வைசுவதேவம். அநக்நிகன் என்றால் பத்நியில்லாதவன், அவன் வைசுவதேவத்திற்குப் பசநம்செய்த அன்னத்தை வியாஹிருதி மந்திரங்களால் ஹோமம்செய்து பின் (దేవకృతస్యై నసః) என்று தொடங்கியுள்ள சாகலமந்திரங்களால் ஹோமம் செய்து மிகுந்த அன்னத்தைக் காகத்திற்குப் பலி கொடுக்கக்கடவன் என்று விருத்த வசிஷ்டர் சொன்னார்.

நித்தியசிராத்தவிதி. பிதிர்க்களை உத்தேசித்து ஒரு பிராம்மணனை நித்தியமும் போஜனம் செய்விப்பது உத்தம கதியைத் தருவதாகிய பிதிர் யக்கியமென்று காத்தியாயநரும், இந்த நித்திய சிராத்தத்திற்கு ஆவாஹநம், ஹோமம், பிண்டம், இவைகள் இல்லையென்று பிரசேதாவும் சொன்னார்கள். கந்தபுஷ்பாதிகளால் சக்திக்கீடாக ஒரு பிராம்மணனை அல்லது வெகுபேர்களைப் பூஜித்துச் சகல பிதிர்க்களையும் உத்தேசித்துப் போஜநம் செய்வித்துத் தக்ஷிணை கொடுக்கவேண்டுமென்றும் இந்தச் சிராத்தத்தில் விசுவேதேவர்களும், ஸ்வதா என்னும் மந்திரமும் இல்லையென்றும் மத்ஸிய புராணத்துள் சொல்லப்பட்டது. இதை ஜலத்தினால் செய்யக்கடவனென்று வேதம் ஓதுகின்றது. இவைகளைத் தன் சாகையில் சொல்லிய விதிப்படி அனுஷ்டிக்கவேண்டுமென்பது சிஷ்டாசாரம்.

அதிதிபூஜாவிதி. பிராம்மணருக்கு அன்னதாநம் செய்வது மநுஷியயக்கியமென்று வேதத்திலும், நித்தியமும் பிராம்மணர்களுக்கு அன்னத்தை அல்லதுதான்புசிக்கின்ற கந்தமூலபலங்களைக் கொடுப்பது மநுஷியயக்கியமென்று போதாயன ஸ்மிருதியிலும், அதிதியைப் பரமேசுவரனாகப் பாவித்து அவனுக்கு அன்னத்தைக் கொடுக்கக்கடவனென்று கூர்மபுராணத்திலும், வைசுவதேவஹோமம் செய்து ஆசமித்துத் தன் வீட்டுவாசலில் ஒரு முகூர்த்தகாலம் அல்லது ஒரு பசு கறக்கும் காலளவும் அல்லது இச்சையிருக்கும் பக்ஷத்தில் அதற்கு மேலும் அதிதிவரவை எதிர்பார்க்க வேண்டுமென்று ஸ்ரீ விஷ்ணு புராணத்திலும் சொல்லப்பட்டது. (௯௧)

௪०॥ ఇష్టో వా యది వా ద్వేష్యో మూర్ఖః పండిత ఏవ వా।
సంప్రాప్తో వైశ్వదేవాంతే సోతిథిస్స్వర్గసంక్రమః॥

அதிதிநிரூபணம். (இ-ள்) வைசுவதேவத்தின் முடிவில்வந்தவன்

இஷ்டன், சத்துரு, மூர்க்கன், பண்டிதன் இவர்களில் எவனானாலும் அவனே அதிதியும் ஸ்வர்க்கத்தில் சேர்ப்பவனுமாவான். (எ-று.)

சத்துருவுக்கும் மூர்க்கனுக்கும் அன்னதானம் செய்யலாகாதென்று நிஷேதமிருந்ததேயாகிலும், பஞ்ச மஹா யக்கியங்களும் முடிந்தபின் கால்நாழிகைப்பொழிதில் வருவதே அதிதிக்கு லக்ஷணமென்றும், அப்படி வந்தவனைப்பற்றிக் குணவிசாரமின்றி அன்ன முதலியவைகளால் அவனை ஆதரிக்க வேண்டுமென்றும் சொல்லி யிருப்பதால் இங்கு இஷ்டன், பண்டிதன் இவர்களோடு சத்துரு மூர்க்கன் இவர்களையும் எடுத்துரைத்தார் பராசரர். (சo)

౪౧॥ దూరాధ్వోపగతం శ్రాంతం వైశ్వదేవఉపస్థితం।
అతిథింతంవిజానీయా న్నాతిథిఃపూర్వమాగతః॥

(இ-ள்.) நெடுந்தூரம் நடந்து சிரமப்பட்டுவந்து வைசுவதேவ காலத்தில் தன்னை அடைந்தவனை அதிதியாக அறிய வேண்டும், முன் வந்தவன் அதிதியன்று. (எ-று.)

நெடுந்தூரம் வழிநடந்துவந்தவன் என்றதினால் அயலூரிலிருந்து வந்தவனே அதிதியென்றும், சிரமப்பட்டு என்றதினால் பசிதாகங்களால் வருத்தமடைந்தவனே அதிதிஎன்றும், முன்வந்தவன் அதிதியன்று என்றதினால் எந்தத் தினத்தில் வந்தானோ அந்தத் தினத்தில் அவன் அதிதியாவதன்றி மறுநாள் அதிதி ஆகான் என்றும் சொல்லப்பட்டது. ஒரு ராத்திரியிருந்த பிராம்மணன் அதிதி என்னப்படுவான் என்றும் வைசுவதேவகாலத்தில் வந்தவன் என்பதற்கு வைசுவதேவத்திற்குள் வந்தவன் என்றும் ஸாயங்காலம்வந்தவனும் அதிதியாவான் என்றும் மனு கூறினார். எவன் ஸாயங்கால வைசுவதேவத்தின் முடிவிலாயினும் ஸாயங்காலத்திலாயினும் வருவானோ அவன் சூரியோடன் (சூரியனால் அடைவிக்கப்பட்டவன்) ஆகிறான், அவனைக் கடவுளைப் போலப் பூசிக்கவேண்டுமென்று பிரசேதர் உரைத்தார். (சக)

౪౨॥ నైకగ్రామీణమతిథింసం గృహ్ణీతకదాచన।
అనిత్యమాగతో యస్మా త్తస్మాదతిథిరుచ్యతే॥

(இ-ள்.) தான் வசிக்கும் ஊரிலிருப்பவன் அதிதியாக வந்தால் அவனைக் கொள்ளலாகாது. நித்தியமும் வராதவனே அதிதி என்னப்படுவான். (எ-று.)

விவாஹாதி சுபங்கள், மனுவாதி, யுகாதி, அமாவாஸை முதலிய காலங்களில் பொருளிச்சையால் வருபவன் அப்பியாகதனென்

றும் எப்போதாவது ஒருநாள் பசிதாகங்களுடன் வருபவன் அதிதி யென்றும் யமஸ்மிருதி கூறிற்று. (௪௨)

౪౩॥ అతిథింతత్రసంప్రాప్తం పూజయేత్స్వాగతాదినా।
అర్ఘ్యాసనప్రదానేన పాదప్రక్షాళనేనచ॥
౪౪॥ శ్రద్ధయాచాన్నదానేన ప్రియప్రశ్నోత్తరేణచ।
గచ్ఛంతంచానుయానేన ప్రీతిముత్పాదయేద్గృహీ॥

(இ-ள்.) வைசுவதேவம் முடிந்தவுடனே வந்த அதிதியைக் கிருகஸ்தன் நல்வரவு கேட்டு அழைத்துவந்து அர்க்கியம் ஆஸநம் இவைகளைக்கொடுத்துக் கால் அலம்பிச் சிரத்தையோடு அன்னதானத்தால் உபசரித்துப் பிரீதியுடன் சம்பாஷித்துச் சிறிதுதூரம் பின் சென்று இவ்வாறு அதிதிக்குச் சந்தோஷத்தை யுண்டாக்கவேண்டும். (எ-று.)

౪౫॥ అతిథిర్యస్యభగ్నాశో గృహాత్ప్రతినివర్తతే।
పితరస్తస్యనాశ్నంతి దశవర్షాణిపంచచ॥
౪౬॥ కాష్ఠభారసహస్రేణ ఘృతకుంభశతేనచ।
అతిథిర్యస్యభగ్నాశస్తస్యహోమోనిరర్థకః॥

(இ-ள்.) அதிதி எவனுடைய கிருகத்திலிருந்து தன் ஆசை நிறைவேறாமல் திரும்புகிறானோ, அந்த வீட்டுக்காரனுடைய பிதிர்க்கள் அவன் அன்னத்தைப் பதினைந்துவருஷம் புசிக்கிறதில்லை. என்றால் அவ்வளவுகாலம் அவன் செய்யும் பிதிர்க்கிரியைகள் வீணாகும். மேலும் யாரிடத்திற்கு வந்த அதிதி ஆசைகெட்டவனாய்ப் போகிறானோ அவன் ஆயிரஞ் சுமைக்கட்டைகளையும் நூறுகுடம் நெய்யையுங்கொண்டு செய்த ஹோமம் வீணாகும். என்றால் தேவர்களைக்குறித்துச் செய்வதும் நிஷ்பலமாகும் என்றதாயிற்று. (எ-று.)

அதிதியாகவந்து உபசரிக்கப்படாத பிராம்மணன் அந்தக் கிருகஸ்தனது புண்ணியங்களெல்லாவற்றையும் கொண்டு போகிறானென்று மனு ஸ்மிருதியும், புண்ணியத்தை அபகரித்துக்கொண்டு தன்னுடைய பாபங்களை அவனுக்குத் தருகிறானென்று விஷ்ணு ஸ்மிருதியும், அதிதியைப் பூசியாதவன் அப்பொழுதே சண்டாளனாகிறானென்று அசுவமேதபருவமும் கூறுகின்றன. (௪௫, ௪௬)

౪౭॥ సుక్షేత్రేవాపయేద్బీజం సుపాత్రేనిక్షిపేద్ధనమ్।
సుక్షేత్రేచసుపాత్రేచ హ్యుప్తంతన్నవినశ్యతి॥

(இ-ள்.) நல்ல க்ஷேத்திரத்தில் விதையை விதைக்கவேண்டும், நல்ல பாத்திரத்தில் தாநம் செய்யவேண்டும், இப்படி நல்ல நிலத்திலும் நல்ல பாத்திரத்திலும் உபயோகித்தது கெடுவதில்லை. (எ-று.)

४७॥ నపృచ్ఛేద్గోత్రచరణే నస్వాధ్యాయంశ్రుతంతథా।
హృదయేకల్పయేదేవం సర్వదేవమయోహిసః॥

(இ-ள்.) வந்த அதிதியினுடைய கோத்திரத்தையும் ஆசாரத்தையும் அவனோதும் வேதத்தையும் அவனது ஞானத்தையும் ஊர் பெயர் முதலியவற்றையும் கேட்கலாகாது. அந்த அதிதி ஸகல தேவதைகளின் வடிவமாயிருக்கிறபடியால், அவனைத் தெய்வமாக நினைக்கவேண்டும். (எ-று.)

அதாவது தேவர்கள் அனைவரும் அதிதி வடிவமாகிக் கிருகஸ்தனை அநுக்கிரகம் செய்கிறார்களாகையால் யார் என்று கேட்கலாகாது என்பது கருத்து. (சஅ)

४९॥ అపూర్వస్సువ్రతీవిప్రోహ్యపూర్వశ్చాతిథిస్తథా।
వేదాభ్యాసరతోనిత్యం త్రయఃపూజ్యాదినేదినే॥

(இ-ள்.) நல்ல விரதமுடையவனாகிய சன்னியாசி, அதிதி, நித்தியமும் வேதமோதுகின்ற பிர்ம்மசாரி இம்மூவரும் நாடோறும் பூசிக்கத்தக்கவர்கள். சன்னியாசியும் பிர்ம்மசாரியும் தினந்தினம் வந்தாலும் (அபூர்வர்) முன்வந்தவராகார். (எ-று.)

இதனால் அவர்கள் நித்தியமும் வந்தாலும் பிக்ஷான்னங் கொடுக்கத்தக்கவர்களென்றும், அன்றுதான் வந்தவர்கள்போல் ஆதரிக்கத்தக்கவர்களென்றும் ஒருதினம் வந்த அதிதி மறுதினமும் வந்தால் அவனுக்கு அதிதிக்குச் செய்யும் உபசாரவிசேஷம் நடவாதென்றும் கருத்து. (சகூ)

५०॥ వైశ్వదేవేతుసంప్రాప్తే భిక్షుకేగృహమాగతే।
ఉద్ధృత్యవైశ్వదేవార్థం భిక్షుకంతువిసర్జయేత్॥

(இ-ள்.) வைசுவதேவம் செய்யும்பொழுது (என்றால் செய்வதற்கு முன்பு) சன்னியாசி அல்லது பிர்ம்மசாரிவந்தால் அன்னத்தில் வைசுவதேவ பாகத்தையெடுத்து வைத்து மற்றப்பாகத்தில் அவர்களுக்குப்பிக்ஷைகொடுத்து அவர்களை அனுப்பவேண்டும். (எ-று) (ருo)

५१॥ దద్యాచ్చభిక్షాత్రితయం పరివ్రాడ్బ్రహ్మచారిణాం।
ఇచ్ఛయాచతతోవిద్వాన్ విభవేసత్యవారితమ్॥

(இ-ள்.) சன்னியாசிக்கும் பிர்ம்மசாரிக்கும் மூன்று பிக்ஷையிடவேண்டும். வித்துவானயிருப்பவன் தன் சக்திக்குச் சரியாக இஷ்டத்தோடு எவ்வளவாகிலும் கொடுக்கலாம். அது விலக்கப்படுவதில்லை. (எ-று)

౫౨॥ యతిహస్తే జలం దద్యాద్భైక్షం దత్వా పునర్జలమ్।
తద్భైక్షం మేరుణా తుల్యం తజ్జలం సాగరోపమమ్॥

(இ-ள்.) சன்னியாசிகையில் முன்னே ஜலமும் பின்பு அன்னமும் மறுபடியும் ஜலமும் கொடுக்கவேண்டும். அந்த அன்னம் மேருமலைபோலவும், அந்த ஜலம் கடல்போலவும் விர்த்தியாகும். (எ-று.)

இதனால் சிறிதே செய்யினும் அதிகமாகச் செய்ததற்கு உண்டாகும் அவ்வளவு பலன் கிடைக்குமென்பது கருத்து. (௫௨)

౫౩॥ యస్య ఛత్రం హయశ్చైవ కుంజరారోహమృద్ధిమత్।
ఐంద్రం స్థానముపాసీత తస్మాత్తన్న విచారయేత్॥

(இ-ள்.) குதிரை குடை இவைகளையுடையவன் அதிதியாகவந்தால் அவனுக்கு அன்னங்கொடுத்து ஆதரித்தவன் யானையேறி அமிர்தபானஞ் செய்யத்தக்க இந்திரபதத்தை அடைவன், ஆகையால் அவன் விஷயத்தில் ஆராய்ச்சி செய்யவேண்டுவதில்லை. (எ-று.)

இதனால் சன்னியாசிக்கு ஆதித்தியம் செய்வதுபோல் ஐசுவரியமுடையன் அதிதியானல் அவனையும் பூசிக்கவேண்டு மென்பது சொல்லப்பட்டது. (௫௩)

౫౪॥ వైశ్వదేవకృతం పాపం శక్తో భిక్షుర్వ్యపోహితుం।
నహి భిక్షుకృతం దోషం వైశ్వదేవో వ్యపోహితుం॥

(இ-ள்.) வைசுவதேவம் செய்வதற்குமுன்வந்த சன்னியாசி பிர்ம்மசாரி இவர்களுக்குப் பிக்ஷைகொடுத்துப் பின்பு வைசுவதேவம் செய்கையால் வரும் தோஷத்தை அந்தப் பிக்ஷைவாங்குகிறவன் போக்கச் சக்தியுள்ளவனுகிறுன். அவர்கள் பிக்ஷைக்கு வந்திருக்க அவர்களுக்குப் பிக்ஷைகொடாமல் வைசுவதேவம் செய்தால் பிக்ஷையிடாமையால் வருகிறதோஷத்தை வைசுவதேவம் போக்கவல்லதன்று. (எ-று.)

மூலத்தில் பிக்ஷுகன் என்னும் பதத்திற்கு வியாசர் திருவுள்ளத்தின்படி சன்னியாசி, பிர்ம்மசாரி, வித்தையைக்கோருகிறவன், குருபணிவிடைசெய்கிறவன், வழிநடக்கிறவன், பிழைக்க வகைதப்பினவன், இந்த ஆறுபேரும் பொருளென்று சொல்லப்படுவார்கள். (௫௪)

౫౫॥ అకృత్వా వైశ్వదేవం తు భుంజతే యే ద్విజాతయః।
తేషామన్నం న భుంజీత కాకయోనిం వ్రజంతి తే॥

౫౬॥ అకృత్వా వైశ్వదేవం తు భుంజతే యే ద్విజాధమాః।
సర్వే తే నిష్ఫలా జ్ఞేయాః పతంతి నరకేశుచౌ॥

(இ-ள்.) எந்தப் பிராம்மணர்கள் வைசுவதேவம் செய்யாமல்

புசிக்கிறார்களோ அவர்களது அன்னத்தைப் புசிக்கலாகாது, புசித்தவர்கள் காக்கையாக ஜனிக்கின்றனர். (எ-று.) (ருரு)

(இ-ள்.) எந்தப் பிராம்மண அதமர்கள் வைசுவதேவம் செய்யாமல் புசிக்கிறார்களோ அவர்கள் வைசுவதேவத்தினால் வரும் பலனை இழந்தவர்களாகி அசுத்தமாகிய நரகத்தில் விழுகிறார்கள். (எ-று.) ()

౫౬॥ వైశ్వదేవవిహీనాయే ఆతిథ్యేనబహిష్కృతాః।
సర్వేతేనరకంయాంతి కాకయోనింవ్రజంతిచ॥

(இ-ள்.) யார் வைசுவதேவத்தையும் அதிதிபூஜையையும் ஒழித்தனரோ அவர்கள் அனைவரும் நரகத்தை அடைந்து பின்பு காக்கையாக ஜனிக்கிறார்கள். (ருஎ)

౫౭॥ పాపోవాయదిచండాలో విప్రఘ్నఃపితృఘాతుకః।
వైశ్వదేవేతుసంప్రాప్త స్సోతిథిస్స్వర్గసంక్రమః॥

(இ-ள்.) கோவதை முதலிய உபபாதகங்களைச் செய்தவனேயாகிலும் சண்டாளனேயாகிலும் பிர்ம்மஹத்தி செய்தவனேயாகிலும் பிதிர்ஹத்தி செய்தவனேயாகினும் வைசுவதேவ காலத்தில் ஆஹாரத்தை அபேக்ஷித்து வந்தவன் எவனோ அவனே ஸ்வர்க்கத்தை அடைவிக்கும் அதிதியாகிறான். (எ-று.) (ருஅ)

౫౮॥ యోవేష్టితశిరాభుఙ్క్తే యోభుఙ్క్తేదక్షిణాముఖః।
వామపాదకరస్థిత్వా తద్వైరక్షాంసిభుంజతే॥

போஜநப்பிரகரணம். (இ-ள்.) எவன் தலையை வஸ்திரத்தினால் மறைத்தும் தென்முகமாயும் இடக்காலின் மேல் கையைவைத்தும் புசிக்கிறானோ அவனுடைய அன்னத்தை ராக்ஷஸர் புசிக்கிறார்கள். (எ-று.)

ராக்ஷஸர் புசிக்கிறார்களென்றதனால் இப்படிப் புசித்தால் இந்த ஆகாரம் ராக்ஷஸரால் அபிமானிக்கப்பட்டுத் தாமஸ ஆஹாரமாய்ப் புசிப்பவனுடைய புத்தியைக்கெடுக்கும் என்று சொல்லப்பட்டது. பிராம்மணோத்தமரும் தன் பரிஜனங்களும் புசித்தபின் மிகுந்ததைக் கிருகஸ்தனும் அவன் பத்தினியும் புசிக்கவேண்டுமென்று மனு கூறினார். சுமங்கலி, துக்கப்படுவோர், கர்ப்பிணி, விருத்தர், சிறுவர், இவர்களுக்குச் சுத்தமாகிய ஆஹாரத்தை முன்னே புசிப்பித்துப் பின்பு தான் புசிக்கவேண்டும், இவர்களை முன்பு புசிப்பிக்காமல் புசித்தவன் பாபத்தைப் புசிக்கிறான், மரணமடைந்தும் நரகத்தை யநுபவித்துப் பின் கபத்தைத் தின்னும் ஜந்துவாகப் பிறக்கிறான்

என்று விஷ்ணுபுராணத்தில் சொல்லியிருக்கிறது. தனக்குப் பசி தாகம் நேர்ந்தபோது நல்ல போஜனம் பெறவேண்டுமென்று இச்சிப்பவன் பிராம்மணர், அதிதிகள், ஞாதிகள், பந்துக்கள், பிக்ஷுகர், அங்கவீனர், பாலர், விருத்தர், ஆதுரர் இவர்களை முன்னே புசிப்பித்துப் பின்பு தானுண்ணவேண்டுமென்று மார்க்கண்டேயபுராணம் கூறுகின்றது. மெழுகப்பட்டுச் சுத்தமாயும் மேடுபள்ள மில்லாததுமான நிலத்தில் போஜனம்பண்ணுவதற்குப் பிராம்மணனுக்குச் சதுரமாயும், க்ஷத்ரியனுக்கு முக்கோணமாயும் வைசியனுக்கு வட்டமாயும் சூத்திரனுக்கு அர்த்த சந்திரன்போலும் மண்டலம் செய்யவேண்டுமென்று போதாயனர் விதித்தார். ஆதித்தியர்,வசுக்கள், ருத்திரர், பிரமன் இவர்கள் மண்டலத்தினல் ஜீவிக்கிறார்களாகையால் மண்டலம் அவசியம் செய்யவேண்டு மென்று சங்கர் கூறினர். இரண்டுகைகள், இரண்டு கால்கள், வாய், இவ்வைந்தும் ஈரத்துடனிருக்கையில் மௌனமாய்க் கிழக்கு முகமாயிருந்து புசிக்கவேண்டுமென்று வியாசபகவான் அருளிச்செய்தார். எனவே கைகால்களை அலம்பி ஆசமனம்செய்தவுடனே புசிக்கவேண்டுமென்பது சொல்லப்பட்டது.

கிழக்குமுகமாய் ஆசனத்திலுட்கார்ந்து ஒற்றைக் காலினலாவது இரண்டுகால்களினலுமாவது பூமியைத்தொட்டுக்கொண்டு புசிக்கவேண்டுமென்று அசுவமேதபருவம் கூறுகின்றது. பொன், வெள்ளி, வெண்கலம், இவைகளால் செய்த பாத்திரங்களிலாகிலும், தாமரையிலை, முருக்கிலை, இவைகளிலாகிலும் புசிப்பவன் மூன்றுதினம் தீக்ஷையோடு செய்த யாகபலனை அடைகிறான். குற்றமற்ற வெண்கலபாத்திரமொன்றிலேயே யாவனொருவன் புசிக்கிறானோ அவனுக்கு ஆயுள், ஞானம், கீர்த்தி, பலம் இந்நான்கும் விர்த்தி யடையுமென்று பைடீநசி உரைத்தார். தாம்பூலம், அப்பியங்கம், வெண்கல பாத்திரத்தில் போஜநம் இம்மூன்றையும் சன்னியாசி, பிர்ம்மசாரி, விதவை இவர்கள் ஒழிக்கவேண்டுமென்று பிரசேதஸர் கூறினதால் கிருகஸ்தனுக்கே வெண்கலபாத்திரத்தில் போஜனம் தக்கதென்று அறிக. பாத்திரத்தில் புசிப்பதற்குப் பரிமாறின அன்னத்தைநோக்கி அஞ்சலிசெய்து இந்த அன்னம் நமக்கு நித்தியமும் உண்டாகக் கடவதென்று பக்தியோடு சொல்லவேண்டுமென்று பிர்ம்மாண்ட புராணத்தில் கூறப்பட்டது. வியாஹிருதி காயத்திரிகளால் அன்னத்தைப் புரோக்ஷித்து அபிமந்திரித்து "ருதந்த்வா" என்னும் மந்திரத்தால் ராத்திரியிலும், "ஸத்தியந்துவா" என்கிற மந்திரத்தினல் பகலிலும் பரிஷேசநம் செய்து "அமிர்தோபஸ்தரணமஸி" என்று தீர்த்

த்தைப் பிராசனம் செய்து பிராணுதிகளான ஐந்துவாயுக்களுக்கும் ஸ்வாஹாகாரத்தோடு அன்னத்தையெடுத்துத் தனித்தனியே ஓமஞ் செய்யவேண்டுமென்று கோபிலரும், ஆதியில் பிரணவமும், அந்தத்தில், "ஸ்வாஹா" என்னும் சப்தமும், நடுவில் பிராணுதிபதங்களும் சொல்லி ஓமம் செய்யவேண்டுமென்று சௌனகரும் சொன்னுர்கள். ஓமம் செய்யப்படுகிற அன்னத்தின் ரஸத்தை நாக்கு அறியாதபடி சீக்கிரத்தில் விழுங்கவேண்டுமென்று அசுவமேதபருவத்தில் சொல்லப்பட்டது. பிராண வாயுவுக்குப் பெருவிரல் நடு விரல்களோடு சுட்டு விரலைச்சேர்த்தும், அபானவாயுவுக்கு நடுவிரல் பெருவிரல்களோடு பவித்திரவிரலைச்சேர்த்தும், பவித்திரவிரல் சுண்டுவிரல் பெருவிரல் இவைகளால் வியான வாயுவுக்கும், நடுவிரல் பவித்திரவிரல் தவிர மற்ற விரல்களால் உதானவாயுவுக்கும், எல்லாவிரல்களாலும் சமானவாயுவுக்கும் ஆகுதி செய்ய வேண்டுமென்று சௌனகர் கூறினுர்.

பின்பு "அமிர்தாபிதாநமஸி" என்னு மந்திரத்தினுல் பின்னிட்டதான ஆபோசநத்தைச்செய்து வாய்கொப்புளித்துக் கை கால்களை அலம்பி ஆசமநம்செய்து "பிராணுநாம்" என்னும் மந்திரத்தினுல் இதயத்தை மந்திரித்துப் பின்பு ஆசமனம் செய்து "அங்குஷ்ட மாத்திர:" என்னும் மந்திரத்தினுல் வலக்கால் பெருவிரலில் வலதுகையினுல் ஜலத்தைப் பெருகவிட்டு "சிரத்தாயாம் பிராணே" என்னும் மந்திரத்தினுல் ஓமஞ்செய்த அன்னத்தை மந்திரித்து ஆத்துமாவைப் பிர்ம்மத்தினிடத்தில் சேர்ப்பிக்க வேண்டுமென்றும், புசிக்கும்போது அன்னத்தை நிந்திக்காமலும் சிந்தவிடாமலும் பழம், பணியாரம், கிழங்கு மாம்சம் முதலான வஸ்துக்களை முன்னமே சிறுகப்பொடிசெய்தும் புசிக்கவேண்டுமே யல்லது பல்லால் கடித்துப் புசிக்கலாகாதென்றும் அப்படிக் கடித்தபின் அந்தச் சேஷத்தைப் புசிக்கலாகாதென்றும் போதாயனர் விதித்தார். புசிக்கையில் ஆதியில் மதுரமான வஸ்துவையும் பின்பு உப்பு புளிப்பான வஸ்துக்களையும் அதன் பின்பு கைப்பு காரமானவஸ்துக்களையும் புசிக்கவேண்டும். ஆதியில் ஜலம்போல் பெருகும் பதார்த்தங்களைப் புசித்துப் பின்பு கடினமான வஸ்துக்களையும் மறுபடியும் ஜலரூபமான பண்டங்களையும் புசிக்க வேண்டுமென்றும் இப்படி புசிப்பவனுக்குப் பலமும் ஆரோக்கியமும் உண்டாகுமென்றும் விஷ்ணுபுராணம் கூறுகிறது. முனிகள் எட்டுக்கவளமும், வாநப்பிரஸ்தன் பதினுறுகவளமும், கிருகஸ்தன் முப்பத்திரண்டுகவளமும் புசிக்கவேண்டுமென்று ஆபஸ்த

ம்பர் விதித்தார். வாய்கொண்ட கவளத்தில் மிகுந்ததும் வாயிலிருந்து விழுந்ததும் தன் எச்சிலாதலால் அவைகளைப் பக்ஷிக்கலாகாதென்று அசுவமேதபருவம் கூறுகின்றது. அன்னத்தைப் பாத்திரத்தில் மீத்தாதபடி புசிக்கலாகாதென்றும் தயிர், மா, நெய், பழம், பால் தேன், ஜலம் ஆகிய இவைகளை மீத்தாமலே புசிக்கவேண்டுமென்றும் புலஸ்தியர் கூறினர்.

பிராம்மணர் இரவிலும், பகலிலும் புசிக்க வேண்டுமேயன்றி மத்தியகாலத்தில் புசிக்கலாகாதென்றும் இது அக்கினி ஹோத்திரம் செய்வதற்கு ஸமானமென்றும் மத்தியகாலத்தில் புசிப்பதை வேதம் நிஷேதித்ததென்றும் மனு கூறினர். அன்னத்தை உள்ளங்கையில் ஏந்திப் புசிப்பதும் வாயால் ஊதிப் புசிப்பதும் கோமாம்சத்தைப் புசிப்பதோடு சமானமாகுமென்றும், முன் புசித்தது சீர்ணமாகாத சமயத்திலும், தனக்குச் சீர்ணமாகாதவஸ்துக்களையும், அதிகமாகவும் புசிக்கலாகாதென்றும், வாகனத்தில் ஏறியும், அசுத்தமான சுடுகாட்டிலும், தேவாலயங்களிலும், படுக்கையிலும், ஈரவஸ்திரத்தைத் தரித்தும், யக்கியோபவீதமில்லாமலும், காலை நீட்டிக்கொண்டும், கையை ஊன்றியும், ஒற்றை வஸ்திரந் தரித்தும், பாதரக்ஷையைப் பூண்டும், பலர் நடுவில்தானொருவன் அவசரப்பட்டும், புசித்தலும், அன்னத்தைப் புசிக்காமல் வீணாக்கிவிடுதலும் செய்யத்தகாதவைகளென்று பிர்ம்மபுராணத்தில் சொல்லியிருக்கிறது. சூத்திரன் புசித்த சேஷம் பாண்டத்திலிருந்ததேயாகிலும் அதை நீக்கிவிடவேண்டுமென்று ஆதித்தியபுராணம் கூறுகின்றது. ஒருவர் குடித்து மிகுந்ததைக் குடித்தவன் சாந்திராயண விரதத்தால் பரிசுத்தனாகிறானென்றும், கைவிரலின் நகம்பட்ட ஜலத்தைப் பானம்செய்வது கள்குடிப்பதோடு சமானமாமென்றும் மனுசொன்னாரென்று அத்திரியும், ஒருபோஜன கோஷ்டியில் ஒருவன் முதலில் உட்கார்ந்து அனேகர் பார்த்துக்கொண்டிருக்கத் தான்மாத்திரம் அவசரமாக எல்லாருக்கும்முன்னே சாப்பிட்டால் அவன் அந்த வரிசையில் புசிப்பவர்களுடைய பாபத்தை அடைகிறானென்று சாதாதபரும், ஒரு பந்தியில் ஒருவன் போஜநபாத்திரத்தினின்று கையை வாங்கிவிட்டால் மற்றவர் புசிக்கலாகாதென்றும், புசித்தால் சாந்தபனம் என்னும் பிராயச்சித்தம் செய்யவேண்டுமென்றும் கோபிலரும் சொன்னார்கள். ஸ்நாநம் செய்யும்போது பேசினால் வருணன் சக்தியை அபகரிக்கிறான், யக்கியம் செய்யும்போது பேசினால் அக்னிதேவன் சம்பத்தை அபகரிக்கிறான். புசிக்கையில் பேசினால் மிருத்தியு தேவன் ஆயுளை அபகரிக்கிறான். ஆகையால் இந்த மூன்று சம

யங்களிலும் மௌனமாயிருக்கவேண்டுமென்று புராணத்தில் சொல்லியிருக்கின்றது. ஆதியில் பிராணுகுதிசெய்யும் வரையில் மௌனமாகப் புசிக்கவேண்டுமென்று விருத்தமனு கூறினர். உப்பு, காய், கறி, நெய், எண்ணெய், பச்சடி, முதலியவற்றைக் கையால் பரிமாறினுல் புசிக்கக்கூடாதென்று பைடீநசியும், ஒருவித வஸ்துவினுல் மறைக்காமல் நேராக லவணத்தைக் கையால் பரிமாற அதைப் புசித்தவன் கோமாம்சத்தைப் புசித்தவனுகிருனென்று சாதாதபரும் கூறினர்கள். வீட்டுக்குப் புறம்பானவள், சண்டாளன், நாய், கோழி, பன்றி, கழுதை இவைகளை ஒருவன் புசிக்கும்போது பார்த்தால் அந்த அன்னத்தைச் சாப்பிடக்கூடாதென்றும், மயிர், புழு, நூல் இவைகள் கலந்ததும் வாயால் ஊதினதும் ராக்ஷஸபோஜனமாமென்றும், அசுவமேதபருவம் கூறுகின்றது. சண்டாளர், பாபிகள் முதலானவர்களுடைய சப்தத்தைக்கேட்டுக்கொண்டே ஒரு கவளம் புசித்தால் ஒரு நாள் முழுதும் பட்டினியிருக்கவேண்டுமென்று காத்தியாயனரும் அக்கினி, சாம்பல், சிறுசுவர், தூண், ஜலம், வாயிற்படி, வழி இவைகள் குறுக்கேயிருந்தால் பந்தி பேதப்பட்டு ஒரு பந்தியிலிருக்கின்ற பாபிகளுடைய பாபம் மற்றொரு பந்தியிலுள்ளவனைச் சேராதென்று கௌதமரும் சொன்னர்கள். ஆயுளைவேண்டினவன் கிழக்குமுகமாயும், கீர்த்தியைக் கோரினவன் தெற்குமுகமாயும், ஸம்பத்தை வேண்டினவன் மேற்குமுகமாயும், சத்தியபலனை வேண்டினவன் வடக்குமுகமாயும் புசிக்கக்கடவர்களென்று மனுவும், பிதிர் கிரியையில் வடக்குமுகமாகவும், மற்றபோது கிழக்கு அல்லது மேற்குமுகமாகவும் புசிக்கவேண்டுமென்றும், தெற்குமுகமாக ஒன்றும் செய்யக்கூடாதென்றும் கோபிலரும் உரைத்தார்கள். பாபிகளுக்கு ஸ்தானமாகிய ரௌரவமென்னும் நரகத்தில், பத்மம், அற்புதம், என்னும் கணக்குள்ளகாலம் வாசம்செய்கின்ற அர்த்திகளென்னும் பிராணிகளுக்கு என்னுல் கொடுக்கப்படும் இந்த உச்சிஷ்ட ஜலமானது அக்ஷயமாக அவர்களைச் சேரக்கடவதென்னும் பொருளுள்ளமந்திரத்தினுல் உத்தராபோசனம் செய்து மிகுந்த ஜலத்தைவிடவேண்டுமென்று தேவலர் கூறினர்.

தாம்பூலவிதி. நல்லபாக்கு, நல்ல வெற்றிலை, நல்ல சுண்ணும்பு இவைகளை ஏலம் முதலிய பரிமளத்திரவியங்களோடு தேவதைக்கு நிவேதநம்செய்து பிராம்மணருக்குக் கொடுத்துப் பின்பு தான் தாம்பூலத்தைப் புசிக்கவேண்டும். ஒரு பாக்கைப் புசிப்பது சுகத்தையு[ம்] ஆரோக்கியத்தையும் தருவதாம், இரண்டு பாக்கைப் புசிப்பதி[...]

லனில்லை, மூன்று சிரேஷ்டமாம் இதற்கு அதிகம் உத்தமமாமென்றும் வெற்றிலையின் அடியைப் புசித்தால் வியாதியும், நுனியால் பாபமும் சுண்ணும்பு வைத்த வெற்றிலையால் ஆயுள்குறைவும் நடுவிலிருக்கும் நார்களால் புத்தி நாசமும் உண்டாகுமாகையால் இவைகளைத் தள்ளித் தாம்பூலத்தை அங்கீகரிக்கவேண்டுமென்று வசிஷ்டர் அருளிச்செய்தார்.

கிரகணகாலபோஜநவிதி. பகலில் சூரிய கிரகணத்திற்கு முந்தியகாலத்திலும் இரவில் சந்திரகிரகணத்திற்கு முந்தியகாலத்திலும் புசிக்கலாகாது. கிரகணம் விட்டபின் ஸ்நாநம்செய்து புசிக்கலாம். சந்திரகிரகணம் விட்டகாலம் அர்த்தராத்திரியாயிருந்தால் புசிக்கலாகாது. கிரகணத்தோடு சூரிய சந்திரர்கள் அஸ்தமனமாய்விட்டால் மறுநாள் சுத்தமண்டலத்தைப் பார்த்தபின் புசிக்கவேண்டுமென்று வியாசரும் சூரியகிரகணத்தில் கிரகணயாமத்திற்கு முன் நாலு யாமகாலமும், சந்திரகிரகணத்தில் முன் மூன்று யாமகாலமும், பாலர் கிழவர் நோயாளிகள் தவிர மற்றவர்கள் புசிக்கலாகாதென்று விருத்த கௌதமரும், சந்திரன் கிரகணத்துடன் உதயமானல் அதற்கு முந்திய பகலில் புசிக்கலாகாதென்று விருத்த வசிஷ்டரும், கிரகணகாலத்தில் புசித்தவன் பிராஜாபத்திய கிருச்சிரத்தாலும் கிரகண தினத்தில் விலக்கப்பட்ட சமயத்தில் புசித்தவன் மூன்று நாள் உபவாசத்தாலும் சுத்தராகிறூர்களென்று யாக்கியவல்கியரும், சந்திர சூரிய கிரகண தினத்திலும், கடகம், மகரம், துலா, மேஷம் இந்த ராசிகளில் சூரியன் பிரவேசமாகும் காலத்திலும், சத்தோபவாசமிருந்தால் சகல பாதகங்களும் நீங்குமென்று தக்ஷர் கூறிய காமிய உபவாசத்தைப் புத்திரர்களையுடைய கிருகஸ்தன் அநுஷ்டிக்கவேண்டுவதில்லையென்றும், கிரஸ்தாஸ்தமனமானல் உபவாசமிருக்கவேண்டுமென்றும் நாரதரும் கூறினூர்கள். தேசாந்தர கிரகணத்தைப்பற்றி இங்குச் செய்யவேண்டிய தொன்றுமில்லை யென்பது முப்பத்தறுவர் மதம்.

புசித்தபின் செய்யவேண்டியவிதி. புசித்துச் சுகமாக உட்கார்ந்து இதிகாச புராண தர்ம சாஸ்திரங்களை அப்பியசிக்கவேண்டுமென்றும், வீண் வாதங்களைச் செய்யலாகாதென்றும், தக்ஷர் கூறினூர். பின் ஸாயங்கால ஸந்தியாவந்தனத்தையும், ஓமத்தையும் தேவார்ச்சனை வைசுவதேவங்களையும் முடித்து அதிதிகளைப் புசிப்பித்து தானும் புசித்து ஆசமனம்செய்து சயனிக்கவேண்டுமென்று விஷ்ணு புராணத்தில் சொல்லியிருக்கிறது.

சயநவிதி. தன் கிருகத்தில் கிழக்கு திக்காகவும், மாமனார் வீட்டில் தெற்கு திக்காகவும், வழிநடையில் மேற்கு திக்காகவும் தலையைவைத்துச் சயனிக்கவேண்டும், எப்போதும் வடக்குதிக்கில் தலையைவைத்துச் சயனித்தலாகாதென்று கார்க்கியர் சொன்னார். குடியில்லாதவீடு, சுடுகாடு, ஒற்றை மரத்தின் கீழ்,நல்சந்தி ஆகிய இவ்விடங்களிலும், சிவன், சக்தி, யக்ஷர், நாகர், சுப்பிரமணியன், இவர்களது ஆலயங்களிலும், குளக்கரை நிழல், மணல், சுக்காங்கல், புழுதி, தானியம், பசு, பிராம்மணன், ஆசாரியன் இவர்கள் மேலும், தீக்ஷையின்றி ஏகாந்தஸ்தலங்களிலும், ஒடிந்தும் முறிந்தும் அசுத்தமுமாயிருக்கிற படுக்கையிலும், ஈரவஸ்திரத்துடனும், வஸ்திரமில்லாமலும், ஒன்றுமில்லாதவிடத்திலும் சயநித்து நித்திரைசெய்யக்கூடாதென்று மார்க்கண்டேய புராணத்தில் கூறப்பட்டது. ஐந்து மரங்களால் செய்யப்பட்டதும், இடி, நெருப்பு இவைகள் பட்டதுமான கட்டிலிலும், இலைப்படுக்கையிலும், சிறு பிள்ளைகள், நடப்பவர்கள் இவர்கள் நடுவிலும் படுக்கக்கூடாதென்றும், எண்ணெய்த்தலையோடும், சிறு ஜந்துக்கள் நிறைந்த படுக்கையிலும், விரதமில்லாத தினத்தில் மான்தோலிலும் சயனிக்கலாகாதென்றும் விஷ்ணு ஸ்மிருதி விஷ்ணு புராணம் உசநஸ்மிருதி இவைகள் கூறுகின்றன. இவ்விதமாக நாள்தோறும் செய்யத்தக்கவையும் முக்தியைத்தருவனவுமான நித்திய கர்மங்களைச் செய்யத் தவறினவன் நரகத்தை அடைகிறானென்று கூர்மபுராணம் சொல்லுகிறது. (௫௯)

௨௦॥ అవ్రతాహ్యనధీయానా యత్ర భైక్షచరా ద్విజాః।
తం గ్రామం దండయేద్రాజా చౌరభక్తప్రదో హి సః॥

க்ஷத்திரிய தர்மம். (இ-ள்.) எந்த ஊரில் இருபிறப்பாளர் (பிர்ம்மசாரிகள்) விரதங்களை அநுஷ்டிக்காதவர்களும் வேதத்தை ஓதாதவர்களும் பிக்ஷான்னத்தை மாத்திரம் கிரகித்துப் புஜிப்பவர்களுமாயிருக்கிறார்களோ, அந்த ஊர் திருடருக்கு அன்னங்கொடுக்கிற ஊராகையால் அரசன் அந்த ஊரை (ஊரிலிருப்பவர்களை) தண்டிக்கக்கடவன். (எ-று.) (௬௦)

௨௦॥ క్షత్రియో హి ప్రజారక్షన్ శస్త్రపాణిః ప్రదండవాన్।
నిర్జిత్య పరసైన్యాని క్షితిం ధర్మేణ పాలయేత్॥

(இ-ள்.) க்ஷத்திரியன் ஆயுதங்களைக் கையில் ஏந்தித் துஷ்டர்களைச் சிக்ஷித்துச் சத்துரு சேனைகளை ஜயித்துப் பிரஜைகளை ரஞ்சிப்பித்து (தன்னிடத்தில் அன்புள்ளவராகச்செய்து) பூமியைத் தர்மத்தால் பரிபாலநம் செய்யக்கடவன், (எ-று.) (௬...

உஅ॥ పుష్పమాత్రంవిచిన్వీయా న్మూలచ్ఛేదంన కారయేత్।
మాలాకారఇవారామేన యథాంగారకారకః॥

(இ-ள்.) மாலைதொடுப்பவன் பூந்தோட்டத்தில் மரங்களை வளர்த்துப் புஷ்பங்களை மாத்திரம் பறித்துக்கொள்வதுபோல அரசனானவன் (பிரஜைகளை ரக்ஷித்துக்கொண்டு அவர்களிடத்தில் கப்பம் வாங்குவதை) செய்யவேண்டுமேயன்றிக் கரியைச் சுடுகிறவன் வேரைக் களைந்தெடுப்பதுபோல் அவர்களை இம்சிக்கக்கூடாது. (எ-று,)

க்ஷத்திரியன் அந்தந்த வருணங்களைத் தத்தம் நிலைதவறாதவழியில் நிறுத்தவேண்டுமென்றும் நிலைதப்பினவனுக்குச் செய்யும் தண்டனை சரீரதண்டனை (அடிப்பதுமுதல் மரணபரியந்தமானது), அர்த்ததண்டனை (அவன் திரவியங்களை ஒருகணம் முதலாக சகலத்தையும் அபராதமாகக் கிரகித்தல்) என்று இரண்டுவிதமென்றும் நாரதரும், பிதா, மாதா, ஆசாரியன், ஸ்நேஹிதன், பாரியை, புத்திரன், புரோஹிதன், இவர்களில் யாராகிலும் தன்னிலைதவறி நடப்பவர்கள் ராஜாக்களால் தண்டிக்கத்தக்கவர்கள் என்றும், இந்திரன், அக்கினி, யமன், வருணன், வாயு, குபேரன், சந்திரன், சூரியன், இவர்களுடைய அம்சங்களால் ராஜாவைப் பிரமன் சிருஷ்டிக்கிறபடியால் அவன் ஜகத்தை ரக்ஷிப்பதிலும் துஷ்ட நிக்கிரகத்திலும் சக்தியுள்ளவனாகிறான், ஆகையால் அரசன் சிறியவனாயிருந்தாலும் அவனை ஸாதாரண மனுஷியனென்றெண்ணி அலட்சியம் செய்யாமல் தேவதையைப்போல் நினைக்கவேண்டுமென்றும் மனுவும், தண்டிக்கத்தக்கவர்களைத் தருமமாகத் தண்டித்த க்ஷத்திரியன் பரிபூர்ண தக்ஷிணைகளோடுகூடிய அநேகம் யக்கியங்களைச் செய்தவனாகிறான் என்று யாக்கியவல்கியரும் சொன்னார்கள். க்ஷத்திரியன் தன் முக்கிய தர்மமான பிரஜாபரிபாலநத்தை நீதி தவறாமல் செய்துவருணாச்சிரம தர்மங்களைக் கிரமமாக நடத்திவந்தால் அந்தப் பிரஜைகளின் தர்மத்தில் ஆறில் ஒரு அம்சத்தை அடைகிறானென்றும், சத்துருக்களை ஜயிப்பதற்குச் சித்திரை அல்லது மார்கழி மாஸத்தில் அரசன் பிரயாணப்படவேண்டுமென்றும், யுத்தத்தில் ஜயம் கிடைப்பது நிச்சயமல்லாமையால் ஸாம தாந பேதங்களாகிற மூன்று உபாயங்களாலும் வசப்படாத சத்துருவிஷயத்தில் தண்டோபாயமான யுத்தத்தைச் செய்யவேண்டுமென்றும், ஜயித்துவந்து தேவதைகள் பிராம்மணர் தர்மசீலர்கள் இவர்களைப் பூசிப்பதும், இவர்களுக்கு ஆலயப்பிரதிஷ்டைசெய்து ஜீவனத்தைக் கல்பிப்பதும் ஏழைகளுக்கு அபயப்பிரதானம் செய்யவேண்டுமென்றும் பாரதம் சாந்திபருவம் கூறுகின்றது.

உலகத்தில் ஸகல பிராணிகளையும் கொல்வது ஒரு பிராம்மண வத த்திற்குச்சரியாகமாட்டாதாகையால் எவ்வித பாபத்தொழிலையும் செய்த பிராம்மணனைக் கொலை தண்டனைசெய்ய ராஜா மனதினுல் நினைக்கலுமாகாதென்றும் பிராம்மணனுக்கும் ஸ்திரீகளுக்கும் சிரோமுண்டநமே கடினதண்டனை யென்றும் அல்லது அவர்களைச் சகல தநத்துடன் தன்தேசத்தைவிட்டு ஓட்டி விடவேண்டுமென்றும் மனு பிரஹஸ்பதி இவர்களும், நிலையான புத்தியுடையவர்களும் சாஸ்திரங்களை அறிந்தவர்களும் மஹாகுலத்தில் ஜநித்தவர்களுமான மந்திரிகளுடன் எந்தவிஷயத்தையும் அரசன் ஆலோசித்து அதைப்பிராம்மணோத்தமர்களுக்கு அறிவித்து அவர்களுடைய அனுமதிபெற்றுச் செய்யவேண்டுமென்று உசநா என்பவரும் சொன்னூர்கள். (சுஉ

௲௩॥ లాభకర్మతథారత్నం గవాంచపరిపాలనమ్।
కృషికర్మచవాణిజ్యం వైశ్యవృత్తిరుదాహృతా॥

வைசியதர்மப் பிரகாணம். (இ-ள்.) வட்டி வாங்குவதாகிய லாபகருமம், ரத்திநங்களின் கிரயம், விக்கிரயம் இவைகளைச் செய்தல், பசுபரிபாலநம், பயிர்த்தொழில், வர்த்தகத்தொழில் ஆகிய இவைகளே வைசியதர்மங்களென்று சொல்லப்பட்டன. (எ-று.)

பசுபரிபாலநம், தாநம், யாகம், ஓதுதல், வர்த்தகம், வட்டி வாங்குதல், கிருஷி இவைகளைச்செய்தல் வைசியதர்மமென்று மனுகூறினூர். எள், தோல், எண்ணெய் முதலிய ரஸங்கள், பசு, குதிரை, இவைகளை வைசியன் விற்கலாமென்று பாரதம் ஆநுசாஸநிகபருவத்தில் சொல்லப்பட்டது. அன்னம் தவிர மற்ற வஸ்துக்களை வைசியன் விற்கலாமென்பது பாரதம் சாந்திபருவத்தில் ஜாபாலி உபாக்கியாநத்தில் துலாதாரரால் சொல்லப்பட்டது. வைசியனுக்குப் பசு பரிபாலநம், வர்த்தகம், பயிர்த்தொழில் என்னு மிவைகளே ஜீவனோபாயங்கள். வைசிய தர்மத்தை விடாமல் தேவதைகளையும் பிராம்மணர்களையும் பூசிக்கும் வைசியன்தெய்வப்பெண்களால் பூசிக்கப்பட்டு ஸ்வர்க்க போகத்தை அடைகிறுனென்றுபாரதம் அசுவமேதபருவத்தில்சொல்லப்பட்டது.

௲௪॥ శూద్రస్యద్విజశుశ్రూషా పరమోధర్మఉచ్యతే।
అన్యథాకురుతేకించి త్తద్భవేత్తస్యనిష్ఫలం॥

சூத்திர தர்மப்பிரகாணம். (இ-ள்.) பிராம்மணனுக்குப் பணிவிடைசெய்தல் சூத்திரனுக்குச் சிறந்த தர்மம். அதைச்செய்யாமல் வேறு எதைச்செய்தாலும் அது அவனுக்குப் பலனைக்கொடாது.

வேதமோதி யுணர்ந்த பிராம்மணனுக்குச் செய்யும் பணிவிடையே சூத்திரனுக்கு முக்தியைத்தருமென்றும், பரிசுத்தம் பொறுமை அகங்காரமில்லாமை இவை முதலானகுணங்களை யுடையவனாகிப் பிராம்மணனை அடைந்திருக்கும் சூத்திரன் மறுபிறப்பில் உத்தமமான ஜாதியில் பிறக்கிறா னென்றும் மனு கூறினார். ஆசை, பகை, கடுஞ்சொல், இரக்கமின்மை முதலான தாமஸகுணங்கள் சூத்திரனைப் பிறந்தபோதே ஆக்கிரமிக்க அந்தத் தாமஸகுணங்களை ஒழிப்பதற்காகப் பிராம்மணர் பணிவிடையைச்சூத்திரனுக்குப்பிர்ம்மதேவர் கொடுத்தாரென்றும், பிராம்மணபக்தியினால் தாமஸகுணங்கள் நசித்துச் சூத்திரனுக்கு உத்தம கதி உண்டாகுமென்றும் பாரதம் ஆநுசாஸநிகபருவத்திலும், சூத்திரன் தாநத்தையும், கிருகஸ்தனாகிப் பிதிர்சிராத்தாதிகளையும், நமஸ்கார மந்திரங்களைச் சொல்லித் தேவயக்ஞியம் முதலிய பஞ்ச மஹாயக்ஞியங்களையும் செய்யக்கடவனென்று யாக்ஞிய வல்கிய ஸ்மிருதியிலும், பிராம்மணன் தனக்குப் பணிவிடை செய்கிற சூத்திரனுக்கு ஜீவநத்தைக் கல்பிக்கவேண்டுமென்றும், தான் புசித்துச் சேஷமான அன்னம், உடுத்துக் களைந்த வஸ்திரம், குடை, பாதரக்ஷை, விசிறி, தானியம், இவைகளை அவனுக்குக் கொடுக்கவேண்டுமென்றும், இப்படிச் சூத்திரன் பிராம்மணனுக்குப் பணிவிடைசெய்வது முக்கிய தர்மமும், நல்லகதியைப் பெறுவதற்கும் பிழைப்பதற்கும் உபாயமுமாகுமேயல்லது க்ஷத்திரிய வைசியர்களுக்குச் சூத்திரன் பணிவிடை செய்வது சிறந்த தர்மமல்லவென்றும் அது கேவலம் ஜீவனோபாயமாகுமென்றும் மனுஸ்மிருதியிலும் கூறப்பட்டது. (௨௪)

௨௫॥ లవణంమధుతైలంచ దధితక్రంఘృతంపయః।
నదుష్యేచ్ఛూద్రజాతీనాం కుర్యాత్సర్వేషువిక్రయమ్॥

(இ-ள்.) உப்பு, தேன், எண்ணெய், தயிர், மோர், நெய், பால் இவைகளெல்லாவற்றையும் சூத்திரன் விற்கலாம். இந்த வஸ்துக்களை விற்பதினால் பிராம்மணாதிகளுக்குப்போல் சூத்திரனுக்குத் தோஷமில்லை. (எ-று.)

பின்னும் பலவிதங்களாயுள்ள சில்பத்தொழில்களாலும் வர்த்தகத்தினாலும் சூத்திரன் பிழைக்கலாமென்று யாக்ஞியவல்கியர் விதித்தார். உயர்ந்த மூன்று வர்ணத்தாருக்கும் பணிவிடை செய்தல், நிலத்தை உழுதல், பசுக்களைரட்சித்தல், பாரஞ்சுமத்தல், வஸ்துக்களை விற்கல், சித்திரமெழுதுதல், கூத்தாடுதல், பாட்டு பாடுதல், வீணை வா

த்தைக் கொடுத்து அவர்களுக்கும் யக்கிய தீக்ஷையைச் செய்விக்கக் கடவன். (எ-று.)

கிருஷியால் லாபமடைந்த பிராம்மணன் தன் லாபத்தில் பிராம் மணர்களுக்குச் சிலபாகத்தைத் தானங்கொடுத்தால் அவனுக்குக்கிரு ஷியால்வரும்தோஷம் நசிக்குமென்று கூர்மபுராணம் கூறுகின்றது.

౭॥ తిలాన్రసాన్నవిక్రేయా విక్రేయా ధాన్యతస్సమాః।
విప్రస్యైవంవిధావృత్తి స్తృణకాష్ఠాదివిక్రయం॥

(இ-ள்.) எள், தயிர், தேன், நெய் முதலிய ரஸங்கள், இவை களைப் பிராம்மணன் விக்கிரயம் செய்யக்கூடாது. இவைகளை விக் கிரயம் செய்தே ஜீவிக்கவேண்டுமாகில் எள்ளுக்குமாத்திரம் பதிலாக வேறுதானியத்தை மாற்றிக் கொள்ளுவதாகிய விக்கிரயம் செய்யவே ண்டும். பிராம்மணன் பிழைப்பு இவ்விதமானது. உலர்ந்த கட்டை, புல் முதலியவைகளை அவன் விக்கிரயம் செய்யலாம். (எ-று.) (எ)

౭ప॥ బ్రాహ్మణశ్చేత్కృషింకుర్యా న్మహాదోషమవాప్నుయాత్॥

(இ-ள்.) பிராம்மணன் கிருஷியைச் செய்தானேயாகில் உழுவ தினால் ஜந்து ஹிம்ஸை தப்பாமல் வருகிறபடியால் மஹா தோஷத் தை அடைகிறான். (எ-று.) (எ௨)

౮ప॥ సంవత్సరేణయత్పాపం మత్స్యఘాతీసమాప్నుయాత్।
అయోముఖేనకాష్ఠేన తదేకాహేనలాంగలీ॥

(இ-ள்.) ஒருவருஷகாலம் மத்ஸியாதிகளைக் கொல்லுகிறவன் எ ந்தப் பாபத்தை அடைவனோ, இரும்பை முகத்திலுடைய கட்டை யினால் (கலப்பையினால்) உழுகிறவன் அந்தப்பாபத்தை ஒருதினத் தில் அடைகிறான். (எ-று.) (அ௨)

౯ప॥ పాశకోమత్స్యఘాతీచ వ్యాధశ్శాకునికస్తథా।
అదాతాకర్షకశ్చైవ పంచైతేసమభాగినః॥

(இ-ள்.) வலைபோட்டு மிருகங்களைப் பிடித்துஅடிப்பவன், மத் ஸியங்களைக் கொல்பவன், வேடன், பக்ஷிகளைப் பிடித்துக் கொல்ப வன், நெற்களத்தில் தானிய ராசியினிடத்தில் வந்து யாசிப்பவர்க ளுக்கு தானம் செய்யாமல் பயிரிடுபவன், இந்த ஐந்துபேர்களும், பாபத்தில் சமபாகிகள் (சரியானவர்கள்). (எ-று.) (கூ௨)

౧౦ప॥ వృక్షాన్ఛిత్వామహీంభిత్వా హత్వాతుక్రిమికీటకాన్।
కర్షకఃఖలయజ్ఞేన సర్వపాపైఃప్రముచ్యతే॥

(இ-ள்.) மரங்களைக் கலப்பைக்காக வெட்டியும், பூமியைப் பிளந்தும், பூச்சி, புழுக்களைக்கொன்றும் பயிர்செய்பவன் கல யக்ஞியத்தினுல் (களத்தில் தானியதாநத்தினுல்) சகலவித பாபங்களினின்று விடப்படுகிருன். (எ-று.) (௧௦௨)

౧౧ பு॥ యోనదద్యాద్ద్విజాతిభ్యో రాశిమూలముపాగతః।
సచోరస్సచపాపిష్ఠో బ్రహ్మఘ్నంతంవినిర్దిశేత్॥

(இ-ள்.) களத்தில் தானியராசியின் சமீபத்திலிருந்தும் எவன் பிராம்மணர்களுக்குத் தானியத்தைக் கொடுக்கவில்லையோ அவனே திருடன், அவனே மஹாபாபி, அப்படிப்பட்ட பயிரிடுகிறவனைப் பிர்ம்மஹத்தியைச் செய்தவனென்று சொல்லக்கடவர். (எ-று.)

இப்படிக் கலயக்கியம் (ఖలయజ్ఞం) செய்யாமல் கிருஷிகன் (உழுபவன்) பேராசையினுல் ஒரு தானியத்தையாகிலும் சிந்தவிடாமல் வீட்டுக்குக் கொண்டுபோவானுகில் தேவமானத்தினுல் ஆயிரம் வருஷகாலம் தண்ணீர், புல், முதலியவையில்லாத நிலமான மருகாந்தாரத்தில் மரமாக முளைத்துப் பரோபகார ஹேதுக்களான புஷ்ப பலங்களுமில்லாமலிருந்து பின்பு மனிதனுகப்பிறந்து காலவசத்தினுல் தரித்திரனுகவும் நோயாளியாகவும் மூர்க்கனுகவும் ஹீநஜாதியாகவும் ஆகிருனென்று சைவபுராணத்தில் சொல்லப்பட்டது. (௧௧௨)

౧౨ பு॥ రాజ్ఞెదత్వాతుషడ్భాగం దేవానాంచైకవింశకమ్।
త్రింశద్భాగంబ్రాహ్మణానాం కృషింకుర్వన్నదోషభాక్॥

(இ-ள்.) கிருஷியைச் செய்பவன் அரசர்களுக்கு ஆறில் ஒரு அம்சத்தையும், தேவதைகளுக்கு இருபத்தொன்றில் ஒரு அம்சத்தையும், பிராம்மணர்களுக்கு முப்பதில் ஒரு அம்சத்தையும் கொடுத்தால் அவன் கிருஷி தோஷத்தை அடைகிறதில்லை. (எ-று.)

இதுவரையில் பிராம்மணர்களுக்குக் கிருஷி சொல்லப்பட்டது.

౧౩ பு॥ క్షత్రియోపికృషింకృత్వా దేవాన్విప్రాంశ్చపూజయేత్।
వైశ్యశ్శూద్రస్తథాకుర్యాత్ కృషివాణిజ్యశిల్పకమ్॥

(இ-ள்.) க்ஷத்திரியனும் கிருஷியைச்செய்து தேவதைகளையும் பிராம்மணர்களையும் புசிப்பிக்கக்கடவன். அப்படியே வைசியனும் சூத்திரனும் கிருஷி, வர்த்தகம், சிற்பவேலை, இவைகளைச்செய்யக் கடவர்கள். (எ-று.) (௧௫௨)

౧౪ பு॥ వికర్మకుర్వతేశూద్రా ద్విజశుశ్రూషయోజ్ఝితాః।
భవంత్యల్పాయుషస్తేవై నిరయంయాంత్యసంశయమ్॥

(இ-ள்.) பிராம்மணருக்குப் பணிவிடை செய்வதைவிட்டு அதைக்காட்டிலும் விசேஷ லாபத்தைத் தருந்தொழிலான கிருஷியைச் சூத்திரர்கள் செய்தார்களாகில் அவர்கள் அல்பாயுஸை அடைந்தவர்களாகிறார்கள். மேலும் மரித்து நரகத்தை அடைகிறார்கள், இதில் சந்தேகமில்லை. (எ-று.) (கசஉ)

౧౫॥ చతుర్ణామపివర్ణానా మేషధర్మస్సనాతనః॥

(இ-ள்.) இந்தக் கிருஷியைச்செய்வதான தர்மமானது நான்கு வர்ணங்களுக்குமுரியதும் முன் கலியுகத்தில் அநுஷ்டிக்கப்பட்டதுமாகி அனாதியானது. (எ-று.) (கரு)

இதர ஸ்மிருதிகளில்போல் இந்த ஸ்மிருதியிலும் நான்கு வர்ணங்களுடைய தர்மங்களைச் சொன்னவுடனே பிர்ம்மசரியம் முதலிய நான்கு ஆச்சிரமங்களின் தர்மங்களையும் சொல்லவேண்டுமாகிலும் அந்தத் தர்மங்களை வியாஸபகவான் கேள்வி செய்யாமையால் பராசரமுனிவர் அருளிச் செய்யவில்லை. ஆகிலும் அவைகளை யான் இங்குசொல்லுகிறேனென்று உரையாசிரியரான ஸ்ரீமான் மாதவாசாரியர் சொல்லுகிறார்.

பிர்ம்மசரியம், கார்ஹஸ்தியம், வாநப்பிரஸ்தம், ஸந்நியாஸம், என்னும் நான்குவித ஆச்சிரமங்கள் பிராம்மணனுக்கு உரியவைகளென்றும் இவைகள் கார்ஹஸ்திய மென்னும் ஆச்சிரமத்தை ஆதாரமாக அநுஸரித்து நடக்கும் தன்மையுடையவைகளென்றும் ஸ்காந்த புராணத்திலும் மநு ஸ்மிருதியிலும் சொல்லப்பட்டது. உபநயநம் என்னும் ஸம்ஸ்காரத்தைப் பெற்றவன் பிர்ம்மசாரி என்னப்படுவென். பிராம்மம், தைவம் என்னும் இருவகை ஸம்ஸ்காரங்களில் கர்ப்பாதாநாதிகளாகச் சொல்லப்பட்ட உபநயநம் கூடிய ஸம்ஸ்காரங்கள் பிர்ம்மஸம்ஸ்காரம். பிர்ம்மமென்பது வேதம். அதனால் திருத்தப்பட்டவன் பிர்ம்மஸம்ஸ்காரத்தை அடைந்தவன். அவன் ரிஷிகளுடைய ஸாம்மியத்தையும் ஸாயுச்சியத்தையும் அடைகிறான். பாக யக்கியம் முதலியவை தைவஸம்ஸ்காரங்கள். அவற்றை அடைந்தவன் தேவதைகளின் ஸாம்மியத்தையும் ஸாயுஜ்ஜியத்தையும் அடைகிறானென்று ஹாரீதர் சொன்னார். கர்ப்பாதாநம், பும்ஸவநம்,ஸீமந்தோந்நயநம், ஜாதகருமம்,நாமகரணம், அந்நப்பிராசநம்,சௌளம்,உபநயநம், நான்குவேதவிரதங்கள்,ஸ்நானம்,விவாகம்,பஞ்சமகா யக்கியங்கள்,அஷ்டகாசிராத்தம்,அந்வஷ்டகாசிராத்தம்,பார்வணசிராத்தம், சிராவணீ,ஆக்கிரஹாயணீ,சைத்திரீ, ஆசுவயுஜீ என்னும் எழுவிதபாக யக்கியங்

களும் எழு ஹவிர்யக்கியங்களும், எழு ஸோமஸம்ஸ்தைகளும் ஆக நாற்பது ஸம்ஸ்காரங்களென்று கௌதமர் சொன்னார்.

கர்ப்பாதாநப் பிரகரணம். கர்ப்பாதாநந்தொடங்கி சூடா கர்ம மளவாக உள்ள ஸம்ஸ்காரங்கள் பீஜகர்ப்பங்களினால் உண்டான தோஷ நிவிர்த்தியைப் பிரயோஜனமாக உடையவைகளென்றும் பிர்ம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களென்கிற நான்குவர்ணங்களில் இருபிறப்பாளர்களான முந்திய மூன்று வர்ணங்களுக்குக் கர்ப்பாதாநந் தொடங்கி ஸ்மசாந கமநமளவாக உள்ள ஸகல கிரியைகளும் மந்திரபூர்வகங்களென்றும்,கர்ப்பாதாநத்தை ருதுகாலத்திலும், பும்ஸவநத்தை கர்ப்பம் சலிக்கிறதற்கு முன்னும்,ஆறு, அல்லது எட்டாவது மாஸத்தில் ஸீமந்தத்தையும், குழந்தைஜனித்தவுடனே ஜாதகருமத்தையும், பதினோராவது நாளில் நாமகரணத்தையும், நான்காவது மாஸத்தில் குழந்தையைப்பிறந்த வீட்டினின்று மற்றொரு வீட்டிற்கு எடுத்துப் போவதையும், ஆறாவது மாஸத்தில் அன்னப் பிராசநத்தையும், அந்தந்தக்குலத்திற்கேடாகச் சௌளத்தையும் செய்யவேண்டுமென்று யாக்கியவல்கியரும்,ருதுகாலம் ஸ்திரீகளுக்குப் பதினறு தினமென்றும், அதில் முதல் நான்குதிநங்கள்,பதினோராவது பதின்மூன்றாவது நாள்கள் இவைகள் பழிக்கப்பட்டவைகளாகையால் அவைகளைவிட்டு மற்றப் பத்துநாள்களில் ஸ்திரீகளைப் புணரவேண்டுமென்றும் இரட்டித்த நாள்களில் புணர்ந்தால் பிள்ளைகளும் ஒற்றைப் பட்டநாள்களில் புணர்ந்தால் பெண்களும் ஜநிக்கிறார்களென்றும் மனுவும் சொன்னார்கள். ஆகையால் ரஜஸ்வலையான தினந்தொடங்கி முதல் நான்கு தினங்களைத்தள்ளி மற்ற காலத்தில் இரட்டித்த நாள்களில் கர்ப்பாதாநம் செய்து கர்ப்பம் சலிக்கிறதற்கு முன் பும்ஸவநத்தைச் செய்யவேண்டும்.

பும்ஸவநப்பிரகரணம். அந்தக் கர்ப்பம் இரண்டாவது மாசத்திற்குமுன்னமே அசைவுறுமென்று பைஜாவாபரும், இரண்டு அல்லது மூன்றாவதுமாஸத்தில் எந்தப் பகலில் புருஷநக்ஷத்திரத்துடன் சந்திரன் கூடியிருக்கிறானோ அந்தப் பகலில் பும்ஸவநத்தைச் செய்யவேண்டுமென்று பாரஸ்கரரும் சொன்னார்கள். புருஷநக்ஷத்திரங்கள் ஹஸ்தம் முதலிய சிலவென்று சோதிடசாஸ்திரம் சொல்லுகிறது.

ஸீமந்தோந்நயநப் பிரகரணம். மூன்றாவதுமாஸத்தில் ஸீமந்தத்தைச் செய்யவேண்டுமென்று லோகாக்ஷியும், முதல் கர்ப்பத்தில் நான்காவதுமாஸம் ஸீமந்தகாலமென்று ஆபஸ்தம்பரும், நாலு அல்லது ஐந்து அல்லது ஆறு இந்த மாஸங்கள் ஸீமந்தகாலமென்று பைஜா

சித்தல், மத்தளங்கொட்டுதல் முதலியவைகளைச் சூத்திரன் செய்யலாமென்று தேவலர்கூறினர். (சுரு)

௬௬॥ విక్రీణన్మద్యమాంసాని హ్యభక్ష్యస్య చభక్షణమ్।
కుర్వన్నగమ్యాగమనం శూద్రః పతతితత్క్షణాత్॥
௬௭॥ కపిలాక్షీరపానేన బ్రాహ్మణీగమనేనచ।
వేదాక్షరవిచారేణ శూద్రస్యనరకంధ్రువమ్॥

(இ-ள்.) பனை, பலா, முந்திரி, பேரீச்சம், தென்னை, முதலிய மரங்களிலும் திராக்ஷை இலுப்பைப்பூ முதலிய வஸ்துக்களிலும் உண்டாகும் மத்தியத்தையும் மாம்ஸத்தையும் விக்கிரயிப்பது, கோமாம்ஸம்முதலிய பக்ஷிக்கத்தகாத வஸ்துக்களைப் பக்ஷிப்பது,புணரத்தகாத மாதரைப் புணருவது,இவைகளினல் சூத்திரன் பாபியாகிருன்.() காராம் பசுவின் பாலைக்குடித்தலாலும், பிராம்மண ஸ்திரீயைப் புணர்தலாலும், வேதாக்ஷரங்களை விசாரித்தலாலும், சூத்திரன் நரகத்தை அடைகிருன். (எ-று.) (சுசு, சுஎ)

முதல் அத்தியாயம் முற்றிற்று.

இரண்டாவது அத்தியாயம்.

அவதாரிகை. முதல் அத்தியாயத்தில் நான்கு வர்ணத்தாருடைய ஸாதாரணதர்மங்களையும் அஸாதாரண தர்மங்களையும் வியாஸர்கேட்க ஸ்ரீபராசரர் ஸாதாரண தர்மத்தைச் சுருக்கியும் அஸாதாரண தர்மத்தை விஸ்தரித்தும் சொல்லி இந்த இரண்டாவது அத்தியாயத்தில் முன் சுருக்கிச்சொன்ன ஸாதாரண தர்மத்தை விஸ்தரித்துச் சொல்லுகிருர். முதலத்தியாயம் மறுமைக்குத் தக்கவைகளான தர்மங்களைச் சொல்விற்று. இரண்டாவது அத்தியாயம் இம்மைக்குரிய ஜீவனேபாயம் முதலானவைகளைச் சொல்லுகிறதென்னவுமாம்.

௧ பு॥ అతఃపరంగృహస్థస్య కర్మాచారంకలౌయుగే।
ధర్మంసాధారణంశక్త్యా చాతుర్వర్ణ్యాశ్రమాగతమ్॥
తంప్రవక్ష్యామ్యహంపూర్వం పరాశరవచోయథా॥

(இ-ள்.) நான்கு வர்ணத்தாருடைய ஸாதாரண தர்மங்களைச் சுருக்கிச் சொன்னபின்பு கலியுகத்தில கிருகஸ்தனுடைய தொழிலாயும், தர்மமான ஆச்ரமமாயும், பிர்ம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களு

க்கும் கிருகஸ்தாச்சிரமத்தைப்பற்றி வந்ததாயுமுள்ள ஸாதாரணதர்மத்தை (கிருஷியாகிய ஜீவனோபாயத்தை) முன்விருத்த பராசரர் வசநத்தை அநுசரித்து என் சக்திக்கீடாகச் சொல்லுகிறேன் என்கிறார் பராசரர். (எ-று.)

கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் ஆகிய இந்தயுகங்களில் வைசியனுக்கே பயிர்த்தொழில் தர்மமா யிருந்ததைப்பற்றிக் கலியுகத்தில் எல்லாருக்கும் பயிர்த்தொழில் தர்மஜீவனமென்பதற்காகக் கலியுகத்தில் என்றார். பிர்ம்மசாரி வாநப்பிரஸ்தன் சன்னியாசி இவர்களுக்குப்பயிர்த்தொழிலில் அதிகாரமில்லை யென்பதற்காகக் கிருகஸ்தனுக்குத்தொழிலாயும் என்றார். யாகம் செய்வித்தல் முதலியதர்மங்கள் இந்தக்கலியில் பூர்ணஜீவனோபாய மல்லாமையைப்பற்றிச் சாஸ்திரம் பயிர்த்தொழிலைப் பிராம்மணனுக்கு ஜீவனோபாயமாகவிதித்தமையால் தர்மமான ஆசாரமாயுமென்றார். முன் விருத்த பராசரர் வசநத்தை அநுசரித்து என்றதினால் முன் கல்பத்தில் கலியுகதர்மமாகப் பயிர்த்தொழிலைப் பராசரர்விதித்திருப்பது சொல்லப்பட்டது. பெரியோர்கள் விஷயத்தில் விநயத்தைச்செய்ய வேண்டுமென்னும் ஆசாரத்தை வியாஸருக்குத் தெரிவிப்பதற்காக என் சக்திக்கீடாக என்று சொல்லப்பட்டதே யன்றித் தனக்கு வல்லமையில்லாமையாலன்று. (கஉ)

அ॥ షట్కర్మసహితోవిప్రః కృషికర్మచకారయేత్॥

(இ-ள்.) மூன் அத்தியாயத்தில் சொன்ன யாகம்செய்தல் முதலிய அறுவகைத்தொழில், ஸந்தியாவந்தனாதிகள், இவைகளோடு கூடின பிராம்மணன் சூத்திரர்களால் கிருஷியை (பயிர்த்தொழிலை) செய்விக்கக்கடவன். (எ-று.)

வைசியவிருத்தியால் ஜீவிக்கிற பிராம்மணன் அல்லது க்ஷத்திரியன் கிருஷி வைசியதர்மமாயிருந்ததே யாகிலும் ஜீவ ஹிம்சையைத் தருவதாகையால் அதை விடக்கடவரென்றும் கிருஷியைச் சிலர் நல்ல் விருத்தி என்று எண்ணினபோதிலும் அதில் இரும்பை நுனியில் உடைய கலப்பை பூமியையும், பூமியில் இருக்கும் ஜந்துக்களையும், கொல்லுகிறதாகையால் அந்த விருத்தி பெரியோர்களால் பழிக்கப்பட்டதென்றும் மனு ஸ்மிருதியில் சொன்னது பிராம்மணன் தானாக உழுவதைப்பற்றியது. அந்த ஸ்மிருதியில் தன் விருத்தியாலும் க்ஷத்திரியவிருத்தியாலும் ஜீவிக்கமாட்டாத பிராம்மணன், கிருஷி, பசு பரிபாலனம் இவைகளாகிய வைசியவிருத்தியால் ஜீவிக்கக்கடவனென்று சொன்னது உழச்செய்விப்பதைப் பற்றியது. பிரா

ம்மணன் தானுவது உழுதுபயிர்செய்யக்கடவன், வர்த்தகமாவது செய்யக்கடவன், வட்டியால் ஜீவிக்கக்கடவனல்லன். அது பாபவிருத்தி என்று கூர்மபுராணத்தில் சொன்னது பிராம்மணனுக்கு உழவை விதிப்பதற்கன்று. வட்டியால் ஜீவிப்பதை நிஷேதிக்கவந்ததென்று அறிக. ஆபத்திலும் பிராம்மணன் வட்டியால் ஜீவிக்கக் கடவனல்லனென்று இதற்கு நிதர்சனமாக நாரதரும் சொன்னார். வட்டி வாங்குவதையும் உழவு வர்த்தகம் இவைகளைச் செய்வதையும் பிராம்மணன் ஆபத்துக்காலத்தில் தானேசெய்யலாம், அதனால் அவன் பாபத்தை அடைகிறதில்லை என்கிற பிரஹஸ்பதி வசநத்திற்கு அர்த்தமென்னவெனில், பிராம்மணன் கிருஷியைச் செய்விப்பதும் அதற்குச் சக்தியில்லாதவன் கிருஷியைத்தானே செய்வதுமாகிய இந்த இரண்டும் ஆபத்திலேசெய்யும் தர்மமேயன்றிப் பிராம்மண தர்மமாகாதென்பதே. யாகம் செய்வித்தல் முதலிய தர்மங்களே இவனுக்கு ஜீவனோபாயங்கள். இதனால் அல்பமான ஆபத்தில் பிராம்மணன் கிருஷியைச் செய்விக்கவேண்டுமென்பதும், மிகவும் ஆபத்தை அடைந்த பிராம்மணன்தானே உழுது பயிர்செய்யவேண்டுமென்பதும் கிருதாதி யுகங்களில் பயிர் செய்விப்பது பிராம்மணனுடைய ஆபத்தர்மமென்பதும், கலியுகத்தில் தானேபயிர்செய்வது பிராம்மணனுடைய ஆபத்தர்மமென்பதும் சொல்லப்பட்டது. (௨)

3॥ క్షుధితంతృషితంశ్రాంతం బలీవర్దంనయోజయేత్।
హీనాంగంవ్యాధితంక్లీబం వృషంవిప్రోనవాహయేత్॥

(இ-ள்.) பசியுடையதும், தாகமுடையதும், இளைப்படைந்ததும், கால்இல்லாததும், வியாதியை அடைந்ததும், நபும்ஸகமானதும், இவ்விதமான எருதைப் பிராம்மணன் கலப்பையில்கட்டி ஓட்டுவிக்கக்கடவனல்லன். (எ-று.) (௩)

௪॥ స్థిరాంగంనీరుజంతృప్తం సునర్దంషండవర్జితం।
వాహయేద్దివసస్యార్ధం పశ్చాత్స్నానంసమాచరేత్॥

(இ-ள்.) கால் முதலான அங்கங்களில் ஊனமில்லாததும், வியாதியற்றதும், பசி தாகங்களில்லாமல் திருப்தியடைந்ததும், நன்றாகக்கொழுத்ததும், புருஷத்தன்மையை யுடையதும், இவ்விதமான விருஷபத்தைப்பாதி பகலளவும் (இரண்டுயாமகாலம்) ஏர்கட்டி ஓட்டுவித்துப் பின்பு அந்த எருதை ஸ்நாநம் செய்விக்கவேண்டும்.

இப்படிப் பிராம்மணன் எருதுகளை ஸ்நாநம்செய்வித்து அலங்கரித்த பிறகு பிராம்மணர்களுக்குப் போஜநம்செய்விக்கவேண்டுமென்

று ஹாரீதர்சொன்னார். கலப்பையில்கட்டப்பட்ட எருதுகளை அதட்டியே ஓட்டவேண்டும், அல்லது இலைகளோடு கூடிய சிறிய கிளைகளால்லாவது ஓட்டலாம். தடி, பெரியதடி, கயிறு, இவைகளால் அடித்து ஓட்டலாகாது. பசிதாகங்களால் வருந்துகிறதும், கண்முதலிய இந்திரியங்களில் ஊனமாயிருப்பதுமான எருதைக்கட்டி உழவுசெய்விக்கலாகாது. எருதுகள் திருப்தி அடைந்தபின் தான் புசித்து அவைகள் தண்ணீர் குடித்தபின் தான் தாகத்தைத்தீர்த்துக்கொள்ளவேண்டும். எந்த மூடன் எருதினுடம்பில் ரக்தம் வடியும்படி அடிக்கிருனோ அவனுக்குச் சிசுஹத்திதோஷம் ஸம்பவிக்குமென்று பாரதம் அசுவமேதபருவத்தில் சொல்லப்பட்டது. (௪)

௫॥ జప్యందేవార్చనంహోమం స్వాధ్యాయంచైవమభ్యసేత్।
ఏకద్విత్రిచతుర్విప్రాన్ భోజయేత్స్నాతకాన్ద్విజః॥

(இ-ள்.) உழவுசெய்த எருதுகளை ஸ்நாநம் செய்வித்தபின் எருதுகளைச் சிரமப்படுத்தின தோஷநிவிர்த்திக்காக ஜபம், தேவபூஜை, ஹோமம், வேதமோதுதல், இவைகளில் எதாவதொன்றைப் பிராம்மணன் செய்து ஒருவர் அல்லது இருவர் அல்லது மூவர் அல்லது நால்வராகிய ஸ்நாதகப்பிராம்மணர்களைப் புசிப்பிக்கவேண்டும்.

ஸ்நாதகர்களென்றால் ஒன்பது வகையினரானபிக்ஷுகர்கள். அவர்கள் ஸந்தானத்தைக் கோரித்தன் விவாகத்திற்கு வேண்டிய திரவியங்களை யாசிப்பவன், தன்னுடைய சகல வஸ்துவையும் யக்ஞயத்தில் தக்ஷிணையாகக் கொடுத்து ஏழையாகிப் பொருளையாசிப்பவன், யாகம் செய்யப்போகிறவனும் யாசிப்பவன், வழி நடப்பவன், ஆசாரியனுடைய பணிவிடைக்குரிய பொருளை யாசிப்பவன், தாயின் பணிவிடைக்கு வேண்டும் பொருளை யாசிப்பவன், தந்தையின் பணிவிடைக்கு வேண்டும் பொருளை யாசிப்பவன், வேதமோதுதல் ஓதுவித்தல் இவைகளுக்குவேண்டும் பொருளையாசிப்பவன், வியாதியால் வருந்துகிறவன் ஆகிய இவர்களேயென்று மனுகூறினார். (௫)

௬॥ స్వయంకృష్టేతథాక్షేత్రే ధాన్యైశ్చస్వయమార్జితైః।
నిర్వపేత్పంచయజ్ఞాంశ్చక్రతుదీక్షాంచకారయేత్॥

(இ-ள்.) பிராம்மணன்தான் உழுது பயிர்செய்த நிலத்தில் விளைந்த தானியங்களாலும் அன்னியர் உழுது பயிர்செய்த நிலத்தில் விளைந்து தான் சம்பாதித்து வந்த தானியங்களாலும் பஞ்சமகா யக்கியங்களையும், தானே யக்கியத்தில் தீக்ஷையையும் செய்துகொள்வதுமன்றி யக்கியம் செய்ய விருப்ப முடையவர்களுக்குத் தானிய

(இ-ள்.) அந்நிய தேசத்திய அரசனால் தன் தேசத்திற்குத் துன்பம் உண்டாயிருக்கையிலும் தீர்த்தயாத்திரை முதலிய காரணங்களால் தேசாந்தரம் சென்றிருக்கையிலும் ஜ்வரம் முதலிய வியாதியோடிருக்கையிலும் யஜமானனுடைய வேலைகளைச் செய்யத் தனக்குச் சிரமமுண்டாயிருக்கையிலும் ஒருவன் தன்னையும் தன் புத்திர களத்திராதிகளையும் கீழ்ச்சொன்ன சுத்திவிஷயங்களை விசாரிக்காமலே ரக்ஷித்து ஆபத்து ஒழிந்தபின் சாஸ்திரத்தில் சொல்லிய தர்மத்தை அநுஷ்டிக்கக்கடவன். (எ-று.) (ருசு)

3௪ ॥ యేనకేనచధర్మేణ మృదునాదారుణేనవా ।
ఉద్ధరేద్దీనమాత్మానం సమర్థోధర్మమాచరేత్ ॥

(இ-ள்.) சுசியான திரவியத்தினால் செய்யப்பட்ட தர்மம் மிருது என்னப்படும். அப்படியல்லாமல் வியாதிபீடையில் மூலைப்பாலைக்குடிப்பது, மாம்ஸத்தைப் புசிப்பது முதலியவைகளால் செய்யப்பட்ட தர்மம் (தாருணம்) குரூரமென்னப்படும். இவ்விரண்டில் ஏதேனுமொருவித தர்மத்தினால் வியாதிமுதலியவைகளால் ஹீநதசையை அடைந்திருக்கிறவன் தன்னை உத்தாரணம்செய்து வியாதிமுதலிய துன்பங்கள் நீங்கிச் சுகமடைந்தபின் தர்மத்தைச் செய்யக் கடவன். (எ-று.)

தர்மமாவது ஆசாரகாண்டத்தில் சொல்லியபடி தனக்கு விதித்தவைகளைச் செய்து விலக்கியவைகளைச் செய்யாதொழிவது ஒருவித தர்மமென்றும், பிராயச்சித்தகாண்டத்தில் சொல்லியபடி விலக்கியவைகளைச் செய்ததற்கும் விதித்தவைகளைச் செய்யாததற்கும் செய்யத்தக்கவைகளான பிராயச்சித்தங்களைச் செய்வது ஒருவித தர்மமாகுமென்றுமறிக. (ருஎ)

3ரு ॥ ఆపత్కాలేసముత్తీర్ణే శౌచాచారంతుచింతయేత్ ।
శుద్ధింసముద్ధరేత్పశ్చాత్స్వస్థోధర్మంసమాచరేత్ ॥

(இ-ள்.) புருஷனானவன் ஆபத்காலம் கடந்தபின் ஆசார காண்டத்தில் சொல்லிய சௌசாசாரங்களைச் செய்யும்படி சிந்திக்கக்கடவன். பின்பு பிராயச்சித்தகாண்டத்தில் சொல்லப்பட்ட சுத்தியைச் செய்து தன்னை ரக்ஷித்துக்கொள்ளக்கடவன். கீழ்ச்சொன்ன இரண்டுவித தர்மத்தையும் நோய் முதலிய துன்பமற்றவனாகச் செய்யக் கடவன். (எ-று.)

வாப்ரும், ஏழாவதுமாஸம் ஸீமந்தகாலமென்று ஸாங்கியாயந க்ருஹ்ய த்திலும்,கர்ப்பம் அசைவுற்றகாலந்தொடங்கிப்பிரஸவமாவதற்குமுன் வரையில் ஸீமந்தகாலமென்று சங்கரும் சொன்னார்கள்.கீழ்ச்சொன்ன காலங்கள்விகல்பங்களாகையால் எந்தக்காலத்திலாவது செய்யலாமெ ன்பதுகருத்து. இந்தஸீமந்தோந்நயநமானது க்ஷேத்திர ஸம்ஸ்காரம் (கர்ப்பிணியைச்சுத்திசெய்வது).ஆகையால் இதுஒருதரமே இருபிறப் பாளனுடைய கர்ப்பிணிக்குச் செய்யவேண்டியதேயன்றி இரண்டா வது கர்ப்பம்முதலிய கர்ப்பங்கள்தோறும் செய்யத்தக்கதன்றென்று ஹாரீதரும், ஒரு கர்ப்பத்தில்இந்த ஸீமந்தமென்னும் ஸம்ஸ்காரத்தை ப்பெற்றவள் ஸகல கர்ப்பங்களிலும் பெற்றுக்கொண்டவள் தானெ ன்று தேவலரும் சொன்னார்கள். விஷ்ணு ஸ்மிருதியில் ஸீமந்தோந்ந யநமென்பது கர்ப்பத்தைப்பற்றிய ஸம்ஸ்காரமாதலால் இதைக் கர்ப் பங்கள்தோறும் செய்யக்கடவர்களென்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரண்டுபக்ஷங்களையும் தாங்கள் அநுஷ்டிக்கிற ஸூத்திர பிர யோகத்தில் சொல்லியபடிஅறிந்து செய்யவேண்டும். ஸீமந்தம் செய் வதற்குமுன் பிரஸவித்தவள் அந்தச் சிசுவுடன் சாஸ்திரமுறைப்படி ஸீமந்தத்திற்குரியவளாகிறாளென்று ஸத்திய விரதர்சொன்னார்.

ஜாதகர்மப்பிரகரணம். குழந்தை ஜநித்தவுடனே ஜாதகர்மம் செய்யத்தக்கதென்று யாக்கியவல்கியரும், அதுவும் ஸ்நாநம்செய்து செய்யத்தக்கதென்றும்,புத்திரன் ஜநித்தவுடனே பிதா ஸசேலஸ்நா நம் செய்யவேண்டுமென்றும் ஸம்வர்த்தரும்சொன்னார்கள். தொப்புள் அறுப்பதற்குமுன் ஜாதகர்மத்தைச் செய்யவேண்டுமென்றும், தேன் நெய் இவைகளை ஸ்வர்ணத்தினால் கலக்கி மந்திர பூர்வகமாகக் குழந் தையைக் குடிப்பிக்கவேண்டுமென்றும் ஹாரீதர்சொன்னார். ஸ்நாநம் செய்தபின் தொப்புள் அறுப்பதுவரையில் பிதாவுக்குத் தீட்டு இல்லா மையால் அப்போது மந்திரங்களைச்சொல்லி ஜாதகர்மத்தைச்செய்யப் பிதாவுக்கு அதிகாரமுண்டென்றும் தொப்புள்கொடியை அறுத்தபின் தீட்டென்றும் அதற்குமுன் புத்திரஜன்மகாலத்தில் சிராத்தத்தை ஹி ரணியத்தால் செய்யவேண்டுமென்றும் ஜைமிநிஸ்மிருதி விஷ்ணு தர்மோத்தரம் இவைகள் சொல்லுகின்றன. திரவியமும்,பிராம்மணர்க ளும் கிடையாதகாலத்திலும், தேசாந்தரம்போயிருக்கையிலும், புத்தி ர ஜனனத்திலும், தன் பாரியை ருதுவாயிருக்கையிலும் ஹிரணிய சிராத்தம் செய்யவேண்டுமென்று வியாஸபகவான் அருளிச்செய்தார். அந்நசிராத்தம் செய்தால் அதைப் புசிப்பவர்களுக்குச் சாந்திராயணத் தால் சுத்தியாகையால் ஹிரணிய சிராத்தம் விதிக்கப்பட்டதென்

றும் இருபிறப்பாளனாகிய ஒருவனுக்குப் புத்திரன் ஜநித்தால் அங்கு தேவர்களும் பிதிர்க்களும் வருகிறார்களாகையால் அந்தப்புண்ணியகாலத்தில் ஸகலதானங்களையும் செய்யவேண்டுமென்றும் ஆதித்திய புராணம்சொல்லுகிறது. ஜாதகர்ம காலந்தவிரப் பின்னிட்டும் வேண்டிய தானங்களைச் செய்யலாமென்றும் தானம் செய்பவனுக்கு அந்தக்காலத்தில் தீட்டில்லை என்றும் சங்கர்சொன்னார்.

நாமகரணம். பத்தாவது பனிரண்டாவது நாள்களிலாவது புண்ணியமான திநத்திலாவது சுப முகூர்த்தத்திலாவது சுபகுணங்களோடுகூடிய நக்ஷத்திரத்திலாவது நாமகரணத்தைச் செய்யவேண்டுமென்று மனுஸ்மிருதியும், பத்தாவதுநாளில் சிசுவுக்குப் பிதாவே நாமகரணத்தைச் செய்யக்கடவனென்று விஷ்ணுபுராணமும் சொல்லுகின்றன. பிதாஇல்லாதபக்ஷத்திலும் இருந்து அசக்தனான பக்ஷத்திலும் அன்னியனைக்கொண்டு செய்யலாமென்றும்,குலதேவதை நக்ஷத்திரம் இவைகளின் ஸம்பந்தத்தைத் தோற்றுவிப்பதான நாம தேயத்தை இடவேண்டுமென்றும் சங்கர்சொன்னார். பத்தாவதுநாள் அல்து பனிரண்டாவதுநாள் ராத்திரியில் சிலரும் ஒரு மாஸமானபின்பு சிலரும் பதினெட்டாவது நாளில் சிலரும் நாமகரணத்தை விதிக்கிறார்களென்று பவிஷியத் புராணமும், பிராம்மணனுக்குப் பேரில் மங்களமும்,க்ஷத்திரியனுக்குப்பேரில் பலமும் வைசியனுக்குப்பேரில் தனமும்,சூத்திரனுக்குப்பேரில் அடிமையுந் தோற்றவேண்டுமென்றும் ஸ்திரீகளுக்கானால் சுகமாகச் சொல்லத்தக்கதும் இன்பமானதும் மனதைத்திருப்திசெய்வதும் அர்த்தம் பிரகாசமானதும் கடைசியெழுத்து நீண்டதுமான பேரையிட வேண்டுமென்றும் மனு ஸ்மிருதியும் சொல்லுகின்றன. அதாவது ஸ்ரீசர்மா,விக்கிரமபாலன், மாணிக்கச்சிரேஷ்டி, அஹீநதாஸன்,யசோதாதேவீ யென்று இவ்விதமாகக்கண்டுகொள்க. இப்படி ஒருஎழுத்துமுதல் எத்தனை எழுத்துக்களாலும் பேரிடலாமென்று பைஜாவாபர்சொன்னார். இவ்விதமாக நாமகரணம்செய்தால் அந்தக் குலம் நன்றாகவும் சுசியாகவும் விளங்குமென்பது கருத்து.

குழந்தையைப் பிரஸவகிருகத்தினின்று வேளியே எடுத்துவருவது. நாலாவதுமாசத்தில் குழந்தையை வெளியே எடுத்துவரவேண்டுமென்று மனுவும், மூன்றாவதுமாஸத்தில் சூரியனையும் நான்காவது மாஸத்தில் சந்திரனையும் சிசு பார்க்கவேண்டுமென்று யமமுனிவரும்,மூன்றாவதுமாஸத்தின் மத்தியபாகத்தில் சூரியனைப்பார்க்கவேண்டுமென்று லோகாக்ஷியும், பிறந்த பனிரண்டாநாள் சிசுவை

வெளியில் கொண்டுவரவேண்டுமென்று ஆதித்திய புராணமும், நான்காவது மாஸத்தில் சிசுவை வெளியில் கொண்டுவரவேண்டு மென்று வேறு சிலரும் சொன்னார்கள். இது விஷயத்தில் முன்னோர்கள் நடத்திய சாஸ்திரமுறையே பிரமாணமாம்.

அந்நப்பிராசநப் பிரகரணம். ஆறுவதுமாஸத்தில் அல்லது எட்டாவதுமாஸத்தில் குழந்தைக்கு அந்நப்பிராசநம் செய்ய வேண்டுமென்று மனுவும், ஒரு வருஷத்தில் அல்லது அரை வருஷத்தில் அந்நப்பிராசனம் செய்யவேண்டுமென்று சங்கரும், ஆறுவதுமாசத்தில் அல்லது பல் முளைத்தவுடனே அந்நப்பிராசநம் செய்யவேண்டுமென்று லோகாக்ஷியும் சொன்னார்கள். தேவதா ஸந்நிதானத்தில் சிசுவை தாயானவள் தன் மடியில் உட்காரவைத்து அதை அலங்கரித்துத் தங்கப்பாத்திரத்தில் தேன் நெய் ஸ்வர்ணங்களோடுகூடிய பாயஸத்தை அந்தச் சிசுவுக்கு ஊட்டிப் பின்பு அவள் தன்மடியினின்று பாலகனைக் கீழே விடக்கடவள் என்று விஷ்ணு சொன்னார். பின்பு அந்தப் பாலகன் எதிரில் சில்பிகளால் செய்யப்பட்ட பாத்திரங்கள், ஆயுதங்கள், வஸ்திரங்கள், புத்தகங்கள் முதலியவைகளைவைத்து எதை முதலில் பாலகன் தானாகத்தொடுகிறானோ அது மூலமாய் அவனுக்கு ஜீவனமென்று அறியவேண்டுமென மார்க்கண்டேயர் சொன்னார்.

சூடாகர்மப் பிரகரணம். ஒரு வருஷம்பூர்ணமான பின்பாவது இரண்டு அல்லது மூன்றுவது வருஷங்களிலாவது வேதத்தில் விதிக்கப்பட்டதாகிய சூடாகர்மத்தை (குழந்தைக்குத் தலைமயிர் கழித்தலைச்) செய்யலாமென்று யமமுனிவரும் அதை மூன்றுவது வருஷத்தில் செய்யலா மென்று பைஜாவாபரும், மூன்றில் அல்லது ஐந்தாவது வருஷத்தில் செய்யலாமென்று சங்கரும், மூன்றுவது வருஷத்தில் அதிகபாகம் சென்றபிறகு செய்யலாமென்று லோகாக்ஷியும், மூன்றுவது வருஷத்தில் குலாசாரப்படி செய்யவேண்டுமென்று ஆசுவலாயநரும் சொன்னார்கள். வசிஷ்டர் ஸந்ததியார் வலதுபக்கத்தில் குடுமியையும், அத்திரி, காசியபர் இவர்களுடைய வம்சத்தார் இரண்டுபக்கத்திலும்குடுமியையும் அங்கிரசு சந்ததியார் ஐந்துகுடுமியையுந்தரிப்பார்களென்றும், பிருகுகுலத்தார்மயிர்களை யெல்லாம் களைந்துவிடுவரென்றும் பின்னும்சிலர் பிறையைப்போல் குடுமியைத்தரிப்பார்களென்றும் அல்லது அவரவர் குலாச்சாரப்படி குடுமியைத் தரிப்பார்களென்று லோகாக்ஷிசொன்னார். உபநயனமாவதற்குமுன் இது புசிக்கத்தக்கது, இது புசிக்கத்தகாதது என்கிற நியமம் முதலியவைகளில்லாமல்பிராம்மணாதி மூன்றுவர்ணத்திய பிள்ளைகள் சூத்திரன்போல்

இருந்தாலும் தோஷமில்லை. ஆகிலும் அவர்கள் மஹாபாதகங்களைத் தருவனவாகிய போஜநாதிகளைச்செய்யலாகாது. மல மூத்திர விஸர்ஜனத்திலும் அவர்கள் ஆசமனம் செய்யவேண்டியதில்லை. ஆனால் தம்முடைய மாதா பிதாக்கள் மரணமடைந்தால் அவர்களுக்குத் தகனமுதல் ஸபிண்டீகரணம் வரையிலும் உள்ள கிரியைகளைமாத்திரம் மந்திரத்தைச்சொல்லி உபநயனமாகாத பிள்ளை செய்யலாமேயன்றி வேறுவிஷயத்தில் அவன் வேதத்தைச்சொல்லக்கூடாதென்று கௌதமர்சொன்னார்.

வித்தியாரம்பப் பிரகரணம். பிள்ளைக்கு ஐந்தாவது வருஷத்தில் விஷ்ணு தூங்காமலிருக்கும்போது, அதாவது ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, தவிர மற்ற மாதங்களில் ஷஷ்டி, பிரதமை, அஷ்டமி, சதுர்த்தி, நவமி, சதுர்த்தசி யாகிற ரிக்தை, அமாவாசியை பருவம் இந்தத் திதிகளையும், சனி, செவ்வாய் இந்தக் கிழமைகளையும் விட்டு நிச்சயித்த வேறுநல்லநாளில் வித்தியாரம்பஞ் செய்விக்கவேண்டுமென்றும் ஆதியில் விஷ்ணு, லக்ஷ்மி, சரஸ்வதி இவர்களையும் பின்பு தன் வித்தைக்குரிய தேவதையையும், அந்த வித்தையையும் உத்தேசித்து அவரவர்கள் நாமங்களைச்சொல்லி நெய்யால் ஆகுதிகளையும் தக்ஷிணைகளால் பிராம்மணபூஜையையும்செய்து கிழக்கு முகமாகக் குருவானவர் உட்கார்ந்து மேற்குமுகமாகப் பாலகனை உட்காரவைத்துப் பிராம்மணோத்தமர்களைக் கொண்டு வித்தையை ஓதுவிக்க வேண்டுமென்றும் அதுமுதல் அநத்தியயந திநங்களான அஷ்டமி, பக்ஷமுடிவில் மூன்றுநாள், இவைகளில் வித்தியாப்பியாசத்தை விட்டிருக்க வேண்டுமென்றும் மார்க்கண்டேயர் சொன்னார்.

உபநயநப் பிரகரணம். கர்ப்பந்தொடங்கி எட்டாவது வயதில் பிராம்மணனுக்கும், பதினோராவது வயதில் க்ஷத்திரியனுக்கும், பன்னிரண்டாவது வயதில் வைசியனுக்கும் உபநயநம் செய்யத்தக்கதென்றும், பின்னும் வேதமோதுதல் வேதார்த்தங்களை நன்றாக அறிதல் முதலான விசேஷங்களால் வருகிற பிர்ம்மவர்ச்சஸம் என்னும் தேஜஸை அபேக்ஷித்த பிராம்மணனுக்குக் கர்ப்பாதியான ஐந்தாவது வயதிலும், யானை, தேர், குதிரை முதலிய ராஜ்ய பலத்தை அபேக்ஷித்த க்ஷத்திரியனுக்குக் கர்ப்பாதியான ஆறுவது வயதிலும், பலவிதமான கிருஷிமுதலிய ஸம்பத்தை விரும்பின வைசியனுக்குக் கர்ப்பாதியான எட்டாவது வயதிலும், உபநயநத்தைச் செய்விக்கவேண்டுமென்றும், பின்னும் கீழே சொன்ன காலங்களில் உபநயநம் செய்விக்காவிட்டால் பிராம்மணனுக்குப் பதினாறுவது

வயதுவரையிலும் க்ஷத்திரியனுக்கு இருபத்திரண்டு வயதுவரையிலும் வைசியனுக்கு இருபத்துநான்கு வயதுவரையிலும், உபநயன காலமுண்டென்றும் இந்தக்காலங்களிலும் உபநயநத்தைச் செய்து கொள்ளாத மூன்று வர்ணத்தாரும் பெரியோர்களால் பழிக்கப்பட்டு வ்ராத்தியர்களென்று சொல்லப்படுவார்களென்றும், சாஸ்திர விதிப்படிப் பிராயச்சித்தஞ் செய்துகொள்ளாமல் அசுத்தர்களான இவர்களுக்கு ஆபத்திலும் ஓதுவித்தல் கன்னியாதாநம் செய்தல் முதலிய ஸம்பந்தங்களைப் பிராம்மணன் ஒரு காலத்திலும் செய்யக் கூடாதென்றும் மனுசொன்னார்.

பிர்ம்ம வர்ச்சஸம் என்கிற ஞானஸமிருத்தி, ஆயுள், தேஜஸ், அந்நம், இந்திரியபுஷ்டி, பசுஸமிருத்தி, இவைகளை அபேக்ஷித்த மூன்று வர்ணத்தாருக்கும் கிரமமாக ஏழு, எட்டு, ஒன்பது, அல்லது பத்து, பதினொன்று, பனிரண்டு இந்தவயதுகளில் உபநயநத்தைச் செய்விக்கவேண்டுமென்றும் வஸந்தம், கிரீஷ்மம், சரத் இந்த ருதுக்கள் பிராம்மணாதி மூன்று வர்ணத்தாருக்கும் வரிசையாக உபநயநகாலங்களென்றும் பருத்தியினால் செய்யப்பட்ட வெளுத்த வஸ்திரம் பிராம்மணனுக்கும் மஞ்சிஷ்டை என்னும் வர்ணச்சரக்கினால் சிவந்த வெண்பட்டு க்ஷத்திரியனுக்கும் மஞ்சள் நிறமுடைய வஸ்திரம் வைசியனுக்கும் உடுக்கத்தக்கதென்றும் ஆபஸ்தம்பர் சொன்னார். முஞ்சம் என்னும் புல்லினால் மிருதுவாகவும் முப்புரியாகவும் திரித்தகயிற்றைப் பிராம்மணனும், வில்லினுடைய நாணை க்ஷத்திரியனும் சணப்பநூலை வைசியனும் இடுப்பில் முஞ்சிக்கயிறாகத் தரிக்கவேண்டுமென்றும், பில்வ பலாச தண்டுகள் (கொம்புகள்) பிராம்மணனுக்கு உரியவைகளென்றும், ஆல் கருங்காலி இவைகளின் தண்டுகள் க்ஷத்திரியனுக்கு உரியவைகளென்றும் அரசு அத்தி இந்தத் தண்டுகள் வைசியனுக்கு உரியவைகளென்றும், மூன்று வர்ணத்தாருக்கும் கிரமமாக இந்தத்தண்டுகள் பாதம் முதல் தலைமயிர், நெற்றி, மூக்குநுனி இவைகளுக்குச் சரியான அவ்வளவு உயரம் இருக்க வேண்டு மென்றும் மனு சொன்னார்.

யக்கியோபவீதப் பிரகாணம். பருத்தியினால் செய்யப்பட்ட உபவீதம் பிராம்மணனுக்கும், சணல் நூலால் செய்யப்பட்டது க்ஷத்திரியனுக்கும், ஆட்டுமயிரால் செய்யப்பட்டது வைசியனுக்கும் தகுந்ததாமென்று மனுவும், பருத்தி, பட்டு, ஆட்டுமயிர் இவைகளால் செய்யப்பட்ட உபவீதம் கிரமமாக மூன்றுவர்ணத்தாருக்கும் தக்கதாமென்று பைடீநஸியும் அந்த உபவீதம் கிடையாத பட்சத்

தில் பசுவின் வால்மயிரிஞல அல்லது வஸ்திரத்திஞல் உபவீதம் தரிக்கவேண்டுமென்றும் உபவீதத்தை ஒன்பது நூல்களால் செய்யவேண்டுமென்றும் தன் கையின் நான்கு விரல்களில் தொண்ணூற்றாறு தடவையாக மூன்றுதரம் சுற்றியநூலை "ஆபோஹிஷ்டா" முதலிய மந்திரங்களால் புரோக்ஷித்துத் தேவால்யம், பசுத் தொழுவம், மஹாநதி, இவைகளிலாவது மற்றுள்ள சுசியான இடங்களிலாவது காயத்திரியை ஜபித்துக்கொண்டு வலது கை மேலாகமுறுக்கி மந்திர பூர்வகமாக மூன்ருகமடித்துப்பிறகு அதை இடது கை மேலாக முறுக்கியபின் ஒன்பது இழையானதைப் பில்வம் அரசமரம் முதலிய யக்கியத்திற்குரிய விருக்ஷங்களில் கட்டிப் பிதிர்க்களின் திருப்திக்காகப் "பிதிர்ப்யோநம:" என்றுசொல்லி சுழலுகிற அந்தநூலைப்பாராமல் மூன்றுதரம் தேவதைகளின் பிரீதிக்காகக் கையைத்தட்டிப் பரிசுத்தமாகிய மிருத்திகையை நூலுக்கு ஆஸநத்திற்காகவும் பத்திரபுஷ்பாதிகளைப் பூசைக்காகவும் கிரகித்துக் கொண்டு பிரணவ வியாஹிருதி மந்திரங்களால் முறுக்கை ஆற்றினபின் அந்தநூலை அந்தமிருத்திகையில் வைத்துப் பிரதிஷ்டா மந்திரங்களால் அதை அபிமந்திரித்து அதில் ஹரிப்பிர்ம்மேசுவரர்களைத் தியானித்து நமஸ்கரித்து மந்திரத்தைச்சொல்லித் தரிக்கக்கடவனென்றும் ஸ்தநத்திற்குமேலும் தொப்புளுக்குக் கீழும் தொங்கும்படித் தரிக்கக் கூடாதென்றும் மூன்ருகமடித்து முறுக்கிய அந்த நூலில் ஒருமுடியிருக்கவேண்டுமென்றும் நடுமுதுகெலும்பிலும் நாபியிலுமாகத் தரிக்கப்பட்ட உபவீதமானது இடுப்புவரையிலும் உள்ளதாகவும் அதிகமாகத் தொங்காமலும் அதிகமாக ஏருமலும் இருக்கவேண்டு மென்றும் காத்தியாயநர் சொன்ஞர். பிர்ம்மசாரி, யதி, இவர்கள் ஒவ்வொன்றும், மற்ற இருவரும் இரண்டிரண்டுமாகத் தரிக்க வேண்டுமென்று பிருகு முனிவர் சொன்னது நித்தியமாகத் தரிக்கவேண்டிய உபவீத விதியாகும். ஆயுளை இச்சித்தவன் வெகுவாகத்தரிக்கலாமென்று தேவலர் கூறிஞர். எப்போதும் சிகையை முடித்துக்கொண்டும் உபவீதத்தைத் தரித்துக் கொண்டுமே யிருக்கவேண்டும். இப்படி யிராமல் செய்த கிரியைகள் வீணுகுமென்றும் மந்திர பூர்வகமாகத் தரித்த உபவீதத்தைத் தனக்கு நன்மையை விரும்பினவன் ஒருகாலும் கழற்றி விடக்கூடாதென்றும் க்ஷணகாலமாவது உபவீதத்தைத் தரியாம லிருந்தவன் பாபியாகிப் பிராயச்சித்தம் செயதுகொள்ளத் தக்கவனுகிருனென்றும் பிருகுவும், உபவீதத்தில் மயிர்சேர்ந்திருந்தால் அந்தமயிரா யெடு

த்துவிட்டுக் காயத்திரியினால் பத்துதரம் ஜபித்த தீர்த்தத்தினால் அந்த உபவீதத்தைப் புரோக்ஷிக்கவேண்டுமென்றும் அறுந்ததும், முறுக்கும்போது நூலின்கீழ் பூனை முதலியபிராணிகள் போனதும் போஜனம் செய்தபின்பு முறுக்கப்பட்டதும் தரிக்கத் தக்கதல்லவென்று தேவலரும், உபவீதம், மௌஞ்சி, கிருஷ்ணாஜிநம், தண்டம், கமண்டலம், இவைகள் ஜீர்ணமானாலும் அசுசியானாலும் பரிசுத்தமான மற்ளொன்றை மந்திரஞ்சொல்லித் தரித்து முந்தியதை ஜலத்தில் எறியவேண்டுமென்று மனுவும் சொன்னார்கள்.

பிர்ம்மசாரியின் அக்நி சிசுரூஷைப் பிரகாரணம். அந்தந்த வர்ணத்திற்குரிய தண்டத்தைக் கிரகித்து உபநயநத்தைப் பெற்ற பிர்ம்மசாரிகள் காயத்திரி மஹாவாக்கியத்தின் பொருளான சூரியனை உபஸ்தானம்செய்து அக்நியை ஆராதித்துப் பிக்ஷாசரணம் செய்யவேண்டுமென்றும், வெகு தூரத்திலிருந்து சமித்துக்களைக்கொண்டுவந்து பூமியில்வைக்காமல் மேலிடத்தில்வைத்துக்காலைமாலைகளில் அக்நியில் ஹோமம் செய்யவேண்டுமென்றும் மநுவும், சூரியன் அஸ்தமனமாவதற்குமுன் கிழக்கு அல்லது வடக்கிலுள்ள காட்டிற்குச் சென்று ஒரு ஜந்துவையும் ஹிம்ஸை செய்யாமல் வேதாத்தியநம் முதலிய ஸமிர்த்தியைக்கோரினவன் உலர்ந்த சமித்துகளையும் அன்னத்தை விரும்பினவன் ஈரமாயிருப்பவைகளையும், இரண்டையும் விரும்பினவன் இரண்டுவித சமித்துக்களையும் கிரகிக்கக் கடவனென்று பைஜாவாபரும், பெருவிரலுக்கும் அதிகமான பருமனுள்ளவைகளும், தோலில்லாதவைகளும் புழு முதலிய ஜந்துக்களை யுடையவைகளும் இடி விழுந்ததினாலும் வேறு நெருப்புக்களாலும் வெந்தவைகளும் ஒரு ஒட்டை அளவுக்குக் குறைந்தவைகளும் இரண்டுகிளையாகப் பிரிந்தவைகளும் கணுக்களில்லாதவைகளும் முறிந்தும் கிழிந்தும் குறுகியும் கோணியும் இருப்பவைகளும் ரந்திரமுண்டானவைகளும் ஹோமத்திற்குத் தகாதசமித்துக்களென்றும், இவைகள் கர்மசித்தியைக் கெடுக்கின்றவைகளாமென்றும் காத்தியாயநரும் சொன்னார்கள். பலாசு, கருங்காலி, வன்னி, செம்மரம், அரசு, எருக்கு, நீர்வஞ்சி, இவைகளில் முதல் சொன்னது கிடையாவிட்டால் அதற்கு அடுத்துச் சொன்ன சமித்தையும் அதுவும் கிடையாவிட்டால் அதற்கடுத்துச்சொன்னதையும் இவ்வாறே உபயோகித்துக் கொள்ளவேண்டுமென்று வாயுபுராணம் சொல்லிற்று. முன்னே பிர்ம்மசாரியைப் பிடித்து மிருத்தியு தேவதை ஹிம்ஸிக்கையில் அக்நி அவனை விடுவித்தாராகையால் அந்த அக்நியைப் பிர்ம்மசாரி பூசிக்கக்கடவனென்று ஹாரீதர் சொன்னார்.

பிக்ஷாடநப் பிரகாரணம். பிர்ம்ம க்ஷத்திரிய வைசியர்கள் பிர்ம்மசரிய விரதத்தில் தங்கள் ஜீவநத்திற்காகப் பழிக்கப்படாத சீலமுடைய பிராம்மண ஸ்திரீயினிடத்தில் பிக்ஷையை யாசிக்கிற மூன்று பதமுள்ள வாக்கிய மாகிய "பவதீபிக்ஷாம்தேஹி" என்பதில்பவதீஎன்னும் சப்தத்தைப் பிராம்மணன் ஆதியிலும், க்ஷத்திரியன் நடுவிலும், வைசியன் கடைசியிலும் சேர்த்துச் சொல்லிப் பிக்ஷாந்நத்தைக்கிரகிக்க வேண்டுமென்று யாக்கியவல்கியர் சொன்னார். பிராம்மணர்களிடத்தில் என்றதனால் அவரவர்களுடைய ஸமான ஜாதியில் பிக்ஷை எடுக்கலாமென்று பொருள்கொள்ளவேண்டும், நான்குவர்ணத்தாரும் தங்கள் தங்கள் வர்ணத்திலாகிலும் எல்லா வர்ணத்திலுமாகிலும் பிக்ஷையெடுக்கலாமென்று வியாஸர் அருளிச்செய்தார். இது ஆபத்கால விஷயம். எங்கும் கிடையாதபக்ஷத்தில் நான்கு வர்ணத்திலும் பிக்ஷைஎடுக்கலாமென்று பவிஷியத் புராணத்தில் சொல்லியிருக்கிறது. வேறு ஜீவனமில்லாதவன் ஒரு நாளைக்குப் போதுமான அரிசி முதலானவைகளை கிரகித்துக்கொண்டு அதைத் தானே பாகம் செய்து கொள்ள வேண்டுமேயன்றிச் சூத்திரரிடத்தில் ஆபத்திலும் பக்குவாந்நத்தைப் பெறுவது மற்றவர்ணங்களுக்குத் தகாதென்றும் ஆபத்து இல்லாத காலத்திலும் தங்கள் வர்ணத்தாரில் வேதத்தில் சொல்லிய கர்மங்களைத் தவறாமல் அநுஷ்டிக்கிறவர்களும், தங்கள் வர்ணத்திற்குரிய தர்மத்தில் நிலைத்திருப்பவர்களுமான பெரியோர்களிடத்திலேயே பிக்ஷைவாங்கவேண்டுமென்றும் மனுசொன்னார். ஆதியில் மாதா உடன்பிறந்தாள் முதலானவர்களிடத்தில் பிக்ஷையை வாங்கவேண்டுமென்று சொன்னது உபநயநத்திற்கு அங்கமாக அப்போது செய்கிற பிக்ஷையைப்பற்றியது. பிர்ம்மசாரி தனக்குப் போதுமான பிக்ஷையைக் கிரகிக்க வேண்டுமேயல்லது அதிகமாகக் கிரகித்தால் திருடின தோஷத்தை அடைகிறானென்று யமமுனிவர் சொன்னார். தான்கபடமில்லாமல் பிக்ஷாந்நத்தை முழுதும் ஆசாரியனுக்கு அறிவித்து அவர் அநுமதிபெற்று ஆசமநம்செய்து சுத்தனாகிக் கிழக்குமுகமாக உட்கார்ந்து புசிக்க வேண்டுமென்று மனுவும், குரு இல்லாதபக்ஷத்தில் குருபத்நி, குருபுத்திரன், குருவுடன் ஓதினவன் இவர்களுடைய அநுமதிபெற்றாவது புசிக்கவேண்டுமென்று கௌதரும் பிக்ஷாந்நத்தை எடுத்து அதைச் சுற்றிலும் அக்நிஜ்வாலையைக் காண்பிப்பது, சூரியனுக்குக் காண்பிப்பது, குருவுக்கு அறிவிப்பது, அவர் அநுமதியைப்பெறுவது இவைகளைச் செய்து அமிர்தம் போன்ற அந்தப் பிக்ஷையைக் குணதோஷ விசாரமின்றிப்

புசித்த பிர்ம்மசாரி பிர்ம்மவித்தியை அடைகிருனென்று ஹாரீதரும் பல கிருகத்தில் பிக்ஷை எடுக்காமல் ஒருவருடைய அந்நத்தையே புசிப்பதையும், காலை மாலைகளில் அக்நியில் சமித்துக்களை ஓமம் செய்யாதிருப்பதையும், நோய் முதலிய துன்பமற்ற பிர்ம்மசாரி எழுநாள் செய்தானேயாகில் அவன் பிர்ம்மசரிய விரதத்தைத் தவறினுல் செய்யவேண்டிய பிராயச்சித்தத்தைச்செய்யக்கடவனென்றும் தைவகர்மம் பிதிர்கர்மம் இவைகளில்மாத்திரம் பிர்ம்மசாரி ஒருவனுடைய அந்நத்தைப் புசிக்கலாமென்றும் மனுவும் தண்டம், கமண்டலம் தர்ப்பமுஷ்டி, மௌஞ்சி, அரைஞாண், பிர்ம்மசரியம் அதாவது வேதத்தை ஓதுதல் அல்லது மைதுநத்தைச் செய்யாமை, பிக்ஷாந்நத்தைப்புசிப்பது, குருவின்வீட்டில் வசிப்பது, இவைகள் பிரம்மசாரியினுடைய விரதங்களென்று யமமுனிவரும்,தேன், மத்தியம், மாம்ஸம், எச்சில், இவைகளைப் புசித்தல், சுக்கிலத்தை ஒழித்தல், மையிடுதல்,ஸ்திரீ சங்கமம், ஜந்து ஹிம்ஸை, உதயாஸ்தமன காலங்களில் சூரியனைப் பார்த்தல்,அப்பிரியமாயும் ஒருவனுடைய பழிப்பாயுமிருக்கின்ற வசனங்களைச்சொல்லுதல் இவைகளைப் பிர்ம்மசாரி செயக்கூடா தென்று யாக்கியவல்கியரும் சொன்னூர்கள். இங்கு மையென்று சொன்னதினுல் அப்பியங்கஸ்நானம்,குடை,மிதியடி இவைகளைத் தரித்தல், கட்டிலில் சயநித்தல், பல்விளக்குதல் ஆகிய பிர்ம்மசாரிக்குத் தகாதவைகளும் குறிப்பிக்கப்பட்டன. இந்த விரதத்தை முப்பத்தாறுவருஷம் அல்லது அதில் பாதிபாகமாவது, அல்லது கால்பாகமாவது அல்லது வேதம் முழுதும் ஓதுகிற வரைக்குமாவது செய்யவேண்டுமென்று மனு சொன்னூர்.

நைஷ்டிக பிர்ம்மசாரிப் பிரகாரணம். உபகுர்வாணனென்றும், நைஷ்டிகனென்றும் பிர்ம்மசாரி இரண்டு வகையினர். அவர்களில் இதுவரையில் உபகுர்வாண னுடைய லக்ஷணங்களும் தர்மங்களும் சொல்லப்பட்டன. எவனுக்குத் தன் ஆயுள் முடிவுவரையிலும் குருவினுடைய வீட்டிலேயே வாசம் செய்ய விருப்பமுண்டாகிறதோ அவன் நைஷ்டிக பிர்ம்மசாரியென்றும் அவன் குரு ஸந்நிதியில் தன்நிஷ்டையில் தவருமலிருந்து குருவுக்குப் பணிவிடை செய்து குருவுக்குப் பின் குணவானுகிய குருபுத்திரனிடத்திலும் குருபத்தினியினிடத்திலும் குருவுக்கு எழுதலைமுறைக்குட்பட்ட ஞாதியினிடத்திலும் குருவைப்போல் அவர்களை உபசரித்துக் கொண்டு இருக்கக்கடவனென்றும் மனுசொன்னூர். சரீரம் விடுமளவும் பிர்ம்மசரியத்தை அநுஷ்டிக்கக் கடவனென்றும் ஆசாரியனுக்குப் பின்

அக்நியை ஆராதிக்கக் கடவனென்றும் இவ்விதமாகச் சரீரம் விடு மளவும் குரு சிசு ரூஷைசெய்கிற பிர்ம்மசாரி பிர்ம்மபதத்தை அடைகிருனென்றும் வஸிஷ்டர் மனு இவர்கள் சொன்னுர்கள். நைஷ்டிக பிர்ம்மசாரியாயிருப்பது கூனர் குறளர் இவர்களுக் குரியதென்று சிலர் சொன்னுர்கள். கார்ஹஸ்தியம் வேண்டுமோனுல் விவாகம் செய்துகொள்ளக் கடவனென்றும் அல்லது சங்கல்ப பூர்வகமாகப் பிர்ம்மசரியத்துடனே காலத்தை எல்லாங்கழித்தாலும் கழிக்கலா மென்றும் மற்றும் எந்த ஆச்சிரமத்தில் அபேக்ஷயோ அந்தஆச்சிரமத்தையாவது அங்கீகரிக்கலாமென்றும் பவிஷியத் புராணத்தில்சொல்லியிருப்பதால் பிர்ம்மசரியத்தைத் தவிர்ந்து விவாகம் செய்துகொள்வது கிருகஸ்தாச்சிரமத்தில் அபேக்ஷ யுள்ளவனுக் கென்பதாம்.

ஸ்நாதகப் பிரகரணம். குரு சிசுரூஷைசெய்து வேதத்தை முழுதும் ஓதி உபநயநவிரதம், ஸாவித்திரீவிரதம், வேதாப்தவிரதம், ஆரணியகவிரதம் இவைகளை அநுஷ்டிக்காமல் குரு தக்ஷிணையைச் சமர்ப்பித்துப் பின்பு அவருடைய அனுமதிபெற்ருவது அல்லது வேதங்களை முழுது மோதாமல் வேதங்களில் சொல்லி யிருக்கிற விரதங்களை அநுஷ்டித்தாவது அல்லது இரண்டையும் செய்த பின்பாவது ஸ்நாதகனுக வேண்டுமென்று யாக்கியவல்கியர் சொன்னுர். ஒருவன் வேதமோதும் தருணத்தில் குருவுக்கு ஒருஉபகாரமும் செய்யக்கடவனல்லன். வேதமோதின பின்பு ஸ்நாதகவிரதத்தை அநுஷ்டிக்கப்போகிறவனுக் குருவினுடைய அனுமதியினுல் தன்சக்திக்கிடாகப் பூமி, பொன்,பசு,குதிரை, குடை, பாதரக்ஷை, தானியம், வஸ்திரம் இவைகளில் குருவுக்குச் சந்தோஷகரமா யிருப்பவைகளைச்சமர்ப்பிக்க வேண்டுமென்று மனு சொன்னுர். இவைகளை எவ்வளவு அதிகம் கொடுத்தாலும் குருப்பிரீதி நிமித்தமேயல்லது தான் ஓதின வித்தைக்குப் பதிலாகமாட்டாது. எழு தீவுகளோடுகூடிய பூமியும் வேத வித்தைக்குத் தக்க கிரயதனமும் தக்ஷிணையுமாகா தென்று தாபநீயசுருதியும் குருவிடத்தில் வேதாக்ஷரம் ஒன்றை ஓதினபோதிலும் அதற்குத் தக்ஷிணைகொடுக்கப் பூமியில்தகுந்த பொருளில்லையென்றும் ஹாரீதஸ்மிருதியும் சொல்லுகின்றன. வேதவித்தையை அங்கங்களோடும் அர்த்தத்தோடும் பூர்ணமாக ஓதி விரதங்களை முடிக்காமல் ஸ்நாதகனுனவன் வித்யாஸ்நாதகனென்றும், வேதத்தை முழுதுமோதி முடியாமல் கிருஹிய ஸூத்திரத்தில் சொல்லப்பட்ட உபநயந விரதமுதலிய விரதங்களைமாத்திரம் அநுஷ்டித்து ஸ்நாதகனுனவன் விரதஸ்நாதகனென்றும், இவ்விரண்டையும் பூர்ணமாக அநுஷ்டித்

துஸ்நாதகனானவன் வித்தியாவிரதஸ் நாதகனென்றும் ஸ்நாதகர் மூன்று விதமாகச் சொல்லப்படுவாரென்று ஹாரீதர்சொன்னார். இரண்டு யக்கியோபவீதம், தீர்த்தத்துடன் கமண்டலம், குடை, பாகை, பாதுகை, பாதரக்ஷை, பொன் குண்டலங்கள் இவைகளைத்தரித்தல், நகங்களையும் மயிர்களையும் கழித்தல், நித்தியமும் வேதத்தை ஓதுதல், நிர்மலமாயும் கிழியாததுமான வெளுப்பு வஸ்திரத்தைத் தரித்தல், மாலைசந்தநங்களை யணிதல், ஆகிய இவைகளைச் செய்துகொண்டு பார்வைக்கு ஆநந்தகரமாயிருப்பதே ஸ்நாதக தர்மமாமென்று கூர்மபுராணத்திலும் ஸ்நாநவிதி கிருஹியத்திலும் கூறப்பட்டது.

விவாகப் பிரகரணம். குருதக்ஷிணை கொடுத்துக் குருவினால் அநுமதி செய்யப்பட்டு ஸ்நாதகனாகிய (ஸமாவர்த்தநம் என்னும் கருமத்தைச் செய்துகொண்ட) பிராம்மணன் நல்ல லக்ஷணத்தோடு கூடிய தன் வர்ணத்துப் பெண்ணை விதிப்படி விவாகம் செய்துகொள்ளக் கடவனென்று மநுவும், பிர்ம்ம சரிய விரதத்தைத் தவறாதவனாகி நல்ல லக்ஷணங்களோடு கூடினவளும், தானத்தினாலும், அநுபவத்தினாலும் அந்நியனால் பரிக்கிரகிக்கப்படாதவளும், தன் அழகினால் பிறருடையமனதையும் கண்களையும் சந்தோஷிப்பிக்கத்தக்கவளும் ஸபிண்டை ஆகாதவளும் அதாவது தகப்பன் வம்சத்தில் கூடஸ்தபுருஷன் தொடங்கி அவர் பிள்ளைவரிசையில் எழுதலைமுறைக்கு மேற்பட்டவளும் தாய்வம்சத்தில் கூடஸ்தன்தொடங்கி ஐந்து தலைமுறைக்கு மேற்பட்டவளும் தன் பிதிர் கோத்திரத்திலும்தாய் கோத்திரத்திலும் ஐந்துதலை முறைக்குட்படாதவளும் வயதினால் தனக்கு இளையவளும் ரோகமில்லாதவளும் பிராதாக்களை யுடையவளும் தன் கோத்திரத்தில் பிறவாதவளும் தன் பிரவர ஸம்பந்தமில்லாதவளுமான கன்னிகையை விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்று யாக்கிய வல்கியரும், குறையாத அவயவங்களை யுடையவளும் அழகிய பேரை யுடையவளும் ஹம்ஸம் யானை இவைகள்போல் நடப்பவளும் மெல்லியதான மயிர்களையும்நல்ல பற்களையுமுடையவளும் தீராதவியாதியில்லாதவளும் மிருதுவான அங்கங்களை யுடையவளுமான பெண்ணை விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்றும், அதிகமான அங்கங்களையும் தேகத்தில் ரோமத்தையுமுடையவளும் தலையில் மயிரேயில்லாதவளும் அதிகமான மயிர்களையுடையவளும் சிவந்த அரிசியைப்போன்றதும் அக்கினியைப்போன்றதுமான ரூபத்தையுடையவளும் ஆறுவிரல்கள் முதலிய அதிகமான அங்கத்தை யுடையவளுமான பெண்விவாகத்திற்குத் தகாதவளென்றும் மநுவும் சொன்னார்கள்.

மீசை யுடையவளும், புருஷன் போன்றவளும், கறகறவென்று பேசுகின்றவளும், காக்கையின் குரலை யொத்த குரலை யுடையவளும் உருண்ட கண்களை யுடையவளும், அதிக குள்ள மானவளும், அதிக உயரமானவளும், கூடிய புருவம் விலகிய பற்கள் குரூரமான முகம் இவைகளை யுடையவளுமான பெண்ணை விவாஹம் செய்துகொள்ளக் கூடாதென்று ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் சொல்லப்பட்டது. விவாக நிச்சய தினத்திற்கு முந்திய ராத்திரியில் பசுத்தொழுவம், வேதிகை, சூதாடுகிற இடம், மடு, களர் நிலம், விளைநிலம், நல் சந்தி, சுடலை இந்த இடங்களினின்று மண்ணை எடுத்துவந்து ஒவ்வொரு மண்ணையும் தனித்தனியே உருண்டைசெய்து அவைகளை விவாகப் பெண்முன்னே வைத்து "ருதமக்கிரே" என்று தொடங்கியுள்ள மந்திரத்தினால் அந்த எட்டு உருண்டைகளையும் மந்திரித்துப் பெண்ணே நீ, இவைகளில் ஒன்றை எடுத்துக்கொள் என்று சொல்ல அந்தப்பெண் எடுத்துக்கொண்ட உருண்டை முதலாவதானால் அவள் விசேஷ தானியத்தையும் இரண்டாவதானால் பசுக்களையும் அடைகிறவளாயும் மூன்றாவதானால் அக்னி ஹோத்திரம் செய்கிறவளாயும், நான்காவதானால் விவேகம், சாமர்த்தியம், பெரியோர்களைப் பூசித்தல் இவைகளையுடையவளாயும், ஐந்தாவதானால் ரோகமுடையவளாயும், ஆறாவதானால் மலடியாயும், ஏழாவதானால் வியபிசாரம் செய்கிறவளாயும், எட்டாவதானால் விதவையாகவும் ஆகிறாளென்று ஆசுவலாயந கிருஹியத்தில் சொல்லப்பட்டது.

பின்னும் வேறொருத்தனுக்கு வாக்தானம் செய்யப்பட்டவள், மனத்தினால் கொடுக்கப்பட்டவள், அந்நியனால் கங்கணங்கட்டப்பட்டவள், தாராதானம் செய்யப்பட்டவள், பாணிக்கிரகணம் செய்யப்பட்டவள், அக்நியைப் பதியோடு வலம்வந்தவள், பிரஸவித்தவள் ஆகிய இவர்களை விவாகஞ்செய்துகொண்டவன்குலம் நசிக்குமென்றும் இவர்கள் "புநர்பூ" என்னும் பேரை யுடையவர்களென்றும் காசியபர் சொன்னார். வாக்கினால் கொடுக்கப்பட்டவள், மநத்தினால் கொடுக்கப்பட்டவள், அக்நியைப்பதியுடன் வலம்வந்தவள், சப்தபதி (ஏழடி) வைத்தவள் (அம்மிமிதித்தவள்), பதியினால் அனுபவிக்கப்பட்டவள், கர்ப்பந்தரித்தவள், பிரஸவித்தவள், என்று "புநர்பூ" எழுவகைப்பட்டவளென்றும் அவளை விவாகம் செய்தவன் சந்ததியையும் தர்மத்தையும் அடைகிறதில்லை என்றும் போதாயநர் சொன்னார்.

ஸமாநமாகிய பிண்டமுடையவள் ஸபிண்டை யென்றும், அவளாகாதவள் அஸபிண்டை யென்றும் சொல்லப்படுவார்கள். இந்த ஸ

பிண்டத்தன்மை ஏழு தலைமுறை வரையிலுமுள்ளதென்றும் பிண்டத்தைக் கொடுப்பவனுக்குப் பிதா பாட்டன் அவன் தகப்பன் ஆகிய மூவர் பிண்டத்தை அடைகிறவர்களென்றும், இவர்களுக்குமேல் பிதிர் பிதாமஹ பிரபிதாமஹர்கள் அந்தப்பிண்டத்தில் லேபத்தை (பாகத்தை) அடைகிறவர்களென்றும் பிண்டத்தைக் கொடுப்பவன் ஏழாவனுகிறானென்றும் மச்சபுராணம் கூறுகின்றது. இதுபோலவே ஒருவன் தன்மகன் முதல் கீழ் அறுவருக்குத் தான் ஸபிண்டனுகிறான். இது நிர்வாப்பிய சாபிண்டிய மென்னப்படும். பின்னும் சிலர் ஸபிண்டை என்றால் ஒத்த சரீரத்தை யுடையவள் அதாவது சரீரசம்பந்தம் பெற்றவளென்றும் புத்திரனுக்குப் பிதாவோடே நேரே சரீரஸம்பந்தமும் அந்தப் பிதாவை முன்னிட்டுப் பாட்டன் மார்களுடனும் அவர்களை முன்னிட்டுச் சிறியதகப்பன் அத்தை முதலியவர்களோடும், சரீரஸம்பந்தமும் வருகிறதென்றும் இதுபோலத் தாயின்தேக சம்பந்தமும் தாயை முன்னிட்டுத் தாய்வழிப்பாட்டன் மார்களுடனும் அவர்களை முன்னிட்டு அம்மான் சிறியதாயார் முதலானவர்களுடனும் தேஹசம்பந்தமும் வருகிறதென்றும் இவ்வாறு தன்னோடு ஒரு உடம்பின் ஸம்பந்தம் பெற்றவள் ஸபிண்டை என்னப்படுவளென்றும் அப்படி அல்லாதவள்தான் விவாகத்திற்குத் தக்கவளென்று அவயவ சாபிண்டியத்தைச் சொல்லுகின்றனர். கீழ்ச் சொன்ன இரு விதமான பிண்ட சம்பந்தமில்லாதவள் அஸபிண்டை என்றறிக. இந்தச் சம்பந்தம்,பிதிர்வர்க்கத்தில் ஏழாந்தலைமுறையிலும் மாதிர்வர்க்கத்தில் ஐந்தாவது தலைமுறையிலும் ஒழிகிறதென்றுகௌதமர் சொன்னார். இந்தத்தலைமுறையைக் கூடஸ்தன்தொடங்கி எண்ணவேண்டும். எவனிடத்தில் ஸந்தாநம் பிரிகிறதோ (பெண்ணும் பிள்ளையும் ஜனிக்கிறார்களோ) அவன் அந்தப்பெண்வர்க்கத்திற்கும் பிள்ளை வர்க்கத்திற்கும் கூடஸ்தன் (மூல புருஷன்) ஆகிறான். அவனைத் தொட்டு எண்ணினல் விவாகப்பெண்ணினுடையவும் விவாகப்பிள்ளையினுடையவும் பிதா பிதிர்வர்க்கத்தில் ஏழு தலைமுறைக்கு மேல்ப்பட்டவனாயும் இந்தப் பெண்பிள்ளைகளின் மாதா, மாதிர் வர்க்கத்தில் ஐந்து தலைமுறைக்கு மேல்ப்பட்டவளாயுமிருந்தால் அந்தப் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் விவாகஞ்செய்யலாம். பிதாவின் அத்தையினுடைய பெண்பிள்ளைகள், பிதாவினுடைய சிறியதாயார் பெரியதாயார் இவர்களுடைய பெண்பிள்ளைகள், பிதாவின் அம்மானுடைய பெண்பிள்ளைகள் இவர்கள் தன் பிதிர் பந்துக்களென்றும், அதுபோல் தாயின் அத்தையினுடைய பெண் பிள்ளைகள், தாயின் சிறியதாயார்

பெறியதாயார் இவர்களுடைய பெண் பிள்ளைகள், தாயின் அம்மா னுடைய பெண் பிள்ளைகள் இவர்கள் தன் மாதிர் பந்துக்களென்றும், வேறு ஸ்மிருதியிலும் ஸ்மிருதி சங்கிரஹத்திலும் சொல்லப்பட்டது.

பிராம்மம் முதலியவைகளானசாஸ்திரீய விவாஹத்தை ஒருகன்னிகைக்குச்செய்தால் பின்பு அந்தக் கன்னிகைக்குப் பிதாவின் கோத்திரம்ஒழிந்தமையால் பதியின் கோத்திரத்தினுல் அவளுக்குப் பிண்டோதகதாநாதிகளான கிரியைகளைச் செய்ய வேண்டுமென்றும்காந்தருவம்முதலான சாஸ்திரீயமாகாத விவாகம் நடந்திருந்தால் அவளுக்குப்பிதாவின் கோத்திரத்தினுல் பிண்டோதகம் முதலானகிரியைகளைச்செய்ய வேண்டுமென்றும் மார்க்கண்டேய புராணம் கூறுகின்றது. அம்மான்மகளையும் தாய்கோத்திரத்தில் பிறந்தவளையும் தனக்குச் சரியான பிரவரத்தை யுடையகோத்திரத்தில் பிறந்தவளையும் இருபிறப்பாளன்விவாகம் செய்தால்சாந்திராயண விரதத்தைச் செய்யவேண்டுமென்று சாதாதபரும், ஒருவன் தன்னுடைய அத்தைப்பெண்கள், தாய்சகோதரியின் பெண்கள், அம்மான்பெண்கள், ஆகிய இவர்கள் தனக்குத் தர்மமாகச் சகோதரிகள் (தங்கையர்கள்), ஆகையால் அவர்களைத்தான் விவாகம் செய்துகொள்வது தகாதென்று பைடீநசியும், இப்படியே ஸுமந்துவும் வியாஸரும் ஸ்தாபித்திருந்தார்களேயாகிலும்,பிராம்மம் முதலான விவாகத்தினுல் சபிண்டத்தன்மை அந்தக் கன்னிகைக்கு ஒழிந்துவிட்டபடியாலும் ருக்வேதத்தில் விதிக்கப்பட்டமையாலும், தென் தேசத்திலுள்ள கற்றுணர்ந்த சிஷ்டரால் அநுஷ்டிக்கப் படுகையாலும் வடநாட்டில் இந்த விவாகம் சிஷ்டர்களால் விலக்கப்பட்டமையாலும் அங்கு இது செய்யத்தகாதேயன்றி தென்னுட்டில் செய்வது தர்மமென்றும் கீழ்ச்சொன்ன விலக்குகள் சாஸ்திரீயமாகாத காந்தருவம் முதலான விதிகளால் விவாகஞ் செய்வதைப் பற்றியவைகளென்று மாதவாசாரியர் கூறுகின்றுர்.

தென்தேசத்தில் உபநயநமாகாத சிறுவனேடு ஒரு பந்தியில் புசித்தல், தன்பத்திநியோடுபுசித்தல், பழயதைப்புசித்தல், அம்மான் மகளை விவாகம்செய்தல்,அத்தைமகளை விவாகம்செய்தல் ஆகிய இவ்வைந்தும் நடந்துவருகின்றன. வடதேசத்தில் பட்டு, கம்பளம் முதலியவைகளை விற்பது, மத்தியபாநம் அல்லது சூருட்டு பிடிப்பது, ஆயுதம்பிடித்து யுத்தம் செய்வது, ஸமுத்திரத்தில் கப்பல் யாத்திரைசெய்வது இவ்வைந்தும் அநுஷ்டிக்கப்படுகின்றன. தென்னுட்டிலுள்ளவர் வடநாட்டு ஆசாரத்தை அநுஷ்டிப்பதும் வடநாட்டிலுள்ளவர் தென்னுட்டு ஆசாரத்தை அநுஷ்டிப்பதும் குற்றமாகும். எங்

தத்தேசத்தில் எது சிஷ்டரால் அநுஷ்டிக்கப்படுகிறதோ, அந்தத் தர்மத்தையே அங்குள்ளவரும் அங்குச்சென்ற மற்றொருதேசத்தவரும் அநுஷ்டிக்க வேண்டுமென்றும் அதைக் கெடுதிசெய்யக்கூடாதென்றும் போதாயநரும் தேவலரும் சொன்னார்கள்.

முப்பது வயசுள்ள புருஷன் பனிரண்டுவயசுள்ள பெண்ணையும் இருபத்தினான்கு வயசுள்ளவன் எட்டு வயசுள்ள பெண்ணையும் விவாஹம் செய்யவேண்டு மென்றும், அதற்கு மாறாக விவாகம் செய்துகொண்ட புருஷன் தர்ம விஷயத்தில் துன்பத்தை அடைகிறானென்றும் மனுசொன்னார். ஒருபங்கு வயசுள்ள பெண்ணை மூன்றுபங்கு அதிக வயசுள்ள புருஷன் விவாஹம் செய்யவேண்டுமென்று ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் சொல்லப்பட்டது. விவாகம் செய்யப்போகிற பெண்ணுக்கு மூத்தவனாவது இளையவனாவது சகோதரன் இருக்கவேண்டும், ஏனெனில் புத்திரனில்லாதவன் தன்னுடைய பெண்ணை ஒருவனுக்குக் கொடுக்கும்போது இந்தக் கன்னிகையினிடத்தில் எந்தப் பிள்ளை ஜனிக்கிறானோ அந்தப்பிள்ளை எனக்குப்பிதிர்க்கிரியை செய்யக்கடவனென்று சொல்லிக்கொடுத்தானேயானால் அந்தப் பெண் அவனுக்குப் பிள்ளைபோலாகிறாளென்று மநுவும், உடன்பிறந்தவனில்லாத இந்தப் பெண்ணை உனக்குக் கொடுக்கிறேன் இவளுக்கு ஜனிக்கிற பிள்ளை எனக்குப் பிள்ளையாகப் போகிறானென்று ஒருவனைப்பார்த்துப்பிதா சொல்லிக்கொடுத்தால் அந்தப்பெண் தன் பிதாவுக்குப்பிள்ளைபோலாகிறாளென்று வசிஷ்டரும், அவளுக்குப்பிறந்த பிள்ளை புத்திரிகா புத்திரனென்றும் அவன் தன் தாயாருக்கு மாதாமஹ கோத்திரத்தைச்சொல்லிக் கர்மங்களை அநுஷ்டிக்கவேண்டுமென்றும் லோகாக்ஷியும் சொன்னார்கள், இதனால் பிராதா இல்லாத கந்நிகைக்குப் பிதாவின் எண்ணத்தினால் தந்தையோடு சாபிண்டியம் ஒழியாமலிருக்குமென்பது சொல்லப்பட்டது. இதனால் பிராதாவை யுடையவள் விஷயத்தில் இந்தச் சந்தேகமில்லை என்றும் பிராதாவையுடைய கந்நிகை விவாகத்திற்கு ஏற்றவளென்றும் கீழே சொல்லப்பட்டது. ஒருவன் தன் பிரவரத்தையும் கோத்திரத்தையும் உடைய பெண்ணை விவாகம்செய்துகொள்ளக்கூடாதென்கிற வசநத்திற்குப் பொருளென்னவெனில்,—கோத்திரப் பிரவர்த்தகரான பரத்துவாஜ ரிஷிக்கு வேறு கோத்திர ரிஷிகளைக்காட்டிலும் பேதத்தை அறிவிப்பவர்கள் அங்கிராவும் பிரகஸ்பதியுமாதலால் இவர்களுடைய கணம் பிரவரமென்னப்பட்டு இதனால் ஆங்கிரஸ பாருஹஸ்பத்ய பாரத்துவாஜர்களென்னும் மூன்று முனிவர்களுடைய பிரவரத்

தை யுடையது பரத்துவாஜ கோத்திரமென்று சொல்லுகிறதுபோல் மற்றக் கோத்திரங்களுக்கும் ஊஹித்து எந்தக் கந்நிகைக்கும் மண மகனுக்கும் இவ்வாறு கோத்திரப்பிரவரங்கள் ஒன்றாயிருக்கின்றன வோ அவர்களுக்கு விவாகம் செய்யத்தகாதென்று அறிந்து கொள்வ தே. சிலவிடங்களில் பிரவரம் வேறுபட்டிருந்தாலும் கோத்திரம் ஒன் ருக இருப்பதும், சிலவிடங்களில் கோத்திரம் பேதித்திருந்தும் பிரவ ரம் பேதிக்காமலிருப்பதுமுண்டு. இந்த நியமங்களைப் போதாயனர், காத்தியாயனர், விசுவாமித்திரர், சர்க்கர் முதலான மஹாமுனிவர்கள் விரித்துரைத்திருக்கிறதை அறிந்து பிரவரவொற்றுமை கோத்திர வொற்றுமை ஆகிய இவைகளில்லாத குலத்துக் கந்நிகையை வி வாகம் செய்யவேண்டும்.

ஜமதக்நி, பரத்துவாஜர், விசுவாமித்திரர், அத்திரி, கௌதமர், வசிஷ்டர், கசியபர், அகஸ்தியர் இந்த முனிவர்கள் கோத்திரங்களைச் செய்தவர்களென்றும் இவர்கள் புத்திர பரம்பரையாலுண்டான கோ த்திர வேறுபாடுகள் அனேகமாயிரமுண்டென்றும் இவர்களுடைய பிரவரம் நாற்பத்தொன்பதென்று ரிஷிகள் சொல்லியிருக்கிறார்களெ ன்றும் ஒரே கோத்திரமுடையவளை விவாகம்செய்தால் அவளை மா தாவைப்போல் ரக்ஷிக்கவேண்டுமென்றும் போதாயனரும், ஸமான கோத்திரமுடையவளை விவாகம் செய்துகொண்டவன் அவளை வி ட்டு அதிக்ருச்சிரம் செய்துகொண்டால் சுத்தனாகிறானென்று சாதா தபரும், கோத்திரப் பிரவரங்களில் ஒற்றுமையுடையவளை விவாகம் செய்து அவளிடத்தில் ஸந்தானத்தை உண்டுபண்ணினவன் பிராம்ம ணத் தன்மையினின்று நீங்கி ஹீநனாகிறானென்று ஆபஸ்தம்பரும் சொன்னார்கள். தனம், தானியம், ஆடுமாடுகள் முதலான சம்பத்துக் களால் நிறைந்த குலமேயாகினும் ஸ்திரீ ஸம்பந்தவிஷயத்தில் பத்துக் குலங்களைவிடவேண்டுமென்று மநுகூறினார். அவையாவன;—சுருதி களிலும் ஸ்மிருதிகளிலும்சொல்லிய கிரியைகளினுடைய அநுஷ்டா னமில்லாதது, புருஷனில்லாதது, வேத மோதுதலில்லாதது, மயிர்க ளாலடர்ந்த தேகமுடையது, மூலரோகமுடையது, க்ஷயரோகமு டையது, நோயாளிகளையுடையது, அபஸ்மாரமென்னும் ரோகமுடை யது, வெண்குஷ்டமுடையது, மற்றுங் குஷ்டநோயுடையது ஆகிய இவைகளே. பதினான்கு குலங்களை விடவேண்டுமென்றுயமஸ்மி ருதி சொல்லுகின்றது. அவையாவன;—ரிஷிப்பிரவரம் தெரியாதகு லம், பிராம்மணர்களில் ருத்துவிக்கு வேலைசெய்கிறவர்களின் (யக் கியத்தில் சாதகாசாரியர்களின்) குலம், அதிக நீளமானவர்களுடைய

குலம், மிகவும் குள்ளமானவர்களின்குலம், அதிக நிறமுடையவரின் குலம், அங்கக்குறைவுடையவரின் குலம், அதிகமான அங்கமுடையவரின் குலம், நோயாளிகளை யுடையவரின் குலம், வெண் குஷ்டமுடையவரின் குலம், மற்றுங் குஷ்டரோக முடையவரின் குலம், எப்பொழுதும் காம வேதனையுடையவரின் குலம், அதிக மயிர்களையுடையவரின் குலம், பைத்தியம்பிடித்த பரம்பரையுடையவரின் குலம், பாண்டுவியாதி பரம்பரையுடையவரின் குலம் ஆகிய இந்தக்குலங்களே. அந்தந்தக் குலத்திற்குத்தக்க குணம் சரீரம் இவைகளை யுடையவர்களாகவே பிரஜைகள் ஜநிக்கிறார்களென்று ஹாரீத ஸ்மிருதியும்,பிள்ளைகள் அம்மானையும் பெண் சில அம்சத்தில் பிதாவையும் குணத்தினால் தாயையும் அநுஸரித்து ஜநிக்கிறார்களென்று புராணஸாரமும், பத்துத் தலைமுறையாகப் பிரசித்தமான மஹா வைதிக குலத்தில் பெண்ணைக் கொள்ளவேண்டுமென்று யாக்கிய வல்கிய ஸ்மிருதியும்,தன்குலத்திற்கு ஒரு உத்கர்ஷத்தை உண்டு பண்ண விரும்பினவன் தன்னிலும் உத்தமர்களோடு சம்பந்தத்தைச்செய்து தாழ்ந்தவர்களோடு சம்பந்தத்தை விடக் கடவனென்றும், சுருதி ஸ்மிருதிகளால் விதிக்கப்பட்ட கர்மங்களை அநுஷ்டித்துச் சுத்தரானவர்களும் பிர்ம்ம சரியம் தவறாதவர்களும்,மஹாகுலத்தில் ஜநித்தவர்களும், அப்படிப்பட்ட குலத்தில் ஸம்பந்தம் செய்தவர்களும், பெரியோர்களின் தன்மையைவிடாதவர்களும்,நித்திய சந்தோஷிகளும், பெரியோர்களுக்குப் பிரியத்தைச்செய்பவர்களும், சாதுக்களும், ஸமதிருஷ்டியுடையவர்களும், காமக்குரோத லோப மோஹ மத மாத்ஸரியங்களில்லாதவர்களும், கோபமில்லாதவர்களும், தெளிவுற்ற மனம் முகம் இவைகளையுடையவர்களுமான இப்படிப்பட்டவர்களைத் தனக்குச் சம்பந்திகளாகச் செய்துகொள்ளவேண்டுமென்றும், திருடர்,கோட்சொல்லுவோர், நபும்ஸகர், நாஸ்திகர், சாஸ்திரவிருத்தமாகிய தொழிலையுடையவர், கோரமானரூபத்தை யுடையவர், சூரர்களைத் துவேஷிக்கிறவர், ராஜத்துரோகிகள், பிராம்மணதநத்தைத் திருடித் தின்னுகிறவர், ஈகையில்லாதவர், நிந்திக்கப்பட்டவர், பிள்ளையில்லாதவர், பெண்களையே பெறுகிறவர் இவர்களுடைய வம்சத்தில் பெண்ணைக் கொள்ளலாகாதென்றும் மனுஸ்மிருதியும் கூறுகின்றன.

பெண்ணைக் கொடுக்கவேண்டிய பிள்ளைவிஷயத்தில் அவன் குலம், சீலம், தேகம், கீர்த்தி, கல்வி, பொருள் இவைகளையும் அவனை ரக்ஷிக்கும் புருஷனையும் ஆராய்ந்து கந்நிகையைக் கொடுக்க வேண்டுமென்று யமமுனிவரும்,தன் வர்ணத்தவனும்,வேதமோதின

வனும், பிரயத்தினப்பட்டாவது ஆண்தன்மை விஷயத்தில் பரிக்ஷை செய்யப்பட்டவனும், யௌவந பருவமுடையவனும், நல்ல புத்தியுடையவனும், ஜநங்களுக்குப் பிரீதியைச்செய்பவனுமான புருஷனே கந்நியா தாநத்தைப் பெறுவதற்குத் தக்கவனென்று யாக்கியவல்கியரும், எவனுடைய பீஜம் ஜலத்தில் மிதக்கிறதோ எவனுடைய மூத்திரமானது இரைந்துகொண்டு நுரையுடன் விழுகிறதோ அவனே புருஷனென்றும், இந்த லக்ஷணங்கள் எவனுக்கு மாறியிருக்கின்றனவோ அவன் நபும்ஸகனென்றும், பதினான்கு வகையினராகிய நபும்ஸகர்களில் சிலர் வைத்தியம் செய்துகொள்ளத் தக்கவர்களென்றும், சிலர் வைத்தியத்திற்கு அஸாத்தியர்களென்றும், அவர்களில் ஜன்மந்தொடங்கி நபும்ஸகனாயிருப்பவன் நிஸர்க்கஷண்டனென்றும், பீஜமுடைந்தவன் வத்திர ஷண்டனென்றும், பதினைந்துநாள் ஸ்திரீயினால் பிரார்த்திக்கப்பட்டும் ஒருநாளே ஸ்திரீ ஸம்போகஞ் செய்யத்தக்கவன் பக்ஷஷண்டனென்றும, குரு சாபத்தினால் நபும்ஸகனானவன் அபிசாபஷண்டனென்றும், நோயால் நபும்ஸகனானவன் ரோகஷண்ட னென்றும், தைவ கோபத்தினால் நபும்ஸக னானவன் தெய்வீக ஷண்டனென்றும், மற்றொருவருடைய காமலீலைகளைக்கண்டு பொறாமையால் புருஷத் தன்மையை அடைகிறவன் ஈர்ஷியாஷண்டனென்றும், ஸ்திரீகளே வந்து உபசரித்த பின்பு புணருகிறவன் ஸேவியஷண்டனென்றும், வாயுவினால் சுக்கிலம் வற்றி நபும்ஸகனானவன் வாதரேதஸ் என்றும், முகத்திலேயே புருஷசக்தியுடையவனாகி யோனியில் பும்ஸ்துவ சக்தியற்றவன் முகேபகனென்றும், சுக்கிலத்தை அடக்கிவிட்டவன் ஆக்ஷிப்தஷண்டனென்றும்,போக சக்தியிருந்தும் கர்ப்பவிஷயத்தில் வியர்த்தமான பீஜமுடையவன் மோகபீஜனென்றும், தைரியம் இராமையால் அல்லது அதிக சம்போகத்தினால் ஆண்தன்மை ஒழிந்தவன் சாலீநஷண்ட னென்றும், தன்மனைவிதவிர மற்றஸ்திரீகளிடத்தில் பும்ஸ்துவமுள்ளவன் அந்நியாபதிஷண்டனென்றும் சொல்லப்படுகிற இந்தப்பதினான்கு நபும்ஸகபேதத்தையும் சோதித்து நிர்த்தோஷமானவனுக்குக் கந்நிகையைத் தாநம்செய்யவேண்டுமென்றும், பிள்ளைகளைப் பெறுவதற்கே ஸ்திரீ ஜாதி ஸ்ருஷ்டிக்கப்பட்டு ஸ்திரீ நிலமாயும், புருஷன் விதையாயுமிருப்பதால் நிலத்தை விதையுள்ளவனுக்கே கொடுக்கவேண்டுமென்றும், வித்தில்லாதவன் நிலத்தைப் பெறத்தக்கவ னன்றென்றும் நாரதரும் சொன்னார்கள்.

தூரதேசத்திலிருப்பவன், வித்தையில்லாதவன், மோக்ஷ தர்மத்தை அநுஷ்டிக்கின்ற வைராக்கிய சீலன், சூரன், தரித்திரன் இவர்களுக்குக் கந்நிகையைக் கொடுக்கலாகா தென்று காத்தியாயநர் சொன்னார். ருதுபருவம் வராத கந்நிகையைக் குணவானாகிய பிர்ம்மசாரிக்குக் கொடுக்கவேண்டுமென்றும் அந்தப்பெண் ருதுபருவத்தை அடைந்திருந்தால் அவளைக் குணமில்லாதவனுக்காகிலும் கொடுத்துவிடவேண்டுமே யல்லது வீட்டில் வைத்திருக்கலாகாதென்றும் போதாயநரும், பெண் ரஜஸ்வலையாகிவிட்டபோதிலும் அவளை மரணமளவும தன் வீட்டில்வைத்திருக்கலாமேயன்றிக் குணமில்லாதவனுக்குக் கொடுக்கக் கூடாதென்று மனுவும் சொன்னார்கள். இந்த மனுவசநத்திற்குக் குணமுடையவன்கிடைக்கும்பக்ஷத்தில் குணமில்லாதவனுக்குக் கந்நிகையைக் கொடுக்கக்கூடா தென்பது கருத்து. தன் பெண்ணுக்கு ருதுகாலம் வரப்போகிறதென்னும் பயத்தினால் பிதாவானவன் தன் பெண்ணை ருதுகாலத்திற்கு முன்னமே தாநம் செய்யக்கடவனென்றும் அவள் ருதுவாகிவிட்டால் பிதாவானவன் தோஷத்தை அடைகிறானென்றும் வசிஷ்டர் சொன்னார்.

ஸ்திரீகளுக்கு மனதில் காமம் தோன்றும் காலம்வந்தால் சோமதேவனும், ருதுபருவம் வந்தால் கந்தருவனும், ஸ்தனம் புறப்பட்டால் அக்நிதேவனும் அவர்களை அநுபவிக்கிறார்க ளாகையால் கந்நிகை ரஜஸ்வலையாவதற்கு முன்னமே பிதா அவளை யோக்கியனாகிய ஒருவனுக்கு விவாகம் செய்விக்கவேண்டுமென்று ஸம்வர்த்தர் சொன்னார். புருஷர்களினெதிரில் ஒருபெண் லஜ்ஜை யடைந்துதன் யோநி முதலிய அங்கங்களை எவ்வளவுகாலம் வரையில் மறைத்துக் கொள்ளவில்லையோ அதுவரையிலும் அவள் கந்நிகை யென்னப் படுவாளென்று புராணசாரத்தில் சொல்லப்பட்டது. எட்டு வயதுடைய பெண் கௌரி என்னப்படுவள், அவளைத்தாநம்செய்தவன் சுவர்க்கலோகத்தை அடைகிறானென்றும், ஒன்பதுவயதுடையவள் ரோஹிணி என்னப்படுவள், அவளைத்தாநம் செய்தவன் வைகுண்டத்தை அடைகிறானென்றும், பத்துவயதுடையவள் கந்நியென்னப்படுவள், அவளைத்தாநம் செய்தவன் பிர்ம்மலோகத்தை அடைகிறானென்றும், அதற்குமேல் ரஜஸ்வலை என்னப்படுவள், அவளைத்தாநம் செய்தவன் ரௌரவமென்னும் நரகத்தை அடைகிறானென்றும் மரீசி யமமுனி இவர்களும், ஒரு பெண் எட்டாம்வயதில் கௌரியென்றும் ஒன்பதாம்வயதில் நக்கிநிகை யென்றும் பத்தாம் வயதில் கந்நிகையென்றும் பன்னிரண்டாம் வயதில் விருஷலியென்றும் சொல்லப்படுவளென்

று ஸம்வர்த்தரும் சொன்னார்கள். பிதாவானவன் தன் பெண்ணைத் தானே கந்நிகாதாநம் செய்ய வேண்டு மென்றும், அப்படிக்கன்றி அவனுடைய அநுமதிபெற்றுப் பெண்ணுக்கு மூத்த ஸகோதரனாவது மாதாமகன் அம்மான் ஞாதி முதலிய மற்ற பந்துக்களாவது தாயினுடைய அல்லது தகப்பனுடைய வம்சத்தார்களில் வேறொருவராவது செய்யலா மென்றும், ஒருவரும் இல்லா விட்டால் அந்தப்பெண் அரசனை அடைந்து அவன்வழியாக விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்றும் நாரதர்சொன்னார். கீழ்ச்சொன்னவர்களில் எவனாவது கந்நிகையை ஒருவனுக்குக் கொடாவிட்டால் அவன் அந்தப்பெண்ணினுடைய ருதுகாலங்கள் தோறும் ஒவ்வொரு சிசுஹத்தி தோஷத்தை அடைகிறானென்று யாக்ஞியவல்கியர் சொன்னார். விவாகமின்றியே ருதுவாகி விட்டபெண் மூன்று வருஷம் வரையில் பிதாவின் அநுமதியை எதிர் பார்த்திருந்து அவன் தனக்கு விவாகம் செய்விக்காத பட்சத்தில் பின்பு தானே ஸ்வயம்வரமாகப் பதியை அடைய வேண்டு மென்று மனு சொன்னார். ஸ்திரீகளானவர்கள் பிர்ம்மவாதினி ஸத்யோவதூ என இரண்டு வகையினரென்றும் அவர்களில் பிர்ம்மவாதினிக்கு உபநயநமும், பிதா சிறியதகப்பன் தமயன் இவர்களிடத்தில் வேதமோதலும், காயத்திரி ஜபமும், அக்நிகாரியமும், தன் கிருஹத்தில் பிக்ஷையைக் கிரகித்தலும் உண்டென்றும் ஸத்தியோவதூவுக்கு விவாகம் நேரிட்டதருணத்தில் உபநயனமாத்திரம் செய்து பின் விவாகம் செய்விக்கவேண்டுமென்றும் ஹாரீதர் சொன்னது முன் கல்பத்திய தர்மமென்று யமஸ்மிருதி சொல்லுகிறது. பிராம்மம், தெய்வம், ஆர்ஷம், பிராஜா பத்தியம், ஆஸுரம், காந்தர்வம், ராக்ஷஸம், பைசாசம் என்று எட்டுவிதமானவிவாகங்களில் வஸ்திராபரணங்களால் பெண்ணை அலங்கரித்து வித்தை அநுஷ்டாநம் இவைகளையுடைய பிள்ளையை அழைத்துப் பிதாதானே கொடுப்பது பிராம்ம விவாகமென்றும், யக்ஞியத்தில் ருத்துவிக்காயிருப்பவனுக்குப் பெண்ணை அலங்கரித்துக்கொடுப்பது தைவ விவாகமென்றும், ஒரு பசுவையும் ஒரு எருதையும் அல்லது இரண்டுபசுக்களையும் இரண்டு எருதுகளையும் அப்போது தான் செய்கிற தர்மகர்மத்தின் விர்த்திக்காகவாவது அந்தப் பெண்ணுக்குக் கொடுப்பதற்காகவது கந்நியாசுல்கமாக எண்ணாமல் வரனிடத்தில் பெற்றுக்கொண்டு கந்நியாதானம்செய்வது ஆர்ஷ விவாகமென்றும், நீங்களிருவரும் கூடியிருந்து தர்மத்தை அநுஷ்டிக்கக் கடவீர்களென்று பிதாவானவன் சொல்லி

அல்ங்கரித்துச் செய்யுங் கந்நியாதாநம் பிராஜாபத்திய விவாகமென்றும், கந்நிகைக்கும் அவளுடைய பிதாமுதலிய ஞாதிகளுக்கும் தன் சக்தி உள்ளமட்டில் பொருளைக்கொடுத்து விதிநியமங்களைத் தவறித் தன்னிச்சையின்படி கந்நிகையைக்கொண்டுபோவது ஆஸுர விவாகமென்றும் பெண்ணும் பிள்ளையும் மனமொத்து இச்சையினுல் ஆலிங்கநாதியா யுள்ள புணர்ச்சியைச் செய்தால் அது காந்தர்வ விவாக மென்றும் தன்னைத் தடுக்கிற கந்நிகையின் பந்துக்களை அடித்தும் வெட்டியும் அய்யோவென்று கூச்சலிட்டு அழுகிறவளை அவள் வீட்டினின்றும் ஒருவன் தன் பலத்தினுல் கொண்டு போவது ராக்ஷஸ விவாக மென்றும் தூங்குகிறவளை அல்லது மதித்து அறிவில்லாதவளை அல்லது அதிக மதத்தினுல் நினைவு தப்பியிருப்பவளை ஒருவருக்குந் தெரியாதபடிப் புணருவது அதமமான பைசாச விவாக மென்றும் மனுவும், பிராம்மணனுக்கு முதல் சொன்ன நான்கு விவாகங்களும், க்ஷத்திரியனுக்குக் காந்தர்வமும் ராக்ஷஸமும் வைசியனுக்கும் சூத்திரனுக்கும் ஆசுரமும் தக்கவைகளாமென்றும் பைசாசம் யாருக்குந் தகாததென்றும் ஸ்மிருதி ஸங்கிரகக்காரரும் சொன்னுர்கள். பிர்ம்ம க்ஷத்திரிய வைசியர்கள் ஒருகால் காந்தர்வ முதலிய விவாகங்களைச் செய்தால் பின்பு அக்நி ஸாட்சியமாக விதிப்படிவிவாகம் செய்துகொள்ளக்கடவர்களென்று தேவலர் சொன்னுர். மந்திர பூர்வகமாக விவாகம் செய்யப்படாமல் பலாத்கரித்து அபகரிக்கப்பட்ட பெண் விவாகம் செய்யப்படாதவளாகையால் அவளை மீண்டும் பிதா முதலானவர்கள் வேறொருவனுக்கு விதிப்படி விவாகம் செய்து கொடுக்கலாமென்று வசிஷ்டரும் போதாயநரும் சொன்னுர்கள். தாயபாகம், கந்நியாதாநம், கொடுக்கிறே னென்று வாக்குத் தாநம், இவைகளை ஒருதரமே செய்ய வேண்டுமென்று மனு கூறினுர். ஒருவனுக்குக் கொடுக்கிறேனென்று வாக்குத்தாநம் செய்திருந்தபோதிலும் அவனிலும் உத்தமனுகிய வரன் கிடைத்தபட்சத்தில் அவனுக்குக்கந்நிகையைத் திருப்பிக்கொடுக்கலா மென்று யாக்ஞிய வல்கியரும் கௌதமரும் சொன்னுர்கள்.

வரனுடைய தோஷங்கள். பித்தனுயிருப்பவன், பதிதன், குஷ்டரோகமுடையவன், நபும்ஸகன், தன்கோத்திரத்தில் ஜநித்தவன், கண் காதுகளால் குறைந்தவன், அபஸ்மாரரோகமுடையவன் இப்படிப்பட்ட பிள்ளைக்குக் கந்நிகையைக் கொடுக்கலாகா தென்று காத்தியாயநரும், நிச்சயித்த வரனுக்குக் குலம் சீலம் இவைகளில்லாவிட்டால் அவைகளையுடைய வேறு வரனுக்குத் திருப்பிக்கொடு

த்துவிடலாமென்று சாதாதபரும், குல சீலங்களில்லாத வரனைவிட்டுப் பெண்ணைக் குல சீலங்களையுடைய வேறு வரனுக்குக்கொடுப்பது தோஷமல்லவென்று யம முனிவரும் சொன்னார்கள்.

கந்நியாதோஷப் பிரகரணம். கந்நிகைக்கு உண்டாயிருக்கும் தோஷங்களைச் சொல்லாமலே கந்நிகாதானம் செய்கிறவன் அரசனால் சிக்ஷிக்கத்தக்கவனென்றும், தீர்க்கவியாதியுடையவள், அங்கஹீனையாயிருப்பவள், ஒருவனோடு புணருகிறவள், அந்நியனிடத்தில் ஆசைவைத்திருப்பவள் ஆகிய இந்தப்பெண்கள் விவாகத்திற்குத் தகாதவர்களென்றும் தோஷமற்றவரனையும் பெண்ணையும் நிந்திக்கலாகாதென்றும், தோஷமிருந்தால் பெண்ணைப் புருஷனும் புருஷனைப் பெண்ணும் விடுவது தோஷமல்லவென்றும் நாரதரும் "ஸப்தபதீ" என்னுமொருவித கிரியையை (பதியோடு மந்திரபூர்வகமாக எழுஅடி நடந்து அம்மியிதிப்பதை) அநுஷ்டிக்கிறவனாயில் தோஷமுடையவர்களாகத் தெரிந்த பெண்ணை அல்லது வரனைவிடலாமேயல்லது ஸப்தபதியானவுடனே விவாக பூர்த்தியாகையால் அதற்குப்பின்விடக்கூடாதென்று யமமுனிவரும் சொன்னார்கள்.

தாராபூர்வகமாக அல்லது வாக்கினால் கொடுக்கப்பட்ட பெண்ணுக்கு நியமித்தவரன் மரணமடைந்தால் அந்தப்பெண்ணைப்பிதா அந்நியனுக்குக் கொடுக்கலாமென்று வசிஷ்டரும், ஒரு பெண்ணைத் தனக்கென்று நிச்சயித்தவன் தேசாந்தரத்தை அடைந்து திரும்பிவர மூன்றுவருஷமானால் பின்பு அந்தப்பெண்ணை வேறு ஒருவனுக்குவிவாகம் செய்து கொடுக்கவேண்டுமென்று காத்தியாயநரும், கந்நிகைக்குச் சுல்கத்தைக்கொடுத்து நிச்சயித்தவன் விவாகத்திற்குள் மரணமடைந்தால் அந்தப்பெண் சம்மதிக்கும் பக்ஷத்தில்அவளைமரித்தவனுடைய தம்பிக்குக் கொடுக்கலாமென்று மனுவும் சொன்ன இந்தவிதிகளெல்லாம் வாக்குதாநந் தொடங்கி ஸப்தபதியை அநுஷ்டிப்பதற்குள்ளாக என்று அறிக. இருபிறப்பாளருக்குத் தம்தம் வர்ணத்திய பெண்கள் அதாவது பிராம்மணனுக்குப் பிராம்மணப்பெண் என்றிந்த விதமாக விவாகத்திற்குத் தக்கவர்கள். காமபோகத்தில் ஆசையுடையவர்களான பிராம்மணாதிகள் அதற்காகக் கிரமமாகத் தனக்குத் தாழ்ந்த ஜாதிகளிலும் பெண்ணைக் கொள்ளலாம் அதாவது சூத்திரனுக்குச் சூத்திரஜாதிப் பெண்ணே விவாகத்திற்குரியவளாம், அவளுடன் தன்ஜாதிப்பெண்சேர்ந்து இரண்டுபேர் வைசியனுக்கும், அவ்விரண்டுபேர்களுடன் தன் ஜாதிப்பெண்சேர்ந்து மூன்றுபேர் க்ஷத்திரியனுக்கும் அம்மூன்றுபேர்களுடன் தன் ஜாதிப்பெண்சேர்ந்து

நால்வர் பிராம்மணனுக்கும் விவாகம் செய்துகொள்ளத் தக்கவர்களாமென்று மனு கூறினர்.

பின்னும் ஆபத்தில்கூட இருபிறப்பாளர் சூத்திர கந்நிகையை விவாகம் செய்யலாகா தென்றும் சூத்திர ஸ்திரீயின் அதரத்தைப் பாநம் செய்பவன், அவள் மூச்சுக் காற்று மேலேபடிய அவளோடு படுத்திருந்தவன்,அவளிடத்தில் ஸந்தாநத்தை உண்டுபண்ணினவன் ஆகிய இவர்களுக்குப் பிராயச்சித்தத்தால் சுத்தி விதிக்கப்படுகிறதில்லையென்றும் மனுகூறினர். பின்னும் சூத்திரயோனியில் விழுகிற பிர்ம்ம க்ஷத்திரிய வைசியர்களுடைய பீஜமானது ஆ! ஆ! மலக்குழியில் விழுந்தேன் காமத்தினல் அறிவுகெட்டு என்னைப்பதிதனுக்கின இந்த மஹாபாபி சீக்கிரத்தில் அதோகதியை அடையக் கடவனெனச் சபிக்கிறதென்று அசுவமேதபருவம் கூறுகிறது. இருபிறப்பாளர் சூத்திர கந்நிகையை விவாகம்செய்துகொண்டால் அவளிடத்தில் தாங்கள் புத்திரர்களாக ஜனித்துச் சூத்திரர்களாகிறபடியால் இருபிறப்பாளருக்குச் சூத்திர கந்நிகையின் விவாகத்தை விதிப்பது தனக்குச் சம்மதமல்லவென்று யாக்கிய வல்கியரால் சொல்லப்பட்டதாகையால் இரு பிறப்பாளருக்குச் சூத்திரஸ்திரீயின் விவாகத்தைச்சொன்ன மநுவசநம் சிலர் மதத்தை அநுசரித்தது, அல்லது யுகபேதத்தைப்பற்றியது என்று வேறு ஸ்மிருதிகளால் ஸ்பஷ்டமாகிறது.

விவாகத்தில் பாணிக்கிரகணமாவது பிராம்மண கந்நிகையின் பெருவிரலோடு கூடின கையையும் க்ஷத்திரிய கந்நிகையின் பாணத்தையும் வைசிய கந்நிகையின் தாற்றுக்கோலையும் சூத்திர கந்நிகையின் வஸ்திரத்தின் தலைப்பையும் பிடிப்பதா மென்று பைடீநசி கூறினர். இவ்விதமாக விவாகம்செய்து கிருகஸ்த தர்மத்தை அநுஷ்டிக்கையில் ஸந்ததியைக் கோரினவன் ருது காலத்தில் பத்தினியைப் புணரக்கடவனென்றும் ஸ்திரீ ரஜஸ்வலையான நாள் தொடங்கிப் பதினறுநாள்அவளுக்கு ருதுகாலமென்றும் அதாவது கர்ப்பம் தரிக்கும் காலமென்றும் அதில் முதல் நாலுநாளையும் பகல்பொழுதையும் பர்வகாலங்களையும் விட்டு மற்ற இரட்டித்த நாளில் அவளைப் புணரக்கடவனென்றும் யாக்கியவல்கியர் மனுமுதலியவர்கள் விதித்தார்கள். பகலில் புணருகிறவன் தன் பிராணனை ஒழித்துவிடுகிருனென்றும்,ராத்திரியில் புணருகிறவன் பிர்ம்மசாரியாகிருன் (சாஸ்திரத்தைக் கடந்தவனல்லன்) என்றும் அதர்வணவேதமோதுகிறது. அமாவாசியை, அஷ்டமி, பர்வம், சதுர்த்தசி, மாஸப்

பிறப்பு இந்தநாள்களில் புணரக்கூடாதென்றும் முந்திய நாலுராத்திரிகளும் பதினோராவது பதின்மூன்றாவது ராத்திரிகளும் விலக்கப்பட்டன வென்றும் மனுவும், மகம் மூலம் இந்த இரண்டுநட்சத்திரங்களில் புணர்ச்சியைவிடவேண்டுமென்று யாக்கியவல்கியரும் கூறினார்கள். ஸ்திரீகளுக்குச் சுக்கிலம் அதிகமானால் பெண்ணும், புருஷனுக்குச் சுக்கிலம் அதிகமானால் பிள்ளையும் பிறப்பார்களாகையால் சுக்கில விர்த்தியின் பொருட்டுப் புருஷன் நல்ல ஆகாரத்தைப் புசிப்பவனாயும்,ஸ்திரீ மிதமான ஆகாரத்தைப் புசிப்பவளாயுமிருந்து புருஷஸந்ததியை விர்த்தி செய்ய வேண்டுமென்று பிரகஸ்பதி சொன்னார். அந்நிய ஸ்திரீகளைப்புணர மனதினாலும் நினைக்கக் கூடாதென்றும் அயல்மாதரைப் புணருவது இகத்திலும் பரத்திலும் அநர்த்தத்தை விளைவிக்குமென்றும் நினைத்து அறிவுடையவன் தன் மனைவியிடத்திலேயே ருதுகால கமநம் செய்யவேண்டு மென்று மநுகூறினார்.

இந்திரன் விசுவரூபரென்னும் தன் புரோகிதனைக்கொன்று அந்தப் பிர்ம்மஹத்தியை ஒருவருஷம் சுமந்து பலரால் பழிக்கப்பட்டு அதை மூன்று பங்காக்கி மண்ணுக்கும் மரங்களுக்கும் இரண்டுபாகத்தை வரத்துடன்கொடுத்து ஸ்திரீகளைக்கிட்டி மற்றுள்ளபாகத்தை வாங்கிக் கொள்ளவேண்டுகையில் அதை எற்றுக்கொண்டு அவர்கள் ருதுகாலத்தில் புருஷ ஸம்ஸர்க்கத்தினால் பிரஜைகளைப்பெறவும் கர்ப்பந்தரித்தும் பிரஸவ காலம்வரையில் புருஷருடன் புணரவும் தக்க வரம்வாங்கியிருப்பதைநினைத்துப் புருஷர்களும்தம்மனைவியரிடத்தில் காமிகளாகி அவர்களை ரட்சிக்கவேண்டுமாதலால் ருது வல்லாத காலத்திலும் அவர்களோடு புணரக்கடவர்களென்று யாக்கியவல்கியர் சொன்னார். புருஷன் ஜனிக்கும்போதே ரிஷிகள்கடன், தேவதைகள் கடன், பிதிர்க்கள் கடன் என்று மூன்று கடனோடு ஜனிக்கிறானென்றும் அவைகளில் பிர்ம்மசரியத்தினால் ரிஷிகள்கடனையும் யக்கியத்தினால் தேவர்கள் கடனையும் ஸந்ததியினால் பிதிர்க்கள் கடனையும் ஒழிக்கிறானென்றும் வேதம் சொல்லுகிறதாகையால் புத்திரன் ஜனிக்கும் வரையில்ருதுகாலகமநத்தைப் புருஷன் அவசியம் செய்யவேண்டுமென்று கூர்மபுராணம் கூறுகின்றது. ஒருபுத்திரன் ஜநித்தபோதே பிதிர்க்கடன் தீர்ந்தமையால் மற்றப்பிள்ளைகள் பிதாவின் காமத்தினால் ஜநித்தவர்களென்று மநுசொன்னார். ஆகிலும்வேதத்தில் பலவிடங்களிலும் வெகு புத்திரர்களை ஜநிப்பிக்கவேண்டுமென்று சொல்லப்படுவதுடன் மஹாபாரதத்தில் ஒற்றைக்கண்ணுடையவன் கண்

னுடையவ னல்லனென்றும் ஒரு பிள்ளையுடையவன் பிள்ளையைப் பெற்றவனல்லனென்றும் கூறுகிறபடியாலும் ஸந்ததி பெருகுவதற்கும் கயாக்ஷேத்திரத்தில் சென்று பிதிர்க்களைத் திருப்தி செய்விப்பதற்கும் வெகு புத்திரர்களைப் பெறுவது தர்மமென்று சொல்லப்பட்டது. பிராம்மணஸ்திரீக்குக் கர்ப்பந்தரிக்குங் காலம் ருதுகாலத்தில் முதல் நாலுநாள்தள்ளி மற்றப் பன்னிரண்டுநாளும், க்ஷத்திரிய ஸ்திரீக்குப் பத்துநாளும், வைசியஸ்திரீக்கு எட்டுநாளும், சூத்திர ஸ்திரீக்கு ஆறு நாளுமென வேதத்தில் சொல்லப்பட்டதென்று தேவலர் கூறினர். ஸ்நாநம் செய்த தினமான நாலாவதுநாள் புணர்ந்தால் அல்பாயசான பிள்ளை ஜநிக்கிருனென்று வியாஸர் அருளிச்செய்தார். ரஜஸ்வலையாயிருந்து ஸ்நாநம் செய்தவளை அந்த நாலாவது ராத்திரியில் புணர்ந்தவன் அல்பாயுஸை அடைகிருன் அல்லது வித்தை ஆசாரம் இவைகளற்றுப் பதிதனும் அயல்மாதரைத் தேடுகிறவனும் மஹாதரித்திரனுமான புத்திரன் ஜநிக்கிருனென்றும் ஆகையால் அந்தநாள் விடத்தக்கதென்றும் ஐந்தாநாளில் விதிப்படி புணர்ந்தால் பெண்ணும்,ஆருவது நாளில் நல்லபுத்திரனும்,ஏழாவது நாளில் பெண்ணும், எட்டாவது நாளில் செல்வ மிகுந்தபிள்ளையும்,ஒன்பதாவது நாளில்பெண்ணும்,பத்தாவதுநாளில் பண்டிதனும், பதிஞேராவதுநாளில் பெண்ணும்,பனிரண்டாவதுநாளில் தர்மதத்துவங்களை நன்ருயறிந்த புத்திரனும், பதின்மூன்ருநாளில் ஜாதியைக் கெடுக்கும் பெண்ணும்,பதினன்காவது பதினைந்தாவது பதினருவது நாள்களில் கல்வியில்சிறந்தவனும் தர்மசீலனுமான புத்திரனும் பிறக்கிருர்களென்றும்லிங்கபுராணம் சொல்லுகிறது. ஒருவன்தான்வியாதிஸ்தனயும் அல்லது சிறையில் வைக்கப்பட்டும் அல்லது தேசாந்தரத்தை அடைந்தும் இருக்கையிலும் பர்வகாலமா யிருக்கையிலும் தன் மனைவி வயது சென்றவளாகவாவது மலடியாகவாவது கெட்டநடையுடையவளாகவாவது இருக்கையிலும் ருதுகமநம் செய்யாமையால் அவனுக்குப் புருணஹத்திதோஷமில்லை என்று வியாஸரும்,தகப்பன்,தாய்,உடன்பிறந்தவன்,பதி, மைத்துனன்,இவர்களால் ஸ்திரீகள் ஆடையாபரணங்களால் அலங்கரித்துச் சன்மானிக்கத்தக்கவர்களென்றும், மங்களத்தைக் கோரினவர்களிப்படியே செய்ய வேண்டு மென்றும்,எந்த வீட்டில் ஸ்திரீகள் உபசரிக்கப்படுகிருர்களோ அங்குத் தேவதைகள் ஆநந்திக்கிருர்களென்றும், எந்தவீட்டில் ஸ்திரீகள் பூஜிக்கப்படவில்லையோ அங்குச்செய்யும் ஸகல கிரியைகளும் நிஷ்பலங்களென்றும், ஜாமிக ளென்னப்படுகிற அதாவது

தன் வீட்டில் பிறந்த பெண்களும் தன் வீட்டிற்கு வந்த பெண்களும் எந்தவீட்டில் துக்கிக்கிறார்களோ அந்தவீடு அல்லது வம்சம் நசிக்கிறதென்றும், அவர்கள் எங்கு சந்தோஷிக்கிறார்களோ அந்தக்குலம் விர்த்தியை அடைகிறதென்றும், ஜாமிகள் வஸ்திராபரணாதிகளால் உபசரிக்கப்படாமல் எந்த வீடுகளைச் சபிக்கிறார்களோ அவைகள் பூதங்களால் ஆக்கிரமிக்கப்பட்டவைபோல் விரைவில் நசிக்கின்றனவென்றும் மநுவும் சொன்னார்கள்.

பர்த்தாவானவன் பாரியையினால் சந்தோஷ மடைந்தவனும் பாரியையானவள் பர்த்தாவினால் சந்தோஷமடைந்தவளாயும் எந்த வீட்டிலிருக்கிறார்களோ அந்த வீட்டில் அல்லது அந்தக்குலத்தில் மங்களம் நிச்சயமா யுண்டாகு மென்று மனு சொன்னார். எந்த ஸ்திரீயானவள் வியபிசாரம் செய்கிறாளோ அவளை வீட்டில் அதிகாரமற்றவளாயும், வஸ்திராபரணங்கள் அப்பியங்கஸ்நாநம் முதலியவைகளின்றி பிராணனைத் தரிப்பதற்கு ஏற்றதான ஆகாரமாத்திரத்திற்கு உரியவளாயும், தாழ்ந்த சொற்களால் அவமதி செய்யப்படுகிறவளாயும், தரையில் சயநிப்பவளாயும், அவள் பர்த்தா அவளைத் தனியேவைத்து வைராக்கிய முண்டாவதற்காக இவ்விதமாகச் செய்யக்கடவனென்றும் இரண்டாவது ஒருத்தியை விவாகம்செய்தவன் தனக்கு முதல் மனைவியிருந்தால் அவளைக் கிரமமாக ரக்ஷிக்கவேண்டுமென்றும், கள்குடிப்பவள், தீர்க்கவியாதியுடையவள், எதையும் ஒத்துக்கொள்ளாதவள், மலடி, பொருளை அழிப்பவள், பிரியமாகப்பேசாதவள், பெண்களையே பெறுபவள், பதியைத் துவேஷிப்பவள். ஆகிய இந்த ஸ்திரீகளைவிடவேண்டுமென்றும் யாக்கியவல்கியர் சொன்னார். தர்மத்திற்கு விரோதம் செய்கிறவளும், பதிவிரதையாகாதவளும், தீர்க்க ரோகமுடையவளும், கடுஞ்சொல்லுடையவளுமாகிய மனைவியை விட்டுத்தர்மத்தைப் பரிபாலநம் செய்வதற்காக வேறொருத்தியை மணம் புரிந்து முன் மனைவியையும் ரக்ஷிப்பதோடு அவள் போகத்தையும் விடலாகாதென்றும் பிர்ம்மபுராணம்சொல்லுகிறது. ஒரு மனைவிக்குமேல் மற்றொரு மனைவியை மணம்புரிவதற்கு முதல் மனைவியிடத்தில் குற்றத்தைச் சிலகாலம் சோதிக்க வேண்டு மென்றும் அதாவது மலடியை எழுவருஷம்வரையில் பார்த்து எட்டாம் வருஷத்திலும் சாப்பிள்ளைப் பெறுகிறவளை ஒன்பது வருஷம்வரையில் சோதித்துப் பத்தாம்வருஷத்திலும் பெண்களையே பெறுகிறவளைப் பத்துவருஷம் சோதித்துப் பதினோராம் வருஷத்திலும், கடுஞ் சொற்களால் வாது செய்பவளை அந்த க்ஷணத்திலும்

நீக்கிவிட்டு வேறொருத்தியை விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்றும், பாரியையானவள் தீராத நோயுடையவளாயிருந்தும் தனக்கு ஹிதத்தைச் செய்கிறவளாயும் நல்ல நடத்தை யுடையவளாயுமிருந்தால் பர்த்தாவானவன் அவளை அலட்சியம்செய்யாமல் அவளுடைய சம்மதியைப்பெற்று வேறொருத்தியை மணம் புரியலாமென்றும் மநுசொன்னர். வேறொருத்தியை மணம் புரிவது தர்மத்தின்பொருட்டென்றும் காமத்தின் பொருட்டென்று மிருவகைப் படுமென்றும், அதில் தர்மத்தின் பொருட்டான விவாகத்தில் மூத்த மனைவிக்கு முன் சொல்லிய குற்றங்களிருப்பது காரணமாகுமென்றும், காமத்தின் பொருட்டான விவாகத்தில் முதல்மனைவியினிடத்தில் குற்றமிருக்கவேண்டுவதில்லையென்றும், ஒருமனைவிக்கு அதிகமாகக் காமபோகத்திற்கு வேறொருத்தியை விவாகம் செய்கிறவன் முதல் மனைவியைச்சந்தோஷிப்பிக்கத்தக்கவனுகில் அப்படிசெய்யலாமென்றும் வேறு ஸ்மிருதியில்சொல்லப்பட்டது. பதியின் சொல்படி நடப்பவளும் பதி சிசுரூஷையில் சாதுரியமுள்ளவளும் ஆண்மக்களைப் பெறுகிறவளும் பிரியத்தைச்சொல்பவளுமாகிய மனைவியை நீக்கிவிடுகிறவன் தன் திரவியத்தில் மூன்றிலொரு அம்சத்தை அவளுக்குக் கொடுக்கவேண்டுமென்றும், அவன் பொருளில்லாதவனுனல் அன்ந வஸ்திரங்களைக் கொடுத்து அவளை ரக்ஷிக்க வேண்டுமென்றும், யாக்கிய வல்கியரும், தன்பதியானவன் மற்றொருத்தியை மணம்புரிந்த பின்அவனிடத்தில் பகைகொண்டவளாய் மூத்தமனைவி வீட்டிவிருந்து வெளியேபோக இச்சித்தால் அவளைப் போகவொட்டாமல் புருஷன் தடைசெய்யவேண்டுமென்றும், அப்படி யல்லாவிட்டால் அவளைத்தாய்வீட்டுக்கு அனுப்பிவிடவேண்டுமென்றும், இருபிறப்பாளர் தமது ஜாதி மனைவியையும் இதரஜாதி மனைவியையும் அநுபவித்தால் அவர்களில் பதியின் சரீரத்திற்குரிய பணிவிடையையும், தர்மாநுஷ்டாநங்களையும், நித்திய கர்மங்களையும், தந்தம் ஜாதி மனைவியரே செய்ய வேண்டுமே யன்றி இதர ஜாதி மனைவிகள் செய்யலாகாதென்றும் மநுவும்,இரு பிறப்பாளருக்குத் தந்தம் ஜாதிமனைவியரே தர்மகாரியத்திற் குரியவர்களென்றும், அவர்கள் வெகுபேர்களாகில் மூத்தவளொழிய இளையவள் அதற்குரியவள் அல்லளென்றும் யாக்கியவல்கியரும், முதல்மனைவி தர்மத்தின் பொருட்டு வந்தவளென்றும்,இரண்டாவது மனைவி காமவிர்த்தியின்பொருட்டு வந்தவளென்றும்,அவளிடத்தில் திருஷ்டபலனான சந்ததி விர்த்தி முதலிய பலனேயன்றி அதிருஷ்டபலனான தர்மங்கள் கிடையாவென்றும்,

யக்ஞிய கிருத்தியத்தை இருபிறப்பாளன் தன் மூத்தமனைவியோடு கூடிச் செய்யவேண்டுமே யல்லது மூத்தவளிருக்கையில் இளையவளோடு கூடிச்செய்யக் கூடாதென்றும் விஷ்ணுவும் சொன்னார்கள்.

விவாகம் செய்துகொண்டவர்களான

பிராம்மணஸ்திரீக்கும் பிராம்மணனுக்கும்ஜநித்தவன் பிராம்மணனும்,
க்ஷத்திரியஸ்திரீக்கும் க்ஷத்திரியனுக்கும் ஜநித்தவன் க்ஷத்திரியனும்,
வைசியஸ்திரீக்கும் வைசியனுக்கும் ஜநித்தவன் வைசியனும்,
சூத்திரஸ்திரீக்கும் சூத்திரனுக்கும் ஜநித்தவன் சூத்திரனுமாவார்கள்.

இவர்கள் ஸஜாதீயர் (ஒத்தஜாதியை யுடையவர்) என்று மநு யாக்ஞிய வல்கியர் இவர்கள் சொன்னார்கள்.

அநுலோம பிரதிலோமஜாதி நிரூபணப்பிரகரணம்.

விவாகம் செய்துகொண்டவர்களான

க்ஷத்திரியஸ்திரீக்கும் பிராம்மணனுக்கும் பிறந்தவன் மூர்த்தாவஸிக்தன் (பிராம்மணனை யொத்தக்ஷத்திரியன்),
வைசிய ஸ்திரீக்கும் பிராம்மணனுக்கும் பிறந்தவன் அம்பஷ்டன் (பிராம்மணனையொத்த வைசியன்),
சூத்திரஸ்திரீக்கும் பிராம்மணனுக்கும் பிறந்தவன் நிஷாதன் அல்லது பாரசவன் (பிராம்மணனையொத்த சூத்திரன்),
வைசியஸ்திரீக்கும் க்ஷத்திரியனுக்கும் பிறந்தவன் மாஹிஷியன் (க்ஷத்திரியனையொத்த வைசியன்),
சூத்திரஸ்திரீக்கும் க்ஷத்திரியனுக்கும் பிறந்தவன் உக்கிரன் (க்ஷத்திரியனையொத்த சூத்திரன்),
சூத்திரஸ்திரீக்கும் வைசியனுக்கும் பிறந்தவன் கரணன் (வைசியனையொத்தசூத்திரன்),

ஆகிய இந்த ஆறுபேரும் அநுலோம ஜாதியரென்றும் அதாவது விவாகம் செய்யப்பட்டவர்களான தாழ்ந்த ஜாதிப்பெண்களிடத்தில் பிறந்தவர்களென்றும், தாய் வம்சத்திய தர்மங்களை அநுஷ்டிக்கத் தக்கவர்களென்றும், ஜநித்த க்ஷேத்திரம் தாழ்ந்ததாகையால் எப்படி இவர்கள் ஜாதியில் தாழ்ந்தவர்களோ அப்படியே பீஜம் உத்தமமானதைப்பற்றி இவர்களுக்கு உயர்ந்தஜாதி வரவேண்டியதாகையால் இந்த ஆறுபேரும் தந்தை ஜாதியில் தாழ்ந்தவர்களும், தாய் ஜாதியில் உயர்ந்தவர்களுமாகி வேறு ஒருவித ஜாதியாகிறார்களென்றும், பிதிர்குலத்தைச் சேராதவர்களாகி (ஸதிருச ஜாதியர்) போலி

ஜாதியார் என்னப்படுவார்களென்றும் மநு யாக்கிய வல்கியர் நாரதர் இவர்கள் சொன்னார்கள்.

விவாகம் செய்யப்படாத

பிராம்மணஸ்திரீயிடத்தில் க்ஷத்திரியனுக்குப் பிறந்தவன் ஸூதன், க்ஷத்திரியஸ்திரீயிடத்தில் வைசியனுக்குப் பிறந்தவன் மாகதன், பிராம்மணஸ்திரீயிடத்தில் வைசியனுக்குப் பிறந்தவன் வைதேகன், வைசியஸ்திரீயிடத்தில் சூத்திரனுக்குப் பிறந்தவன் ஆயோகவன், க்ஷத்திரயஸ்திரீயிடத்தில் சூத்திரனுக்குப் பிறந்தவன் க்ஷத்தா, பிராம்மண ஸ்திரீயிடத்தில் சூத்திரனுக்குப் பிறந்தவன் சண்டாளன் (நராதமன்),

ஆகிய இந்த ஆறுபேரும் பிரதிலோமஜாதியரென்றும்(படிப்படியாகத்தாழ்ந்த ஜாதியரென்றும்) சூத்திரனால் பிறந்த மூவரும்ஜாதிக்கலப்புச்செய்பவர்களென்றும் மநு சொன்னார். இந்த அநுலோம பிரதிலோம ஜாதிகள் ஒன்றோடொன்று கலந்து அதனால் பிறந்தவர்கள் சுவபாகன் முதலிய ஜாதிகளென்றும் அவைகளின் விஸ்தாரம் புராணஸாரத்தில் கூறப்பட்டதென்றும் மாதவாசாரியர் உரைத்தார். இதில் சிலபாகம் மநுஸ்மிருதியினின்று எடுத்துரைக்கப் படுகிறது.

க்ஷத்திரியனுக்கும் சூத்திர ஸ்திரீக்கும்	ஜனித்த உக்கிரையினிடத்தில்	பிராம் மணனுக்குப் பிறந்தவன் ஆவிருதன்,
பிராம்மணனுக்கும் வைசிய ஸ்திரீக்கும்	ஜனித்த அம்பஷ்டையிடத்தில்	பிராம் மணனுக்குப் பிறந்தவன் ஆபீரன் (ஆவினம் மேய்ப்பவன்),
சூத்திரனுக்கும், வைசிய ஸ்திரீக்கும்	ஜனித்த ஆயோகவீயிடத்தில்	பிராம் மணனுக்குப் பிறந்தவன் திக்வணன் (எரு விற்பவன் அல்லது தோல்வேலைக்காரன்),

வைசியனுக்கு க்ஷத்திரிய ஸ்திரீயிடத்தில் ஜனித்தவன் மாகதன் (துதிசெய்கிறவன்),

வைசியனுக்குப் பிராம்மண ஸ்திரீயிடத்தில் ஜனித்தவன் வைதேஹன் (மரித்த ஜந்துக்களைவிற்பன்),

க்ஷத்திரியனுக்குப் பிராம்மண ஸ்திரீயிடத்தில் ஜனித்தவன் ஸூதன் (குதிரை ஓட்டுகிறவன்),

பிராம்மணனுக்கும் சூத்திர ஸ்திரீக்	ஜனித்த நிஷாதனுக்கும் சூத்திர ஸ்திரீக்கும்	ஜனித்தவன் புல்கஸன் (உடும்பு முதலிய ஜந்துக்களைப் பிடிக்குமொருவிதஜாதியான்)
பிராம்மணனுக்கும் சூத்திர ஸ்திரீக்கும்	ஜநித்த நிஷாதிக்கும் சூத்திரனுக்கும்	ஜனித்தவன் குக்குடகன் (கோழிபந்தயம் விடுகிறவன்),
சூத்திரனுக்கும் வைசியஸ்திரீக்கும் ஜனித்த க்ஷத்தாவுக்கும் க்ஷத்திரியனுக்கும் சூத்திர ஸ்திரீக்கும் ஜனித்த உக்கிரைக்கும்		ஜனித்தவன் சுவபாகன்(நாயைத்தின்னும்சக்கிலிஜாதி),
பிராம்மணனுக்கும் வைசியஸ்திரீக்கும்ஜனித்த அம்பஷ்டைக்கும் வைசியனுக்கும் பிராம்மண ஸ்திரீக்கும் ஜனித்த வைதேஹனுக்கும்		ஜனித்தவன் வேணன்(கடவாத்தியம் வாசிப்பவன்),
பிராம்மணனுக்குப் பிறந்து உபநயநத்தைத் தவறிப்போன வ்ராத்தியனுக்கும், பிராம்மண ஸ்திரீக்கும்		ஜனித்தவர் தாழ்ந்ததொழிலையுடையபிராம்மணராகிய (பூர்ஜகண்டகன், ஆவந்தியன், வாடதாநன், பௌஷ்பதன், சைகன், இவர்களே),
க்ஷத்திரிய வ்ராத்தியனுக்கும் க்ஷத்திய ஸ்திரீக்கும்		ஜனித்தவர் சல்லன் (நிதி எடுப்பவன்),மல்லன் (மல்லயுத்தக்காரன்), நிச்சிவி, நடன் (கூத்தாடி), கர்ணன் (ஊர்கணக்கெழுதுகிறவன்), கஸன், திரவிடன், இவர்களே.
வைசிய வ்ராத்தியனுக்கும் வைசிய ஸ்திரீக்கும்		ஜனித்தவர்ஸுதந்வா, ஆசாரியன்,காருசன்,விஜந்மா, மைத்திரன்,ஸாத்வதன்இவர்களே.
தஸ்ய என்பவனுக்கும் ஆயோகவிக்கும்		ஜனித்தவன் ஸைரந்திரன் (தலைமயிர் சீவுதல் கோலமிடுதல் முதலிய வேலைகளைச் செய்கிறஜாதியான்),
வைதேகனுக்கும் ஆயோகவிக்கும்		ஜனித்தவன் மைத்திரேயன், (காலையில் அரசனை எழுப்பி இனியவையுரைப்பவன்.)

நிஷாதனுக்கும் ஆயோகவிக்கும்	ஜனித்தவர் மார்க்கவன் (வேட்டைக்காரன்) தாசன் (ஓடக்காரன்), கைவர்த்தன் (மீன் பிடிப்பவன்), இவர்களே.
நிஷாதனுக்கும் ஆயோகவிக்கும்	ஜனித்தவள் மார்க்கவீ (மரித்தவர் வஸ்திரத்தை உடுப்பதும் எச்சில் புசிப்பதும் செய்பவள்.)
நிஷாதனுக்கும் வைதேகஸ்திரீக்கும்	ஜனித்தவன் காராவரன் (தோல் பதஞ்செய்பவன்),
சண்டாளனுக்கும் வைதேகஸ்திரீக்கும்	ஜனித்தவன் பாண்டு சோபாகன் (மூங்கில் விற்பவன்),
நிஷாதனுக்கும் வைதேகஸ்திரீக்கும்	ஜனித்தவன் ஹிண்டிகன் (சிறைச்சாலை காப்பவன்),
சண்டாளனுக்கும் புல்கஸ ஸ்திரீக்கும்	ஜனித்தவன் ஸோபாகன் (ராஜாவின் உத்தரவினால் மரணதண்டனை செய்பவன்),
சண்டாளனுக்கும் நிஷாதஸ்திரீக்கும்	ஜனித்தவன் அந்தாவஸாயி (சுடலையைக் காப்பவன்), என்னப்படுவார்கள்.

பௌண்டரகன்	பாரதன்
ஔட்டரன்	அபஹ்லவன்
திரவிடன்	சீநன்
காம்போஜன்	கிராதன்
யவநன்	தரதன்
சகன்	கசன்.

ஆக இப் பன்னிருவரும் ஔட்டரதேசம் முதலியதேசங்களில் ஜனித்த க்ஷத்திரிய ஜாதியரும், ஜாதிக்குரிய கிரியை யில்லாதவர்களாகிச் சூத்திரத்தன்மையை அடைந்தவர்களும், தர்மங்களை உபதேசிக்கத்தக்க பிராம்மணர்களையே காணாதவர்களுமாகிறார்கள்.

பிராம்மண க்ஷத்திரிய வைசிய ஜாதிகளில் பிறந்து வெளிப்பட்டவர்களாகி மிலேச்ச பாஷையையும் ஆரியபாஷையையும் பேசிக்கொண்டிருப்பவர்கள் தஸ்யுக்களெனப்படுவார்கள்.

நான்கு வர்ணத்தாரில் யாரேனுமொருவனுக்கும் ஒருத்திக்கும் ஜநித்தவர்கள்.

பெயர்.		பொருள்.
ஸூதன்	—	குதிரைச்சாரதி
அம்பஷ்டன்	—	காயமாற்றுகிறவன்

பெயர்.		பொருள்.
வைதேகன்	—	அந்தப் புரத்தில் ஸ்திரீகளிட்ட வேலையைச்செய்கிறவன்
மாகதன்	—	வழியில் கடைவிற்பவன்
நிஷாதன்	—	வேடன்
ஆயோகவன்	—	மரத்தைச் சீவுகிறவன்
மேதகன், ஆந்திரன்	—	காட்டுமிருகங்களைக் கொல்லுகிறவர்கள்.
சுஞ்சு, முத்கன்	—	சுஞ்சுவும் முத்கனும் வைதேஹ ஸ்திரீக்கும் உக்கிரனைக்கும் கிரமமாகப் பிராம்மணனால் ஜநித்தவர்கள்
க்ஷத்தா	—	ஓட்டன் (எலிவளை தோண்டுவோன்)
உக்கிரன்	—	பாம்பு பிடிப்பவன்
பாதுகிருத்	—	பாதரக்ஷை தைப்பவன்
தைலிகன்	—	எண்ணெய் விற்பவன்
ரஜகன்	—	வண்ணான்
துந்நவாயன்	—	தைக்கிறவன்
தந்துவாயன்	—	ஆடை நெய்கிறவன்
ஸ்வர்ணகாரன்	—	தட்டான்
தக்ஷா	—	தச்சன்
சைலூஷன்	—	வேஷங்கட்டி ஆடுகிறவன்
ஸௌரேயன்	—	கள் விற்பவன்
ரங்காஜீவீ	—	சித்திரமெழுதுகிறவன்
நாபிதன்	—	க்ஷௌரஞ்செய்கிறவன்
குலாலன்	—	மட்பாத்திரஞ்செய்கிறவன்
சாகுநிகன்	—	சகுநஞ்சொல்லுகிறவன்

ஆகிய இவ்வித ஜாதியார் பலருளரேயாகினு மிங்கு மநு ஸ்மிருதியிலிருந்து சில எடுத்தெழுதப்பட்டன வென்றறிக.

கீழ்ச்சொன்ன ஜாதிகளில் தன் வர்ணத்தில் ஜநித்த ஸஜாதீயர் உத்தமரென்றும், அவர்களில் தாழ்ந்தவர் அநுலோம ஜாதியரென்றும், அநுலோமஜாதிக்கும் பிரதிலோமஜாதிக்கும் நடுவானவர்களாய்ச் சிலர் அநு லோமஜாதிக்குப் பிறந்து உத்தமர்களென்றும் சிலர் பிரதிலோம ஜாதிக்குப் பிறந்து அதமர்களென்றும் இருவகைப்பட்ட அந்தராளஜாதிய ராகினர்களென்றும் பிரதிலோம ஜாதிகள் நிலைகெட்ட தாழ்ந்த ஜாதியரென்றும் தேவலர் கூறினர். தாழ்ந்த ஜாதிக்கு உயர்வு ஏழாந் தலைமுறையில் அல்லது ஐந்தாந்தலைமுறையில் வருகிறதென்றும் இந்தத் தலைமுறையைக் கூடஸ்தர்களான

(மூல் புருஷர்களான) ஸ்திரீ புருஷர்களைத் தொட்டுக் கணக்கு செய்யவேண்டுமென்றும் யாக்கியவல்கியர் கூறினர். அதாவது பிராம்மணனும் சூத்திரஸ்திரீயும் கூடஸ்தர்கள். இது ஒரு தலைமுறை. அவர்களுக்குப் பிறந்தவள் சூத்திரப்பெண்ணிலும் சிறந்தவளான நிஷாதி கந்நிகை என்னப் படுவாள். அவளுக்குப் பிராம்மணன் பதியானல் இரண்டாந் தலைமுறையாகிறது. அவ்விருவருக்கும் பிறந்த கந்நிகை பிராம்மணனை விவாகம் செய்துகொண்டால் மூன்ருந் தலைமுறையாகிறது. அவ்விருவருக்கும் பிறந்த பெண்ணும் அவள் பதியான பிராம்மணனும் நான்காவது தலைமுறை. இவ்விதமாக எழாந்தலைமுறையில் பிறக்கின்ற பிள்ளை பிதாவோடொத்த பிராம்மணனேயாகிருன். இங்கு முதல் தலைமுறையில் உண்டான சூத்திரஸ்திரீயின் இழிவு எழுதலைமுறைவரையில் படிப்படியாகக் குறைவுபட்டு எட்டாந் தலைமுறையில் பிராம்மண ஸம்பந்த மகிமையினுல் பிராம்மண ஜாதியாகவே ஆகிறது. இது எழாந்தலைமுறையில் என்கிற யாக்கியவல்கிய வசநத்தின் கருத்து. இதுபோல் வைசியஸ்திரீயும் பிராம்மணனும் மூலபுருஷர்களாகி அவர்களுக்குப் பிறந்த பெண் அம்பஷ்டை என்னப்படுகிருள். அவளுக்குப் பிராம்மணன்பதியாகி இவ்விதமாக ஆருந்தலைமுறையில் பிறந்த எழாவது சந்ததி பிராம்மண ஜாதியே யாகின்றது. க்ஷத்திரியஸ்திரீக்குப் பிராம்மணன் பதியானல் அவளுக்குப் பிறந்த பெண் மூர்த்தாவஸித்தை யாகிருள். அவளுக்குப் பிராம்மணன் பதியாகி இவ்விதமாக ஐந்தாந்தலைமுறையில் பிறந்த சந்ததி பிராம்மண சந்ததியே யாகும். தாழ்ந்தஜாதி ஐந்து அல்லதுஆறு அல்லது எழு இந்தத் தலை முறைகளில் உயர்ந்த ஜாதியாகும் என்று யாக்கியவல்கியர் விகல்பமாகச் சொன்னதற்கு மூலபுருஷனைச் சேர்ந்த ஸ்திரீ அவனுக்குத் தாழ்ந்த இரண்டாவது ஜாதியாகி அங்கிருந்து அவர்கள் பெண்பரம்பரைக்குப் பதிகள்மூலபுருஷ ஜாதியாகவே வந்தால் ஐந்தாந் தலைமுறை மூல புருஷனேடொத்த சந்ததியும், மூலபுருஷனைச்சேர்ந்த ஸ்திரீ அவனுக்குத் தாழ்ந்த மூன்ரும் ஜாதியானல் அங்கிருந்து கீழ்ச் சொல்லியபடி ஆருந் தலைமுறை மூல புருஷனேடொத்த சந்ததியும், மூலபுருஷனைச் சேர்ந்தவள் அவனுக்குத் தாழ்ந்த நான்காவது ஜாதியானல் எழாந்தலைமுறை மூல புருஷனேடொத்த சந்ததியும் ஆகுமென்பதுகருத்து. சூத்திரஸ்திரீ வைசிய புருஷன், வைசிய ஸ்திரீ க்ஷத்திரிய புருஷன் இவர்களாலும் ஐந்தாந் தலைமுறையில் உத்தமஜாதி பிறக்கின்றது. சூத்திரஸ்திரீ க்ஷத்திரிய

புருஷ னிவர்களால் 'ஆறுந் தலைமுறையில் உத்தம ஜாதி பிறக்கின்றது. பின்னும் பிராம்மண க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் தந்தம் ஜாதிக்குரிய சேவகத்தொழில்களை விட்டு ஆபத் காலத்தில் மற்றொரு ஜாதிக்குரிய சேவகத் தொழிலைப்பற்றி ஜீவித்தபோதிலும் ஆபத்து ஒழிந்த பின் தமக்குரிய தொழிலைப்பற்றி இதர ஜாதித்தொழிலை விடவேண்டும் அப்படிவிடாதபட்சத்தில் அவர்கள் புத்திர பௌத்திராதிகளும் அந்தத் தொழிலையே செய்பவர்களாகி ஐந்து ஆறு, ஏழு இந்தத் தலைமுறையில் பிறந்த சந்ததி அந்தத்தொழிலுக்குரிய ஜாதியோடொத்த ஜாதியாகிறது. பிராம்மணன் சூத்திர விர்த்தியால் பிழைப்பவனுகி ஸந்ததியை உண்டு பண்ணினுல் அவன் புத்திர பரம்பரையாயும் அதையே செய்துவந்து ஜாதியும் படிப்படியாகக் குறைந்து ஏழாந்தலைமுறையில் பிறந்த ஸந்ததி முழுதும் சூத்திரஜாதியே ஆகிறது. இவ்விதமாகவே க்ஷத்திரியன் சூத்திரவிர்த்தியால் ஜீவித்தால் அவன் வம்சத்தில் ஆறுந் தலைமுறை சூத்திரஸந்ததியாகிறது. அப்படிப்பட்ட வைசியன் ஐந்தாந்தலைமுறையில் தன் வம்சத்தைச் சூத்திர வம்சமாக்குகிறுன். தாழ்ந்தவன் எப்போதும் தன் ஜாதியினும் உத்தமமான ஜாதியினுடைய ஜீவனத்தொழிலைச் செய்யலாகாது. ஆபத்தில் மட்டும் தனக்குத் தாழ்ந்த வர்ணத்தின் தொழிலால் ஜீவிக்கலாம் ஆகிய இந்த விஷயங்களை யாக்கியவல்கிய வசநத்தை அநுஸரித்து மாதவாசாரியர் உரைத்தார்.

இருபிறப்பாளருக்குச் சொல்லியிருக்கிற ஸம்ஸ்காரங்கள் நாற்பதில் கர்ப்பாதாநந் தொடங்கி விவாகம் வரையிலுமுள்ள ஸம்ஸ்காரங்கள் கிரமமாகச் சொல்லப்பட்டன. அதில் விவாகப்பிரகரணத்தில் அந்தந்த வர்ணத்தார் மற்ற வர்ணங்களில் செய்துகொள்ளத்தக்க விவாகமும் அதினுல் உண்டாகும் ஜாதி பேதங்களும் விவரிக்கப்பட்டன, கீழே விவரித்த ஸம்ஸ்காரங்கள் தவிர தேவயக்கியம், பிதிர்யக்கியம், பூதயக்கியம், மநுஷ்ய யக்கியம், பிர்ம்மயக்கியம் ஆகிய ஐந்து மஹா யக்கியங்களும், அஷ்டகை, பார்வணம், சிராத்தம், சிராவணி, ஆக்கிரஹாயணி, சைத்திரி, ஆசுவயுஜீ ஆகிய எழுவித பாகயக்கியங்களும், அக்கினியாதாநம், அக்நிஹோத்திரம், தர்சபூர்ணமாஸங்கள், ஆக்கிரயணம், சாதுர்மாஸியம், நிருடபசுபந்தம், ஸௌத்திராமணி, ஆகிய எழுவித ஹவிர்யக்கியங்களும், அக்நிஷ்டோமம், அத்தியக் நிஷ்டோமம், உக்த்தியம், ஷோடசி, வாஜபேயம், அதிராத்திரம், அப்த்தோர் யாமம் ஆகிய எழுவித

ஸோம யக்கியங்களும் கூடி நாற்பது ஸம்ஸ்காரங்கள் ஆகின்றன. இவைகளின் விதிகள் கிருஹிய ஸூத்திரங்களில் விவரமாக அறிந்துகொள்ளத்தக்கன.

உபாகர்மப் பிரகரணம். வேதமோதத் தொடங்குவதாகிய உபாகர்மத்தைச் சிராவண மாஸ பூர்ணிமையில் அல்லது சிரவண நட்சத்திரங்கூடியதிதியில் அல்லது அந்த நட்சத்திரத்தில் செய்ய வேண்டுமென்று யாக்கியவல்கியரும், சிராவண மாஸத்திய பூர்ணிமையில் அல்லது புரோஷ்டபதி என்னும் பூரட்டாதி கூடின பூர்ணிமையில் உபாகர்மத்தைச் செய்யவேண்டு மென்று வஸிஷ்டரும், இப்படியே உபாகர்மத்தைச் செய்து பிராம்மணன் நாலரைமாஸம் அத்தியயநம் செய்யக் கடவனென்று மநுவும், யஜுர் வேதிகள் சிராவண மாஸத்திய உதயபர்வத்திலும் ருக்வேதிகள் திருவோண நட்சத்திரத்திலும் ஸாமவேதிகள் ஹஸ்த நட்சத்திரத்திலும் உபாகர்மத்தைச் செய்யவேண்டுமென்று கோபிலரும், சூரியோதயமாகி ஸங்கவகாலத்தை அதிக்கிரமித்து என்றையதிநம் பூர்ணிமை யிருக்கின்றதோ அதுவே உதயபர்வமென்று கார்க்கியரும், உத்திராடநட்சத்திரத்தோடு ஒரே நாளில் கூடியுள்ள திருவோணத்தில் உபாகர்மம்செய்தால் ஒரு வருஷகாலம் ஓதினவேதமும் நசிக்குமென்றும் அவிட்டத்தோடு கூடிய திருவோண நட்சத்திரமே உபாகர்மத்திற்குச் சிறந்ததென்றும் வியாசரும், அர்த்த ராத்திரிக்குள் திருவோணமாவது சங்கிரமணமாவது உண்டாகும் நாளில் உபாகர்மம் செய்யத்தகாதென்று கர்க்கரும் சொன்னார்கள்.

உத்ஸர்ஜனம். இருபிறப்பாளர் புஷியமாஸம் (தைமாஸம்)ரோகணியிலாவது மாகம்(மாசிமாஸம்)சுக்கிலபக்ஷ பிரதமையிலாவது பகலின்பூர்வகாலத்தில் கிராமத்திற்குவெளியே சென்று வேத மோதுவதை நிறுத்த வேண்டுமென்றும் பின்னும் சுக்கில பட்சத்தில் நியமத்துடன் வேதத்தையும் கிருஷ்ண பக்ஷத்தில் வேதாங்கங்களையும் தர்ம சாஸ்திரங்களையும் நன்றாக ஓத வேண்டு மென்றும் மநு சொன்னார். பாபிகள் அதிகமாக இருக்குமிடம்,வியாதிமிகுந்த இடம், சூத்திரராஜ்யம், பாஷண்ட ஜனங்களால் சூழப்பட்ட தேசம் இந்த இடங்களில் இருபிறப்பாளர் வஸிக்கத்தக்கவர்களல்லவென்றும், ஹிமாசலம் விந்தியபர்வதம்இவைகளுக்கும் கிழக்கு மேற்குக்கடல்களுக்கும் நடுவில் நல்ல இடத்தில் வசிக்கவேண்டுமென்றும் எங்கே கறுத்த மிருகங்கள் சஞ்சரிக்கின்றனவோ எங்கே புண்ணிய நதிகளின் பெருக்கு உண்டோ அவ்விடங்களில் வசிக்கக் கடவர்களென்றும்,

அயல்மாதருடன்பேசுதல்,தகாதவனுக்கு யாகம் செய்விக்கல், தேவாலயங்களுக்கு அப்பிரதட்சணமாகச் செல்லல், வஸ்திரத்தினுல் காற்றுண்டாக வீசிக்கொள்ளல், கூட்டங்களில் சேரல், ஒருவனுக வழிநடக்கல், பாபிகளுடன் செல்லல், யோகிகள், சித்தர், யதிகள் இவர்களை நிந்திக்கல் ஆகிய இவைகளைச் செய்யலாகாதென்று கூர்மபுராணம் கூறுகின்றது. கெடுதியான கூச்சல், அசத்தியம் சொல்லுதல், கடுஞ்சொல் மொழிதல்,கொடிய சாஸ்திரங்களைப்படித்தல், நீசசேவை பண்ணுதல்.மிலேச்சபாஷையைப்பேசுதல், தன் மலத்தைப் பார்த்தல், மலம், மூத்திரம், மயிர், சாம்பல், ஓடு, உமி, கரி, எலும்பு, மண்டையோடு இவைகளை மிதித்தல், துடைப்பத்தின் தூசி மேலேபடிதல் ஆகிய இவைகளை ஒழிக்கவேண்டு மென்று மார்க்கண்டேயர்சொன்னுர்.

வாநப்பிரஸ்த தர்மநிருபணம். தன் புத்திரனிடத்தில் பத்திநியை ஒப்புவித்தாவது அவளுடன் கூடவாவது வாநப்பிரஸ்தனுனவன் பிர்ம்மசரிய விரதத்தை உடையவனுகி அக்நியுடன் பாதுகையையணிந்து வநத்தை அடையவேண்டுமென்று யாக்கியவல்கியரும்,வானப்பிரஸ்தன் ஜடையைத்தரித்து மரவுரி மான்தோல் இவைகளையுடுத்து உழாமல் தானேவிளைவதாகிய காட்டிலுள்ள கிழங்குபழம் முதலியவைகளைப் புசித்துக்கொண்டு ரேதஸைவிடாதவனுகித் தானென்றையும் பிரதிக்கிரகிக்காமல் எப்போதும் கொடுப்பவனுகிச் சிராவணமாசத்தில் அக்நியை ஆதாநம் செய்துகொண்டு மரத்தடியில் வசிப்பவனுகித்தேவ ரிஷி பிதிர் மனுஷியர்களை ஆராதிப்பதாகிய பஞ்சமகா யக்கியங்களைச் செய்து கொண்டு இருப்பவன் அக்ஷயபலனைத் தருவதாகியசுவர்க்கத்தை (மோட்சத்தை) அடைகிருனென்று வசிஷ்டரும், இருபிறப்பாளர் கிருகஸ்தர்களாகி யக்கியங்களை அநுஷ்டித்துத் தங்கள் பிள்ளைகளுக்குப் பிள்ளைகள் பிறந்தபின் தங்களுடைய வயதில் மூன்ருவது பாகத்தில் வநத்திற்குச் செல்லக்கடவர்களென்று யமமுனிவரும்சொன்னுர்கள். பிர்ம்மசரியவிரதத்தை அனுஷ்டித்துவேதாத்தியயநத்தைச்செய்துபின் தன்னிச்சைக் கீடாகக் கிருகஸ்தனுகவாவது வாநப்பிரஸ்தனுகவாவது சந்நியாசியாகவாவது ஆகலாமென்று வசிஷ்டர் சொன்னுர். இந்த வானப்பிரஸ்தனைப்பற்றிய விதி விலக்குகளை மநு முதலியவர்கள் விரித்துரைத்தனர்.

ஸந்நியாஸாச்சிரம நிருபணம். பிராம்மணன் தன் ஆயுளில் மூன்ருவதுபாகத்தை வநத்தில் கழித்து நான்காவதுபாகத்தில்ஸகல ஸங்கங்களையு மொழித்துச் சந்நியாசியாகக் கடவனென்று மநு

ஸ்மிருதியும், பிர்ம்மசரிய விரதத்தை அநுஷ்டித்தபின் கிருகஸ்தனு கவாவது சந்நியாசியாகவாவது ஆகலாமென்று ஜாபால சுருதியும், நாக்கு, உபஸ்தம், வயிறு, தலை, இந்த நான்கும் எவனுக்கு நன்ருக ரட்சிக்கப்பட்டிருக்கின்றனவோ அவன் விவாகம் செய்துகொள்ளா தவனேயாகிலும் பிர்ம்மசரியத்தில் நின்றே ஸந்நியாசத்தைச் செய்து கொள்ளலாமென்று நரசிங்க புராணமும், ஸாரமற்ற இந்த ஸம்ஸார த்தில் சிறந்த வைராக்கியம் உண்டானவன் சந்நியாசத்திற்கு அதிகாரி யென்றும் பின்னும் எதாவது ஒருவித துக்கத்திஞலும் பீடையிஞ லும் சந்நியாசத்தை அங்கீகரிக்கலா மென்றும் அங்கிர ஸ்மிருதியும், மண்ணுனது ஜலத்திஞலும் நதியானது வேகத்திஞலும மனதிஞல் தோஷம் செய்த ஸ்திரீ பிரதிமாதம் ஸம்பவிக்கிற ருதுவிஞலும் பிரா ம்மண சிரேஷ்டர்கள் ஸந்நியாசத்திஞலும் சுத்தராகிருர்களென்று ம நுஸ்மிருதியும், ஆத்துமக்கியானமுடைய பிராம்மணஞனவன் புத்தி ரன், பொருள், உலகம் இவைகளில் இச்சையைவிட்டு வெளிப்பட்டுச் சந்நியாசியாகிருனென்று வாசஸநேயகப் பிராம்மணமும் சொல் லின. இதுபோன்ற மநு நாரதாதிவசநங்களும் பிராம்மணனுக்கு ஸந்நியாசத்தை விதிக்கின்றன. வேதத்தில் சொன்ன நான்கு ஆச் சிரமங்களும் பிராம்மணனுக்கே எற்றவைகளாம், பிர்ம்மசரிய கார் ஹஸ்திய வாநப் பிரஸ்தங்கள் க்ஷத்திரியனுக்குத் தக்கவைகள், பிர்ம்மசரிய கார்ஹஸ்தியங்கள் வைசியனுக்குத் தக்கவைகள், கார்ஹ ஸ்தியம் ஒன்றே சூத்திரனுக்குத்தக்கது என்று வாமநபுராணத்தில் சொல்லப்பட்டது.

விஷ்ணுவினது அடையாளங்களான காஷாயம், தண்டம், கம ண்டலம் இவைகளைத் தரிப்பதானது விராட் புருஷனுடைய முகத் தில் பிறந்தபிராம்மணர்களுடைய தர்மமென்றும், பாஹுவினின்று பிறந்தக்ஷத்திரியருக்கும் தொடைகளினின்றுஜனித்தவைசியருக்கும் இந்தத் தர்மமானது விதிக்கப்படவில்லை என்றும் வேறு ஸ்மிருதியி லும் சொல்லப்பட்டிருக்கிறது. யாக்கிய வல்கியஸ்மிருதி கூர்மபு ராணம் முதலிய சில கிரந்தங்கள் ஸந்நியாசத்தை த்விஜாதிகளுக்கு (இருபிறப்பாளருக்கு) விதிக்கிற படியால் சந்நியாசம் மூன்று வர்ணத்தாருக்கு முண்டென்று சங்கித்து க்ஷத்திரிய வைசியர்களுக்கு ச் சந்நியாசமில்லை என்கிற ஆத்திரேய முனி மதத்தைச்சொல்லுகிற போதாயந வசநத்திஞல் க்ஷத்திரிய வைசியர்களுக்கு ஸம்ஸாரத்தில் வைராக்கியமுண்டாயிருந்தால் அவர்கள்ஸந்நியாசிகள்போல் இருந்த

தபோதிலும் காஷாயதண்டகமண்டலங்களைத் தரிக்கக்கூடாதென்று மாதவாசாரியர் நிஷ்கர்ஷித்தார்.

சந்நியாசத்தை அடைய விரும்புகிறவன் பிதிர்க்கள் தேவர்கள் தன் பிதிர்க்கள் ரிஷிகள் இவர்களுக்கும் தனக்கும் சிராத்தங்களை விதிப்படிசெய்து ஆக்கிநே யேஷ்டியையாவது பிராஜாபத்தி யேஷ்டியையாவது செய்யக்கடவனென்று நரசிங்கபுராணம் சொல்லிற்று. சந்நியாசத்தை விரும்புகிறவன் வைஷ்ணவம், ஆர்ஷம், திவ்வியம், பித்திரியம், மாதிருகம், மாநுஷம், பௌதிகம், என்னும் இந்தச் சிராத்தங்களைச்செய்து முடிவில் ஆத்தும சிராத்தத்தையுமுடித்துத் தண்டம், கமண்டலம், ஜலபவித்திரம், சிக்கியம்,மரப்பாத்திரம்,கௌபீநம், காஷாயம், உபவீதம் என்னும் மாத்திரைகளை மந்திர பூர்வகமாகக் கிரகித்துக் கொள்ள வேண்டுமென்று போதாயநர் கூறினார். குடீசகன், பஹூதகன், ஹம்ஸன், பரமஹம்ஸன் என்று ஸந்நியாசிகள் நாலுவகையினரென்று ஹாரீதர் சொன்னார். இவர்களில் ஸந்நியாச தர்மங்களை முற்றும் அநுஷ்டிப்பவனாகித் தன் புத்திரனால் செய்விக்கப்பட்ட ஒரு குடிசையில் வசித்துப் புத்திர னிடத்திலேயே பிக்ஷைவாங்குகிறவன் குடீசகனென்று விருத்த பராசரரும், பந்துவனாகி ஏழு கிருகத்தில் பிக்ஷை எந்திப் புசிப்பவன் பஹூதகனென்று ஸ்கந்தரும், கமண்டலம்,சிக்கியம், தண்டம்,பாத்திரம் இவைகளைத் தரித்துக்கொண்டுகிராமசமீபத்திலுள்ள குளக்கரையில்ஒருராத்திரியும் பட்டணத்தில்ஐந்திரவும் வாசஞ்செய்து மூன்று,ஆறு, பதினைந்து முப்பது நாட்கள் உபவாஸமிருந்து கிருச்சிரம், ஸாந்தபநம் முதலிய விரதங்களால் உலர்ந்த தேஹத்தைத் தரிப்பவன் ஹம்ஸனென்று போதாயநரும், குஹ்யஸ்தாநத்தை மறைக்கத்தக்க வஸ்திரம் குளிரைப் போக்குவதாகிய கந்தை, ஜபமாலை, ஒற்றைத்தண்டம் இவைகளைத்தரித்து ஒரேபிக்ஷை செய்துகொண்டு திரிதண்டம் சிகை யக்ஞோபவீதம் நித்தியகர்மமாகிய ஸந்தியாவந்தனம்இவைகளை ஒழித்தவன் பரமஹம்ஸனென்று ஸ்கந்தரும் சொன்னார்கள். ஸம்வர்த்தகர், ஆருணி, சுவேதகேது, தூருவாஸர், ருபு, நிதாகர், ஜடபரதர், தத்தாத்திரேயர், இரைவதகர் முதலியவர்களான உன்மத்தர்கள் போல் நடித்துக் கொண்டிருந்தவர்கள் பரமஹம்ஸர்களென்று ஜாபாலசுருதி சொல்லுகிறது.

சந்நியாசியின் தர்மங்கள். சந்நியாசி ஒருவனாகவிருந்தால் அவன் கிரம ஸந்நியாசி யாகிறானென்றும், அவனோடு மற்றொருவன்

சேர்ந்தால் அது ஸ்திரீ புருஷர்களின் சேர்க்கை போலாகிறதென்றும், மூன்றுபேர் சேர்ந்தால் அது கிராமம்போலாகிறதென்றும், அதற்குமேற்பட்டால் பட்டணம்போலாகிற தென்றும், இப்படிச்சேர்ந்திருக்கும் ஸந்நியாசிகள் தங்கள் தர்மங்களைத் தவிர்ந்தவர்களாகி ஒருவருக்கொருவர் ராஜவார்த்தைகளையும் தாங்கள் பிக்ஷையெடுப்பது முதலியவைகளையும் சொல்லுவார்களென்றும் அல்லது அவர்களுக்குள் ஸ்நேஹம்,கோள், முதலியவைகள் ஸம்பவிக்குமென்றும் தக்ஷர் சொன்னார். ஜீவஹிம்ஸை செய்யாமை, ஸத்தியத்தைச்சொல்லுதல், திருடாமை, பிரமசரியவிரதம், ஒருவரிடத்திலும் யாசிக்காமை, சித்தசுத்தி, விஷ்ணுபக்தி, ஸந்தோஷம், நடுவுநிலைமை, சாஸ்திரம் சொல்லுகிறவிஷயத்தில் நம்பிக்கை, பிரமத்தியானம், வேதாந்தங்களை ஓதுதல், ஸமமாகப் பாவித்தல், மதித்திராமை, எழ்மையைக்காண்பிக்காமை, அநுக்கிரகம், ஸ்திரமாயிருக்கை, குரு சிசுரூஷை, சிரத்தை, அந்தக்கரணத்தை அடக்கல், புறக்கரணங்களை ஒடுக்கல், லௌகிகவிஷயத்தில் பற்றில்லாமை, மனக்கலக்க மற்றிருக்கை, பொறுமை, தயை, லஜ்ஜை, தவம், ஞானம், பிரமக்கியானம், யோகம், மிதஆகாரம், ஸ்நானம், தெய்வபூஜை, பிராணயாமம், பலிஹரணம், ஸ்துதி, பிக்ஷையெடுத்தல், ஜபம், ஸந்தியோபாஸனை, தான் செய்யுங் கர்மத்துக்குப் பலனைவிரும்பாமை ஆகிய இவை நியமத்துடனிருக்கின்ற சந்நியாசிகளுக்குரியதர்மங்களென்று அத்திரிசொன்னார். சந்நியாசியானவன் மழைகாலந்தவிர மற்றுள்ள காலங்களில் கிராமத்தில் ஒரு தினமும் பட்டணத்தில் ஐந்துதினமும் மழைகாலத்தில் ஒரே இடத்தில் நான்கு மாஸங்களும் வசிக்கக்கடவனென்று கண்ணுவர் சொன்னார், மனதில் ஸங்கல்ப மில்லாமல் (இந்தவீட்டில் கிடைக்கிறதென்கிற நிச்சயமில்லாமல்) மூன்று அல்லது ஐந்து அல்லது எழு கிருகங்களில் திரிந்து தேனை வண்டு கிரகிப்பதுபோல் எடுக்கும் பிக்ஷை மாதுகர மென்னப்படுமென்று உசநர் கூறினர்.

பிரமசரியம், கார்ஹஸ்தியம், வானப்பிரஸ்தம், ஸந்நியாஸமென்று சொல்லப்படுகிற நான்கு ஆச்சிரமங்களில் ஒவ்வொன்றும் நந்நான்கு விதமாகப் பதினாறுபிரிவுகளை அடைகின்றனவென்றும், காயத்திரன்,பிராம்மன், பிராஜாபத்தியன், பிருஹத் என்று பிரமசாரிகள் நால்வரென்றும், அவர்களில் உபநயநம் ஆனவுடனே மூன்றுநாள் உப்பு காரம் புளி இவைகளைத்தள்ளி விரதத்துடன் புசித்துக் காயத்திரியை ஓதுகிறவன் காயத்திரனென்றும், ஒருவேதத்திற்கு ஓதுங்காலம் பனிரண்டு வருஷமாக நான்கு வேதங்களையும் ஓதுவதற்கு நாற்பத்

தெட்டு வருஷகாலம் அல்லது ஒருவேதம் ஓதும்வரைக்கும் பிரமசாரியாயிருப்பவன் பிராம்மனென்றும், கிருகஸ்தரில் தன் மனைவியினிடத்தில் பட்சத்துடன் ருதுகாலகமநம் செய்கிறவனாகிப் பரதாரமுகத்தைப் பாராதவன் பிராஜாபத்திய பிரமசாரி என்றும், மரணபரியந்தம் குருகுலத்தில் வசிப்பவனா யிருப்பவன் நைஷ்டிகன் அல்லது பிருஹத் என்னும் பிரமசாரி யென்றும், பின்னும் வார்த்தாக விர்த்தி, சாலீநவிர்த்தி, யாயாவரர், கோரஸந்நியாஸிக ரென்று கிருஹஸ்தர் நால்வகைப் படுவரென்றும், அவர்களில் கிருஷி, பசுபரிபாலநம், வர்த்தகம் இவைகளை நிந்திக்கப் படாமல் செய்கிறவர்களாகி இவ்விதமாக நூறுவருஷம் செய்யத்தக்க கர்மங்களால் கடவுளைப் பூசித்துப் பிரார்த்திக்கிறவர்கள் வார்த்தாக விர்த்திகளென்றும், யாகம் முதலிய கர்மங்களைச் செய்கிறவர்களாகி அந்நியனுக்குப் புரோஹிதர்களாகாமலும், ஓதுகிறவர்களாகி ஓதுவித்தலைச் செய்யாமலும், ஈதல் மாத்திரமே உடையவர்களாகி ஏற்றலைச்செய்யாமலும், இவ்விதமாக நூறுவருஷம் செய்யத்தக்க கர்மங்களைச் செய்கிறவர்கள் சாலீந விர்த்திகளென்றும், யாகம்செய்தல், செய்வித்தல், ஓதல்,ஓதுவித்தல்,ஈதல், ஏற்றல் இவைகளைச் செய்து இவ்வாறு நூறு வருஷம் செய்யத்தக்க கர்மங்களைச் செய்கிறவர்கள் யாயாவரர் என்றும், கிணறு குளங்களிலிருந்து அப்பொழுது கொண்டுவரப்பட்ட பரிசுத்த ஜலத்தினால் நித்தியகர்மங்களைச் செய்கிறவர்களாய் உஞ்சவிர்த்தியால்ஜீவிப்பவர்கள் கோரஸந்நியாசிகளென்றும், வைகாநஸர், ஔதும்பரர், வாலகில்லியர், பேநபர் என்று வாநப்பிரஸ்தர் நால்வகைப் படுவர்களென்றும், இவர்களில் ஊருக்கு வெளியில் உழுதுவிளையாத செந்நெல்,கிழங்கு,பழம் முதலியவைகளால் பஞ்சமகாயக்கியங்களைச் செய்கிறவர்கள் வைகாநஸரென்றும், இலந்தை, தினை, சாமை இவைகளால் பஞ்ச மகாயக்கியங்களைச் செய்கிறவர்கள் ஔதும்பரர்களென்றும், ஜடையைத்தரித்து மரவுரி, மான்தோல் இவைகளை உடுத்துக் கார்த்திகைமாஸ பூர்ணிமையில் பழையபண்டங்களை ஒழித்து மிகுந்த எட்டுமாஸங்களுக்கும்வேண்டிய பண்டங்களைத் தேடிவைத்துக்கொண்டு பஞ்ச மகாயக்கியங்களைச் செய்கிறவர் வாலகில்லியரென்றும், பழுத்து உதிர்ந்த இலை பழம் இவைகளைப்புசித்து ஓரிடத்திலிருப்பவர்கள் பேநபரென்றும், கீழ்ச் சொல்லியபடி குடீசகர், பஹூதகர், ஹம்ஸர், பரமஹம்ஸர் என்று ஸந்நியாசிகள் நான்கு வகுப்புடையவர்களென்றும், ஸந்நியாசிகளுக்குச் சாந்தியே தர்மமென்றும், வாநப் பிரஸ்தனுக்கு விதிப்படி விரதங்களை அநுஷ்-

டிப்பதே தர்மமென்றும், கிருகஸ்தனுக்குத் தானமே தர்மமென்றும் பிரமசாரிக்குக் குரு பணிவிடையே சிறந்த தர்மமென்றும் காண்ணுவாயந ஸ்மிருதியில் சொல்லப்பட்டது.

இந்த அத்தியாயத்தின் முதல் சுலோகத்தில் நான்கு ஆச்சிரமங்களால் அநுஷ்டித்துவந்த தர்மங்களென்று சொல்லும் வாக்கியத்திலுள்ள ஆச்சிரமமென்னும் பதத்தினால் குறிப்பிக்கப்பட்ட நான்கு ஆச்சிரமங்களின் தர்மங்களை உரையாசிரியரான மாதவாசாரியர் இவ்விதமாக விரித்துரைத்தாரென்றறிக.

இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

மூன்றாவது அத்தியாயம்.

அவதாரிகை. ஸ்ரீ பராசர மஹா முனிவர் கீழ் இரண்டத்தியாயங்களால் நான்கு வர்ணத்திற்குரிய ஆசாரங்களையும் நான்கு ஆச்சிரமங்களின் தர்மங்களையும் அருளிச்செய்து அந்தத்தர்மங்களைச் சுசியாயிருந்து அநுஷ்டிக்க வேண்டுமாகையால், சுசியாயிருக்கை புருஷனுக்கு இயற்கையா யிருந்தபோதிலும் அதற்கு விரோதமாகச் சில காரணங்களால் நடுவில் வருகிற ஆசௌசம் (தீட்டு) என்னுந் தோஷமானது சில காலத்தினாலும் ஸ்நாநத்தினாலும் போக்கத் தக்கதாகிப் புருஷனுடைய மனம் தேகம் இவைகளைப்பற்றியிருக்கிற ஒருவகை அதிசயமாகையால் அந்தத் தீட்டென்னும் பிரதிபந்த மொழிந்து உண்டாகின்ற சுத்தியை இந்த அத்தியாயத்தில் சொல்லப் போகிறார்.

ப॥ అతశ్శుద్ధిం ప్రవక్ష్యామి జననే మరణే తథా॥

(இ ள்.) ஆசௌசமானது தர்மாநுஷ்டாநத்தில் அதிகாரத்தைப்போக்குவதினால் ஜநநத்திலும் மரணத்திலும் உண்டாகும் அந்த ஆசௌசத்தின் சுத்தியைச் சொல்லுகிறேன் என்கிறார் பராசரர்.

பல்முளைத்த பிள்ளை அதற்குப் பின்னிட்டவன் சௌளமென்னும் மயிர்கழித்தலைச் செய்வித்துக்கொண்டவன் உபநயநமானவன் ஆகிய இவர்கள் மரித்தாலும், ஒரு குழந்தை பிறந்தாலும் இவர்களுடைய பந்துக்கள் அசுத்தர்கள் அல்லது தீட்டு உடையவர்களாகிறார்களென்று மநுசொன்னார். (௫)

౧॥ దినత్రయేణశుధ్యంతి బ్రాహ్మణాః ప్రేతసూతకే॥
౨॥ క్షత్రియోద్వాదశాహేన వైశ్యఃపంచదశాహకైః।
శూద్రాశ్శుధ్యంతిమాసేన పరాశరవచోయథా॥

(இ-ள்,) மரணத்தைப்பற்றிய சூதகத்தில் பிராம்மணன் மூன்று திநங்களாலும், க்ஷத்திரியன் பன்னிரண்டு திநங்களாலும், வைசியன் பதினைந்து திநங்களாலும் சூத்திரன் ஒரு மாஸத்தாலும் பராசரர் கூறியபடி சுத்தியை அடைகிறார்கள். (எ-று.)

மரணத்தீட்டில் பிராம்மணன் பத்துராத்திரிகளால் சுத்தனாகிறானென்று தக்ஷர் தேவலர் வஸிஷ்டர் இவர்கள் சொன்னவசநங்களுக்கு மூன்றுநாளில் சுத்தனாகிறானென்கிற பராசரவசநம் விரோதிக்கிறதேயெனில், இந்தவிதி ஸமாநோதகரென்னும் ஞாதிகளைப் பற்றியதாகையால் விரோதமில்லையெனக் கொள்க. எப்படி யெனில் ஸபிண்டரென்றும் ஸமாநோதகரென்றும் ஸகோத்திரரென்றும் மூன்று வகையினரான ஞாதிகளில் தன்னைத் தொட்டு ஏழு தலைமுறைக்குட்பட்டவர் ஸபிண்டர்க ளென்றும், அவர்கள் மரணத்தில் ஞாதிகளுக்குப் பத்துநாள் ஆசௌச மென்றும், ஏழு தலைமுறைக்கு மேற்பட்டுப் பதினான்கு தலைமுறைக்குட்பட்டவர் ஸமாநோதகரென்றும், அவர்கள் மரணத்தில் ஞாதிகளுக்கு மூன்றுநாள் ஆசௌசமென்றும், பதினான்கு தலைமுறைக்குமேல் ஏழுதலைமுறைவரையில் ஸகோத்திரரென்றும், அவர்கள் மரணத்தில் ஞாதிகளுக்கு ஸ்நாநத்தினால் சுத்தியென்றும், மநு ஸ்மிருதி கூர்ம புராணாதிகள் சொல்லுகின்றன. க்ஷத்திரியனுக்குப் பன்னிரண்டுநாள் ஆசௌசமென்கிற பராசரவசநம் பதினொருநாளில் க்ஷத்திரியன் சுத்தனாகிறானென்கிற சாதாதபவசநத்திற்கும் க்ஷத்திரியனுக்குப் பதினைந்துநாள் ஆசௌசத்தைச் சொல்லுகிற வஸிஷ்ட தேவல வசநங்களுக்கும் விரோதிக்கிறதே யெனில், வித்தை, தவம் இவைகளின் ஏற்றக் குறைவுகளால்ஆசௌச நாட்களின் ஏற்றக்குறைவுகளை நிச்சயிக்க வேண்டுமென்றும், இதை யனுசரித்துத் தன் நிலைதவறாத சூத்திரன் தனக்கு விதித்திருக்கிற முப்பதுநாள் ஆசௌசத்தில் பதினைந்துநாள் ஆசௌசத்தை அநுஷ்டித்தால் அமையுமென்றும் யாக்கியவல்கியர் சொன்னார். இந்த நீதியை அநுஸரித்து வேதத்தை அத்தியயநம் செய்த பிராம்மணன் நாலுநாள் ஆசௌசத்தையும், வேதமோதி யக்கியங்களைச்செய்தவன் மூன்றுநாள் ஆசௌசத்தையும் இவ்விரண்டுடன் சுரோத்திரியனா யிருப்பவன் அல்லது வேதார்த்தங்களை அறிந்

தவன், ஒருநாள் ஆசௌசத்தையும், அத்தியயநம், அர்த்தஞானம், யக்ஞியம் செய்தல் இவைகளுடன் கர்மாநுஷ்டாநப் பிரியனுயிருப்பவன் அப்பொழுதே ஸ்நாநத்தையும் அநுஷ்டிக்க வேண்டுமென்றும் இவ்விதமான முதல் மூன்று வகுப்புடைய க்ஷத்திரியன் கிரமமாகப் பன்னிரண்டுநாள், பதினொருநாள், பத்துநாள் ஆசௌசத்தை அநுஷ்டிக்க வேண்டுமென்றும், இவ்விதமான வைசியன் பதினைந்துநாள், பன்னிரண்டுநாள், பதினொருநாள் ஆசௌசத்தை அநுஷ்டிக்க வேண்டுமென்றும், பிராம்மணனுக்குப் பணிவிடைசெய்யும் சூத்திரன் பதினைந்துநாள் ஆசௌசத்தை அநுஷ்டிக்கவேண்டுமென்றும் தேவலர் கூறினர். ஸபிண்டஞாதி மரணத்தில் பிராம்மணனுக்குப் பத்துநாள் ஆசௌசமே யநுஷ்டிக்கத்தக்கது. இந்தக்கலியுகத்தில் மூன்றுநாள் நான்குநாள் என்றிவ்விதமாயுள்ள வேறு விதிகளை அநுஷ்டிக்கிறவன் பாபியாகிருனென்று ஹாரீத வசநத்தினுலும், வித்தை அநுஷ்டாநம் இவைகளால் ஆசௌசநாளின் குறைவு கலியுகத்தில் தகாதென்று வேறு ஸ்மிருதி வசநங்களாலும் விலக்கப்பட்டமையால், பராசரவசநத்தின் படியே ஆசௌசம் அநுஷ்டிக்கத்தக்கதென்றும், பிராம்மணன் மூன்றுநாளில் சுத்தனுகிருனென்று சொன்னது ஸமாநோதகனென்னும் ஏழுதலைமுறைக்கு மேற்பட்ட ஞாதியைப் பற்றியதென்றும் அறியவேண்டும். இதற்கு நிதர்சனமாகப் பிராம்மணன் பத்துநாட்களாலும் க்ஷத்திரியன் பன்னிரண்டுநாட்களாலும் வைசியன் பதினைந்துநாட்களாலும் சூத்திரன் ஒரு மாஸத்தினுலும் சுத்தியடைகிருர்களென்று மநுவும், இவ்விதமாகவே ஏழு தலைமுறைக்குட்பட்ட ஸபிண்டரென்னும் ஞாதிகளுக்கு ஜநந மரணங்களைப்பற்றிய ஆசௌச விதியை விஷ்ணுவும் கூறியிருக்கிருர்கள். மூலவசநத்தில் பராசரர் வசநத்தின்படி யென்று தம்முடைய மதத்தைக் குறித்ததனுல் பிறர் மதங்களும் பலவுண்டென்று குறித்துக்காட்டினுரென்று அறிக. (க,உ)

௩ பு॥ ఉపాసనేతువిప్రాణా మంగశుద్ధిశ్చజాయతే॥

(இ-ள்.) ஆசௌசத்தில் ஸந்தியாவந்தநாதிகளை அநுஷ்டிக்கும் கிரமம். பிராம்மணருக்கு உபாஸநத்தில் தேகசுத்தி உண்டாகிறது.

இங்கு உபாஸந மென்பது ஸந்தியாவந்தநம் ஹோமம் முதலியவைகளை அநுஷ்டிப்பதாகும். இவைகளைச் செய்யுங்காலத்தில் மாத்திரம் பிராம்மணனுக்கு ஆசௌச மில்லை என்பதுகருத்து. எவ்வளவுகாலத்தில் ஸந்தியாவந்தநம் ஹோமம் இவைகள் செய்யக்கூ

டுமோ அவ்வளவு காலமே இருபிறப்பாளனுக்கு ஆசௌசத்தில் சுத்தியாகையால் அவைகளைச்செய்தபின்பு பஞ்ச மகாயக்ஞங்களைச் செய்யக் கடவனல்லனென்று கோபிலரும், ஸந்தியாவந்தநம், ஹோமம், யக்ஞம், சரு இவைகளை இருபிறப்பாளர் பிழைத்திருக்கும் வரையில் விடாது செய்யவேண்டுமாகையால் இவைகளைத் தவிரக் கூடாதென்றும், ஜநநமரணத்தீட்டுக்களிலும் ஸந்தியாவந்தநத்தை விடக்கூடாதென்றும், பிராணாயாமந் தவிர மற்றமந்திரங்களை மனதினால் சொல்லிச் செய்யவேண்டுமென்றும், புலஸ்தியரும், அர்க்கிய தாநத்தில் வாயினால் காயத்திரியைச்சொல்லி அர்க்கியத்தை விடவேண்டுமென்றும் மற்ற மந்திரங்களை மனதினால் சொல்ல வேண்டுமென்றும் பைடீநசியும், ஜநநமரணத்தீட்டுக்களில் பத்துநாள் வரையிலும் புசித்தல், ஈதல், ஏற்றல், யக்ஞம்செய்தல், வேதமோதுதல், இவைகள் செய்யத்தகாவென்று மநுவும் சொன்னார்கள், இந்த மநுவசநம் வைசுவதேவமென்னும் ஸ்மிருதி சம்பந்தமான கர்மத்தைச் செய்யக்கூடாதென்பதைப் பற்றியது. ஜநந மரணத் தீட்டுக்களில் பஞ்சமகாயக்ஞங்களைச் செய்யலாகாதென்று ஜாதுகர்ணர் கூறினார். நித்திய கர்மாநுஷ்டாநங்களை ஆசௌசத்தில் விட்டு ஆசௌசம் கழிந்தபின் அவைகளை அநுஷ்டிக்கவேண்டுமென்கிற ஜாபாலி வசநம் வாயினால் மந்திரத்தைச்சொல்லிச் செய்யும் ஸந்தியாவந்தநத்தைப் பற்றியதேயன்றிமனதினால் மந்திரத்தைச் சிந்தித்துச் செய்யும் ஸந்தியாவந்தநத்தைப் பற்றியதல்லவென்றறிக. ஹோமம் முதலிய அக்நிகாரியங்களை ஆசௌசத்தில் செய்யலாமோவெனில் ஜநந மரணத்தீட்டு, தேகத்திற்குச் சக்தி குறைந்திருக்கும் ஸமயம், சிராத்தபோஜநம் செய்ததிநம், தேசாந்தரம் போயிருக்கை ஆகிய இவை முதலிய நிமித்தங்களில் ஹோமத்தைச் செய்விக்க வேண்டுமேயன்றி விட்டு விடலாகாதென்கிற பிரகஸ்பதி வசநத்தின்படி பிறரைக்கொண்டு செய்விக்கவேண்டுமென்றறிக. மூலவசநத்தில் பிராம்மணன் என்றெடுத்ததை க்ஷத்திரிய வைசியர்களுக்கும் உபலக்ஷணமாகக் கொண்டு இந்தவிதி மூன்றுவர்ணத்தாருக்குமுரியதென்றறியத்தக்கது. (உ௨)

౩॥ బ్రాహ్మణానాం ప్రసూతౌ తు దేహస్పర్శో విధీయతే।

ஜநநாசௌசத்தில் ஸ்பர்சிக்கத்தக்கதும் ஸ்பர்சிக்கத் தகாததும் இவை என்பது. (இ-ள்) பிராம்மணர்களுக்கு ஜநநத் தீட்டில் தேகத்தைத்தொடுவது விதிக்கப்படுகிறது. (எ-று).

ஜநநத் தீட்டில் எழு தலைமுறைக்குட்பட்ட ஸபிண்ட ஞாதிகளுக்கு எப்போதும் ஸ்பர்சிப்பது செய்யக்கூடுமென்றும், குழந்தையைப் பெற்றவள் தவிர மற்றவர்கள் தொடத் தக்கவர்களென்றும், அவளைத்தொட்டால் ஸ்நாநமே செய்யத்தக்கதென்றும் அங்கிராவும்,ஜநநத் தீட்டில் ஸபிண்டஞாதிகளுக்குத் தீட்டில்லை என்றும் மாதாபிதாக்களுக்கே தீட்டுஉண்டென்றும், அவர்களில் மாதாவுக்குத் தீட்டு உண்டென்றும்,பிதா ஸ்நாநத்தினால் சுத்தனாகித் தொடத்தக்கவனாகிறானென்றும் பைடீநசியும்,ஜநநத்தீட்டில் ஆசௌசகாரணம் ரஜஸு (சோணிதம்)ஆகையால் அதுஸ்திரீக்கே யிருப்பதால் அது மூலமான ஆசௌசம்பத்துநாள் மாதாவுக்கே யல்லது புருஷனுக்கில்லை என்று வஸிஷ்டரும், புத்திரன் ஜநித்தால் பிதா ஸசேலஸ்நாநத்தினால் அப்போது தாநஞ்செய்யும் விஷயத்தில் சுத்தனாகிறானென்றும்,மாதா பத்துநாளானபின்பு ஸ்நாநத்தினால் சுத்தை யாகிறாளென்றும் ஸம்வர்த்தரும் சொன்னார்கள். (௩)

౪॥ జాతే విప్రో దశాహేన ద్వాదశాహేన భూమిపః।
వైశ్యః పంచదశాహేన శూద్రో మాసేన శుధ్యతి॥

(இ-ள்.) ஜநநத் தீட்டில் பிராம்மணன் பத்துநாட்களாலும், க்ஷத்திரியன் பன்னிரண்டுநாட்களாலும், வைசியன் பதினைந்துநாட்களாலும் சூத்திரன் ஒரு மாஸத்தினாலும் சுத்தராகிறார்கள். (எ-று)

சுத்தராகிறார்களென்றால் கீழ்ச்சொல்லிய நாட்களுக்குமேல் கர்மாநுஷ்டாநத்திற்கு அதிகாரியாகிறார்களென்பது கருத்து. புத்திரன் ஜநித்தபோது அன்றையபகலில் பிதாவினிடத்தில் பிராம்மணர் பொன், நெல், வஸ்திரம், பசு முதலியவைகளைத் தாநம் வாங்கலாமென்று மநுவும், தொப்புள் கொடி யறுப்பதற்கு முன் எள், வெல்லம், பொன், முதலியவைகளை வாங்கிக் கொள்ளலாமென்று சங்க லிகிதர்களும், பிள்ளை பிறந்ததிநத்தில் அந்தப் பிதாவினிடத்தில் சகல தாநமும் வாங்கலாமென்றும், ஆனால் பக்குவமான அவனது அந்நத்தைமாத்திரம் புசிக்கலாகாதென்றும், புசித்த பிராம்மணன் சாந்திராயணத்தைச் செய்யவேண்டு மென்றும் யாக்ஞ வல்கியரும், பிரஸவகிருஹத்திற்கு அபிமானி தேவதையான ஜன்மதை (பிறப்பைத் தருகிறவள்) யென்னும் தேவதையின் பூஜைக்காக மூன்றாவது, ஆறாவது, பத்தாவதுநாட்களில் ஆசௌச மில்லையென்று வியாசரும், ஜநநத் தீட்டில் ஆறாவது நாள் ராத்திரி தூங்காமல் விழித்திருந்து சிசுவை ரக்ஷிக்க வேண்டுமென்றும், இதுபோல்

பத்தாவதுநாள் ராத்திரியிலும் ஆடல்பாடல்களோடு ஸ்திரீகளும் ஆயு தங்களைத் தரித்துப் புருஷர்களும் உறக்கமில்லாமல் சிசுவை ரக்ஷிக்க வேண்டுமென்றும், ஜன்மதையென்னும் தெய்வத்திற்குப் பலியைத்தர வேண்டுமென்றும் மார்க்கண்டேயரும் சொன்னார்கள். கர்மநிஷ்டர்க ளாகிய ஸபிண்டர்களாதிகளுக்கு ஜநந ஸூதக மில்லையென்கிற ஆங்கி ரஸ வசநத்திற்குமுன்சொன்னதுபோல் கர்மம் செய்யுங் காலத்தில் மாத்திரம் ஆசௌசமில்லை என்றுவது ஜன்மதை என்னும் தேவதைக ளுக்குப்பலிகொடுக்குந் தருணத்தில் மாத்திரம்ஆசௌசமில்லை என்று வதுபொருள்கொள்ளவேண்டும். அல்லாதவிஷயத்தில் ஜநநத்தீட்டில் பிராம்மணன் பத்துநாளில் சுத்தனாகிறானென்கிற மூல வசநத்திற்கு விரோதம் ஸம்பவிக்குமென்பது கருத்து. (௪)

౫॥ ఏకాహాచ్ఛుధ్యతే విప్రో యోఽగ్నివేదసమన్వితః।
త్ర్యహాత్కేవలవేదస్తు ద్విహీనో దశభిర్దినైః॥

(இ-ள்.) அக்நியோடும் வேதாத்தியயநத்தோடும்கூடிய பிராம் மணன் ஆசௌசத்தில் ஒரு திநத்தால் சுத்தனாகிறான். அக்நி ஹோத் திர மில்லாமல் வேதத்தைமாத்திரம் ஓதினவன் மூன்றுநாளில் சுத்த னாகிறான். இவ்விரண்டுமில்லாதவன் பத்துநாட்களால் சுத்தனாகிறான்.

மூலத்தில் அக்நி என்றெடுத்தது ஆஹவநீயாக்நிக்கும், தர்ச பூர்ண மாஸ யாகங்களுக்குமுபலக்ஷணம். இந்த ஆசௌசச்சுரு க்க மெதற்காகவெனில் வேதமோதுகின்ற பிராம்மணன் பத்துநாள் தீட்டுடையவனானால் வேதமோதுவதினின்று அவன் ஒழிய வேண்டி யதாகையால் அதைத் தவிராமைக்காக ஒருநாள் ஆசௌசம்விதிக்கப் பட்டதென்று கௌதமர் சொன்னார். இந்தவிதி மறுநாள் ஜீவிக்கச் சக்தியற்றஏழைப்பிராம்மணன் விஷயத்திலும் உபயோகிக்கத்தக்கதெ ன்றும், பத்துநாள் தீட்டானபக்ஷத்தில் அவனுக்குத் தாநம் வாங்க அதிகாரமில்லாமையால் ஒருநாள் ஆசௌசமே அமையுமென்றும், மூன்றுநாள் ஜீவிக்கத்தக்க தாநியத்தை யுடையவனுக்கு மூன்றுநாள் ஆசௌசமென்றும், ஜீவநத்தில் குறையாத பிராம்மணன் பத்து நாள் ஆசௌச மிருக்கவேண்டு மென்றும், யாசித்தும், நெற்கதிர்க ளை அல்லது நெற்களைப் பொறுக்கியும் ஜீவிக்கும் பிராம்மணன் அப்பொழுதே ஸ்நாநத்தினால் சுத்தனாகிறானென்றும் சொல்லுகிற ஸங்கிரகக் காரருடைய வசநத்தை அநுஸரித்து ஸ்நாநத்தினாலும், அல்லது, ஒருநாளினாலும், மூன்று நாட்களாலும், நான்கு நாட் களாலும், ஆறு நாட்களாலும், பன்னிரண்டு நாட்களாலும், ஒருப்

க்ஷத்திறைலும், ஒரு மாஸத்திறைலும், சுத்தராகிறார்களென்கிற தக்ஷர் வசநத்திற்கு அர்த்தத்தை ஏற்படுத்தினார்களென்றறிக. (௫)

௬॥ జన్మకర్మపరిభ్రష్టస్సంధ్యోపాసనవర్జితః।
నామధారకవిప్రస్తు దశాహంసూతకీభవేత్॥

(இ-ள்.) ஜந்ம கர்மத்தினல் (கர்ப்பாதாநம் முதலிய ஸம்ஸ்காரங்களால்) குறைந்தவனும் ஸந்தியா வந்தநம் ஔபாஸநம் இவைகளைவிட்டவனுமாகிப் பேர்மாத்திரத்தாலே பிராம்மணை யிருப்பவன் பத்துநாள் சூதகமுள்ளவனுகிறான். (எ-று.)

இதனல் ஜீவநத்தொழிலின் குறைவினலும் யோக்கியதையின் உயர்வினலும் ஆசௌசம் குறைவதுபோல் ஜீவநத்தொழிலின் நிறைவினலும் யோக்கியதையின் குறைவினலும் ஒருவனுக்குச் சாமளவு மாசௌசம் அநுஷ்டிக்கத் தக்கதாமோவென்கிற சங்கை பரிகரிக்கப்பட்டது. பிராம்மண பீஜத்திற்குப் பிறந்து கர்ப்பாதாநம் உபநயநம் முதலிய ஸம்ஸ்காரங்களில்லாதவனும், வேதமோதாதவனும் வைதிககர்மங்களை அநுஷ்டிக்காதவனும் நாமதாரகப் பிராம்மணன் அதாவது பிராம்மணனென்னும் பேமைாத்திரம் தரித்தவனுகிறானென்று வியாஸர் அருளிச்செய்தார். (௬)

௭॥ ఏకపిండాస్తుదాయాదాః పృథగ్దారనికేతనాః।
జన్మన్యపివిపత్తౌచ తేషాంతత్సూతకంభవేత్॥

(இ-ள்.) ஏக பிண்டமுடையவர்களும் அதாவது ஒரு உத்தம வர்ணத்தவனைத் தமச்குத் தந்தையாக உடையவர்களும், வெவ்வேறுதாழ்ந்த வர்ணத்தியமாதரைப் பிறப்பிடமாக உடையவர்களுமான பிள்ளைகள் யாவரோ அவர்களுக்குப் பிதிர் வம்சத்தைப்பற்றிய ஜநநத்திலும் மரணத்திலும் அந்த ஆசௌசமே ஆகும் (பிதிர் வம்சத்தாருக்கேற்ற ஆசௌசமே அநுஷ்டிக்கத்தக்கதாகும்). (எ-று.)

தாழ்ந்த வர்ணத்தார் உயர்ந்த வர்ணத்தாருடைய ஜநநமரணத்தீட்டுக்களை அந்தஉயர்ந்த வர்ணத்திற்குரிய விதிப்படி அநுஷ்டிக்கவேண்டுமென்றும், தங்கள் வர்ணத்திய ஜநந மரண ஆசௌசங்களைத் தம் வர்ணத்திற்குரியதாகஅநுஷ்டிக்க வேண்டுமென்றும்மநுஸ்மிருதியும், க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் பிராம்மண மரணத்தில் பத்துநாளில் சுத்தராகிறார்களென்று பிரமன்சொன்னதாகக் கூர்மபுராணமும்கூறுகின்றன. பிராம்மணருக்குப் பிறந்த க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களுக்கு ஜநந மரணத் தீட்டுக்கள் உண்டானல் அவர்கள் தாய விபா

கம்செய்து கொள்ளாதவர்களாகில் பிராம்மண ஜாதிக்குரியஆசௌசத்தையே அனுஷ்டிக்கத் தக்கவர்களென்றும்,விபாகஞ்செய்துகொண்டவர்களானல் அவர்களுக்குப் பிதிர் வம்சத்திற்குரிய ஆசௌசமில்லை என்றும் தாய் வம்சத்தின் ஆசௌசத்தை அநுஷ்டிக்க வேண்டியவர்களென்றும் ஆபஸ்தம்பர் சொன்னார். சூத்திரனுடைய ஜநநமரணங்களில் அவனுக்கு ஸபிண்டனாகிய வைசியனுக்கு ஆறுநாளும், க்ஷத்திரியனுக்கு மூன்றுநாளும், பிராம்மணனுக்கு ஒருநாளும், ஆசௌச முண்டென்று கூர்மபுராணம் கூறுகின்றது. இதனல் உயர்ந்த வர்ணத்தாருக்குத் தாழ்ந்த வர்ணத்தாருடைய ஜநந மரணங்களைப் பற்றிய தீட்டு சொல்லப்பட்டது.

பிராம்மணருக்கு க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் ஸபிண்டஞாதிகளாக ஜநித்தாலும் மரித்தாலும் கிரமமாக ஆறுநாள், மூன்றுநாள், ஒருநாள் ஆசௌச முண்டென்றும், வைசிய சூத்திரர்களின் ஜநநமரண விஷயத்தில் ஸபிண்டனான க்ஷத்திரியனுக்கு ஆறுநாள், மூன்றுநாள் கிரமமாக ஆசௌச முண்டென்றும்,சூத்திரன் விஷயத்தில் ஸபிண்டனான வைசியனுக்கு ஆறுநாள் ஆசௌசமுண்டென்றும் விஷ்ணுவும், பிராம்மணன் தன் ஜாதி ஜநந மரணவிஷயத்தில் பத்துநாள் ஆசௌச மிருக்க வேண்டுமென்றும் க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் விஷயத்தில் கிரமமாக எழுநாள், ஐந்துநாள், மூன்றுநாள் ஆசௌச மிருக்கவேண்டுமென்றும் பிரஹஸ்பதியும் சொன்னார்கள். இந்த மதபேதங்களில் எதாவதொன்றுஅநுஷ்டிக்கத்தாகுமென்றும், அவர்களிடத்திலுண்டான ஸ்நேகாதிகளுக்கீடாகவாகிலுமாசௌசத்தை யநுஷ்டிக்கவேண்டுமென்றும் கண்டுகொள்க. (எ)

౭౫॥ తావత్తత్సూతకం గోత్రే చతుర్థపురుషేణ తు॥

(இ-ள்.) வேறுஜாதி ஸ்திரீயிடத்திலுண்டான ஸந்ததியைப்பற்றிக் கீழ்ச்சொல்லிய ஆசௌசமானது எதுவரையில் மூன்றுதலைமுறையாமோ அவ்வளவுகாலந் தொடர்ந்துவந்து நான்காவது புருஷனல் விடப்படும். (எ-று.)

தன் ஜாதியில் ஸபிண்ட ஸம்பந்தம் ஏழாவது தலைமுறையிலும் அந்நியஜாதி ஸபிண்ட ஸம்பந்தம் நான்காவது தலைமுறையிலும் விட்டொழியுமென்று விர்த்த பராசரரும், ஒருவனுக்கு வெவ்வேறு ஜாதி ஸ்திரீகளிடத்தில் பிறந்தவர்கள் தாய பாகத்தைப் பிரித்துக்கொண்டு வெவ்வேறு விதமான ஆசௌசத்தை அநுஷ்டித்தாலும் அவர்கள் ஸபிண்ட ஞாதிகளாகவே ஆகிறார்களென்றும் ஆகிலும்

இந்த ஸபிண்டஸம்பந்தம் மூன்றும் தலைமுறையில் விட்டொழிகின்றதென்றும் சாதாதபரும் கூறினார்கள். (எ௯)

அ॥ దాయాద్విచ్ఛేదమాప్నోతి పంచమోవాత్మవంశజః॥

(இ-ள்.) தன் வம்சத்தில் பிறந்த ஐந்தாந்தலைமுறைப் புருஷனும் தாயத்தினின்று (பிண்டத்தினின்று) விடுதலை அடைகிறான். (அ)

௯॥ చతుర్థేదశరాత్రంస్యాత్ షణ్ణిశాఃపుంసిపంచమే।
షష్ఠేచతురహాచ్ఛుద్ధిః సప్తమేతుదినత్రయాత్॥

(இ-ள்.) புருஷஸந்ததியில் நாலாந் தலைமுறையில் பத்துநாள் ஆசௌசமும், ஐந்தாந்தலைமுறையில் ஆறுநாள் ஆசௌசமும் அநுஷ்டிக்கத் தக்கவைகளாம். ஆறாம் தலைமுறையில் நான்கு தினங்களால் சுத்தியும் ஏழாந் தலைமுறையில் மூன்றுதினங்களால் சுத்தியும் உண்டாகும். (எ-று.)

இந்தக் கணக்கு பிதிர்வர்க்கத்தில் மூலபுருஷன் தொடங்கி கணக்கிட்டுப்பார்க்கத்தக்கதாம். பிண்ட ஸம்பந்தம் ஏழு தலைமுறை வரையில் விடாதென்றும், அந்த ஸபிண்டர்களுக்குப் பத்துநாள் ஆசௌசமுண்டென்றும், அதற்குமேல் ஸமாநோதகர் தர்ப்பண ஸம்பந்தமுடையவரென்றும், அவர்களின் ஸம்பந்தம் பேரும்பிறப்பும்தெரியாவிட்டா லொழியுமென்றும், அவர்களுக்கு மூன்றுநாள் ஆசௌசமென்றும் மநு விதித்திருப்பதற்குப் பராசரவசநம் விரோதிக்கிறதேயெனில் ஐந்தாந்தலைமுறை தொடங்கிப் பிண்டஸம்பந்தமொழிகிறதென்கிற வேறு ஸ்மிருதி வசநங்களை அநுசரித்துப் பராசரர் சொன்னாரென்று கொள்ளவேண்டும். அப்படி ஐந்தாவது தலைமுறையில் பிண்ட ஸம்பந்தமொழிந்தால் அவர்கள் ஸமாநோதகர்களாகிறபடியால்மூன்றுநாள் ஆசௌசம் விதிக்கவேண்டியிருக்கப்பராசரர் ஆறுநாள் ஆசௌசம் விதித்தபடியென்னவெனில் ஸமாநோதகர்களுக்கு மூன்றுநாள் என்பதை ஸாமாநிய விதியாகவும் ஆறுநாளென்பதை விசேஷ விதியாகவும் கொண்டு விசேஷ விதியில்லாவிடத்தில் ஸாமாநியவிதி தக்கதாமென்று அறியவேண்டுமென மாதவாசாரியர் கூறினார். (௯)

௧௦॥ భృగ్వగ్నిమరణేచైవ దేశాంతరమృతేతథా।
బాలేప్రేతేచసన్న్యస్తే సద్యశ్శౌచంవిధీయతే॥

(இ-ள்.) மலையினின்று விழுந்தும் அக்கியில் விழுந்தும் ஸம்பவித்த மரணத்திலும் தேசாந்தர மரணத்திலும் அதிகபாலனது மர

ணத்திலும் ஸந்நியாசி மரணத்திலும் அப்பொழுதே ஆசௌசம் ஒழியுமென்று விதிக்கப்படுகிறது. (எ-று)

மேற்சொன்னமரணங்களுக்கு ஸ்நாநத்தினல் சுத்தியென்றறிக. மனமறிந்து மலையேறிவிழுதல் முதலிய நிமித்தங்களால் பிராணனை விட்டவனுக்குப் பிராயச்சித்தஞ்செய்யவேண்டும். அவனுடையஸபிண்ட ஞாதிகளுக்கு அப்பொழுதே ஆசௌச மொழிகிறது. பத்துநாள் ஆசௌச மில்லையென்பது கருத்து. அரசனாலும் பசுக்களாலும் பிராம்மணாதிகளாயுள்ள கொடியரான மனிதர்களாலும் கொல்லப்பட்டவர்கள் விஷயத்திலும் தற்கொலை செய்துகொண்டவர்கள் விஷயத்திலும் அவர்களின் பந்துக்களுக்கும் ஞாதிகளுக்கும் அந்தப்பிணமிருக்கும் வரையில் ஆசௌச முண்டென்றும் அதைத்தகித்த வுடனே ஸ்நாநத்தினல் சுத்தி யுண்டாகிறதென்றும் யாக்ஞியவல்கியர் சொன்னார். சண்டாளனலடிக்கப்பட்டும் ஜலத்தில் விழுந்தும் பாம்பு நெருப்பு இடி இவைகளாலும் பற்களை யுடையவைகளும் கொம்புகளையுடையவைகளும் நகங்களை யுடையவைகளுமான ஜந்துக்களினாலும் மாணமடைந்தவர்களுக்குத் தர்ப்பணம் செய்தல் பிண்டங்கொடுத்தல் ஆகிய இவைகளைச் செய்தால் அவைகள் அவர்களைச்சேராமல் நடுவேயழிந்துவிடுகின்றனவாதலால் அவர்களைப்பற்றிக் கண்ணீர்விடுதல் தர்ப்பணபிண்ட தாநாதிகளைச் செய்தல் ஆசௌசத்தை அநுஷ்டித்தல் அந்தப் பிணத்தைத் தகித்தல் இவைகளைச் செய்யத்தகாதென்றுமநுகூறினர். நெருப்புஜலம் முதலியவைகளால் தற்கொலை செய்துகொள்ளுகிறவனுக்கு ஆசௌசமிருத்தலும் அவனுக்காகத் தர்ப்பணாதிகளைச் செய்தலும் வேண்டாமென்று ஆபஸ்தம்பர்சொன்னார். இது மனமறிந்து கொலைசெய்து கொண்டதைப்பற்றியது. கொம்பு கோரைப் பற்கள் நகம் இவைகளையுடைய ஜந்துக்கள், பாம்பு, விஷம், நெருப்பு, மஹாஜலம் இவைகளோடு பழகி விளையாடி அவைகளால் கொல்லப்பட்டவன் வெகு தூரத்தில் விடத்தக்கவனென்றும், பாம்பினல் கடிக்கப்பட்டவன், இடியினல் தகிக்கப்பட்டவன், திருடனாகி அரசனல் சிக்ஷிக்கப்பட்டவன், பரஸ்திரீகளை அபகரித்து அவர்கள் பதிகளால் கொல்லப்பட்டவன், தனக்குச் சமானமாகாதவர்களோடும் ஸங்கரஜாதியரோடும் சண்டாளர்முதலியவர்களோடும் சண்டைசெய்து அவர்களால் கொல்லப்பட்டவன், சண்டாளன் முதலியோரை அடுத்திருப்பவன், கோபத்தினல் பிராயோப வேசத்தாலாவது விஷத்தினலாவது உச்சுருக்கினலாவது ஜலத்தினலாவது மலையினின்றும் மரத்தினின்றும் விழுவதினலாவது

மரணத்தைத் தேடிக்கொண்டவன், மஹாபாதகஞ் செய்தவன் ஆகிய இவர்களனைவரும் பதிதர்களென்றும் இவர்களுக்குத் தகநமும் அஸ்தி ஸஞ்சயநமும் அந்தியேஷ்டியும் கண்ணீர் விடுவதும் பிண்டதாநமும் சிராத்தாதிகளும் செய்ய லாகாதென்றும் பிரமபுராணத்தில் சொல்லப்பட்டது. துர்மரண மடைந்தவர்களுக்குத் தகநமில்லாமையால் ஆஹிதாக்நியை யக்கியபாத்திரங்களோடு அக்நியில் தகிக்கவேண்டுமென்று வேத விதியிருப்பதால் துர்மரணமடைந்த ஆஹிதாக்கி விஷயத்தில் என்ன செய்ய வேண்டுவதெனில் வைதாநமென்னும் அவனது வேள்வித்தீயை ஜலத்திலும்ஆவஸத்தியமென்னும் அக்நியை நாற் சந்தியிலும் விட்டெறிந்து அவனது யக்கியபாத்திரங்களை நெருப்பில் தகிக்க வேண்டுமென்றும் தற்கொலைசெய்து கொண்டவர்களுக்கும் பதிதருக்கும் அப்படியே கர்மமேயில்லை யென்றும் அவர்களைக் கங்கைநீரில் விட்டெறிவதே நல்லதென்றும் வேறு ஸ்மிருதியில் சொல்லப்பட்டது. துர்மரணமடைந்தவர்களுக்குக் கர்மம்செய்யக்கூடாதென்கிற விலக்கு ஒருவருஷமாகும்வரையிலும் உண்டென்றும் ஒருவருஷங் கடந்தபின்பு சகல பிதிர்க்கிரியைகளும் செய்யத்தக்கனவா மென்றும் முப்பத்தறுவர் மதத்தில் சொல்லப்பட்டது.

நாராயணனை உத்தேசித்தாகிலும் சிவனை உத்தேசித்தாகிலும் எதுகொடுக்கப்படுகிறதோ அது மரணமடைந்தவனுக்குச் சுத்தியைத்தரத்தக்கதாமென்றும் அது வேறுவிதமாக முடியாதென்றும் வியாஸர் அருளிச்செய்தார். பாம்பு கடித்து மரணமடைந்தவன் விஷயத்தில் ஒருவருஷம் கழிந்தபின் நாராயண பலியைச்செய்து ஸ்வர்ணத்தினால் செய்த பாம்பையும் பசுவையும் வியாஸப்பிரீதியை உத்தேசித்து விதிப்படி தாநஞ்செய்தவன் பிதிர்க்கடனைத் தீர்த்தவனாகிறானென்று பவிஷியோத்தர புராணத்தில் சொல்லப்பட்டது.

அறியாமல் ஜலம் அக்நி இவைகளால் மரண மடைந்தவனுக்கு ஆசௌசத்தையும் தர்ப்பணாதி கிரியைகளையும் அநுஷ்டிக்க வேண்டுமென்று அங்கிராசொன்னார். அறியாமல் தெய்விகமாக மிருகம் பாம்பு முதலிய ஜந்துக்களாலும் மனிதர்களாலும் கொல்லப்பட்டவன் பதிதனல்ல னென்றும் அவனுக்கு ஆசௌசம் கர்மம் இவைகள் உண்டென்றும் பிரமபுராணம் கூறுகின்றது.

ஒருவன் கிழவனாகி வேதத்தில் விதித்திருக்கும் சரியான கர்மங்களைச்செய்யச் சக்தியற்றவனாய் அந்த மனவருத்தத்தினால் வைத்தியர் செய்யும் கிரியைகளையும் வெறுத்து மலைமேலேறிவிழுதல், அக்நி

யில்விழுதல், புசிக்காமலிருக்கை இவைகள் முதலிய நிமித்தங்களால் தற்கொலைசெய்து கொண்டால் அவனுடைய ஞாதிகள் மூன்று நாள் ஆசௌசமிருந்து இரண்டாவது நாளில் அஸ்தி ஸஞ்சயநத்தையும், மூன்றுநாளில் திலதர்ப்பணத்தையும், நான்காவதுநாளில் சிராத்தத்தையும் செய்யக்கடவர்களென்று சாதாதபர் சொன்னர்.

வைத்தியத்திற்கு அஸாத்தியமான மஹாரோகங்களால் அடிபட்டவன் புருஷனுனல் அவன் கிளர்ந்தெரிகிற அக்கியில் பிரவேசித்தாகிலும், பட்டினிகிடந்தாகிலும், ஆழமுள்ள ஜலத்தில் விழுந்தாகிலும், மலைமேலேறிவிழுந்தாகிலும், இமய்கிரியை உத்தேசித்துப் பெருவழி நடந்தாகிலும், பிரயாகக்ஷேத்திரத்தில் வட விருக்ஷத்துக் கிளைகளினின்று விழுந்தாகிலும், கங்கை யமுனை ஸரஸ்வதி என்னும் மூன்று மஹா நதிகளின் ஸங்கமத்தில் விழுந்தாகிலும் தேகத்தை ஒழிக்கக்கடவனென்றும், அப்படிப்பட்டவன் உத்தமலோகங்களை அடைகிறனேயல்லது தற்கொலைசெய்து கொண்டவனுக மாட்டானென்றும் காசியில் மரணமடைகிற ஜந்துவுக்கு ருத்திரன் மோட்சத்தைத் தருவதான தாரக பிரமத்தை யுபதேசிக்கிறரென்றும், ஆதித்திய புராணம் சொல்லுகிறது.

மூலத்தில் தேசாந்தர மரணத்திற்கு ஸ்நாநத்தினுல் சுத்தி என்று சொல்லியதற்கு நிதர்சனமாகப் பாலனுகிலும்,தேசாந்தரத்திலிருப்பவனுகிலும், ஸபிண்டனுகாதவனுகிலும் மரணமடைந்தால் அவனைச்சேர்ந்தவன் உடுத்திருந்த வஸ்திரத்தோடு ஸ்நாநம்செய்தால் அப்போதே சுத்தனுகிறனென்றும், மஹாநதிகள் எங்கு குறுக்காக இருக்கின்றனவோ,மலையானது எங்கு எல்லையைப்பிரித்து மறைவாக இருக்கிறதோ, ஜநங்களின் வார்த்தைகள் எங்குவேறுயிருக்கின்றனவோ அதுதேசாந்தர மென்னப்படுமென்றும் மநுவும், சிலர்அறுபது யோஜனமுள்ள பூமி ஒரு தேசமென்றும், அதற்கு மேற்பட்டது தேசாந்தரம் (வேறுதேசம்) என்றும்,சிலர் நாற்பதுயோஜனமுள்ள பூமி ஒரு தேசமென்றும், சிலர் முப்பது யோஜனமுள்ள பூமி ஒரு தேசமென்றும் சொல்லுவார்களென்று பிரஹஸ்பதியும், சொன்னர்கள்.

யவமென்னுந் தாநியத்தின் எட்டுமணிகளைக்குறுக்காக வரிசையாய் வைத்தாலும், அல்லது எட்டுநெற்களை உயரமாக அப்படி வைத்தாலும்,அது ஒரு அங்குலத்தின் அளவென்றும், அவ்விதமான பன்னிரண்டு அங்குலம் விதஸ்தி யென்றும், இரண்டு விதஸ்தி ஒரு அரத்திநி என்றும், இரண்டு அரத்திநி ஒரு கிஷ்கு என்றும்,இரண்டு கிஷ்

கு ஒரு தநுசுஎன்றும், இரண்டாயிரந் தநுசு ஒரு குரோசமென்றும், நான்கு குரோசம் ஒரு யோஜனமென்றும் வேறுஸ்மிருதியில் சொல்லப்பட்டது. இதையே காதமென்பார்கள்.

பாலர்கள்மரித்தலைப்பற்றிய ஆசௌசம். பாலன் மரித்தால் ஞாதிகளுக்கு அப்பொழுதே சுத்தியுண்டாகிறதென்று மூலத்தில் சொல்லப்பட்டது. பாலனென்பவன் நாமகரணம் செய்யப்படாத சிசுவென்றும் நாமகரணத்திற்குமுன் சிசுமரண மடைந்தால் ஞாதிகளுக்கு அப்பொழுதே சுத்தி என்றும் சங்கரும், ஜநித்தபத்தாநாள் கழிவதற்கு முன்னமே சிசு மரணமடைந்தால் ஸபிண்டஞாதிகளுக்கு ஸ்நாநத்தினுல் சுத்தி யென்று காத்தியாயநரும், பத்துநாளைய சிசு மரணத்தில் மாதா பிதாக்களுக்கும் சிசுவின் ஸகோதரர்களுக்கும் பத்துநாள் ஆசௌசமென்று வியாக்கிரமுனியும் சொன்னுர்கள். பிறந்தது முதல் பத்துநாளைக்குள் அந்தச் சிசு மரித்தால் மாதாபிதாக்களுக்குப் பிறந்த தீட்டினேடு மரித்த தீட்டும் ஒழியுமென்று சாதாதபர் சொன்னதாக வியாக்கிரமுனியும், ஜநித்தவுடனே மரித்தாலும் மரித்து ஜநித்தாலும் இந்த ஆசௌசம் ஸபிண்டஞாதிகளுக்குப் பத்துநா ளுண்டென்று ஹாரீதரும், பிறந்த பத்துநாள்களுக்குள் சிசு மரித்தால் அந்தச் சிசுவின் ஸபிண்டஞாதிகள் மரணுசௌசத்தை அநுஷ்டிக்காமல் பிறந்த தீட்டையே அநுஷ்டிக்கத் தக்கவர்களென்று பிரகஸ்பதியும், இந்த த்தீட்டுச் சிசுவுக்குத் தொப்புள் கொடி யறுத்தபின்பு விதிக்கத்தக்கதா மென்றும் தொப்புள் கொடியறுப்பதற்குமுன் தீட்டில்லை யென்றும் ஜைமினியும் சொன்னுர்கள். ஸகல ஸங்கங்களையுமொழித்தவனுகித் தியாநயோகத்தில் நிலைபெற்றிருக்கும் ஸந்நியாசி மரித்தால் அவன் தகநம் செய்யத்தக்கவனல்லனென்றும் அவனுடைய ஞாதிகளுக்கு ஆசௌசமும் தர்ப்பணமுமில்லையென்றும் வேறு ஸ்மிருதியில் சொல்லப்பட்டது.

౧౧॥ దేశాంతరమృతఃకశ్చి త్సగోత్రశ్శ్రూయతే యది।
న త్రిరాత్రమహోరాత్రం సద్యస్స్నాత్వా విశుధ్యతి॥

தேசாந்தரத்தில் மரண மடைந்த ஸபிண்டனைப்பற்றிய ஆசௌசம். (இ-ள்.) ஒரு ஸகோத்திரன் அதாவது ஸபிண்டன் தேசாந்தரத்தில் மரணமடைந்ததாக ஒரு வருஷமானபின் கேள்விப்பட்டால் அவன்ஞாதிகளுக்கு ஆசௌசம் மூன்றுநாளுமில்லை ஒருநாளுமில்லை, அப்பொழுதே ஸ்நாநத்தினுல் சுத்தியுண்டாகிறது. (எ-று.)

மரண மடைந்த பத்துநாளைக்குள் கேட்டால் கேட்டநாள் தொடங்கி நின்றுள்ள நாள்வரையில் ஆசௌசமென்றும், பத்துநா

ளானபின் மூன்றுபக்ஷத்திற்குள்கேட்டால்மூன்றுநாள்ஆசௌசமெ ன்றும், அதற்குமேல் ஆறுமாசத்திற்குள்கேட்டால்ஒருபக்ஷிணி(முன் பகலும் பின்பகலுங் கூடிய நடுவிலுள்ளராத்திரி) ஆசௌசமென்றும், பின் வருஷம் வரையில் ஒருபகலாசௌசமென்றும் அதற்குமேல் ஸ் நாநத்தினால் சுத்தியுண்டாகிறதென்றும் தேவலரும், தேசாந்தரத்தில் மரித்த ஞாதிவிஷயத்தை ஆசௌசநாளுக்குள் கேட்டால் மிகுந்தநா ளும்தீட்டிருந்து தர்ப்பணம்செய்தால் சுத்தியுண்டாகிறதென்றுயாக்ஞி யவல்கியரும்சொன்னார்கள். இந்தவிதி ஞாதிகளைப்பற்றியதாம்.

தூரதேசத்திலிருந்தபிள்ளை மாதாபிதாக்களுடைய மரணத்தை எப்போது கேட்கிறானோஅந்தத்தினமுதல் பத்துநாள்வரையில் ஆசௌ சமுடையவனாகிறானென்று பைடீநசியும் மஹாகுருவாகிய மாதாபி தாக்களுடைய மரணத்தைப் புத்திரன் ஒரு வருஷத்திற்குமேல் கேட் டபோதிலும் கேட்டதுமுதல் பதது நாள்ஆசௌசமிருந்து ஈரவஸ்திரத் துடன் பட்டினியோடு விதிப்படி பிரேதகர்மத்தைச் செய்யக்கடவ னென்று தக்ஷரும் சொன்னார்கள்.

தன் மாதா அல்லாத தந்தையினுடைய வேறொருபத்தினி (மாற் றாந்தாய்)மரித்ததை ஒரு வருஷங்கடந்து கேட்டபோதிலும பிராம்ம ணன் மூன்றுநாள் ஆசௌசத்தைஅநுஷ்டிக்கவேண்டுமென்று தக்ஷர் சொன்னார்.

இந்தப்பிரகரணத்தில் ஆறுமாஸ மென்றும் பற்கள் முளைப்ப தற்கு முன்னென்றும் இவ்விதமாக வயதிற் கீடாகச்சொல்லிய ஆ சௌசமும் பத்துநாளுக்குமேல் மூன்றுநாளென்றிவ்விதமாகக் காலா திக்கிரமத்தில் சொல்லிய ஆசௌசமும் உபநயநமானபின் மரித்தவ னைப்பற்றி வர்ணங்களுக்கீடாகச்சொல்லியஆசௌசமும் பிராம்மணா திகள் யாவருக்கும் சமானமென்று வியாக்கிரபாத முனியும், ஆசௌ சநாட்களுக்குமேல் பிரஸவவிஷயத்தைக்கேட்டால் மரணத்தில் போ ல் அதிக்கிராந்தாசௌசம் கிடையாதென்று தேவலரும், பத்துநாளைக் குமேல் புத்திரஜநநத்தைக்கேட்ட பிதாஅப்போது உடுத்திருந்த வஸ் திரத்துடன் ஸ்நாநம் செய்வதனால் சுத்தனாகிறானென்று மநுவும், பத் துநாட்களுக்குள் கேட்டால் ஞாதிகளுக்கு மிகுந்தநாள்ஆசௌசமுண் டென்று சங்கரும்சொன்னார்கள். தேசாந்தரத்தில்மரணமடைந்தவர் ஸம்ஸ்காரம் செய்யப்பட்டவரென்றும் செய்யப்படாதவரென்றும் இரண்டுவித முடையவர்கள். அவர்களில் ஸம்ஸ்காரஞ் செய்யப் பட்டவனைப்பற்றிய மரணா சௌசவிதிகள் கீழேசொல்லப்பட்ட ன. ஸம்ஸ்காரஞ்செய்யப்படாதவன் இன்னநாளில் மரித்தவனெ

ன்று அறியப்பட்டவனென்றும் அப்படி அறியப்படாதவனென்று மிருவகைப்படுவானென்றும் மரித்தநாள் அறியப்பட்டவன் விஷயத்தில் பிரத்தியாப்திக சிராத்தத்தை மரித்தநாளில் வருஷந்தோறும் செய்யவேண்டுமென்றும் அவன் விஷயத்தில் ஆசௌசத்தை அநுஷ்டிப்பதற்கும் பிண்டோதக தானங்களைச் செய்வதற்கும் விலக்கப்படாத நட்சத்திர முதலியவற்றை விசாரித்துத் தகுந்தநாளில் தொடங்கிப் பிரேதகர்மத்தைச் செய்வது பெரியோர்களுடைய அநுஷ்டான மென்றும் மரித்த நாள் தெரியாத பக்ஷத்தில் அவனைப் பற்றி ஆசௌச பிண்டோதக தானாதிகளைக் கிருஷ்ணபக்ஷம் அஷ்டமி அல்லது ஏகாதசி அல்லது அமாவாஸ்யைதொடங்கிப் பிரேத கிருத்தியங்களைச் செய்து அந்தத்திதியில் தானே பிரத்தியாப்திக சிராத்தத்தைச் செய்யவேண்டுமென்றும் ஸ்மிருதி ஸாரமென்னும் கிரந்தத்தில் சொல்லப்பட்டது. (கக)

౧౨॥ అజాతదంతా యే బాలా యే చ గర్భాద్వినిస్సృతాః।
న తేషామగ్నిసంస్కారో నాశౌచం నోదకక్రియా॥

பல்முளையாதது முதலிய குழந்தைகளின் தீட்டு. (இ-ள்.) எந்தக் குழந்தைகள் பல்முளையாதவைகளோ எவை கர்ப்பத்தினின்று அகாலத்தில் வெளிப்பட்டனவோ அந்தக் குழந்தைகளுக்கு அக்நி ஸம்ஸ்காரமும் ஆசௌசமும் தர்ப்பணமும் இல்லை. (எ-று.) (க௨)

౧౩॥ యది గర్భో విపద్యేత స్రవతే చాపి యోషితః।
యావన్మాసం స్థితో గర్భో దినం తావత్తు సూతకమ్॥

(இ-ள்.) கர்ப்பம் அழிந்தாலும் கலங்கிப் பெருகினாலும் அந்தக் கர்ப்பம் எத்தனைமாஸ மிருந்ததோ அத்தனைநாள் மாதாவுக்குச் சூதகமுண்டு. (எ-று.) (கரு)

౧౪॥ ఆచతుర్థాద్భవేత్స్రావః పాతః పంచమషష్ఠయోః।
అత ఊర్ధ్వం ప్రసూతిస్స్యాద్దశాహం సూతకం భవేత్॥

கர்ப்பஸ்ராவம் கர்ப்ப மழிந்துவிழுதல் பிரஸவம் இவைகளின் ஆசௌசம். (இ-ள்.) நாலுமாஸத்திற்குள் கர்ப்பங் கலங்கிப் பெருகுவது ஸ்ராவமென்னப்படும், ஐந்து ஆறு மாஸத்திற்குள் கர்ப்பம் விழுவது பாதமென்னப்படும், அதாவது கடினமாகிக் கர்ப்பமழிந்து விழுவதாம், அதற்குமேல் ஏழாவதுமாதம் முதல் எப்போது கர்ப்பம் வெளிப்பட்டபோதிலும் பிரஸவமென்னப்படும். அதற்குப் பத்து நாள் சூதகமுண்டு. (எ-று.)

౧౫॥ దంతజాతేనుజాతేచ కృతచూడేచసంస్థితే।
అగ్నిసంస్కరణే తేషాంత్రిరాత్రమశుచిర్భవేత్॥

பாலஸம்ஸ்காரமும் ஆசௌசமும். (இ-ள்.) பல்முளைத்தவனாயிருந்தாலும் அவனுக்குப் பின்பிறந்தவன் அதாவது பல் முளையாதவனாயிருந்தாலும் சௌளமென்னும் மயிர்கழித்தலைச் செய்யப்பட்டவனாயிருந்தாலும் மரணமடைந்த அவனை அக்நியில் ஸம்ஸ்காரம் செய்தார்களாகில் அவனுடைய ஸபிண்டஞாதிகளுக்கு மூன்றுநாள் ஆசௌசமுண்டு.

இரண்டுவயது ஆகாத பிணத்தைத் தகித்தால் ஞாதிகளுக்கு மூன்றுநாள் ஆசௌசமுண்டென்று அங்கிராசொன்னார்.

மரித்தபாலன் பல் முளையாதவனே யாகிலும் சூடா கர்மமாகிய சௌளத்தைச் செய்துகொண்டவனா யிருந்தால் அவனை அக்நியால் தகிக்கவேண்டுமென்றும் ஞாதிகள் மூன்றுநாள் ஆசௌசமிருக்கவேண்டுமென்றும் முப்பத்தறுவர் மதத்தில் சொல்லப்பட்டது. பல்முளைத்தும் சௌளமில்லாமல் மரித்தபாலன் விஷயத்தில் ஒருநாள் ஆசௌசமென்று விஷ்ணு சொன்னது அவனைத் தகநம் செய்யாமல் புதைத்த பக்ஷத்தைப்பற்றிய தென்றறிக. மூன்றுவருஷமாகாத பாலன் மரணத்தில் ஞாதிகள் தர்ப்பணத்தையும் தர்ப்பணக்கிரியையென்னும் பதத்தால் குறிக்கப்பட்ட தகந ஸம்ஸ்காரத்தையும் செய்யக்கடவர்களென்றும் அப்படியே பல்முளைத்த பாலன் மரணத்திலும் பேரிட்டபாலன் மரணத்திலும் கண்டுகொள்க என்றும் மநு சொன்னார். (௧௫)

౧౬॥ ఆదంతజన్మనస్సద్య ఆచూడాన్నైశికీ క్రియా।
త్రిరాత్రమావ్రతాదేశా ద్దశరాత్రమతఃపరమ్॥

வயதை அநுசரித்த ஆசௌசம். (இ-ள்.) ஜநநமுதல் பல்முளைக்கும் வரையில் ஸத்தியசுத்தி (அப்பொழுதே ஸ்நாநத்தினால் ஸபிண்டருக்குச் சுத்தி). அது முதல் சௌளம் செய்யும்வரையில் ஒரு பகல் ஒரு ராத்திரி ஆசௌசம், அதுமுதல் உபநயநம் ஆகும்வரையில் மூன்றுநாள் ஆசௌசம், அதற்கு மேற்பட்டால்பத்துநாள் ஆசௌசமுண்டு. (எ-று.)

சங்கர் முதலிய ரிஷிகள் இதைப்பற்றி விதித்திருக்கும் அநேக வசநங்களின் கருத்தை ஆராய்ந்து பேரிடுவதற்குமுன் சிசுமரித்தால் ஸ்நாநத்தினால் சுத்தியென்றும், அதற்குமேல் பல் முளைக்

கும் வரையில் தகநம் செய்தால் ஒருபகல் ஆசௌசமென்றும், புதை த்தால் ஸ்நாநத்தினால் சுத்திஎன்றும், பல்முளைக்காமலிருந்தும் சௌளம் செய்யப்பட்டவனாகி மரித்தால் மூன்றுநாள் ஆசௌசமென்றும், பல் முளைத்ததற்குமேல் சௌளத்திற்குமுன் மரித்தவனைப் புதைத்தால் ஒருபகல் ஆசௌசமென்றும், தஹித்தால் மூன்றுநாளென்றும், உபநயநத்திற்குமேல் பிராம்மணாதிகளுக்குப் பத்துநாள்ஆசௌசமென்றும் இந்தவிதி ஆண்பிள்ளை மரணத்தைப்பற்றிய தென்றும் மாதவாசாரியர் நிச்சயித்தார்.

கந்நியாமரண ஆசௌச பிரகரணம். சூடாகர்மம் செய்யப்படாத பெண்மரித்தால் அப்பொழுதே ஸ்நாநத்தினால் சுத்தியென்றும், வாக்தாநம் செய்யப்படாத கந்நிகையின் மரணத்தில் ஒருபகலும் இரவும் ஆசௌசமென்றும், வாக்தாநம் செய்யப்பட்டவள் மரணத்தில் மூன்றுநாள் ஆசௌசமென்றும் விருத்தமநுவும், சூடாகர்மம் ஆகாத பெண் மரணத்தில் அப்பொழுதே சுத்தியென்றும் வாக்தாநத்திற்குமுன் மரித்தபெண்ணிற்கு ஒருநாள் ஆசௌசமென்றும் வாக்தாநத்திற்குப் பின் விவாகமாவதற்கு முன் மரித்தால் மூன்றுநாள் ஆசௌசமிருக்கவேண்டுமென்றும் மரீசியும், சூடாகர்மம் வரையில் கந்நிகை மரணத்தில் எல்லாவர்ணத்தாருக்கும் அப்பொழுதே ஸநாநத்தினால் சுத்தியென்றும், பின் ஒருவனுக்கு வாக்தாநம் செய்யும்வரையில் ஒருநாள் தீட்டு என்றும், அதன்பின் மூன்றுநாள் அதாவது வாக்தாநத்தைப் பெற்றுக்கொண்ட விவாகப்பிள்ளைக்கும் கந்நிகையின் பிதாவுக்கும் மூன்றுநாள் தீட்டு என்றும், விவாகமானபின்பு ஜநநமரணாசௌசம் தத்தம் ஜாதிக்குரியபடி அநுஷ்டிக்கத் தக்கதாமென்றும் பிரமபுராணத்தில் சொல்லப்பட்டது. வாக்தானமான கந்நிகைக்கு விவாகமாவதற்கு முன் நேரிட்ட மரணத்தில் அந்தத் தாநத்தைப் பெற்றுக்கொண்ட விவாகப்பிள்ளையினுடைய ஸபிண்டஞாதிகளும் அந்தக் கந்நிகையின் பிதிர் ஸபிண்டரும் மூன்றுநாளில் சுத்தியை அடைகிறார்களென்று மநுவும், அவ்விதமாகவே மரீசியும் கூறினார்கள். இங்கு சூடாகர்மமாகாத கந்நிகை மரணத்தில் அப்பொழுதே சுத்தி என்பதும் சூடாகர்மமானவள் மரணத்தில் ஒருநாள் தீட்டு என்பதும் கந்நிகையின் மாதாபிதாக்களைத் தவிர மற்றவர்களைப் பற்றிய தென்றறிக. ஏனெனில் மரணமடைந்த கந்நிகையானவள் வாக்தாநம் செய்யப்பட்டவளாகிலும், விவாகம் ஆகாதவளாகிலும் விவாகம் ஆனவளாகிலும் தாய் தந்தைகளுக்கு மூன்றுநாள் தீட்டு எனவும் மற்றவர்களுக்கு விதித்திருக்கின்றபடியே ஆசௌசமென

வும் பலஸ்மிருதிகளில் சொல்லியிருக்கிறதென்றும், பல் முளையாத பெண்கள் மரணத்தில் தாய் தந்தைகளுக்கு ஒருநாள் ஆசௌசமென்றும் சங்கர் விதித்தமையால் வாக் தானமில்லாதவர்கள் மரணத்தில் மூன்றுநாள் ஆசௌசமென்பது பல் முளைத்த கந்நிகை மரணத்தைப்பற்றிய தென்று அறிக.

விவாகமான பெண் மரணத்தில் அவள் பிதாவினுடைய ஸபிண்டருக்கு ஆசௌசமில்லையென்றும் ஆனால் அவள் பிதிர்கிருகத்தில் பிரஸவித்தாலும் மரித்தாலும் அவள் பிதிர்ஞாதிகளுக்கு ஒருநாள் ஆசௌசமுண்டென்றும் அவள் மாதாபிதாக்களுக்கு மாத்திரம் மூன்றுநாள் ஆசௌசமென்றும் விஷ்ணு சொன்னார். விவாகமான பெண்ணுக்கு மாதாபிதாக்களுடைய மரணத்தில் மூன்றுநாள் ஆசௌசமென்றும் பெண்ணின் மகனான தௌஹித்திரன், உடன் பிறந்தாள் மகனான பாகிநேயன், இவர்கள் உபநயநமில்லாதவர்களாக மரித்தால் பக்ஷிணி ஆசௌசமென்றும், உபநயநமான பின் மரித்தால் மூன்றுநாள் ஆசௌசமென்றும் விருத்த மநு கூறினார்.

குருமுதலியவர்களின் ஆசௌசம். தாயைப்பெற்ற பாட்டன், ஆசாரியன், (தனக்கு ஞாதியாகாமல் உபநயநாதிகளைச் செய்தவன்) ஒரு வேதசாகையை முழுதும் ஓதின சுரோத்திரியன், ஸ்நேஹம் முதலியவைகளையுடையவன் ஆகிய இவர்கள் மரணத்தில் மூன்றுநாள் ஆசௌசமென்று பிரஹஸ்பதியும், இவ்விதமாகவே மநு விஷ்ணு இவர்களும் சொன்னார்கள். இந்த மூன்றுநாள் ஆசௌசமானது கீழ்ச்சொன்னவர்களை வேறொருவன் தகநம்செய்திருந்தாலுண்டென்றும் தானே தகநம்செய்திருந்தால் பத்துநாள் ஆசௌசமென்றும் மநுசொன்னார்.

தாயுடன் பிறந்தவள், அம்மான், மாமனார், மாமியார், குரு, தன்குலத்தில் பரம்பரையாக விடாமலிருக்கிற புரோஹிதன், அப்படிப்பட்ட ருத்விக்கு இவர்கள் மரணத்தில் மூன்றுநாள் ஆசௌசமுண்டென்று பிரசேதரும், குருமரணத்தில் குருவை அந்நியன் தகித்தால் சிஷியனுக்கு மூன்றுநாள் ஆசௌசமென்றும், அந்தக்குருவை பிதிர்மேதவிதியால் தானே தகநம் செய்யவேண்டுமென்றும் அந்தப்பக்ஷத்தில் பத்துநாள் ஆசௌசமுண்டென்றும் மநுவும் சொன்னார்கள். ஆசாரியகுமாரன், உபாத்தியாயன், அம்மான், சுரோத்திரியனான பிராம்மணன், மாமியார், மாமனார், தன்னுடன் வேதத்தை ஓதினவன், அந்நியனால் உபநயநம் செய்யப்பட்டவனான அந்தே

வாஸி, தன்னால் உபநயநம் செய்யப்பட்டவனான சிஷியன் இவர்கள் மரணத்தில் ஒருதினத்தில் சுத்தனாகிறானென்று விஷ்ணு சொன்னதற்குக் கருத்தென்னவெனில், தேசாந்தரத்திலிருப்பவன் அல்லது உபகாரம் செய்யாதவனான அம்மான்விஷயத்திலும் தனக்குரிய லக்ஷணங்களின் பூர்த்தியில்லாத சுரோத்திரியன் விஷயத்திலும், தேசாந்தரத்திலிருப்பவர்கள் அல்லது உபகாரம் செய்யாதவர்களான மாமனார் மாமியார் விஷயத்திலும்,ஒரு குருகுலத்தில் அல்பகாலம் தன்னுடன் வேதமோதினவன் விஷயத்திலும்,ஒரு தினம் ஆசௌசத்தை அநுஷ்டிக்க வேண்டுமென்பதாம். அம்மான்,சிஷியன், ருத்துவிக்கு, மாதிர்பந்துக்கள் இவர்கள் மரணத்தில் பக்ஷிணி ஆசௌசம் அநுஷ்டிக்கத்தக்கதாமென்கிற மநு வசனத்தை அல்போபகாரம் செய்த அம்மான்,தன்னால் உபநயனம்செய்யப்பட்டு ஸாங்கமாக வேதத்தைத் தன்னிடத்தில் ஓதின சிஷியன், தான் பிழைத்திருக்கும் காலமெல்லாம் தன்னிடத்தில் ருத்துவிக்காயிருந்தவன், மாதிர் பிதுர் பந்துக்கள் ஆகிய இவர்கள் விஷயமாக நிச்சயிக்கவேண்டும். தன் தர்மபத்நியிடத்தில் தனக்குப் பிறக்காதவர்களான அதாவது ஔரஸன்,அவன் போன்ற தத்தனென்னும் புத்திரன் இவர்கள் தவிர மற்ற க்ஷேத்திரஜன் முதலிய பிள்ளைகள் ஜநித்தாலும் மரித்தாலும் முன் அந்நியனால் விவாகம்செய்து கொள்ளப் பட்டவளான தன் பத்நியானவள் பிரஸவித்தாலும் மரித்தாலும் வியபிசாரியான தன் பாரியை விஷயத்திலும் மூன்றுநாள் ஆசௌசத்தை அநுஷ்டிக்கவேண்டுமென்று விஷ்ணு ஹாரீதசங்கர்கள் சொன்னார்கள். தனக்குப் பிறக்காதவர்களான க்ஷேத்திரஜன் முதலிய பிள்ளைகள் விஷயத்திலும் வியபிசாரியான பத்நி விஷயத்திலும் ஒருநாள் ஆசௌசத்தை அநுஷ்டிக்க வேண்டுமென்கிற வேறுஸ்மிருதி வசநம் எதிரில் மரிக்காத விஷயத்தைப்பற்றியதாகும். எந்தப் பிள்ளையின் மரணத்தில் பிதா மூன்றுநாள் ஆசௌசத்தை அநுஷ்டிக்கிறானோ அந்தப்பிள்ளை எதிரில் மரித்தபோதிலும் ஸபிண்ட ஞாதிகளுக்கு ஒருநாள் ஆசௌசமே அநுஷ்டிக்கத்தக்கதென்று மரீசிகூறினார்.

அந்நியபுருஷனைப் புணருகிற பத்நிவிஷயத்தில் பர்த்தாவுக்கும் அயல்மாதருக்குப் பிறந்தபிள்ளைகள் விஷயத்தில் பிதாவுக்கும் மூன்றுநாள் ஆசௌசமென்றும் ஞாதிகள் ஸ்நாநத்தினால் சுத்தி அடைகிறார்களென்றும் பிரஜாபதிசொன்னார். ஞாதிகளுக்கு மூன்றுநாள் ஆசௌசமென்பதை ஸமாநோதகரென்னும் ஞாதிகள் விஷயமாக வாகிலும் எதிரில் மரியாதவர்கள் விஷயமாகவாகிலும் கொள்ள

வேண்டும். ஒரு மாதாவினிடத்தில்வெவ்வேறான இரண்டு தந்தைகளுக்கு ஜனித்தவர்களான வெவ்வேறு கோத்திரத்தை யுடைய ஸோதரர்கள் தங்களில் ஒருவர்க்கொருவர் ஜநநத்தில் ஒருநாள் ஆசௌசத்தையும் மரணத்தில் மூன்றுநாள் ஆசௌசத்தையும் அநுஷ்டிக்கக் கடவர்களென்று மரீசி கூறினார். ஞாதியாகாதவனைத் தன் வீட்டில் மரித்த ஒருவனைப்பற்றியும் யோநி ஸம்பந்திகளென்னப்படுகிற சிறிய தாயார், பெரியதாயார், அத்தை ஆகிய இவர்களுடைய பெண் பிள்ளை முதலானவர்களுடைய மரணத்தைப்பற்றியும் தன்னுடன் குருகுலத்தில் வேதாத்தியயநம் செய்தவனைப்பற்றியும், பக்ஷிணி ஆசௌசம் அநுஷ்டிக்கத் தக்கதாகுமென்று கௌதமரும், அம்மான், மாமனார், ஸ்நேஹிதன், குரு, குருபத்நி, தாயைப்பெற்றபாட்டியார், மாமியார், உடன்பிறந்தவள், அம்மானுடையபாரியை, தாய் தகப்பன்மாருடைய சோதரிகள் இவர்கள் மரணத்திலும் பக்ஷிணி ஆசௌசமே அநுஷ்டிக்கத் தக்கதாமென்று விருத்தமநுவும் சொன்னார்கள். ஞாதியாகாத ஒருவன் தன் வீட்டில் மரித்தால் அவனுக்கு ஒருநாள் ஆசௌசமுண்டென்று விஷ்ணுசொன்னது தன்னுடைய முக்கியமல்லாத சாதாரணவீட்டில் மரித்தவனைப்பற்றிய தென்றறிக. தன் வீட்டில் மரித்தவனைப்பற்றி மூன்றுநாள் ஆசௌசமுண்டென்று அங்கிராசொன்னது ஞாதியல்லாமல் தன் கோத்திரத்தை மாத்திரம் உடையவனைப் பற்றியதாம். உடன்பிறந்தவன், ஸ்நேஹிதன், மருமகன், உடன்பிறந்தவளுடைய மகன், மைத்துனன், அவன் பிள்ளை ஆகிய இவர்கள் மரணத்தில் அப்பொழுதே ஸ்நாநத்தினால் சுத்தனாகிறானென்று பிருஹற்மநு சொன்னது தேசாந்தர மரணவிஷயமென்றும் மருமகன், மைத்துனன், பிள்ளை ஆகிய இவர்கள் தனக்கெதிரேமரித்தாலும் ஸ்நாநத்தினால் சுத்தியுண்டாகுமென்று மறிக. தான் வசிக்கும் தேசாதிபதியானவன் மரித்தது பகலிலானால் பகற்காலம் மாத்திர மாசௌசமுண்டென்றும், இரவிலானால் இராத்திரி காலம்மாத்திரம் ஆசௌசமுண்டென்றும், இந்த ஆசௌசவிதி அந்தத்தேசத்திலுள்ள பிரஜைகள் யாவருக்குமுண்டென்றும் யாக்கியவல்கியரும் மநுவும் சொன்னார்கள். ஊர் நடுவில் சவமிருந்தால் அந்தச் சவமிருக்கும்வரையில் அந்த ஊருக்கு அசுத்தி என்றும் சவமானது வெளிப்பட்டால் அப்போதே கிராமத்திற்குச் சுத்தி உண்டாகிறதென்றும் விருத்த மநுசொன்னார் (கசு)

౧౭॥ బ్రహ్మచారిగృహేయేషాం హూయతేచహుతాశనః।
సంపర్కంచనకుర్వంతి నతేషాంసూతకంభవేత్॥

அக்நிஹோத்திரம் செய்தவன் பிரமசாரி இவர்களுக்கு ஆசௌசமில்லை என்பது. (இ-ள்.) உபகுர்வாணனென்றும், நைஷ்டிகனென்றும் இருவகைப்பட்ட பிரமசாரிகளும், தங்கள் கிருகத்தில் அக்நிஹோத்திரம் செய்கிறவர்களும் சூதகமுடையவர்களோடு சேராமலிருந்தால் அவர்களுக்குச் சூதகமில்லை. (எ-று.)

நைஷ்டிகன் முதலிய பிரமசாரி, வாநப்பிரஸ்தன், ஸந்நியாசி ஆகிய இவர்களுக்கு ஜநந மரணத்தீட்டுக்களில்லையென்று கூர்மபுராணத்திலும் தேவலஸ்மிருதியிலும் சொல்லப்பட்டது. (கஎ)

౧౮॥ సంపర్కాద్దూష్యతె విప్రోజననేమరణేతథా।
సంపర్కాచ్చనివృత్తస్య నప్రేతం నైవసూతకం॥

(இ-ள்.) தீட்டுக் காரர்களோடு ஸம்பர்க்கத்தினல் (அவர்களோடு கூட போஜநஞ்செய்வது, அவர்களிடத்தில் பொருளை வாங்குவது அவர்களுடன் சயனிப்பது முதலியவைகளைச் செய்வதினல்) பிராம்மணன் அவர்கள் ஜநநத்திலும் மரணத்திலும் ஆசௌசமென்னுந் தோஷத்தை அடைகிமுன். இவ்விதமான ஸம்பர்க்கத்தினின்று ஒழிந்தவனுக்கு அவர்கள் ஜநநமரணங்களில் ஆசௌசமில்லை (எ-று) (கஅ)

౧౯॥ కించ॥ శిల్పినః కారుకావైద్యా దాసీదాసాశ్చనాపితాః।
రాజానశ్శ్రోత్రియాశ్చైవ సద్యశ్శౌచాః ప్రకీర్తితాః॥

౨౦॥ సవ్రతస్సత్రపూతశ్చ ఆహితాగ్నిశ్చయోద్విజః।
రాజ్ఞశ్చసూతకంనాస్తి యస్యచేచ్ఛతిపార్థివః॥

౨౧॥ ఉద్యతోనిధనేదానే ఆర్తోవిప్రోనిమంత్రితః।
తథైవఋషిభిర్దృష్టం యథాకాలేనశుధ్యతి॥

(இ-ள்.) சித்திரவேலை செய்பவன் முதலியவர்களான சிற்பிகள், காருஎன்னப்பட்ட சமயல்காரன் முதலியவர்கள், சிகிச்சை செய்கிற வைத்தியர்கள். தாஸிகள், அடிமைத்தொழில் செய்கிறவர்களான தாஸர்கள், ராஜாக்கள், சுரோத்திரியர்கள் ஆகிய இவர்கள் அப்பொழுதே சுத்தியை அடைந்தவர்களாகச் சொல்லப்பட்டார்கள் அதாவது கீழ்ச்சொன்னவர்கள் தந்தம் கிருத்தியங்களைச் செய்யுந் தருணத்தில் சுத்தியை யுடையவர்களென்பதாம். பின்னும் ஒருவித யக்ஞயத்தைச் செய்கிறவனுக்கும் சாந்திராயணம் முதலிய விரதங்களை அநுஷ்டிப்பவனுக்கும் அக்நியாதாநம் செய்தவனான பிராம்மணனுக்கும் ராஜாவைச்சேர்ந்தவனான மந்திரிக்கும் அரசனானவன் தானெடுத்துக்கொண்ட ஒருவித வைதிகவிதி முடியவேண்டுமென்று தன்

புரோஹிதனுன எவனுக்கு ஆசௌசமில்லாமலிருக்கக் கோருகிரு ஞே அவனுக்கும் சூதகமில்லை. பின்னும் யுத்தத்திலும் அங்கம் முதலியவைகளைக் கொடுப்பதிலும் பிரவேசித்திருப்பவன், ஆபத்தை அடைந்தவன், சிராத்தத்தில் போஜநத்திற்காக வரிக்கப்பட்டவனுன பிராம்மணன் ஆகிய இவர்கள் அப்போதே சுத்தராகிருர்கள். அந்த நிமித்தங்கள் முடிந்தபின் ரிஷிகள் அறிந்து விதித்தபடி கிரமமான காலத்தினுல் அதாவது பத்து நாட்களால் சுத்தியை அடைகிருர்கள். (எ-று.)

சிற்பியென்னும் சித்திரமெழுதுகிறவன் எவ்விதமான வேலையைச்செய்கிருனே அதை வேருருவன் செய்யமாட்டாஞகையால் அவன் சுத்தனென்றும்அதுபோல ஸூபகாரன் வைத்தியன் முதலிய கீழ்ச்சொல்லிய சகலருக்கும் அவரவர்செய்யும் வேலைகளைப்பற்றிச் சுத்தியென்றும் ஆதித்திய புராணம்சொல்லுகின்றது. ஒருவிரதத்தை ஆரம்பித்தவனுக்கும் தபசுசெய்யத் தொடங்கினவனுக்கும் யக்கியத்தில் தீக்ஷித்துக்கொண்டவனுக்கும் சிராத்தத்தை ஆரம்பித்தபின் அதில் போஜநம்செய்வதற்காக வரிக்கப்பட்டவனுக்கும் எந்தக்கிருகத்தில் சிராத்தம் செய்யப்படுகிறதோ (பிதிர்க்கள் வசிக்கிருர்களோ) அந்தக்கிருகத்திற்கும் விவாகம் செய்யத்தொடங்கினவனுக்கும் தெய்வப் பிரதிஷ்டையைச் செய்ய ஆரம்பித்தவனுக்கும் ராஜ்யத்தை ரக்ஷிக்கின்ற ராஜாக்களுக்கும் ஆபத்தை யடைந்தவனுக்கும் ஒருவனுடைய மரணத்தில் ஆசௌசம் அநுஷ்டிக்கத் தக்கதில்லையென்று விஷ்ணு மநு விருத்தபராசரர் முதலிய ரிஷிகள்சொன்னுர்கள்.

(கக, உO, உக)

உஉ॥ ప్రసవేగృహమేధీతు నకుర్యాత్సంకరంయది।
దశాహాచ్ఛుధ్యతేమాతా త్వవగాహ్యపితాశుచిః॥

(இ-ள்.) பிரஸவ நிமித்தமான தீட்டில் கிருகஸ்தனுனவன் (பிதாவானவன்) பிரஸவித்த ஸ்திரீயுடன் ஸம்ஸர்க்கத்தைச் செய்யாதவனுயிருந்தால் பிரஸவித்தவுடன் ஸ்நாநத்தினுல் சுத்தனுகிருன். மாதா பத்துநாட்களால் சுத்தியை அடைகிருள். (எ-று.) (உஉ)

உ3॥ సర్వేషాంశావమాశౌచం మాతాపిత్రోస్తుసూతకమ్।
సూతకంమాతురేవస్యా దుపస్పృశ్యపితాశుచిః॥

(இ-ள்.) ஸகல ஸபிண்டர்களுக்கும் கர்மத்தில் அதிகாரத்தைப் போக்குவதான ஆசௌசம் மாதா பிதாக்களுக்கும் உண்டு; ஆனுல்

ஸ்பரிசிக்கத்தகாததான பிரஸவத்தீட்டு மாதாவுக்கேயுள்ளது. பிதாவானவன் புத்திர ஜநநத்தில் ஸ்நாநத்தினால் சுத்தனாகிறான். (எ-று.)

ஜநநத்தில் தாய்தந்தைகள் தவிர மற்றுள்ள ஞாதிகளனைவரும் ஸ்பரிசிக்கத்தக்கவர்கள். தாய் தந்தைகளிலும் தாயே ஸ்பரிசிக்கத்தகாதவள். தந்தை ஸ்நாநத்தினால் சுத்தனாகிறானென்று பைடீநசியும் அப்படியே வஸிஷ்ட ஸம்வர்த்தாதி முனிவர்களும் சொன்னார்கள்.

౨౪॥ యదిపత్న్యాం ప్రసూతాయాం సంపర్కం కురుతే ద్విజః।
సూతకం తు భవేత్తస్య యది విప్రః షడంగవిత్॥

ஸூதிகை என்னும் பிரஸவித்தவளுடைய ஸம்பந்தத்தில் ஆசௌசம். (இ-ள்.) பிரஸவித்தவளான பத்நியிடத்தில் பிராம்மணன் ஸம்பந்தத்தை அதாவது ஸ்பரிசிப்பது முதலியவைகளைச் செய்தானேயானால் அந்தப்பிராம்மணன் ஆறுவேதங்களையும் சகல கர்மங்களையும் அறிந்தவனானபோதிலும் அவனுக்குப் பத்துநாள் ஸ்பரிசிக்கத் தகாத ஸூதகமுண்டு. (எ-று.) (உச)

౨౫॥ సంపర్కాజ్జాయతే దోషో నాన్యో దోషో஽స్తి వై ద్విజే.
తస్మాత్సర్వప్రయత్నేన సంపర్కం వర్జయేద్బుధః॥

(இ-ள்.) பிரஸவித்தவளான பாரியையினுடைய ஸம்பந்தத்தினால் பிராம்மணனிடத்தில் ஸ்பரிசிக்கத்தகாத தோஷம் ஸம்பவிக்கிறது. வேறுவிதமான தோஷம் பிரஸவநிமித்தத்தில் புருஷனுக்கில்லை. ஆகையால் பண்டிதனானவன் பிரஸவித்த ஸ்திரீயோடு சயநிப்பது உட்காருவது தாம்பூலம் முதலியவைகளைப் புசிப்பது முதலிய ஸம்பந்தத்தைப் பிரயத்தனப்பட்டாவது ஒழிக்கக்கடவன் (எ-று)

ஸபிண்ட ஞாதி, மற்ற பந்துக்கள் அல்லது பந்துவல்லாத ஒருவன் பிரஸவித்த ஸ்திரீயுடன் ஸம்பர்க்கத்தைச் செய்தானாகில் அவனும் பத்துநாள் ஸ்பரிசிக்கத் தகாதவனாகிறானென்று பிரஹஸ்பதியும் ஆசௌசநாட்களில் தினம் ஒருதரம் புசிப்பவனுக்கு விதித்தகாலத்துடனே ஆசௌச மொழிகிறதென்று விஷ்ணுவும் சொன்னார்கள். (உரு)

౨౬॥ వివాహోత్సవయజ్ఞేషు త్వంతరా మృతసూతకే।
పూర్వసంకల్పితం ద్రవ్యం దీయమానం న దుష్యతి॥

ஆசௌசத்திற்கு முன் தாநம் முதலியவற்றிற்காக உத்தேசித்த திரவியத்தின் சுத்தி. (இ-ள்.) விவாகம், தேவோத்ஸவம், யக்ஞம் இவைகள் முன்னமே தொடங்கப்பட்டுச் செய்துவருகையில்

இந்தக்கிரியைகளின் நடுவில் ஜநநமரணங்கள் ஸம்பவித்தால் முன்னமே இவைகளுக்கென்று மனதினுல் உத்தேசித்து வைத்திருக்கும் திரவியமானது பிராம்மணுதிகளுக்கும் தேவதைகளுக்கும் கொடுக்கப் பட்டால் தோஷத்தை அடைகிறதில்லே. (எ-று.)

இங்கு விவாகமென்றெடுத்தது சௌளோபநயநம் முகலியவைகளுக்கும் உபலக்ஷணமாகிறதென்றறிக. உப்பு, தேன், மாம்ஸம், புஷ்பம், கிழங்கு, பழம், சாகம், விறகு, புல், அல்லது வைக்கோல், தயிர், பால், நெய், எள், சில ஓஷதிகள், தோல் ஆகிய இவைகள் முன்னமே ஸங்கற்பித்து வைக்கப்படாதவைகளேயாகிலும் ஆசௌசகாலத்தில் அவைகள் சுத்தமானவைகளென்று மரீசி கூறினுர்.

உஉ॥ అంతరాతుదశాహస్య పునర్మరణజన్మనీ।
తావత్స్యాదశుచిర్విప్రో యావత్తత్స్యాదనిర్దశమ్॥

ஒரு ஆசௌசத்தின் நடுவில் வந்த வேறு ஆசௌசத்தின் பிரகரணம். (இ-ள்.) ஒருவன் அநுஷ்டிக்கிற பத்துநாள் தீட்டின் நடுவில் ஜநந மரணநிமித்தமான வேறு ஆசௌசம் நேரிட்டால் முன் அநுஷ்டித்துவருகிற ஆசௌசமானது எவ்வளவு காலத்திற்குள் பத்துநாட்களேக்கடந்ததாகாதோ அவ்வளவு காலம் வரையில் பிராம்மணன் அசுசியாகிருன். (எ-று.)

இதனுல் ஒருவிதமான பத்துநாள் தீட்டின் நடுவில் பத்துநாளேக்குக் குறைந்ததாகவாவது சரியாகப் பத்துநாளாகவாவது மற்றொரு தீட்டுநேரிட்டால் முன் பத்துநாளேயதீட்டுடன் இதுவும் ஒழிந்துவிடுமேயன்றி இது நிமித்தமாகப் பின்பு வேறே ஆசௌசம் அநுஷ்டிக்கத்தக்கதில்லே யென்று சொல்லப்பட்டது. ஜநநாசௌசத்தின் நடுவில் வந்த மரணுசௌசமானது முந்தியதான ஜநநாசௌச நாட்களோடு ஒழியாமல் மரணநாள் தொடங்கிப் பத்துநாட்களே அநுஷ்டிக்கத்தக்கதாமென்று விஷ்ணுவும், ஜநநாசௌசத்தில் மரணுசௌசம் வந்தாலும், மரணுசௌசத்தில் ஜநநாசௌசம் வந்தாலும், மரணுசௌசம் அநுஷ்டிக்கத் தக்கதேயன்றி ஜநநாசௌசம் அநுஷ்டிக்கத்தகாதென்று அங்கிராவும், மரணுசௌசத்தினுல் ஜநநாசௌச மொழியுமேயன்றி ஜநநாசௌசத்தினுல் மரணுசௌச மொழியாதென்று முப்பத்தறுவரும், இவ்விதமாகவே இருபத்து நால்வரும் சொன்னுர்கள்.

மூன்றுநாள் முதலிய அல்பமான ஆசௌசத்தின் நடுவில் தீர்க்கமானபத்துநாள் ஆசௌசம் வருமாகில் அல்பாசௌசத்தினுல் தீர்க்காசௌசம் ஒழியாமல் தீர்க்காசௌசத்திற் குரிய நாட்களே

அநுஷ்டிக்கத் தக்கவைகளென்று உசநாவும், குருவான ஆசௌசத்தி ஞல் லகுவான ஆசௌச மொழியுமேயல்லது லகுவான ஆசௌசத் திஞல் குருவான ஆசௌச மொழியாதென்றும் அநேகமான ஆ சௌசம் ஒருவனுக்கு நேரிடும்பக்ஷத்தில் குரு லகு பேதங்களைக் கண்டு குருவான ஆசௌசமொழிந்தபின் சுத்தியைச் சொல்லவேண் டுமென்றும் மரணுசௌசம் ஜநநாசௌசம் இவைகள் கூடிஞல் மர ணுசௌசமே குரு என்றும், மரணுசௌசத்தின் நடுவில் வந்த மரணு சௌசம் முன் மரணுசௌசத்திஞல் ஒழியுமென்றும் ஹாரீதர் சொன்ஞர். கர்ப்பபாதமென்னும் நிமித்தத்தில் அநுஷ்டிக்கிற ஆ றுநாள் தீட்டில் மற்றொரு பத்து நாளைய தீட்டு ஸம்பவித்தால் அது முந்திய ஆறுநாள் தீட்டுடன் ஒழிந்துவிடுகிறதுபோலென்று க ண்டுகொள்க. அநுஷ்டித்து வருகிற தீட்டு ஒருநாளிருக்க அப்போ து வேறொரு தீட்டு ஸம்பவித்தால் முந்திய தீட்டை முழுதும் அ நுஷ்டித்து அதற்குமேல் இரண்டுநாள் ஆசௌச மிருக்கவேண்டுமெ ன்றும், முன் தீட்டு முடியுநாள் இராத்திரியின் கடைசியான யாமத் தில் சூரியோதயத்திற்கு முன் வேறொரு ஆசௌசம் சம்பவித்தால் பின்பு மூன்றுநாள் ஆசௌசத்தை அநுஷ்டிக்க வேண்டுமென்றும், முன் ஆசௌச காலத்தின் சேஷத்திஞல் சுத்தியில்லை யென்றும் கௌதமரும் சங்கலிகிதர்களும் சாதாதப போதாயநர்களும் விதித் தார்கள். இந்த விதியை க்ஷத்திரியாதிகளுடைய ஆசௌசத்திலும் அவரவர்க்குரிய நாட்களுக்குத் தக்கபடி ஊஹித்துக்கண்டுகொள்க. மாதா முதலில் மரித்து அவள் தீட்டு நடுவில் பிதா மரித்தால் பிதா வுக்குரிய ஆசௌசநாட்களைப் பூர்ணமாக அநுஷ்டிக்க வேண்டுமென் றும், பிதா முதலில் மரித்து அந்தத் தீட்டு நடுவில் மாதா மரித்தா ல் பிதாவின் ஆசௌசநாட்களுக்கு மேல் ஒரு பக்ஷிணிமாத்திரம் மாதாவைப்பற்றி ஆசௌசத்தை அநுஷ்டிக்கவேண்டுமென்றும் சங் கர்சொன்ஞர். (உஎ)

౨౮॥ బ్రాహ్మణార్థే విపన్నానాం బంధిగోగ్రహణే తథా।
ఆహవేషు విపన్నానా మేకరాత్రమశౌచకమ్॥

இன்ஞர் மரணத்தில் பத்து நாள் தீட்டு இல்லை யென்பது.
(இ-ள்) பிராம்மணன் நிமித்தமாக அதாவது அவன் பிராணனை ரக்ஷிப்பதற்காக மரித்தவர்கள் விஷயத்திலும் சிறையில் வைக்கப்ப ட்டவர்களையும் ஆபத்தை அடைந்த பசுவையும் விடுவிப்பதற்காக மரித்தவர்கள் விஷயத்திலும் யுத்தத்தில் தைரியமாய் எதிர்த்து

மரித்தவர்கள் விஷயத்திலும் ஸபிண்டஞாதிகளுக்கு ஒருநாள் ஆசௌசம் அநுஷ்டிக்கத்தக்கதாகும். (எ-று)

சிறு பிள்ளைகள், யுத்தம், இடி, அரசன், பசு, பிராம்மணன் இவர்கள் நிமித்தத்தினால் மரணமடைந்தவர்கள் விஷயத்திலும் எவன் விஷயத்தில் அரசன் தீட்டு வேண்டாமென்று கோருகிருனோ அவன் விஷயத்திலும் ஸபிண்டஞாதிகளுக்கு அப்பொழுதே ஸ்நாநத்தினால் சுத்தியுண்டாகிறதென்று மநு சொன்னது எதிரில் மரிக்காதவர்களைப்பற்றிய தென்றறிக (உஅ)

౨౯॥ ద్వావిమౌ పురుషౌ లోకే సూర్యమండలభేదినౌ।
పరివ్రాడ్యోగయుక్తశ్చ రణేచాభిముఖో హతః॥

யுத்தத்தில் மரித்தவனைப்புகழுதல். (இ-ள்.) யோகத்தினால் ஸர்வேசுவரனை உபாஸிப்பவனான ஸந்நியாசி, யுத்தத்தில் பின்வாங்காமல் எதிர்த்துச் சத்துருக்களால் கொல்லப்பட்டவன் ஆகிய இவ்விரண்டு புருஷர்களும் சூரியமண்டலத்தைப் பேதிப்பவர்கள். (எ-று.)

சூரிய மண்டலத்தின்வழியாகப் பிரமலோகத்திற்குச் செல்லுகிறார்களென்பது கருத்து. பிரமலோகத்திற்குப்போகிறவர்கள் வழியில் வாயுமண்டலம், சந்திரமண்டலம் ஆகிய இவைகளைக்கிரமமாகப் பிளந்துகொண்டு அதாவது தேரின் சக்கரம் அத்திப்பழம் துந்துபிவாத்தியம் இவைகளின் ரந்திரத்தையொத்த அந்தந்த மண்டலத்தின் வழியான சிறிய ரந்திரங்களால் அந்தந்தமண்டலத்தினின்று வெளிப்பட்டு வித்தியுத் (மின்னல்) முதலிய லோகங்களில் சென்று கிரமமாகப் பிரமலோகத்தை அடைகிறார்களென்று வாஜஸநேய புராணத்தில் சொல்லப்பட்டது. (உகூ)

౩౦॥ యత్రయత్రహతశ్శూర శ్శత్రుభిఃపరివేష్టితః।
అక్షయాన్ లభతే లోకాన్ యదిక్లీబంనభాషతే॥

(இ-ள்.) ஆயுதபாணிகளான அநேகம் சத்துருக்களால் நன்றாகச்சூழப்பட்டவனாகி அவர்களை எதிர்த்துப் பயமின்றி யுத்தம் செய்கிற சூரனானவன் அதைரியத்தைத் தோற்றுவிப்பதான வார்த்தையைச்சொல்லாமல் யுத்தம் செய்து சத்துருக்களால் அடிக்கப்பட்டு மரித்தால்அவன் அழியாத உத்தமலோகங்களை அடைகிறான். (எ-று.)

கீழ்ச் சுலோகத்தில் மஹாயோகியையும் மஹா சூரனையும் ஸமமாகச் சொன்னது தைரியத்தில் இருவருமொத்தவர்களாகையாலென்றறிக. யோகியான பிராம்மணனைக் கண்டு இவன் தன் மண்

டலத்தைப் பிளந்து உத்தமகதியை அடையப்போகிருனென்று சூரியன் பயப்படுகிருனென்றும் நீச பதவியிலிருக்கின்ற மனிதர் தெய்வலோகத்தில் வருவது தேவதைகளுக்கு இஷ்டமன்றென்றும் வியாஸபகவான் அருளிச்செய்தார். (௩௦)

3౦॥ యస్తుభగ్నేషుసైన్యేషు విద్రవత్సుసమంతతః।
పరిత్రాతుంయదాగచ్ఛేత్సచక్రతుఫలంలభేత్॥

(இ-ள்.) சத்துருக்களால் சேனையிலிருக்கும் ஜநங்கள் அடிக்கப்பட்டு நாலுபுறமும் சிதறியோடுகையில் எந்தச்சூரனைவன் அவர்களை ரக்ஷிப்பதற்காக மிகுந்த தைரியத்தினுல் சத்துருக்களை எதிர்க்கிருனே அவன் அசுவமேதயாகம் செய்தபலனைப்பெறுவான். (எ-று.)

3౧॥ యస్యచ్ఛేదక్షతంగాత్రం శరముద్గరయష్టిభిః।
దేవకన్యాస్తుతంవీరం హరంతిరమంతిచ॥

(இ-ள்.) ஒருவனை ரக்ஷிப்பதற்காகச் சத்துரு சேனையில் புகுந்து யுத்தம்செய்கிற எவனுடைய சரீரமானது முத்கரமென்னும் இருப்புலக்கை, பாணம், தடி இவைகளால் கை கால்முதலிய அவயவங்களில் அடிக்கப்பட்டுக் காயமுள்ளதாகிறதோ சூரனை அவனைத் தெய்வப்பெண்கள் கிரகித்துக்கொண்டு அவனுடன் க்ரீடிக்கிருர்கள். (எ-று.) (௩௨)

33॥ దేవాంగనాసహస్రాణి శూరమాయోధనేహతమ్।
త్వరమాణాఃప్రధావంతి మమభర్తామమేతిచ॥

(இ-ள்.) யுத்தத்தில் மரணமடைந்த சூரனைக்கண்டு தெய்வப்பெண்கள் ஆயிரம்பேர்கூடி வேகத்தை யுடையவர்களாகி இவன் என்பர்த்தா இவன் என்பர்த்தா வென்று சொல்லிக்கொண்டு ஓடுகிருர்கள். (௩௩)

3౪॥ యంయజ్ఞసంఘైస్తపసాచవిప్రాస్స్వర్గైషిణోవాత్రయయాంతి
క్షణేనయాంత్యేవహితత్రవీరాఃప్రాణాన్సుయుద్ధేషుపరిత్యజంతః॥

(இ-ள்.) பலனை இச்சிக்காதவர்களும் ஸ்வர்க்கபோகத்தை இச்சிப்பவர்களுமான புருஷர்கள் அனேக விதங்களான யக்கியங்களாலும் தவத்தினுலும் எந்தப் புண்ணியலோகத்தை எப்படி அடைகிருர்களோ, யுத்தங்களில் எதிர்த்துச் சண்டையினுல் பிராணனை ஒழித்த வீரர்கள் ஒரு க்ஷணத்தினுல் அப்படியே தெய்வப்பெண்களால் கொண்டாடப்பட்டு அந்தப் புண்ணியலோகங்களை அடைகிருர்கள். (எ-று.)

இதனால் நெடுநாள் வருந்திச்செய்த தபசினாலும் யக்ஞயங்களா லும் பெரியோர்கள் அடையும் புண்ணியலோகங்களை ஸ்வல்பகாலத் தினால்யுத்தத்தில் மரித்தவன் அடைகிறானென்றுசொல்லப்பட்டது.

౩౫॥ జితేనలభ్యతేలక్ష్మీ ర్మృతేనాపిసురాంగనా।
క్షణధ్వంసినికాయేఽస్మిన్ కాచింతామరణేరణే॥

(இ-ள்.) யுத்தத்தில் ஜயத்தினால் ஸம்பத்தானது பெறப்படுகி றது. மரணத்தினால் தெய்வப்பெண் அடையப்படுகிறாள். ஆதலா ல் க்ஷணகாலத்தில் நசித்துப்போவதாகிய இந்தச் சரீரவிஷயத்தில் ஆசைவைத்து யுத்தத்தில் மரிப்பதில் சிந்திக்கவேண்டுவதில்லை. (ஙரு)

౩౬॥ లలాటదేశేరుధిరంస్రవద్యస్యాహవేతుప్రవిశేచ్చవక్త్రమ్।
తత్సోమపానేనకిలాస్యతుల్యం సంగ్రామయజ్ఞేవిధివచ్చదృష్టం॥

(இ-ள்.) யுத்தத்தில் அடிபட்ட நெற்றியினின்று எந்த ரக்தம் வடிகிறதோ அது வாயில் புகுந்ததாகில் ஸோமபானத்தோடு சமான மாகும். இது யுத்தமென்னும் யக்ஞயத்தில் விதிக்கப்பட்ட ஸோம பானமாக அறியப்பட்டது. (எ-று)

நெற்றியினின்று வடிந்த ரக்தமென்றதனால் யுத்தத்தில் எதி ர்முகமாகநின்று அடித்துத்தானும் அடிபட்ட மஹாசூரனென்பது பெறப்பட்டது. யுத்தத்தில் அடிபட்டுமரித்தவன் மிகவும் புண்ணி யாத்துமாவாகையால் அவன் விஷயத்தில் ஸந்நியாசி மரணத்தில் போல் அதிகநாள் ஆசௌசமில்லை என்பதற்காக இங்கு யுத்தத்தில் மரித்தவனைப்பற்றிப் புகழப்பட்டதென்றும், அன்றிக்கே இந்த ஒன் பது சுலோகங்களும் இந்த ஆசௌசப் பிரகரணத்தி னின்றெடு த்து ராஜதர்மத்தில் ஸ்தாபிக்கத் தக்கவைகளென்றும் மாதவாசா ரியர் உரைத்தார். (ஙசு)

౩౭॥ అనాథంబ్రాహ్మణంప్రేతం యేవహంతిద్విజాతయః।
పదేపదేయజ్ఞఫలమాను పూర్వ్యాల్లభంతితే॥

౩౮॥ నతేషామశుభంకించి త్పాపంవాశుభకర్మణాం।
జలావగాహనాత్తేషాం సద్యశ్శౌచంవిధీయతే॥

அநாதசவத்தைச் சுமந்தவனுக்கு ஆசௌசமில்லையென்பது.

(இ-ள்.) பந்துக்களில்லாதவனும் தனக்கு ஞாதியாகாதவனுமான பிராம்மணனுடைய சவத்தைப் பிரதியுபகாரத்தை எதிர்பாராமல் எந்த இருபிறப்பாளர் சுமந்துபோய்க் கொளுத்துகிறார்களோஅவர்கள் அடிவைப்புகள்தோறும் கிரமமாக யக்ஞயம்செய்த பலனைப்பெறுகிறார்

கள். அவர்களுக்குச் சிறிதும் அசுபமில்லை. நல்ல காரியத்தைச் செய்கிற அவர்களுக்குப் பாபமுமில்லை. ஜலத்தில் முழுகுவதினுல் அப்பொழுதே அவர்களுக்குச் சுத்திவிதிக்கப்படுகிறது. (எ-று.)

இவ்விதமாகவே விருத்தபராசரரும் சொன்னுர். பகலில் பிணத்தைச்சுமந்தவன் சூரியாஸ்தமநத்திற்குப்பின் ஸ்நாநம் செய்து இருகத்தை அடையக்கடவனென்றும், ராத்திரியில் பிணத்தைச் சுமந்தவன் மறுதிநம் சூரியோதயத்திற்குப்பின் ஸ்நாநம்செய்து கிருகத்தை அடையக்கடவனென்றும் தேவலர்சொன்னது ஸ்நேகத்தினுலாவது பொருளாசையினுலாவது பிணஞ்சுமந்ததைப்பற்றிய தென்றறிக. (கூஎ, கூஅ)

౩౯॥ అసగోత్రమబంధుంచ ప్రేతీభూతం ద్విజోత్తమం।
వహిత్వాచదహిత్వాచ ప్రాణాయామేనశుధ్యతి॥

(இ-ள்.) தன் கோத்திரனுகாதவனும் (ஞாதியாகாதவனும்) பந்துக்களில்லாதவனுமான பிராம்மணனுடைய சவத்தைச் சுமந்து தகித்தவன் பிராணுயாமத்தினுல் சுத்தியை அடைகிறுன். (எ-று.)

முன்சொன்ன ஸசேல ஸ்நாநத்தோடு பிராணுயாமத்தைச் செய்து அக்நியை ஸ்பரிசித்தால் அந்தப்பகலில் தானே சுத்தியுண்டாகுமென்று அங்கிராசொன்னதும் அநாதப் பிரேதத்தை எடுப்பதைப்பற்றிய தென்றறிக.

தன் ஜாதிசவத்தையும் அந்நியஜாதிசவத்தையும் சுமத்தலின் பிராயச்சித்தம். தனக்கு ஞாதியல்லாதபிராம்மணனுடைய சவத்தையும், மாதாவுக்கு ஸமீப பந்துக்களின் சவங்களையும் சுமந்த பிராம்மணன் மூன்றுநாட்களால் சுத்தனுகிறுனென்றும் சவத்தைச் சுமந்தவன் இறந்தவனுடைய வீட்டில் வசித்து அவன் அந்நத்தைப் புசிக்காமலிருந்தால் அவனுக்கு மூன்றுநாள் ஆசௌசமுண்டென்றும், வீட்டில் வசித்து அவனுடைய அந்நத்தைப் புசித்தால் பத்துநாள் ஆசௌசமுண்டென்றும் வீட்டையும் அவனுடைய அந்நத்தையும் விட்டுவிட்டால் ஒரு பகல் ஆசௌசமுண்டென்றும் மநு சொன்னுர். இது தன் வர்ணத்திய சவத்தைச் சுமந்தவனைப்பற்றியது. தன் வர்ணத்திற்கு உயர்ந்த வர்ணத்திய சவத்தைச் சுமந்தாலும், தன் வர்ணத்திற்குத் தாழ்ந்த வர்ணத்திய சவத்தைச்சுமந்தாலும் சவம் எந்தஜாதியோ அந்த ஜாதியின் ஆசௌசத்தையே சவத்தைச் சுமந்தவன் அநுஷ்டிக்கவேண்டுமென்றும் அதாவது பிராம்மணன் சூத்திர சவத்தைச்சுமந்தால் ஒருமாஸ மாசௌசமென்றும்

சூத்திரன் பிராம்மணசவத்தைச் சுமந்தால் பத்துநாளாசௌசமென்றும் கௌதமர்சொன்னூர். பொருளாசையினுல் அதாவது சுமைகூலி வாங்கிக்கொண்டு தன் வர்ணத்திற்கு உயர்ந்த வர்ணத்திய சவத்தையாவது தாழ்ந்த வர்ணத்திய சவத்தையாவது சுமந்தவனுக்கு இரட்டிப்பு ஆசௌசமுண்டென்று வியாக்கிரமுனிவர் சொன்னூர். கூலி வாங்கிக்கொண்டு சவத்தைச் சுமந்தவனுக்கும் தகித்தவனுக்கும் அந்தச்சவத்தின் ஜாதிக்குரிய ஆசௌசம் அநுஷ்டிக்கத்தக்கதாமென்று ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் சொன்னது ஆபத்கால விஷயமென்றறிக. தன் ஜாதிசவத்தைப் பொருளாசையினுல் சுமந்தவனுக்குத் தன் ஜாதிக்குரிய ஆசௌசமே அநுஷ்டிக்கத்தக்கதாமென்று கூர்மபுராணத்தில் சொல்லப்பட்டது. ஸபிண்டர்களான ஞாதிகள் சவத்தைச் சுமப்பது கிரமமாகையால் அவர்களுக்குச் சவத்தைச் சுமப்பதைப்பற்றிய அதிகதீட்டில்லை யென்றும், ஸமாநோதகரென்னும் மூன்றுநாள் தீட்டுடையவரின் சவத்தை வகித்தாலும் தகித்தாலும் பத்துநாள் ஆசௌசமுண்டென்றும் மற்றவர்கள் விஷயத்தில் மூன்று நாள் ஆசௌசமுண்டென்றும் தேவலர் சொன்னூர்.

பிரமசாரியானவன் சவத்தை வகிக்கக்கூடாதென்பது. பிரமசாரியானவன் சவத்தை வகிப்பது முதலிய கிரியைகளை அநுஷ்டித்தானுகில் பிராஜாபத்திய கிருச்சிரத்தைச்செய்வதோடு பின்பு புநருபநயநத்தையும் செய்துகொள்ளக்கடவனென்று தேவலர் சொன்னூர். தன் ஆசாரியன், உபாத்தியாயன், பிதா, மாதா, குரு, ஆகிய இவர்களுடைய சவத்தைவகித்த பிரமசாரிக்கு விரதபங்கமில்லையென்று மநு தேவலர்களும், சவத்தைச் சேர்ந்ததாகிய கிருத்தியங்களை மாதா பிதா குரு இவர்கள் விஷயத்தில் தவிர மற்றவர்விஷயத்தில் பிரமசாரிசெய்தானுகில் அவன் விரதம் ஒழிகிறதென்று வசிஷ்டரும், மாதா, பிதா, ஆசாரியன் ஆகிய இவர்களின் சவத்தை வகித்த பிரமசாரியானவன் ஆசௌசமுடையவர்களுடன் ஸஹவாசத்தையும் அவர்களின் அந்நத்தைப் புசிப்பதையும் விட்டிருந்தானுகில் பிரமசரியவிரதத்தினின்று விடப்படுகிறதில்லையென்று யாக்கியவல்கியரும் சொன்னூர்கள். ஆசாரியன், பிதா, இவர்கள் முதலியவர்களைத் தகநம்செய்த பிரமசாரி தீட்டுக்காரர்களுடைய அந்நத்தைப்புசிக்காமல் வேறிடத்தில் அந்நியருடைய அந்நத்தைப் புசிப்பவனுகி அவர்களுடன் ஸகவாஸத்தைச் செய்யாதவனுயிருந்தால் தகநம் செய்த நாள் தீட்டிருந்து இரண்டாநாளில் சுத்தனுகிறுனென்று பிரமபுராணத்தில் சொல்லப்பட்டது. பிராம்மணர்களிருக்கை

யில் பிராம்மணசவத்தைச் சூத்திரனைக்கொண்டு எடுப்பிக்கத்தகாதெ ன்றும் அப்படிச்செய்தால் அந்தச்சவத்தைத் தகிப்பதாகிய புருஷா குதிசெய்வதில் சூத்திரஸம்பந்தத்தால் அந்த ஆகுதி தூஷிக்கப் பட்டு ஸ்வர்க்கலோகத்தை அடையமாட்டாதென்றும் மநுவும், பி ராம்மணசவத்தைச் சூத்திரனைக்கொண்டும், சூத்திரசவத்தைப் பிரா ம்மணனைக்கொண்டும் எடுப்பிக்கத்தகாதென்று விஷ்ணுவும் சூத்தி ரன் சிசுரூஷை செய்பவனாயிருந்தபோதிலும் தனக்கு யஜமானனா யிருந்த பிராம்மணனுடைய சவத்தை வகிக்கக் கூடாதென்றும் சூ த்திரனானவன் அக்கினியை அல்லது வைக்கோலை அல்லது கட்டை யை அல்லது அவிஸை மரித்தவனுக்கு ஸகாயமாய்க் கொண்டுபோ வானாகில் அவனுக்குப் பிரேதத்தன்மையொழிகிறதில்லையென்றும் அந் தச் சூத்திரனும் தர்மத்தை இழக்கிறானென்றும் யமமுனிவரும், மரித் த சூத்திரனுடையசவத்தைப் பட்டணத்தின் தெற்குவாசற்படியாலு ம், பிராம்மணக்ஷத்திரிய வைசியர்களின் சவத்தைக் கிரமமாக மேற் கு, வடக்கு, கிழக்கு, ஆகிய இந்த வாசற்படிகளாலும் வெளிப்படு த்தவேண்டுமென்று மநுவும், எந்தப் பிரேதத்தையும் ஊரைப்பார்ப் பதுபோல் எடுக்கக்கூடாதென்று ஹாரீதரும் சொன்னார்கள். (கூக)

௪௦॥ అనుగమ్యేచ్ఛయా ప్రేతం జ్ఞాతిమజ్ఞాతిమేవవా।
స్నాత్వాసచేలంస్పృష్ట్వాగ్నిం ఘృతంప్రాశ్యవిశుధ్యతి॥

சவத்தைப்பின்சேல்லுவதின் ஆசௌச நிர்ணயம். (இ-ள்.) பிரேதமான ஞாதியையும், அதாவது பந்துவையும், ஞாதியாகா தவனையும் அதாவது பந்துவாகாதவனையும் பின்சென்றவன் ஸ சேல ஸ்நாநத்தைச்செய்தும் அக்நியை ஸ்பரிசித்தும் நெய்யைக் குடித்தும் சுத்தனாகிறான். (எ-று.)

இவ்விதமாகவே யாக்கியவல்கிய ஸ்மிருதியிலும் கூர்மபுரா ணத்திலும் சொல்லப்பட்டது. அறிந்து சவத்தைப் பின்சென் றவன் ஸசேல ஸ்நாநம்செய்து அக்கினியைஸ்பரிசித்து நெய்யைக்குடி த்துப் பின்னும் ஸ்நாநத்தோடு மூன்று பிராணயாமங்களால் சு த்தனாகிறானென்று கசியபர்சொன்னார். நெய்யைக்குடித்தால் பின்பு போஜநத்தைத் தவிரவேண்டுவதில்லை. இது பிராயச்சித்தத்திற் காகவேயல்லது போஜநத்திற்காக விதிக்கப்பட்டதல்ல வென்று அறிக. இங்கு ஞாதி என்னும் பதம் பந்துவைச்சொல்லுகிறது.(௬௦)

௪௦॥ క్షత్రియంమృతమజ్ఞానా ద్బ్రాహ్మణోయోనుగచ్ఛతి।
ఏకాహమశుచిర్భూత్వా పంచగవ్యేనశుధ్యతి॥

౪౨॥ శవంవా వైశ్యమజ్ఞానా ద్బ్రాహ్మణో యోనుగచ్ఛతి।
కృత్వాశౌచం ద్విరాత్రంచ ప్రాణాయామాన్ షడాచరేత్॥
౪౩॥ ప్రేతీభూతంతుయశ్శూద్రం బ్రాహ్మణోజ్ఞానదుర్బలః।
అనుగచ్ఛేన్నీయమానం త్రిరాత్రమశుచిర్భవేత్॥
౪౪॥ త్రిరాత్రేతుతతఃపూర్ణేన దీంగత్వాసముద్రగామ్।
ప్రాణాయామశతంకృత్వా ఘృతంప్రాశ్యవిశుధ్యతి॥

(இ-ள்.) எந்தப்பிராம்மணன் மரித்த க்ஷத்திரியனைத் தெரியாமையினால் பின்செல்லுகிறானோ அவன் ஒருநாள் ஆசௌசத்தை அநுஷ்டித்துப் பஞ்சகவியத்தைப் புசிப்பதினால் சுத்தியடைகிறான். வைசியசவத்தைத் தெரியாமையினால் பிராம்மணன் பின்தொடர்ந்தானாகில் அவன் இரண்டு நாள் ஆசௌசத்தை அநுஷ்டித்து ஆறு பிராணாயாமங்களைச் செய்யக்கடவன். சூத்திரசவத்தைப் பின்சென்றவனான மூடப்பிராம்மணன் மூன்றுநாள் ஆசௌசத்தை அநுஷ்டித்துப் பின்பு சமுத்திரத்தையடைகிற மஹாநதியில் ஸ்நாநம்பண்ணி நூறு பிராணாயாமங்களைச்செய்து நெய்யைக்குடித்தால் சுத்தனாகிறான் (எ-று.)

சவத்தைப் பின்செல்வதைப்பற்றிய பிராயச்சித்தத்தின் முதலிலும் கடையிலும் சொன்ன ஸசேல ஸ்நாநம் அக்நியை ஸ்பரிசித்தல் நெய்யைக்குடித்தல் ஆகிய இவைகள் சகலமானஜாதிகளின் சவத்தைப் பின்செல்வதிலும் செய்யத்தக்கவைகளென்றறிக. (௩௧, ௩௨, ௩௩, ௩௪)

౪౫॥ వినివర్త్యయదాశూద్రా ఉదకాంతముపస్థితాః।
ద్విజైస్తదానుగంతవ్యా ఏషధర్మస్సనాతనః॥

(இ-ள்.) சூத்திரர்கள் எப்போது தர்ப்பணமுதலிய வியாபாரங்களை முடித்து (ஆசௌசத்தை முடித்து) இருக்கிறார்களோ, அந்தக்காலத்தில் அவர்கள் பிராம்மணர்களால் அநுசரிக்கத்தக்கவர்கள். இது அநாதியான தர்மமாகும். (எ-று.)

இதுபோல் பிராம்மணன் துக்கமடைந்திருக்கும் க்ஷத்திரியனை விசாரிப்பதும், க்ஷத்திரியன் வைசியனை விசாரிப்பதும் அவரவர்க்கு ஆசௌசம் முடிந்தபின் என்று ஊகித்துக்கொள்ளத்தக்கது.

ஆதுர வியஞ்சநத்தில் ஆசௌச நிர்ணயம். ஆதுரவியஞ்சநமாவது பந்து மரணத்தினால் துக்கிக்கிறவனை விசாரித்தலாம். பிராம்மணனுடைய மரணத்தில் அஸ்தி ஸஞ்சயநத்திற்குள் ஆதுரனை விசாரித்து அவனுடன் பிராம்மணன் க்ஷத்திரிய வைசியர்கள் சூத்

திரன் இவர்கள் அழுதால் ஸ்நாநத்தையும், ஸஞ்சயநத்திற்குமேல் பத்துநாட்களுக்குள் விசாரித்தால் ஆசமநத்தையும் செய்யக்கடவர்களென்று பாரஸ்கரரும், க்ஷத்திரியமரணத்தில் ஆதுரனுயிருக்கிற க்ஷத்திரியனை ஸஞ்சயநத்திற்குள் விசாரித்து அழுத க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களும், வைசியமரணத்தில் அப்படிச்செய்த வைசிய சூத்திரர்களும் ஸசேல ஸ்நாநமும் அதற்குமேல் கேவலம் ஸ்நாநமாத்திரமும் செய்யத்தக்கவர்களா மென்றும், க்ஷத்திரிய வைசிய மரணவிஷயத்தில் அஸ்தி ஸஞ்சயநத்திற்குமுன் ஆதுரனை விசாரித்தழுத பிராம்மணன் ஸசேல ஸ்நாநத்துடன் ஒருநாள் ஆசௌசம் அநுஷ்டிக்கத்தக்கவனென்றும் அதற்குமேலானல் ஸ்நாநமாத்திரம் செய்யத்தக்கவனென்றும் பிரமபுராணத்தில் சொல்லப்பட்டது. வைசிய மரணவிஷயத்தில் அஸ்திஸஞ்சயநத்திற்குமுன் ஆதுரனை விசாரித்த க்ஷத்திரியனுக்கும் கீழே பிராம்மணனுக்குச் சொன்ன நீதியை அநுசரித்து ஸசேல ஸ்நாநத்தையும் ஒருநாள் ஆசௌசத்தையும் விதிக்கவேண்டுமென்றறிக. சூத்திர மரணவிஷயத்தில் அஸ்திஸஞ்சயநத்திற்குமுன் ஆதுரனை விசாரித்தழுத பிராம்மணனுக்கு மூன்று நாள் ஆசௌசமும் அப்படிச்செய்த க்ஷத்திரிய வைசியர்களுக்கு இரண்டுநாள் ஆசௌசமும், அஸ்தி ஸஞ்சயநத்திற்கு மேலானல் இருபிறப்பாளருக்கு ஒருநாள் ஆசௌசமும் சூத்திரமரணவிஷயத்தில் ஆதுரனுடைய சரீர ஸ்பர்சமன்றி அவனை விசாரித்தபக்ஷத்தில் ஸஞ்சயநத்திற்குள்ளானல் ஒருநாள் ஆசௌசமும், அதற்குமேல் பகலில் விசாரித்தால் அந்தப்பகலும் இரவில் விசாரித்தால் அந்த இரவும் ஆசௌசமும் உண்டென்று பாரஸ்கரர்சொன்னர். சவத்தைச்சுமப்பது, பின்செல்வது, அழுவது, முதலிய நிமித்தங்களில் சொல்லிய இந்த ஆசௌசமானது ஞாதியாகாதவர்களுக்கேயன்றி ஞாதிகளுக்கில்லையென்றும் அவர்களுக்குச் சவத்தைச்சுமப்பது முதலிய கிரியைகள் சாஸ்திர விகிதங்களென்றுமறிக. இதை ஞாதிகள் விஷயத்தில் செய்வதில் தோஷமில்லை என்றும், அநாதர்கள் தவிர மற்றவர்களின் சவங்களைச் சுமந்தால் தோஷமுண்டென்றும் ஹாரீதர் சொன்னர்.

இரண்டு வருஷத்திற்குட்படாமல் இரண்டு வயது பூர்ணமாகச் சென்றவன் மரணத்தில் அவனது சவத்தை ஞாதிகளனைவரும் மயாநபூமியளவும் பின்சென்று பதினறு ருக்கையுடையதாகிய யமஸூக்தத்தையும் யமனைத்தேவதையாக வுடைய யமகாதைகளையும் ஜபித்து அவனை லௌகிகாக்நியில் கொளுத்தவேண்டுமென்றும் அவன் உபநயநமானபின் மரித்தால் ஆஹிதாக்நி ஸம்ஸ்காரக்கிரமத்தை அநுஸ

ரித்துப் பிரயோஜனமுடையதாகக் கிரியை செய்யத்தக்கதென்னும் யாக்கியவல்கியரும், லௌகிகாக்நியில் தகிக்கவேண்டுமென்கிற இடத்தில் சண்டாளாக்நி, அபரிசுத்தமானஅக்நி, மஹா பாபிஷ்டனுடைய அக்நி, சிதையில் எரிகிற அக்நி ஆகிய இந்த அக்நிகள் சிஷ்டர்களால் கிரகிக்கத் தகாதவைகளென்றும் ஆஹிதாக்நியானவனை சுரௌதம், கார்கபத்தியம் முதலிய மூன்று அக்நிகளாலும் அக்நியை ஆதாநம் செய்யாமல் மரித்தவனைக் கிருஹியமென்னும் அக்கியாலும், மற்ற இதரஜநத்தை லௌகிகாக்நியாலும் தகிக்கவேண்டுமென்றும் தேவல விருத்த யாக்கிய வல்கியர்களும், அந்தமரித்தவனை ஸ்நாநம்செய்வித்துப் பரிசுத்தவஸ்திரத்தைத் தரிப்பித்துத் தர்ப்பைகள் பரப்பிய பூமியில் தெற்குத்தலையாகப் படுக்கவைத்துப் பின்னும் நெய்யினாலும் ஜலத்தினாலும் ஸ்நாநம்செய்வித்து வஸ்திரம் உபவீதம் இவைகளைத் தரிப்பித்துக் கந்தபுஷ்பங்களால் அலங்கரித்து ஏழுரந்திரங்களில் பொன் துண்டுகளை வைத்து முகத்தை வஸ்திரத்தினால் மூடிப் பிள்ளைமுதலியவர்கள் அந்தச்சவத்தை எடுத்துக்கொண்டுபோகக் கடவர்களென்றும் அபக்குவமான அந்நத்தைப்பாத்திரத்தில் எடுத்துக்கொண்டு ஒருவன் அந்த அந்நத்தைமுன்னிட்டுச் சவத்தைப் பின்தொடர்ந்து செல்லக்கடவனென்றும் வழியில் விதிப்படி பலிபோட்டு மிகுந்த அந்நத்தை மயானமளவும் கொண்டுவந்து தகநம்செய்தபின் இடமுழங்காலிட்டு எள்ளுடன் பிண்டதாநம் செய்வதுபோல் சிதையைப்பாராமல்போட்டுத் தகித்தபின் சிதையைப்பாராமல் ஞாதிகளுடன் ஜலசமீபத்திற்குவந்து ஸசேல ஸ்நாநம் செய்து கோத்திரநாமங்களைச் சொல்லி மரித்தவனைக்குறித்துப் பூமியில் தெற்குநுனிகளான தர்ப்பைகளின்மேல் தனித்தனியே ஒருதரம் தர்ப்பணம் செய்யவேண்டுமென்று காத்தியாயநரும், ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது இந்த நாட்களில் திலோதகங்களால் தர்ப்பணம் செய்யவேண்டுமென்று கௌதமரும், நதியை அடைந்து ஸசேல ஸ்நாநம்செய்து சுசியாகிஅதன் கரையில் பாஷாணத்தை ஸ்தாபித்துப் பிராம்மணன் பத்தும் க்ஷத்திரியன் பன்னிரண்டும், வைசியன் பதினைந்தும் சூத்திரன் முப்பதுமான ஜலாஞ்சலிகளை (தர்ப்பணத்தை) செய்யவேண்டுமென்றும் பத்தாவது பிண்டம் போடுவதற்குள் திலதர்ப்பணங்களைத் தினந்தோறும் ஓவ்வொன்று அதிகமாகச் செய்யவேண்டுமென்றும் பிரசேதரும் சொன்னார்கள். இப்படியே மாதாமஹன் ஆசாரியன் இவர்கள் மரணத்திலும் ஞாதிமரணத்தில்போல் செய்யத்தக்கதாமென்றும் விவாகம் செய்து கொடுக்கப்பட்ட உடன்பிறந்தவள், தன் பெண், தோழன் இவர்கள்

விஷயத்தில் இச்சையுண்டானுல் திலோதகத்தைச் செய்யலாமென்றும் செய்யாவிட்டாலும் தோஷமில்லை என்றும் யாக்கியவல்கியரும் பிரேதத்திற்குத் திலோதக தானத்தைச்செய்தபின் ஒரு பிண்டதானத்தைச் செய்யவேண்டுமென்றும் ஆசௌசம் முடியுமளவும் பிண்டதானத்தையும் உதகதானத்தையும் செய்யவேண்டுமென்றும் விஷ்ணுவும் சொன்னுர்கள்.

பிண்டதானப் பிரகரணம். பிராம்மண வைசிய சூத்திரர்களுக்குக் கிரமமாகப் பத்து, பன்னிரண்டு,பதினைந்து, முப்பது பிண்டங்கள் கொடுக்கத் தக்கவைகளென்றும், மூன்று நாள் ஆசௌசபக்ஷத்தில் முதல் நாள் மூன்று பிண்டங்களையும்; இரண்டாநாள் அஸ்திஸஞ்சயநம் செய்து நான்கு பிண்டங்களையும், மூன்றுநாள் மூன்று பிண்டங்களையும் ஆகப் பத்துப் பிண்டங்களைக் கொடுக்க வேண்டுமென்றும் பாரஸ்கரரும், இந்தப் பிண்டதானத்தை உதகதானத்தைப்போல் யாவரும் செய்யாமல் புத்திரனே செய்யவேண்டுமென்றும், அவனில்லாத பக்ஷத்தில் ஸமீபஞாதிகளில் ஒருவனுவது மாதிர் ஸபிண்டர்களாவது சிஷியனுவது ருத்துவிக்காவது ஆசாரியனுவது செய்யவேண்டுமென்றும் கௌதமரும், புத்திரர்கள் வெகுபேர் இருந்தார்களாகில் அவர்களுடைய அநுமதியைப் பெற்று ஜேஷ்டகுமாரன் செய்தாலும், அதற்கு மற்றப்பிள்ளைகள் திரவியம் உதவிசெய்தாலும் அது எல்லாப் புத்திரர்களாலும் செய்யப்பட்டதாகுமென்று மரீசியும் சொன்னுர்கள். அருகே புத்திரனில்லாமலிருந்து அந்நியன் பிண்டதானத்தைச் செய்துவருகையில் பத்துநாட்களுக்குள் புத்திரன் வந்தபோதிலும் முதல்நாள் தொடங்கிப் பிண்டதானம் செய்கிறவனே பிண்டத்தைக்கொடுக்கத் தக்கவனென்று கிருஹ்ய பரிசிஷ்டமென்னுங் கிரந்தத்தில் சொல்லப்பட்டது. முதல்நாள் சம்பா அரிசி அந்நம், மாவு, சாகம் இவைகளில் எதினுல் பிரேதத்திற்குப் பிண்டம் கொடுக்கப்பட்டதோ அப்படியே பத்துநாட்களும் செய்யவேண்டுமென்று சுநப்புச்சர் சொன்னுர்,

பத்துநாள் நடுவில் அமாவாஸைவந்தால் செய்யத்தக்கது. பிரேதக்கிரியையைத் தொடங்கிச்செய்கையில் பத்துநாட்கள் நடுவில் மூன்றுநாளுக்குட்பட்டு அமாவாஸைவந்தால் அன்றையதினமேஸகல கிரியைகளையும் செய்து முடிக்க வேண்டுமென்றும் மாதா பிதாக்கள் விஷயத்தில்மாத்திரம் ஆசௌசமுள்ள நாள்வரையிலும் பிண்டோதக தானங்களைச் செய்து வரவேண்டுமென்றும் கௌதமர்சொன்னுர்.

பந்துமரணத்தினுல் துக்கிப்பவனைத் தேற்றுதல். பிண்டோதக தாநங்களைச் செய்துமுடித்து ஸ்நாநம்செய்து கனையேறி ஓரிடத்தில் மிருதுவான பச்சைப்புல் மூடிய தரையில் உட்கார்ந்திருக்கிற மரித்தவனுடைய புத்திராதிகளைப் பழையகதைகளைச்சொல்லித் துக்கிக்காதபடி செய்யவேண்டுமென்றும் நீர்க்குமிழியை யொத்த மானிடதேகத்தில் ஸாரமுண்டென்றுநினைத்து அதைப்பற்றித் துக்கிப்பது மூடத்தனமாமென்றும் சகலபிராணிகளுக்கும் ஆதாரமான பூமியும் அதைச்சூழ்ந்துள்ள ஆழ்ந்து அகன்றகடலும் நசிக்குமென்றும் அந்தமானிடனைக்காட்டிலும் அதிகமான ஞாநம் சக்தி ஆயுள் ஆகிய இவைகளையுடையதேவர்களும் நசித்துவிடுகிருர்களென்றும், பந்துக்கள் மரித்தால் அதற்காக மற்றபந்துக்கள் அழுகையில் உண்டான கண்ணீர் முதலிய மலங்களைப் பிரேதமானது பரவசமாய்ப் புசிக்கிறதாகையால் அழாமல் தம் சக்திக்கீடாகப் பிரேதக்கிரியைகளைச் செய்ய வேண்டுமென்றும் சொல்லி இவ்விதமாகப் பந்துக்களால் தேற்றப்பட்ட புத்திராதிகள் தங்களில் சிறுவனை முன்னிட்டுக்கொண்டு வீட்டிற்குவந்து வீட்டுவாசற்படியில் வேப்பிலையைக்கடித்து ஆசமநம் செய்து அக்கினி, ஜலம், கோமயம், வெண்கடுகு ஆகிய இவைகளைத்தொட்டுக்கல்லை மிதித்து மெதுவாக வீட்டில் பிரவேசிக்கக் கடவர்களென்று யாக்கிய வல்கியரும், அறுகம்புல், பவழம், ஜலம், நெருப்பு, விருஷபம் இவைகளைத்தொட்டு வீட்டுவாசற்படியில் பிரேதத்திற்குப் பிண்டத்தைக் கொடுத்துப் பின்பு வீட்டில் புகக்கடவர்களென்று சங்கரும் சொன்னுர்கள்.

தீட்டுக்காரர்கள் தீட்டில் அநுஷ்டிக்கவேண்டிய நியமங்கள். தீட்டுக்காரர்கள் தீட்டுநாட்களில் புளி உப்பு காரங்களைத்தவிர்ந்த அந்நத்தைப் புசிப்பவர்களாகித் தாங்களே ஜலத்தில் அமிழ்ந்து ஸ்நாநஞ்செய்து மாம்ஸாதிகளைப் புசிக்காமல் தனித்துத் தரையில் சயநிக்கக் கடவர்களென்று மநுவும், கிரயத்திற்குவாங்கின அந்நத்தைப் புசிப்பதோடு ஸ்திரீஸங்கமத்தைவிடக் கடவர்களென்று மார்க்கண்டேயரும், தரையில் சயநிப்பவர்களாகிப் பிரமசரிய விரதத்துடன் மாம்ஸ போஜநத்தை யொழித்து ஏகோத்திஷ்டம் வரையிலிந்த விரதத்தைச்செய்யக் கடவர்களென்றும் ஒன்று மூன்று ஐந்து எழு ஒன்பது ஆகிய நாட்களில் உதகதாநத்தைச்செய்து புத்தாவதுநாளில் தங்கள் வஸ்திரங்களைச் சுத்திசெய்வதற்காகவண்ணுனிடத்தில் கொடுத்துச் சில உபயோகமற்ற வஸ்திரங்களை நீக்கிவிட வேண்டுமென்றும் கௌதமரும், முதல்நாளில் பிரேதத்தை உத்தேசித்து ஆகாசத்தி

ல் அதாவது உறியில் மண்பாத்திரங்க ளிரண்டில் ஜலத்தையும் பாலே யும் வைக்கவேண்டுமென்று யாக்கியவல்கியரும் சொன்னூர்கள்.

அஸ்திஸஞ்சயநகாலம். முதல் நாளிலாவது ஏழாவது நாளிலாவது ஒன்பதாவது நாளிலாவது அஸ்திஸஞ்சயநத்தை ஞாதிகளோடு கூடிச்செய்யவேண்டுமென்று ஸம்வர்த்தரும், நாலாவதுநாளில் அஸ்திஸஞ்சயநத்தைச்செய்து அஸ்திகளேக் கங்கையில் போடவேண்டுமென்று விஷ்ணுவும், செவ்வாய்க்கிழமை ஞாயிற்றுக்கிழமை சனிக்கிழமைகளிலும் இரட்டித்த திதிகளிலும் தன் ஜந்மநக்ஷத்திரத்திலும் அஸ்தி ஸஞ்சயநம் செய்யத்தகாதென்று யமமுநிவரும், அவிட்டம்முதல் பின் ஐந்துநக்ஷத்திரங்களிலும், நந்தை என்னும் திதியிலும், பூராடம் உத்திராடம் பூரட்டாதி உத்திரட்டாதி புஷ்யம் ஹஸ்தம் பூரம் உத்திரம் பாநு பௌம சனி சுக்கிரவாரங்கள் ஒற்றைப்பட்ட திதி ஸந்தியைகள் சதுர்தசி திரயோதசி ஆகிய இந்தக் காலங்களிலும் அஸ்திஸஞ்சயநத்தைச் செய்தவனுடைய குலம் நசிக்குமென்று விருத்த மநுவும் கௌதமரும் சொன்னூர்கள்.

க்ஷௌரவிதி. ஆசௌசத்தையுடையவன் பத்தாவதுநாளில் ஊருக்குவெளியில் க்ஷௌரம் செய்வித்துக்கொள்ளக் கடவனென்று தேவலரும், பதினோராவது நாளில் செய்யத்தக்க ஏகோத்திஷ்ட சிராத்தத்திற்குள்ளாக இரண்டு மூன்று ஐந்து ஏழு ஆகிய இந்த நாட்களில் எதிலேயாகிலும் க்ஷௌரத்தைச் செய்வித்துக் கொள்ளக்கடவனென்று ஆபஸ்தம்பரும் சொன்னூர்கள். கங்கையிலும் பாஸ்கர க்ஷேத்திரத்திலும் மாதா பிதா குரு இவர்கள் மரணத்திலும் அக்கியை ஆதாநம் செய்யும்காலத்திலும் க்ஷௌரம் செய்வித்துக் கொள்ளத் தக்கதென்கிற ஸ்மிருதிவசநத்தில் மாதாபிதா இவர்கள் மரணத்தில் என்றெடுத்ததினல் எல்லோரும் தங்கள் ஆசௌசகால முடிவில் இந்த க்ஷௌர நியமத்துடன் பிண்டோதக தாநங்களே முடிக்கவேண்டுமென்றறிக.

ஏகோத்திஷ்டவிதி. பிராம்மணன் ஆசௌச முடிவில் பிண்டதாநத்தை முடித்துப் பதினோராநாளில் ஏகோத்திஷ்ட சிராத்தத்தை அநுஷ்டிக்கவேண்டுமென்றும் இது எல்லா வர்ணத்திற்கும் ஸாதாரணமென்றும் மரீசி சொன்னூர். அப்படியாகில் க்ஷத்திரியனுக்குப் பன்னிரண்டுநாளும் வைசியனுக்குப் பதினைந்துநாளும் சூத்திரனுக்கு ஒருமாஸமும் ஆசௌசமாகையால் மரித்த பதினோராவது நாளில் ஏகோத்திஷ்ட சிராத்தம் செய்வதில் க்ஷத்திரியாதிகளுக்கு ஆசௌசம் ஒழியாமையாலும் சுசியானவனே கர்மத்திற்கு அதிகாரி

என்று விதிக்கப்பட்டிருக்கின்றமையாலும், பதினோராவதுநாளில் சிராத்தஞ் செய்யத்தக்கதென்பதற்கு ஆசௌச மொழிந்தநாளில் செய்யவேண்டுமெனப் பொருள்கொள்ள வேண்டுமென்பது சித்தாந்தமென்று மாதவாசாரியர் உரைத்தார்.

பிதிர்க்களை உத்தேசித்துத்தகுந்ததேசத்திலும் காலத்திலும் பாத்திரத்திலும் விதிப்படி சிரத்தையுடன் பிராம்மணர்களுக்குத் திரவியத்தைக்கொடுப்பது சிராத்தமென்னப்படுமென்று பிரமாண்டபுராணத்தில் சொல்லப்பட்டது. இந்தச் சிராத்தம் பார்வணமெனவும் ஏகோத்திஷ்டமெனவும் இருவகைப்படும். மூன்று புருஷர்களை உத்தேசித்துச்செய்வது பார்வணமும் ஒருபுருஷனை உத்தேசித்துச் செய்வது ஏகோத்திஷ்டமுமாம். இவ்விரண்டுவிதமான சிராத்தம் நித்தியமெனவும் நைமித்திக மெனவும் காமியமெனவும் மூன்றுவகைப்படும். அமாவாஸையில் செய்யும் சிராத்தம் முதலியவை நித்தியமென்றும், உபராகம் (சந்திர சூரிய கிரகணம்) முதலிய நிமித்தங்களில் செய்யும் சிராத்தம் நைமித்திகமென்றும், சில திதிகளிலும் சில நட்சத்திரங்களிலும் ஒருவித பலனைக் கோரிச்செய்யும் சிராத்தம் காமியமென்றும் சொல்லப்படும். இந்த நித்திய நைமித்திக காமிய சிராத்தங்களோடு இவைகளின் உட்பிரிவாக விர்த்தி சிராத்தம், ஸபிண்டீகரணம், பார்வணம், கோஷ்டீசிராத்தம், சுத்தி நிமித்தமான சிராத்தம், கர்மாங்கசிராத்தம், தெய்விகசிராத்தம், யாத்திராசிராத்தம், புஷ்டிசிராத்தம் என்று விசுவாமித்திரரால் பன்னிரண்டு சிராத்தங்கள் சொல்லப்பட்டன. அவைகளில் நித்தியமென்பது தினந்தோறும் செய்யப்படும் சிராத்தமாகும். நைமித்திகமென்பது ஏகோத்திஷ்டசிராத்தமாகும். காமியமென்பது இஷ்டசித்திக்காகச் செய்யப்படும் சிராத்தமாகும். விருத்தி சிராத்தமென்பது புத்திர ஜநநாதிகளில் செய்யப்படுவதாகும். ஸபிண்டீகரணம் பிரஸித்தம். பார்வணமென்பது பர்வங்கள்தோறும் செய்யப்படும் சிராத்தமாகும். வித்துவான்களான பெரியோர்கள் பலர்கூடியிருக்கையில் பிதிர் திருப்திக்காக அப்போது செய்யப்படுவது கோஷ்டீசிராத்தமாகும். தன் சுத்தியை உத்தேசித்துச்செய்யும் பிராம்மணபோஜநம் சுத்தி சிராத்தமாகும். நிஷேககாலம், ஸௌம்யவிரதம், ஸீமந்தம், பும்ஸவநம் இவைகளின் அங்கமாகச் செய்யப்படுவது கர்மாங்க சிராத்தமாகும். தேவதைகளை உத்தேசித்துச் செய்யப்படுவது தெய்விகசிராத்தமாகும். அது நித்தியசிராத்தம்போல் துவாதசி முதலியதிதிகளில் செய்யத்தக்கதாகும். தேசாந்தரம்போகிறவனும் போய்த் திரும்பிவந்தவனும் நெய்யை முக்கியமாகப் பரிமாறிச் செய்வத்

யாத்திராசிராத்தமாகும். இப்படியே சிராத்தம் பன்னிரண்டு வகைப்ப டுமென்று பாரஸ்கரர் விருத்த வஸிஷ்டர் பிரசேதர் ஆகிய இவர்களும் சொன்னார்கள். அசுசியான வஸ்துக்கள் பரப்பப்படாததும் சாணி யால் மெழுகப்பட்டதும் புண்ணிய தீர்த்தங்களையுடையதுமான பு ண்ணியாச்சிரமத்திலும் தென்புறம் தாழ்ந்து சுசியாயும் பூச்சிப் புழு முதலியவைகளில்லாததாயுமிருக்கின்ற தேசத்திலும் இந்தச் சிராத்த ங்களைச் செய்யவேண்டுமென்று யாக்கிய வல்கியஸ்மிருதியிலும் அப் படியே விஷ்ணு தர்மோத்தரத்திலும் சொல்லப்பட்டது. பயங்க ரமும் பூச்சிப்புழுக்களால் நிறைந்ததும் துர்க்கந்தத்தோடு கூடிய தும் அந்நியரால் சூழப்பட்டதும் கொடிய சப்தத்தையும் சேற்றை யுமுடையதுமான தேசத்தில் சிராத்தம்செய்யத்தகாதென்று மநுவும், திண்ணைகளிலும் அந்நியனுடைய வீடு தொழுவம் தோட்டம் முத லிய இடங்களிலும் சிராத்தம் செய்யத்தகாதென்று சங்கரும் சொன் னார்கள். காடு, மலை, புண்ணியநதிகளின்கரை, புண்ணியதீர்த்தங் கள் இவைகள் யாவருக்கும் பொதுவானவைகளென்று ஆதித்திய புராணத்தில் சொல்லப்பட்டது.

சிராத்தம் செய்யவேண்டிய தேசங்களாவன. கயை, கங்கை, ஸரஸ்வதி, குருக்ஷேத்திரம், பிரயாகம், நைமிசம், புஷ்கரம், நதியின் கரை, புண்ணியதீர்த்தங்கள், மலைகள், மணல் திட்டுகள், ஜநமில் லாத தேசம் ஆகிய இந்த இடங்களில் சிராத்தம் செய்வதினால் பி தாமஹர்கள் திருப்தி அடைகிறார்களென்று தேவலரும், புஷ்கர க்ஷே த்திரத்தில் செய்த சிராத்த ஜப ஹோமாதிகளும் அப்படியே மஹா நதி, பிரயாகக்ஷேத்திரம், காசி, குருக்ஷேத்திரம் ஆகிய இந்தத் தே சங்களில் செய்த ஜபாதிகளும் அக்ஷயங்களென்று வியாஸரும், கங்கை, யமுனை, பாலாறு, நருமதை, பாஹுதா என்னும் செய் யாறு இவைகளின் கரையிலும், பிருகுதுங்கம், இமாலயம், கங்கா த்துவாரம், நைமிசம், புஷ்கரம் இந்த க்ஷேத்திரங்களிலும் செய்த து அக்ஷயபலனைத்தருமென்று சங்கரும் சொன்னார்கள். ஆறு க டல் இவைகளின் ஸங்கமத்திலும், ஆறுகளின் ஸங்கமத்திலும்,மடுவு, தொழுவம், பர்வதம், ஸாளக்கிராமசிலையின் ஸமீபம், கோகர்ணம், கயைஆகிய இந்த இடங்களிலும் பிதிர்க்களிடத்தில் பக்தியுடன் வி திப்படி சிராத்தஞ்செய்கிறவன் பிதிர்க்கடனைத் தீர்த்தவனாகிறானெ ன்று பிரமபுராணத்தில் சொல்லப்பட்டது.

கயையில்கொடுத்த பிண்டதானத்தின்பலன். பிதிர்க்கள் நரகத் தில்விழுந்துவதினால் பயந்து தங்கள் சந்ததியில் ஜநிக்கிறவன் தங்களு

க்கு ஒரு கை எள்ளுந் தண்ணீரும் விடுகிறவனுய்க் கயாஸுரன் தலையில் அல்லது வடவிருக்ஷத்தில் சிராத்தம் செய்வானேவென்று கோருகிறார்களென்றும், மேலும் உலகத்தில் வெகுபுத்திரர்களைப் பெறவேண்டுமென்றும், பெற்றால் அவர்களில் ஒருவனுவது கயாக்ஷேத்திரத்தை அடைவன் அல்லது அசுவமேதத்தையாவது செய்வன் அல்லது பிதிர்க்கிரியையில் நீலமான விருஷபத்தையாவது விடுவன் என்றும் பிதிர்காதை (பிதிர்கணங்களுடைய பாவினம்) உண்டென்று அறிக.

கயாஸுரனுடைய தலையினளவு. கயாக்ஷேத்திரமானது ஐந்து குரோசமுள்ளதென்றும், கயாஸுரனுடைய சிரஸு ஒரு குரோசமளவுள்ளதென்றும் அதாவது மகாநதியின் மேற்புறத்தில் கிருத்திரேசுவர கிரிவரையிலும் பிரம யூபத்திற்கு வடக்கில் தென்புறத்திலுள்ள ஆஸநம்வரையிலும் உண்டென்பது மூவுலகிலும் பிரசித்தமானதென்றும் ஆதித்தியபுராணத்தில் சொல்லப்பட்டது.

சிராத்தம் செய்யவேண்டுங்காலம். அமாவாஸை, அஷ்டகை, விருத்தி, கிருஷ்ணபக்ஷம், இரண்டு அயநங்கள், திரவியமும் பிராம்மணர்களும் கிடைக்குங்காலம், விஷுவத், சூரிய ஸங்கிரமணம், மகாவியதீபாதம், கஜச்சாயை, சந்திரசூரிய கிரகணம், சிராத்தம் செய்யவேண்டுமென்னும் ஆசையுண்டானகாலம் இவைகள் சிராத்தகாலங்களென்று யாக்கியவல்கியர் சொன்னார். இவைகளில் என்றையதினம் சந்திரன் காணப்படவில்லையோ அது அமாவாஸை என்றும் அதில் பிதிர்மரணத்தையுடைய பிள்ளை செய்யும் சிராத்தம் நித்தியமென்றும் லோகாக்ஷிசொன்னார். மார்க்கசீர்ஷம் முதலிய நான்குமாஸங்களுடைய கிருஷ்ணபக்ஷத்திய அஷ்டமிகள் அஷ்டகை என்னப்படுமென்றும் அதில் செய்யும் சிராத்தம் நித்தியமென்றும் ஆசுவலாயநரும் பிதாமஹரும் சொன்னார்கள். விருத்தி என்பது புத்திரஜநநம் முதலிய நிமித்தங்களையுடையகாலமாகும். கிருஷ்ணபக்ஷம் பிரசித்தம். தக்ஷிணாயநமும் உத்தராயணமும் இரண்டு அயநங்களாகும். கிருஸரம் மாம்ஸம் முதலிய சிராத்த திரவியங்களும், சுரோத்திரியர்களான பிராம்மணர்களும் கிடைக்குங்காலம் சிராத்தத்திற்குரியதாம். ஐப்பசி சித்திரைகளுடைய மாஸப்பிறப்பு விஷுவத் புண்ணியகாலமாகும். சூரியன் ஒரு ராசியினின்று மற்றொருராசியைச் சேருவது சூரியஸங்கிரமணமென்னப்படும். திருவோணம், அவிட்டம், அசுவநி, திருவாதிரை, ஆயிலியம், மிருகசிரம் ஆகிய இந்த நட்சத்திரங்களில் ஒன்றோடும் பாநுவாரத்தோடுங்கூடிய அமாவாஸை

மஹாவியதிபாதமாம். மகமென்னும் நக்ஷத்திரத்தில் சந்திரனும் ஹஸ்த நக்ஷத்திரத்தில் சூரியனும் இருந்து அன்றைய திதி திரயோதசியுமானால் அது கஜச்சாயை என்னப்படும். கிரகணத்தில் ஆதியில் ஸ்பர்சகாலத்தில் செய்யும் சிராத்தத்தினல் தேவர்களும் பிதிர்க்களும், மத்தியகாலத்தில் மநுஷியர்களும், விமோசநகாலத்தில் ராக்ஷஸர்களும் திருப்தியடைகிறார்களென்று சந்திரசூரிய கிரகணகாலம் விருத்த வசிஷ்டரால் புகழப்பட்டது.

யுகாதிகள். வைசாகமாஸத்திய திரிதீயை, கார்த்திகமாஸத்திய சுத்தநவமி, மாகமாஸ அமாவாஸை, பாத்திரபத மாஸத்திய கிருஷ்ண திரயோதசி இந்தத்திதிகள் யுகாதிகளென்னப்படுமென்றும், இந்தத்திதிகளில் பிதிர்க்களை உத்தேசித்துக்கொடுத்தது அக்ஷயபலனைத் தருமென்றும் தேவலரும், கீழ்ச்சொன்ன நாட்களில் எள்ளோடு கலந்த ஜலத்தையாவது பிதிர்க்களை உத்தேசித்து ஒரு மனுஷியன் கொடுத்தானாகில் அது ஆயிரவருஷகாலம் சிராத்தம் செய்ததற்கு ஸமானமாகுமென்றும் இந்த ரகசியத்தைப் பிதிர்க்கள் சொல்லுகிறார்களென்றும் ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் பராசரரும்சொன்னார்கள்.

மந்வாதிகள். ஆசுவயுஜ மாஸத்திய சுக்கிலபக்ஷநவமி, கார்த்திக மாஸத்திய சுக்கில பக்ஷ துவாதசி, சைத்திரமாஸத்திய சுக்கில திரிதீயை, பாத்திரபத மாஸத்திய சுக்கில்திரிதீயை, பால்குந மாஸத்திய சுக்கில திரிதீயை, பால்குந மாஸத்திய அமாவாஸை, பௌஷிய மாஸத்திய சுக்கில ஏகாதசி, ஆஷாட மாஸத்திய தசமி, மாக மாஸத்திய ஸப்தமி, சிராவண மாஸத்திய கிருஷ்ண அஷ்டமி, ஆஷாட மாஸத்திய பௌர்ணமி, கார்த்திகம் பால்குநம் சைத்திரம் ஜியேஷ்டம் ஆகிய இந்த மாஸங்களுடைய பூர்ணிமைகள் ஆகிய இவைகள் மந்வந்தரத்திற்கு ஆதிநாட்களான மந்வாதிகளென்றும், அந்த நாட்களில் பிதிர்க்களை உத்தேசித்துக்கொடுத்தது அக்ஷயமாகுமென்றும் மத்ஸியபுராணத்தில் சொல்லப்பட்டது.

காமியசிராத்தத்திற்குரிய நட்சத்திரவாராதிகள். கிருத்திகைமுதல் பரணிவரையிலுள்ள நக்ஷத்திரங்களில் காமிய சிராத்தம் செய்தவன் கிரமமாக ஸ்வர்க்கம், புத்திரன், ஒளி, சௌரியம், க்ஷேத்திரம், தேகபலம், சிறந்தபிள்ளைகளைப்பெறுதல், பெரியோர் நடுவில் சிறந்தவனாயிருக்கை, மங்கள முடைமை, நிறைவு, தம்வர்ணதில் முக்கியனாயிருக்கை, அழகியரூபத்தையும் பிள்ளையையும் பெறுதல், ராஜ்யபரிபாலநம் வர்த்தகம் முதலியவை, புத்திரலாபம், ஸ்வர்க்கலாபம், ரோ

கழிவில்லாமை, புகழ், துக்கமற்றிருக்கை, உத்தமகதி, பெருஞ்செல்வம், வேதங்கள், நல்ல ஔஷதசித்தி, பசுக்கள் ஆடு முதலியவை, பாரியை, வெள்ளி, குதிரைகள், ஆயுள் ஆகிய இவைகளை அடைகிறானென்று யாக்யவல்கியர் மார்க்கண்டேயர் விஷ்ணு இவர்கள் சொன்னார்கள். ஞாயிற்றுக்கிழமையில் காமியசிராத்தம் செய்தவன் ஆரோக்கியத்தையும், திங்கட்கிழமையில் ஸம்பத்தையும், செவ்வாய்க்கிழமையில் எங்கும் ஜயத்தையும், புதனில் சகலவிதமான இஷ்டங்களையும், வியாழனில் சிறந்தவித்தையையும், வெள்ளியில் செல்வத்தையும், சனியில் ஆயுளையும் அடைவானென்று விஷ்ணு ஸ்மிருதியிலும் கூர்மபுராணத்திலும் சொல்லப்பட்டது. பிரதமைதிதி முதலிய திதிகளில் செய்கிற சிராத்தத்தினால் கிரமமாக அழகிய பிள்ளைகளையும், பெண்ணையும், ஸம்பத்தையும், பசுக்களையும், அழகியபிள்ளைகளையும், சூதாடுவதையும், பயிர்த்தொழிலையும், வர்த்தகத்தையும், ஒற்றைக்குளம்புள்ள பசுக்களையும், இரட்டைக்குளம்புள்ள பசுக்களையும், வெள்ளியுடன் பிரமவொளியையுடைய பிள்ளைகளையும், பொன் வெள்ளி இவைகளையும், தன்ஜாதியில் உயர்ந்தவனாயிருக்கையையும், நன்மக்களைப் பெறுவதோடு ஆயுதங்களாலடிபட்டு மரித்த பிதிர்க்களின் திருப்தியையும், ஸகல இஷ்டங்களையும் அடைவானென்று மநுவும் இந்தக் காமிய சிராத்தவிதி கிருஷ்ணபக்ஷ பிரதமை முதல் அமாவாஸை அளவாக உள்ள திதிகளில் செய்வதைப்பற்றியதாகுமென்று காத்தியாயநரும் சாதாதபரும் சொன்னார்கள்.

மஹாளயவிஷயம். கந்நியாராசியில் சூரியனிருக்கையில் அதாவது புரட்டாசிமாஸத்தில் கிருஷ்ணபக்ஷத்தில் பதினைந்துதிதிகளும், மஹாளய புண்ணியகாலமென்றும், அந்தத்திதிகளில் பார்வணவிதியினால் சிராத்தம் செய்யத்தக்கதென்றும் பிரதமைமுதலிய திதிகளில் சிராத்தம்செய்தவன் கிரமமாகத் தநத்தையும், பிள்ளைகளையும், உத்தமகதியையும், சத்துரு நாசத்தையும், செல்வத்தையும், பூசிக்கத்தக்கதசையையும், கணபதியாயிருக்கையையும், நல்ல அறிவையும், ஸ்திரீகளையும், இஷ்டசித்திகளையும், வேதங்களையும், ஸ்வர்ணலாபத்தையும், பிரஜை, புத்தி, பசு, புஷ்டி, ஸ்வாதந்திரியம், உத்தமமான விர்த்தி, தீர்க்கமான ஆயுள், ஐசுவரியம், இவைகளையும் ஆயுதங்களாலடிபட்டு மரித்த பிதிர்க்களின் திருப்தியையும், முக்தியையும் அடைகிறானென்று மார்க்கண்டேயரும், கிருஷ்ணபக்ஷத்தில் பதினைந்துநாட்களில் மஹாளய சிராத்தம் செய்யவேண்டுமென்றதைப் பதினாறுவது நாளாகிய ஆசுவயுஜ சுக்கிலபக்ஷ பிரதமையில் சந்திர தர்சக

யில்லாமையால் அந்தத் திநத்திலும் செய்யலாமென்றும் அந்தத் திதியும் அமாவாஸைக்குச் சரியானதென்றும் தேவலரும், ஆஷாடமாஸம் தொடங்கி ஐந்தாவது பக்ஷத்தில் பிதிர்க்கள் கஷ்டத்தை அடைந்து அந்நத்தையாவது ஜலத்தையாவது அபேக்ஷிக்கிறார்களென்றும், அந்தக் காலத்தில் பிதிர்க்களை உத்தேசித்துக்கொடுத்தது அக்ஷயமாகுமென்றும், அந்த ஐந்தாவது பக்ஷத்தில் கந்யாராசியில் சூரியனிருந்தாலும் இல்லாவிட்டாலும் அதாவது ஆவணிமாசத்திலேயே வந்தாலும் மஹாளய சிராத்தம் செய்யத்தக்கதென்று பிருஹந்மநுவும், மஹாளயபக்ஷத்தில் சிராத்தத்தைச்செய்யச் சத்தியில்லாதவன் கந்யாராசியில் சூரியனிருக்கிற நாட்களுக்குள் ஏதாவது ஒரு நாளிலாவது அந்தச் சூரியன் விருச்சிகராசியில் பிரவேசிக்கிறவரையிலாவது சிராத்தத்தைச் செய்யவேண்டுமென்று சுமந்துவும், யமனானவன் தன்பட்டணத்திலிருக்கிற பிதிர்கணங்களும் பிரேதகணங்களும் தாங்கள் முன் ஜந்மத்தில் செய்த பாபங்களைச்சொல்லிப் பசிதாகங்களால் வருந்துகிறபடியையும் தம் புத்திரபௌத்திராதிகளிடத்திலிருந்து தேனோடுகலந்த பாயஸத்தை விரும்புவதையும் கண்டு வருஷாகாலத்தில் பாத்திரபதமாஸ கிருஷ்ணபக்ஷந்தொடங்கி விருச்சிகத்தில் சூரியன் பிரவேசிக்கிற நாள்வரையில் அந்தப் பிதிர்கணத்தையும் பிரேதகணத்தையும்தன் பட்டணத்திலிருந்து மனுஷியலோகத்திற்கு அனுப்பித் தன் பட்டணத்தைச் சூனியமாக்குகிறானாகையால் அந்தக் காலத்தில் விதிப்படி பாயஸத்தினாலும் தேன் நெய் எள் இவைகளாலும் உஷ்ணமான ஜலத்தினாலும், பிதிர்க்களைத் திருப்தி செய்விக்க வேண்டுமென்றும், ஒருகவளம் அந்நத்தை அயலார் கொடுக்கப் புசிப்பவனும், தானே பிக்ஷை ஏந்திக்கொண்டுவந்த அந்நத்தினால் பிராணனைத் தரித்துக்கொண்டிருப்பவனும், தன்னை ஒருவனுக்கு அடிமையாக விக்கிரயம்செய்து பிழைப்பவனும் ஆகிய இப்படிப்பட்ட தரித்திரரும் வருந்தித் திரவியங்களைத்தேடி மஹாளயசிராத்தத்தைச் செய்யக்கடவர்களென்றும், விருச்சிகராசியில் சூரியன் புகுந்தால் சிராத்தம் செய்யாதவர்களைக் குறித்துப் பிதிர்க்கள் தேவதைகளோடுகூடிப் பெருமூச்சுவிட்டுச் சபித்துத் தாங்களும் ஆசையற்றுத் திரும்பிப்போகிறார்களாகையால் அவர்கள் செல்வத்தையும் பிரஜைகளையும் அடையமாட்டார்களென்றும் ஆதித்தியபுராணத்தில் சொல்லப்பட்டது. நந்தை என்னும்திதி, சுக்கிரவாரம், திரயோதசி, ஜந்மம், அநுஜந்மம்,திரிஜந்மம் என்னும் மூன்றுவித நட்சத்திரங்கள் ஆகிய இவைகளில் கிருகஸ்தன் சிராத்தம் செய்தானாகில் அவனுக்குப் புத்திரன்

செல்வம் முதலியவைகள் குறைந்துவிடுமென்று கார்க்கியரும், ரோகிணி, ரேவதி, மகம், சுக்கிரவாரம் இவைகளில் மஹாளய சிராத்தம் செய்கிறவனுடைய பிள்ளை மரிக்குமென்று விருத்தகார்க்கியரும், சொன்னார்கள்.

மக நக்ஷத்திரத்தோடு கூடின திரயோதசியில் தேன்பாயஸம் இவைகளால் சிராத்தம் செய்தவர்கள் இஷ்டமான பிரஜைகளையும் கீர்த்தியையும் ஸ்வர்க்கத்தையும் ஆரோக்கியத்தையும், செல்வத்தையும் பிதாமஹர்களுடைய அநுக்கிரகத்தினால் பெறுகிறார்களென்று சங்கர் சொன்னார். மகதிரயோதசியில் பிண்டமின்றிச் சிராத்தம் செய்தவன் தன் ஞாதிகளில் தான் சிறந்தவனாகிறானென்றும், அது யுகாதி யாகையால் அன்றையதினம் பிண்டதானம் செய்யக்கூடாதென்றும் பிண்டதானம் செய்தால் அவன் வீட்டில் யௌவனபருவமுடைய பிள்ளைகளின் மரணம் சம்பவிக்குமென்றும் மஹாபாரதத்தில் சொல்லபபட்டது. இரண்டு அயநங்கள் இரண்டு விஷுவத்துக்கள், யுகாதிகள் ஆகிய இவைகளில் பிண்டதானமில்லாமலே சிராத்தம் செய்யத்தக்கதென்று புலஸ்தியரும், விஷம், ஆயுதம், செந்நாய் புலிமுதலிய மிருகங்கள் ஆகிய இவைகளாலும் பிராம்மணதிவர்ணங்களில் கொடியராகிய சிலராலும் அடிபட்டுமரித்தவர்கள் விஷயத்தில் மாத்திரம் சதுர்த்தசியில் சிராத்தகிரியைகளை ஏகோத்திஷ்டவிதியால் செய்யவேண்டுமென்று மரீசியும், மரமேறிவிழுதல் இடிவிழுதல் ஜலம் நெருப்பு இவைமுதலியவைகளால் துர்மரணமடைந்தவர்கள் விஷயத்தில் மாத்திரம் சதுர்த்தசியில் சிராத்தம் செய்யவேண்டுமென்று பிரசேதாவும், தன் பிதாவானவன் விஷம் ஆயுதம் முதலிய துர்நிமித்தங்களினால் மரித்து அவனுக்கு ஸபிண்டீகரணம் செய்யப்பட்டபோதிலும் அவன் விஷயத்தில் சதுர்த்தசியில் ஏகோத்திஷ்டவிதியினால் சிராத்தம் செய்யவேண்டுமென்று சந்திரிகாகாரர் அபரார்க்கர் இவர்களும் சொன்னார்கள்.

ஏகோத்திஷ்டபிரகரணம். ஸீமந்தஜாதன் அல்லாத பிராதா, ஸசோதரியின் மகன், தனக்கு ஆசாரியன், உபநயனம்செய்வித்தவன், அம்மான், ஸ்நேஹிதன் இவர்கள் விஷயத்தில் ஏகோத்திஷ்ட சிராத்தமே யல்லது பார்வணசிராத்தம் செய்யத்தக்கதன்று என்கிறவிதி ஸபிண்டீகரணம்செய்தபின் கீழ்ச்சொன்னவர்களைப்பற்றிச் செய்யும் சிராத்தங்களைப் பற்றியதென்று ஸ்மிருதி ஆபஸ்தம்பர் இவர்கள் சொன்னார்கள். ஸபிண்டீகரணம் செய்வதற்கு முன் ஏகோத்திஷ்டவிதியால் சிராத்தம் செய்யவேண்டுமென்று முத்கலரும், ஸபிண்டீக்

ரணத்தினுல் பிரேதத்தன்மையைவிட்டுப் பிதிர்வர்க்கத்தைச் சேர்ந்தவனைப்பற்றிப் பின்பு ஏகோத்திஷ்டவிதியால் ஒற்றைப்பிண்டம் கொடுத்தால் அவன் பிதிர்லோகத்தினின்று நழுவுகிறுனுகையால் அவன் ஸபிண்டீகரணத்திற்குப் பின் பிரிக்கத்தகாதவனுகிறுனென்றும், பிரித்தால் பின்பு வேறொருஸபிண்டீகரணம் செய்யவேண்டுமென்றும் ஜாதுகர்ணியர் யமமுனிவர் இவர்கள்சொன்ன விலக்கானது பதிஞேராவதுநாளில் விதிக்கப்பட்ட ஏகோத்திஷ்டத்தைஅநுஷ்டிக்காத பக்ஷத்தைச் சேர்ந்ததென்று அறிக.

சிராத்த திநத்தில் ஆசௌசம் ஸம்பவித்தால் செய்யவேண்டுவது. பிதிர் சிராத்தம் செய்யவேண்டிய காலத்தில் ஆசௌசம் ஸம்பவித்தால் அந்த ஆசௌசம் ஒழிந்தவுடனே பிதிர் சிராத்தம் செய்யவேண்டுமென்று ரிசியசிருங்கர் சொன்ஞர். ஆசௌசமல்லாத வேறொருநிமித்தத்திஞல் ஏகோத்திஷ்ட சிராத்தத்திற்கு அன்றைய திநத்தில் விரோதம் ஸம்பவித்தால் மறுமாஸத்திய அந்தத்திதியில் பிரயத்திநப்பட்டாவது அதைச் செய்யவேண்டுமென்று தேவலர் சொன்ஞர். ரிசிய சிருங்கவசநம் சூதகம் முதலிய ஆசௌசத்தைப் பற்றியதென்றும் தேவல வசநம்ஆசௌசமல்லாத வேறுநிமித்தத்தைப்பற்றிய தென்று மறிக. சிராத்ததிநத்தில் பாகம் செய்யத்தொடங்குவதற்குமுன் ஜநநாசௌசமாவது மரணுசௌசமாவது ஸம்பவித்தால் அந்தச் சிராத்தத்தை ஆசௌசம் கழிந்தபின்பு அமாவாஸையில் செய்யவேண்டுமென்கிற வியாஸவசநம் வர்ஷாந்தத்தில் வருகிற ஊநாப்திக விஷயமாம். அமாவாஸை என்றெடுத்தது கிருஷ்ணபக்ஷத்து ஏகாதசியிலாவது அமாவாஸையிலாவது அந்தச்சிராத்தம் செய்யத்தக்கதாமென்றும் கிருஷ்ணபக்ஷத்தில் அமாவாஸை சிராத்தம் செய்ய உத்தமதிதி என்றும் அதிலும் ஆசௌசமொழிந்த நாளில் செய்வது சிறந்ததாகுமென்றும் முப்பத்தறுவர்மதத்தில் சொல்லப்பட்டது.

ஆசௌசநாளிலகப்பட்ட மாஸிகத்தைச் செய்யுங்காலம். ஆசௌசம் கழிந்த நாள் எந்தத் திதியோ அந்தத்திதியே மாஸிகத்திற்குரியகாலமென்றும், ஆசௌசமின்றி ஆலஸ்யத்திஞல் முக்கிய திதியில் மாஸிகத்தைச்செய்யாமல் விடக்கூடாதென்றும், பிண்டதாநத்தையும் அக்கியில் ஹோமத்தையும்விடாமல் செய்யவேண்டுமென்றும் ரிசியசிருங்கர் சொன்ஞர்.

ஆமசிராத்தம் செய்யுங்காலம். அமாவாஸையின் சிராத்தமுதலிய அவசியமான சிராத்தங்களைச்செய்யத் தடைநேரிட்டால் ஆமமா

கச் செய்யலாமென்று ஹாரீதரும், பத்நியில்லாதவன், தேசாந்தரஞ் சென்றவன், ரஜஸ்வலையான மனைவியுடையவன் ஆகிய இவர்கள் அந்த சிராத்தம் செய்யத் தகாதவர்களென்று உசநாவும், பாரியை ரஜஸ்வலையாயிருக்கையிலும் ஆபத்காலத்திலும் அக்நியில்லாத (பாரியையில்லாத) தருணத்திலும், தீர்த்தங்களிலும் புத்திரஜநநத்திலும் தேசாந்தரம் போயிருக்கையிலும் ஆமசிராத்தம் செய்யவேண்டுமென்று காத்தியாயநரும், ஒருவித தேசோபத்திரவம் முதலிய ஆபத்துக்களில் பிராம்மணன் ஆமசிராத்தம் செய்யத்தக்கவனென்றும் சூத்திரன் எப்போதும் ஆமசிராத்தம் செய்யத்தக்கவனென்றும் வியாக்கிரபாதமுனியும் சொன்னார்கள். அநக்நிகன், தேசாந்தரஞ்சென்றவன், ரஜஸ்வலையான மனைவியையுடையவன் ஆகியஇவர்களில் எவ்வித தசையை யடைந்தவனாயிருந்தபோதிலும் இருபிறப்பாளன் பிதிர்மரணதிநத்தில் அந்த சிராத்தத்தைச் செய்யக்கடவனென்கிற மரீசிவசநத்தாலும், இவ்விதலோகாக்ஷிவசநத்தாலும், மாஸிகம் பிரத்தியாப்திகம் இவைகள் தவிர மற்றவிஷயத்தில் ஆமசிராத்தம் செய்யலாமென்கிற ஹாரீதருடைய விசேஷவசந மிருப்பதாலும் மாஸிக பிரத்தியாப்திகங்கள் விஷயத்தில் இருபிறப்பாளனுக்கு ஆமசிராத்த சங்கையில்லை. பாரியையானவள் ரஜஸ்வலையாயிருக்கையில் சிராத்த திநம்வந்தால் அப்போது சிராத்தம்செய்யாமல் அவள் ஸ்நாநம் செய்தபின் ஐந்தாநாளில் சிராத்தம் செய்யத்தக்கதென்கிற ஸ்மிருதிவசநம் சக்களத்தியாவது பிள்ளையாவது இல்லாதவளான ஒருத்தி ரஜஸ்வலையாயிருக்கையில் அவளுடைய பர்த்தாவின் பிரத்தியாப்திக சிராத்தம்வந்தால் அப்போது அதைச்செய்யாமல் ஐந்தாநாளில் செய்யவேண்டுமென்று விதிக்கிறதென்றறிக. ரஜஸ்வலையானவள் நாலாவது நாளில் ஸ்நாநத்தினால் சுத்தையேயாகிலும் தேவபிதிர்கர்மங்களில் ஐந்தாவதுநாளில் சுத்தையாகிறாளென்று பிரபாஸகண்டத்தில் சொல்லப்பட்டது. தன் மனைவி ரஜஸ்வலையாயிருந்தால் அந்தத் தடையில்மாத்திரம் அகாலத்தில் அந்தச் சிராத்தத்தைச் செய்யவேண்டுமென்றும் மற்றொரு மனைவியிருந்தால் புருஷனுக்குச் சிராத்தஞ் செய்ய அதிகாரம் போகாமையால் முக்கியகாலத்தில் தானே அந்தச் சிராத்தத்தைச் செய்யவேண்டுமென்றும் இவைகளில் எது யுக்தமோ அது சிஷ்டர்களால் கிரகிக்கத் தக்கதென்றும் மாதவாசாரியர் உரைத்தார்.

சிராத்தத்தில் நிமந்திரணம் சொல்லத்தக்க பிராம்மணர்களின் பரிக்ஷை. வேதங்கள் முழுது மோதினவர்களும் குஷ்டம்அபஸ்மாரம்

முதலிய ரோகங்களில்லாதவர்களுமான பிராம்மணர்களைச் சிராத்தத்தில் நிமந்திரணம் சொல்வதற்கு முன்னமே அவர்களுடைய மூன்று வது பாட்டன்மார்தொடங்கிப் பரிக்ஷைசெய்யவேண்டுமேயல்லது தனக்கு இஷ்டர்களேயாகிலும் இஷ்டமில்லாதவர்களேயாகிலும் நிமந்திரணம் சொல்லியபின் போஜனம் செய்யவந்தபோது அவர்களை அவமதி செய்யத்தகாதென்று யமமுனிவரும், பிதா வேதமோதாதவனாயிருந்து பிள்ளை வேதமுழுது மோதினவனாகவும், பிள்ளை வேத மோதாதவனாயிருந்து பிதா வேதமோதிச் சிறந்தவனாகவும் இருந்தால் இவர்களில் வேதமோதிச்சிறந்த பிதாவைக் காட்டிலும் வேதமோதாதவனேயாகிலும் அவன் பிள்ளை கர்ப்பாதானம் தொடங்கி ஸகலமான ஸம்ஸ்காரங்களையும் விதிப்படி அடைந்த சுத்தமான ஜந்மமுடையவனாகையால் அவனே சிரேஷ்டனாகிறானென்று மநுவும் சொன்னார்கள். சகல சாஸ்திரங்களுடன் வேதமோதினவர்களும் பிரமஞானமுள்ளவர்களும் யௌவந பருவமுடைவர்களும் வேதார்த்தங்களை அறிந்தவர்களும் ஜ்யேஷ்டஸாமத்தை அதில் சொல்லியவிரதத்துடன் ஓதினவர்களும் த்ரிமது த்ரிஸுபர்ணம் என்னும் ருக்கு யஜுர் வேதங்களின் ஒருபாகத்தை அதின் விரதத்துடன் ஓதினவர்களும் கர்மாநுஷ்டானபரர்களும் கிருச்சிர சாந்திராயணாதிகளில் நிஷ்டையுடையவர்களும் பஞ்சாக்நிமத்தியில் தபசு செய்கிறவர்களும் பிரமசரியத்தை யுடையவர்களும் தாய் தந்தைகளுக்குப் பணிவிடை செய்பவர்களும் ஆகிய இந்தக் குணங்களையுடைய பிராம்மணர்கள் சிராத்தத்தில் புசித்தார்களாகில் அந்தச்சிராத்தமானது அக்ஷயபலனைத்தருவதாகுமென்று யாக்கியவல்கியர்சொன்னார். பிராம்மணர்களென்றதினால் மேற்கண்ட குணங்களை யுடையவர்களேயாகிலும் க்ஷத்திரியர்கள் சிராத்தத்தில் புசிப்பிக்கத் தக்கவர்களல்லரென்பது கருத்து.

யதிகளைச்சிராத்தத்தில் நிமந்திரணம் சொல்லலாமென்பது.

பிரமசாரிகளையும் வாநப்பிரஸ்தர்களையும் ஸந்நியாசிகளையும் சிராத்தத்தில் புசிப்பிக்கவேண்டுமென்று பிரமாண்டபுராணத்தில் சொல்லப்பட்டது. யதிகளிருக்க அவர்களை அநாதரித்துக் கிருகஸ்தர்களைப் புசிப்பித்தால் அந்தச் சிராத்தம் ராக்ஷஸப்பிரீதியாகுமென்று நாரதமுனிவரும், யோநி ஸம்பந்திகள் (அம்மான் முதலானவர்கள்), கோத்திர ஸம்பந்திகள் (ஞாதிகள்), மந்திரஸம்பந்திகள் (வேதமோதுவித்தவன் மற்றும் சிலசாஸ்திரங்களுக்கு உபாத்தியாயர்களாயிருந்தவர்கள்) ஆகிய இவர்கள் சிராத்தத்தில் புசிப்பிக்கத் தக்கவர்களல்லரென்றும் த்ரிநாசிகேதம், த்ரிஸுபர்ணம் இவைகளையும், வேதத்தினு

டைய ஆறு அங்கங்களேயும் அறிந்தவன், பிராம்மமென்னும்விவா கத்தினல் பரிக்கிரகிக்கப்பட்டவளிடத்தில் பிறந்தவன், ஜ்யேஷ்ட ஸாமத்தை ஓதினவன், ஆயிரம் தாநம் கொடுத்தவன் ஆகிய இவர்கள் முதலான சிலர் பந்திபாவநர் (தமது போஜநபந்தியில் புசிப்பவர்களே யும் பரிசுத்த ராக்கவல்லவர்) என்றும் ஆபஸ்தம்பரும் விதித்தார்கள். யோநி ஸம்பந்திகளான அம்மான் முதலியவர்களைச் சிராத்தத்தில் புசி ப்பிக்கத்தகாதென்கிற ஆபஸ்தம்ப வசநம் முக்கிய விதியானபோதி லும், மாதாமஹன், அம்மான், மருமான், மாமஞர், குரு, பெண் வயிற் றுப்பிள்ளே, மருமகன், சிறியதாயார் பெரியதாயார் இவர்களின் பிள் ளை முதலிய பந்துக்கள், புரோகிதன் ஆகிய இவர்களும் சிராத்தத்தில் சிஷ்டர்களால் புசிப்பிக்கப்படுவது பிற்பட்டவிதியென்று மநுவும், குணவானை பிராம்மணன் கிடையாத பட்சத்தில் ஸகோதரனுகிலும் புசிப்பிக்கத் தக்கவனென்றும் இதனல் சிஷியர்கள் விஷயமும் சொ ல்லப்பட்டதென்றும் ஆபஸ்தம்பரும், முக்கியர்களான பிராம்மணர் கள் கிடையாத பட்சத்தில் ஞாதிகளேயும் புசிப்பிக்கலாமென்று போ தாயநரும், ஆனல் இவர்களை விசுவே தேவஸ்தாநத்தில் புசிப்பிக்க வேண்டுமென்று அத்திரியும் சொன்னார்கள். ஒருவனையும் கிட்டிப் பொருளை யாசிக்காமல் குடும்பபோஷணவிஷயத்தில் வருந்துகிறவர் குணமில்லாதவர்களே யாகிலும் அவர்களை வெகு பிரயத்தநப்பட்டா வது சிராத்தத்தில் புசிப்பிக்கவேண்டுமென்றும், குணமுள்ளவர்களா ன கீழ்ச்சொன்னவர்கள் கிடையாதபக்ஷத்தில் யாசிக்காமலிருப்பவர் கள் உத்தமர்களென்றும், இவர்கள் கிடையாதபக்ஷத்தில் யாசிப்பவன் உத்தமனுகிறுனென்றும், இந்தப்பக்ஷங்களில் முக்கியபக்ஷங்கிடை த்ததாகில் முக்கியமல்லாத பக்ஷம்கிரகிக்கத்தக்கதல்லவென்றும், பிரா ம்மணன் மூர்க்கனேயாகிலும் வேதமோதாதவனேயாகிலும் அவனுக் கே சிராத்தத்தைக் கொடுக்கவேண்டுமேயல்லது அவனை அதிக்கிரமித் து மற்ற வர்ணங்களுக்குச் சிராத்தம் கொடுத்தல் கிளர்ந்தெரிகின்ற அக்கினியைவிட்டுப் பஸ்மத்தில் ஆகுதிசெய்வது போலாகுமென்றும் வஸிஷ்டஸ்மிருதி பவிஷ்யத்புராணங்கள் சொல்லுகின்றன. தன்வீட் டில் அல்லது சமீபத்தில் தன் ஜாதியான தரித்திர பிராம்மணனெரு வன் குணவானுகவாவது குணமில்லாதவனுகவாவது இருந்தாலும் சி ராத்தத்தில் அவன் புசிப்பிக்க (நிமந்திரணம் சொல்ல) த்தக்கவனென் றும் அவனைவிட்டுத் தேசாந்தரத்திலிருக்கும் குணவானைத் தேடுகிற வன் நரகத்தை அடைகிறுனென்றும் தன் பந்துக்களைவிடக் கூடா தென்றும் இதரபுராணங்களில் சொல்லப்பட்டது.

சிராத்தத்தில் நிமந்திரணம் சொல்லத்தகாத பிராம்மணர்கள். தன் விரதத்தினின்று தவறினவன், சுவாஸகாசம், மதுமேகம், குஷ்டம், நீரிழிவு, உந்மாதம், சர்மவியாதி இவைகளையுடையவன், அதிக குறைவான அவயவங்களையுடையவன், ஒரு கண் பொட்டையானவன், செவிடன், ஊமை, மூர்க்கன், இரண்டுதாம் விவாகம் செய்யப்பட்டவளுக்குப் பிறந்தவன், சொத்தையான நகமுடையவன், கறுத்த பற்களையுடையவன், கூலிவாங்கி வேதமோதுவிப்பவன், அப்படியே வேதமோதுகிறவன், கந்நிகையிடத்தில் தோஷமிருந்தாலும் இல்லாவிட்டாலும் அவளைத் தூஷிப்பவன், மகாபாபத்தைச் செய்தவன், தமையனுக்கு விவாகமில்லாமலிருக்கத் தான் விவாகம் செய்துகொண்ட இளையவன், தகப்பனுடன் சண்டையிடுகிறவன், மூன்று வருஷகாலங் கூலிக்குத் தெய்வ பூஜைசெய்தவன், குண்டகோளகர்கள், இவர்களுடைய அந்நத்தைப் புசிப்பவன், தனக்குரிய கர்மங்களைச் செய்யாதவனுடைய மகன், முன் ஒருவனால் விவாகம் செய்யப்பட்டவளை விவாகம் செய்துகொண்டவன், ஒருவன்பொருளை அவன் கொடாமலிருக்கத் தானே அபகரித்துக்கொள்ளுகிறவன், நாஸ்திகன், மாம்ஸவர்த்தகம்செய்கிறவன், பக்ஷிமுதலியவைகளை விற்கிறவன், சாஸ்திர விருத்தமான ஆசாரங்களைச் செய்பவன், மதா பிதா குரு இவர்களைக் காரணமின்றி விட்டவன், வைத்தியம் செய்பவன், கப்பல் யாத்திரைசெய்கிறவன் ஆகிய இவர்கள் சிராத்தத்தில் நிமந்திரணம் சொல்லத்தகாதவர்களென்று யாக்கியவல்கியர்சொன்னார்.

பரிவித்தி பரிவேத்தாக்களின் பிரகாரணம். ஸகோதரனான மூத்தவனிருக்க இளையவன் அக்கி ஹோத்திரத்தைச் செய்தாலும் விவாகம் செய்துகொண்டாலும் அவன் பரிவேத்தா என்றும் மூத்தவன் பரிவித்தி என்றும் சொல்லப்படுவார்களென்று மநுவும், அந்நிய க்ஷேத்திரத்தில் தன் பிதாவுக்கு ஜநித்துத் தனக்கு மூத்தவனான மாற்றாந்தாயின் பிள்ளையும் பெரியதகப்பன் அல்லது சிறிய தகப்பன் பிள்ளையும் தனக்கு மூத்தவனான தன்பிதாவின் ஸ்வீகார புத்திரனும் நபும்ஸகனும் தேசாந்தரஞ்சென்று எட்டு அல்லது பன்னிரண்டு வருஷம் விதிப்படிஎதிர்ப்பார்த்தும் வராதவனும் மஹாபாபியானவனும் சந்நியாசியானவனும் தீர்க்கரோகமுடையவனும் யோகாப்பியாசியானவனும் வைராக்கியத்தினால் நெடுநாள் சென்று இனி விவாகம் செய்துகொள்ளப்போகிறதில்லை என்று தோற்றும்படியிருக்கும் மூத்தவனும் ஆகிய இவர்கள் விவாகம் செய்துகொள்ளாமலிருக்கக் கநிஷ்டன் விவாகம் செய்துகொள்வது பரிவேதநமென்

ஹும் தோஷத்திற்கு இடமாகாதென்று சாதாதப காத்தியாயந வஸிஷ் டாதிகளும் சொன்னார்கள்.

சிராத்தத்தில் பிராம்மணரை நிமந்திரணம் சொல்லும் வகை.

நாளைய தினம் சிராத்தம் செய்யப்போகிறவன் கீழ்ச்சொல்லப்பட்ட லக்ஷணங்களோடு கூடின பிராம்மணர்களை முதல் நாளே நிமந்திரணம் (சிராத்தத்தில் புசிக்கவேண்டுமென்று பிரார்த்திப்பதை) சொல்லக்கடவனென்று ஹாரீதர்சொன்னார். முதல் நாளில் அல்லது மறுநாளிலாவது அவர்களைப் பிரார்த்திக்கவேண்டுமென்று கூர்மபுராணமும், முதல்நாளே சுத்த வஸ்திராதிகளைத் தரித்துச் சிராத்தம் செய்யுமிடத்தைக் கோமயஜலத்தினால் மெழுகிப் பிராம்மணர்களை நிமந்திரணம் சொல்லித் தான் பிரமசரிய விரதத்துடனிருக்கவேண்டுமென்று வராகபுராணமும் கூறுகின்றன. முதல்நாள் ராத்திரிபுசித்திருக்கும் பிராம்மணர்களிடம்சென்று முதலில் பிராசீநாவீதமாகப் பூணூலைத்தரித்து விசுவே தேவர்கள் நிமித்தமாகவும் பின்பு பிதிர்க்கள் நிமித்தமாகவும் அவர்களைப் பிரார்த்தித்து அடியேனது பிதிர்காரியமான சிராத்தம் தேவரீர்களால் செய்விக்கத் தக்கதென்றும் தேவரீர்கள் பிரஸந்நர்களாக வேண்டுமென்றும் விண்ணப்பம் செய்யவேண்டுமென்று பிரசேதாவும், தானாகிலும் பிள்ளையாகிலும் சிஷியனாகிலும் நிமந்திரணம் சொல்லலாமென்று பிரகஸ்பதியும் சொன்னார்கள். சிராத்தத்தில் ஒற்றைப்பட்ட பிராம்மணர்களையும் தெய்விக விஷயத்தில் இரட்டைப் பட்டவர்களையும் புசிப்பிக்கவேண்டுமென்று அங்கிரா சொன்னார். ஸம்பத்தையுடையவன் சிராத்தத்தைச் செய்தால் தேவஸ்தாநத்தில் இரண்டு பிராம்மணர்களையும் பிதிர் ஸ்தாநத்தில் மூன்று பிராம்மணர்களையுமாவது இரண்டு ஸ்தாநங்களிலும் ஒவ்வொருத்தரையுமாவது புசிப்பிக்கத் தக்கவனேயல்லது சிராத்தத்தை விஸ்தரிக்கத் தகாதென்றும், விஸ்தரித்தால் பிராம்மண பூஜை, தென்புறத்தில் சாய்ந்த தேசம், சிராத்தத்திற்குரிய பகற்காலம், பிராம்மணர்க்குச் சொல்லிய சுத்தி இவைகள் சிராத்தத்தில் குறைந்துவிடுமென்றும் மநு சொன்னார். தன் உத்ஸாக விபவங்களுக்கிடாகச் சிராத்தத்தில் பிராம்மணர்களைப் புசிப்பிக்கவேண்டுமென்று கௌதமரும், ஒவ்வொரு ஸ்தாநத்தில் ஒவ்வொருத்தரையாவது அதிக செல்வமிருந்தால் மும்மூன்று பேர்களையாவது ஐந்து அல்லது ஏழுபேர்களையாவது புசிப்பிக்கலாமென்றும், ஸாமர்த்திய மிருந்தால் ஒன்பதுபேர்களுக்குக் குறையாமல் புசிப்பிக்கலாமென்றும்

விருத்தி சிராத்தத்தில் பிதிர் ஸ்தானத்தில் இரட்டித்த பிராம்மணர் களைப் புசிப்பிக்கலாமென்றும் சௌநகரும் சொன்னார்கள்.

பிராம்மணர்கள் கிடையாதபக்ஷத்தில் பந்தி பாவநனான ஒரு பிராம்மணனையாகிலும் புசிப்பிக்கவேண்டுமென்று சங்கர்சொன்னார். ஒருபிராம்மணன் கிடைத்த பக்ஷத்தில் தேவஸ்தாநத்திய அந்ந பரி வேஷணத்தைத் தேவதையின் முன்பாகச்செய்து சிராத்தம் முடிந்த பின் அதை அக்கினியில் போடவேண்டும், அல்லது பிரமசாரியையா வது புசிப்பிக்கவேண்டுமென்று வஸிஷ்டர் சொன்னார். நிமந்திரணம் செய்த அந்தப் பிராம்மணர்களைப் பார்த்துத் தேவரீர்களும் அடியே னும் கோபமில்லாதவர்களும் ஆசாரநிஷ்டர்களும் பிரமத்தையே கோ ஷிப்பவர்களுமாக இந்தச்சிராத்த கர்மத்திலிருக்க வேண்டுமென்று பிரார்த்திக்க வேண்டுமென்றும் அவர்களுமப்படியே புசித்த அந்நம் ஜரிக்குமளவும் இருக்கவேண்டுமென்றும் மத்ஸியமுநிவர் சொன்னார். சிராத்த போஜநம் செய்தவன் பிரமசரிய விரதத்தை அநுஷ்டிப் பவனாய் ஒருவரை ஹிம்ஸிக்சாமை, ஸத்தியம், கோபத்தையொழித்தல், வழிநடத்தல், சுமையெடுக்காமை இவைகளுடனிருக்க வேண்டுமென் றும் ஒருஇடத்தில் நிமந்திரிதனாய் வேறிடத்தில் புசித்தவன் அநேக நரகங்களை அநுபவித்துச்சண்டாளனாகிறானென்றும் யமமுநிவரும், தான்சக்தியுள்ளவனாயிருந்து நிமந்திரணம் சொன்னவனும் பழிக்கப் படாத ஜாதி ஆசாரம் முதலியவைகளால் பரிசுத்தனாயிருந்தால் அந்தச் சிராத்த போஜநத்தை அங்கீகரிக்கவேண்டுமென்று காத் தியாயநரும், சக்தியுள்ள பிராம்மணன் ஹவ்யகவ்யங்களில் நிமந்திரி தனாய்ப்பின் அதைத்தவிர்ந்தால் பாபியாய்ப்பன்றியாகப் பிறக்கிறா னென்று மநுவும், ஒருபிராம்மணனை நிமந்திரணம் சொல்லிப்பி ன்பு அவனைவிட்டவன் பிரமஹத்தி தோஷத்தை அடைந்து சூத் திரயோநியில் பிறக்கிறானென்று நாராயணமுநிவரும் சொன்னார் கள். சிராத்தத்தில் நிமந்திரிதனாய்ச் சிராத்த காலத்தை அதிக் கிரமித்து வந்தவன் அந்தச்சிராத்தம் செய்கிறவன் பிதிர்க்கள் தே வதைகள் இவர்களனைவருக்கும் துரோகியாய் நரகத்தில் விழுகிறா னென்று ஆதித்திய புராணத்தில் சொல்லப்பட்டது. சிராத்தம் செய்தவன் சிராத்தத்தில் புசித்தவன் ஆகிய இவர்கள் தங்கள் பாரியைகளிடத்தில் சாஸ்திரவிகிதமான ருதுகாலகமநத்தைச் செய்தால் அநர்த்தத்தை அடைகிறார்களென்று மநுவும், அவ்வி ருவரில் யாரேனும் சூத்திரஜாதி ஸ்திரீ கமநத்தைச் செய்தார்க ளாகில் அந்தமாஸமெல்லாம் அவளுடைய மலத்தில் அவர்களுடைய

பிதிர்க்கள் அழுந்துகிறார்களென்று கௌதமரும் சொன்னார்கள். சிராத்தம் செய்கிறவன் தந்தசுத்தி செய்யக்கூடாதென்றும் நிமந்திரின் தந்தசுத்தி செய்யலாமென்றும் சிராத்த கர்த்தாவானவன் காலையில் ஸ்நாநம் செய்து பரிசுத்த வஸ்திரங்களையுடுத்துப் புதிய பாத்திரங்களில் தன்பந்துக்களோடுகூடி அந்நம் கறியமுதுகள் பக்ஷியங்கள் பாயஸம் முதலியவைகளைப் பசநம்செய்ய ஆரம்பித்துத் தான்சிராத்தம் செய்யுமிடத்தில் அசுரபீடை இல்லாமைக்காக எள்ளைஇறைக்கவேண்டுமென்றும் தேவலர் சொன்னார்.

சிராத்தத்திற்குரிய திரவியங்கள். வெளுத்த முள்ளுடையதான யவமென்னும்தாநியம், சம்பா, மதூலிகை என்னு மொருவித புல்தாநியம், கறுத்தநெற்கள்,சிவந்த சம்பாதாநியம் ஆகிய இந்தத்தாநியங்கள் சிராத்தத்தில் உபயோகிக்கத் தக்கவைகளென்று பிரசேதாவும், யவதாநியம், கோதுமை, எள், பயறு, கடுகு, கறுத்தகடுகு, மலையகத்தி இவைகள் சிராத்தத்திற்கு உரியவைகளென்று மார்க்கண்டேயரும்,கோதுமையில்லாமல் செய்த சிராத்தம் செய்யப்பட்டதாகாதென்று அத்திரியும்சொன்னார்கள். வில்வம், நெல்லி,திராக்ஷை, பலா, மாதளை, மா, வாழை, கறுத்த பூசனி,வெள்ளரி,பாலை,எலுமிச்சை, தேங்காய், இஞ்சி, தேன், வெல்லம், மிளகு, இலந்தை, மரமஞ்சள், கண்டங்கத்திரி என்னும் முள்ளிக்காய், பசுவினுடைய தயிர் பால் நெய் இவைகள்,சர்க்கரை முதலிய சாஸ்திர விகிதமான திரவியங்களைச் சிராத்தத்தில் உபயோகிக்கவேண்டுமென்று வாயுபுராணத்தில் சொல்லப்பட்டது.

கறுப்புப்பயறு, துவரை,பெரிய உளுந்து அல்லது மொச்சை, கொள், கடலை முதலியவைகள் சிராத்தத்திற்குத் தகாதவைகளென்று பரத்துவாஜர் சொன்னார். அதிக காரமுள்ள வஸ்துக்கள் சேர்க்கத் தகாதனவாமென்றும், கறுத்த அவரை, காய்ச்சின உப்பு, முருங்கை, சுரை, கத்தரி, எருமை ஆடு இவைகளின் தயிர் பால் நெய்கள், கறுத்த தாநியங்கள் ஆகிய இவைகள், நித்தியமும் புசிக்கத் தகாதவைகளாகச் சாஸ்திரங்களில் விலக்கப்பட்ட சாகம் முதலியவைகள் சிராத்தத்திற்குத் தகாதவைகளென்றும், இரண்டுதரம் சமைக்கப்பட்டதும், அதிகமாகப் பாகம் செய்யப்பட்டதும், முன் ஒருவனால் புசிக்கப்பட்டதின் மிகுதியும், பிண்ணாக்கும், ஜலம்விட்டுக் கடையப்பட்டதான தயிரும், அதிக விலையுள்ளதும் போஜநத்திற் குரியவைகளல்ல வென்றும் சங்கர் முதலிய ரிஷிகள் சொன்னார்கள்.

சிராத்தத்தில் மாம்சத்தைப் பிதிர் திருப்திக்காகப் புசிப்பிக்கவேண்டு மென்பது யுகாந்தர விஷயம்.

எப்போதும் புசிக்கத்தகாதவைகள் இவையென்பது. வெண்கத்தரி, உள்ளி, வெங்காயம், சுரை, பெருங்கிழங்கு, அத்திக்காய், ஆலங்காய், கடம்பு, முருங்கை, சிவந்ததாகிய பிசின், பீர்க்கு முதலிய சாஸ்திர நிஷித்தங்களான வஸ்துக்கள் எப்போதும் புசிக்கத்தகாதவைகளென்றும் சிவந்த பிசின் என்றதினுல் வெளுத்த பிசினுன பெருங்காயம் புசிக்கத்தக்கதாமென்றும் மநு முதலிய மஹாமுனிவர்களால் விரித்துரைக்கப்பட்டதில் சில இங்கு எடுத்தெழுதப்பட்ட தென்றறிக.

பர்யுஷிததோஷமற்ற வஸ்துக்கள் இவை என்பது. பர்யுஷிதமென்பது அக்நியில் பசநம் செய்தபின் ஓரிரவுதங்கியதாம். அப்படிப்பட்ட வஸ்துக்கள் புசிக்கத் தகாதவைகளேயாகிலும் சில வஸ்துக்களுக்கு அந்தப் பர்யுஷிததோஷமில்லை என்றும், வடை முதலிய பணியாரங்கள், யவம் கோதுமை இவைகளின் கஞ்சி, அரிசி மாவினுல் செய்யப்பட்ட பணியாரங்கள், எள்பொடிகலந்த அந்நம், எண்ணெய்கலந்த அந்நம், நெய் தயிர் பால் இவைகள் கலந்த அந்நம், இவைகளுக்கு அதிக புளிப்பு உண்டாகும் வரையில் புசிக்கலாமென்றும், சிலநாள் கழித்தாவது சில திரவியங்களின் சேர்க்கையினுலாவது அதிக புளிப்பாகிவிட்ட வஸ்துக்கள் புசிக்கத் தகாதவைகளென்றும், அக்நியல்லாத வேறு சுடுகையினுல் பசநம் செய்யப்பட்டு அதாவது பிட்டுச்சுடுவதுபோல் ஆவியினுல் சமைக்கப்பட்டுப் புளிப்பானதும், தயிர் சேர்ந்த புளிப்பும், நெய் சேர்ந்த புளிப்பும் ஆகிய இவைகள் பர்யுஷிதமானபோதிலும் புசிக்கத்தக்கவைகளாமென்றும், புளியோடு பசனம் செய்யப்படாமல் காலத்தினுல் புளிப்பாகிவிட்டதும் பிராம்மணனுக்கு ஜலத்தினுல் அலம்பியபின் புசிக்கத்தக்கதாமென்றும், உலோபமுடையவன், விலங்கிடப்பட்டவன், கூத்தாடுகிறவன், வீணைவாசித்துப் பிழைப்பவன், யக்கியத்தில் தீக்ஷைபெற்றுக்கொண்டவன், தீராநோயுடையவன், மனதில் மிகுந்த கோபத்தையுடையவன், தந மிகுதியால் கர்வம ெ .ந்தவன், தயையில்லாதவன், அதிக துக்கத்தை உண்டுபண்ணுகிறவன், வஸ்திரத்திற்குச் சாயமேற்றுகிறவன், எச்சிலைத்தின்னுகிறவன், பதியும் பிள்ளையும் இல்லாதவள், வண்ணானைப்போல் துணிதோய்க்கும் வேலையைச்செய்கிறவன் ஆகிய இவ்விதமான நிலையிலிருக்கும் பிராம்மண க்ஷத்திரிய வைசியர்களுடைய அந்நம் புசிக்கத்

தகாதென்றும், கிருகஸ்தன் பிரமசாரி இவர்களுடைய அந்நம் புசிக்கத்தக்கதேயன்றி ஸந்நியாசி வாநப்பிரஸ்தன் இவர்களுடைய அந்நம் புசிக்கத்தகாதென்றும், சூத்திராந்நத்தை ஆறுமாஸம் புசித்தவன் பிழைத்திருக்கையில்தானே சூத்திரத் தன்மையை அடைந்து மரித்தபின் நாயாகப் பிறக்கிறனென்றும், மநு யாக்கியவல்கிய சங்காதிகளான ரிஷிகள் சொன்னார்கள். யக்கியத்தில் ஓமஞ்செய்து மிகுந்ததும், விதிப்படி சிராத்தத்தில் நிமந்திரிதனுயிருக்கையில் பரிமாறப்பட்டதும், பிராண பயத்தில் அதாவது பசியினால் அல்லது வியாதியினால் வருந்துகையில் உபயோகித்துக்கொள்ளவேண்டியதுமான மாம்சம் புசிக்கத்தக்கதாமென்று மநு சொன்னார்.

நிமந்திரணம் சொல்லப்பட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டிய எண்ணெய் முதலியவைகளின் பிரகரணம். சிராத்த கர்த்தாவானவன் நிமந்திரித பிராம்மணர்களுக்குத் தந்த காஷ்டத்தையும் எண்ணெய், அரைப்பு முதலிய சகலமான ஸ்நாந ஸாதநங்களையும் கொடுத்துஉபசரிக்கக்கடவன் என்று காத்தியாயநரும், தைலாப்பியங்கத்திற்கு விலக்கானநாட்களில் பகலில்ஆறுமுகூர்த்தங்கள் கடந்தபின் நெல்லிக்காய்தேய்த்து ஸ்நாநம் செய்விக்கவேண்டுமென்று மார்க்கண்டேயரும் சொன்னார்கள். அமாவாஸையில் நெல்லிக்காய் ஸ்நாநமும் செய்யத்தக்க தல்லவென்று வேறுஸ்மிருதியில் சொல்லப்பட்டது. விசுவேதேவர் முதலான மற்றவருக்கும் எண்ணெய் அரைப்பு முதலிய ஸ்நாநோபகரணங்களைத் தனித்தனியே தாம்பிர பாத்திரங்களில் கொடுக்கவேண்டுமென்று தேவலர்சொன்னார்.

சிராத்தம்செய்யுமிடத்தில் ஸ்தாபிக்கத்தக்க வஸ்துக்கள். வேருக்குச்சமீபத்தில் ஒரேதரமாக அறுக்கப்பட்ட தர்ப்பங்கள், யவதாநியம், எள், பரிசுத்தமான ஆஸநங்கள், பரிசுத்தங்களான வெண்கலம், தாம்பிரம், வெள்ளி, ஸ்வர்ணம் முதலிய பாத்திரங்கள், சமித்துக்கள், தேன், புஷ்பங்கள், தூபம், சந்தநம், வெண்பட்டு, ஸூத்திரம், மேக்ஷணம், காட்டில் விளைகிற ஜர்த்திலமென்னும் கறுத்த எள், அதில்லாதபக்ஷத்தில் நாட்டில் விளைகிற எள், ஆகிய இவைகள் ஸ்தாபிக்கத் தக்கவைகளாமென்று ரிஷிகள் சொன்னார்கள். நிமந்திரிதர்களுக்கு ஆஸநத்திற்காக நேபாளதேசத்திய ஆட்டுமயிர்களால் நெய்விக்கப்பட்ட குதபமென்னும் கம்பளம் போடவேண்டுமென்றும் மத்தியாந்நகாலமும், கட்கபாத்திரமும், நேபாளகம்பளமும், எள்ளும், வெள்ளியும், தர்ப்பங்களும், பசுக்களும், பெண்

ணினுடைய பிள்ளையும் ஆக இந்த எட்டும் குதபமென்னப்படுமென்றும். கு என்றால் குத்ஸிதமான பாபமென்றும், அதைத் தபிக்கச்செய்வதால் சிராத்தத்தில் உபயோகிக்கப்பட்ட கீழ்ச்சொன்ன எட்டும் குதபமென்னப்படுமென்றும் மநுசொன்னார். வெண்கலம் முதலிய பாத்திரங்கள் போஜநத்திற்காகவாவது அர்க்கியம் கொடுப்பதற்காகவாவது உபயோகிக்கத்தக்கவைகளாமென்று அறிக. போஜனத்திற்குப் பலாசமரத்தின் இலைகளால் செய்யப்பட்ட பாத்திரமே சிறந்ததென்று அத்திரிசொன்னார். அர்க்கியங் கொடுப்பதற்கு வேறு பாத்திரங்கள் நிஷேதிக்கப்படவில்லை. மண்பாத்திரம் கூடாது. வெண்ணிற முடையவைகளும், தாமரை,கருநெய்தல் ஆகியஇவைகளும் மற்றும் பரிமளமிருந்த அழகியமலர்களும், மல்லிகை ஜாதிகளும், ஜலத்தில் உண்டானசகலவித புஷ்பங்களும், சண்பகமலரும் அர்க்கியத்தில் சேர்க்கத்தக்கவைகளாமென்று பிரமாண்ட புராணத்தில் சொல்லப்பட்டது.

சிராத்தத்தில் விலக்கிய புஷ்பங்கள் இவை என்பது. வில்வபுஷ்பம், எருக்கம்பூ. ஊமத்தம்பூ, மந்தாரப்பூ, ஆடாதோடைப்பூ இவைகள் சிராத்தத்திற்குத் தகாதவைகளென்று கிரதுவும், உக்கிரமானகந்தமுடையதும் கந்தமேயில்லாததும் நாற்சந்தியிலிருக்கும் மரங்களில் உண்டானதும் முட்செடியிலுண்டாய்ச் சிவந்த நிறமுடையதும் ஆகிய இந்தப் புஷ்பங்கள் தகாதவைகளென்றும் முட்செடியிலுண்டானபோதிலும் வெண்ணிறமுடைய புஷ்பங்கள் சிறந்தனவாமென்றும் விஷ்ணுவும் சொன்னார்கள்.

குங்கிலியம், சாம்பிராணி, சந்தநக்கட்டை, அகருவென்னும் அகிற்கட்டை, பச்சைக் கர்ப்பூரத்துடன் கூடியது, லவங்கப்பட்டை இவைகள் சிராத்தத்திற்குரிய தூபங்களென்று விஷ்ணு தர்மோத்தரம் சொல்லுகிறது. கஸ்தூரி முதலிய ஸம்பாரங்களுடன் கூடிய சந்தநம் பூச்சுக்காகுமென்று விஷ்ணுவும், நெய் அல்லது எண்ணெய் பரிமள தைலம் இவைகளோடுகூடிய தீபம் சிராத்தத்திற்குத் தகுந்தாமன்றி மிருகத்தின் கொழுப்பெண்ணெயோடு கூடிய தீபம் தகாதென்று மரீசியும், பிராம்மணர்களுக்குக்கொடுப்பதற்காக வெண்பட்டுவெஸ்திரம் கிடைத்தபக்ஷத்தில் வெண்பட்டுநூல் அங்கு ஸ்தாபிக்கத்தக்க தில்லை என்றும், சால்வை, பட்டு, வெண்பட்டு, பருத்தி நூலினால் செய்யப்பட்ட புதிய தலைப்புள்ள வஸ்திரம்இவைகளில் ஏதாவதொன்றைச் சக்திக்கேடாகக் கொடுக்கவேண்டுமென்றும், இப்படிக் கொடுத்தவன் தன்னிஷ்டங்களெல்லாவற்றையும் அடைகி

ருனென்றும் கீழ்ச்சொன்ன உபயோகத்திற்காக ஸகலத்தையும் சிராத்தபூமியில் ஸ்தாபித்துத் தான் ஸ்நாநம் செய்து சுத்தவஸ்திரத்தை அணிந்தவனாய் அப்பியங்கஸ்நாநம் செய்துவந்த பிராம்மணர்களைக்கண்டெழுந்திருந்து கைகளைக் கூப்பிக்கொண்டு கிரமப்படி அவர்களுக்குப்பாத்தியாசமநீயங்களைக்கொடுத்து நல்வரவை விசாரித்துக் கிருகத்தில், அதாவது வீட்டுவாசலுக்கெதிரில் சாணியினால் மெழுகியிருக்கும் பூமியில் இரண்டிடத்தைக் கோமூத்திரத்தினாலும் சாணியினாலும் சுத்திசெய்து ஒன்றை வடக்கில் விசுவே தேவர்களுக்காகவும், ஒன்றைத் தெற்கில் பிதிர்க்களுக்காகவும் உபயோகிக்க வேண்டுமென்றும் தேவதைகள் விஷயத்தில் வடக்குமுகமாகவும் உபவீதியாகவும் பிதிர்க்கள் விஷயத்தில் தெற்குமுகமாகவும் பிராசீநாவீதியாகவும் பவித்திர பாணியாகவே செய்யவேண்டுமென்றும், மரீசி, யமமுனிவர், மத்ஸியர், சம்பு, காத்தியாயநர், சாதாதபர் ஆகிய இவர்கள் சொன்னார்கள்.

பாதப்பிரக்ஷாளநம் செய்யும்வகை. தேவஸ்தாநத்தை முன்னிட்டுப் பிராம்மணர்களுக்குஅர்க்கியபாத்தியங்களைக் கொடுக்கவேண்டுமென்றும் பிதிர்க்களுக்கு அவர்களுடைய நாமகோத்திரங்களைச் சொல்லியே செய்யவேண்டுமென்றும், மத்ஸியபுராணம் சொல்லுகிறது. பின்பு தான் ஆசமநம்செய்து பவித்திரபாணியாய் அப்படியே ஆசமநம் செய்திருக்கிற பிராம்மணர்களைத் தர்ப்பாஸநத்தில் உட்காருவிக்க வேண்டுமென்று சுமந்து சொன்னார்.

உட்காரவைக்கவேண்டிய பிரகரணம். தேவஸ்தாநத்திலிரண்டு பிராம்மணர்களைக் கிழக்குமுகமாகவும் பிதிர்ஸ்தாநத்தில் மூன்று பிராம்மணர்களை வடக்குமுகமாகவும் உட்காருவிக்க வேண்டுமென்று ஆதித்தியபுராணம் சொல்லுகிறது.

உட்கார்ந்தபிராம்மணர்களின் நியமம். பிராம்மணர்களனைவரும் சிராத்தத்தில் புசிக்க உட்கார்ந்தபின் பவித்திரபாணிகளாய் மௌந விரதத்துடன் ஒருவர்மேலொருவர் படாமல் பிரமத்தைப்பற்றிய வாதத்தைச் செய்வதில் மௌநமில்லாதவர்களா யிருக்கவேண்டுமென்று மரீசியும், பிராம்மணர்கள் புசிக்க உட்கார்ந்தபின் யதி அல்லது பிரமசாரிவந்தால் அப்போது அவர்களையும் பிரார்த்தித்துச் சிராத்தத்தில் புசிப்பிக்கவேண்டுமென்று யமமுனிவரும் சொன்னார்கள். சிராத்தம் செய்கிறவிடத்தில் கயாக்ஷேத்திரத்தையும் ஸ்ரீ கதாதரனையும் தியானித்து நமஸ்கரித்துச் சிராத்தத்தைத் தொடங்கி விதிப்படி செய்யவேண்டுமென்று புராணத்தில் சொல்லப்பட்டது.

விசுவேதேவர்களின் விபாகம். க்ரது,தக்ஷர், வஸு,ஸத்தியர், காலர்,காமர், துரி, விலோசநர், புரூரவஸ், ஆர்த்ரவஸ் ஆகிய இந்தப் பதின்மர் விசுவேதேவர்களென்று பிரஹஸ்பதியும், இஷ்டிசிராத்தத்தில் க்ரதுதக்ஷர்களையும், காம்மிய சிராத்தத்தில், துரி விலோசநர்களையும்,பார்வணசிராத்தத்தில் புரூரவார்த்ரவஸுக்களையும் நைமிகசிராத்தத்தில் காலகாமர்களையும் சொல்லவேண்டுமென்று சங்கரும், நிஷேககாலத்திலும் ஸௌமிய விரதத்திலும் ஸீமந்தத்திலும் பும்ஸவநத்திலும் விருத்திச் சிராத்தமான நாந்தியைப்போல் கர்மாங்கமாகச் செய்யப்படுகிற சிராத்தம் இஷ்டி சிராத்தமாமென்று பாரஸ்கரரும் சொன்னார்கள்.

அக்நியில் ஹோமம்செய்வது. கந்தபுஷ்பாதிகளால் பிராம்மணர்களை அலங்கரித்தபின் நெய்யால் நனைக்கப்பட்ட அந்நத்தைக்கையில் எடுத்துக்கொண்டுஅக்நியில் ஓமம்செய்கிறேனென்று பிராம்மணர்களின் அநுமதியைப்பெற்று விதிப்படி ஹோமத்தைச்செய்து அதில் மிகுந்ததைப் பிதிர்ஸ்தாநத்திய் பிராம்மணர்களுடைய போஜநபாத்திரத்தில் விதிப்படியே பரிமாற வேண்டுமென்றும் நெய்யால் நனைக்கப்பட்ட அந்நத்தை என்றதினால் சாகாதிகள் ஹோமத்திற்கு வேண்டுவதில்லைஎன்றும் யாக்கியவல்கியரும் காத்தியாயநரும் சொன்னார்கள்.

அந்நாதிகளைப்பரிமாறுவது. அந்தப் பூர்ணமான பாத்திரத்தை இரண்டுகைகளாலும் பிடித்துக்கொண்டு பிராம்மணர்களருகில் பிதிர்க்களைத் தியாநித்துக்கொண்டுசிராத்த கர்த்தாவானவன் தானேபரிமாறக் கடவனென்று மநுஸ்மிருதியும் அநந்தமானபலனை இச்சித்தால் கர்த்தாவே பரிமாறக்கடவனென்று வாயுபுராணமும் சொல்லுகின்றன. கரண்டிமுதலிய ஸாதநங்களைக்கொண்டு இரண்டுகைகளாலும் பரிமாறவேண்டுமென்றும் கைகளால் எடுத்துப் பரிமாறினால் பரிமாறினவனுக்கும் பலனில்லை யென்றும் புசித்தவனும் பாபத்தை அடைகிறானென்றும் விருத்த சாதாதபர்கள் சொன்னார்கள். பவித்திரம் அல்லது வெறும் தர்ப்பங்கள் இவைகளில் ஒன்றைத்தரியாத கையினாலாவது இரும்பு பாத்திரங்களாலாவது சிராத்தத்தில் பரிமாறத்தகாதென்று ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் சொல்லப்பட்டது. தங்கம், வெள்ளி, கட்கமிருகத்தின் கொம்பினால் செய்யப்பட்டதும் காகோதும்பரமென்னும் மரத்தினால் செய்யப்பட்டதுமான கரண்டி,இந்தப் பாத்திரங்களால்பரிமாறுவது அக்ஷயபலனைத் தருமென்று விஷ்ணுவும்,பக்ஷியம்,சாகம்,மூலம்,பலம் முதலியவைகளான தான் சம்பாதித்த சகலத்தையும் விசுவேதேவஸ்தாநம் முதலாகப் பரிமாறி அவைகளை

அபிமந்திரித்துப் பிதிர்க்களின் சம்பந்தம் கோத்திரம் பேர் முதலிய வைகளைச் சொல்லி விதிப்படி தான் தத்தம் செய்யக்கடவனென்றும், பின்பு மந்திரங்களையும் பிதிர் ஸூக்தங்களையும் யக்ஞோபவீதியாக ஜபிக்கக்கடவனென்றும், சௌநகர் பிரசேதர் அத்திரி முதலிய முனிவர்களும் சொன்னார்கள்.

சிராத்தத்தில் நிமந்திரணம் புசிக்கையில் பதார்த்தங்களை யாசிக்கும்வகை. நிமந்திரணம் புசிக்கிற பிராம்மணர்கள் அபேக்ஷிக்கிற பதார்த்தத்தைப் பரிமாறாத மூடனான கர்த்தா சிராத்தபலனையடைகிறதில்லை என்றும் புசிப்பவன் தனக்குவேண்டிய பதார்த்தங்களை அபேக்ஷிக்காவிட்டால் பிதிர்ஹத்தியைச் செய்தவனாகிறானென்றும் விருத்த சாதாதபர்கள்சொன்னார்கள். சிராத்தத்தில் பதார்த்தங்களை யாசிப்பவனும் யாசிக்கப்பட்டுப் பரிமாறினவனும் தம் தம் பிதிர்க்களுக்குத் தோஷத்தைச் செய்கிறார்களாகையால் யாசிக்கவும் கொடுக்கவும் தகாதென்கிற வாயுபுராணவசநம் சிராத்தத்திற்காக உத்தேசிக்கப்படாத வேறு பொருள்களை யாசிப்பதையும் கொடுப்பதையும் பற்றிய தென்றறிக. சிராத்தபோஜநம் செய்கிறவர்கள் தங்களுக்கு அதிகமான அந்நபாநாதிகளை முகத்தினால் நிஷேதிக்காமல் கையினால் நிஷேதிக்க வேண்டுமென்றும், இதுபோல் முகத்தினால் யாசிப்பதும் மௌநவிரதத்திற்கு விரோதமாகையால் கையினால் தொட்டுக்காட்டி அபேக்ஷிக்கவேண்டுமென்றும், அபேக்ஷித்தவஸ்துவைக் கொடுக்கிறேன் என்று கர்த்தாசொல்லிப் பரிமாறக் கூடாதென்றும், கொடுக்கிறேனென்று கர்த்தா சொன்னானாகில் பிதிர்க்கள் பின்பு புசிப்பதில்லை யென்றும் யமமுநிவர் சொன்னார்.

போஜநகாலத்தில் சிராத்த கர்த்தாவானவன் அநுஷ்டிக்க வேண்டிய நியமங்கள். கண்ணீர்விடுதல், அசுத்தமான வார்த்தையைச் சொல்லுதல், புசிப்பவர்களைப் பார்த்தல், துவேஷித்தல் ஆகிய இவைகளைச் செய்யாமலும், ஏழ்மையைக் காட்டாமலும் கோபித்துக் கொள்ளாமலும், ஆதரவில்லாதவனாயிராமலும் நிலைத்த மன முடையவனாய்ப் பிதிர்க்களைப் புசிப்பிக்க வேண்டுமென்று பிரமாண்டபுராணத்தில் கர்த்தாவின்நியமங்கள் சொல்லப்பட்டன. கோபமில்லாதவர்களாய் ரஸங்களை நன்றாக அறிந்து திருப்தியுண்டாகும்வரையில் புசிக்கவேண்டுமென்று ஸுமந்துவும், ஒருகாலின்மேல் மற்றொருகாலை வைத்துக்கொண்டு புசித்தால் பிதிர்க்கள் ஆசையற்று ஒழிகிறார்களென்று போதாயநரும், சிராத்த போஜநஸமயத்தில் புசிக்கிறவர்களைக் கர்த்தாவானவன் பதார்த்தங்களின் குண

ங்களைக் கேட்க லாகாதென்றும் கேட்டாலும் புசிப்பவர்கள் சொல்லத் தகாதென்றும் மநுவும், புசிக்கிறவர்கள் ஒருவனை ஒருவர் ஸ்பரிசித்தால் அந்த அந்நத்தைவிடாமல் புசித்துப்பின்பு எண்ணூறு தரம் காயத்திரியை ஜபிக்கவேண்டுமென்றும், ஹூங்காரம் செய்வதினால் பேசினாலும் கையினாலாவது வஸ்துக்களின் குணங்களைக்குறித்தாலும், தரையினின்று பாத்திரத்தைத் தூக்கினாலும், கையினால் தொடாமல் இலையை விட்டாலும், ஆஸநத்தின் மேலிரண்டு பாதங்களையும் வைத்து உட்கார்ந்து புசித்தாலும், வஸ்திரயக்ஞோபவீதமில்லாமல் புசித்தாலும் முழந்தாள்களின் நடுவில் கையில்லாமல்போனாலும், பெருவிரலில்லாமல்மற்றநான்கு விரல்களால் அந்நத்தைஎடுத்துப் புசித்தாலும், புசிக்கையில் சப்தம் செய்தாலும், குடித்து மிகுந்தவைகளை மறுபடி குடித்தாலும், கடித்த மிகுதியைப் பின்பு கடித்தாலும், வாயினால் ஊதிப்புசித்தாலும், காறிஉமிழ்ந்தாலும், அந்தச்சிராத்தத்தைக் கெடுத்துத் தாங்களும் நரகத்தை அடைகிறார்களென்று சங்கரும் சொன்னார்கள். தர்ப்பங்கள் பரப்பிய பூமியில் விகிரத்தைக்கொடுக்கவேண்டுமென்று மநுவும், விகிரத்தைக் கொடுத்தவுடனே கர்த்தா ஆசமநம் செய்யாதபக்ஷத்தில் பிதிர்க்கள் ஆறு மாஸகாலம் எச்சிலைப் புசிக்கிறார்களென்று மரீசியும் சொன்னார்கள்.

பிண்டங்கொடுத்தலின்கிரமம். நிமந்திரிதர்கள் போஜனம் செய்துபோன பின் கர்த்தாவானவன் அக்நியில் ஓமம்செய்த அந்நத்தில் மிகுந்த அந்நத்துடன் மற்ற அந்நத்தைக்கலந்து அக்நி ஸந்நிதாநத்தில் பிண்டதாநத்தைச்செய்யக்கடவனென்று லோகாக்ஷிசொன்னார்.

மூன்றுபிண்டங்களில் நடுவிலிருக்கும் பிண்டத்தைக் கொடுக்கும் வகை. பிள்ளையைக் கோரினவன் நடுவிலுள்ள பிண்டத்தை விதித்த மந்திரத்தைச்சொல்லித் தன்பத்நிக்குக் கொடுக்கக்கடவனென்று வாயுபுராணத்தில் சொல்லப்பட்டது.

தன் பத்நி கர்ப்பிணியாயும் ரோகிஷ்டையாயும் தேசாந்தரத்திலுள்ளவளாயும் இருந்தால் அந்த நடுப் பிண்டத்தைக் கிழ எருதுக்காவது பசுவுக்காவது கொடுக்கவேண்டு மென்று மத்ஸியர் சொன்னார். பத்நி தேசாந்தரம் அல்லது லோகாந்தரத்தில் இருந்தாலும் வீட்டிலிருந்தும் மூர்ச்சையாயிருந்தாலும் அப்போது நடுப்பிண்டத்தை ஜலத்தில் நின்று தென்முகமாகப் பிதிர்ஸ்தாநமான ஆகாசத்தில் விட்டெறிய வேண்டுமென்று ஆபஸ்தம்பர் சொன்னார்.

எச்சிலிலையை எடுத்துச் சுத்திசெய்யத்தக்கவிதி. பிராம்மணர்கள் தாம்பூல தக்ஷிணைகளைக் கிரகித்துக்கொண்டு வெளியே சென்றபிறகு எச்சில் ஸ்தலத்தைச் சுத்திசெய்யவேண்டுமென்றும், சிராத்தத்தில் அஸ்தமன காலம்வரையில் புசித்த எச்சில் ஸ்தலத்தைச் சுத்திசெய்ய லாகாதென்றும்வியாஸர் அருளிச்செய்தது கர்த்தாவுக்கு வேறு கிருகம் இருக்கும் பக்ஷத்தில் என்றறிக. சிராத்தத்தில் அக்நியில் ஓமம் செய்தபின்பாவது விகிரதாநம் செய்தபின்பாவது வைசுவதேவத்தைச் செய்தால் வேருகப்பசநம் செய்த அந்நத்தினுல் செய்ய வேண்டுமேயன்றிப் பிதிர் சேஷத்தால் செய்வது தோஷமாகுமென்றும், பிராம்மண போஜநத்திற்குள் செய்வது உத்தமமென்றும் வேறு ஸ்மிருதியில் சொல்லப்பட்டது. வைசுவேதேவ சேஷம் பிதிர்சேஷம் ஆகிய இரண்டுவித அந்நத்தில் பிதிர்சேஷமாகிய அந்நத்தையே கர்த்தா புசிக்கவேண்டுமென்றும் பிதிர்சேஷமில்லாத பக்ஷத்தில் வேறுஅந்நத்தையாவது புசிக்க வேண்டுமென்றும் புசிக்காதபக்ஷத்தில் தோஷமுண்டென்றும் உபவாஸதிநத்தில் பிதிர்சேஷத்தை ஆக்கிராணம் செய்ய வேண்டுமென்றும் யாக்கியவல்கியர் தேவலர் இவர்கள் சொன்னுர்கள்.

புசித்தபின்கர்த்தாவும் புசித்தவர்களும் அநுஷ்டிக்கவேண்டிய நியமங்கள். சிராத்தம் செய்தவனும் சிராத்தத்தில் புசித்தவனும் அன்றைய ராத்திரிமுழுதும் ஸ்திரீஸங்க மில்லாதவர்களா யிருக்கக் கடவர்களென்றும் இந்தப்பிரமசரிய விரதத்தைத்தவறிஞல் நரகத்தை அடைகிருர்களென்றும் பிரஹஸ்பதி சொன்னுர். சிராத்தம் செய்தவன் புசித்தவன் ஆகிய இருவரும் திரும்பவும் புசிப்பது வழிநடப்பது ஸ்திரீசங்கமம் முதலியவைகளைச் செய்யக்கூடாதென்று மத்ஸிய புராணத்தில் சொல்லப்பட்டது.

ஸங்கல்ப சிராத்தவிதி. பிதிர் யக்கியமான சிராத்தத்தை அங்கங்களோடு அநுஷ்டிக்கச் சக்தியற்றவன் அர்க்கியம் முதலியவைகளில்லாத ஸங்கல்ப சிராத்தத்தைச்செய்யக்கடவனென்று வேறு ஸ்மிருதியில் சொல்லப்பட்டது.

பிரத்தியாப்திகவிதி. பிள்ளையானவன் ஸபிண்டீகரணம் செய்த பின் பிதிர்கணத்தைச் சேர்ந்திருக்கிற தன் பிதாவுக்கு அவன் மரித்த திதியில் பிரதிவருஷமும் கீழேவிதித்த பார்வணசிராத்தத்தைத் தப்பாமல் விதிப்படி செய்யக் கடவனென்றும் இது அநாதி

யான விதி என்றும், ஜாதுகர்ணியரும், ஸ்பிண்டீகரணத்திற்குப் பின்பு வருஷந்தோறும் மரித்த திதியில் பிள்ளைகள் மாதாபிதாக்களுக்குத் தனித்தனியே ஏகோத்திஷ்ட சிராத்தத்தைச் செய்யக் கடவர்களென்று யமமுனிவரும், மரித்த திதியில் ஏகோத்திஷ்டத்தைச் செய்யாமல் பார்வணசிராத்தத்தைச் செய்தால் அந்தச் சிராத்தம் செய்யப்படாத தாகுமென்றும், அந்தச் சிராத்த கர்த்தா பிதிர்க்களைக் கொன்றவனாகிறானென்றும் வியாஸபகவானும் அருளிச்செய்தார்கள். இதனால் மரித்த திதியில் பார்வண விதியினாலாவது ஏகோத்திஷ்ட விதியினாலாவது சிராத்தம் செய்யத்தக்கதென்று விகல்பித்துச்சொல்லப்பட்டது. இந்தவிஷயத்தில் பெரியோர்களுடைய அநுஷ்டாநத்தை அநுசரித்துச் செய்யவேண்டும். அமாவாஸை, கிருஷ்ணபக்ஷம், இவைகளில் மரித்தவனுக்குப் பார்வணசிராத்தம் செய்யத்தக்கதென்றும் ஏகோத்திஷ்ட சிராத்தம் செய்யத் தகாதென்றும் சங்கர் சொன்னார். யதியான பிதாவின் விஷயத்தில் பார்வண சிராத்தமே செய்யத்தக்கதென்று பிரசேதாவும், மரணமடைந்த திதியில் மாதா பிதாக்களைக்குறித்து ஸ்பிண்டீகரணத்திற்குப்பின் பிரதிவருஷமும் பார்வணசிராத்தமே செய்யத் தக்கதென்று பைடீநசியும் சொன்னார்கள்.

ஏகோத்திஷ்டவிதி. ஏகோத்திஷ்டத்தில் விசுவேதேவரில்லை, ஒரு அர்க்கியமும் ஒற்றைப் பவித்திரமும் விதிக்கப்பட்டன, ஆவாஹநம் அக்நிஹோமம் இவைகளில்லை, பிராசீநாவீதியாகவும் அப்பிரதக்ஷிணமாகவும் அநுஷ்டிக்கத் தக்கதாகும், என்று யாக்கிய வல்கியர்சொன்னார். அந்த ஏகோத்திஷ்டம் நவமென்றும் நவமிசிரமென்றும் புராணமென்றும் மூன்றுவிதமாம்.

நவசிராத்தம் முதலிய. ஒன்று, மூன்று, ஐந்து, எழு, ஒன்பது, பதினொன்று ஆகிய இந்த நாட்களில் செய்யும் ஆறு சிராத்தங்களும் நவசிராத்தங்களென்று அங்கிரா சொன்னார். சிலர் நவசிராத்தம் ஐந்தென்று சொன்னார்கள். க்ஷத்திரியனுக்கு எழும், வைசியனுக்கு ஒன்பதும், பிராம்மணர்களுக்கும் சூத்திரர்களுக்கும் ஆறுமாக நவசிராத்தம் மஹரிஷிகளால் விதிக்கப்பட்டதென்றறிக. இந்த ஆறு சிராத்தங்களுக்கு மேற்பட்ட மாஸிகசிராத்தம் நவமிசிரம் என்னப்படுமென்றும், பிரத்தியாப்திகம் முதலிய சிராத்தம் புராணம் என்னப்படுமென்றும், நவசிராத்தபோஜநத்தில் சாந்திராயணத்தையும், மாஸிக சிராத்த போஜநத்தில் பிராஜாபத்திய கிருச்சிரத்தையும் பிரத்தியா

ப்திக போஜநத்தில் ஒருபகல் உபவாஸத்தையும் செய்யவேண்டு மென்றும் ஹாரீதர் சொன்னார். பன்னிரண்டு மாஸிகங்கள், ஊந மாஸிகம், ஆறுவதுமாஸத்திய ஊநம், ஊநாப்திகம், த்ரைபக்ஷிகம், ஆகச் சிராத்தங்கள் பதினாறென்று ஜாதுகர்ணியர் சொன்னார்.

ஊநமாஸிகம் முதலியவைகள் செய்யவேண்டுங்காலம். ஒரு வருஷம்வரையில் மாஸந்தோறும் வருகிற மரணமடைந்த திதியில் பன்னிரண்டு மாஸிகங்களையும், ஸபிண்டீகரணத்திற்குப் பின் வருஷந்தோறும் வருகிற மரித்த திதியில் பிரத்தியாப்திக சிராத்தத்தையும், மரித்த பதினோராவது திநத்தில் ஆதிமாஸிகத்தையும், ஆறுவது மாஸத்திய ஊநத்தை ஆறுவதுமாஸத்திய நடுவிலும் மூன்றுவது பக்ஷத்தில் த்ரைபக்ஷிகத்தையும், வருஷாந்தத்தில் பன்னிரண்டு நாட்களில் ஏதாவதொருதிநத்தில் ஊநாப்திகத்தையும் செய்யவேண்டுமென்று காலவர்சொன்னார். நந்தை என்னும் பிரதமை, ஷஷ்டி, ஏகாதசி, சதுர்த்தசி, ஸிநீவாலி என்னுங் காலையில் சதுர்த்தசி அல்பமிருந்து சந்திர தர்சனத்தோடு கூடின அமாவாஸை, த்விதீயை, ஸப்தமி, துவாதசி, ஞாயிறு, செவ்வாய், வெள்ளி, சனி, கிருத்திகை, புநர்வஸு, உத்திரம், விசாகம், உத்திராடம், பூராடம், முக்கால் நக்ஷத்திரங்கள், மிருகசிரம், சித்திரை, அவிட்டம் ஆகிய அர்த்தநக்ஷத்திரங்கள் ஆகிய கீழ்ச்சொன்ன திதி வார நக்ஷத்திரங்களில் இரண்டு கூடியநாள் த்விபுஷ்கரமென்றும் மூன்று கூடிய நாள் த்ரிபுஷ்கரமென்றும் இந்த ஊநமாஸிகங்களை த்விபுஷ்கர த்ரிபுஷ்கரங்களல்லாத நாட்களில் செய்யவேண்டுமென்றும் அப்படி செய்யாதபக்ஷத்தில் அந்தச் சிராத்த கர்த்தாவுக்குப் புத்திர தநங்கள் க்ஷயிக்குமென்றும் கார்க்கியர் மரீசி இவர்கள் சொன்னார்கள்.

ஸபிண்டீகரணம். ஒரு வருஷம் நிறைந்தபின்பாவது பன்னிரண்டாவது நாளிலாவது ஸபிண்டீகரணம் செய்யத்தக்கதாமென்று அத்திரியும், பதினோராவது பன்னிரண்டாவது நாட்கள், மூன்றுவதுபக்ஷம், மூன்று ஆறு பதினொன்று ஆகிய மாஸங்கள், வருஷாந்தம், சுபம் வந்தாலதற்கு முன்காலம் ஆக எட்டு காலங்கள் ஸபிண்டீகரணத்திற்குத் தக்கவைகளென்று போதாயநரும் சொன்னார்கள். பதினோராவதுநாளில் ஸபிண்டீகரணத்தைப் போதாயநர் விதித்ததென்னவெனில் கர்த்தாவானபிள்ளை ஆஹிதாக்நியாயிருந்து மரணதிநம் தொடங்கிப் பன்னிரண்டாவது நாளில் அமாவாஸை சம்பவித்தால் அமாவாஸையில் பிண்ட பித்ர்யக்ஞம் ஆஹிதாக்நி அவ

சியமாய்ச் செய்யவேண்டுமாகையால் அதுவும் ஸபிண்டீகரணத்தைச் செய்தே செய்யவேண்டியதாய் அவனுக்கு மாத்திரமாக அந்தப் பதினோராவது நாளில் ஸபிண்டீகரணம் செய்ய விதித்ததென்றறிக. அமாவாஸை வராதபக்ஷத்தில் ஆஹிதாக்நியான கர்த்தாவுக்குப் பன்னிரண்டாநாளில் தானே ஸபிண்டீகரணம் செய்ய அதிகாரமென்று பவிஷியத்புராணம் சொல்லுகிறது. குலதர்மங்களையும் சரீரதின் நிலையையும் புருஷனுடைய ஆயுள் நிலையையும் ஆலோசித்து ஸபிண்டீகரணத்தைப் பன்னிரண்டாநாளில் செய்வதே நல்லதென்று யாக்கிய வல்கியர்சொன்னார். இந்த விதி பிரம க்ஷத்திரிய வைசியர்கள் விஷயமென்றறிக. சூத்திரனுக்கு மந்திரமில்லாமல் பன்னிரண்டாவது நாளே ஸபிண்டீகரணத்திற்குரிய தாகுமென்று விஷ்ணு சொன்னார்.

அநுமரணம் செய்தவளின் ஸாபிண்டியவிதி. பதியை அநுமரணம் செய்த ஸ்திரீக்குப் பதியோடு ஸாபிண்டியம் செய்யத்தக்கதென்று சாதாதபர்சொன்னார்.

மாதிர் ஸாபிண்டியத்தில் கோத்திரநியமம். பிராம்மம் முதலிய விதிகளால் விவாகம் செய்யப்பட்டு மரித்தவளுக்குப் பர்த்தாவின் கோத்திரத்தினாலே பிண்டோதக தாநங்களைச் செய்யவேண்டுமென்று மார்க்கண்டேயரும், ஆஸுரம் முதலிய விவாகங்களானால் அவளுடைய பிதிர் கோத்திரத்தாலும், புத்திரிகாபுத்திரன் தன் மாதாவுக்கு மாதாமஹகோத்திரத்தாலும் ஸபிண்டீகரணத்தைச் செய்யவேண்டுமென்று லோகாக்ஷியும், பிள்ளையில்லாதவளாக மரித்த பத்திநிக்குப் பதி செய்கிற ஸாபிண்டியத்தை அவளுடைய மாமியாரோடு சேர்க்கவேண்டியதென்று பைடீநஸியும், பந்துக்களில்லாத தன் பதி மரித்தால் பத்திநியானவள் அமந்திரகமாக ஸபிண்டீகரணத்தையும் பின்பு பார்வணத்தையும் செய்யக்கடவளென்று ஸுமந்துவும் சொன்னார்கள்.

யதிகளுக்கு ஸாபிண்டியமில்லை என்பது. த்ரிதண்ட தாரணத்தினால் பிரேதத்தன்மை யில்லாமையால் ஸந்நியாசிகளுக்கு ஏகோத்திஷ்டமும் ஸபிண்டீகரணமும் புத்திராதிகள் செய்யத்தக்கதில்லையென்றும் பதினோராவது நாளில் பார்வணம் செய்யத்தக்கதென்றும் உசநா சொன்னார்.

விருத்தி சிராத்தப் பிரகரணம். விருத்தி சிராத்தத்தில் நாந்ீமுகர்களான பிதிர்க்களை உத்தேசித்து விதிப்படி தயிர் இலந்தைப்பழம்

அக்ஷதை இவைகள் கலந்த பிண்டங்களைக்கொடுக்க வேண்டுமென்றும் இதுபார்வண சிராத்தம்போல் செய்யத்தக்கதாமென்றும் யாக்ஞியவல்கியரும், இந்தச் சிராத்தத்தில் பிதிர்க்கள் நாந்தீமுகர்களென்றும், பிரதக்ஷிணமாக ஸகல உபசாரங்களையும் செய்யவேண்டுமென்றும், பிதிர்மந்திரங்கள் கூடாவென்றும், ருஜுவான தர்ப்பங்கள் கூடுமேயன்றிப் புக்நமாக்கப் பட்டவைக ளாகாவென்றும், திலமில்லாமல் யவங்களால் அர்ச்சிக்கவேண்டுமென்றும், தயிர் இலந்தை அக்ஷதை இவைகள் கலந்தபிண்டம் கொடுக்கத்தக்கதென்றும், பார்வண சிராத்தம்போலென்றதினுல் ஆவாஹநம் மூன்று புருஷர்களை உத்தேசித்துச் செய்தலுண்டென்றும் கண்டுகொள்க.

நாந்தீ சிராத்த பிரகரணம். நாமகரணம், அந்நப்பிராசநம், சௌளம், விவாகத்திற்கு முன் செய்யும் கோதாநமென்னு மொருவித விரதம், சௌம்மிய விரதம், உபநயநம், பும்ஸவநம், ஸ்நாநமென்னும் கிரியை, கர்ப்பாதாநம், விவாகம், நூதன கிருகப்பிரவேசம், ஜாதகர்மம், பட்டாபிஷேகம், ஸ்திரீ ருதுவானகாலம், ஒரு ஆச்சிரமத்தைக் கிரகிக்குங் காலம் ஆகிய இந்தக் காலங்களில் நாந்திசிராத்தம் செய்யத்தக்கதென்று லோகாக்ஷி கார்ஷ்ணாஜிநி விருத்தகார்க்கியர் ஆகிய இவர்கள் சொன்னுர்கள்.

கீழ்ச்சொல்லிவந்த சிராத்தங்களுக்குக் கர்த்தா இன்னுரென்பது. ஒருவன் மரித்தால் அவனுக்குப் பிரேதக்கிரியைகளைப் புத்திரன், பேரன், பேரனுடைய பிள்ளை, அதுபோல் பிராதாவின் ஸந்ததியார், எழுதலைமுறைக்குட்பட்ட ஞாதிஸந்ததியார் ஆகிய இவர்களில் கிரமமாக யாரேனும் செய்யலாமென்று ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் சொல்லப்பட்டது. முக்கிய புத்திரனில்லாத பக்ஷத்தில் க்ஷேத்திரஜன் தத்தபுத்திரன்முதலிய புத்திரர்களும் அவர்களில்லாத பக்ஷத்தில் பௌத்திரனும் அவனில்லாத பக்ஷத்தில் பத்நியும் கர்மாதிகாரிகளென்றறிக. பௌத்திரனும் புத்திரிகாபுத்திரனும் ஸமானர்களென்று பிரஹஸ்பதிசொன்னுர். பிதாமஹக்கிரியையைப் புத்திரனிருக்கையில் பௌத்திரன் செய்யத்தக்கவனல்லனென்று காத்தியாயநர் சொன்னுர். பத்நி யில்லாதபக்ஷத்தில் ஸோதரன் கர்த்தா என்னுங் கிரமமானது பத்நியானவள் தாய பாகத்தைப்பெற்றுக்கொள்ளும் பக்ஷத்திலென்றறிக.

பத்நி யில்லாத பக்ஷத்தில் அரசன் மரித்தவனுக்கு ஸமாந ஜாதிகளைக்கொண்டு பிதிர்க் கிரியைகளைச் செய்விக்கக்கடவனென்

றும் பிதிர்க் கிரியையானது பூர்வ கிரியை எனவும் மத்தியம கிரியை யெனவும் உத்தர கிரியை எனவும் மூன்றுவிதமென்றும் முதல்நாள் தொடங்கிப் பன்னிரண்டுநாட்களுக்குள் செய்யப்படுகிற கிரியை பூர்வ கிரியை எனவும், மாஸந்தோறும் ஏகோத்திஷ்டவிதியாய் செய்யப்படுகிற கிரியை மத்தியம கிரியை எனவும், ஸபிண்டீகரணம் செய்து பிரேதம் பிதிர்க்கூட்டத்தை அடைந்தபின் செய்யப்படுகிற கிரியை உத்தர கிரியை எனவும், ஸபிண்ட ஞாதிமுதலாக அரசனள வாகச் சொல்லப்பட்டவர்கள் பூர்வ கிரியையும் மத்தியம கிரியையும் செய்யத்தக்கவர்களென்றும், உத்தர கிரியையைப் புத்திரனே செய்யத்தக்கவனென்றும் ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் சொல்லப்பட்டது.

உபநயநம் செய்யப்படாதவனுக்குச் சிராத்தஞ்செய்ய அதிகாரமுண்டேன்பது. ஒரே புத்திரனிருந்து அவன் பிதா மரித்தால் அந்தப்பிள்ளை உபநயநம் செய்யப்பட்டவனே யாகிலும் உபநயநம் செய்யப் படாதவனேயாகிலும் பிதிர்க் கிரியையைச் செய்யக்கடவனென்று ஸுமந்துவும், சௌளமான பிள்ளையானவன் பிண்டோதக தானத்தைச் செய்யக்கடவனென்றும், "ஸ்வதா" என்னும் மந்திரத்தை மாத்திரம் சொல்லக்கடவனேயன்றி வேதத்தை உச்சரிக்கத் தகாதவனென்றும், இவ்விதமாக மாதிர் பிதிர்க்கள் விஷயத்தில் செய்யக்கடவனென்றும் வியாக்கிரமுனியும், உபநயநமாகா தவனேயாகிலும் பிள்ளையானவன் பிதிர்மாதிர் விஷயத்தில் மந்திரத்தைச்சொல்லியே கர்மம் செய்யக் கடவனென்று ஸுமந்துவும் சொன்னார்கள்.

மாதாமஹாதிகளின் சிராத்தத்தில் அதிகாரம். மாதாவின்பிதா தொடங்கி மூன்றுபேர் மாதாமஹர்க ளென்னப்படுவார்களென்றும் அவர்களுக்குப் பிதிர் விஷயத்தில் சிராத்தம்செய்வதுபோல் சிராத்தத்தைப் பெண்வயிற்றுப் பிள்ளைகள் செய்யக்கடவர்களென்றும் புலஸ்தியர் சொன்னார். பிதிர் சிராத்தத்தைப்போல மாதாமஹ சிராத்தமும் செய்யத்தகுமென்றும் செய்யாவிட்டால் தோஷம் ஸம்பவிக்குமென்றும் ஸ்காந்தபுராணத்தில் சொல்லப்பட்டது.

கும்பலாக மரித்தவர்களின் சிராத்த விதி. பத்திநி, புத்திரன், அவன் பிள்ளை, பிராதா, அவன் பிள்ளை, மருமகள், மாமனார், மாமியார், மாதா பிதா ஆகிய இவர்களுக்கு ஸமமாக மரணம் ஸம்பவித்தால் ஒருவருஷத்திற்குள் பிதாவை முன்னிட்டு எல்லாருக்கும் ஸபிண்டீகரணம் செய்யத் தகுமென்று ரிசிய சிருங்க முனிவர் சொன்னார். மாதாபிதாக்க ளிருவரும் மரித்தால்

அவரவர் மரணதிநம்தொடங்கிப் பன்னிரண்டாநாளில் ஸபிண்டீக ரணம் செய்யத்தக்கதாமென்றும் ஓரேதிநத்தில் மரித்த தாய் தந் தைகளுக்கு ஏகோத்திஷ்ட சிராத்தத்தைப் பதினோராவதுநாளிலும் ஸாபிண்டியத்தை மூன்றாவது பக்ஷத்திலும் செய்யவேண்டுமெ ன்னும் விதி மாதாவானவள் பிதாவை அநுமரணம் செய்யாமல் மரித்தாலும் ஓரேநாளிலன்றிச் சிலநாள்கழித்துமரித்தாலும் அநுஷ்டி க்கத்தக்கதென்றறிக. மாதாபிதாக்களுக்கு ஓரேதிநத்தில் சிராத்தம் செய்யவேண்டியதாக ஸம்பவித்தால் பிதிர் சிராத்தத்தை முன்னே செய்யவேண்டுமென்று கார்ஷ்ணாஜநி சொன்னார்.

ஒருதிநத்தில் இரண்டுசிராத்தங்கள் செய்யக்கூடாதேன்பது, ஒரு தேவதையை உத்தேசித்து ஒருதிநத்தில் இரண்டு சிராத்தங்கள் செய்யக்கூடாதென்றும் ஒரு சிராத்தத்தை அநுஷ்டிப்பதினால் மற்ற சிராத்தத்தின் பிரயோஜநமும் சித்திக்குமென்றும், நித்தியசிராத்தம் காமியசிராத்தம் இவ்விரண்டும் ஓரே தேவதையை உத்தேசித்ததா க ஒரு திநத்தில் ஸம்பவித்தால் காமியசிராத்தத்தினால் நித்தியசிரா த்தமும் ஸித்திக்குமென்றும் ஸ்மிருதி ஸங்கிரகத்தில் சொல்லப் பட்டது.

மூன்றாவது அத்தியாயம் முற்றிற்று.

ஆசாரகாண்டம் ஸம்பூர்ணம்.

ஸ்ரீ

பராசரஸ்மிருதி.

பிராயச்சித்தகாண்டம்.

அவதாரிகை.

ஸ்ரீபராசரமஹாமுனிவர் கீழ்ச்சொன்ன ஆசாரகாண்டம் மூன்று அத்தியாயங்களால் நான்கு வர்ணத்தாரும் செய்யத்தக்கது இது, செய்யத்தகாதது இது, என்பதைச்சொல்லி அந்த விதி விலக்குகளைத் தவறி நடந்தால் அதனால் வருகிற பாபத்தைப் பரிகாரஞ் செய்யத்தக்க உபாயத்தைச் சொல்லுகிறதான பிராயச்சித்த காண்டத்தை ஆரம்பிக்கிறார். பிராயச்சித்தமென்பது பாபத்தைப்போக்குவதாகிய ஒரு தர்மமென்றும், அது பாபமென்னும் ஒரு நிமித்தம் வந்தபோது செய்யத்தக்கதாகையால் நைமித்திக கர்மமென்றும் தர்மசாஸ்திரத்தைக் கற்றுணர்ந்த பெரியோர்கள்சொல்லுகிறார்கள். பின்னும், நாம் செய்கிற இந்த விரதத்தினால் பாபம் ஒழிகிறதென்னும் நிச்சயம் சித்தம் என்றும், அத்துடன்கூடின விரதம் பிராயமென்றும், பாபம் செய்தவனுடைய கலங்கினசித்தம் இந்த விரதத்தினால் அவசியம் சரியாகச்செய்யப்படுகிறதாகையாலும், பெரியோர்கள் தங்கள்மனதைச் சரிசெய்துகொண்டு நன்றாகவிசாரித்து இந்தக்கர்மத்தை விதிக்கின்றமையாலும் பிராயச்சித்தமென்றும் சொல்லப்படுமென்று அங்கிரசு சொன்னார். பாபங்களைச்செய்து அதனால் மனம்வருந்திப் பிராயச்சித்தத்தைச்செய்யாதவர்கள் கஷ்டமான துக்கத்தைக் க[illegible]கிவைகளான தா[illegible]கங்கு, மஹாநிரயம், சால்மலீ, ரௌரவம், கும்பலம்,பூதிமிருத்திகம், கா[illegible]கம், ஸவிஷம், ஸம்பிரபாதநம், மஹா[illegible]கம், காகோலம், ஸஞ்சீவநம், மஹாபதம், அவீசீ, அந்ததாமிஸ்ரம், கும்பீபாகம், அஸிபத்திரவநம், தாபநம், ஆகிய இந்த இருபத்தொருவிதங்களான நரகங்களை அடைகிறார்களென்று யாக்கியவல்கியர் சொன்னார். இந்தப்பிராயச்சித்தம் நித்தியமா, நைமித்திகமா, காமியமா என்னுமிடத்தில் சாஸ்திரத்தில் விதித்த கர்மங்களைச் செய்யாமையாலும் விலக்கியகர்மங்களைச் செய்வதினாலும் பரிதபித்துச்செய்யும் பிராயச்சித்தம் நைமித்திகமாமென்று தொடங்கிப் பிராயச்சித்தங்களை விதித்து முடிவில் நைமித்திக

மான தர்மத்தைச்சொன்னேனென்றும், பாபம் அறிந்துசெய்ததும் அறியாமல்செய்ததும் என்றிருவகைப்படுமென்றும் பிரகஸ்பதியும், அவைகளில் அறியாமல் செய்த பாபம் பிராயச்சித்தத்தினால் ஒழியுமேயல்லது தானறிந்து செய்தபாபம் பிராயச்சித்தத்தினா லொழிவதில்லை என்றுமனுவும், ஒருவன் புத்திபூர்வகமாகப் பிர்ம்மஹத்தியாதிகளைச் செய்தால் மலையில் அல்லது அக்கினியில் விழுந்து தேகத்தை விடுவதினால் சுத்தனாகிறானென்று சாதாதபரும், காமக்குரோதலோபங்களால் புருஷன் ஆக்கிரமிக்கப்பட்டு அதிபாதகம், மஹாபாதகம் அநுபாதகம், உபபாதகம் ஆகிய இவைகளிலும் பின்னும் ஜாதிப்பிரம்சகரமென்றும், ஸம்கரீகரணமென்றும், அபாத்திரீகரணமென்றும், மலினீகரணமென்றும், பிரகீர்ணகமென்றும் சொல்லப்படுகிற பாபங்களிலும் முயலுகிறானென்றும், தாய், பெண், மாமியார், மருமகள், இவர்களைப் புணருவது அதிபாதகமென்றும், பிர்ம்மஹத்தி செய்வது, கள் குடிப்பது, பொன்திருடுவது, குருபத்நியைப் புணருவது, இவைகளும் இவைகளைச்செய்தவனோடு சேர்ந்திருப்பதும் மஹாபாதகமென்றும், யாகம்செய்கிற தருணத்தில் க்ஷத்திரியனை அல்லது வைசியனைக்கொல்லுதலும், ருதுவாயிருப்பவள், கர்ப்பிணி, அத்திரிகோத்திரத்தில் பிறந்தவள், சரணமடைந்தவள், இவர்களைக்கொல்லுதலும், கர்ப்பத்தை அழித்தலும் பிர்ம்மஹத்திக்குச் சரியாமென்றும், பொய்சாக்ஷிசொல்லுதலும், சிநேஹிதனைக்கொல்லுதலும், கள்குடித்தலுக்குச்சரியாமென்றும், பிராம்மணனுடைய பூமியை அபஹரிப்பது பொன்திருட்டுக்குச் சரியாமென்றும், சிறியதகப்பன், தாயின்தகப்பன், மாதாமஹன், அம்மான், மாமனார், அரசன், இவர்களுடைய மனைவிகளைப்புணருவது குருபத்நியைப் புணருவதற்குச் சரியாமென்று, பின்னும், அத்தை, தாயின்சோதரீ, இவர்களையும், வேதம் முழுதுமோதினவன், யாகத்தில் ஸாதகனாக ஏற்படுத்திக்கொள்ளப்பட்டவன், உபாத்தியாயன, சிநேஹிதன இவர்களுடைய பத்நிகளையும், உடன்பிறந்தவள், தனக்குத்தோழி, தன்கோத்திரமுடையவள், சன்னியாச விரதமுடையவள், உயர்ந்த ஜாதியில் ஜனித்தவள், கன்னிகை, ருதுவாயிருப்பவள், சரணமடைந்தவள், தன்னிடத்தில் ஒருவனால் ரக்ஷிப்பதற்கு ஒப்புவிக்கப்பட்டவள், இவர்களைப்புணருவதுஅநுபாதகமென்றும்விஷ்ணுவும், கோஹத்தி, தகாதவனுக்கு யாகம் செய்வித்தல், அயல்மாதரைப்புணர்தல், தன்னைவிற்பது, குரு, தாய், தந்தை, வேதம், அக்கினி, புத்திரன் இவர்களை உபசரிக்காமல் விடுதல், பரிவித்தி, அல்லது பரிவேத்தாவாயிருத்தல், அவர்களுக்குப்

பெண்கொடுத்தல், அவர்களுக்கு யாகம்செய்வித்தல், கன்னியாதூஷணம்செய்தல், வட்டிவாங்கி அதனுல் பிழைத்தல், பிர்ம்மசரியம் முதலான விரதத்தை மைதுநம்முதலிய துர்நடத்தையால் போக்கிக்கொள்ளுதல், தடாகம், பூந்தோட்டம், மனைவி, புத்திரன் இவர்களை விக்கிரயம்செய்தல், காலத்தில் உபநயநம்முதலியவைகளைச் செய்துகொள்ளாமை, பந்துக்களைவிடுதல், சம்பளம்வாங்கி ஓதுதல், ஓதுவித்தல், எள்முதலிய விற்கத்தகாதவைகளை விற்றல், தங்கம், ரத்திநம் முதலியவை உண்டாகும் ஸ்தாநங்களில் அதிகாரஞ்செய்தல்,வெள்ளத்தைத் தடுத்து அணைகட்டுதல், பூஞ்செடிகளை அழித்தல், ஸ்திரீகளைக் கூட்டிக் கொடுத்துப்பிழைத்தல், ஒருவனுடைய நாசத்தைக் கோரிச் சியேந யாகம்செய்தல்,ஒருவனைமந்திரத்தால்அல்லது ஔஷதத்தால் வசப்படுத்துதல், விறகுக்காகப்பச்சைமரத்தை வெட்டுதல்,ஒருதேவதைக்கின்றித்தனக்காகவே சமைத்தல்,தகாதஅன்னத்தைப்புசித்தல், சக்தியிருந்தும்அக்கிஹோத்திரம் செய்யாமை,திருடுதல்,கடனைத்தீர்க்காமை,பழிக்கப்பட்ட சாஸ்திரங்களைப்படித்தல், ஆடல்பாடல்களைச் செய்தல், தானியம், லோஹம், பசு, இவைகளைத்திருடுதல், கள் குடிக்கிறபெண்ணைப் புணருதல், ஸ்திரீ சூத்திரன் வைசியன் க்ஷத்திரியன் இவர்களைக்கொல்லுதல், இவைகளில் ஒவ்வொன்றும் உபபாதகமென்றும், பிராம்மணனுக்கு நோயுண்டாக்குதல், கள் முதலானதுகளை முகருதல், புருஷன்வாயில் மைதுநம்செய்தல் இவைகளில் ஒவ்வொன்றும் ஜாதிப்பிரம்சகரமென்றும், கழுதை, குதிரை, ஒட்டகம், மான், யானை, வெள்ளாடு, செம்மறியாடு, மீன், பாம்பு, எருமைக்கடா இவைகளைக் கொல்லுதல் இவைகளில் ஒவ்வொன்றும் ஸங்கரீகரணமென்றும், நிந்திக்கப்பட்டவர்களிடத்தில் பொருள்வாங்குதல், வர்த்தகம்செய்தல், சூத்திர சேவை பண்ணுதல், பொய்சொல்லுதல் இவைகளில் ஒவ்வொன்றும் அபாத்திரீகரணமென்றும், புழு, பூச்சி, பக்ஷி இவைகளைக்கொல்லுதல், கள் கூடையில் வைப்பது முதலிய காரணத்தினுல் கள் சம்பந்தமுடைய வஸ்துக்களைப் புசித்தல், பழம், விறகு, புஷ்பம் இவைகளைத் திருடுதல், அதைரியப்படுதல், இவைகளில் ஒவ்வொன்றும் மலிநீகரணமென்றும் மனுவும், இங்குச் சொல்லாதபாபங்கள் பிரகீர்ணகமென்னப்படுமென்று விஷ்ணுவும் கூறினுர்கள். இவற்றுள் பராசரமஹாமுனிவர் பிரகீர்ணகபாபங்களுக்கு முதலில் பிராயச்சித்தத்தைச்சொல்லி மஹாபாதக அதிபாதகப் பிராயச்சித்தத்தை முடிவில்சொல்லுகிறுர்.

ஸ்ரீரஸ்து.

பராசரஸ்மிருதி.

இரண்டாவது - பிராயச்சித்தகாண்டம்.

முதல் அத்தியாயம்.

మూలం॥

౧ ॥ అతిమానాదతిక్రోధాత్స్నేహాద్వాయదివాభయాత్ ।
ఉద్బధ్నీయాత్స్త్రీపుమాన్వా గతిరేషావిధీయతే ॥

(இ-ள்.) தாய், மனைவி, முதலானவர்களுடைய கடுஞ்சொல்லினால் உண்டான மானஹானி, புத்திரமித்திராதிகள் செய்த சில அபராதங்களுக்காக உண்டான பெருங்கோபம், அதிகமான சிநேஹம், அதிகமான பயம், இந்த ஹேதுக்களி லேதேனு மொன்றினால் ஸ்திரீ அல்லது புருஷன் உச்சுருக்கிட்டுக்கொண்டு மரணமடைந்தால் அவர்களுக்கு அடுத்த சுலோகத்தில் சொல்லப்போகிற கதி (நரகயாதனை) விதிக்கப்படுகிறது. (எ-று.)

அதிக சிநேஹம் மரண ஹேதுவா மென்பதற்குத் துரோணாசாரியர், தசரதசக்கிரவர்த்தி இவர்களும், அதிக பயம் மரண ஹேதுவாமென்பதற்கு மஹாபராதியான வேலைக்காரன் அரசனது தண்டனைக்குப் பயந்து மரிப்பதும் திருஷ்டாந்தங்களாம். (க)

౨ ॥ పూయశోణితసంపూర్ణే త్వంధేతమసిమజ్జతి ।
షష్టిర్వర్షసహస్రాణి నరకంప్రతిపద్యతే ॥

(இ-ள்.) உச்சுருக்கினால் மரித்தவன் சீயினாலும், ரக்தத்தினாலும் நிறைந்து கோரமாயிருக்கிற அந்ததாமிஸ்ரமென்னும் நரகத்தில் முழுகி அதில்தானே அறுபதினாயிரம் வருஷகாலம் இடைவிடாமல் வசிக்கிறான். (எ-று.) (உ)

౨½ ॥ నాశౌచంనోదకంనాగ్నిం నాశ్రుపాతంచకారయేత్ ।

(இ-ள்.) (உச்சருக்கினால் மரித்தவனைப்பற்றித்) தீட்டு இல்லை, தர்ப்பணம் செய்யவேண்டியதில்லை, அக்கினியினால் அந்தச் சவத்

தைத் தஹிப்பதும், கண்ணீர்விடுவதும் செய்யவேண்டியதில்லை. (அந்தச் சவத்தை எடுப்பதோடு அதற்குப் பின்செல்லுவதும் செய்யக் கூடாது.) (எ-று.)

ஆயுதத்தினாலும் உச்சுருக்கினாலும் ஜலத்தில் விழுவதினாலும் மற்ற ஹேதுக்களாலும் மரித்தவன் பாபியாவான். அவன் விஷயத்தில் அக்கினியினால் தஹித்தல், அஸ்தி சஞ்சயநம் பிண்டதாநம் முதலிய விதிகளைச்செய்தல் கூடாதென்று பிரமபுராணம் சொல்லுகிறது.

౩౫ ॥ వోఢారోగ్ని ప్రదాతారః పాశచ్ఛేదకరా స్తథా
తప్తకృచ్ఛ్రేణశుధ్యంతీ త్యేవమాహ ప్రజాపతిః ।

துர்மரணசவங்களைவகிப்பது முதலியவற்றின் பிராயச்சித்தம். (இ-ள்) (துர்மரணமடைந்தவனுடைய சவத்தை)எடுத்தவர்கள், அக்கினியினால் ஸம்ஸ்காரம்செய்தவர்கள், உச்சுருக்கிட்டிருந்த கயிற்றை அவிழ்த்தவர்கள் (திலதர்ப்பணாதிகளைச் செய்தவர்கள்) ஆகிய இவர்கள் தப்தகிருச்சிரம் என்னும் விரதத்தினால் சுத்தியை அடைகிறார்களென்று பிரஜாபதி சொன்னார். (எ-று.)

ஒரு பாபிக்கு அவனிருக்கும் தேசம், காலம், வயது, சக்தி, அறிவு, அவன்செய்தபாபம் அறிந்துசெய்யப்பட்டதா, அறியாமல்செய்யப்பட்டதா என்பது, அது ஒருதரம் செய்யப்பட்டதா, அடிக்கடி செய்யப்பட்டதா என்பது, இவைகளை அறிந்து பிராயச்சித்தத்தை விதிக்க வேண்டுமென்று வியாக்கிரமுனியும், துர்மரணமானவனது பிணத்தை ஸ்பரிசித்தல், அதற்காகக் கண்ணீர்விடுதல் இவைகளைப் புத்திபூர்வமாய் செய்தால் மூன்றுநாள் உபவாசமும், அறியாமல் செய்தால் ஒருநாள் உபவாசமும் இருக்கவேண்டுமென்று பிரஜாபதியும், உச்சுருக்குமுதலியவைகளால் தற்கொலை செய்துகொண்டவனுக்குச் சகலவித பிரேதகிருத்தியங்களையும் செய்தவன் தப்தகிருச்சிரத்தோடு கூடின சாந்திராயண விரதத்தை அநுஷ்டிக்கவேண்டுமென்று நிமித்தத்தை அநுசரித்து அதிகமாக வசிஷ்டரும் சொன்னார்கள். சில ரிஷிகளுடைய வசனம்ஒரேவிஷயத்தில் வேறுபட்டிருக்குமாகில் அங்கு இதுபோல் நிமித்தம் முதலானவைகளால் அந்த வேறுபாட்டை அங்கீகரிக்கவேண்டும் என்பது கருத்து. (௫௨)

౪ ॥ గోభిర్హతంతథోద్బద్ధం బ్రాహ్మణేనతుఘాతితం ।
౫ ॥ సంస్పృశంతితుయేవిప్రా వోఢారశ్చాగ్నిదాహకాః॥
అన్యేయేచానుగంతారః పాశచ్ఛేదకరాశ్చయే ॥

౧ ॥ తప్తకృచ్ఛ్రేణశుద్ధాస్తే కుర్యుర్బ్రాహ్మణభోజనమ్ ।
అనడుత్సహితాంగాంచ దద్యుర్విప్రాయదక్షిణామ్ ॥

(இ-ள்.) எருதினால் அல்லது பசுவினால் கொல்லப்பட்டவன் (அத்துடன் விளையாட்டினால் எதிர்த்து மரித்தவன்), ஒருவனால் உச்சுருக்கிட்டுக் கொல்லப்பட்டவன், பிராம்மணனால் கொல்லப்பட்டவன், இவர்களை ஸ்பரிசித்தவர்கள், சுமந்தவர்கள், அக்கினிதகனம் செய்தவர்கள், அந்தச்ச த்தைப் பின்தொடர்ந்தவர்கள்,உச்சுருக்குக்கயிற்றை அவிழ்த்தவ ,ஆகிய இந்தப்பிராம்மணர்கள் தப்தகிருச்சிரத்தால் சுத்தர்களா ப் பிராம்மணபோஜநம் செய்வித்து ஒருபிராம்மணனுக்கு விருஷபத்துடன் பசுவைத் தக்ஷிணையாகக் கொடுக்கக்கடவர்கள். (எ-று.)

தப்தகிருச்சிரமென்பது மூன்றுநாள் ஆறு பலம் விழுக்காடு உஷ்ண ஜலத்தையும், பின்பு மூன்றுநாள் மூன்றுபலம்விழுக்காடு உஷ்ணமாகிய பாலையும், பின்பு மூன்றுநாள் ஒருபலம் விழுக்காடு உஷ்ணமாகிய நெய்யையும், குடித்துப் பின்பு மூன்றுநாள் வாயுவைப் பக்ஷிப்பவனுகிச் (உபவாஸமிருந்து)செய்யும்விரதம். இவ்விதமாகக்குளிர்ந்த ஜலம், பால், நெய்களால் செய்யும்விரதம் சீதகிருச்சிரமென்று யமஸ்மிருதி சொல்லிற்று. உஷ்ணமாகிய ஜலம், பால், நெய் இவைகளைத் தினம் ஒவ்வொன்றாக மூன்றுநாளில் குடித்து நாலாவதுநாள் உபவாஸமாயிருப்பது தப்தகிருச்சிரமென்று யாக்கியவல்கியர் சொன்னதை ஸாந்தபநம் மஹாஸாந்தபநம் என்பதுபோல் தப்தகிருச்சிரம் மஹாதப்த கிருச்சிரம் என் றிரண்டுவகையில் ஒன்ருகக்கொள்ளவேண்டும். ஐந்து குன்றி மணியளவு கொண்டது ஒருமாஷம், எட்டுமாஷம் கொண்டது ஒருநிஷ்கம், பத்துநிஷ்கம் கொண்டது ஒருபலமென்றும் அந்த அளவினுல்.ஆறுபலம்ஜலத்தைப் பாநம் செய்யவேண்டுமென்றும் சொல்லப்பட்டது. (ச, ரு, கூ)

౨ ॥ సంసర్గమాచరేద్విప్రః పతితాదిష్వకామతః ।
పంచాహంవాదశాహంవా ద్వాదశాహమథాపివా ॥

౩ ॥ మాసార్ధంమాసమేకంవా మాసద్వయమథాపివా ।
అబ్దార్ధమబ్దమేకంవా భవేదూర్ధ్వంహితత్సమః ॥

பாபிகளின்சேர்க்கைக்குப்பிராயச்சித்தம். (இ-ள்.) மஹாபாதகம், உபபாதகம் முதலான பாபங்களைச் செய்தவர்கள், அவர்களுடைய பிள்ளைகள் முதலானவர்களுடன் அவர்கள் பாபிகளென்றறி

யாமல் பிராம்மண க்ஷத்திரியாதிகள் ஐந்துநாள், அல்லது பத்துநாள், அல்லது பனிரண்டுநாள், அல்லது அரைமாஸம், அல்லது ஒருமாஸம், அல்லது இரண்டுமாஸம், அல்லது அரைவருஷம், அல்லது ஒருவருஷம் ஸம்ஸர்க்கத்தைச் செய்தால் பாபிகள் ஆகிறார்கள். ஒரு வருஷத்திற்குமேற்பட்டால் அவர்களோடு சமானமாகிறார்கள்-எ-று.

பாபியுடன் ஒரு ஆஸநத்தில் இருப்பது, ஒரு படுக்கையில் சயநிப்பது, அவனுக்குக்கொடுப்பது, வாங்குவது, சம்பாஷணம்செய்வது, கூட உட்கார்ந்து புசிப்பது, ஒருபாத்திரத்தில் சமைத்த அன்னத்தைப் புசிப்பது, அத்தியயநம் செய்விப்பது, புரோகிதனாயிருந்து அவனுக்கு யக்கியம் முதலியவற்றைச்செய்விப்பது, பெண்கொடுப்பது, பெண்ணை வாங்குவது, ஸ்பர்சிப்பது, மூச்சுக்காற்றுமேல்படுவது, அவனைத்தொடர்ந்து செல்வது, இவைகள் ஸம்ஸர்க்க மென்றும் இவைகளைச்செய்தால் பாபியாகிறானென்றும் கண்ணுவர் போதாயநர் தேவலர் முதலானவர்கள் சொன்னார்கள். இவைகள் முன் யுகங்களைப்பற்றியவைகளாம். இந்தக்கலியுகத்தில் பாபிகளின்ஸம்ஸர்க்கத்தைப் பராசரர் இந்தக்காண்டம் ஒன்பதாவது அத்தியாயத்தில் சொல்லியிருப்பதைப் பார்த்துக்கொள்க. பதிதனுடைய பிள்ளையும் பதிதனென்று வசிஷ்டர்சொன்னார். (எ, அ)

௯ || త్రిరాత్రం ప్రథమే పక్షే ద్వితీయే కృచ్ఛ్రమాచరేత్ ।
తృతీయే చైవ పక్షే తు కృచ్ఛ్రం సాంతపనం చరేత్ ॥
௧௦ || చతుర్థే దశరాత్రం స్యాత్ పరాకః పంచమే మతః ।
కుర్యాచ్చాంద్రాయణం షష్ఠే సప్తమే త్వైందవద్వయమ్ ॥
௧௧ || శుద్ధ్యర్థమష్టమే చైవ షణ్మాసాన్ కృచ్ఛ్రమాచరేత్ ।
పక్షసంఖ్యాప్రమాణేన సువర్ణాన్యపి దక్షిణా ॥

(இ-ள்.) பதித ஸம்ஸர்க்கவிஷயத்தில் கீழேசொன்ன எட்டு பக்ஷங்களில் முதல் பக்ஷமான ஐந்துநாளைக்கு த்ரிராத்ர கிருச்சிரத்தையும் (மூன்றுநாளுபவாஸத்தையும்) இரண்டாவது பக்ஷமானபத்துநாளைக்கு கிருச்சிரத்தையும் (பிராஜாபத்தியகிருச்சிரத்தையும்) செய்யவேண்டும். பிராஜாபத்திய கிருச்சிரமாவது மூன்றுநாள் பகலிலும் பின்பு மூன்றுநாள் இரவிலும் பின்பு மூன்றுநாள் தான் யாசிக்காமல் வந்ததையும் புசித்துப் பின்பு மூன்றுநாள் புசிக்காமலிருப்பதென்று மனுகூறினார். பின்னும் மூன்றாவது பக்ஷமான பன்னிரண்டுநாளைக்கு ஸாந்தபந கிருச்சிரத்தைச் செய்யவேண்டும். ஸாந்தபநகிருச்சிரமாவது த்விராத்ரம், ஸப்தராத்ரம், பஞ்சராத்ரம், ஏக

விம்சதிராத்ரம், அதாவது, இரண்டு ஏழு ஐந்து இருபத்தொன்று இந்த நாள்களில் செய்யத்தக்கது என்று நாலுவிதமாம். அவற்றுள் த்விராத்திரமென்பது, கோமூத்திரம், சாணம், பால், தயிர், நெய், தர்ப்பஜலம், இவ்வாறையும் விதிப்படி ஒன்ருகச்சேர்த்து அந்தப்பஞ்சகவியத்தைமாத்திரம் ஒருநாள் சாப்பிட்டு மறுதிநத்தில் சுத்தோபவாஸமிருப்பதாம், இது ஸாந்தபந கிருச்சிரமென்றும், ஸப்தராத்திரம் அல்லது மஹாஸாந்தபநமென்பது கீழ்ச்சொன்ன கோமூத்திரம் முதலான ஆறுவஸ்துக்களைமாத்திரம் கிரமமாகத் தனித்தனியே ஆறுநாள்புசித்து ஏழாவதுநாளில் சுத்தோபவாஸமிருப்பதென்றும், யாக்ஞியவல்கியர் சொன்னுர். பின்னும் மூன்றுநாள் கோமூத்திரத்தையும் மூன்றுநாள் சாணத்தையும் மூன்றுநாள் தயிரையும், மூன்றுநாள் பாலையும் மூன்றுநாள் நெய்யையும் புசித்தால் சுத்தனுகிருனென்று பதினைந்துநாளில் செய்யத்தக்க மஹாஸாந்தபநம் யமஸ்மிருதியில் சொல்லப்பட்டது. பின்னும் கோமூத்திரம்முதலான ஆறு வஸ்துக்களில் ஒவ்வொருவஸ்துவையும் மும்மூன்றுநாள்விழுக்காடு பதினெட்டுநாள் புசித்து முடிவில் மூன்றுநாள் சுத்தோபவாஸமிருக்கவேண்டுமென்று இருபத்தொருநாளில் செய்யத்தக்க மஹாஸாந்தபநத்தை ஜாபாலிசொன்னுர். இந்தஸாந்தபநங்களில் ஸப்தராத்திரஸாந்தபநமே இந்தப்பனிரண்டுநாள் பக்ஷத்திற்குப் பிராயச்சித்தமாகும். பின்னும் அமாமாஸம் பாபிகளுடன் ஸம்ஸர்க்கம்செய்வதாகிய நான்காவதுபக்ஷத்திற்குப் பத்து திநம் உபவாஸமிருக்கவேண்டும். ஒரு மாஸம் ஸம்ஸர்க்கமாகிற ஐந்தாவதுபக்ஷத்திற்குப் பராககிருச்சிரத்தைச் செய்யவேண்டும். பராககிருச்சிரமென்பது இந்திரியங்களைச் சயித்துப் பனிரண்டுநாள் உபவாஸமிருப்பது என்று மனுகூறினுர். இரண்டுமாஸம் ஸம்ஸர்க்கமாகிற ஆருவதுபக்ஷத்திற்குச் சாந்திராயண கிருச்சிரத்தை செய்யவேண்டும். சாந்திராயண லக்ஷணத்தை மேலே பராசரர் சொல்லப்போகிருர். ஆறுமாஸம் ஸம்ஸர்க்கமாகிற ஏழாவது பக்ஷத்திற்கு இரண்டுசாந்திராயண கிருச்சிரத்தைச் செய்யவேண்டும். கொஞ்சம் குறைந்த ஒருவருஷம் ஸம்ஸர்க்கமாகிற எட்டாவது பக்ஷத்திற்கு ஆறுமாஸங்களில் ஒருநாளும்விடாமல் பிராஜாபத்திய கிருச்சிரங்களைச்செய்யவேண்டும். அப்படிசசெய்தால் ஆறுமாஸங்களில் பதினைந்து பிராஜாபத்திய கிருச்சிரங்கள்செய்து முடியும். இவைகளைத் தன் சுத்தியைக்கோரிச்செய்யவேண்டும். கீழ்ச்சொன்ன பக்ஷங்கள் எட்டிலும் விதிப்படிப்பிராயச்சித்தங்களைச்செய்து அவைகளுக்கு அங்கமாக முதல்பக்ஷமான ஐந்துநாள் ஸம்ஸர்க்கத்தின் பிரா.

யச்சித்தத்திற்கு ஒருபொன் தக்ஷிணையும், இரண்டாவதுபக்ஷத்திற்கு இரண்டுபொன்னும் இவ்விதமாகத் தக்ஷிணைக் கொடுக்கவேண்டும்.

இங்குச்சொன்ன பிராயச்சித்தம் பதிதனோடு அறியாமல்செய்த ஸம்ஸர்க்கத்தைப்பற்றியது. அறிந்துசெய்தவன்ஐந்துநாளானால் பிராஜாபத்திய கிருச்சிரத்தையும், பத்துநாளானால் தப்த கிருச்சிரத்தையும், அரைமாஸமானால் பராக கிருச்சிரத்தையும், ஒருமாஸமானால் சாந்திராயணத்தையும், மூன்று மாஸமானால் சாந்திராயணத்தோடு பிராஜாபத்திய கிருச்சிரத்தையும், ஆறுமாஸமானால் அப்தார்த்த கிருச்சிரத்தையும், ஒருவருஷமானால் அப்த கிருச்சிரத்தோடு சாந்திராயணத்தையும் செய்யவேண்டுமென்றும் அதற்குமேல் ஸம்ஸர்க்கம் செய்தால் அந்தப்பாபிகளோடு சரியாகிறானென்றும் வேறு ஸ்மிருதிகளில் சொல்லியிருக்கிறது. (௯, ௧0, ௧௧.)

౧౨ ॥ ఋతుస్నాతాతుయానారీ భర్తారంనోపసర్పతి ।
సామృతానరకంయాతి వైధవ్యంచపునఃపునః ॥
౧౩ ॥ ఋతుస్నాతాంతుయోభార్యాం సన్నిధానోపగచ్ఛతి ।
ఘోరాయాంభ్రూణహత్యాయాం యుజ్యతేనాత్రసంశయః ॥
౧౪ ॥ దరిద్రంవ్యాధితంమూర్ఖం భర్తారంయావమన్యతే ।
సాశునీజాయతేమృత్వా సూకరీచపునఃపునః ॥
౧౫ ॥ పత్యౌజీవతియానారీ ఉపోష్యవ్రతమాచరేత్ ।
ఆయుష్యంహరతేభర్తుః స్సానారీనరకంవ్రజేత్ ॥
౧౬ ॥ అపృష్ట్వాచైవభర్తారం యానారీకురుతేవ్రతమ్ ।
సర్వంతద్రాక్షసాన్గచ్ఛే దిత్యేవంమనురబ్రవీత్ ।
౧౭ ॥ బాంధవానాంసజాతీనాం దుర్వృత్తంకురుతేతుయా ।
గర్భపాతంచయాకుర్యా న్నతాంసంభాషయేత్క్వచిత్ ॥
౧౮ ॥ యత్పాపంబ్రహ్మహత్యాయా ద్విగుణంగర్భపాతనే ।
ప్రాయశ్చిత్తంనతస్యాస్తితస్యాస్త్యాగోవిధీయతే ॥
౧౯ ॥ నకార్యమావసథ్యేన నాగ్నిహోత్రేణవాపునః ।
సభవేత్కర్మచండాలో యస్తుధర్మపరాఙ్ముఖః ॥

ருதுகாலத்தில்சேராத ஸ்திரீபுருஷர்களின் தோஷமும் பிராயச்சித்தமும். (இ-ள்.) ஸ்திரீகளுக்கு ரஜஸு உண்டானநாள்தொடங்

இப் பதினாறு திநங்கள் ருதுகாலமாம். அவைகளில் நாலாவதுநாளில் ஸ்நாநம்செய்தஸ்திரீ பர்த்தாவினுல் அழைக்கப்பட்டும் புத்திரனை உண்டாக்குவதற்காக எவள் தன்பர்த்தாவை அடையவில்லையோ அவள் மரித்து நரகத்தையடைந்து பின்பு அடிக்கடி ஜனித்து விதவையாகிருள். இதுபோலவே ருதுஸ்நாநம்செய்த பாரியை அருகிலிருந்தும் வியாதிமுதலிய தோஷமற்றிருக்கும் புருஷன் அவளைச் சேராவிட்டால் கோரமான ப்ரூணஹத்தி (சிசுஹத்தி) தோஷத்தில் ஸந்தேகமின்றிச் சேருகிருன். தரித்திரனும் வியாதிஸ்தனும் மூர்க்கனும் இருக்கிற பர்த்தாவை எவள் அலட்சியம்செய்கிருளோ அவள் பெண்நாயாகப்பிறந்து மரணமடைந்து பின்னும் பெண்பன்றியாக ஜனிக்கிருள். பின்னும் தன்புருஷன்பிழைத்திருக்கையில் எவள் உபவாஸமிருந்து விரதத்தை அநுஷ்டிக்கிருளோ அவள் பர்த்தாவின் ஆயுளை அபஹரிப்பதன்றி நரகத்தையுமடைகிருள். தன்பர்த்தாவைக்கேளாமலும் அவனுடைய அநுமதியை அடையாமலும் எவள் விரதத்தை அநுஷ்டிக்கிருளோ அந்த விரதம் ராக்ஷஸப்பிரீதியாமென்று மநு சொன்னர். எந்த ஸ்திரீ தன்பந்துக்கள் ஞாதிகள் இவர்கள்விஷயத்தில் த்வேஷம்செய்கிருளோ, தன்கர்ப்பத்தை எவள்அழித்துத் தள்ளுகிருளோ, பாபிகளான அவ்விருவரும் சம்பாஷணம் செய்யத்தக்கவர்களன்று. ஒருகாலத்திலும் ஒருவனும் அவர்களுடன் சம்பாஷித்தலாகாது. பிர்ம்மஹத்திசெய்தால் எவ்வளவு பாபமோ அதற்கு இரட்டிப்பான பாபம் கர்ப்பத்தை யழித்தவளுக்கு உண்டு. அவளுக்குப் பிராயச்சித்தமில்லை. அவளைத் தியாகம்செய்யவேண்டுமென்று விதிக்கப்படுகிறது. எவன் வேதத்தில் விசுவாஸமற்று வேதத்தினுல் விதிக்கப்பட்ட தர்மங்களை அநுஷ்டிக்காதவனுகி ஆவஸத்தியம் என்னும் ஐந்தாவது அக்கினியாலும் மற்றும் அக்கினிகளாலும் அக்கினிஹோத்திரத்தினுலும் இஹத்திற்கும் பரத்திற்கும் ஸாதித்துக்கொள்ளவேண்டிய ஒருகாரியமுமில்லாதவனுக இருக்கிருனே அவன் ஜந்மத்தினுல் பிராம்மணனேயாகிலும் கர்மத்தினுல் சண்டாளனுகிருன். எ-று.

ரஜஸ்வலையான ஸ்திரீ ஐந்தாநாளைய ஸ்நாநம்செய்த தினம் முதல் ஸங்கமத்திற்கு ஏற்றவளென்பது சிஷ்டாசாரம்.

ருதுகாலத்தில்சேராத ஸ்திரீபுருஷர்களின் பிராயச்சித்தம். ருதுகாலத்தில் தன்பத்நியைச் சேராத புருஷன் அர்த்தகிருச்சிரத்தைச்செய்யக்கடவனென்று பிரஹஸ்பதியும் தர்மசீலையாகிய தன் மனைவியை ருதுகாலத்தில் சேராதபுருஷன் நூறுப்பிராணுயாமங்களைச்-

செய்யக்கடவனென்று போதாயநரும் சொன்னார்கள். அர்த்தகிருச்சிரமென்பதற்குச் சரியானது நூறு பிராணாயாமமென்பது கருத்து. இப்படியே இருபத்துநால்வர்மதத்திலும் சொல்லப்பட்டது. அதாவது கிருச்சிரமென்பது பதினாயிரம் காயத்திரி, இருநூறு பிராணாயாமம், ஆயிரம்திலஹோமம், வேதாத்தியநம், இவைகளைச்செய்வதே. புருஷனுக்குவிதித்த பிராயச்சித்தத்தில் பாதி ஸ்திரீகளுக்கு ஊஹித்துச்சொல்லவேண்டும். எண்பதுவருஷம்சென்ற விருத்தனுக்கும் பதினாறுவயதுக்குக்குறைந்த சிறுவனுக்கும் ஸ்திரீகளுக்கும் வியாதிஸ்தனுக்கும் பிராயச்சித்தம் பாதியே செய்யத்தக்கதென்று பிருகு சொன்னார். ஸ்திரீக்கு ருதுகாலத்தில் புருஷனைச்சேராமைக்குப் பிராயச்சித்தம் விதிக்கப்பட்டதுபோல் தன்பதி தரித்திரன் ரோயாளி என்னு மிவைமுதலிய காரணங்களால் அவனை அலட்சியம்செய்கிறவள் ஏழுபிறப்புகளில் நரகத்தை அடைகிறாளென்று பிரமாண்டபுராணமும், புத்திரனை ஜநிப்பிப்பதற்காகப் பரபுருஷனைச் சேரவேண்டித் தன்பதியை அவமதித்தவள் இந்தலோகத்தில் பழிக்கப்பட்டுப் பரலோகத்தையும் இழக்கிறாளென்றும், வியபிசாரம்செய்கிற ஸ்திரீ இந்தலோகத்தில் நிந்திக்கப்படுவதோடு குள்ளநரியாகப்பிறந்து ரோகங்களால் பீடிக்கப்படுகிறாளென்றும், மநுஸ்மிருதியும் கூறுகின்றன. தன்பர்த்தாவை அதிக்கிரமித்த ஸ்திரீக்குப் பிராஜாபத்திய கிருச்சிரம் பிராயச்சித்தமென்று ஆபஸ்தம்பரும், வியபிசாரம்செய்தவளுக்குப் பிராஜாபத்தியகிருச்சிரம் அல்லது சாந்திராயணமாவது பிராயச்சித்தமாகுமென்று உசநா என்பவரும், சொன்னார்கள். இதுபோல் பதியின்பணிவிடையே ஸ்வர்க்கமோக்ஷங்களுக்கு ஸாதநமாகத் தங்களுக்கு இருக்க அதைச்செய்யாமல் விரதம் உபவாஸம் முதலியவைகளைச்செய்கிற ஸ்திரீஜாதிக்குப் பரலோகமில்லை என்றும், அவள் மஹாதோஷத்தை அடைகிறாளென்றும், அத்திரி ஸ்மிருதி மஹாபாரதம் இவைகள் சொல்லுகின்றன. பின்னும் தனக்குத்தெய்வமானபதியின் பணிவிடைக்கு விரோதமின்றி விரதாநுஷ்டானத்தைவிரும்புகிற ஸ்திரீயானவள் தன்பர்த்தா அல்லது பிதா, அல்லது பிள்ளை இவர்களிலொருவருடைய அநுமதிபெற்றுச் செய்தால் அந்த விரதம் பலிக்குமேயல்லது அநுமதிபெறாமல் அநுஷ்டிப்பது நிஷ்பலமாமென்று மார்க்கண்டேயரும், பால்யம் யௌவநம் கிழத்தனம் ஆகிய இந்தத் தசைகளில் ஸ்திரீகள் தங்களிச்சைப்படி (ஸ்வதந்திரையாக) நடத்தல் கூடாதென்றும் அவர்கள் முறையே பிதா பர்த்தா புத்திரன் இவர்களுடைய ஸம்ரக்ஷணையில் இருக்கவேண்டுமென்றும்

மனுவும் விதித்தார்கள். பின்னும் விஷம் மந்திரப்பிரயோகம் இவைகளால் தன் பந்துக்களேயும் ஞாதிகளேயும் கொன்று விரோதித்துக்கொள்ளுகிறவளும் தன்கர்ப்பத்தை அழித்தவளும் ஸமமானபாதகத்தைச்செய்தவர்களே,இவர்களுக்குப் பிராயச்சித்தமேயில்லை என்னும் மூலவசநத்திற்குப் பொருளென்னவெனில், யாகஞ்செய்துகொண்டிருக்கிற பிராம்மணனைக்கொன்ருல் இரட்டிப்பு தோஷமென்று கொல்லப்பட்ட பிராம்மணனுடைய குணங்களுக்கீடாகப் பிர்ம்மஹத்தி விஷயத்தில் பிராயச்சித்த மிருப்பதுபோல், அந்தக் கர்ப்பத்தை உண்டுபண்ணின பிதாவின் குணமஹிமைக்கீடாகப் பிராயச்சித்தங்கள் சொல்லவேண்டுமாகையால் கர்ப்பத்தை அழித்தவளுக்குப் பிராயச்சித்தத்தை விதிக்கிறவசநங்கள் சாதாரண கர்ப்பக்கொலையைப் பற்றியவைகளென்றும், பிராயச்சித்தமில்லை என்கிற வசநங்கள் பிதாவின்குணத்தினுல் அதிசயித்ததான கர்ப்பத்தைப் பற்றியவைகளென்றும், அல்லது இரட்டிப்புப் பிராயச்சித்தமிருப்பதைப்பற்றியவைகளென்றும் கொள்ளப்படுவதே. அவளைவிடவேண்டுமென்று சொன்னது ஸ்துதிவாதமாகையால் விரோதமில்லை. பதியை அலட்சியம் செய்தவள் பதியைத்தானே வணங்கிவேண்டி அவன் உபதேசித்த பிராயச்சித்தத்தைச்செய்யக்கடவள் என்றும் பதி கற்றுணர்ந்தவனுகில் தானே விதிக்கலாமென்றும் அறியாதவனுகில் அறிந்த பெரியோர்களைக்கேட்டாவது பத்தினிக்குப் பதியே தர்மத்தை உபதேசிக்கவேண்டுமென்றும் யாக்கியவல்கியர் சொன்னர். பதியினுடைய அனுமதியைப் பெருமல்செய்த உபவாஸவிரதாதிகள் அவளுக்குப்பலிக்காமையே சிக்ஷையாகையால் வேறுபிராயச்சித்தம் சொல்லப்படவில்லை. பின்னும் மந்திர ஔஷதாதிகளால் பந்துக்களைக்கொல்லுவது, கொல்லயத்தனிப்பது, என்று இரண்டுவிதமான பாபத்தில் கொல்லுவதைப்பற்றிப் பராசரமுனிவர் மேலே பிராயச்சித்தத்தைச் சொல்லப்போகிருர். ஒருவனைக்கொல்லப் பிரயத்தனித்தாலும் பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டுமென்றும் புருஷன்செய்வதிலும் ஸ்திரீ பாதிப் பிராயச்சித்தமே செய்யவேண்டுமென்றும் யாக்கிய வல்கிய வசந மிருக்கிறது.

கர்ப்பவதத்திற்குப் பிராயச்சித்தம். பதியினுல் உண்டானது ஜாரபுருஷனுல் உண்டானது என்று கர்ப்பம் இருவகைப்படும். அந்த ஜாரபுருஷர்களும் தனக்குச் சரியானவர்ணத்தில் பிறந்தவர்களென்றும் அப்படி யாகாதவர்களென்றும் இரண்டுபிரிவுடையவர்கள். அவர்களில் தனக்குச்சரியானவர்ணஸ்தனுல் உண்டான கர்ப்பத்தைத

அழித்ததற்குப் பிராயச்சித்தம் இருபத்துநால்வர்மதத்தில் சொல்லப்பட்டது. அதாவது கர்ப்பபாதமென்னுந் தோஷத்தில் எவனால் அந்தக்கர்ப்பம் உண்டாக்கப்பட்டதோ அவன்வர்ணத்திற்கிடாக விதிக்கப்பட்ட பிராயச்சித்தம் செய்யத்தக்கதென்றும் இதுவே ஜாரபுருஷனால் ஸம்பவித்தகர்ப்பமாகில் ரிஷிகளால் சொல்லப்பட்ட விசேஷ பிராயச்சித்தங்கள் இதற்குஉண்டு என்றும், அவைகளில் பிராம்மணகர்ப்ப வதத்திற்குஅப்தகிருச்சிரம் ஸாந்தபநகிருச்சிரம்முதலியவைகளும், க்ஷத்திரிய கர்ப்ப வதத்திற்கு இரண்டுசாந்திராயணவிரதமும், வைசிய கர்ப்ப வதத்திற்கு ஒருசாந்திராயணவிரதமும்,சூத்திர கர்ப்ப வதத்திற்குப்பராககிருச்சிரமும் செய்யத்தக்கவைகளென்பதே. கர்ப்ப பாதமென்பது கர்ப்பத்தை அழித்தலாம்.

வேதத்தில் விசுவாசமற்றவனுக்குப் பிராயச்சித்தம். சிலநாளாக நாஸ்திகனாயிருப்பவன் பன்னிரண்டுநாளில் பிராஜாபத்திய கிருச்சிரத்தை அநுஷ்டித்து நாஸ்திகத்தன்மையை விட்டுவிடவேண்டுமென்று வசிஷ்டரும் எப்பொழுதும் நாஸ்திகனாயிருப்பவனானால் ஒருவருஷகாலம் பிராம்மணகிருகத்தில் பிக்ஷையெடுத்துப் புஜிக்கக்கடவனென்று சங்கரும் சொன்னார்கள். (கஉ, கங, கச, கரு, கசு, கஎ, கஅ, ககூ,)

౨౦ ॥ ఓఘవాతాహృతంబీజం యస్యక్షేత్రేప్రరోహతి ।
సక్షేత్రీలభతేబీజం నబీజీభాగమర్హతి ॥
౨౧ ॥ తద్వత్పరస్త్రియాఃపుత్రౌ ద్వౌసుతౌకుండగోళకౌ ।
పత్యౌజీవతికుండస్తుమృతే భర్తరిగోళకః ॥

(இ-ள்.) பெருவெள்ளம் பெருங்காற்றுக்கள் இவைகளால் ஒருவனுடையவிதை வேறொருவனுடைய க்ஷேத்திரத்தில் தள்ளப்பட்டு முளைத்தெழுந்து பலித்தால் அந்தநிலக்காரன் (க்ஷேத்திரி) அந்தப்பலனை அடைகிறான். அந்தவிதைக்கு உடையவன் (பீஜி) அந்தப்பாகத்தைஅடைவதில்லை. (இது லோகப்பிரசித்தம்). இந்தநியாயத்தினால் குண்டனென்றும் கோளகனென்றும் சொல்லப்படுகிற பிள்ளைகளிருவரும் பரஸ்திரீயின் புத்திரர்களே(பீஜிக்குச்சம்பந்தமில்லை).

குண்டகோளக லட்சணம். பதிமரித்தபின் ஜாரபுருஷனுக்குப் பிறந்தவன்குண்டன், பதிபிழைத்திருக்கையில் ஜாரபுருஷனுக்குப் பிறந்தவன்கோளகன். எ-று.

குருவினுடைய அநுமதியினால் தமையன் பத்திநியினிடத்தில் அவன் மரித்தபின் அவளுக்கு மைத்துனனானவன் உண்டுபண்ணின

பிள்ளைகோளகனுகமாட்டான். அந்த விதி தர்மமானதே. ஜாரனுக்குப்பிறந்தவர்களே குண்டகோளகர்களென்று யாக்கியவல்கியர் சொன்னுர். தன்பத்திநியை ரக்ஷித்துக்கொள்ளாமையால் க்ஷேத்திரியும் தான் பரஸ்திரீயைப்புணருவதினுல் பீஜியும் நரகத்தை அடைகிருர்களென்றும், தர்மாநுஷ்டாநங்களில் இவர்களை விலக்கவேண்டுமென்றும் மஹாபாரதம்சொல்லுகிறது.

ஜாரப்பிராயச்சித்தம். தன்மேல் ஆசைப்படாத ஒருபிராம்மண ஸ்திரீயை வேருெரு பிராம்மணன்ஆசைப்பட்டுப் புணர்ந்தானேயாகில் அவன் பிராஜாபத்தியகிருச்சிரம், சாந்திராயணம் இந்த இரண்டையும் செய்யவேண்டும். பாபமென்றறியாமல் புணர்ந்தாலும் அந்தப் பிராம்மண ஸ்திரீ தன்னை அபேக்ஷித்தவளா யிருந்தாலும் இதில் பாதி பிராயச்சித்தம் செய்யவேண்டும். ஒரு தரம் புணர்ந்தால் தப்த கிருச்சிரத்தைச்செய்யவேண்டும். அவள் க்ஷத்திரிய ஸ்திரீயாகவாவது வைசிய ஸ்திரீயாகவாவது சூத்திர ஸ்திரீயாகவாவது இருந்தால் இதில்பாதியே செய்யவேண்டும். ஜாரபுருஷன் வேதமோதின பிராம்மணனுயிருந்தானுகில் அந்தப்பிராம்மணஸ்திரீ பாதிப்பிராயச்சித்தமும் அவன் ஸாதாரண பிராம்மணனுயிருந்தால் இரட்டிப்புப் பிராயச்சித்தமும், அவளுக்கு ஒருவனுடையரக்ஷணம் இல்லாத பக்ஷத்தில் பாதி பிராயச்சித்தமும் செய்யவேண்டுமென்று வியாக்கிரமுனிவர்சொன்னுர். இங்கு க்ஷேத்திரிக்குப் பிராயச்சித்தம் சொல்லப்படாமையால் அவனுக்கு என்ன பிராயச்சித்தம் செய்யவேண்டுமெனில் பிராயச்சித்தம் சொல்லப்படாதவிடத்திலும், உபபாதகங்களுக்கும் பிராயச்சித்தமாக நூறு பிராணுயாமங்களைச் செய்யவேண்டுமென்று யாக்கிய வல்கியர் சொன்னபடி அனுஷ்டிக்கவேண்டுமென்று கொள்க. (௨௦, ௨௧)

౨౨॥ ఔరసః క్షేత్రజశ్చైవ దత్తః కృత్రిమకస్సుతః ॥

(இ-ள்.) ஔரஸன், க்ஷேத்திரஜன், தத்தன், கிருத்திரிமன் (என்றுபுத்திரர்கள் நாலுவகைப்பட்டவர்கள்) எ-று.

ஒருவன் பத்திநியினிடத்தில் அவனுக்குப்பிறந்தவன் ஔரஸனென்றும், அவன்மரித்து அல்லது நபும்ஸகனுய் அல்லது வியாதிஸ்தனுயிருக்க அவன் மனைவியினிடத்தில் அவன் சகோதரனுல் உண்டுபண்ணப்பட்டவன் க்ஷேத்திரஜனென்றும் தாயும்தந்தையும் இஷ்டப்பட்டு அல்லது இவர்களில் யாராவது தங்கள்வயிற்றில் பிறந்தபிள்ளையைப் பிள்ளையில்லாமல் வருந்துகின்ற ஒருவனுக்குப்

பிரீதியுடன்கொடுத்தால் அவன் தத்தனென்றும், குணதோஷங்களை அறிந்தவனும் புத்திரலக்ஷணங்களை யுடையவனுமான ஒருவன் பிள்ளையாக அங்கீகரிக்கப்பட்டால் அவன் கிருத்திரிம புத்திரனென்றும் சொல்லப்படுவார்கள். மனு இவர்களையுஞ்சேர்த்துப் பனிரண்டுபிள்ளைகளைச் சொல்லியிருக்கிறார். (உக)

౨౨ ॥ దద్యాన్మాతాపితావాపి సపుత్రోదత్తకస్స్మృతః ॥

(இ-ள்.) மாதா அல்லது பிதா (புத்திரனில்லாத ஒருவனுக்கு) எந்தப்பிள்ளையைக்கொடுக்கிறார்களோ அவன் தத்தனென்றுசொல்லப்படுவன். எ-று.

இங்குத்தானங்கொடுப்பதுபோல் பிரீதியுடன் தாராபூர்வகமாகக்கொடுக்கப்பட்டவன் என்று பொருள்கொள்ளவேண்டும்.) (உஉ)

౨౩ ॥ పరివిత్తిఃపరివేత్తా యయాచపరివిద్యతే ।
సర్వేతేనరకంయాంతి దాతృయాజకపంచమాః ॥

౨౪ ॥ ద్వౌకృచ్ఛ్రౌపరివిత్తేస్తు కన్యాయాఃకృచ్ఛ్ర ఏవచ ।
కృచ్ఛ్రాతికృచ్ఛ్రౌదాతుశ్చహోతాచాంద్రాయణంచరేత్ ॥

பரிவித்தியாதிகளின் பிராயச்சித்தம். (இ-ள்.) மூத்தவன்விவாகமில்லாதிருக்க இளையவன் விவாகம்செய்துகொண்டால் அவன் பரிவேத்தாவென்றும், மூத்தவன் பரிவித்தி யென்றும்,விவாகம்செய்துகொண்டபெண் பரிவேதினீயென்றும், அந்தப்பெண்ணைக்கொடுத்தவன் பரிதாதாவென்றும், விவாகம்செய்வித்த புரோஹிதன் பரியஷ்டா வென்றும் சொல்லப்படுவார்கள். ஆக இந்த ஐவரும் நரகத்தை அடைகிறார்கள். இவர்களில் பரிவித்திக்கு இரண்டுகிருச்சிரமும், அந்தப்பெண்ணுக்கு ஒருகிருச்சிரமும், பெண்கொடுத்தவனுக்குக் கிருச்சிராதிகிருச்சிரமும், பிராயச்சித்தமாம். ஹோமம்செய்வித்த புரோஹிதன் சாந்திராயணவிரதத்தைச்செய்யக்கடவன். எ-று.

கிருச்சிராதிகிருச்சிரமாவது இருபத்தொருநாள் பால்மாத்திரத்தினால் தேஹதாரணம்செய்வது என்று யாக்கியவல்கியர் சொன்னார். இங்கு பரிவேத்தாவாகிய இளையவனுக்குப் பிராயச்சித்தம் சொல்லப்படவில்லையேயாகிலும் யமஸ்மிருதியில்சொல்லியபடி பரிவித்தியான மூத்தவனுக்குச்சொன்ன இரண்டுகிருச்சிரங்களே இவனுக்கும் பிராயச்சித்தமென்றும், அவ்விருவரும் ஸமபாதகம் உடையவர்களென்றும் அறிக. இவ்விதமாக இளையவன் விவாகமாகாதமூத்தவனோடும் தன்மனைவியோடும் விதிப்படிபிராயச்சித்தத்தை அநுஷ்

டித்துத் தமயனுக்கு விவாகம்நடந்தபின் தன்பத்தினியை அவனுக்குச் சமர்ப்பித்து அவனால் அனுமதிசெய்து கொடுக்கப்பட்டபின் அவளையே விவாகம்செய்யக்கடவன் என்று வசிஷ்டர்சொன்னார். மூத்தவனும் இளையவனும் யக்ஞியத்தில் அக்நியாதாநம் செய்வதை மாறி நடத்தினாலும் தமக்கைக்குமுன் தங்கைக்குவிவாகம் மாறி நடந்துவிட்டாலும் இந்தநியாயமே அநுஸரிக்கத்தக்கதென்று ஸ்பஷ்டமாகிறது.

அக்ரேதிதிஷுப்ராயச்சித்தம். தமக்கைக்கு விவாகமாகாமலிருக்க விவாகம்செய்துகொண்டதங்கை அக்ரேதிதிஷுஎன்னப்படுவள், அவளுடைய தமக்கையானவள் திதிஷு என்னப்படுவள் என்று தேவலர்சொன்னார்.

தங்கையின் பர்த்தாவானவன் பனிரண்டுநாளில் செய்யத்தக்க பிராஜாபத்திய கிருச்சிரத்தைச்செய்து வேறொருவனால் விவாஹம் செய்யப்பட்டிருக்கிற தன்மனைவியின் தமக்கையைத்தான் மறுபடியும் விவாகம் செய்துகொள்ளக்கடவன், (திதிஷு) என்னப்பட்ட மூத்தவளைவிவாஹம் செய்தவன் கிருச்சிராதி கிருச்சிரத்தைச் செய்து தன் மனைவியை அவள்தங்கையைமுன் விவாகம்செய்து கொண்டவனுக்குக் கொடுத்துவிட்டுத்தான் வேறொருத்தியை விவாகம் செய்துகொள்ளக்கடவன் என்றுசொன்ன வசிஷ்டவசநம் வேறுயுகத்தைப் பற்றியது. கலியுகத்தில் விவாகம்செய்தவளுக்கு மறுபடிவிவாகம் விலக்கப்பட்டதாகையால் தமக்கையின்பதி தன்மனைவியை இளையவள்பதிக்குச் சமர்ப்பித்து அவனால் கொடுக்கப்பட்டவளைத் தானே மறுபடியும் விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்பது கருத்து. இந்த இரண்டுபெண்களும் அவளவள் பதிக்குச்சொன்ன பிராயச்சித்தத்தில் பாதிசெய்துகொள்ளவேண்டும். இளையவளை விவாகம் செய்தவன் மூத்தவளுக்கு விவாகம் ஆவதற்கு முன்னமே தன் பத்நியுடன் பிராயச்சித்தம் செய்துகொண்டால் மூத்தவள்பதிக்கு விதித்திருக்கும் பிராயச்சித்தத்தில் பாதி மூத்தவளுக்குச்செய்வித்து அவளைத் தான் முன்விவாகம்செய்து பின்பு முன்விவாகம் செய்யப்பட்டவளான இளையவளை மறுபடியும் விவாகம் செய்துகொள்ளவேண்டுமென்பது சாஸ்திரத்தில் தேறியபொருள். (உ௬, உ௪)

உஎ ॥ కుబ్జవామనషండేషు గద్గదేషుజడేషుచ ।
జాత్యంధేబధిరేమూకే నదోషః పరివేదనే ॥

(இ-ள்.) முதுகில் மாம்ஸமிகுதியால் விகாரசரீரத்தையுடையவனாகிய கூனன், சித்திரகுள்ளன், நபும்ஸகன், நாவில் குற்றத்தினால்

வினாவாகப் பேசச் சக்தியற்றவன், எந்தக்காரியங்களையும் செய்ய வல்லமையில்லாத ஜடன், பிறவிக்குருடன், பிறவிச்செவிடன், ஊமை, இவர்களில் ஒருவனுகத் தன்தமையன் இருக்கும்பக்ஷத்தில் அவனுக்கு விவாகயோக்கியதையில்லாமையால் அவனுக்குமுன் கநிஷ்டன் விவாகம் செய்துகொண்டால்முன்சொன்ன பரிவேதநதோஷமில்லை. தமையன் சன்னியாசியாய்விட்டாலும் தேசாந்தரத்தை அடைந்திருந்தாலும் தம்பி விவாகம்செய்துகொள்ளலாம். எ-று. (உரு)

౨౬ ॥ పితృవ్యపుత్రస్సాపత్న్యః పరనారీసుతస్తథా ।
దారాగ్నిహోత్రసంయోగే నదోషః పరివేదనే ॥

(இ-ள்.) சிறியதகப்பனுடைய பிள்ளை, தனக்குச் சக்களத்தித்தாயார்பிள்ளை, தத்தமகன், இவர்கள் தனக்கு மூத்தவர்களாயிருந்தாலும், அவர்களுக்குமுன் கனிஷ்டனை தான் விவாகம், யக்கியம் இவைகளைச்செய்து கொள்வதினுல் பரிவேதநதோஷமில்லை. எ-று. (உசு)

౨౭ ; జ్యేష్ఠోభ్రాతాయదాతిష్ఠేదాధానంనైవకారయేత్ ।
అనుజ్ఞాతస్తుకుర్వీత శంఖస్యవచనంయథా ॥

(இ-ள்.) ஜேஷ்டப்பிராதா இருந்து அவன் யக்கியத்தைச் செய்யாவிட்டால் அவனுடைய அநுமதிபெற்று இளையவன் அக்கினியை ஆதாநம்செய்யலாம் (யக்கியம்செய்யலாம்). இவ்விதமாகச் சங்கர்வசநமிருக்கிறது-எ-று.

இதுபோல் யக்கியம் செய்யாத பிதாவின் அநுமதியினுல் புத்திரன் யக்கியம்செய்வதை மநு விலக்கினுர். (உஎ)

౨౮ ॥ నష్టేమృతేప్రవ్రజితే క్లీబేచపతితేపతౌ ।
పంచస్వాపత్సునారీణాం పతిరన్యోవిధీయతే ॥

(இ-ள்.) தன்பதியானவன் தேசாந்தரமடைந்து அவன் சங்கதியே தெரியாமலிருத்தல், மரணமடைதல், சன்னியாசி யாகுதல், நபும்ஸகனுயிருத்தல், பதிதனுகுதல், ஆக இந்த ஐந்துவிதமான ஆபத்துக்களில் ஸ்திரீகளுக்கு வேறு பதி விதிக்கப்படுகிறுன்-எ-று.

இந்தப்புநர்விவாகம் யுகாந்தரத்தைப்பற்றிச் சொல்லப்பட்டது. ஏனென்றுல், விவாகம்செய்யப்பட்டவளுக்குப் புநர்விவாஹம், தாயத்தில் ஜேஷ்டாம்சம், அதிதிபூஜையில் கோவதம், தமையன் மனைவியைப்புணர்ந்து தம்பி ஸந்ததியை உண்டாக்குதல், ஸன்னியாஸம் ஆகிய ஐந்தும் கலியுகத்தில் செய்யக்கூடாதவையென்று ஆதித்திய புராணவசநமிருப்பதால், கீழ்ச்சொன்ன புநர்விவாகம் கலியுகத்தைப்

பற்றியதல்லவென்று அறிக. ஆதித்ய புராணவசநத்திலிருக்கின்ற (ஊடா) என்னும் பதத்திற்கு விதிப்படி விவாஹம் செய்யப்பட்டவளென்பதுபொருள், அப்படி யில்லாமலிருந்தால் இந்தயுகத்திலும் புநர்விவாஹம் செய்யலாமென்று கருத்து. (உஅ)

உ௯ ॥ మృతే భర్తరి యా నారీ బ్రహ్మచర్యవ్యవస్థితా ।
సా మృతా లభతే స్వర్గం యథా తే బ్రహ్మచారిణః ॥

(இ-ள்.) எந்தஸ்திரீயானவள் தன்பர்த்தா மரித்துவிட்டபின் பிர்ம்மசரியவிரதத்தை அநுஷ்டிக்கிருளோ அவள் பிர்ம்மசாரிகள் மரித்தால் ஸ்வர்க்கத்தை அடைவதுபோல் மரித்தபின் ஸ்வர்க்கத்தை அடைகிருள்-எ-று.

மரித்துவிட்டபின் என்பது கீழ்ச்சொன்ன தேசாந்தரம்போனவன் முதலியவர்களுக்கும் உபலக்ஷணம்.

இதனுல் பர்த்தா மரித்தபின் ஸ்திரீகள் புநர்விவாகம் செய்துகொள்ளாமல் பிர்ம்மசரிய விரதத்தில் நிலைத்திருப்பதில்விசேஷம் சொல்லப்பட்டது. (உகூ)

30 ॥ తిస్రః కోట్యర్ధకోటీ చ యాని లోమాని మానుషే ।
తావత్కాలం వసేత్స్వర్గే భర్తారం యానుగచ్ఛతి ॥

(இ-ள்.) எந்தஸ்திரீ மரணமடைந்த தன்பதியை அநுகமநம்செய்கிருளோ (உடன்கட்டை ஏறுகிருளோ) அவள் ஒருமனுஷியனுடைய தேகத்தில் மூன்றரைகோடி கணக்குள்ள எத்தனை மயிர்கள் இருக்கின்றனவோ அத்தனைகோடிகாலம் ஸ்வர்க்கலோகத்தில் வசிக்கிருள். எ-று.

இவ்விதமாகமரித்த தன்பதியுடன் அக்நியில் தேகத்தைவிடுவது உத்தமதர்மமென்றும் அவள் ஸ்வர்க்கத்தைஅடைகிருளென்றும் ஹாரீதர் சங்கர் அங்கிரசு இவர்கள் புகழ்ந்தார்களேயாயினும் அவளுக்குத்தற்கொலைசெய்துகொண்டதோஷம்வருகிறதோடு மரணமடைந்த பதியைஅநுமரணமடைவது பிராம்மணஸ்திரீக்குத்தர்மமன்றென்றும்மற்றஜாதிஸ்திரீகளுக்குத் தர்மமாமென்றும் பைடீநசி வியாக்கிரபாதமுனிமுதலானவர்களுடைய வசநம் நிஷேதிக்கிறதன்றோவெனில்இந்தவசநங்களுக்கெல்லாம் அநுகமநத்தை விதிக்கிறவசநமே பலமுடையதென்பதும் அநுகமநம் ஒரேசிதையில்படுத்துத்தேகத்தியாகம் செய்வதேயன்றி தனிச்சிதையில் செய்யத்தகாதென்பதும், நித்தியமும் தம்பதிகள் படுக்கையில் சயநிப்பதுபோலப் பதியின்பிணத்துடன் ஒரேசிதையில் படுத்து அக்நியால் தகிக்கப்படவேண்டுமென்பதும்

உசநா என்பவரால் சொல்லப்பட்டது. பிண்த்தைக்கொளுத்துவதற்காகக் கட்டைமுட்டைகளால் மேடாக அடுக்கப்பட்டதற்குச் சிதையென்றுபெயர். இதனால் கீழேசொன்னபிர்ம்மசரிய விரதத்தில் நிலைத்திருப்பதைக்காட்டிலும் பதி மரித்தவுடன் ஸ்திரீகள்அநுகமநம் செய்வது உத்தமமென்று சொல்லப்பட்டது. (௩௦)

౩౧ ॥ వ్యాళగ్రాహీయథావ్యాళంబలాదుద్ధరతేబిలాత్ ।
ఏవంస్త్రీపతిముద్ధృత్య తేనైవసహమోదతే ॥

(இ-ள்.) பாம்புபிடிப்பவன் புற்றின்ரந்திரத்திலமுழ்ந்திக்கிடக்கிற பாம்பைத்தன்பலத்தினால் எப்படி வெளியில் எடுத்துவிடுகிறானோ அப்படி அநுமரணம் செய்த பதிவிரதையானவள் (நரகத்திற்குச் செல்லுகிற)பர்த்தாவைத் தன்புண்ணியபலத்தினால் மீட்டுப் புண்ணியலோகத்தில் சேர்த்து அவனுடன் ஆநந்திக்கிறாள்-எ-று.

பிர்ம்மஹத்திமுதலிய மஹாபாதகங்களைச்செய்து அதற்காக யமபாசத்தினால் கட்டப்பட்டு யாதனைகளை அனுபவிக்குமிடங்களில் தள்ளுண்டு பரிதபிக்கத்தக்கவனே யாகிலும் அந்தப்பதியைப் பதிவிரதையாயிருந்துஅநுமரணம்செய்த ஸ்திரீ தேவலோகத்தை அடைவித்துத் தானும் சுமங்கலியாய்த் தேவர்களால் ஸ்துதிக்கப்பட்டு அவனுடன் வாழ்கிறாளென்று வியாஸபகவான் அருளிச்செய்தார். பாபிஷ்டையாயிருந்தால் அநுமரணத்தால் பாபங்களினின்று விடப்படுகிறாளென்று பாரதத்தில் சொல்லப்பட்டது. இந்தத்தர்மம் உத்தம ஸ்திரீகளுக்கே பர்த்தாவின் மரணகாலத்தில் செய்யத்தக்கதென்று அங்கிரசவும்,சிறுகுழந்தை யிருக்கும்பக்ஷத்திலும் கர்ப்பம்உண்டாயிருக்கும் பக்ஷத்திலும் அவைகளின் ரக்ஷணம் முக்கியமாகையால் குழந்தைக்காரி, கர்ப்பிணி, இவர்களுக்கு அநுமரணத்தில் அதிகாரமில்லை என்று பிரகஸ்பதியும், சிறுகுழந்தையை யுடையவள்,கர்ப்பிணி,ருது உண்டாகாமலிருப்பவள் அதாவது கர்ப்பசங்கையை யுடையவள், ருதுவாயிருப்பவள் ஆகிய இவர்கள் பதிவிரதைகளேயாகிலும் அநுமரணம்செய்ய அதிகாரிகளல்லரென்று நாரதரும் சொல்லியிருக்கிறார்கள். இதனால் சிறுகுழந்தைக்காரிக்குத் தன் குழந்தையை ரக்ஷித்துக்கொள்ள வேறு மனிதர் இருந்து அவர்களிடத்தில் இவளுக்கு நம்பிக்கையிருந்தால் அவள் அநுமரணம் செய்யத்தக்கவளென்பது தோற்றுகிறது. (௩௧)

முதலாவது அத்தியாயம் முற்றிற்று.

இரண்டாவது அத்தியாயம்.

அவதாரிகை. முதலாவது அத்தியாயத்தில் பிரகீர்ணக பாபங் களுக்குப் பிராயச்சித்தம் சொல்லப்பட்டது. அந்த அத்தியாயத்தின் முடிவில் ஸ்வர்க்க ஸாதநமாந அநுகமநத்தைச் சொல்லி இந்தஅத்தி யாயத்தில் பிர்ம்மலோக ஸாதநங்களும் யாகசீலர்களுக்குச்செய்யவே ண்டியவைகளுமான தகநமுதலியவைகளைச் சொல்லப்போகிறவரான ஸ்ரீபராசரமுனிவர் இதுபிராயச்சித்தகாண்டமாதலால் மேழேசொல்லி யிருந்திருக்கின்ற பிரகீர்ணகபாபங்களுக்குப் பிராயச்சித்தத்தை முத ல் ஒன்பது சுலோகங்களால் அருளிச்செய்கிறார்.

౧ ॥ వృకశ్వానసృగాలాద్యైః దష్టో యస్తు ద్విజోత్తమః ।
స్నాత్వా జపేత్స గాయత్రీం పవిత్రాం వేదమాతరమ్ ॥

நாய்கடித்தல் முதலியவற்றின் பிராயச்சித்தம். (இ-ள்.) செந் நாய், நாய், குள்ளநரி, பன்றிமுதலான ஜந்துக்களால் பிராம்மணோ த்தமன்கடிக்கப்பட்டால் அவன் ஸ்நாநம் செய்து வேதமாதாவும்பரி சுத்தமுமாகிய காயத்ரியைஜபிக்கக்கடவன்-எ-று. (க)

౨ ॥ గవాం శృంగోదకే స్నానం మహానద్యాస్తు సంగమే ।
సముద్రదర్శనాద్వాపి శునా దష్టశ్శుచిర్భవేత్ ॥

(இ-ள்.) பின்னும் கோசிருங்கஜலஸ்நாநஞ்செய்தல், மஹாநதி சங்கமத்தில் ஸ்நாநம்செய்தல், சமுத்திரத்தைப்பார்த்தல் இவைகளைச் செய்தால் நாயால்கடிக்கப்பட்டவன் சுத்தனாகிறான்-எ-று.

தன்தேகத்தில் அதமபாகம், மத்தியமபாகம், உத்தமபாகம், ஆ கிய இந்த இடங்களில்கடித்த இடத்திற்கேற்பக் மேழேசொன்ன மூன் றில் ஒருவிதப் பிராயச்சித்தத்தைச் செய்யவேண்டுமென்பதுகருத்து.

பன்றிமுதலியவைகளால் கடிக்கப்பட்டவன் எண்ணூறுதரம் காயத்ரியை ஜபித்து நூறு பிராணாயாமம் செய்யவேண்டுமென்று உச நா என்பவர் சொன்னார். இது சக்தியற்றவனைப் பற்றியது. சக்தியு ள்ளவன் கோ சிருங்க ஜலஸ்நாநம் முதலியவைகளைச் செய்யக்கட வன். **கோசிருங்கஜலஸ்நாநமாவது** கவயமிருகத்தின் (காட்டுப்பசுவி ன்) கொம்பில் ஜலத்தை நிறைத்துக்காயத்திரியால் நூறுதரம் ஜபித் துப் புரோக்ஷித்துக்கொள்ளுதல்.

நாய்கடித்தல் தோஷமாகிலன்றோ பிராயச்சித்தத்தை விதிக்க வேண்டுமெனில் வெகுதூரத்தில் விடவேண்டிய ஜந்துக்களான நாய்

முதலான நீச ஜந்துக்களைக் கிட்டிச்செல்லுதல், அவைகளோடு விளையாடுதல் முதலியவைகளைச் செய்வது விலக்கிய கருமமாகையால் அவைகளைப்பற்றிவந்த கடித்தலும் தோஷமாகி அதற்குப் பிராயச்சித்தம் விதிக்கப்பட்டதென்று கண்டுகொள்க. (௨)

3 ॥ వేదవిద్యావ్రతస్నాత శ్శునా దష్టో ద్విజో యది ।
స హిరణ్యోదకే స్నాత్వా ఘృతం ప్రాశ్య విశుధ్యతి ॥

(இ-ள்.) வேதத்தை முழுதுமோதிப் பிராஜாபத்தியம் ஸௌம்மியம் முதலான விரதங்களை அநுஷ்டித்தவனான பிராம்மணன் நாயால் கடிக்கப்பட்டால் ஸ்வர்ணத்தோடுகூடின ஜலத்தில் ஸ்நாநம் செய்து நெய்யைக்குடித்தால் சுத்தனாகிறான்-எ-று. (௩)

௪ ॥ సవ్రతస్తు శునా దష్టో యస్త్రిరాత్ర ముపావసేత్ ।
ఘృతం కుశోదకం పీత్వా వ్రతశేషం సమాపయేత్ ॥

(இ-ள்.) சாந்திராயணம்முதலான விரதத்தோடுகூடி யிருப்பவன் (விரதாநுஷ்டாநகாலத்தில்) நாயால் கடிக்கப்பட்டால் மூன்று நாள் உபவாஸமிருந்து நான்காவதுதினத்தில் நெய்யையும் தர்ப்பஜலத்தையும் குடித்துப்பின்பு விரதசேஷத்தைச் செய்து முடிக்கக்கடவன். எ - று. (௪)

௫ ॥ అవ్రతస్సవ్రతో వాపి శునా దష్టో భవేద్ద్విజః ।
ప్రణిపాతా ద్భవేత్పూతో విప్రైశ్చక్షుర్నిరీక్షితః ॥

(இ-ள்.) விரதத்தை அநுஷ்டிக்காதவன், விரதத்தோடு கூடினவன், இவர்களில் எவனாகிலும் நாயால் கடிக்கப்பட்டானேயாகில் அவ்விருவர்களும் பிராம்மணரைச் சேவித்து அவர்களால் பரிசுத்தமான பார்வைகளால் பார்க்கப்பட்டும் தகுந்த பிராயச்சித்தங்களைச்செய்தும் பரிசுத்தர்களாகிறார்கள்-எ-று. (௫)

௬ ॥ శునాఘ్రాతావలీఢస్య నఖైర్విలిఖితస్య చ ।
అద్భిః ప్రక్షాళనం ప్రోక్త మగ్నినా భూరితాపితమ్ ॥

(இ-ள்.) எவன் நாயால் கடிக்கப்படாமல் மூக்கினால் முகரப்பட்டும் நாக்கினால் நக்கப்பட்டும் அல்லது நகங்களால் கீறப்பட்டுமாவது இருக்கிறானோ அவன் அந்த இடத்தை மண்ணினாலும் ஜலத்தினாலும் நன்றாக அலம்பி நெருப்பில் காய்ச்சினால் பரிசுத்தனாகிறான்.

௭ ॥ శునా తు బ్రాహ్మణీ దష్టా జంబుకేన వృకేణ వా ।
ఉదితం గ్రహనక్షత్రం దృష్ట్వా సద్య శ్శుచిర్భవేత్ ॥

(இ-ள்.) பிராம்மண ஸ்திரீயானவள் நாய், குள்ளநரி, செந்நாய் முதலியவைகளால் கடிக்கப்பட்டால் அப்போது அந்தஸ்திரீ ராத்திரியில் உதயமாகின்ற சந்திரன்முதலான கிரகங்களையும் கிருத்திகை முதலான நக்ஷத்திரங்களையும் பார்த்தால் சுத்தையாகிறாள்,-எ-று.

౮ ॥ కృష్ణపక్షేయదాసోమో నదృశ్యేతకదాచన ।
యాందిశంవ్రజతేసోమ స్తాందిశంవాఽవలోకయేత్ ॥

(இ-ள்.) கிருஷ்ணபக்ஷத்திலும் மேகத்தால் ஆகாசம் மறைக்கப்படுகிறகாலத்திலும் சந்திரனும் நக்ஷத்திரங்களும் காணப்படாவிட்டால் சாஸ்திரவிதிப்படி அப்போது சந்திரன் இருக்கும் திசையையாவது பார்க்கவேண்டும்.-எ-று. (அ)

౯ ॥ అసద్బ్రాహ్మణకేగ్రామే శునాదష్టోద్విజోత్తమః ।
వృషంప్రదక్షిణీకృత్య సద్యస్స్నాత్వాశుచిర్భవేత్ ॥

(இ-ள்.) எந்தவூரில் பிராம்மணர்கள் இல்லையோ அந்தவூரில் நாயால் கடிக்கப்பட்டவன்பிராம்மணர்களைப்பற்றிச் செய்யவேண்டிய பிரதக்ஷிணம் முதலான ஆசாரங்களை விருஷபத்தினிடத்தில் செய்து பின்பு ஸ்நாநம்பண்ணினால் சுத்தனாகிறான்-எ-று.

ஸ்திரீ, புருஷன், நாய், குள்ளநரி, எலி, பெருச்சாளி, பூனை, காக்கை, பன்றிமுதலிய ஜந்துக்களால் கடிக்கப்பட்ட பிராம்மணன் அப்போது உடுத்திருந்த வஸ்திரத்துடன் ஸ்நாநம்செய்து பிராம்மணருடைய அநுமதியைப்பெற்று மந்திரஜலங்களால் புரோக்ஷிக்கப்பட்டு மூன்றுபிராணாயாமங்களைச்செய்து பசுக்களுக்குப் புல்கொடுத்துப் பிராம்மணபோஜநம் செய்வித்துத்தானும் கூடப்புசித்தால் சுத்தனாகிறானென்றுஹாரீதர்சொன்னார். இவ்விதமாக அதிக பிராயச்சித்தங்களை விதித்த சிலவசநங்களுக்குத் தன் அங்கங்களில் உத்தமமான அங்கங்களில் கடித்ததைப்பற்றியதென்றாவது அல்லது இரண்டுதரம் மூன்றுதரம் கடித்ததைப்பற்றியதென்றாவது அர்த்தங்கொள்ளவேண்டும். (க)

౧౦ ॥ చండాలేనశ్వపాకేన గోభిర్విప్రైర్హతోయది ।
ఆహితాగ్నిమృతోవిప్రో విషేణాత్మహతోయది ॥

౧౧ ॥ దహేత్తుబ్రాహ్మణంవిప్రో లోకాగ్నౌమంత్రవర్జితమ్ ।
స్పృష్ట్వావోఢ్వాచదగ్ధ్వాచ సపిండేషుచసర్వదా ॥

౧౧½॥ ప్రాజాపత్యంచరేత్పశ్చా ద్విప్రాణామనుశాసనాత్ ॥

துர்மரணமடைந்த யக்கியஞ் செய்தவனைத்தகநம் செய்வதின் பிராயச்சித்தம். (இ-ள்.) சண்டாளனால் அல்லது சுவபாகனால் அல்லது பசுக்களால் அல்லது பிராம்மணர்களால் அடிக்கப்பட்டாவது தானே விஷந்தின்றாவது யாகஞ்செய்த பிராம்மணன் மரணமடைந்தால்அவனை அவனுடையஏழுதலைமுறைக்குட்பட்டஞாதிகளில் ஒரு பிராம்மணன் லௌகிகாக்நியில் மந்திரமில்லாமல்தகநம் செய்யக்கடவன். அந்தச்சவத்தை ஸ்பரிசித்தாலும் சுமந்தாலும் பின்பு பிராம்மணருடைய அநுமதிபெற்றுப் பிராஜாபத்திய கிருச்சிரத்தைச் செய்யக்கடவன்-எ-று.

பிராம்மணஸ்திரீயினிடத்தில் சூத்திரனால் உண்டுபண்ணப் பட்டவன் சண்டாளனென்னப்படுவன். சூத்திரஜாதிப் பெண்ணினிடத்தில் க்ஷத்திரியனுக்குப் பிறந்தவள் உக்கிரை என்னப்படுவள். அவளிடத்தில் க்ஷத்திரியனுக்குப் பிறந்தவன் சுவபாகன் (நாயைச்சமைத்துத்தின்பவன்) என்னப்படுவன்.

முந்திய அத்தியாயத்தில் துர்மரணப் பிராயச்சித்தம் சொல்லப்பட்டதேயாகிலும் அது பொதுவிதியாகச் சொல்லப்பட்டதென்றும் இங்குயாகம்செய்தவனுடைய துர்மரணத்தைப்பற்றி விசேஷவிதியாகச் சொல்லப்பட்டதென்றும் அறிக. (௧௦, ௧௧, ௧௧½)

౧౨½। దగ్ధాస్థీనిపునర్గృహ్యక్షీరైః ప్రక్షాళయేద్ద్విజః ।
పునర్దహేత్స్వాగ్నినాతుస్వమంత్రేణాపృథక్పృథక్ ॥

(இ-ள்.) துர்மரணமடைந்த யாகசீலனுடைய சவத்தைத் தகநம் செய்த ஸமீப ஞாதியான ப்ராம்மணன் பிராஜாபத்திய கிருச்சிரத்தைச் செய்துகொண்ட பின்பு, முன் லௌகிகாக்நியில் மந்திரமின்றித் தகநம் செய்யப்பட்ட அஸ்திகளை எடுத்து அவைகளைப் பாலினால் அலம்பிக் காருஹபத்தியம் முதலான அக்நிகளாலே யாகஞ்செய்கிறவனுக்குச் சொல்லிய விதிப்படி புநர் ஸம்ஸ்கார மந்திரங்களைச் சொல்லி அந்த அஸ்திகளைப் பிரேதத்தைப்போல் தஹநம் செய்யக்கடவன். (எ-று.) (௧௨½)

౧౩½। ఆహితాగ్నిద్విజఃకశ్చిత్ప్రవసన్కాలచోదితః ।
దేహనాశమనుప్రాప్తస్తస్యాగ్నిర్వసతేగృహే ॥

౧౪½। ప్రేతాగ్నిహోత్రసంస్కారః శ్రూయతామృషిపుంగవాః ।

కృష్ణాజినంసమాస్తీర్య కుశైస్తుపురుషాకృతిమ్ ॥
௧௫ ॥ షట్ఛతానిశతంచైవ పలాశానాంచవృంతతః ।
చత్వారింశచ్ఛిరేదద్యా ద్దశకంఠేతువిన్యసేత్ ॥
௧௬ ॥ బాహుభ్యాంతుశతందద్యా దంగుళీషుదశైవతు ।
శతంతుజఘనేదద్యా ద్ద్విశతంతూదరేతథా ॥
௧௭ ॥ దద్యాదష్టౌవృషణయోః పంచమేఢ్రేతువిన్యసేత్ ।
ఏకవింశతిమూరుభ్యాంద్విశతంజానుజంఘయోః ॥
௧௮ ॥ పాదాంగుళీషుషడ్దద్యా ద్యజ్ఞపాత్రంతతోన్యసేత్ ।
శమ్యాంశిశ్నే వినిక్షిప్య ముష్కయోరరణింతథా ॥
௧௯ ॥ జుహూంచదక్షిణేహస్తే వామేతూపభృతంన్యసేత్ ॥
పృష్ఠేతూలూఖలందద్యా త్పృష్ఠేచముసలంతథా ॥
௨௰ ॥ ఉరసిక్షిప్యదృషదం తండులాజ్యతిలాన్ముఖే ।
శ్రోత్రేచ ప్రోక్షణీందద్యా దాజ్యస్థాలీంతుచక్షుషోః ।
௨௧ ॥ కర్ణేనేత్రేముఖేఘ్రాణే హిరణ్యశకలంన్యసేత్ ।
అగ్నిహోత్రోపకరణ మశేషంతత్రనిక్షిపేత్ ॥
௨௨ ॥ అసౌస్వర్గాయలోకాయ స్వాహేత్యేకాహుతింన్యసేత్ ॥
దద్యాత్పుత్రోథవాభ్రాతా ప్యన్యోవాపిచబాంధవః ॥
௨௩ ॥ యథాదహనసంస్కార స్తథాకార్యంవిచక్షణైః ।

தேசாந்தரத்தில் மரித்த யாகசீலனை ஸம்ஸ்கரித்தலின் விதி.
இ-ள். ஆஹிதாக்னியான ஒரு பிராம்மணன் தேசாந்தரம்சென்றவிடத்தில் காலகதியினால் மரணமடைய அவனுடைய அக்னி வீட்டிலிருந்தால் அந்தப்பிரேதத்தை அக்னியினால் ஸம்ஸ்காரம் செய்யவேண்டியவிதியைச் சொல்லுகிறேன் ரிஷிகளே கேளுங்கள். மான்தோலைப்பரப்பி அதன்மேல் தர்ப்பங்களாலும் எழுநூறுகணக்குள்ள சிறிய பலாசம் சமித்துக்களாலும் அல்லது பலாசமரத்தின் இலைக்காம்புகளாலும் ஒருபுருஷாகாரத்தைச்செய்து பிறகு, முகத்தில் சமித்துக்கள்நாற்பது, கழுத்தில் பத்து, கைகளில் நூறு, விரல்களில் பத்து, தொப்புளின்கீழ் குஹ்யஸ்தானத்தில் நூறு, வயிற்றில் இருநூறு, பீஜங்களில் எட்டு, ஆண்குறியில் ஐந்து, தொடைகளில் இருபத்தொன்று, முழங்கால் அதின்கீழ் ஜங்கைகளில் இருநூறு, கால்

விரல்களில் ஆறு, இவ்விதமாகச்சமித்துக்களை அல்லது இலைக்காம்புகளைவைத்துக்கட்டப்பட்ட அந்தப் புருஷசரீரத்தில் சம்மியையை ஆண்குறியிலும் அரணிக்கட்டையை விருஷணத்திலும், ஜுஹூ என்னும்பாத்திரத்தை வலதுகையிலும், உபபிருத் என்னும்பாத்திரத்தை இடது கையிலும், உரல் உலக்கைகளை முதுகிலும், திருஷத் என்னும்பாத்திரத்தை (அம்மியை) மார்பிலும், அரிசி, நெய், எள், இவைகளை முகத்திலும், புரோக்ஷணீபாத்திரத்தைக்காதிலும், நெய்ப்பாத்திரத்தைக் கண்களிலும் தங்கத்தகடுகளைக் காது, கண், முகம், மூக்கு இந்த இடங்களிலும் இவ்விதமாக யக்கியபாத்திரங்களை எல்லாம்வைத்து (అగ్నయేస్వర్గాయలోకాయస్వాహా) என்னும் மந்திரத்தால் ஒரு ஆகுதி(நெய்யாகுதி)செய்து புத்திரன் அல்லது பிராதா அல்லது வேறொருசமீப பந்துவாவது சமர்த்தனாக இருந்து விதிப்படி தஹந ஸம்ஸ்காரத்தைச்செய்யவேண்டும். எ-று. (கஙௗ, கசௗ, கருௗ, கசுௗ, கஎௗ, கஅௗ, கசுௗ, உ0ௗ, உகௗ, உஉௗ, உங.)

౨౪ ॥ ఈదృశంతువిధింకుర్యా ద్బ్రహ్మలోకగతిర్ధ్రువా।
దహంతియేద్విజాస్తంతు తేయాంతిపరమాంగతిమ్ ॥

(இ-ள்.) இவ்விதமான ஆஹிதாக்நி ஸம்ஸ்கார விதியைச்செய்தால் அந்த ஆஹிதாக்நி பிர்ம்மலோகத்தை நிச்சயமாய் அடைகிறான். எந்தப்பிராம்மணர்கள் இவ்விதமாகத் தஹநம்செய்தார்களோ அவர்களும் உத்தம கதியை அடைகிறார்கள். (எ-று.) (உச)

౨౫ ॥ అన్యథాకుర్వతేకర్మ త్వాత్మబుద్ధ్యాప్రచోదితాః ।
భవంత్యల్పాయుషస్తేవై పతంతినరకేశుచౌ ॥

(இ-ள்.) இவ்விதமாகச்செய்யாமல் தங்கள் புத்திக்குத் தோன்றினபடியே எவர்கள்இந்தக் கருமத்தைச்செய்கிறார்களோ அவர்கள் அல்பாயுசுக்களாகி அசுசியான நரகத்தில் விழுகிறார்கள்(எ-று.) (உரு)

இரண்டாவது அத்தியாயம்
முற்றிற்று.

மூன்றாவது அத்தியாயம்.

அவதாரிகை. பிரகீர்ணக பாபங்களுக்குப் பிராயச்சித்தத்தைச் சொல்லி வருகையில் ஒரு ஸந்தர்ப்பத்தினால் ஆஹிதாக்நி ஸம்ஸ்காரத்தை இந்தக் காண்டம் இரண்டாம் அத்தியாயத்தில் சொல்லி மூன்

ரும் அத்தியாயத்தில் உபபாதகங்களின் பிராயச்சித்தத்தை முக்கியமாகச் சொல்லப் போகிறவராய் ஸ்ரீபராசர மஹாமுனிவர் பிரதிஜ்ஞை செய்கிறார்.

மூ॥௧ ॥ అతఃపరంప్రవక్ష్యామి ప్రాణిహత్యానునిష్కృతిమ్ ।
పరాశరేణపూర్వోక్తాం మన్వర్థేఽపిచవిస్తృతామ్ ॥

(இ-ள்.) பிரகீர்ணக பாபங்களுக்குப் பிராயச்சித்தத்தைச் சொல்லியபின் விருத்த பராசரராலும் மனுவினாலும் விஸ்தரித்துச் சொல்லப்பட்டதும் மலிநீகரண ரூபங்களான பிராணி ஹத்திகளில் செய்யவேண்டியதுமான பிராயச்சித்தத்தைச் சொல்லுகிறேன். (என்கிறார் பராசரர்) (எ-று.) (க)

௨ ॥ క్రౌంచసారసహంసాంశ్చ చక్రవాకంచకుక్కుటమ్ ।
జాలపాదంచశరభమహోరాత్రేణశుద్ధ్యతి ॥

மலிநீகரண பாபவிசேஷமான பக்ஷிவதத்திற்குப் பிராயச்சித்தம். (இ-ள்.) கிரௌஞ்சம், வண்டாழ்வான், ஹம்ஸம், சக்கிரவாகம், கோழி, வாத்து, சரபம் ஆகிய இந்தப் பக்ஷிகளைக் கொன்றவன் ஒரு நாள் முழுதும் உபவாசமிருந்தால் சுத்தனாகிறான். (எ-று.)

ஹம்ஸம் முதலிய பக்ஷிகளைக் கொன்றவன் கோ தானம் செய்யக் கடவனென்று மனு யாக்கியவல்கியர்கள் சொன்னது உபவாஸமிருக்க அசக்தனான தனிகன் விஷயமென்று கருத்து. (உ)

3 ॥ బలాకటిట్టిభోవాపి శుకపారావతావపి ।
అహినక్రవిఘాతీచ శుద్ధ్యతేనక్తభోజనాత్ ॥

(இ-ள்.) நாரை, சிறு குருவி, கிளி, மாடப்புறா, ஸர்ப்பம், முதலை, இவைகளைக் கொன்றவன் பகலில் உபவாஸ மிருந்து ராத்திரியில் போஜனம் செய்வதால் சுத்தனாகிறான். (எ-று.) (௩)

௪ ॥ వృకకాకకపోతానాం శారితిత్తిరిఘాతుకః ।
అంతర్జలఉభేసంధ్యే ప్రాణాయామేనశుద్ధ్యతి ॥

(இ-ள்.) விருகம் என்னு மொருவித பக்ஷி, காக்கை, புறா, பெண் கிளி, சிச்சிலவு இவைகளைக் கொல்லுகிறவன் ஜலத்தின் நடுவில் இரண்டு ஸந்தியைகளிலும் இடை விடாமல் அந்தந்த ஸந்தியைகள் முடியுமளவும் எவ்வளவுப் பிராணாயாமங்களைச் செய்யக் கூடுமோ அவ்வளவும் செய்தால் சுத்தனாகிறான். (எ-று.)

இந்த வதத்திற்குத் தில தாநம் முதலியவற்றை மனு விதித்தது தநிகன் விஷயமென்று கருத்து. (௪)

౫ ॥ గృధ్రశ్యేనశశాదానా ములూకస్యచఘాతుకః ।
అపక్వాశీదినంతిష్ఠే త్త్రికాలంమారుతాశనః ॥

(இ-ள்.) கழுகு, பருந்து, முயலடிப்பா னென்னும் பக்ஷி, கோட்டான் இவைகளைக் கொல்லுகிறவன் அக்நியில் பசநம் செய்யப்படாத கிழங்கு, பழம் முதலியவற்றை ஒருதிநம் புசித்துப் பின்பு மூன்று காலம் (ஒன்றரை நாள்) உபவாஸமிருக்கக்கடவன்.

இவைகளைக் கொல்லுகிறவன் ஒரு நாள் உபவாஸமும் ஸகல விதமான விரை தாநமும் செய்யவேண்டுமென்று காசியபர் விதித்தது அசக்தனைப் பற்றியதென்று கருத்து. (௫)

౬ ॥ వల్గులీటిట్టిభానాంచ కోకిలాఖంజరీటకే ।
లావికారక్తపక్షేషు శుధ్యతేనక్తభోజనాత్ ॥

(இ-ள்.) வல்குலி என்னும் பக்ஷி, நாரையின் பேதம் அல்லது மீன் குத்திக் குருவி, குயில், வலியன், லாவிகை என்னும் பக்ஷி, கருடபக்ஷி, இவைகளைக் கொன்றவன் பகலில் உபவாஸ மிருந்து இரவில் புசிப்பதினால் சுத்தனாகிறான். (எ-று.) (௬)

౭ ॥ కారండవచకోరాణాం పింగళాఖురరస్యచ ।
భారద్వాజాదికంహత్వా శివంపూజ్యవిశుధ్యతి ॥

(இ-ள்.) நீர்க் காக்கை, சகோரமென்னும் நிலாமொக்கி, பெண் கோட்டான், அன்றில் பக்ஷி, பரத்துவாஜ பக்ஷி இவை முதலிய பக்ஷிகளைக் கொன்றவன் சைவ மந்திர கல்பத்தில் சொல்லியபடி சிவனைப் பூஜித்தால் சுத்தனாகிறான். (எ-று.) (௭)

౮ ॥ భేరుండచాషభాసాంశ్చపారావతకపింజలా ।
పక్షిణాంచైవసర్వేషామహోరాత్రమభోజనమ్ ॥

(இ-ள்.) கெண்டபேரண்டம், காடை, தங்கம்போன்ற தலைக் கொண்டையை யுடைய ஒரு பக்ஷி, ஓர்வகைப் புறா, சித்திரவர்ணமான இறகையுடைய பக்ஷி, இவைகளைக் கொன்றவனும், மற்ற எல்லாப் பக்ஷிகளையும் கொன்றவனும் ஒரு பகலு மிரவும் சுத்தோபவாஸ மிருக்கவேண்டும். (எ-று.)

மலிநீகரணப் பிராயச்சித்தம். இதுவரையில் மலிநீகரணவிசேஷமான பக்ஷிவதத்திற்குப் பிராயச்சித்தம் சொல்லப்பட்டது. பின்

னும் மிகுந்திருக்கிற மலினீகரண பாபமான புழு பூச்சிகளைக் கொல்லுவதற்கும், கள்ளோடு கலந்ததைப் புசிப்பதற்கும், விஷ்ணுஸ்மிருதியில் தப்த கிருச்சிரம் அல்லது கிருச்சிராதி கிருச்சிரத்தைச் செய்யவேண்டுமென்று சொல்லப்பட்டது. பக்ஷிகளிலும் புழு பூச்சிமுதலானவைகளிலும் எலும்புடையவைகளான ஆயிரம் பிராணிகளையும் எலும்பில்லாதவைகளான ஒரு வண்டி அளவு பிராணிகளையும் கொன்றால், இந்த இரண்டுவித வதத்திற்கும் சூத்திரனைக்கொன்ற பாபத்திற்கு விதித்த பிராயச்சித்தத்தைச் செய்யவேண்டு மென்றும் எலும்புடைய ஜந்துக்களில் அவ்வளவு இல்லாமல் ஒன்று இரண்டைக் கொன்றால் பிராம்மணனுக்கு ஏதேனு மொரு சிறிய தானத்தையும் எலும்பில்லாத ஜந்துக்களை அல்பமாகக் கொன்றால் பிராணாயாமத்தையும் செய்யவேண்டு மென்றும் மனு சொன்னார். (அ)

௯॥ హత్వామూషకమార్జార సర్పాజగరడుండుభాన్ ।
కృసరంభోజయేద్విప్రాన్ లోహదండశ్చదక్షిణా ॥

ஸங்கலீகரணப் பிராயச்சித்தம். (இ-ள்.) பெருச்சாளி, அதின் பேதங்கள், பூனை, கீரிப்பிள்ளை, ஸர்ப்பம், மலைப் பாம்பு, தண்ணீர்ப் பாம்பு, இவைகளை அடித்துக் கொன்றவன் எள் பயறு இவைகளோடு பசநம் செய்விக்கப்பட்ட கிருஸர மென்கிற அன்னத்தைப் பிராம்மணருக்குப் போஜனம் செய்வித்து எஃகினால் செய்த தடியைத் தக்ஷிணையாகக் கொடுக்கக் கடவன். (எ-று.)

ஸர்ப்பங்களைக் கொன்ற பிராம்மணன் பிர்ம்ம ஹத்திக்குச் சொல்லிய பிராயச்சித்தத்துள் ஏழு நாளில் செய்யத்தக்கதான பிராயச்சித்தத்தைச் செய்யக்கடவனென்று மனுவும், இவைகளைக் கொன்றவன் மூன்று நாள் உபவாச மிருந்து பிராம்மண போஜநம் செய்வித்தால் சுத்தனாகிறானென்று ஸம்வர்த்தரும், ஸர்ப்ப ஹத்தியில் உளுந்தைத் தாநம் செய்யக் கடவனென்று உசநாவும், பிராஜாபத்தியகிருச்சிரத்தைப் பனிரண்டு நாள் செய்து பின்பு ஸ்வல்ப தாநமும் செய்யவேண்டு மென்று வஸிஷ்டரும் சொன்ன குரு, லகு விதிகளை ஆலோசித்துச் சில விதி அறிந்து செய்ததற்கும், சில விதி அறியாமல் செய்ததற்கும் சில விதி அடிக்கடி செய்ததற்கும், சில விதி ஒருதரம் செய்ததற்கு மென்று இவ்விதமாக ஊஹித்து அறிந்துகொள்ளவேண்டும். (கூ)

௧௦॥ శంసమార్జారనకులగోధాం హత్వామణ్డూకకాకమ్ ।
శ్వాంతా కఫలభక్షీచా స్యహోరాత్రేణశుధ్యతి ॥

(இ-ள்.) நீர்க் குரங்கு அல்லது ஒருவித முதலை, உடும்பு, ஆமை, சல்லியக மென்னும் ஒருவகை மத்ஸியம், முள்ளம் பன்றி, இவைகளைக் கொன்றவன் ஒரு பகலும் இரவும் கத்தரிக்காயை மாத்திரம் புசித்தால் சுத்தனாகிறான். (எ-று.)

இவைகளின் வதத்திலும் காசியபர் முதலானவர்கள் சொன்ன பிராயச்சித்த பேதங்கள் முன் சுலோகத்தில் சொல்லியபடி சில நிமித்தங்களால் வந்தன வென்று கண்டுகொள்க. (கo)

౧౧॥ వృకజంబుకఋక్షాణాం తరక్షుశ్వానఘాతుకః ।
తిలప్రస్థం ద్విజే దద్యా ద్వాయుభక్షో దినత్రయమ్ ॥

(இ-ள்.) செந் நாய், குள்ள நரி, கரடி, சிவிங்கி, நாய் இவைகளைக் கொன்றவன், ஒரு படி எள்ளைப் பிராம்மணனுக்குக் கொடுத்து மூன்று நாள் சுத்தோபவாஸ மிருக்கவேண்டும். (எ-று.)

நாயைக் கொன்றவனுக்கு மூன்று நாள் உபவாஸத்தை விஷ்ணுவும், சூத்திரவதத்திற்குரிய பிராயச்சித்தத்தைப் பைடீநஸியும் சொன்னது நெடுநாளாக இந்தப் பாதகத்தைச் செய்துகொண்டிருப்பவன் விஷயமென்று கொள்ளவேண்டும். (கக)

౧౨॥ గజస్య చ తురంగస్య మహిషోష్ట్ర నిపాతనే ।
ప్రాయశ్చిత్తమహోరాత్రం త్రిసంధ్యమవగాహనమ్ ॥

யானை முதலிய வதத்தின் பிராயச்சித்தம். (இ-ள்.) யானை, குதிரை, எருமைக்கடா, ஒட்டகம், இவைகளைக் கொன்றவனுக்கு மூன்று கால ஸ்நாநத்தோடு கூடிய ஒரு நாள் உபவாஸம் பிராயச்சித்தமாம். (எ-று.)

குதிரையைக் கொன்றவன் வஸ்திரத்தையும், யானையைக்கொன்றவன் ஐந்து கறுத்த எருதுகளையும், கழுதையைக் கொன்றவன் ஒரு வருஷத்திய சேங்கன்றையும், வெள்ளாடு செம்மறியாடுகளைக் கொன்றவன் பொன்னையும், ஒட்டகத்தைக் கொன்றவன் எள்ளையும் தானமாகக்கொடுக்கக் கடவனென்று மனு, விஷ்ணு இவர்கள் சொன்னது விசேஷ தநமுடையவனைப் பற்றியது. தரித்திரன் விஷயத்தில் ஏழு நாள்உபவாஸத்தை ஸம்வர்த்தர் விதித்தார். இதுவும் அடிக்கடி இந்தப்பாபத்தைச் செய்துகொண் டிருப்பவனைப் பற்றியதென்றறிக. யானை குதிரை எருமைக்கடா இவைகளைக் கொன்றாலும், கோ, பூமி, பெண், இவர்களைப்பற்றிப் பொய் வார்த்தையைச் சொன்னாலும், ஸாந்தபந கிருச்சிரம் செய்யவேண்டுமென்று ஜாபாலிசொன்னார்.

௧௩॥ కురంగంవానరంసింహం చిత్రంవ్యాఘ్రంతుఘాతయన్ ।
శుద్ధ్యతేసత్రిరాత్రేణ విప్రాణాంతర్పణేనచ ॥

(இ ள்.) மான், குரங்கு, சிங்கம், புலிபோன்றதான ஒருசித்திர மிருகம், புலி இவைகளைக் கொன்றவன் பிராம்மண போஜநத்தைச் செய்விப்பதோடு மூன்று நாள் உபவாஸத்தால் சுத்தனாகிறான். இந்தப் பாபத்தை விடாமல் செய்துகொண் டிருப்பவனும் இவைகளைக் கூட்டங் கூட்டமாக அடிப்பவனும், ஸாந்தபந கிருச்சிரத்தைச் செய்யவேண்டு மென்று ஜாபாலியும், பிராஜாபத்திய கிருச்சிரத்தைச் செய்யவேண்டு மென்று ஸுமந்துவும் சொன்னார்கள் (௧௩)

௧௪॥ మృగరోహిద్వరాహాణా మజాబస్తస్యఘాతుకః ।
అఫాలకృష్టమశ్నీయా దహోరాత్రముపోష్య సః ॥

(இ-ள்.) மான்ஜாதிகள், குதிரையைப் போன்ற சரீரத்தையும் மூன்று கொம்புகளையுமுடையதான ஒருவிதமான், பன்றி, சண்டை செய்கிற அப்பியாஸமுடைய ஆட்டுக்கடா, பெண் ஆடு, இவைகளைக் கொன்றவன் ஒரு நாள் உபவாஸ மிருந்து உழுத நிலத்தில் விளையாத செந்நெல் அரிசியைச்சமைத்துப் பாரணை செய்யவேண்டும்.(எ-று.) மூன்று நாள் உபவாஸமும், ஸ்வர்ண தாநமும் செய்யவேண்டு மென்று கசியபர் சொன்னது தனிகனாயிருந்து இந்தப் பாபத்தை அடிக்கடி செய்துகொண் டிருப்பவன் விஷயம். (௧௪)

௧௫॥ ఏవంచతుష్పదానాంచ సర్వేషాంవనచారిణామ్ ।
అహోరాత్రోషిత స్తిష్ఠే జ్జపన్వైజాతవేదసమ్ ॥

(இ-ள்.) நியாயத்தை உள்ளபடி அறிந்து பாபபேதங்களுக்கேற்றதாகப் பிராயச்சித்தங்களை ஊஹித்து இவ்விதமாகக் கீழே சொல்லப்படாத சகல காட்டு மிருகங்கள் வதத்திலும் (ஜாதவேதஸம்)என்னும் மந்திரஜபத்துடன் ஒருநாள் உபவாஸமிருக்கவேண்டும். (எ-று.)

௧௬॥ శిల్పినంకారుకంశూద్రం స్త్రియంవాయస్తుఘాతయేత్ ।
ప్రాజాపత్యద్వయంకృత్వా వృషైకాదశదక్షిణా ॥

உப பாதகங்களின் பிராயச்சித்தம். (இ-ள்.) சித்திரம் எழுதுகிறவன்முதலானவன், சமையல் செய்கிறவன் முதலானவன், சூத்திரன்,ஸ்திரீ ஆகிய இவர்களைக் கொன்றவன் இரண்டு பிராஜாபத்திய கிருச்சிரங்களைச் செய்து பத்து பசுக்களையும் பதினோராவதாக ஒரு விருஷபத்தையும் தக்ஷிணையாகக் கொடுக்கக்கடவன். (எ-று.) (௧௬)

౧౭॥ వైశ్యంవాక్షత్రియంవాపి నిర్దోషంయోఽభిఘాతయేత్ ।
సోఽతికృచ్ఛ్రద్వయంకుర్యాద్గోవింశద్దక్షిణాందదత్ ॥

(இ-ள்.) தோஷமற்றவனு யிருக்கிற வைசியனை அல்லது அப்ப டிப்பட்ட க்ஷத்திரியனை எவன் கொல்லுகிருனே அவன் இரண்டு அதி கிருச்சிரத்தைச் செய்து இருபது பசுக்களைத் தக்ஷிணையாகக் கொடுக்கக்கடவன். ([illegible])

தோஷமற்றவன் என்கிற விசேஷணத்தினுல் தோஷமுள்ளவனைக் கொன்றவனுக்குப் பிராயச்சித்தம் இதைக் காட்டிலும் குறைந்திருக்கு மென்பது கருத்து. க்ஷத்திரிய வதத்தில் மூன்று சாந்திராயண கிருச்சிரங்களையும் வைசிய வதத்தில் இரண்டையும் சூத்திர வதத்தில் ஒன்றையும் அநுஷ்டிக்க வேண்டுமென்று இருபத்து நால்வர் மதத்தில் சொல்லப்பட்டது. அறியாமல் பிராம்மணன் க்ஷத்திரியனைக் கொன்ருல் மூன்று பிராஜாபத்திய கிருச்சிரங்களாலும், வைசியனைக் கொன்ருல் இரண்டு கிருச்சிராதி கிருச்சிரங்களாலும், சூத்திரனைக் கொன்ருல் ஸாந்தபந கிருச்சிரத்தாலும் சுத்தனுகிருனென்று ஸம்வர்த்தர்சொன்னது தோஷமுடையவனை அறியாமல் கொல்லுவதைப் பற்றியதென்று அறியவேண்டும்.

பிராம்மணன் அஞ்ஞானத்தினுல் க்ஷத்திரியனைக் கொன்ருல் ஒரு எருதுடன் ஆயிரம் பசுக்களைத் தானம் செய்யக்கடவன். இல்லாவிட்டால் ஜடாதாரியாய் நியமத்துடன் ஊருக்கு வெளியில் மரத்தடியில் வசித்துக்கொண்டு பிர்ம்மஹத்திக்குச் சொல்லியிருக்கிற பனிரண்டு வருஷ விரதத்தை மூன்று வருஷம் அனுஷ்டிக்கக் கடவன். அஞ்ஞானத்தினுல் பிராம்மணுதிகள் உத்தம வைசியனைக் கொன்ருல் பிர்ம்ம ஹத்தியின் விரதத்தை ஒரு வருஷம் அநுஷ்டிக்கக் கடவர்கள். இல்லாவிட்டால் ஒரு விருஷபத்துடன் நூறு பசுக்களைத் தானம் செய்யக்கடவர்களென்று மநுவும், க்ஷத்திரியனைக் கொன்றவன் ஒரு எருதுடன் ஆயிரம் பசுக்களையாவது மூன்று வருஷம் பிர்ம்ம ஹத்தியின் பிராயச்சித்தத்தையாவது செய்யவேண்டு மென்றும், வைசியனைக் கொன்றவன் நூறு கோ தானத்தையாவது ஒருவருஷம் இந்தப்பிராயச்சித்தத்தையாவது செய்யவேண்டுமென்றும்,சூத்திரனைக்கொன்றவன் ஆறுமாஸம் இந்தப்பிர்ம்ம ஹத்தியின் பிராயச்சித்தத்தையாவதுபத்து கோதானத்தையாவது செய்யவேண்டு மென்றும் யாக்கியவல்கியரும், ராஜாவைக்

கொன்றால் ஆறுவருஷம் பிர்ம்மசாரிக்குச் சொல்லிய பிக்ஷாடநம், தரையில் சயநிப்பது, ஸ்திரீ ஸங்கம மில்லாமை முதலிய விரதங்களுடன் பிர்ம்மஹத்திக்குச் சொல்லிய விரதத்தில் கபாலத்தைத் தரிப்பதைவிட்டு மற்றதைச் செய்யவேண்டுமென்றும், ஒரு விருஷபத்துடன் ஆயிரம் கோதானத்தைச் செய்யவேண்டுமென்றும், வைசிய வதத்தில் மூன்று வருஷம் பிராயச்சித்தத்தையும் ஒரு விருஷபத்துடன் நூறு கோதாநத்தையும், சூத்திர வதத்தில், ஒரு வருஷம் பிராயச்சித்தத்தையும், ஒருவிருஷபத்துடன் பத்து கோதாநத்தையும் ஆத்திரேயி யல்லாத ஸ்திரீவதத்தில் சூத்திரவதப் பிராயச்சித்தத்தையும் செய்யவேண்டுமென்றும் கௌதமரும், அஞ்ஞாநத்தினால் க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களைக் கொன்றவன் கிரமமாகப் பனிரண்டு, ஒன்பது, ஆறுவருஷங்களின் பிராயச்சித்தங்களையும், அதன் முடிவில் ஆயிரம் கோதாநமும், பின்பு அதில் பாதியும், அதன் பின் அதில் பாதியில் பாதியுமாகச் செய்யவேண்டுமென்று சங்க லிகிதர்களும், க்ஷத்திரிய வைசிய சூத்திர வதத்தில் கிரமமாக வருஷங்கள் ஆறு, மூன்று, ஒன்றுவிழுக்காடு பிர்ம்மசரிய விரதத்தைத் தன் சத்தியைக் கோரி அநுஷ்டித்து விரதத்தின் முடிவில் கோதாநத்தையும் தக்ஷிணையுடன் பிராம்மணபோஜநத்தையும் செய்விக்க வேண்டுமென்று சாதாதபரும், க்ஷத்திரியனைக்கொன்றபிராம்மணன் ஆறு வருஷமும், வைசியனைக் கொன்றால் மூன்று வருஷமும், சூத்திரனைக் கொன்றால் ஒரு வருஷமும் பிராயச்சித்தத்தைச் செய்து ஒரு எருதுடன் பத்து கோதாநத்தைச் செய்யக் கடவனென்று ஹாரீதரும் இப்படியே உசநா என்பவரும், க்ஷத்திரிய வைசிய சூத்திர வதத்தில் கிரமமாக வருஷங்கள் எட்டு, ஆறு, மூன்று வீதமாகப் பிராயச்சித்தம் செய்யவேண்டுமென்று வசிஷ்டரும், ஒன்பது, அல்லது ஏழு வருஷங்கள் க்ஷத்திரியவதத்திலும், மூன்று வருஷம் வைசிய வதத்திலும், ஒரு வருஷம் சூத்திர வதத்திலும், ஸ்திரீவதத்திலும், பிராம்மணன் பிராயச்சித்தத்தைச் செய்யக் கடவனென்று போதாயநரும், பிராம்மணனைக் கொன்றால் இந்த மஹாவிரதத்தைப் பனிரண்டு வருஷம் செய்யவேண்டுமென்றும், யாகஞ்செய்துகொண்டிருக்கிற க்ஷத்திரியனையும் அப்படிப்பட்ட வைசியனையும், கர்ப்பிணியையும், ரஜஸ்வலையையும், ஆத்திரேய கோத்திரத்தில் ஜநித்தவளையும் கொன்றால் இதுவே பிராயச்சித்தமாமென்று விஷ்ணுவும், யாகம் செய்துகொண் டிருக்கின்ற வைசியனையும், அப்படிப்பட்ட க்ஷத்திரியனையும், ஆத்திரேயியாகிய பிராம்

மண ஸ்திரீயையும் கொல்லுவது பிர்ம்ம ஹத்தியாகுமென்று யமனும், இப்படியே சங்கரும் சொன்னார்கள்.

இங்கு உதாஹரித்த வசனங்களில் மூன்று, ஆறு, எட்டு, ஒன்பது, பன்னிரண்டு, இந்த வருஷங்களில் விரதாநுஷ்டானம் செய்யவேண்டுமென்று ஏற்பட்ட ஐந்துபக்ஷங்களும், பராசர முனிவரால் சொல்லப்பட்ட அதி கிருச்சிரங்களிரண்டைச்செய்யவேண்டிய பக்ஷமும் சேர்ந்து ஆக ஆறுபக்ஷங்களும் ஒருவித பாபத்திற்காக வெவ்வேறாகச் சொல்லப்படுவானேனெனில், நிர்த்தோஷனான க்ஷத்திரியன் உத்தமன், மத்தியமன், அதமன் என்னு மூன்றுவகையுடையவனும் அவற்றில் ராஜ்ஜியத்தைக் காப்பாற்றுவதுடன் யக்கியம் செய்பவன் உத்தமன், யக்கியம் செய்யாமல் ராஜ்ஜிய பரிபாலனம் செய்பவன் மத்தியமன், இரண்டுமின்றி ஜாதிமாத்திரத்தினால் க்ஷத்திரியனா யிருப்பவன் அதமன் என்றும் இவர்களில் ஒவ்வொருவனையும் அறிந்து கொன்றவனுக்கு அதிகமும் அறியாமல் கொன்றவனுக்கு அல்பமுமாக இரண்டிரண்டு பிராயச்சித்தங்கள் விதிக்கும்படி நேரிடுவதனாலெனக் கொள்ளவேண்டும். பின்னும்சிலவசனங்கள் கோதானத்தை விதித்தது தனமுடையவனைப் பற்றியதென்றும், சிலவசனங்கள் விதிக்காதது தரித்திரனைப்பற்றியதென்றும் ஏற்பாடுசெய்யவேண்டும். இந்தநியாயத்தினால் க்ஷத்திரியவதத்திற்குப் பிர்ம்மஹத்தியின் பிராயச்சித்தம் யாக்கியவல்கியரால் விதிக்கப்பட்டது. இதுபோல வைசிய சூத்திரர்கள்விஷயத்திலும் உத்தம மத்தியம அதமபேதத்தினால் பிராயச்சித்த வேறுபாட்டை அங்கீகரிக்கவேண்டும். கொல்லப்பட்ட வஸ்துவின் குணத்தினால் பிராயச்சித்தத்தில் பேதம் உண்டாகிறது போல் கொல்லுகிறவன் குணத்தினாலும் பிராயச்சித்தம் பேதப்படும். பிராம்மணனில் பாதி க்ஷத்திரியனுக்கும், அவனில் பாதி வைசியனுக்கும், அவனில் பாதி சூத்திரனுக்கும் பிராயச்சித்தம் செய்யவேண்டுமென்று தேவலர்சொன்னார். இது அறியாமல் செய்த வதத்தைப் பற்றியதாம்.

பராசரர் ஸ்திரீவதத்தில் இரண்டு பிராஜாபத்திய கிருச்சிரங்களையும், ஒரு விருஷபத்துடன் பத்து கோதானத்தையும் பிராயச்சித்தமாக விதித்ததற்கு ஏறக் குறைவான பிராயச்சித்தங்களை விதிக்கிற சில ஸ்மிருதிவசனம் விரோதப்படுகிறது. அன்றியும் வியபிசாரமுள்ள நாலுவர்ணத்திய ஸ்திரீகளையும் கொன்றவன் தன் சுத்திக்காகத் தோலால் செய்த தண்ணீர்ப்பாத்திரம், வில், வெள்ளாடு, செம்மறியாடு இவைகளைத் தனித்தனியே கிரமமாக அந்தந்த வர்

ணத்திற்கீடாகக் கொடுக்கக்கடவனென்று மநுவும், இப்படியே யாக்கியவல்கியரும்,சங்கு, முத்துச்சிப்பி, வெள்ளாடு,செம்மறியாடு இவைகளைக் கொடுக்கக்கடவனென்று வியாக்கிரமுனியும் சொல்லுகிறார்களன்றோவெனில்இந்த விதிதோஷமுடைய ஸ்திரீவதத்தைப்பற்றியதாகையாலும், பராசரர்விதித்தது தோஷமற்ற ஸ்திரீ வதத்தைப்பற்றியதாகையாலும் விரோதமில்லை யென்றறிக. தோஷமற்றஸ்திரீவதத்தில் சூத்திரஹத்தியின் பிராயச்சித்தத்தை யாக்கியவல்கியர் விதித்தது அறிந்து செய்த ஸ்திரீவதத்தைப்பற்றியது.

ஆஹிதாக்கியான பிராம்மணனுடைய தோஷமற்றவளான பத்திநியையாவது ஆத்திரேயியான ஸ்திரீயையாவது கொன்றால் பிர்ம்மஹத்தி தோஷத்தின் பிராயச்சித்தத்தைச் செய்யவேண்டுமென்று அங்கிரசு சொன்னது யாக சீலனான பிராம்மணனுடைய ஸ்திரீவிஷயமாகையாலும், பராசரர்விதித்தது ஸாதாரண ஸ்திரீவிஷயமாகையாலும் விரோதமில்லை. பின்னும் ஆத்திரேயியல்லாத ஸ்திரீவதத்தில் க்ஷத்திரியவதத்தின் பிராயச்சித்தத்தையும், க்ஷத்திரியஸ்திரீவதத்தில் வைசியவதப் பிராயச்சித்தத்தையும், சூத்திரஜாதி ஸ்திரீவதத்தில் ஒருவருஷ பிராயச்சித்தத்தையும், அநுஷ்டிக்கவேண்டுமென்று வஸிஷ்டரும், இந்தக்கிரமமாகவே வைசியஸ்திரீவதம்வரைக்கும் சொல்லிச் சூத்திரஜாதி ஸ்திரீவதத்தில் ஒன்பதுமாஸம் பிராயச்சித்தம் செய்யவேண்டுமென்று ஹாரீதரும் சொன்னார்கள். இந்த விரதம் அக்நிஹோத்திரம் செய்யாதவனது பாரியையாயும் குணவதியாயு மிருப்பவளை அறிந்துகொன்றவனைப் பற்றியதாகும். அறியாமல் பிராம்மணஸ்திரீயைக் கொன்றவிஷயத்தில் வைசியவதப் பிராயச்சித்தமும், அறிந்துகொன்ற விஷயத்தில் இரட்டிப்புப் பிராயச்சித்தமும் உண்டென்றும், துஷ்டசரித்திரமுள்ளவளைக் கொன்றவிஷயத்தில் ஒரு விதப் பிராயச்சித்தமும் இல்லையென்றும் வாத்ஸியர் சொன்னார். ஆத்திரேயி அல்லாதவள் வதத்தில் க்ஷத்திரியவதப் பிராயச்சித்தம் சொல்லப்பட்டதினால் ஆத்திரேயிவதத்தில் பிர்ம்மஹத்தி விரதம் அநுஷ்டிக்கத்தக்கதென்று அறியவேண்டும்.

யாகம்செய்துகொண்டிருக்கிற வைசியனையும், அப்படிப்பட்ட க்ஷத்திரியனையும், ஆத்திரேயியான பிராம்மணஸ்திரீயையும் கொன்றால் பிர்ம்மஹத்தி தோஷமென்றும், ஜன்மந்தொடங்கி ஸகல விதங்களானஜாதகருமமுதலிய ஸம்ஸ்காரங்களை அடைந்து பிர்ம்மசரிய விரதத்துடன் இருப்பவளும் கர்ப்பிணியும் ஆத்திரேயி என்னப்

படுவார்களென்றும் யமனும்,ரஜஸ்வலையானவள் ருதுஸ்நாநம்செய்த வள்இவர்கள்ஆத்திரேயி என்னப்படுவார்களென்றுவசிஷ்டரும் சொ ன்னார்கள். ருதுவாயிராத பிராம்மணஸ்திரீ வதத்தில் ஒருவருஷம் அர்த்தகிருச்சிரமும், க்ஷத்திரியஸ்திரீவதத்தில் ஆறுமாஸம், அல்லது மூன்றுமாஸம், வைசியஸ்திரீவதத்தில் மூன்றுமாஸம், அல்லது ஒன்றரைமாஸம், சூத்திரஜாதிஸ்திரீவதத்தில் ஒன்றரைமாஸம், அல்லது இருபத்துமூன்றரைநாளாகிலும் பிராயச்சித்தம் செய்யத்தக்கதென்று ஜாதிபேதத்தை அநுஸரித்துப் பிரசேதா சொன்னார். (கஎ)

౧౮॥ వైశ్యంశూద్రంక్రియాసక్తం వికర్మస్థంద్విజోత్తమమ్ ।
హత్వాచాంద్రాయణంతస్య త్రింశద్గాశ్చైవదక్షిణామ్ ॥

(இ-ள்.) அல்பபாகம் நல்லநடத்தையோடு கூடின வைசியனையும், தன்நிலை தவறாத சூத்திரனையும், பிராம்மணவதம் முதலியவிருத்த கருமங்களைச் செய்பவனாகிய க்ஷத்திரியனையும்,விருத்த கருமங்களில் நிலைத்திருப்பவனாகிய பிராம்மண சிரேஷ்டனையும், கொன்றவன் சாந்திராயண விரதத்தை அநுஷ்டித்து முப்பது பசுக்களைத் தக்ஷிணையாகக் கொடுக்கக் கடவன். (எ-று.)

இங்கு (த்விஜோத்தமம்) என்கிறபதத்திற்குப் பிராம்மணன் க்ஷத்திரியன் இருவரையும் பொருளாகக்கொண்டு நான்குவர்ணத்தியவதத்திற்கும் ஒரேபிராயச்சித்தம் சொல்லப்பட்டது. (கஅ)

౧౯॥ చండాలంహతవాన్కశ్చిద్బ్రాహ్మణోయదికంచన ।
ప్రాజాపత్యంచరేత్కృచ్ఛ్రం గోద్వయందక్షిణాందదత్ ॥

౨౦॥ క్షత్రియేణాపివైశ్యేన శూద్రేణైవేతరేణవా ।
చండాలస్యవధేప్రాప్తే కృచ్ఛ్రార్ధేనవిశుధ్యతి ॥

(இ-ள்.) சண்டாளர்களில் ஒருவனைக்கொன்ற பிராம்மணன் பிராஜாபத்திய கிருச்சிரத்தையும் இரண்டுகோதாநத்தையும் செய்தால் சுத்தனாகிறான். க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பிராம்மணஸ்திரீக்கு க்ஷத்திரியனால் பிறந்த ஜாதியான ஸூதவம்சத்தான் முதலானவர்கள் ஆகிய இவர்கள் சண்டாளனைக்கொன்றால் பாதிப் பிராஜாபத்திய கிருச்சிரத்தால் சுத்தராகிறார்கள். (எ-று.)

சண்டாளஸ்திரீகமநத்திற்கும், சண்டாளான்ன போஜனத்திற்கும், சண்டாளவதத்திற்கும், பராககிருச்சிரத்தால் சுத்தி என்று

அங்கிரசுசொன்னர். சண்டாளனைக்கொன்ற பிராம்மணன் பனிரண்டு பிராஜாபத்திய கிருச்சிரங்களையும் தப்தகிருச்சிரத்தையும் செய்யக்கடவனென்று ஹாரீதர் சொன்னது அறிந்துகொன்றவிஷயம். சூத்திரன் சண்டாளன் முதலியவர்களை அறிந்துகொன்முல் பராக கிருச்சிரத்தைச் செய்யவேண்டுமென்றும் அறியாமல் கொன்முல் சாந்திராயணத்தைச் செய்யவேண்டுமென்றும்லோகாக்ஷிசொன்னர். இப்படியே யாக்ஞவல்கியரும் சொன்னர். (கக, உ0)

௨0॥ చోరశ్వ ్వపాకశ్చండాలో విప్రేణాభిహతో యది।
అహోరాత్రోషితస్స్నాత్వా పంచగవ్యేన శుధ్యతి ॥

இ-ள். சண்டாளன், சக்கிலி, இவர்கள் திருடராகவர அவர்களைப் பிராம்மணன் கொன்முல் ஒருநாள் உபவாஸமிருந்து பஞ்சகவியத்தைப் புசிப்பதினுல் சுத்தனுகிருன். (எ-று.) (உக)

௨௨। శ్వపాకంవాపిచండాలం విప్రస్సంభాషతేయది।
ద్విజైస్సంభాషణంకుర్యా త్సావిత్రీంతుసకృజ్జపేత్ ॥

சண்டாள ஸம்பாஷணுதிகளின் பிராயச்சித்தம். இ-ள். சுவபாகனென்னும் சக்கிலி, சண்டாளன் இவர்களோடு பிராம்மணன் ஸம்பாஷித்தால் அவன் அதற்குப்பிராயச்சித்தமாகப் பூர்ணமாய் வேதமோதின மஹா பிராம்மணர்களோடு ஸம்பாஷணம்செய்யக்கடவன், அல்லது காயத்திரியை ஒருதரம் ஜபிக்கக்கடவன். (எ-று.)

பிராம்மணஸம்பாஷணத்தை அல்லது காயத்திரி ஜபத்தைச் செய்யக்கடவனென்று இதை விகல்பமாகவும் ஸம்பாஷணம் செய்யுங்காலத்தில் அவன் எச்சில் பிராம்மணன் மேல்பட்டால் பிராம்மணன் மூன்றுநாள் உபவாஸத்தினுல் சுத்தனுகிருனென்றும் ஹாரீதர் சொன்னர். (உஉ.)

௨3॥ చండాలైస్సహసుప్తంతు త్రిరాత్రముపవాసయేత్।
చండాలైకపథంగత్వా గాయత్రీస్మరణాచ్ఛుచిః ॥

இ-ள். சண்டாளர்களுடன் சயனித்துத் தூங்கினவனுக்கு மூன்றுநாள் உபவாஸத்தை விதிக்கவேண்டும். சண்டாளனுடன் வழிநடந்தவன் காயத்திரியை ஸ்மரித்தால் சுத்தனுகிருன். (எ-று.) (உங)

௨௪॥ చండాలదర్శనేసద్య ఆదిత్యమవలోకయేత్।
చండాలస్పర్శనేచైవ సచేలంస్నానమాచరేత్ ॥

(இ-ள்.) சண்டாளனைப்பார்த்தவன் சூரியனைப்பார்க்கக்கடவன், சண்டாளனைத்தொட்டவன் ஸசேலஸ்நாநத்தைச் செய்யக்கடவன்.

சண்டாளனைத்தொடுவதும், பார்ப்பதும் அவனோடுபேசுவதும், பாபமாகையால் அதற்குக் கிரமமாக ஸ்நாநாசமநங்களையும், பிராம்மணஸம்பாஷணத்தையும், சூரியன்முதலானஜோதிசுக்களைப்பார்ப்பதையும் செய்யவேண்டுமென்று ஆபஸ்தம்பரும் இப்படியே ஸுமந்துவும் சொன்னார்கள். சக்கிலி, பதிதன், அங்கஹீநன், உன்மாதம் பிடித்தவன், பிணத்தைக்கொளுத்தினவன், ஸூதகமுடையவன், பிள்ளை பெற்றவள், ரஜஸ்வலையாயிருப்பவள் இவர்களையும் நாய், கோழி, பன்றி இவைகளையும் தொட்டவர் உடுத்தவஸ்திரத்துடன் செய்வதாகிய ஸசேலஸ்நாநத்தை நதிகளில் செய்யக்கடவரென்று தேவலர் சொன்னார். நெய் அல்லது எண்ணெயினால் அப்பியங்கம் செய்து கொண்டவன் சண்டாளனை ஸ்பரிசித்தால் ஒருநாளுபவாஸமிருந்து பஞ்சகவியத்தைச்சாப்பிடுவதினால் பரிசுத்தனாகிறானென்றும் கீழ்ச் சொன்ன அசுத்தர்களை ஒருவன்தானும் அசுத்தனாயிருந்து ஸ்பர்சித்தால் அவன் ஒரு உபவாஸத்தினால் அல்லாமல் மூன்று உபவாஸத்தினால் சுத்தனாகிறானென்றும், பிராம்மணன் எச்சிலையும், கள்ளையும், சூத்திரனையும் ஸ்பரிசித்தால் கிரமமாக ஒருநாள் உபவாஸம், ஸ்நாநம், பஞ்சகவியம் இவைகளால் சுத்தனாகிறானென்றும் தேவலர் சொன்னார். சண்டாளாதிகளை ஸ்பரிசித்தவன் அந்தத்தீட்டுடன் மூத்திரம் முதலானவைகளை விட்டால் மூன்றுநாள் உபவாஸமிருக்கவேண்டுமென்றும் புசித்த எச்சிலுடன் சண்டாளாதிகளைத் தொட்டால் ஆறு நாள் உபவாஸமிருக்க வேண்டுமென்றும் சாதாதபர் சொன்னார். சிதையையும், சிதைக்கானகாஷ்டங்களையும், யூபஸ்தம்பத்தையும், சண்டாளனையும் ஸ்பரிசித்தால் ஸசேலஸ்நாநம் செய்யவேண்டுமென்று இருபத்து நால்வர் மதத்தில் சொல்லப்பட்டது. (௨௪)

௨௫॥ చండాలఖాతవాపీషు పీత్వాసలిలమగ్రజః ।

అజ్ఞానాచ్చైకభక్తేన త్వహోరాత్రేణశుధ్యతి ॥

(இ-ள்.) சண்டாளன் வெட்டுவித்த கிணறுகளில் அல்லது நடைபாவிகளில் பிராம்மணன் அறியாமல் தண்ணீர்குடித்தால் ஒருவேளை ஆஹாரவிரதத்தினாலும் அறிந்து குடித்தால் ஒரு உபவாஸத்தினாலும் சுத்தனாகிறான். (எ-று.)

சண்டாளன் வெட்டுவித்த கிணறு, குளம், நடைபாவி இவைகளில் ஸ்நாந பாநங்களைச் செய்த பிராம்மணன் பிராஜாபத்திய கிருச்

சிரத்தால் சுத்தனுகிருனென்று ஆபஸ்தம்பர் சொன்னது அடிக்கடி இந்தப் பாபத்தைச் செய்பவன் விஷயமெனவறிக. (உரு)

௨௬॥ చండాలభాండసంస్పృష్టం పీత్వాకూపగతంజలమ్ ।
గోమూత్రయావకాహార స్త్రిరాత్రాచ్ఛుద్ధిమాప్నుయాత్ ॥

(இ-ள்.) சண்டாளன் பாண்டத்திஞல் எந்தக் கிணற்றினின்று ஜலம் எடுக்கப் படுகிறதோ அந்தக் கிணற்று ஜலத்தைக் குடித்த பிராம்மணன் மூன்றுநாள் கோ மூத்திரத்தைக்குடிப்பதோடு யவ அரிசிமாவையும் புசித்தால் சுத்தனுகிருன். (எ-று.) (உசு)

௨௭॥ చండాలఘటసంస్థంతు యత్తోయంపిబతిద్విజః ।
తత్క్షణాత్క్షిపతేయస్తు ప్రాజాపత్యం సమాచరేత్ ॥

௨௮॥ యదినోక్షిపతేతోయం శరీరేయస్యజీర్యతే ।
ప్రాజాపత్యంనదాతవ్యం కృచ్ఛ్రంసాంతపనంచరేత్ ॥

(இ-ள்.) சண்டாளனுடைய பாண்டத்து ஜலத்தைப் பிராம்மணன் அறியாமல் குடித்து உடனே அறிந்து அதைக் கக்கிஞல் அப்போது பிராஜாபத்திய கிருச்சிரத்தைச் செய்யக்கடவன். அது வெளிப்படாமல் ஜெரித்துவிட்ட பக்ஷத்தில் ஸபா ஜநங்கள் அவனுக்குப் பிராஜாபத்திய கிருச்சிரத்தைப் பிராயச்சித்தமாக விதிக்கக்கூடாது, ஸாந்தபநமென்னும் கிருச்சிரம் விதிக்கத்தக்கது. (எ-று.)

சண்டாள பாண்ட ஜலத்தை அறியாமல் குடித்த பிராம்மணன் மூன்று நாள் உபவாஸத்திஞலும் அப்படிப்பட்ட சூத்திரன் ஒருநாள் உபவாஸத்திஞலும் சுத்தராகிருர்களென்று தேவலர் சொன்னது ஆபத்துவிஷயமென்றறிக. (உஎ, உஅ)

௨௯॥ చరేత్సాంతపనంవిప్రః ప్రాజాపత్యమనంతరః ।
తదర్ధంతుచరేద్వైశ్యః పాదంశూద్రస్యదాపయేత్ ॥

(இ-ள்.) சண்டாள பாண்டஜலத்தை அறிந்து குடித்த பிராம்மணனுக்கு ஸாந்தபநகிருச்சிரத்தையும், க்ஷத்திரியனுக்குப் பிராஜாபத்திய கிருச்சிரத்தையும், வைசியனுக்கு அதில் பாதியையும், சூத்திரனுக்குக் கால்வாசியையும் பிராயச்சித்தமாகவிதிக்கவேண்டும். (உகூ)

30॥ భాండస్థమంత్యజానాంతు జలందధిపయఃపిబేత్ ।
బ్రాహ్మణఃక్షత్రియోవైశ్య శ్శూద్రశ్చైవప్రమాదతః ॥

౩౧ ॥ బ్రహ్మకూర్చోపవాసేన ద్విజాతీనాంతునిష్కృతిః।
శూద్రస్యచోపవాసేన తథాదానేనశక్తితః॥

அந்தியஜாதியின்பாண்டத்து ஜலமுதலியவைகளைக் குடித்ததற்குப் பிராயச்சித்தம். (இ-ள்.) அந்தியஜாதிகளுடைய பாண்டத்திலிருக்கின்ற ஜலம், தயிர், பால், இவைகளைப் பிராம்மணன் க்ஷத்திரியன் வைசியன் சூத்திரன் இவர்கள் அறியாமல் குடித்தார்களாகில் இருபிறப்பாளருக்குப் பிர்ம்மகூர்ச்சபாநத்துடன் உபவாஸமும், சூத்திரனுக்கு உபவாஸமும் சக்திக்கீடானதாநமும் பிராயச்சித்தமாம்.

வண்ணான், முச்சி, கூத்தாடி, பாய்குடிசையிலிருப்பவனை குருவிக்காரன், செம்படவன், மேதரவனென்னும் மூங்கில்பாய்வேலைசெய்யும் ஒருவிதஜாதியான், வேடன் அல்லது இருளன் ஆகிய இந்த ஏழுஜாதிகளும் அந்தியஜாதிகளாம்.

பிர்ம்மகூர்ச்சவிதியை மேலே பராசரமுனிவர்சொல்லப்போகிறார். பசநம் செய்யப்படாத வஸ்துக்கள் (அரிசி முதலியவை), மாம்ஸம், நெய், தேன், பழம், எண்ணெய் இவைகள் அந்தியஜாதிகளுடைய பாண்டத்திலிருந்து அதினின்று வெளிப்பட்டால் பரிசுத்தங்களென்றும் மஹா தடாகங்களுக்குச் சண்டாள சம்பந்தத்தினால் தோஷமில்லையென்றும் சிறியகுளங்களுக்குக் கிணறுகளுக்குப்போல் சுத்தியைச் செய்யவேண்டுமென்றும் இருபத்துநால்வர்மதம் விஷ்ணுஸ்மிருதி இவைகளில் சொல்லப்பட்டது. (௩0, ௩க)

౩౨ ॥ భుక్త్వాఽజ్ఞానాద్ద్విజశ్రేష్ఠ శ్చండాలాన్నంకథంచన।
గోమూత్రయావకాహారో దశరాత్రేణశుధ్యతి॥

அறியாமல் சண்டாளாந்நத்தைப் புசித்ததற்குப் பிராயச்சித்தம். (இ-ள்.) அஞ்ஞாநத்தினால் சண்டாளாந்நத்தைப் புசித்த பிராம்மணன் கோமூத்திரத்தில் பசநம்செய்த யவஅரிசி அன்னத்தைப் பத்துநாள் புசித்தால் சுத்தனாகிறான். (எ-று.) (௩௨)

౩౩ ॥ ఏకైకంగ్రాసమశ్నీయా ద్గోమూత్రంయావకస్యచ।
దశాహంనియమస్థస్య వ్రతంకర్తుంవినిర్దిశేత్॥

(இ-ள்) (அஞ்ஞாநத்தினால் சண்டாளாந்நத்தைப் புசித்தவன்) கோமூத்திரத்தில் பசநம்செய்த யவஅரிசி அன்னத்தைத் திநம் ஒவ்வொரு கவளமாகப் பத்துநாள் புஜிக்கக்கடவன். நியமத்திலிருப்பவனுக்கு அதாவது, ஸ்நாநம், மௌநம், உபவாஸம், யாகம், வேத

மோதல், இந்திரியத்தை அடக்குதல், ஆசாரியன்பணிவிடை, சௌசம், கோபமில்லாமை, மனம் நிலைத்திருக்கை இவைகளுடன் கூடியிருப்பவனுக்கு) இந்த யாவக ஆஹாரவிரதத்தை உபதேசிக்கவேண்டும். (எ-று.)

கீழே சொன்ன நியமங்களுடன் இந்த விரதத்தை அநுஷ்டிக்க வேண்டுமென்பது கருத்து.

சண்டாளாதிகளுடைய அந்நத்தைஅறிந்து புசித்தவன் சாந்திராயணவிரதத்தை அல்லது தப்தகிருச்சிரவிரதத்தைச் செய்யக்கடவனென்றும், சண்டாளன், சக்கிலி, க்ஷத்திரியஸ்திரீக்கும்சூத்திரனுக்கும்பிறந்த க்ஷத்தா (வாசல்காப்பதுமுதலிய தொழிலுடையவன்), பிராம்மணஸ்திரீயினிடத்தில் க்ஷத்திரியனுக்குப் பிறந்தவனான ஸூதன் (குதிரைஓட்டுகிறவன்), பிராம்மணஸ்திரீயினிடத்தில் வைசியனுக்குப்பிறந்தவனான வைதேஹகன் (கடைச்சரக்குகள்பேரத்தைச் செய்பவன்), க்ஷத்திரியஸ்திரீக்கும் வைசியனுக்கும் பிறந்தவனான மாகதன், சூத்திரனுக்கு வைசிய ஸ்திரீயினிடத்தில் உண்டான ஆயோகவன் ஆகிய இவர்கள் அந்தாவஸாயிகளென்றும் இவர்களது அந்நத்தைப் புசிக்கக்கூடாதென்றும் அங்கிரசு சொன்னார். சண்டாளனது அரிசிமுதலியவற்றை வாங்கிப் புசித்தால் மூன்றுநாள் உபவாசத்தையும் பக்குவாந்நத்தைப் புசித்தால் பராக கிருச்சிரத்தையும் செய்யவேண்டுமென்று விஷ்ணுசொன்னார். மூலவசநத்தில் சொன்ன பிராயச்சித்தம் பக்குவாந்ந போசநத்தைப் பற்றியது. அது பராககிருச்சிரத்திற்குச் சரியானது. சண்டாளாந்நத்தை அறியாமல் புசித்த பிராம்மணன் ஒரு மாஸம் சாந்திராயண விரதத்தையும், சூத்திரன் அரை மாதம் சாந்திராயணவிரதத்தையும் செய்து மூன்றுநாள் உபவாசமிருந்து பிராம்மணர்களுக்குத் திருப்தியையும் செய்யக்கடவனென்று ஹாரீதர் சொன்னது மூலவசநத்தில் சொன்ன பிராயச்சித்தத்தைச் செய்துகொள்ள அசக்தனைப் பற்றியது. பிராம்மணனானவன் சண்டாளர் முதலியவர்களுடைய ஸ்திரீகளை அஞ்ஞாநத்தினால் சேர்ந்தாலும் அவர்களது அந்நத்தைப் புசித்தாலும் அவர்களிடத்தில் தாநம் வாங்கினாலும் பதிதனாகிறான். இவைகளைப் பிராம்மணன் அறிந்துசெய்தால் அவர்களோடு ஸமானனாகிறானென்று மநு சொன்னது அறிந்தும் நெடுநாள் விடாமலும் செய்வதைப்பற்றியது. சண்டாளாந்நத்தை அறியாமல் புசித்த பிராம்மணன் சாந்திராயண விரதத்தையும், அறிந்து புசித்தவன்ஒரு வரு

க்ஷம் பிராஜாபத்திய கிருச்சிரத்தையும் செய்து மறுபடி உபநயநம் செய்துகொள்ளவேண்டுமென்று கூர்மபுராணம் சொல்லுகிறது. சண்டாளன் பதிதன் இவர்களுடைய அந்நத்தைப் புசித்தால் மறுபடி உபநயநம் செய்துகொள்ளவேண்டுமென்று வசிஷ்டர் சொன்னார்.

௩௪ ॥ అవిజ్ఞాతస్తుచండాలో యస్యవేశ్మనితిష్ఠతి।
విజ్ఞాతేతూపసన్నస్య ద్విజాఃకుర్వంత్యనుగ్రహమ్ ॥

(இ-ள்.) சண்டாளன் அறியப்படாதவனாகி எவனுடைய வீட்டில் வசிக்கிறானோ அந்தவீட்டுக்காரன் அவனைச் சண்டாளனென்றறிந்த பின்பு தங்களை அடுத்தானாகில் பிராம்மணர்கள் அவனுக்குப் பிராயச்சித்தோபதேசமாகிற அநுக்கிரகத்தைச்செய்கிறார்கள். (எ-று.)

௩௫ ॥ మునివక్త్రోద్గతాన్ ధర్మాన్ గాయంతో వేదపారగాః।
పతంతముద్ధరేయుస్తం ధర్మజ్ఞాఃపాపసంకరాత్ ॥

(இ-ள்.) சகலவேதங்களையும் ஓதியும் தர்மங்களை அறிந்துமிருக்கிற பிராம்மணர்கள் மஹரிஷிகள் சொல்லியிருக்கின்ற தர்மங்களைச் சொல்லிப் பாபராசியினின்று பாபிஷ்டனைக் கரையேற்றுகிறார்கள். (எ-று.)

இங்குச்சண்டாள ஸஹவாஸம் ஒரேபாபமாயிருந்தாலும், அது மூலமாக நித்திய நைமித்திககருமாநுஷ்டாநங்கள் எல்லாம் வீணாகி விடுகிறபடியால் பாபராசியினின்று என்று சொல்லப்பட்டது.

௩௬ ॥ దధ్నాచసర్పిషాచైవ క్షీరగోమూత్రయావకమ్।
భుంజీతసహభృత్యైశ్చ త్రిసంధ్యమవగాహనమ్ ॥

(இ-ள்.) தயிரோடும் நெய்யோடும் பாலோடும்கூட்டிக் கோமூத்திரத்தில் பசநம்செய்த யவ அரிசி அந்நத்தைச் சண்டாளஸஹவாசம்நேரிட்ட வீட்டுக்குடையவனும் அந்த வீட்டில் வசிக்கிற குழந்தை கிழவர் முதலிய எல்லாரும் புசிப்பதுடன் மூன்றுகாலத்திலும் ஸ்நாநமும்செய்யவேண்டும். (எ-று.) (௫௬)

௩௭ ॥ త్ర్యహంభుంజీతదధ్నాచ త్ర్యహంభుంజీతసర్పిషా।
త్ర్యహంక్షీరేణభుంజీత ఏకైకేనదినత్రయమ్ ॥

(இ-ள்.) கோமூத்திர பசநமான யவ அரிசி அந்நத்தைத் தயிரோடுகலந்து மூன்றுநாளும், நெய்யோடு கலந்து மூன்றுநாளும், பாலோடுகலந்து மூன்றுநாளும் பின்பு இந்தவிதமாக ஒவ்வொருநாளும்

ஆகப் பன்னிரண்டு நாள் புசித்தலாகிய இந்தவிரதத்தைச்செய்யவே ண்டும். (எ-று.) (௩௭)

౩౭॥ భావదుష్టం న భుంజీత నోచ్ఛిష్టం క్రిమిదూషితమ్ ॥

(இ-ள்.) இந்தப்போசநத்தில் பாவதுஷ்டமானதையும், எச்சில், புழு, இவைகள் விழுந்து தூஷிக்கப்பட்டதையும், புசிக்கக்கூடாது.

எந்த அந்நம் பார்க்கும்போது அமேத்தியம் முதலானதுக ளோடு பலவகையாலும் சமமாக புத்தியில் தோன்றுகிறதோ அது பாவதுஷ்டமானது அதாவது எண்ணத்தினுல் தோஷமடைந்தது என்னப்படும். (௩௭௨)

౩౮॥ దధిక్షీరస్య త్రిపలం పలమేకం ఘృతస్య తు ॥

(இ-ள்.) தயிர்பால்களைத் திநத்திற்கு மூன்றுபலம் அளவாகவும் நெய்யைஒருபலம் அளவாகவும் சேர்த்துக்கொள்ளவேண்டும். (எ-று.)

தயிர், பால், நெய் இவைகளின் அளவு சொல்லப்பட்டது.

அந்நம் ஒரு கிராஸமளவு சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று முன்னமே ௩௩-வது சுலோகத்தில் சொல்லப்பட்டது. (௩௮)

౩౯॥ భస్మనా తు భవేచ్ఛుద్ధి రుభయోస్తామ్రకాంస్యయోః ।
జలశౌచేన వస్త్రాణాం పరిత్యాగేన మృన్మయే ॥

அசேதநங்களான தாம்பிரம்முதலியவைகளின்சுத்தி. (இ-ள்.) தாம்பிரம் வெண்கலம் இவைகளுக்குச் சாம்பலினுல் சுத்தியும் வஸ் திரங்களுக்கு ஜலத்தில் அலம்புவதினுல் சுத்தியும் உண்டாகும். மண்பாத்திரத்திற்கு அதைவிட்டுவிடுவதே சுத்தியாம். தாம்பிரபாத் திராதிகளுக்குப் போல் மண்பாத்திரத்திற்கு வேறு சுத்தியில்லை.

இதுவும் சண்டாள ஸம்பந்தவிஷயம். (௩௯)

౪౦॥ కుసుంభగుడకార్పాస లవణం తైలసర్పిషీ ।
ద్వారే కృత్వా తు ధాన్యాని దద్యాద్వేశ్మని పావకమ్ ॥

(இ-ள்.) குசும்பம் (தைலசாதகமான ஒருதானியம்), வெல்லம், பஞ்சு, உப்பு, எண்ணெய், நெய், தானியம் இவைகளைச் சண்டாளசக வாசம் நேரிட்ட வீட்டுவாசற்படியில் வைத்து அந்த வீட்டை நெரு ப்பிட்டுக் கொளுத்தவேண்டும். (எ-று.) (௪0)

౪౧॥ ఏవం శుద్ధస్తతః పశ్చాత్కుర్యాద్బ్రాహ్మణతర్పణం ।
త్రింశద్గావృషభైకంచ దద్యాద్విప్రేషు దక్షిణాం ॥

(இ-ள்.) இவ்விதமாகத்தானும் தன் ஜநங்களும் தன்வீடும் சுத்தி அடைந்தபின் பிராம்மணபோஜநம் செய்வித்து முப்பதுபசுக்களை ஒருவிருஷபத்துடன் பிராம்மணர்களுக்குத் தக்ஷிணையாகக்கொடுக்க வேண்டும். (எ-று.) (சக)

४௨ ॥ పునర్లేపనఖాతేన హోమజప్యేనశుధ్యతి ।
ఆధారేణచవిప్రాణాం భూమిర్దోషోనవిద్యతే ॥

(இ-ள்.) பாண்டத்தை விடுவதுபோல் சண்டாளன் வசித்த பூமியை விடவேண்டுவதில்லை. அந்த வீட்டுச்சுவருக்கு மறுபடி பூசுதல், அந்தவீட்டுமண்ணை வெட்டி எடுத்தல் இவைகளைச்செய்வித்துப் பிராம்மணர்களை அந்தவீட்டில் புகச்செய்து சாந்திஜபங்களையும் சாந்திஹோமங்களையும் செய்தால் அந்தப்பூமி சுத்தமாகிறபடியால் பூமிக்கு விடத்தக்க தோஷமில்லை. (எ-று.)

நெடுங்காலம் அறியாமல் ஒருவீட்டில் சண்டாளனோடு வசித்தவன் அதை அறிந்தபின் மண்பாத்திரங்களெல்லாவற்றையும் எடுத்தெறிந்து பாலகிருச்சிரம் தப்தகிருச்சிரம் இவைகளைச்செய்து பிராம்மணபோஜநம்செய்வித்துப் பிர்ம்மகூர்ச்ச பஞ்சகவியத்தைக் குடிப்பதனால் சுத்தனாகிறானென்று நெடுநாள்செய்த ஸகவாசத்திற்குப் பிராயச்சித்தத்தை ஹாரீதர் சொன்னார். சண்டாள ஸகவாசம் நேரிட்ட வீட்டுக்காரர் அந்த வீட்டைக் கொளுத்துதல், மண்பாத்திரங்களை ஒழித்தல், மரப்பாத்திரங்களைத் தச்சனைக்கொண்டு சீவுதல், சங்கம் முத்துச்சிப்பி வெள்ளி பொன் வஸ்திரம் இவைகளை ஜலத்தினால் அலம்புதல், வெண்கலம் தாம்பிரம் இந்தப்பாத்திரங்களை உலைக்களத்தில் காய்ச்சுதல், காடி பால் தயிர் மோர் இவைகளைக் கொட்டிவிடுதல், ஆகிய இவைகளைச்செய்து கோமூத்திரத்தில் பசநம்செய்த யவஅரிசி அந்நத்தைப் புசிப்பதாகியவிரதத்தை ஒருமாதம் அநுஷ்டிக்கவேண்டும். பாலவிருத்தஸ்திரீகளுக்கு இதில் பாதியே பிராயச்சித்தமாம். பதினாறுவயது வரைக்கும் பாலன், எழுபதுவயதுக்குமேல் பட்டவன் கிழவன். இந்தப்பிராயச்சித்தம் செய்தபின் பிராம்மணபோஜநத்தைச் செய்வித்து நூறு கோதாநத்தை அல்லது அதற்குச் சக்தியில்லாதவன் தன் கையிலுள்ள சகலத்தையும் தக்ஷிணையாகக் கொடுக்கக்கடவனென்று சியவனர் சொன்னார். (சஉ)

४3 ॥ చండాలైస్సహసంపర్కం మాసంమాసార్ధమేవవా ।
గోమూత్రయావకాహారో మాసార్ధేనవిశుధ్యతి ॥

(இ-ள்.) சண்டாளர்களோடு ஒருமாஸம் அல்லது அரைமாஸம் ஸகவாஸம்செய்த பிராம்மணன் கோமூத்திரபாகமான யவ அரிசி அந்நத்தைப் புசிப்பதாகிய விரதத்தை ஒருமாஸதோஷத்திற்கு ஒரு மாஸமும் அரைமாஸதோஷத்திற்கு அரைமாஸமும் பிராயச்சித்த மாகச் செய்யவேண்டும். (எ-று.)

இது வீடுதவிரக் கழனி, தோட்டம் இவைகளிலும், அயலூருக்கு யாத்திரைசெய்வது முதலான சமயங்களிலும் நேரிட்ட ஸகவாஸத்தைப்பற்றியது. சண்டாளன், புல்கஸன், சுவபாகன் இவர்கள் ஸகவாசத்திற்கு மூலத்தில்சொன்ன பிராயச்சித்தமே செய்யவேண்டுமென்று ஸம்வர்த்தர்சொன்னார். கீழ்ச்சொன்ன காலத்திற்கு அதிகமாகச் சண்டாளஸகவாஸம் நேரிட்டால் பிராஜாபத்திய கிருச்சிரத்தால் சுத்தியுண்டாகுமென்றும், பத்துப்பிராம்மணோத்தமர்களைச்சேர்த்து அவர்களுடைய அநுமதிபெற்றுக் கழுத்தளவு பள்ளத்தில் பசுவின்தொழுவத்தில் சாணியைச் சேருகக்கரைத்து அதில் ஒருநாள் முழுதும் உபவாஸமாகவிருந்து அவ்விடத்திலேயே பால கிருச்சிரத்தையும் கேச வபநத்தையும்செய்துகொண்டால் உத்தமமான சுத்தியுண்டாகுமென்றும் ஹாரீதர்சொன்னார். (௪௩)

౪౪ ॥ రజకీచర్మకారీచ లుబ్ధకీవేణుజీవనీ ।
చాతుర్వర్ణ్యస్యచగృహేత్వ విజ్ఞాతాతుతిష్ఠతి ॥

౪౫ ॥ జ్ఞాత్వాతునిష్కృతింకుర్యా త్పూర్వోక్తస్యార్ధమే తు ।
గృహదాహంనకుర్వీత శేషంసర్వంసమాచరేత్ ॥

(இ-ள்.) வண்ணாத்தி, முச்சியின்ஸ்திரீ, வேடுவச்சி, மூங்கில்பாய் நெசவுகளால் ஜீவநம்பண்ணுகிற ஒரு ஜாதிஸ்திரீ இவர்கள் பிர்ம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் வீட்டில் அறியப்படாதவர்களாக வசிக்கப் பின்பு அவர்களை அறிந்தால் முன்சண்டாளஸகவாஸத்திற்குச் சொன்ன பிராயச்சித்தத்தில் பாதியே செய்யவேண்டும், வீட்டைக்கொளுத்தவேண்டியதில்லை. பாத்திரங்களைச் சுத்திசெய்வது முதலிய மற்ற எல்லாவற்றையும்செய்யவேண்டும். (எ-று.) (௪௪, ௪௫)

౪౬ ॥ గృహస్యాభ్యంతరంగచ్ఛే చ్చండాలోయదికస్యచిత్ ।
తమగారాద్వినిర్వాస్య మృద్భాండంతువిసర్జయేత్ ॥

౪౭ ॥ రసపూర్ణంతుయద్భాండం నత్యజేత్తుకదాచన ।
గోమయేనతుసంమిశ్రై ర్జలైఃప్రక్షాళయేద్గృహం ॥

சண்டாளன் ஒருதரம் வீட்டில்புகுந்ததற்குப் பிராயச்சித்தம்.
(இ-ள்.) பிராம்மணாதிகளுடைய வீட்டில் சண்டாளன் உள்ளேபுகுந்தால் அவனை அந்தவீட்டினின்று அப்புறப்படுத்தி மண்பாத்திரங்களை எடுத்தெறிந்து விடவேண்டும். எண்ணெய், நெய்முதலான ரஸங்களின் பாண்டங்களை எறியவேண்டியதில்லை. சாணிஜலத்தினால் அந்தவீட்டை நன்றாக அலம்பவேண்டும். (எ-று.)

எவனொருவன் வேறு கிருகத்தில் வசிப்பவனாயிருந்தும் சண்டாளன்புகுந்தவீட்டில் ஒருதரம்புசிக்கிறானோ அவனும், அப்படிப்புசித்தவனுடைய வீட்டில் புசிக்கிற வேறொருவனுமாகிய இவ்விருவர்களில் முதல்புசித்தவன் பிராஜாபத்திய கிருச்சிரத்தில் பாதியும் இரண்டாவன் கால்வாசியும் செய்யவேண்டுமென்றும், சண்டாளனோடு ஒருகிணற்றில் தண்ணீர்குடித்தல், அவனுடைய அந்நத்தைப் புசித்தல், அவனைத் தொடுதல், அவனோடுஸகவாஸம்செய்தல் இவைகளால் தோஷத்தை அடைந்தவன் ஒருநாளைய உபவாஸம், பஞ்சகவியம் இவைகளால் சுத்தனாகிறானென்றும், குழந்தைக்காரி, ரோகிஷ்டன், கர்ப்பிணி இவர்களுக்கு இந்தத்தோஷம் ஸம்பவித்தால் ராத்திரியில் அந்நத்தைப் புசிக்கலாமென்றும் பாலர்களுக்கு இரண்டு யாமம் உபவாஸமே அமையுமென்றும் ஆபஸ்தம்பர்சொன்னார்.

౪౮ ॥ బ్రాహ్మణస్య వ్రణద్వారే పూయశోణితసంభవే ।
క్రిమిరుత్పద్యతే యస్య ప్రాయశ్చిత్తం కథం భవేత్ ॥

புண்வாயில் புழுவுண்டானால் அதற்குப் பிராயச்சித்தம்.
(இ-ள்.) எந்தப் பிராம்மணனுக்குத் தேகத்தில் சீயும் ரக்தமும் பெருகிக்கொண்டிருக்கிற புண்வாயில் புழு உண்டாகிறதோ அவனுக்குப்பிராயச்சித்தம் எப்படி ஆகும்? (எ-று.) (சஅ)

౪౯ ॥ గవాం మూత్రపురీషేణ దధిక్షీరేణ సర్పిషా ।
త్ర్యహం స్నాత్వా చ పీత్వా చ క్రిమిదుష్టః శుచిర్భవేత్ ॥

(இ-ள்.) பசுக்களுடைய மூத்திரம் சாணி இவைகளாலும் தயிர் பால் நெய்களாலும் அதாவது பஞ்சகவியத்தால் மூன்றுநாள் ஸ்நாநம்பண்ணி மூன்றுநாள் பஞ்சகவியத்தைக் குடித்தால் புண்ணில் புழுத்தவன் சுத்தனாகிறான். (எ-று.) (சக)

౫౦ ॥ క్షత్రియోఽపి సువర్ణస్య పంచమాషాన్ ప్రదాపయేత్ ।
గోదక్షిణాం తు వైశ్యస్యాప్యుపవాసం వినిర్దిశేత్ ॥

౫౦½ ॥ శూద్రాణాం నోపవాసస్స్యాత్ శూద్రో దానేన శుధ్యతి ॥

க்ஷத்திரியனுக்கானால் ஐந்துமாஷம் அளவுள்ள ஸ்வர்ணதானமும் வைசியனுக்கானால் கோதக்ஷிணையும் உபவாஸமும் விதிக்கவேண்டும். சூத்திரனுக்கு உபவாஸம் இல்லை, ஆனால் தானத்தினால் சுத்தனாகிறான். (எ-று.)

சாஸ்திரத்தில் விதித்த கருமத்தைச் செய்யாதவனுக்கும் விலக்கியகருமத்தைச் செய்தவனுக்குமன்றோ பிராயச்சித்தத்தை விதிக்கவேண்டும், அப்படிக்கன்றித் தேகத்தில் புழுஉண்டாவதற்கு ஏன் பிராயச்சித்தம் விதிக்கவேண்டுமெனில் இந்தப்புழு உண்டாவதும் ஜந்மாந்தரத்தில்செய்த பாபபலனாய் விதிக்கப்பட்டகருமங்களைச் செய்வதற்குரிய சுசியாயிருக்கையாகிற அதிகாரத்தைப்போக்கி அசுத்தியை உண்டுபண்ணுகிறதாகையால் சுத்தியை அவசியம் செய்துகொள்ளவேண்டுமென்றும் அந்தச்சுத்தியும் பிராயச்சித்தம் போன்றதாயிருப்பதால் இங்குச் சொல்லப்பட்டதென்றும் அறிக.

சுவர்ணத்தின்பிரமாணம். ஜென்னல் சந்தினால்வருகிற சூரிய கிரணத்தில் சூக்ஷ்மமாகக்காணப்படுகிற தூசியானது திரஸரேணு என்னப்படும். அது எட்டுகொண்டது லீக்ஷை. அது மூன்றுகொண்டது ராஜஸர்ஷபம், அது மூன்றுகொண்டது கௌரம். அது ஆறுகொண்டது யவமத்தியம், அது மூன்றுகொண்டது ஒரு குன்றிமணி. அது ஐந்துகொண்டது மாஷம், அது பதினாறுகொண்டது ஸ்வர்ணம் என்று யாக்கியவல்கியர் சொன்னார். கீழ்ச்சொன்னபிராயச்சித்தம் தொப்புளுக்குக் கீழ்ப்பாகத்தில் உண்டான புழுவைப்பற்றியது.

சரீரத்தில் நாபிக்கு மேல்புறத்திலானால் மனுசொல்லியபடி செய்யவேண்டும். அதாவது நாபியின்மேலே புழு உண்டானால் பசுவின் மூத்திரத்தினாலும் சாணத்தினாலும் மூன்று சந்தியையிலும் ஸ்நானம் செய்து மூன்றுநாள் பஞ்சகவியம் குடித்தால் சுத்தியுண்டாகிறதென்றும், நாபிக்கும் கழுத்திற்கும் நடுவேயானால் ஆறுநாள் பஞ்சகவியப் பிராசனம் செய்யவேண்டுமென்றும் தலைப்புண்ணில் புழு உண்டானால் பிராஜாபத்திய கிருச்சிரத்தைச் செய்யவேண்டுமென்றும் சொல்லப்பட்டது. ஸாந்தபந கிருச்சிரத்தைச்செய்து விருஷபதக்ஷிணை கொடுக்கவேண்டுமென்று சியவனர் சொன்னது ஒரேகாலத்தில் அநேக இடங்களில் புழு உண்டானவனைப்பற்றியதென்றறிக.

౫౧౪। అచ్ఛిద్రమితియద్వాక్యం వదంతిక్షితిదేవతాః ।
ప్రణమ్యశిరసాగ్రాహ్య మగ్నిష్టోమఫలంహితత్ ॥

பிராம்மணவசனத்தின்மகிமை. (இ-ள்.) பூமிதேவர்களான பிராம்மணர்கள் அச்சித்ரம் (பரிபூர்ணம்) என்று எந்தவாக்கியத்தைச்சொல்லுகிருர்களோ, அந்தவாக்கியமானது அக்நிஷ்டோமமென்னும் யாகத்தினுல் கிடைத்த பலன்போன்றதாகையால் ஒருவன் அதைவணங்கிச் சிரத்தினுல் கிரகித்துக்கொள்ளவேண்டும். (எ-று.)

ஒருபிராயச்சித்தத்தை அனுஷ்டிக்குங்காலத்தில் அதினுடைய ஏற்றக்குறைவுகளின் பூர்த்திக்காக ஸம்பூர்ணமாகட்டுமென்று பிராம்மணவாக்கியத்தை அவசியம் பிரார்த்தித்துப் பெற்றுக்கொள்ளவேண்டுமென்பது கருத்து. (ருகஉ)

౫౨౪। జపచ్ఛిద్రం తపశ్ఛిద్రం యచ్ఛిద్రం యజ్ఞకర్మణి ।
సర్వం భవతి నిశ్ఛిద్రం బ్రాహ్మణైరుపపాదితమ్ ॥

(இ-ள்.) ஜபத்திலுண்டான சித்ரம் (குறைவு), தபஸிலுண்டான சித்ரம், யக்கியத்திலுண்டான சித்ரம் இவைகளெல்லாம் பிராம்மணர்களால் அச்சித்ரம் (ஸம்பூர்ணம்) என்று சொல்லப்பட்டனவாகி அப்படியேஸம்பூர்ணமாகின்றன. (எ-று.) (ருஉஉ)

౫౩౪। వ్యాధివ్యసనినిశ్రాంతే దుర్భిక్షే డామరే తథా ।
ఉపవాసో వ్రతం హోమో ద్విజసంపాదితానివై ॥

(இ-ள்.) ஒருவன் வியாதியினுல் பீடிதனுயிருக்கையிலும் நெடுந்தூரம் வழிநடந்து இளைத்திருக்கையிலும் தெய்வீகமான துர்ப்பிக்ஷ காலத்திலும் அந்நிய ராஜாவினுல் தன்தேசத்திற்குத் துன்பம் உண்டாயிருக்கையிலும் தான்செய்யவேண்டிய உபவாசம், விரதம், ஹோமம் இவைகளைப் பிராம்மணர்களைக்கொண்டு செய்வித்துக்கொள்ளலாம். தன் பிதாமுதலியவர்களும் தனக்காகச்செய்யலாம்.

౫౪౪। అథవా బ్రాహ్మణాస్తుష్టా స్సర్వం కుర్వన్త్యనుగ్రహమ్ ।
సర్వాన్కామానవాప్నోతి ద్విజసంపాదితైరిహ ॥

பெரியோர்களுடைய அனுக்கிரகத்தின்பெருமை. (இ-ள்) ஒன்றையும்செய்துகொள்ளக்கூடாத விசேஷ ஆபத்து நேரிட்டபக்ஷத்தில் வேதத்தை முழுதுமோதின பெரியோர்களான பிராம்மணர்கள் இவன்முன்செய்திருந்த உபகாரத்தினுல்சந்தோஷித்தவர்களாகி ஆபத்தை அடைந்திருப்பவனைநோக்கி நீ தோஷமற்றவனுகக்கடவையென்று அனுக்கிரகிக்கிருர்கள். அவ்வளவு மாத்திரத்தினுல் ஒருவன் ஒரு விரதத்தையும் அநுஷ்டிக்காமலே குரு பிதா முதலியவர்

களாயுள்ள பிராம்மணர்களுடைய ஆசீர்வாதத்தினுல் ஸகல இஷ்டங்களையும் அடைகிருன். (எ-று.)

இவ்விதமாக அதர்வணவேதம் சொல்லுகிறது. (ருசஉ)

౫౫౪। దుర్బలేనుగ్రహః ప్రోక్తస్తథా వై బాలవృద్ధయోః
తతోన్యథా భవేద్దోష స్తస్మాన్నానుగ్రహస్మృతః ॥

(இ-ள்.) முன்சொல்லியபடி வியாதிமுதலான காரணங்களால் பிராயச்சித்தத்தைச்செய்யச் சக்தியற்றவன் விஷயத்திலும், அப்படியே பாலவிருத்தர்கள் விஷயத்திலும், பெரியோர்கள் அவர்களை அநுக்கிரகிக்கத் தக்கவர்கள். அப்படியில்லாமல் சக்தியுள்ளவன் விஷயத்தில் அநுக்கிரகித்தால் தோஷம் ஸம்பவிக்கும், ஆகையால் அப்படிப்பட்டவர்கள்விஷயத்தில்அநுக்கிரகம்செய்யத்தக்கதன்று.(எ-று.)

தர்மசாஸ்திரத்தை அறியாதவனும் ஒருத்தனுயிருப்பவனும் அந்த அநுக்கிரகத்தைச் செய்யக்கூடாதென்றும் தர்மங்களை அறிந்த பிராம்மணர்கள் அநேகர்கூடி அனுக்கிரகிக்கவேண்டுமென்றும் தேவலர் சொன்னுர். (ருருஉ)

౫౬౪। స్నేహాద్వా యది వా లోభా ద్భయాదజ్ఞానతోపి వా ।
కుర్వంత్యనుగ్రహం యేతు తత్పాపం తేషుగచ్ఛతి ॥

(இ-ள்.) புத்திரமித்திராதிகள் விரதத்தை அநுஷ்டிக்கச் சக்தியுள்ளவர்களாயிருக்க அவர்களிடத்தில் ஸ்நேகத்தாலாவது தனிகனிடத்தில் பொருளாசையினுலாவது ராஜாமுதலியவர்களிடத்தில் பயத்தினுலாவது துர்ப்பலன் விஷயத்தில் அனுக்கிரகம் செய்யவேண்டுமென்கிற சாஸ்திரத்தை அறியாமல் எவர்கள் கீழ்ச்சொன்ன சக்தர்கள் விஷயத்திலும் அநுக்கிரகத்தைச் செய்கிருர்களோ அவர்களிடத்தில் அநுக்கிரகம் செய்யப்பட்டவர்களுடைய பாபம்சேருகிறது. (எ-று.)

ஒருவன்செய்தபாபம் மற்ரெருவனைச் சேருவதில்லையேயெனில் நன்ருகப் பரீக்ஷைசெய்யாமல் ஒருவனுக்குப் பிராயச்சித்தத்தை விதிப்பவனுக்குச் சாஸ்திரமுறை தப்பி நடந்ததினுல் பாபம் சம்பவிக்கிறதென்கிற கருத்தினுல் அவன் பாபம் இவனைச்சேருகிறதென்கிருர். ஆகையால் பிராயச்சித்தம் கேட்பவனை நன்ருகப் பரீக்ஷைசெய்தே பிராயச்சித்தத்தை விதிக்கவேண்டும்.

தேசம் காலம் முதலியவற்றை அநுசரித்துப் பிராயச்சித்தம் சொல்லவேண்டுமென்பது. பாபம் செய்தவன், அவனிருக்கும்

தேசம், காலம், வயது, தர்மசாஸ்திரம், பாபத்தின் காரணம், கிரியை, அதாவது அந்தக்கிரியை அறிந்து செய்யப்பட்டதா, அறியாமல் செய்யப்பட்டதா, ஒருதரம் செய்யப்பட்டதா, பலதரம் செய்யப்பட்டதா என்கிறபாபக்கிரியையின் ஸ்வரூபம், செய்தவன் சக்தி இவைகளை ஆராய்ந்து பிராயச்சித்தத்தை விதிக்கவேண்டுமென்று தேவலரும், சரீர ஸ்திதி, பலம், வயது, காலம், செய்தகிரியை இவைகளைத் தர்மத்தை அறிந்த பெரியோர்கள் தங்கள் புத்தியினால் நிதானித்துப் பிராயச்சித்தத்தை விதிக்கவேண்டுமென்று போதாயநரும் சொன்னார்கள். (௫௬௨)

౫౭౪ శరీరస్యాత్యయే ప్రాప్తే వదంతినియమంతుయే ।
మహాత్మారోగ్యపరోధేన నస్వస్థస్యకదాచన ॥

(இ-ள்.) ஒருவன் பாபியாயிருந்து அவனுடைய சரீரத்திற்கு அந்தியம்வந்தால்(மரணகாலம் ஸம்பவித்து பூமியில் படுத்திருக்கை நேரிட்டால்) அந்தத்தசையில் அவனுக்குச்செய்ய அசாத்தியமான பிராயச்சித்தத்தை எவர்கள் சொல்லுகிறார்களோ அவர்கள் மரிக்கப்போகிறஅந்தப்பாபியானவன் அருகேயிருக்கின்ற பந்துக்கள் வாக்கியத்தினால் அப்போதுசெய்கிற தேவதாத்தியானத்தைத் தடுப்பதினால் அவனுடையபாபம் அவர்களிடத்தில் சேருகிறது. சுகமான சரீரத்தை யுடையவனுக்குக் கீழ்ச்சொன்ன தேவதாஸ்மரண விரோதமில்லாமையால் பிராயச்சித்தத்தைச் சொல்லலாம். (எ-று.)

மரணதசையிலிருக்கும் அசக்தன் அந்தத்தசையில் தான் பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டியதாகச் சொல்லுவதைக்கேட்டுத் தன் அசக்தியை நினைத்து என்னசெய்யப்போகிறோமென்று மனங்கலங்குமளவில் தேவதாஸ்மரணத்தையும் தவிருகிறானென்பதுகருத்து. பிராயச்சித்தம் விதிக்கிறவர்கள் அதற்குக் காரணமாகிறார்க ளாகையால் அவர்களுக்குத் தோஷத்தைச் சொல்லுகிறார்.

౫౭౫। స్వస్థస్యమూఢాఃకుర్వంతి వదంతినియమంతుయే।
తేతస్యవిఘ్నకర్తారః పతంతినరకేఽశుచౌః

(இ-ள்.) வியாதிமுதலிய ஆபத்துக்களை யுடையவனுக்கு மாத்திரம் பதிலாக மற்றொருவன் விரதங்களை அனுஷ்டிக்கலாமென்கிற சாஸ்திரத்தை அறியாதவர்களாகிச் சுகமாக இருக்கிற ஒருதனிகனுக்குப் பதிலாக விரதத்தை எவர்கள் அநுஷ்டிக்கிறார்களோ அவர்களும், இது சாஸ்திரவிதிதானென்று எவர்கள் சொல்லுகிறார்களோ

அவர்களும், அவனுடைய பாபம் நீங்கும் விஷயத்தில் தடைசெய்த வர்களாகையால் அசுசியான நரகத்தில் விழுகிறார்கள். (எ-று.)

௧௯பு॥ స్వవనియమంత్యక్త్వా బ్రాహ్మణంయోఽవమన్యతే ।
వృథాతస్యోపవాస స్స్యాన్న సపుణ్యేనయుజ్యతే ॥

(இ-ள்.) சாஸ்திரத்தில்சொல்லிய நியமத்தைவிட்டு அதைச் சொல்லுகிற பிராம்மணனையும் அலட்சியம்செய்து தனக்குத் தோன் றினபடி பிராயச்சித்தத்தைச் செய்பவன் பிராயச்சித்தபலமான புண் ணியத்தை அடைகிறதில்லை. அவனுடைய உபவாஸமும் வீணாகும்.

௨௦பு। స్వవనియమాన్ గ్రాహ్య్యా యద్యేకోఽపివదేద్ద్విజః ।
కుర్యాద్వాక్యంద్విజానాంతు అన్యథాభ్రూణహాభవేత్ ॥

தன்புத்தியினால் செய்கிற பிராயச்சித்தம் வீணாதமென்பது.
(இ-ள்.) பிராம்மணர்களுடைய விதி வாக்கியத்தின்படி பிராயச்சித் தம் அனுஷ்டிக்கத்தக்கது. வெகு பிராம்மணர்கள் கிடையாதபக்ஷத் தில் ஒரு பிராம்மணனாவது சொல்லுகிறபிராயச்சித்தத்தைச் செய்ய வேண்டும், அப்படிப் பிராம்மணர்களுடைய அநுமதியின்றியே தா னாகச் சாஸ்திரங்களை ஆலோசித்துப் பிராயச்சித்தங்களைச் செய்பவ ன் புருணஹத்தியின் தோஷத்தை அடைகிறான். (எ-று.) (சு௦௨)

௨௧பு॥ బ్రాహ్మణాజంగమంతీర్థం తీర్థభూతాహిసాధవః ।
తేషాంవాక్యోదకేనైవ శుధ్యంతిమలినాజనాః ॥

(இ-ள்.) பிராம்மணர்கள் ஜங்கமங்களான (ஸஞ்சரிப்பவைக ளான) புண்ணிய தீர்த்தங்களென்னப்படுகிறார்கள். பெரியோர்கள் பரிசுத்தர்களாகையால் அவர்கள் தீர்த்தங்களுக்கு ஸமானமானவர் கள். அவர்கள் விதிக்கிறவாக்கியமென்னும் ஜலத்தினால் பாபமாகிய அழுக்கடைந்த மனிதர்கள் பரிசுத்தர்களாகின்றனர். (எ-று.)(சுக௨)

௨௨பு॥ బ్రాహ్మణాయానిభాషంతే మన్యంతేతానిదేవతాః ।
సర్వదేవమయోవిప్రో నతద్వచనమన్యథా ।

(இ-ள்.) பிர்ம்மம் என்பது வேதம். அதில் நிஷ்டையுடையவர் பிராம்மணர். அவர்கள் எந்த வசனங்களைச் சொல்லுகிறார்களோ அந்த வசனங்களைத் தேவதைகள் அப்படியே அநுமதிசெய்கிறார்கள். ஸகலதேவதைகளையும் சொல்லுகிற வைதிகமந்திரங்களைத் தரிக்கிற படியால் பிராம்மணர் ஸகல தேவதா ஸ்வரூபியாகிறார்கள். அவ ர்கள்சொல்லுகிற வசனம் வேறாகிறதில்லை. (எ-று.) (சுஉ௨)

౬౩౪॥ ఉపవాసో వ్రతంచైవ స్నానంతీర్థంజప స్తపః ।
విప్రసంపాదితంయస్య సంపూర్ణంతస్యతత్ఫలమ్ ॥

(இ-ள்.) உபவாஸம், வேறுவிரதம், ஸ்நாநம், தீர்த்தயாத்திரை, ஜபம், தவம், இவைகள் எவனுக்குப்பிராம்மணர்களுடைய அநுமதியினுல் செய்யப்படுகின்றனவோ அவைகளுடைய பலன் அவனுக்குப் பரிபூர்ணமாகக் கிடைக்கிறது. (எ-று.) (சூகூ௦)

౬౪౪॥ అన్నాద్యేకీటసంయుక్తే మక్షికాకేశదూషితే ।
తదంతరాస్పృశేచ్చాప స్తదన్నంభస్మనాస్పృశేత్ ॥

புழு மயிர் முதலியவைகள் கலந்த அந்நத்தின் சுத்தி. (இ-ள்.) பக்குவமான அந்நமானது சமைத்தபாண்டத்தில் அல்லது போசந பாத்திரத்தில் புழு ஈ மயிர் இவைகளால் தோஷத்தை அடைந்திருந்தால் அந்த அந்நத்தின் நடுவில் தீர்த்தத்தினுல் புரோக்ஷித்துக் கொஞ்சம் பஸ்மத்தைச் சேர்க்கவேண்டும். (எ-று.)

மூலவசநத்தில் ஈ-என்றெடுத்தது பசு முகர்தல், தும்மலால் பிந்துக்கள் விழுதல், பக்ஷிகள் தின்னல், வஸ்திரத்தை உதறுவதினுல் தூசிகள் விழுதல் முதலியவைகளா லுண்டாகும் தோஷங்களுக்கும் குறியாகிறது. இவைகளுக்கு மண் பஸ்மம் ஜலம் இவைகளைச்சேர்ப்பதினுல் சுத்தியென்று மனு பிரகஸ்பதிஇவர்கள் சொன்னுர்கள். புழுவும் மயிரும் கலந்த அந்நத்தை ஒருகாலும் புசிக்கலாகாதென்கிற கௌதமவசநம் புழு மயிர் இவைகளுடன் பசனமான அந்நத்தைப்பற்றியதென்பது கருத்து. (சூசா௦)

౬౫౪॥ భుంజానశ్చైవయోవిప్రః పాదంహస్తేనసంస్పృశేత్ ।
స్వముచ్ఛిష్టమసౌభుంక్తే యోభుంక్తేభిన్నభాజనే ॥

போஜநகாலத்தில் பாதத்தை ஸ்பர்சித்தல் முதலியவை ஆகாவென்பது. (இ-ள்.) எந்தப்பிராம்மணன் இடதுகையினுல் தன் பாதத்தைத் தொட்டுக்கொண்டு புசிக்கிருனே அவனும் இரண்டுவகையான இலைகளைச் சேர்த்துத் தைத்த இலையில் எவன் புசிக்கிருனே அவனும் இடதுகையால்போசநபாத்திரத்தை ஸ்பர்சிக்காமல் எவன் புசிக்கிருனே அவனும் தங்களுடைய எச்சிலைத் தாங்களே புசிக்கிறவர்களாகிருர்கள்.(எ-று.) (சுரு௦)

౬౬౪॥ పాదుకస్థోనభుంజీత పర్యంకస్థఃస్థితోపివా ।
శ్వానచండాలదృష్టేచైవ భోజనంపరివర్జయేత్ ॥

(இ-ள்.) (பீடத்தில் கால்களை வைத்துக்கொண்டு உட்கார்ந்தும்,) பாதக்குறட்டின்மேலிருந்தும், படுக்கையிலிருந்தும், நின்றுகொண்டும், புசிக்கலாகாது. புசிக்கும்போது நாய் சண்டாளன் முதலியவர்களைப் பார்க்கும்படி நேரிட்டால் அந்த அந்நத்தை விட்டுவிடவேண்டும். (எ-று.) (௬௬)

౨౬॥ యదన్నం ప్రతిషిద్ధం స్యాదన్నశుద్ధిస్తథైవ చ ।
యథా పరాశరేణోక్తం తథైవాహం వదామి వః ॥

(இ-ள்.) (ஓ ரிஷிகளே) எந்த அந்நம் நிஷேதிக்கப்பட்டதோ அதையும், அந்நத்திற்குச் சுத்தி எதினாலேயோ அதையும் முன் விருத்த பராசரர் எந்தவிதமாகச் சொல்லியிருக்கிறாரோ அப்படியே உங்களுக்கு நான் சொல்லுகிறேன் (என்கிறார் பராசரர்). (எ-று.)

இதனால் கல்பங்கள்தோறும் அதிகாரிபுருஷர்களான மனு வஸிஷ்டாதிகள் சிருஷ்டிக்கப்படுவதுபோலக் கலியுக தர்ம சாஸ்திராதிகாரியாகப் பராசரமுனிவரும் அந்தந்தக் கல்பங்களில் சிருஷ்டிக்கப்படுகிறாரென்பதும் அவருடைய வாக்கியம் பிரமாணமாமென்பதும் பெறப்பட்டன. (௬௭)

౨౭॥ శృతం ద్రోణాఢకస్యాన్నం కాకశ్వానోపఘాతితమ్ ।
కేనేదం శుధ్యతే చాన్నం బ్రాహ్మణేభ్యో నివేదయేత్ ॥

(இ-ள்) துரோணம் ஆடகம் என்னும் அளவை மேலே சொல்லப்போகிறார். ஒரு துரோணம் ஒரு ஆடகம் அளவுள்ள நெல்லின் சம்பந்தமான பக்குவாந்நமானது காக்கை, நாய் இவைகளால் நக்கப்படுதல் முதலிய சேஷ்டைகள் நேரிட்டுத் தூஷிக்கப்பட்டால் இந்த அந்நம் எதினால் சுத்தமாகுமென்று பிராம்மணர்களுக்கு விண்ணப்பம் செய்யவேண்டும். (எ-று.) (௬௮)

౨౮॥ కాకశ్వానావలీఢం తు ద్రోణాన్నం న పరిత్యజేత్ ॥

(இ-ள்.) காக்கை நாய்இவைகளால் தூஷிக்கப்பட்டதான கீழே சொன்ன துரோணாந்நத்தைத் தர்மத்தைஅறிந்த பிராம்மணன் பரித்தியாகம் செய்யக்கடவனல்லன். (எ-று.)

இங்கு துரோணாந்நமென்பது ஆடகாந்நத்துக்கும் உபலக்ஷணம். இதற்குச் சுத்தியைச் சொல்லப்போகிறவராய்ப் பராசரர் இதை விட வேண்டாமென்கிறார். (௬௯)

౩౦॥ వేదవేదాంగవిద్విప్రైర్ధర్మశాస్త్రానుపాలకైః ।
ప్రస్థద్వాత్రింశతిర్ద్రోణః స్మృతో ద్విప్రస్థ ఆఢకః ॥

(இ-ள்.) வேதங்கள் வேதாங்கங்கள் இவைகளைக் கற்றுணர்ந்த பெரியோர்களும் தர்மசாஸ்திரத்தைப் பரிபாலநம் செய்கிறவர்களு மான பிராம்மணர்களால் முப்பத்திரண்டுபடி அளவுள்ளது துரோ ணமென்றும் இரண்டுபடி அளவுள்ளது ஆடகமென்றும் நிச்சயிக்கப் பட்டது. (எ-று.) (எ0)

౨౮౪। తతోద్రోణాఢకస్యాన్నం శ్రుతిస్మృతివిదోవిదుః ॥

(இ-ள்.) வேதம் ஸ்மிருதி இவைகளை அறிந்தவர்கள் கீழ்ச்சொ ன்ன துரோண ஆடக அளவையுடைய அந்நம் சுத்தமானதென்று நிச்சயிக்கிறார்கள். (எ-று.) (எ0௨)

౨౯౪। కాకశ్వానావలీఢంతు గవాఘ్రాతం ఖరేణవా ।
స్వల్పమన్నంత్యజేద్విప్రశ్శుద్ధిర్ద్రోణాఢకేభవేత్ ॥

(இ-ள்.) காக்கை நாய் இவைகளால் நக்கப்பட்டதும் கவ்வப்ப ட்டதும் கழுதையால் முகரப்பட்டதுமான துரோண ஆடக அளவு ள்ள அந்நத்தில் ஸ்வல்ப பாகத்தை எடுத்தெறிந்துவிடுவதினால் அத ற்குச் சுத்தியுண்டாகும். (எ-று.) (எக௨)

౨౨౪। అన్నస్యోద్ధృత్యతన్మాత్రం యచ్చలాలాహతంభవేత్ ।
సువర్ణోదకమభ్యుక్ష్య హుతాశేనోపతాపయేత్ ॥

౨౩౪। హుతాశనేనసంస్పృష్టం సువర్ణసలిలేనచ ।
విప్రాణాంబ్రహ్మఘోషేణ భోజ్యంభవతితత్క్షణాత్ ॥

(இ-ள்.) துரோணாடகமளவையுடைய அந்நத்தில் எவ்வளவு பாகம் நாய் காக்கைகளால் கவ்வப்பட்டதோ அவ்வளவு பாகத்தை யும் அப்போது நாயின் வாய்ச் சொள்ளு நீர் எவ்வளவு அந்நத்தில் விழுந்திருக்குமென்று தோன்றுகிறதோ அவ்வளவு அந்நத்தையும் எடுத்தெறிந்துவிட்டு மிகுந்த அந்நத்தை ஸ்வர்ணத்தோடு சம்பந் தப்பட்ட ஜலத்தினால் புரோக்ஷித்துப் பின்பு ஒருதரம் அக்நியில் சுடவைக்கவேண்டும். இவ்விதமாக ஸ்வர்ண ஜலத்தினாலும் அக்நி யினாலும் ஸ்பர்சிக்கப்பட்டதும், பின்பு பிராம்மணர்களுடைய "பவ மாந ஸூக்தம்" முதலான வேதகோஷத்தினால் சுத்திசெய்யப்பட்ட துமான அந்த அந்நமானது பிராம்மணர்களுடைய அநுமதியினால் அப்பொழுதே புசிக்கத்தக்கதாகும். (எ-று.)

சாஸ்திரத்தில் சொல்லியபடி கீழ்ச்சொன்ன துரோணாடக பரிமாணங்களையுடைய அந்நமானது பரிசுத்தமென்று வேதங்களை யும் ஸ்மிருதிகளையும் அறிந்தவர்கள் நிச்சயிக்கிறார்கள். பவிஷ்யத்

புராணத்தில் இந்தத் துரோணுடகங்களின் அளவு வேருகச்சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது இரண்டுபலம் கொண்டது பிரஸிருதம், அது இரண்டுகொண்டது குடபம், அது நாலுகொண்டது பிரஸ்தம், அது நாலுகொண்டது ஆடகம், அது நாலுகொண்டது துரோணம், அது இரண்டுகொண்டது கும்பம், அது பதினறுகொண்டது காரி என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுவும் சில தேசத்தில் அநுஷ்டிக்கப்படுகிறதாகையால் தோஷமில்லை என்றுகொள்க.

ஐந்து குன்றிமணி அளவுகொண்டது மாஷம். மாஷம் பதினறு கொண்டது கர்ஷம். கர்ஷம் நாலுகொண்டது பலம். (எஉ௨, எ௩௨)

౭౪॥ స్నేహం వా గోరసే వాపి తత్రశుద్ధిః కథంభవేత్ ॥
౭౫ ॥ అల్పం పరిత్యజేత్తత్ర స్నేహస్య పచనేనచ ।
అనలజ్వాలయాశుద్ధి ర్గోరసస్య విధీయతే ॥

எண்ணெய், பால் முதலியவற்றின் சுத்தி. (இ-ள்.) எண்ணெய் முதலிய ரஸம், பால் முதலானவை ஆகிய இவைகளுக்கு நாய் காக்கை முதலானவைகளால் தோஷம்ஸம்பவித்தால் வஸ்து அல்பமாயிருந்தால் அதைப் பரிகரிப்பதினுலும் அதிகமாயிருந்தால் எண்ணெய் முதலிய ரஸங்களைக் காய்ச்சுவதினுலும் பால் முதலிய கோ ரஸங்களை அக்னி ஜ்வாலையில் காட்டுவதினுலும் அல்லது காய்ச்சுவதினுலும் சுத்தி விதிக்கப்படுகிறது. (எ-று.) (எச,எ௫)

மூன்ருவது அத்தியாயம்
முற்றிற்று.

நான்காவது அத்தியாயம்.

அவதாரிகை. கீழ் அத்தியாயத்தில் அந்நத்தின் சுத்தியும் ரஸங்களின்சுத்தியும் சொல்லப்பட்டன. இந்த அத்தியாயத்தில்மற்றவஸ்துக்களின் சுத்தியைச்சொல்லப்போகிறவரான ஸ்ரீபராசரமஹாமுனிவர் இது பிராயச்சித்த பிரகரணமாகையால் தான் சொல்லப்போகிற விஷயம் பிராயச்சித்தமோவென்னும்சங்கையைப்பரிகரிப்பதற்காகத் திரவியசுத்தியைச் சொல்லுகிறேனென்று பிரதிக்ஞை செய்கிருர்.

మూలం॥

౧॥ అథాతో ద్రవ్యశుద్ధిస్తు పరాశరవచో యథా ॥

(இ-ள்.) அந்நத்திற்கும் ரஸத்திற்கும் சுத்தியைச்சொன்னபின்பு கீழ்ச்சொன்ன பிராயச்சித்தம் முதலியவை திரவியசுத்தியன்றிச்

சிறந்தவைக ளர்கமாட்டாவாகையால் விருத்த பர்ாசரர் கூறியபடி திரவியசுத்திசொல்லப்படுகிறது. (எ-று.) (௯)

౧॥ దారవాణాంతుపాత్రాణాం తక్షణాచ్ఛుద్ధిరిష్యతే ।

ஸ்நுக்து ஸ்நுவை முதலிய பாத்திரசுத்தி. (இ-ள்.) மரத்தால் செய்யப்பட்ட (ஸ்ருக்கு, ஸ்ருவை முதலிய) பாத்திரங்களுக்கு மலமூத்திரப்பிரதேசங்களின் அதிக சம்பந்தத்தால் துர்க்கந்தமுதலிய அசுத்திஸம்பவித்து மண்ஜலங்களால் அலம்பியும் அந்தத்தோஷம் நீங்காவிட்டால் வாசிமுதலிய ஆயுதங்களைக்கொண்டு சீவுகிறதினல் அவைகளுக்குச் சுத்தி உண்டாகிறது. (எ-று.)

மலம் மூத்திரம் முதலிய அசுத்தவஸ்துக்கள்போமளவும் அந்தப் பாத்திரங்களை மண் ஜலங்களால் அலம்பவேண்டுமென்று போதாயநரும், ஸ்பயம்என்னும் யக்கியபாத்திரம், முறம், உரல், உலக்கை, வண்டி,ஒரு ஆள்பாரத்திற்கு அதிகமான தானியம், வெகுவானவஸ்திரம் இவைகளுக்கு மலமூத்திரங்கள் பட்டதுமாத்திரமான தோஷம் நேரிட்டால் சுத்த ஜலத்தினல் அவைகளைப் புரோட்சிப்பதே சுத்தி என்றும், யக்கியபாத்திரங்களை யக்கியத்தில் கையால்துடைப்பதினுலும், சமஸம், கிரஹம் இந்தப் பாத்திரங்களை அலம்புவதினுலும் சரு, ஸ்ருக்கு, ஸ்ருவை, இந்தப் பாத்திரங்களை எண்ணெய், நெய் இவைகளின் சிக்குப்போம்படி உஷ்ண ஜலத்தினல் அலம்புவதினுலும் சுத்தியாமென்றும் மனுகூறினர். (௧)

౧౫॥ భస్మనాశుద్ధ్యతేకాంస్యం తామ్రమామ్లేనశుధ్యతి ॥

(இ-ள்.) வெண்கலம் பஸ்மத்தினுலும் தாம்பிரம் புளியினுலும் சுத்தமாகின்றன. (எ-று.)

புளியாலும் உப்பாலும் ஈயம், ஸீஸம், தாம்பிரம் இவைகளுக்குச் சுத்தியுண்டாகுமென்று யாக்கியவல்கியர் சொன்னர். (௧௨)

౧౬॥ రజసాశుధ్యతేనారీ వికలంయానగచ్ఛతి ॥

வியபிசாரஸ்திரீசுத்தி. (இ-ள்.)வியபிசாரம்செய்கிற ஸ்திரீ வியபிசாரத்தினல் கர்ப்பம் தரியாதவளாயிருந்தால் அவள் மாஸருதுவினல் சுத்தையாகிருள். (எ-று.)

கர்ப்பிணியான வியபிசாரஸ்திரீக்குப் பிராயச்சித்தமில்லையென்றும் அவளை நீக்கிவிடவேண்டுமென்றும் யாக்கியவல்கியரால் சொல்லப்பட்டது. இது சூத்திரனல் உண்டுபண்ணப்பட்ட கர்ப்பவிஷயமென்று மேலே உதாஹரிக்கிற வசிஷ்டர் வசநத்தினல் ஸ்பஷ்டமாகிறது. அதாவது பிராம்மண க்ஷத்திரிய வைசிய ஸ்திரீகள் சூத்திர

னோடு வியபிசரித்துக் கர்ப்பம் தரியாதவர்களானால் பிராயச்சித்தத்தினால் அவர்கள் சுத்தியை அடைகிறார்களேயல்லது சூத்திரனுக்குக் கர்ப்பம் தரித்தால் அவர்கள் எவ்விதத்திலும் சுத்தியை அடைவதில்லை யென்பதே. மற்ற மூன்றுவர்ணத்தாரால் உண்டுபண்ணப்பட்ட கர்ப்பத்தை யுடையவளுக்குப் பிராயச்சித்தத்தினால் சுத்தியுண்டென்றும்அதாவது பிராம்மணனாலுண்டான கர்ப்பத்துக்குப் பராககிருச்சிரமும், க்ஷத்திரியனாலுண்டான கர்ப்பத்துக்குச் சாந்திராயணமும்,வைசியனாலுண்டான கர்ப்பத்துக்குப் பராகத்தோடு சாந்திராயணமும் செய்துகொள்ள வேண்டுமென்றும், சூத்திரனாலுண்டான கர்ப்பத்தில் அவளிடத்தி லுண்டாகும்பிள்ளை சண்டாளனாகிறபடியால் அந்தஸ்திரீயைப் பரித்தியாகமே செய்யவேண்டுமென்றும் இருபத்துநால்வர்மதத்தில் சொல்லப்பட்டது.

கர்ப்பந்தரியாமலேசெய்யும் வியபிசாரம் காயிகம், மானஸிகம், வாசிகமென்று மூன்றுவகைப்படுமென்றும், அவைகளில் காயிக வியபிசாரத்தினால் பிராம்மணஸ்திரீ சூத்திரனோடுசேர்ந்து கர்ப்பம்தரியாதவளாயிருந்தால் அவள் பிராஜாபத்தியகிருச்சிரத்தோடு மூன்று சாந்திராயணமும், பிராம்மணஸ்திரீ வைசியனைச்சேர்ந்து கர்ப்பம்தரியாதவளாயிருந்தால் அவள் பிராஜாபத்தியகிருச்சிரத்தோடு இரண்டு சாந்திராயணங்களும் க்ஷத்திரியனைச்சேர்ந்து கர்ப்பம்தரியாத பிராம்மணஸ்திரீ பிராஜாபத்தியகிருச்சிரத்தோடு ஒருசாந்திராயணமும் சூத்திரனைச்சேர்ந்து கர்ப்பம்தரியாத க்ஷத்திரியஸ்திரீ பிராஜாபத்தியகிருச்சிரத்தோடு இரண்டுசாந்திராயணமும் வைசியனைச்சேர்ந்து கர்ப்பம்தரியாத க்ஷத்திரியஸ்திரீ பிராஜாபத்தியகிருச்சிரத்தோடுஒருசாந்திராயணமும் சூத்திரனையடைந்து கர்ப்பம்தரியாத வைசியஸ்திரீ பிராஜாபத்தியகிருச்சிரத்தோடு ஒருசாந்திராயணமும் செய்யவேண்டுமென்றும் பிரசேதர்சொன்னார். இந்தப்பிராயச்சித்தம் விடாமல் செய்துகொண்டிருக்கிற வியபிசாரத்தைப் பற்றியது. அப்படிக்கில்லாதவிஷயத்தில் அந்நியனைப்புணருகிற ஸ்திரீயானவள் பிரதிமாதம் உண்டாகிறருதுவினால் சுத்தையாகிறாளென்றும் ஆகிலும்அவள் ரிஷியால்சொல்லப்பட்டிருக்கிற பிராயச்சித்தத்தைச்செய்யக்கடவளென்றும் அதாவது பிராம்மணஸ்திரீ பிராம்மணனை வியபிசரித்தால் பிராஜாபத்தியகிருச்சிரத்தில் பாதியையும் க்ஷத்திரியனைச்சேர்ந்தால்ஒரு பிராஜாபத்திய கிருச்சிரத்தையும் வைசியனைச்சேர்ந்தால் ஸாந்தபனகிருச்சிரத்தையும் சூத்திரனைச்சேர்ந்தால் பராககிருச்சிரத்தையும்செய்யக்கடவளென்றும் இருபத்துநால்வர்மதத்தில் சொல்லப்பட்டது.

தன்பதியை அதிக்கிரமித்துப் பரபுருஷனைப்புணர மனதினுல் எண்ணினவள் பாலோடுகலந்த யவஅரிசி அன்னத்தை மூன்றுநாள் புசிப்பவளாய்த் தரையில்சயனித்தும் பின்பு மூன்றுநாள் ஜலத்தில்முழுகி நூற்றெட்டு காயத்திரியாலும் காயத்திரிசிரோமந்திரங்களாலும் ஓமம்செய்வித்தும் பரிசுத்தையாகிருளென்றும், பரபுருஷனேடு பிரீதியுடன்புணர்ச்சி வார்த்தைகளைச்சொன்னவளும் கீழ்ச்சொன்ன பிராயச்சித்தத்தை ஒருமாஸம்செய்து பின்புஜலத்தில்முழுகிக் கீழ்ச்சொன்ன ஓமத்தை நான்மடங்கு அதிகமாக(நானூற்று முப்பத்திரண்டாக) செய்யவேண்டுமென்றும் வஸிஷ்டர்சொன்னர். இதனுல் மாநஸிகமாயும் வாசிகமாயும் செய்த வியபிசாரத்திற்குப் பிராயச்சித்தம் சொல்லப்பட்டது. இதில் மாநஸிகதோஷத்திற்குச்சொன்ன பிராயச்சித்தத்தை அவள் உடனே ருதுவானுல் செய்யவேண்டியதில்லையென்றும் மனதினுல் தோஷம்செய்தஸ்திரீ மாஸருதுவினுல் சுத்தையாகிருளென்றும் மனுகூறினுர். ஆகையால் இதை மனதினுல் தோஷம்செய்த பின்னும் மாஸருதுவருகிறதற்கு முன்னும் செய்யவேண்டும். இதையநுஸரித்தே பராசரர் ருதுவினுல்சுத்தையாகிருளென்றுசொன்னுர்.

౨౩ నదీవేగేన శుద్ధ్యేత లేపో యది న దృశ్యతే॥

நதிசுத்தி. (இ-ள்.) ஓடிக்கொண்டிருக்கிற நதியானது அசுத்தமான வஸ்துக்களின் ஸம்பந்தம் வெள்ளத்தில் காணப்படாதபக்ஷத்தில் வேகத்தினுல் சுத்தியை அடையும். (எ-று.)

ஆற்றின் வெள்ளத்தில்விழுந்த அசுத்தவஸ்துக்கள் தெருவின் வெள்ளம் இவைகள் ஸ்நாநம்செய்யுந் துறையைவிட்டுப்போய் அந்த ஜலத்தில் அசுத்தவஸ்துக்களின் ஸம்பந்தம் காணப்படாவிட்டால் அந்தநதி பரிசுத்தியுடையதென்றும், ஸ்நாநபாநாதிகளுக்கு ஏற்றதென்றும், அதிக ஆழமுள்ளதாகவிருந்தால் அழுக்குள்ள துறை தவிர மற்ற இடங்கள் சுத்தங்களென்றும் தேவலர்சொன்னுர். (உ௨)

౨౪ వాపీకూపతటాకేషు దూషితేషు కథంచన॥

ఉద్ధృత్యైవ కుంభశతం పంచగవ్యేన శుద్ధ్యతి ॥

நடைபாவி கிணறு முதலியவற்றின்சுத்தி. (இ-ள்.) நடைபாவி கிணறு குளம் இவைகள் தோஷத்தையடைந்தால் அவைகளினின்று நூறுகுடம் ஜலத்தை எடுத்து வெளியே கொட்டுவதினுலும் பஞ்சகவியத்தை அவைகளில்சேர்ப்பதினுலும் சுத்தியுண்டாகிறது. (எ-று.)

நாய் பூனை முதலியஜந்துக்கள் விழுந்து மரிப்பதினுலும் மரித்த ஜந்துக்களினுடைய தேக அசுத்தங்கள் பெருகுவதினுலும் கிணறு

நடைபாவி இவைகளுக்கு இரண்டுவிததோஷமுண்டாகின்றன. அவற்றில் மரிப்பதினால் வரும் தோஷத்தைப்பற்றிப் பராசரர் சுத்தியைச்சொன்னார். பாதரக்ஷை, கோழை, மலமூத்திரங்கள், ஸ்திரீகளின் ரஜஸு இவைகள்விழுந்து கிணறுமுதலியவைகள் தூஷிக்கப்பட்டால் அவைகளிலிருந்து நூறுகுடம் ஜலம் எடுத்துவிடுவதினால் சுத்தியுண்டாகிறதென்றும் அத்துடன் பஞ்சகவியத்தைக் கிணறுமுதலியவைகளில் சேர்க்கவேண்டுமென்றும் ஆபஸ்தம்ப ஹாரீத ஸம்வர்த்தர்கள் சொன்னார்கள். கிணற்றில்விழுந்து மரணமடைந்த புலி உடும்பு யானை ஆமை முதலிய ஐந்துநகங்களையுடைய ஜந்துக்களின் சரீரம் நைந்து பெருகிவிசேஷதோஷம் ஸம்பவித்தால் அந்தஜலம் முழுமையும் இறைத்து வடிந்தபின் அக்கிஜ்வாலையினால் கிணற்றின் கட்டடத்தை முழுதுங்கொளுத்தி அதில் பஞ்சகவியத்தைச்சேர்த்துப் புதியஜலம் சுரந்தபின் சுத்தியுண்டாகுமென்றும், சிறியகுளங்களுக்குக் கிணற்றுக்குச்சொல்லிய சுத்தியைச் செய்யவேண்டுமென்றும், பெரியகுளங்களுக்கு ஒருவிததோஷமுமில்லை என்றும் விஷ்ணு சொன்னார்.

ஜலத்தின் சுத்தி. அதிக ஜலத்திற்குத் தோஷமில்லையென்றும், அல்பஜலத்திற்கும் எடுத்துவைத்த ஜலத்திற்கும் அசுத்தி நேரிட்டால்தோஷமுண்டென்றும் தேவலரும், அல்பஜலமானாலும் அதில் முழுதும் அசுத்த வஸ்து கலக்காதபக்ஷத்திலும் அது கல்மேலிருந்த பக்ஷத்திலும் சந்திரசூரிய கிரணங்களாலும் காற்றினாலும் பசுவின் மூத்திரம் சாணங்களாலும் பரிசுத்தமாகிறதென்று விஷ்ணுவும், எச்சில் முதலிய தோஷமில்லாததும் பசுக்கள் குடித்தால் குறைவுபடாததுமான ஜலம் அல்பமானதாகிலும் பரிசுத்தமானதென்றும் பசு குடித்தால் குறையும் ஜலம் சுத்தமல்லவென்றும் பரிசுத்த பாத்திரங்களால் எடுக்கப்பட்ட ஜலம் பரிசுத்தமானாலும் அதை ஒரு ராத்திரி வைத்திருந்தால் பின்பு உபயோகித்துக்கொள்ளக் கூடாதென்றும் தேவலரும், குட்டிபோட்ட ஆடு, கன்றுபோட்ட பசு, எருமைஇவைகளுக்கும் பிரஸவித்த பிராம்மணஸ்திரீகளுக்கும் பூமியில்தேங்கின மழைஜலத்திற்கும் பத்துநாள்களுக்குப்பின் சுத்தியுண்டாகிறதென்றும் யமமுனிவரும் சொன்னார்கள். (௯௭)

౪౫। అష్టవర్షా భవేద్గౌరీ నవవర్షా తు రోహిణీ ।
దశవర్షా భవేత్కన్యా అత ఊర్ధ్వం రజస్వలా ॥

கந்நிகையின் சுத்தி. (இ-ள்) எட்டுவயதினை யுடையவள் கௌரி, ஒன்பது வயதினை யுடையவள் ரோஹிணி, பத்துவயதினை

யுடையவள் கந்நிகை, பத்துவயதிற்கு மேல்பட்ட வயதினையுடைய வள் ரஜஸ்வலை என்னப்படுவார்கள். (எ - று.)

கௌரி, ரோகிணி, கந்நிகை ஆகியமூவரும் விவாகத்திற்குத்தக் கவர்கள், ரஜஸ்வலை விவாகத்திற்குத் தகாதவள், அவளைத் தாரம் செய்கிறவன் நரகத்தை அடைகிறானென்று பிரஹஸ்பதி சொன்னார். முன்சொன்ன சுத்தி விவாகமான ஸ்திரீகளைப்பற்றியதென்றும் இது விவாகமாகாத பெண்களைப்பற்றியதென்றுமறிக. (சஉ)

౫౧। ప్రాప్తేతుద్వాదశేవర్షే యఃకన్యాంనప్రయచ్ఛతి ।
మాసిమాసిరజస్తస్యాః పిబంతిపితరోనిశమ్ ॥

(இ - ள்) பனிரண்டாவது வயதுவந்தபின் (ருது உண்டாவத ற்குமுன்) எவன் தன் கந்நிகையைத் தாரம் செய்யவில்லையோ அவனுடையபிதிர்க்கள் அந்தப் பெண்ணினுடைய பிரதிமாத ருது மலத்தைப் புசிக்கிறார்கள். (எ - று.)

ருது தர்சநத்திற்குமுன் கந்நிகாதாரம் செய்யவேண்டுமென்று கௌதமரும், ருதுமதியாகாதபெண்ணை விவாகம் செய்யக் கடவனென்று யமமுனிவரும் சொன்னார்கள். ருது தர்சநமில்லாத பக்ஷத்தில் பனிரண்டு வயதினையுடைய பெண்ணை விவாகம் செய்யலாமென்பது முப்பது வயதினையுடைய பிள்ளை பனிரண்டு வயதினையுடைய அழகியபெண்ணை விவாகம்செய்துகொள்ளலாமென்கிற மனுவசநத்தால் ஸ்பஷ்டமாகிறது. விவாகத்திற்குமுன் ருதுவாகிறது கந்நிகாதோஷ மென்று சொல்லப்பட்டது. (ருஉ)

౬౧। మాతాచైవపితాచైవ జ్యేష్ఠభ్రాతాతథైవచ ।
త్రయస్తేనరకంయాంతి దృష్ట్వాకన్యాంరజస్వలామ్ ॥

(இ - ள்) விவாகம் செய்வதற்குமுன் பெண்ணைத் தன்வீட்டில் ரஜஸ்வலையாகப் பார்த்த அந்தப்பெண்ணினுடைய தாய், தந்தை, மூத்தசகோதரன் இம்மூவரும் நரகத்தை அடைகிறார்கள். (எ-று.)

இதனால் ருதுவாவதற்குமுன் கந்நியாதாரம் செய்யாதவன் தன் பிதிர்க்களை நரகத்தில் தள்ளுவதுபோல் தானும் குடும்பத்துடன் நரகத்தில் விழுகிறானென்பது சொல்லப்பட்டது. (சுஉ)

౭౧। యస్తాంసముద్వహేత్కన్యాంబ్రాహ్మణోమదమోహితః ।
అసంభాష్యోహ్యపాంక్తేయః సవిప్రోవృషలీపతిః ॥

(இ-ள்.) பிதிர்கிருகத்தில் ருதுவானபெண்ணை எவன் மதத்தினால் விவேகமற்றவனாகி விவாகம்செய்கிறானோ அவன் ஸம்பாஷணம்

செய்யத்தக்கவனன்று, அந்தப் பிராம்மணன் விருஷளீபதி என்னப் படுவன். (எ-று.) (௭௨)

౮౹ యఃకరోత్యేకరాత్రేణ వృషలీసేవనంద్విజః ।
సభైక్షభుగ్జపన్నిత్యం త్రిభిర్వర్షైర్విశుధ్యతి ॥

(இ-ள்.) எந்தப்பிராம்மணன் ருதுவானபெண்ணை விவாகம் செய்து அவளுடன் ஒருநாள் சங்கமம்செய்கிறானோ அவன் மூன்று வருஷம் பிக்ஷாந்நத்தைப் புசித்தும் நித்தியமும் (காயத்திரியை) ஜபித்தும் சுத்தனாகிறான். (எ-று.)

இங்கு இந்தமந்திரத்தை ஜபிக்கவேண்டுமென்று சொல்லாமையால் ஸர்வபிராயச்சித்தமானகாயத்திரி ஜபமேசொல்லப்பட்டதென்று அறிக. (௮௨)

౯౹ అస్తంగతే యదా సూర్యే చండాలంపతితంస్త్రియమ్ ।
సూతికాంచశవంచైవ కథంశుద్ధిర్విధీయతే ॥

౧౦౹ జాతవేదస్సువర్ణంచ సోమమార్గంవిలోక్యచ ।
బ్రాహ్మణానుగతశ్చైవ స్నానంకృత్వావిశుధ్యతి ॥

(இ-ள்.) சூரியன் அஸ்தமனமானபின் சண்டாளன் பதிதன் பிரஸவித்த ஸ்திரீ இவர்களையும் பிணத்தையும் தொட்டவனுக்குச் சுத்தி எதினால் விதிக்கப்படுகிறது (என்றால்) அக்கினி, பொன், சுக்கிலபக்ஷத்தில் சந்திரன் அல்லது சந்திரனிருக்கும்மார்க்கம் இவைகளில் எதாவதொன்றைப்பார்த்துப் பிராம்மணர்களின் அநுமதி பெற்று ஸ்நாநம் செய்வதினால் அவனுக்குச் சுத்தியுண்டாகிறது. (எ-று.) (௯௨, ௧௱௨)

౧౧౹ స్పృష్ట్వారజస్వలాన్యోన్యం బ్రాహ్మణీబ్రాహ్మణీంతథా ।
తావత్తిష్ఠేన్నిరాహారాత్రిరాత్రేణైవశుధ్యతి ॥

౧౨౹ స్పృష్ట్వారజస్వలాన్యోన్యం బ్రాహ్మణీక్షత్రియాంతథా ।
అర్ధకృచ్ఛ్రంచరేత్పూర్వాపాదంమేకమనంతరా ॥

౧౩౹ స్పృష్ట్వారజస్వలాన్యోన్యం బ్రాహ్మణీవైశ్యజాంతథా ।
పాదహీనంచరేత్పూర్వా పాదమేకమనంతరా ॥

౧౪౹ స్పృష్ట్వారజస్వలాన్యోన్యం బ్రాహ్మణీశూద్రజాంతథా ।
కృచ్ఛ్రేణశుధ్యతేపూర్వా శూద్రాదానేనశుధ్యతి ॥

ரஜஸ்வலைகள் ஒருவர்க்கொருவரை ஸ்பர்சித்தலின் சுத்தி.

(இ-ள்.) ரஜஸ்வலையாயிருக்கிற பிராம்மணஸ்திரீ அப்படிப்பட்ட

பிராம்மணஸ்திரீயைத் தொட்டால் அவள் தொட்டதுமுதல் ஸ்நாந காலம்வரையில் ஆகாரமில்லாமலிருந்து திரிராத்திர கிருச்சிரத்தைச் செய்வதால் சுத்தையாகிறுள். இந்தவிஷயம்தொட்டவளுக்கும் தொடப்பட்டவளுக்கும் சரியானதே. ரஜஸ்வலையாயிருக்கிற பிராம்மண ஸ்திரீ அப்படிப்பட்ட க்ஷத்திரியஸ்திரீயை ஸ்பர்சித்தால் பிராம்மண ஸ்திரீ பிராஜாபத்திய கிருச்சிரத்தில் பாதியும், க்ஷத்திரியஸ்திரீ அதில் பாதியும், அதாவது கால்வாசியும் செய்யக்கடவர்கள். ரஜஸ்வலையாயிருக்கிற பிராம்மணஸ்திரீ அப்படிப்பட்ட வைசியஸ்திரீயை ஸ்பர்சித்தால் அவள் பிராஜாபத்திய கிருச்சிரத்தைக் கால்பாகத்திற்குக் குறைந்ததாகவும், வைசியஸ்திரீ கால்பாகமும், செய்யக்கடவர்கள். ரஜஸ்வலையாயிருக்கிற பிராம்மணஸ்திரீ அப்படிப்பட்ட சூத்திரஸ்திரீயை ஸ்பர்சித்தால் பிராம்மணஸ்திரீ பிராஜாபத்தியகிருச்சிரத்தாலும் சூத்திரஸ்திரீ தானத்தினுலும் சுத்தைகளாகிறுர்கள்.

ரஜஸ்வலைகளான பிராம்மணஸ்திரீகள் தங்களில் ஒருவர்க்கொருவரைத் தாங்களே ஸ்பர்சித்தபக்ஷத்தில் திரிராத்ரகிருச்சிரத்தைச் செய்யவேண்டுமென்பது ஒருசயநத்தில் படுத்திருப்பது முதலியவைகளைப்பற்றியது. ஒருதரம் ஸ்பர்சித்தபக்ஷத்தில் இருவரும் ஒருதிநம் உபவாஸமிருந்து பஞ்சகவியத்தினுல் சுத்தைகளாகிறுர்களென்று காசியபர்சொன்னுர். மற்றும் ரஜஸ்வலைகளாயிருக்கிறபிராம்மண க்ஷத்திரிய ஸ்திரீகளுக்கு ஒருவர்க்கொருவருடைய ஸ்பர்சத்தில்சொன்ன பிராயச்சித்தங்கள் அறிந்துசெய்ததைப்பற்றியதென்றுவஸிஷ்டரும் ரஜஸ்வலையானவள் அறியாமல் தன்னில் தாழ்ந்தவர்ணத்து ரஜஸ்வலையை ஸ்பர்சித்தால் அதுமுதல் எவ்வளவுகாலத்திற்குள் சுத்தையாகமாட்டாளோ அவ்வளவுகாலம் (நாலாவதுநாள் ஸ்நாநபரியந்தம்) புசிக்கக்கடவளன்று என்றும், தனக்குச்சரியான அல்லது உயர்ந்த வர்ணத்திய ரஜஸ்வலையை ஸ்பர்சித்தால் அப்போது ஸ்நாநம்செய்வதால் சுத்தையாகிறுளென்றும் விர்த்தவஸிஷ்டரும்சொன்னுர்கள்.

ரஜஸ்வலைக்குச் சண்டாளர்முதலியவர்களின் ஸ்பர்சத்தில் பிராயச்சித்தம். ரஜஸ்வலையானவள் சண்டாளர் சக்கிலிமுதலியவர்களால் தொடப்பட்டால் அவள் மூன்றுநாளும் உபவாசமிருந்து நாலாவதுநாள் ஸ்நாநம்செய்து பின் பிராயச்சித்தத்தைச் செய்யக்கடவளென்றும், சண்டாளாதிகளைஸ்பர்சித்தது முதல்நாளானுல் திரிராத்திரகிருச்சிரத்தையும், இரண்டாவது நாளானுல் த்விராத்திரகிருச்சிரத்தையும், மூன்றுவது நாளானுல் ஒருநாள் உபவாஸத்தையும், அதற்குமேல் ஸ்பர்சித்தால் நக்த போஜனத்தையும் (பகலில்மாத்தி

ரம் உபவாஸமிருத்தலை) செய்யவேண்டுமென்றும் விர்த்தவசிஷ்டர் சொன்னது அறிந்து ஸ்பர்சித்தவிஷயத்தைப்பற்றியது. அறியாமல் ஸ்பர்சித்தவிஷயத்தில் சண்டாளர்களாலும் மற்ற நீசர்களாலும் காக்கையாலும் ஸ்பர்சிக்கப்பட்ட ரஜஸ்வலையானவள் அதுமுதல் நாலாவதுநாள் ஸ்நாநம்செய்து சுத்தையாகிறவரையில் உபவாஸமிருக்கக்கடவளென்றும், புசிக்குமளவில் சண்டாளனையும் நாய் காக்கைமுதலியவற்றையும் ஸ்பர்சித்த ரஜஸ்வலையானவள் கோமூத்திரத்தில் சமைத்த யவஅரிசி அன்னத்தை ஆறுநாள் விதிப்படிபுசித்தால், சுத்தையாகிறளென்றும், அதற்குச்சக்தியில்லாதவள் ஸ்வர்ணதானத்தை அல்லது பிராம்மணபோஜனத்தைச் செய்விக்கக்கடவளென்றும் போதாயனர்சொன்னார். ரஜஸ்வலையான ஸ்திரீதான் உச்சிஷ்டையாயிருந்து உச்சிஷ்டையான மற்றொருஸ்திரீயை ஸ்பர்சித்தால் ஸ்பர்சிக்கப்பட்டவள் இருபிறப்பாளருடையஸ்திரீயானால் பிராஜாபத்தியகிருச்சிரத்தினாலும் சூத்திரஸ்திரீயானால் தானத்தினாலும் சுத்தியை அடைகிறளென்று அத்திரியும், ரஜஸ்வலையானவள் கீழ்உச்சிஷ்டர்களான பிராம்மணரை ஸ்பர்சித்தால் ஒருநாள் உபவாஸத்தையும், மேல்உச்சிஷ்டர்களான பிராம்மணரை ஸ்பர்சித்தால் மூன்றுநாள் உபவாஸத்தையும் அநுஷ்டிக்கக்கடவளென்று மார்க்கண்டேயரும் சொன்னார்கள்.

மலமூத்திரங்களையொழித்துச்சௌசம்செய்யாமலிருப்பவர்கள் கீழ்உச்சிஷ்டர்களென்றும் புசித்துக் கைவாய்களை அலம்பாதவர்கள் மேல் உச்சிஷ்டர்களென்றும் அறிக.

சண்டாளர் முதலியவர்களைப்பார்ப்பதில்சுத்தி. ரஜஸ்வலையானவள் புசிக்கையில் மற்றொரு ரஜஸ்வலையைப்பார்த்தால் அதுமுதல் நாலாநாள் ஸ்நாநம்செய்கிறவரையில் உபவாஸமிருந்துபின்பு பிர்ம்மகூர்ச்சபஞ்சகவியத்தைக் குடித்தால் சுத்தையாகிறளென்று ஆபஸ்தம்பரும், சண்டாளனைப்பார்த்தால் மூன்று உபவாஸமிருக்கவேண்டுமென்றும் சண்டாளதர்சனம் அறிந்துசெய்யப்பட்டதாகில் பிராஜாபத்தியகிருச்சிரத்தைச் செய்யவேண்டுமென்றும் அத்திரியும், பிணம் முதலியவைகளைத் தொட்டால் நாலாநாள் ஸ்நாநம்செய்து பின்பு மூன்றுநாள் உபவாஸமிருக்கவேண்டுமென்று சாதாதபரும், ஜநநமரணத்தீட்டுக்களையுடையவர்களின் சம்பந்தமான அன்னபானங்களைச் செய்தால் பிராஜாபத்தியகிருச்சிரத்தைச் செய்யவேண்டுமென்றும் அவர்களை ஸ்பர்சித்தால் மூன்றுநாள் உபவாஸமிருக்கவேண்டுமென்றும் அத்திரியும், நாய் குள்ளநரி கழுதை இவைகளால் கடிக்கப்பட்

டால் ஐந்துநாள் உபவாஸமிருந்து பஞ்சகவியத்தால் சுத்தியையடைகிருளென்றும் பந்துக்களுடைய மரணத்தைக்கேட்டால் வேருெருவரால் அபிஷேகம் செய்யப்பட்டு அல்லது கேட்டதுமுதல் நாலாநாள் ஸ்நாநம்வரையில் உபவாஸமிருந்து சுத்தையாகிருளென்றும் ரஜஸ்வலையாயிருக்கையில் ஜலத்திலிழிந்து ஸ்நாநம்செய்யக்கடவளல்லளென்றும் ஒருவரெடுத்துக் கொட்டியஜலத்திஞல் ஸ்நாநம்செய்து அந்தவஸ்திரத்தைப்பிழியாமலும் வேருெருவஸ்திரத்தைத் தரியாமலும் உடுத்தவஸ்திரத்தோ டிருக்கவேண்டுமென்றும் வியாஸரும் சொன்ஞர்கள்.

౧౫౪॥ స్నాతా రజస్వలా యాతు చతుర్థేఽహని శుధ్యతి ।
కుర్యాద్రజోనివృత్తౌతు దైవపిత్ర్యాదికర్మ చ ॥

ரஜஸைப்பற்றியசுத்தி. (இ-ள்.) ரஜஸ்வலையானஸ்திரீ நாலாவதுநாளில் ஸ்நாநம்செய்வதிஞல் சுத்தையாகிருள். அன்றையதிநத்தில் ரஜஸு ஒழிந்திருந்தால் அவள் தைவகர்மத்தையும் பிதிர்கர்மத்தையும் செய்யத்தக்கவள். (எ-று.)

நான்காவதுதிநத்தில் ரஜஸு ஒழியாதபக்ஷத்தில் பர்த்தாவினுடைய சிசுரூஷைவிஷயத்தில்மட்டும் சுத்தையாகிருளென்றும் தைவபிதிர்கர்மங்கள்விஷயத்தில் ஐந்தாவதுநாளில் சுத்தையாகிருளென்றும் ஆபஸ்தம்பர்சொன்ஞர். இதஞல் சிலஸ்திரீகளுக்குச் சிலநாள்வரையிலும் ரஜஸு ஒழியாதிருக்கும்பக்ஷத்தில் அவர்கள் அதுவரையில் சுத்தைகளல்லரென்றும் அது ஒழிந்தபின் தைவபிதிர்கர்மங்கள் விஷயத்தில் சுத்தைகளாகிருர்களென்றும் அறிக. (கரு௨)

౧౫౫॥ రోగేణ యద్రజః స్త్రీణామన్వహం హి ప్రవర్తతే ।
నాశుచిస్సా తతస్తేన తత్స్యాద్వైకాలికం మతమ్ ॥

ரஜஸின்பேதங்கள். (இ-ள்.) ஸ்திரீகளுக்கு ரோகத்திஞல் திநந்தோறும் யாதொரு ரஜஸானது உண்டாகிறதோ, அந்த ரஜஸானது அகாலத்தில் உண்டானதாகையால் அதஞல் அந்தஸ்திரீ அசுத்தையாகாள். (எ-று.)

ராகத்திஞலும், ரோகத்திஞலும், தக்ககாலத்திஞலும், புசித்த திரவியங்களிஞலும் உண்டாகி ரஜஸு நாலுவகைப்படும். அவற்றில் கர்ப்பிணியானவளுக்குப்பிரஸவகாலத்திற்குள் கொழுப்பின்மிகுதியால் உண்டாகும் ரஜஸானது ராகத்திஞல் உண்டானதென்றும், ஸ்திரீகளுக்குத் திநந்தோறும் அதிகமாக உண்டாகிற ரஜஸா

னது ரோகத்தினுல் உண்டானதென்றும், ஸ்நாநம்செய்தநாள்தொட ங்கிப் பதினெட்டுநாளுக்குமேல் உண்டாகின்ற ரஜஸானது காலத் தில் உண்டானதென்றும், பக்ஷிக்கப்பட்ட திரவியத்தின் தோஷத்தி னுல் சிலகாலத்தில் சரீரத்தில் தாதுக்களுக்குச்சரியான நிலைதப்பின போது உண்டாகின்ற ரஜஸானது திரவியத்தினுல் உண்டான தென்றும், வேறுஸ்மிருதியில் சொல்லியிருக்கிறது. தினந்தோறும் இடைவிடாமல் பெருகும் ரஜஸானது ரோகத்தினுல் உண்டான தாகையால் அந்தரஜஸினுல் ஸ்திரீயானவள் காலத்தில் உண்டா கும் ரஜஸினுல்போல அசுத்தையாகமாட்டாளென்பது கருத்து. ஸாதாரணமாக ஸ்திரீகளுக்கு ரஜஸ்ஸு உண்டாகின்றகாலம் ஒருமாஸ மாகும். மாஸங்கள்தோறும் ஸ்திரீகள் ரஜஸ்வலையாகிருர்களென்பது சாஸ்திரத்திலும் உலகத்திலும் பிரஸித்தம். சிலஸ்திரீகளுக்குச் சரீ ரத்தில் தாதுஸ்வபாவத்தினுல் இருபதாவதுநாள் முதல்கொண்டு ருதுவாகுங்காலம் சம்பவிக்கிறதுமுண்டு. இவைகளில் கர்ப்பிணியா னவளுக்குப் பிரஸவத்திற்குமுன் உண்டாகின்ற ரஜஸ்ஸுக்குக் கால த்தில் உண்டாகின்ற ரஜஸ்ஸுக்குப்போல மூன்றுநாள்தீட்டுஉண்டு. புஜித்தவஸ்துவின் தோஷத்தினுல் உண்டாகிற ரஜஸின்விஷயத்தில் ஸ்நாநம்செய்த திநம்முதல் பனிரண்டுநாள்களுக்குள் உண்டானுல் மூத்திரத்திற்குப்போல் செளசத்தைச்செய்யவேண்டும். பதினெட்டு நாள்களுக்குள்ளானுல் ஸ்நாநமும்,அதற்குமேல் சம்பவித்தால்மூன்று நாள்தீட்டுமுண்டென்று அங்கிராவும், பிரஸவித்தஸ்திரீஇருபதாவது நாள் ஸ்நாநம்செய்தபின் ரஜஸ்வலையானுல் அதுபிரஸவமென்னும் நிமித்தத்தினுல் உண்டானதாகையால் நைமித்திகரஜஸ்ஸு என்று சொல்லப்படுமென்றும்,அந்தரஜஸானது ஒழிந்தபின் ஸ்நாநத்தினுல் அவள் சுத்தையாகிருளென்றும்,கர்ப்பம்சேதமாகி அதனுல் உண்டா கிறரஜஸ்ஸு, கர்ப்பம்கடினத்தன்மையை அடைந்தபின் சேதப்பட்டு விழும்போது உண்டாகின்றரஜஸ்ஸு இவைகளுக்கு ரஜஸ்ஸுஒழிந்த பின் ஸ்நாநத்தினுல் சுத்தி என்பதில்லையென்றும் அவைகளுக்குச் சொல்லிய காலத்தினுல் சுத்தி உண்டாகிறதென்றும் பிரஜாபதியும் சொன்னுர்கள்.

பகலில் அல்லது ராத்திரியில் ரஜஸ்வலையானுல் அந்தத்திநந் தொடங்கி மூன்றுதிநம் தீட்டுக்குக்கணக்கேயல்லது அந்தநாழிகை தொடங்கிக் கணக்குசெய்யக்கூடாது. இரவில் மூன்ருவது பாகத் தில் ரஜஸ்வலையானுல் மறுதிநம்காலைதொடங்கி மூன்றுநாள் தீட் டைச்சொல்லவேண்டும். இரவில் முன்சந்தியாகாலம் மூன்றேமுக்

கால்நாழிகையும் கடையில் சந்தியாகாலம் மூன்றேமுக்கால்நாழிகையும்சேர்ந்து ஒருயாமம்போய் நின்றமூன்றுயாமம் ஒரு இராத்திரியாகி(திரியாமை) மூன்றுயாமங்களை யுடையதென்று சொல்லப்படுகிறது. அதில் மூன்ருவதுபாகத்திலானுல் மறுநாள்தொடங்கிக் கணக்குசொல்லப்பட்டதென்றறிக. (கசுஎ)

౧౭౪॥ సాధ్వాచారా న తావత్స్యాద్రజో యావత్ప్రవర్తతే ।
రజోనివృత్తౌ గమ్యా స్త్రీ గృహకర్మణి చైవ హి॥

(இ-ள்.) ஸ்திரீக்கு எவ்வளவுகாலம் ரோகத்தினுல் ரஜஸானது ஒழியாமலிருக்கின்றதோ அவ்வளவு காலம் அந்தஸ்திரீ தைவகர்மத்திற்கும் பிதிர்கர்மத்திற்கும் செய்யத்தக்க சமைத்தல்முதலிய நல்ல காரியத்தைச் செய்யத் தக்கவளன்று. அந்த ரஜஸானது ஒழிந்தவளவில் புருஷனுல் அடையத்தக்கவளாகவும் கீழ்ச்சொன்ன சமைத்தல்முதலிய கிருககிருத்தியங்களைச் செய்யத்தக்கவளாகவும்ஆகிருள்.

౧౮౪। ప్రథమేఽహని చండాలీ ద్వితీయే బ్రహ్మఘాతినీ ।
తృతీయే రజకీ ప్రోక్తా చతుర్థేఽహని శుధ్యతి ॥

(இ-ள்.) ரஜஸ்வலையானவள் முதல்நாளில் சண்டாள ஸ்திரீயாகவும் இரண்டாவது நாளில் பிர்ம்மஹத்தி செய்தவளாகவும் மூன்ருவதுநாளில் வண்ணர ஸ்திரீயாகவும் சொல்லப்படுகிருள். நான்காவதுதினத்தில் சுத்தையாகிருள்-(எ-று.)

முதல்நாளில் சண்டாளஸ்திரீ என்று சொன்னது அன்றையதினம் அவளைப்புணர்ந்தவன் சண்டாள ஸ்திரீகமநம் செய்த பாபத்தை அடைகிருன் என்பதற்காக. இதுபோல் மற்றவைகளும் அந்தந்தப்பேர்களால் சொல்லப்பட்டதென்று கொள்க. (கசுஅ)

౧౯౪। ఆతురే స్నానఉత్పన్నే దశకృత్వో హ్యనాతురః ।
స్నాత్వా స్నాత్వా స్పృశేదేనం తతః శుధ్యేత్స ఆతురః ॥

ஜ்வரம் முதலியவைகளால் பீடிக்கப்பட்டவன் ஸ்நாநம் செய்யும்விதி (இ-ள்.) ஆதுரனென்ருல் ஜ்வரம் முதலிய வியாதியால் பீடிக்கப்படுகிறவன்.அவனுக்கு ரஜஸ்வலை முதலியவர்களுடைய ஸ்பர்சம் பந்துமரணம் இவைமுதலிய நிமித்தங்களால் ஸ்நாநம் செய்ய நேரிட்டால் நோயில்லாத மற்ருெருவன் ஆதுரனைத் தொட்டுத்தொட்டுப்பத்துதரம் ஸ்நாநம்செய்தால் ஆதுரன் சுத்தனுகிருன்-(எ-று.)

ஆதுரன் அந்த ஒவ்வொரு ஸ்தாநத்திற்கும் உடுத்திருந்த வஸ்

திரத்தைக் களைந்து மற்றொருவஸ்திரத்தை உடுத்துச் சக்திக்கிடாகத் தானங்களைச்செய்து பின்பு புண்ணியாக வாசநதீர்த்தத்தினால் சுத்தனாகிறனென்று அத்திரிமுனிவர்சொன்னார்.

ஜ்வராதிகளால் பீடிக்கப்பட்ட ஸ்திரீகளுக்கு மந்திரஸ்நாநம். ஜ்வரத்தினால் பீடிக்கப்பட்ட ஸ்திரீயானவள் ரஜஸ்வலையானால் நான்காவது தினத்தில் வேறொருஸ்திரீ அவளைத்தொட்டு உடுத்திருந்த வஸ்திரத்துடன் ஸ்நாநம்செய்து பின்னும்தொட்டு ஸ்நாநம்செய்து இவ்விதமாகப் பத்து அல்லது பனிரண்டுதரம் ஸ்நாநம்செய்து அப்போதைக்கப்போது ஆசமநமும்செய்து பிரதிஸ்நாநத்திற்கும் ரஜஸ்வலைக்குப் புதியவஸ்திரந்தரிப்பித்துக் கடைசியில் வஸ்திரங்களைக்களைந்து சுத்தவஸ்திரத்தைத் தரிப்பித்துச் சக்திக்கிடான தானத்தைச்செய்வித்துப் புண்ணியாகவாசநதீர்த்தத்தினால் சுத்தையாகிறனென்று உசநா என்பவர் சொன்னார்.

பிரஸவித்தவள் ரஜஸ்வலை இவர்கள் மரித்தால்செய்யும்விதி. பிரஸவித்தவள் ஸூதிகை என்னப்படுவள். அவள் மரணமடைந்தால் கும்பஜலத்தைப் புண்ணியகரங்களான ருக்குகளால் ஜபித்து அந்தத்தீர்த்தத்தினாலும் பஞ்சகவியத்தினாலும் ஸ்நாநம்செய்வித்து விதிப்படி அவளைத் தகநம் செய்யவேண்டுமென்றும், ரஜஸ்வலையாயிருந்து மரித்தால் அவளைப் பஞ்சகவியத்தினால் ஸ்நாநம்செய்வித்து வேறு வஸ்திரத்தைத் தரிப்பித்து விதிப்படி தகநம் செய்விக்கவேண்டுமென்றும் வேறு ஸ்மிருதியில் சொல்லப்பட்டது. (கசூ௦)

౨౦౫॥ ఉచ్ఛిష్టోచ్ఛిష్టసంస్పృష్టః శునాశూద్రేణవాద్విజః।
ఉపోష్య రజనీమేకాం పంచగవ్యేనశుధ్యతి ॥

அசுத்தர்களான பிராம்மணர்கள் ஒருவர்க்கொருவர் ஸ்பர்சித்தலின்சுத்தி. (இ-ள்.) உச்சிஷ்டனான பிராம்மணன் உச்சிஷ்டனான மற்றொரு பிராம்மணனால் தொடப்பட்டாலும் அல்லது நாயால் அல்லது சூத்திரனால் தொடப்பட்டாலும் ஓரிரவுமாத்திரம் உபவாஸமிருந்து பஞ்சகவியத்தினால் சுத்தனாகிறான். (எ-று.)

உச்சிஷ்டர்களான பிராம்மணர்கள் ஒருவர்க்கொருவர் ஸ்பர்சித்தால் பத்துதரம் காயத்திரியை ஜபிப்பதினால் சுத்தராகிறார்களென்று அத்திரிசொன்னது அசக்தனைப்பற்றியது. உச்சிஷ்ட பிராம்மணனுக்கு நாய்ஸ்பர்சம் நேரிட்டால் அவன் ஸ்நாநம்செய்து ஆயிரம் தரம்காயத்திரியை ஜபிக்கக் கடவனென்று ஸம்வர்த்தர் விசேஷமாகச் சொல்லியிருக்கிறார்.

ஒருவன் மலமூத்திரங்களை ஒழித்துச் சௌசம் செய்யாமலிருக்குந் தருணத்திலும் புசித்து அந்த எச்சிலை அலம்பாமலிருக்குந் தருணத்திலும் உச்சிஷ்டனென்று சொல்லப்படுவான். (௨௦௯)

౨౦పు॥ అనుచ్ఛిష్టేన శూద్రేణ స్పర్శే స్నానం విధీయతే ।
తేనోచ్ఛిష్టేన సంస్పృష్టః ప్రాజాపత్యం సమాచరేత్ ॥

பிராம்மணனுக்குச் சூத்திர ஸ்பர்சித்தலில் சுத்தி. (இ-ள்.) உச்சிஷ்டனல்லாத சூத்திரனோடு பிராம்மணனுக்கு ஸ்பர்சம் நேரிட்டால் ஸ்நாநம் விதிக்கப்படுகிறது. உச்சிஷ்டனான சூத்திரனால் தொடப்பட்ட பிராம்மணன் பிராஜாபத்திய கிருச்சிரத்தைச் செய்யக்கடவன்-(எ-று.)

இங்குசொன்னது உச்சிஷ்டர்களல்லாத பிராம்மணசூத்திரர்கள் ஸ்பர்சத்தைப்பற்றியதும், உச்சிஷ்டர்களான பிராம்மண சூத்திரர்கள் ஸ்பர்சத்தைப்பற்றியதுமென்று இரண்டுபக்ஷத்திற்கும் அர்த்தங்கொள்ளவேண்டும். அதற்குக் காரணம்யாதெனில் ஒன்றுக்கு லகுவாக ஸ்நாநத்தையும் மற்றொன்றுக்குக் குருவாக பிராஜாபத்திய கிருச்சிரத்தையும் விதித்ததேயாம். (௨௧௰)

౨౧పు॥ భస్మనా శుద్ధ్యతే కాంస్యం సురయా యన్న లిప్యతే ।
సురామాత్రేణ సంస్పృష్టం శుధ్యతేఽగ్న్యుపలేఖనైః ॥

பின்னும் வெண்கல முதலிய பாத்திரங்களின் சுத்தி. (இ-ள்.) மத்தியத்தினால் நன்றாகப் பூசப்படாத வெண்கலபாத்திரமானது பஸ்மத்தினாலும் மத்தியத்தினால் நன்றாகப்பூசப்பட்ட வெண்கல பாத்திரமானது நெருப்பில் காய்ச்சுவதினாலும் ஆயுதத்தினால் மேல்பாகத்தில் சீவுவதனாலும் சுத்தியையடைகின்றன.

மலமூத்திரங்களின் ஸம்பந்தத்திலும் இந்தச் சுத்தியேசெய்யவேண்டுமென்றும் மாம்சத்தினால் தோஷத்தையடைந்தால் நெருப்பில் காய்ச்சுவதினால் சுத்தியென்றும் வேறுஸ்மிருதியில் சொல்லப்பட்டது. (௨௨௰)

౨౩పు॥ గవాఘ్రాతాని కాంస్యాని శ్వకాకోపహతాని చ ।
శుధ్యంతి దశభిః క్షారైః శూద్రోచ్ఛిష్టాని యాని చ ॥

(இ-ள்.) பசுவினால் முகரப்பட்டதும் நாய் காக்கைகளால் தூஷிக்கப்பட்டதும் சூத்திரனுடைய எச்சில் அல்லது சூத்திரன் புசித்த சேஷம் இவைகளையுடையதுமான வெண்கலப்பாத்திரங்கள் பஸ்மத்தினால் பத்துதரம் அலம்பச் சுத்தங்களாகின்றன. (எ-று.) (௨௩௰)

౨౪పు॥ గండూషంపాదశౌచంచ కృత్వావై కాంస్యభాజనే ।
షణ్మాసాన్నిక్షిపేద్భూమా వుద్ధృత్య పునరాహరేత్ ॥

(இ-ள்.) வெண்கலப் பாத்திரத்தினல் வாய் கொப்புளித்தலை யும் கால் அலம்புவதையும் செய்தவன் அதை ஆறுமாஸம் பூமியில் புதைத்து வைத்துப் பின்பு எடுத்து உபயோகித்துக் கொள்ளக்க டவன். (எ-று.)

பூமியில் புதைப்பதோடு கடைசல் பிடிப்பதும் செய்யவேண்டு மென்று அங்கிரா என்பவர்சொன்னர். (உசஎ)

౨౫॥ ఆయసేష్వాయసానాంచ సీసస్యాగ్నౌవిశోధనమ్ ॥

(இ-ள்.) இரும்பினல் செய்த பாத்திரங்கள் தோஷத்தையடை ந்தால் அவைகளை மற்றொரு இரும்பினல் ராவுவதினுலும் ஈயபாத்தி ரத்தை உருக்குவதினுலும் சுத்தி உண்டாகிறது. (எ-று.)

இருப்புப் பாத்திரங்களுக்கு இரும்பினல் ராவுகிறதோடு கல் லில் உரைத்தலாலும் ஜலத்தினல் அலம்புவதாலும் சுத்தியுண்டா கிறதென்று மார்க்கண்டேயர் சொன்னர். அலம்புவதினல் சுத்தி யென்பது அல்பதோஷத்தைப்பற்றியதென்றறிக. (உரு)

౨౬॥ దంతమస్థితథాశృంగం రౌప్యసౌవర్ణభాజనమ్ ।
మణిపాత్రాణిశంఖాశ్చ త్యేతాన్ప్రక్షాళయేజ్జలైః ॥
౨౬పు॥ పాషాణేతుపునర్ఘర్షః శుద్ధిరేవముదాహృతా ॥

தந்தம்முதலியவைகளின் சித்தி. (இ-ள்.) யானையின் தந்தத்தி னல் செய்யப்பட்டபாத்திரம் யானையின் எலும்பினல் செய்யப்ப ட்ட கரண்டம்முதலியவை, எருமைக்கொம்பினல் செய்யப்பட்டகர ண்டம்,வெள்ளி பொன் இவைகளால் செய்யப்பட்ட பாத்திரம், ரத் திநங்களால் செய்யப்பட்ட பாத்திரம், சங்கம் ஆகிய இவைகளுக்கு அலம்புவதினுலும் கல்பாத்திரத்திற்கு அலம்புவதோடு மற்றொரு கல்லில் உரைத்தலாலும் சுத்தியுண்டாகிறதென்று சொல்லப்பட் டது. (எ-று.)

கீழ்ச்சொன்ன பாத்திரங்களில் மலம்முதலானவைகள் ஒட்டிக் கொண்டிருக்கும்பக்ஷத்தில் மண்ஜலங்களாலும் பஸ்மத்தினுலும் கல் லில் உரைத்தலாலும் நெருப்பில் காய்ச்சுவதினுலும் கடைசல்பிடிப் பதினுலும் சுத்தியுண்டாகிறதென்று மநுமுதலியவர்கள் சொன் ஞர்கள். அந்தச்சுத்தியைப் பாத்திரத்திற்கும் அதின் தோஷத்திற்கும் தக்கதாகச் செய்யவேண்டுமென்பது கருத்து. (உகூ-உகூ௭)

౨౮ ॥ మృన్మయేదహనాచ్ఛుద్ధి ర్ధాన్యానాంమార్జనాదపి ॥

மண்பாத்திரம் தானியம் இவைகளின் சுத்தி. (இ-ள்.) மண்பாத்திரங்களுக்கு எச்சில் முதலிய தோஷம் சம்பவித்தால் நெருப்பில் கொளுத்துவதினாலும் தானியத்திற்குப் புரோக்ஷணத்தினாலும் சுத்தி உண்டாகிறது. எ-று.

மண் பாத்திரங்களுக்கு உச்சிஷ்ட ஸ்பர்சத்தில்ஜலத்தினால் நன்றாக அலம்புவதாலும், அசுத்தவஸ்துக்கள் மண்பாத்திரத்தில் ஒட்டிக்கொண்டிருந்தால் மறுபடியும்கொளுத்துவதினாலும், சுத்தியுண்டாகிறதென்றும்,மலம், மூத்திரம், சுக்கிலம் இவைமுதலிய அசுத்தவஸ்துக்களின் சம்பந்தத்தில் மண்பாத்திரங்களை நீக்கிவிடவேண்டுமென்றும் போதாயநரும், சண்டாளன் முதலியவர்களால் தொடப்பட்டதான தானியம்வஸ்திரம்இவைகளுக்கு அலம்புவதினால் சுத்தியுண்டென்றும் அப்படிப்பட்டமண்பாத்திரங்களை விடவேண்டுமென்றும் வேறு ஸ்மிருதியிலும், வெகுவாயுள்ள தானியத்திற்கும் வஸ்திரங்களுக்கும் தீர்த்தத்தினால் புரோக்ஷிப்பது சுத்திகரமாமென்றும், அல்பமான தானியவஸ்திரங்களுக்கு அலம்புவதினால் சுத்தியுண்டென்றும் மநுவும்,அல்பமான தானியத்தில் எவ்வளவுபாகம் தோஷத்தை அடைந்ததோ அவ்வள்வையும் எடுத்தெறிந்து மற்ற தானியத்தை அலம்பினால் சுத்தியுண்டென்று விஷ்ணுவும், வெகு புருஷர்களால் எடுக்கத்தக்க தானியத்திற்குச் சண்டாளசம்பந்தத்தில் புரோக்ஷணத்தினால் சுத்தியுண்டென்றும், மல மூத்திரங்கள் பட்டால் அந்த அம்சத்தை மாத்திரம் நீக்கிவிடவேண்டுமென்றும், தானியத்தில் தண்ணீர்முதலானவைவிழுந்தால் அதைக்குத்தி உமியைப் போக்குவதினால் சுத்தியுண்டென்றும்போதாயநரும், அநேகம் புருஷர்கள் எடுக்கத்தக்க நெல், யவதானியம்,கோதுமை இவைகளுக்குத் தோஷம் ஸம்பவித்தால் கிரமமாகப் புரோக்ஷித்தல், பர்யக்நிகரணம் செய்தல் (சுற்றிலும் அக்கிநிஜ்வாலையைக் காட்டுதல்) அலம்புதல் இவைகளால் சுத்தி யுண்டென்றும், நெல், யவம், கோதுமை இவைகளின் அரிசிகளுக்குத் தோஷம் ஸம்பவித்தால் கைகளால் நன்றாகத் தேய்த்து அலம்புவதினால் சுத்தியுண்டென்றும், வெகுபேர் எடுக்கத்தக்க பயறு முதலிய காய்த்தானியங்களுக்குத் தோஷம் ஸம்பவித்தால் அவைகளை உடைத்துத் தோலைப் போக்குவதினாலும் புரோக்ஷணத்தினாலும் சுத்தி யென்றும் கசியபரும் சொன்னார்கள்.

வீடு தீப்பட்டெரிகையில் கிரகித்துக்கொள்ளத் தக்கவைகள்.

வீடு அக்கிநிஜ்வாலையால் எரிந்து பசுக்கள் மநுஷ்யர்கள் அந்த வீட்

டில் மரித்தால் அங்குள்ள நெல் பின்பு புசிக்கத்தக்கதன்றென்றும், தாம்பிரம் முதலிய பாத்திரங்களும் பூமியின்கீழ் மண்களில் மறைத்துஸ்தாபிக்கப்பட்ட யவதாகியம், உளுந்து, எள் இவைகளும் கிரஹிக்கத்தக்கவைகளாமென்றும், எந்த வீட்டில் தீயால் பிராணிகள் நசிக்காமல் வீடுமாத்திரம் எரிந்துவிடுகிறதோ அங்குள்ள சகல திரவியங்களையும் கிரகித்துக் கொள்ளலாமென்றும் ஆதித்தியபுராணத்தில் சொல்லப்பட்டது. (௨௭)

௨௮ ॥ వేణువల్కలచీరాణాం క్షౌమకార్పాసవాససామ్ ।
ఔర్ణనేత్రపటానాంచ ప్రోక్షణాచ్ఛుద్ధిరిష్యతే ॥

மூங்கில் முதலியவைகளின் சுத்தி. (இ-ள்.) மூங்கில், மூங்கிற்பாய், மூங்கில் விசிறிமுதலிய மூங்கிலால் செய்யப்பட்ட வஸ்துக்களுக்கும் காட்டில் வசிப்பவர்கள் தரிக்கிற மரவுரி, வெண்பட்டு, பருத்தி இவைகள்சம்பந்தமான வஸ்திரம் இவைகளுக்கும் கம்பளம் வநவாசிகள் தரிக்கின்ற பூர்ஜமரப்பட்டை இவைகளுக்கும் புரோக்ஷணத்தினால் சுத்தி உண்டாகிறது. (எ-று.)

இவைகளுக்குத்தோஷம் ஸம்பவித்தால்வெயிலில் வைப்பதினாலும்புரோக்ஷணத்தினாலும்சுத்தியுண்டாகிறதென்றும்,கீழ்ச்சொன்ன வஸ்துக்களுக்கு அமேத்தியங்களின் சம்பந்தம்நேரிட்டிருந்தால் உமி, உப்பு, புளி முதலியவைகளாலும் ஜலத்தினாலும் தேய்த்து அலம்புவதினால் சுத்தியுண்டென்றும் தேவலரும், கம்பளம், பட்டு, ஆட்டுமயிரினால்செய்த பட்டு இவைகளுக்கு உப்புமண்ணினாலும், நேபாளதேசத்தியகம்பளங்களுக்கு அரிஷ்டகமென்னும் பொன்னாலங்காயின் பொடியினாலும், மரவுரிகளுக்குப் பில்வப்பழங்களாலும், வெண்பட்டுகளுக்கும் சங்கம்யானைத்தந்தம் இவைகளுக்கும் வெண்கடுகுமாவினால் தேய்த்துக் கோமூத்திரத்தாலாவது ஜலத்தினாலாவது அலம்புவதினாலும் சுத்தி யுண்டென்று மநுவும், கம்பளங்களுக்கு ரேதஸு முதலிய அசுத்தவஸ்துக்களின்சம்பந்தம்நேரிட்டால்அவைகள் காற்றினாலும், அக்கினியினாலும் சூரியசந்திரர்களின் கிரணத்தினாலும் சுத்தமாகின்றனவென்று அங்கிராவும் சொன்னார்கள். இந்த அங்கிராவின் வசநத்தில் சொல்லிய ரேதஸின்சம்பந்தம் ரேதஸின் பூச்சல்லாத சம்பந்தமென்றறியத்தக்கது. (௨௮)

௨௯ ॥ ముంజోపస్కరశూర్పాణాం శణస్యఫలచర్మణామ్ ।
తృణకాష్ఠస్యరజ్జూనా ముదకాభ్యుక్షణంమతమ్ ॥

முஞ்சிப்புல் முதலியவற்றின்சுத்தி. (இ-ள்.) முஞ்சிப்புல்லினால் செய்யப்பட்ட ஆஸநம் முதலியவைகள், முறங்கள், சணல்பிரியினாற் செய்த கோணி முதலியவைகள், மாம்பழம் முதலியவைகள், மான் தோல் முதலியவைகள், புல், விறகு, கயிறு ஆகிய இவைகளுக்குப் புரோக்ஷிப்பதே சுத்தியாக நிச்சயிக்கப்பட்டது. (எ-று.)

கீழ்ச்சொன்ன சாகம் மூலம் பலம் முதலியவைகள் விஷயத்தில் ஜலத்தினால் சுத்தியுண்டாகிறதென்று யாக்ஞவல்கியரும், சாகாதிகளுக்குத் தாநியத்திற்குப்போல் சுத்தியுண்டாகிறதென்று மநுவும் சொன்னபடியால் அல்பபாகத்திற்குப் புரோக்ஷணத்தினாலும் அதிகமானவைகளுக்கும் அதிகதோஷமுடையவைகளுக்கும் அலம்புவதினாலும் சுத்தியுண்டாகிறதென்பது ஸ்பஷ்டமாகிறது. மரப்பாத்திரம், மண்பாத்திரம், மான்தோல்முதலியவைகளுக்கு அதிக அசுத்திநேரிட்டால் அவைகளைப் பரித்தியாகம் செய்யவேண்டுமென்று காசியபர்சொன்னார். கயிறு, மரவுரி, இலை, சமஸபாத்திரம், சுரைக்காய் பாத்திரம், மான்தோல் முதலியவைகள் தோஷத்தை அடைந்தால் மண்ஜலம், கோமூத்திரம், உப்புஜலம் இவைகளால் சுத்தியைச் செய்தபின் பசுவின் வால் மயிரினால்துடைத்தலாகிய சுத்தியையும் செய்யவேண்டுமென்று பிர்ம்மாண்டபுராணத்தில் சொல்லப்பட்டது. கிழங்கு, பழம், புஷ்பம், பூமி, புல், விறகு, வைக்கோல், தாநியம் இவைகளுக்குப் புரோக்ஷணத்தால் சுத்தியுண்டாகிறதென்று உசநா சொன்னார். (உசு)

30 ॥ తూలికాద్యుపధానాని రక్తవస్త్రాదికానిచ ।
శోషయిత్వాతపేనైవ ప్రోక్షణాచ్ఛుచితామియాత్ ॥

(இ-ள்.) இலவம்பஞ்சினால் செய்யப்பட்ட மெத்தை, திண்டு, ஆஸநம், தலையணை, குஸும்பாசாயமேற்றின வஸ்திரம் முதலியவைகள் வெயிலில் உலர்த்துவதினாலும் புரோக்ஷணத்தினாலும் பரிசுத்தங்களாகும். (எ-று.)

கீழ்ச்சொன்ன வஸ்துக்களுக்குத் தோஷம் ஸம்பவித்தால் அவைகளை வெயிலில் உலர்த்திக் கைகளால் அடிக்கடி துடைத்து ஜலத்தினால் புரோக்ஷிக்கச் சுத்தியுண்டாகுமென்றும், அசுத்தவஸ்துக்கள் நன்றாகப்பற்றியிருந்தால் ஜலத்தில் அசுத்திபோக அலம்புவதினால் சுத்தியுண்டாகிறதென்றும் தேவலர் சொன்னார். (௩0)

3௧ ॥ మార్జారమక్షికాకీట పతంగక్రిమిదర్దురాః ।
మేధ్యామేధ్యంస్పృశంతోపి నోచ్ఛిష్టంమనురబ్రవీత్ ॥

பூனைமுதலிய ஜந்துக்களின் ஸ்பர்சத்தில்சுத்தி. (இ-ள்.) பூனை, ஈ, பூச்சி, விளக்கு விட்டில் பூச்சி, புழு, தவளை இவைகள் பரிசுத்தமாயும் அபரிசுத்தமாயுமுள்ள வஸ்துக்களை ஸ்பர்சிப்பவைகளாயிருந்தபோதிலும் அவைகள் அசுத்தங்களன்றென்று மநு சொன்னார். (எ-று.) (௩௧)

32 ॥ మహీంస్పృష్ట్వాగతంతోయం యాశ్చాన్యోన్యస్యవిప్రుషః ।
భుక్తోచ్ఛిష్టంతథాస్నేహం నోచ్ఛిష్టంమనురబ్రవీత్ ॥

(இ-ள்.) கால்களை அலம்பும்போதும் ஆசமநம் செய்யும்போதும் பூமியில் விழுந்து பிந்துவாகத் தன்மேல்பட்ட ஜலமும் ஒருவர்க்கொருவர் ஸம்பாஷணம் செய்யும்போது முகத்தில் நின்று தேகத்தில் பிந்துவாக விழுந்த ஜலமும் போஜநம்செய்து கையை அலம்பு கையில் விடாமலிருக்கிற நெய் எண்ணெய் இவைகளின்சிக்கும் எச்சிலல்லவென்று மநு சொன்னார். (௩௨)

33 ॥ తాంబూలేక్షుఫలేచైవ భుక్తస్నేహానులేపనే ।
మధుపర్కేచసోమేచ నోచ్ఛిష్టంధర్మతోవిదుః ॥

தாம்பூலம் முதலியவைகளின் சுத்தி. (இ·ள்.) தாம்பூலம், கரும்பு, பழம், புசித்த கையிலுள்ள நெய்ச்சிக்கு, மதுபர்க்கம், ஸோமம் இவைகளுக்குத் தர்மமாக எச்சில் தோஷமில்லை என்றறிகிறார்கள்.

புசித்த கையிலுள்ள நெய் சிக்குக்கு எச்சில் தோஷமில்லாதது போல் தாம்பூலாதிகளை வாயில்வைப்பது விவாகத்தில் மதுபர்க்கபாநம்செய்வது யாகத்தில் ஸோமபாநம் செய்வது இவைகளுக்கும் எச்சில் தோஷமில்லை யென்று அறிக. (௩௩)

34 ॥ రథ్యాకర్దమతోయాని నావఃపంథాస్తృణానిచ ।
మారుతార్కేణశుధ్యంతి పక్వేష్టకచితానిచ ॥

தெருவெள்ளம் முதலியவைகளின் சுத்தி. (இ-ள்.) தெருவில் போகின்ற சேற்றுத்தண்ணீரும், ஓடங்களும், வழியும், புல்லும், சுட்ட செங்கல் கட்டடங்களானமரத்தடியிலுள்ள மேடை முதலியவைகளும், சண்டாளாதிகளால் தொடப்பட்டால் காற்றினாலும் சூரியனாலும் அவைகள் சுத்தியை அடைகின்றன. (எ-று.)

ஆஸநம், படுக்கை, வாகநம், ஓடம், வழி, புல் இவைகளுக்குக் காற்றினாலும் வெயிலினாலும் சுத்திஎன்று போதாயநரும், தெருவின் சேற்றுத்தண்ணீரால் அல்லது காறிஉமிழ்ந்த எச்சில்முதலியவற்றால் நாபிக்கு மேல்புறத்தில் ஸ்பர்சிக்கப்பட்டவன் அப்பொழுதே ஸ்நா

நம்செய்வதினுல் சுத்தனுகிருனென்று சங்கரும், மழைகாலத்தில் கிராமங்களில் குப்பை சேறு இவைகள்கலந்த தெருவெள்ளத்தினுல் நாபிக்குக் கீழ்ப்புறத்தில் ஸ்பர்சிக்கப்பட்டவன் முழங்கால்களையும் பாதங்களையும் மும்மூன்றுதரம் மண்ஜலங்களால் அலம்பக்கடவனென்று யமமுனிவரும் சொன்னுர்கள். (௩௪)

3౫ ॥ అదుష్టాస్సంతతాధారా వాతోద్ధూతాశ్చరేణవః ।
స్త్రియోవృద్ధాశ్చబాలాశ్చ నదుష్యంతికదాచన ॥

வாயில் தாரையாகவிழுகிற ஜலம்முதலியவைகளின் சுத்தி. (இ-ள்.) கமண்டலம்முதலிய தீர்த்தபாத்திரங்களினின்று வாய்வைக்கும் விடாமல் ஒரேதாரையாகவிழுகிற ஜலங்களும், பலஇடங்களினின்று காற்றினுல் கிளப்பப்பட்ட தூளிகளும் சுத்தமானவைகளே. புருஷனைப்போல் பிராதஸ்நாநம்முதலியவைகளை அநுஷ்டிக்காதவர்களேயாகிலும் ஸ்திரீகளும், கிழவர்களும், பாலர்களும் ஒருகாலத்திலும் அசுத்தர்களாகமாட்டார்கள். (எ-று.)

காற்றினுல்கிளப்பப்பட்ட தூளிகள் சுத்தங்களென்பதில் சாதாதபர்வசநத்தின்படி கழுதை, செம்மறியாடு, வெள்ளாடு, நாய் இவைகளின் கூட்டத்தினின்றும் அந்தியஜாதிகளினின்றும்உண்டான தூளிகளும், வேறுஸ்மிருதிவசநத்தின்படிநாய், காக்கை,ஒட்டகம்,கழுதை, கோட்டான், பன்றி, கழுகு முதலியபட்சிகள், ஆடுகள் இவைகளினின்று உண்டான தூளிகளும், மேலேபடிந்தால் ஆயுளும் செல்வமும் குறையுமாகையால் இந்தத்தூளிகள்தவிர மற்றத்தூளிகள் சுத்தங்களாமென்றறிக.

சுத்தமான தூளிகள் முதலியவை. பசு, குதிரை, தேர் இவைகளினின்று உண்டான தூளிகள் எப்போதும் சுத்தமானவைகளென்று உசநாவும், சந்திர சூரியகிரணங்கள், அக்நி, காற்றில் கிளம்பிய தூளி, பசு, குதிரை, பூமி, வாயு, பனித்திவலை, ஈ, தாயின் மடியிலிருந்து பால்கறக்கும்போது கன்று, ஸ்தந்நிய பாநம் செய்கையில் குழந்தை ஆகிய இவைகள் சுத்தங்களென்று யாக்ஞவல்கியரும், நாயால் அடிக்கப்பட்ட மிருகங்களும், பக்ஷிகளால் தள்ளப்பட்ட பழங்களும், சிறுவர்கள் தொட்டதும், ஸ்திரீகளால் செய்யப்பட்டதும் சுத்தியுள்ளவைகளென்று வஸிஷ்டரும், பசுக்களுக்குப்பின்புறத்திலும் ஆடுமுதலானவைகளுக்கு முன்புறத்திலும் சுத்தியுண்டென்றும்,ஸ்திரீகளுக்குத்தேகமுழுதும் சுத்தியென்றும் ஆனுலிவர்களுடைய மனம்மாத்திரம் அசுத்தியுள்ளதென்றும் உசநாவும், பிராம்மணர்க

ளுக்குப்பாதங்களும், ஆடு,குதிரை இவைகளுக்கு முகமும், பசுக்களுக்குப் பின்புறமும், ஸ்திரீகளுக்குச் சரீரமுழுதும் சுசியானவைகளென்று பிரகஸ்பதியும், ஸ்திரீகள், பாலர், ஈக்கள், கொசுகுகள், பூனைகள்,எலிகள், பெருச்சாளிகள், ஆஸநம், படுக்கை, ஜலபிந்துக்கள் இவைகள் நித்தியமும் சுசியானவைகளென்று ஸுமந்துவும், காரு என்று சொல்லப்படுகிற வண்ணான், கம்மாளன், சேணியன், நாவிதன், முச்சி இவர்களுடைய கையும், கடையில்பரப்பிவைக்கப்பட்ட சரக்குகளும், பிரம்மசாரி வாங்கிக்கொண்ட பிக்ஷையும் நித்தியமும் சுசியானவைகளென்று மநுவும், ஆஸநம், படுக்கை, வாகநம், ஸ்திரீயின்முகம், பகலைப் பதினைந்து பங்காக்கி அதில் எட்டாவது பாகமான குதபகாலம், அம்பட்டனுடைய கத்தி, யக்கியத்தில் சமஸமென்னும் பாத்திரம், பசு, ஆடு, ஜல பிந்துக்கள், ஈக்கள், விளக்குவிட்டிற்பூச்சிகள், தர்ப்பங்கள், குதிரை, யானை, யுத்தம், குடை, சந்திரசூரிய கிரணங்கள், பூமி, அக்நி, தூளி, ஜலம், தயிர், நெய், பால் இவைகள் எப்பொழுதும் ஸ்பர்சிக்கத்தக்கவைகளும் சுசியானவைகளுமாமென்றும், பூமியில்விழுந்த ஜலமும், பதிவிரதையான ஸ்திரீயும், தார்மிகனான அரசனும், நித்திய ஸந்தோஷியான பிராம்மணனும், ரதிகாலத்தில் ஸ்திரீகளுடைய முகமும், பழத்தைத் தள்ளுகின்ற பக்ஷிகளும், தாயின்மடியிலிருந்து பாலைக்கறக்கும்போது கன்றுகளும், மிருகங்களைக் கொல்லுகின்ற நாய்களும் சுசியானவைகளென்று யமமுனிவரும், புஷ்பித்த மரங்கள், பிராம்மணர்கள், பஸ்மம், தேன், பொன், தர்ப்பம், குதபகாலம், எள், நாயுருவி, காட்டுவாழை, எருக்கு, தாமரை, நெல்லி, ரத்நம், மாலை, கடுகு, அறுகு, செந்நெல், அக்ஷதை, மணல், பொரி, மஞ்சள், சந்தநம், யவதாநியம், பலாசமரம், கருங்காலி, அரசு, துளசி ஆகிய இவைகள் ஹவ்வியகவ்வியங்களில் (தேவபிதிர்கர்மங்களில்) நித்தியசுத்தங்களென்றும், அசுசியானவிறகுகளால் ஜ்வலிப்பிக்கப்படாததும், அசுசியானமனிதர்களால் ஸ்பர்சித்தல், ஊதுதல் முதலியவைகளைச்செய்து கெடுக்கப்படாததுமான அக்நி அசுசியானவஸ்துக்களையும் சுசியாக்கவல்லதாகுமென்றும், வேறு அக்நி கிடையாத ஆபத்தில் சூத்திரனிடத்திலிருந்து வாங்கின அக்நியை உபயோகிக்க லாமேயன்றி மற்றக் காலத்தில் பிராம்மணர்களுக்குச் சூத்திராக்நி தகாதென்றும், சண்டாளனுடைய அக்நி, அசுசிஸம்பந்தமான அக்நி, பிரஸவத் தீட்டுக்காரனுடைய அக்நி, மஹா பாபியினுடைய அக்நி, சிதையின் அக்நி இவைகள் பெரியோர்களுக்கு ஒருகாலத்திலும் கிரகிக்கத்தகுந்தவைக ளல்ல

வென்றும், நாயைத்தின்னும் ஜாதியான், சூத்திரன் இவர்கள் பிராம்மணனுடைய அக்நியை அநுபவிக்கத் தகாதவர்களென்றும், தேவலரும்சொன்னார்கள்.

பூமியின்சுத்தி. மலமூத்திரங்களின் ஸம்பந்தமில்லாததும் ஊருக்குவெளியில் நூறுகோலளவும் பட்டணத்திற்குவெளியில் நானூறு கோலளவும் தள்ளி அதற்குமேலுள்ளதுமான பூமிசுத்தியானதென்று பிர்ம்மபுராணத்தில்சொல்லப்பட்டது. பூமிக்கு மலம் மூத்திரம் முதலிய அசுத்தவஸ்துக்களின் ஸம்பந்தம் உண்டாயிருந்தால் அந்தப்பூமியைப் பெருக்குவதினாலும் கொளுத்துவதினாலும் சிலநாள் கழித்தபின் அசுத்தவஸ்து மண்ணாகிவிடுவதினாலும், பசுக்களுடைய ஸஞ்சாரத்தினாலும் சுத்தியுண்டாகுமென்றும், கிருகபூமிக்கு ஜலத்தினால் அலம்புவதினாலும் மண்ணைவெட்டி எடுப்பதினாலும் மண் பூசுவதினாலும் சுத்தி உண்டாகு மென்றும் யாக்கியவல்கியரும், அசுசியான மண்ணை வெட்டி எடுப்பது, பின்பு வேறு மண்ணை நிறைப்பது, கொளுத்துவது, பெருமழைபெய்வது, மண்பூசுவது, பசுக்கள்சஞ்சரிப்பது, அசுத்தி யொழியுங்காலம் ஆகிய இந்த ஏழுவிதங்களால் அசுசியானபூமி சுசியாகுமென்று யமமுனிவரும், ஸ்திரீ பிரஸவிக்கிற இடம், மனிதன் மரணமடைகிற இடம், அவன் கொளுத்தப்படுகிற இடம், சண்டாளாதிகள் வசிக்கிற இடம், மலமூத்திர முதலிய அசுத்தவஸ்துக்கள் சேருகின்ற இடம் ஆகிய இந்தப் பூமி அமேத்தியை அசுசியானது என்றும், நாய், பன்றி, கழுதை, ஒட்டகம், இவை முதலியவைகளின் ஸம்பந்தமுள்ளவிடம் துஷ்டம் (தோஷத்தை அடைந்தது) என்றும், தணல், உமி, மயிர், எலும்பு, சாம்பல் இவைகளுள்ளவிடம் மலிநம் (அழுக்கடைந்தது) என்றும் இப்படி அமேத்தியை, துஷ்டை, மலினை என்று மூன்று விதமாகச் சொல்லப்பட்ட பூமியில் அமேத்தியை என்னும் பூமிக்கு ஐந்துவிதம் அல்லது நான்குவிதமான சுத்தி உண்டென்றும், துஷ்டைஎன்னும் பூமிக்கு இரண்டுவிதம், அல்லது மூன்றுவிதமான சுத்தி உண்டென்றும், மலினை என்னும் பூமிக்கு ஒரேவிதமான சுத்தி உண்டென்றும் தேவலரும், குப்பையைப் பெருக்குவது, சாணி ஜலத்தால் மெழுகுவது, கோமூத்திரத்தால் அலம்புவது, அல்பபாகம் மண்ணைவெட்டி எறிவது, பசுக்களை ஒருநாள்முழுதும் அங்கிருக்கச் செய்வது ஆகிய இந்த ஐந்துவகைகளில் ஒவ்வொன்றும் பூமியைச் சுத்திசெய்யுமென்று தேவலர் வசநத்திற்கு விவரணம்போல் மநுவும் சொன்னார்கள். இவைகளில் அந்தந்தப் பூமியின் தோஷத்திற்

குத்தக்கதாக நான்குவிதசுத்தியும் மூன்றுவித சுத்தியும் இரண்டுவிதசுத்தியும் ஒருவித சுத்தியும் ஊஹித்துச் செய்யத்தக்கதென்று அறிக.

கிருகத்தின்சுத்தி. நடுவீட்டில் பிணம் இருந்து அதனுல் வீட்டிற்குத்தோஷம் ஸம்பவித்தால் அந்தவீட்டிலுள்ள மண்பாத்திரங்களையும் சமைக்கப்பட்டுள்ள அந்நத்தையும் எடுத்தெறிந்து வீடுமுழுமையும் சாணியினுல்மெழுகித் தூபங்களால் புகையேற்றிப் பொன் தர்ப்பம் இவைகளோடுகூடினதும் மந்திரஜபத்தால் பரிசுத்தமடைந்ததுமான தீர்த்தங்களைப் பிராம்மணர்களைக்கொண்டு புரோக்ஷணம் செய்வித்தால் அந்தவீடு சுத்தமாகிறதென்று ஸம்வர்த்தரும், உச்சருக்கினுல் மரணமடைந்த சவமிருந்தவீட்டின்சுவர்களைச்சீவி எடுப்பதினுல் சுத்தி உண்டாகுமென்று போதாயநரும் சொன்னுர்கள்.

தேகசுத்தி. நாபிக்கு மேற்புறத்திலுள்ள கண்முதலிய இந்திரியங்கள் சுத்தங்களென்றும், நாபிக்குக் கீழ்ப்புறத்திலுள்ள இந்திரியங்களும் சரீரத்தினின்று வெளிப்பட்ட தேகத்தின் மலங்களானவஸை என்னும் சிலேத்தண்ணீர் அல்லது சரீரத்திலிருக்கும் ஒருவித எண்ணெய், ரேதஸு, ரக்தம், மஜ்ஜையென்னுந் தலைமூளை, மூத்திரம், மலம், காதின் மலம், நகங்கள், கோழை, கண்ணீர், கண் மலம், வேர்வைஜலம் ஆகிய இந்தப் பன்னிரண்டும் அசுத்தங்களென்றும், மலமூத்திரங்கள், மற்றும் சொன்ன தேகமலங்கள் ஆகிய இவைகளின் ஸம்பந்தமும் நாற்றமுமொழியும் வரையிலும் மண்ணுடன்கூடின ஜலத்தையிட்டு அலம்பவேண்டுமென்று மநுஸ்மிருதியிலும், கீழ்ச்சொன்ன பன்னிரண்டுமலங்களில் முந்திய ஆறுமலங்கள் விஷயத்தில் மண்ணோடுகூடிய ஜலத்தினுல் சுத்தி யுண்டாகிறதென்றும், காதின் மலம் முதலிய பிந்திய ஆறுமலங்களுக்குக் கேவலம் ஜலத்தினுல் சுத்தியுண்டாகிறதென்றும் வேறு ஸ்மிருதியிலும் சொல்லப்பட்டது. பிராம்மணர்களுக்கு மூன்று வஸ்துக்களைத் தேவதைகள் பரிசுத்தங்களாகக் கற்பித்தார்கள். அவையாவன கண்ணுல் காணப்படாதது ஜலத்தினுல் அலம்பப்பட்டது, ஒருவர் வாக்கினுல் இது சுசியானதென்று புகழப்பட்டது ஆகிய இவைகளே. ஒரு வஸ்துவில் தோஷத்தைக் காணுகிறவரையில் அந்தவஸ்து சுசியானதென்றறிக. (௫௫)

3௨. देशभंगे प्रवासे वा व्याधिषु व्यसनेष्वपि ।
रक्षेदेव स्वदेहादि पश्चाद्धर्मं समाचरेत् ॥

பிராம்மணன் ஆபத்காலத்தில் க்ஷத்திரியத்தொழிலாலாவது வைசியத்தொழிலாலாவது ஜீவித்திருந்து ஆபத்காலம் கடந்தபின்பு பிராயச்சித்த முதலிய தர்மங்களினுல் தன்னைப் பரிசுத்தனுக்கிக் கொள்ளக்கடவனென்று யாக்கியவல்கியர் சொன்னுர். (௩அ)

நான்காவது அத்தியாயம் முற்றிற்று.

ஐந்தாவது அத்தியாயம்.

அவதாரிகை. கீழ் நான்காவது அத்தியாயத்தில் திரவியசுத்தியைச் சொல்லி அத்தியாயமுடிவில் அசுத்தனுனவன் சுத்தியைச் செய்துகொள்ளக் கடவனென்று விதித்து அந்தச்சுத்தியின் கிரமத்தைப் பிரகீர்ணகம் முதலிய பாபங்களுக்குச் சொல்லிய பிராயச்சித்தமுகத்தாலே ஒன்று இரண்டு மூன்று இந்த அத்தியாயங்களால் வெளியிட்ட ஸ்ரீபராசரமுனிவர் மிகுந்தசுத்திகளை இங்குச் சொல்லவேண்டுமாயினும் மூன்ருவது அத்தியாயத்தில்சொல்லிய உபபாதக பிராயச்சித்தங்களில் கோவதப் பிராயச்சித்தம் சொல்லப்படாமையால் அதை மேலிரண்டு அத்தியாயங்களால் சொல்லப்போகிறவராய் முதலில் கேள்வியும் உத்தரவுமாகத் தொடங்குகிருர்.

౧ ॥ గవాంబంధనయోక్త్రేషు భవేన్మృత్యురకామతః ।
అకామకృతపాపస్య ప్రాయశ్చిత్తంకథంభవేత్ ॥

(இ-ள்.) கட்டுவதற்கு யோக்கியங்களான கயிறுகளில் கட்டப்பட்ட பசுக்களுக்கு (இங்குமங்கும் சஞ்சரிக்கையில் கழுத்தில் உச்சுருக்கு நேரிட்டு) அறியாமல் மரணம் ஸம்பவித்தால் அறியாமல் செய்த கோவதரூபமான அந்தப் பாபத்திற்குப் பிராயச்சித்தம் எவ்விதமாகும்?

கட்டினபுருஷன் அதைக்கொல்லுவதற்காகப் பிரயத்தினப்படாமையால் அறியாமல் செய்த பாபமென்கிருர். அறியாமல்செய்த பாபத்திற்குப் பிராயச்சித்தம் செய்வது ஸகல ரிஷிகளுக்கும் ஸம்மதமென்கிற எண்ணத்தினுல் அதற்குப் பிராயச்சித்தம் எவ்விதமென்கிருர், பாபம் அறியாமல் செய்யப்பட்டால் அதற்குப் பிராயச்சித்தத்தைப் பெரியோர்கள் சொல்லுகிருர்களென்றும், அறிந்து செய்த பாபவிஷயத்தில் பிராயச்சித்தத்தைச் சிலர் சொல்லுகிருர்களென்றும், மநுவும், அப்படியே ஜாபாலியும், இதுபாபத்தொழிலென்று

றியாமல் பாபமானது ஒருதரம் செய்யப்பட்டால் அதற்குத் தர்மசாஸ்திரத்தைக் கற்றுணர்ந்த பெரியோர்கள் பிராயச்சித்தத்தை இவ்விதமாக விதிக்கிருர்களென்று பிராயச்சித்தவிதியைச் சொல்லி அறியாமல் இரண்டாவது தடவை பாபத்தைச்செய்தால் இரட்டிப்பாகப் பிராயச்சித்தத்தையும், இவ்விதமாக மூன்ருந்தடவையில் மூன்றுபங்கு அதிகமாகவும் செய்யவேண்டுமென்றும், நான்காந்தடவைசெய்தால் அதற்குப் பிராயச்சித்தம் கிடையாதென்றும், பாபத்தைஅறிந்து ஒருதடவைசெய்தாலும் அதற்குப் பிராயச்சித்தம் இல்லைஎன்றும், சிலமுநிகள் அதற்குப் பிராயச்சித்தத்தை விதிக்கிருர்களென்றும் தேவலரும், பிராம்மணனை அறியாமல் கொன்றவனுக்கு ரிஷிகள் பிராயச்சித்தத்தை விதிக்கிருர்களென்றும், பிராம்மணனை அறிந்து கொன்றவனுக்குப் பிராயச்சித்தம் கிடையா தென்றும் போதாயநரும், அறியாமல் செய்த பாபத்திற்குக் கிரமமான பிராயச்சித்தமும் அறிந்து செய்த பாபத்திற்கு இரட்டிப்புப் பிராயச்சித்தமும் செய்யவேண்டுமென்று அங்கிராவும் சொன்னூர்கள்.

இவ்விதமாக அறிந்து செய்த பாபத்தின் பிராயச்சித்தத்தைப் பற்றி ரிஷிகளுக்கு விவாதமிருந்தபோதிலும் அறியாமல் செய்த பாபத்தின் பிராயச்சித்தம் சகலரிஷிகளுக்கும் ஸம்மதியாகையால் இதைச்செய்ய அதிகாரம் முக்கியமாக உண்டென்பதை நினைத்து மூலவசநத்தில் கேட்கப்படுகிறது.

அறியாமல்செய்த பாபத்திற்குப் பிராயச்சித்தம் செய்யும் விஷயத்தில் ரிஷிகளுக்கு விவாதமில்லை யென்பதைவிட்டு அறிந்துசெய்த பாபவிஷயத்தில் பிராயச்சித்தத்தைப்பற்றி ரிஷிகள் விவாதப்படுவது பின்வருமாறு விசாரிக்கப்படுகிறது. அதாவது தன்னைச் செய்தவனுக்கு நரகத்தை உண்டுபண்ண வல்லதும், பெரியோர் நடுவில் அவனுக்குப் பழிப்பைத் தரவல்லதுமான இரண்டுவிதசக்தி பாபத்திற்கு உண்டென்பதும், இந்தச் சக்திகளை யொழிக்கவல்லதாகிய பிராயச்சித்தத்திற்கும் நரகத்தை யொழிக்கவல்லதும், பெரியோர்கள் நடுவில் புகழைத் தரவல்லதுமான இரண்டுவிதசக்தியுமுண்டென்பதும், ஆனாலும், சிலபாபங்களுக்குப் பிராயச்சித்த மில்லை யென்கிறவர்களுக்குப் பிராயச்சித்தம்செய்தாலும் அது நரகத்தை யொழிக்கத்தக்க சக்தியற்றதாகுமென்பது கருத்தென்பதும், பிராயச்சித்தம் உண்டென்று சொல்லும் ரிஷிகளுக்குச் செய்யப்பட்ட பிராயச்சித்தத்திற்கு வியவஹாரத்தை உண்டுபண்ணும் சக்தி அதாவது பிராயச்சித்தம் செய்து கொண்டு யோக்கியனுனென்று புகழைத் தரவல்லதாகிய சக்தி உ

ண்டென்பது அபிப்பிராயமா மென்பதும் மேலே சொல்லப்போகிற யாக்கியவல்கியருடைய வசநத்தால் பெறப்படுகின்றன. அந்தவசநத்தின் பொருளென்னவெனில் அறியாமையினால் பிர்ம்ம ஹத்தியைச் செய்தவன் அதற்குச் சொல்லியபடி பன்னிரண்டுவருஷத்தில் செய்யத்தக்க பிராயச்சித்தத்தினால் சுத்தனாகி நரகத்தைத் தவிருகிறானென்பதும், அறிந்துசெய்தவன் பிராயச்சித்தத்தைச் செய்துகொண்டால் இந்த லோகத்தில் சிஷ்டர்களால் பழிக்கப்படாத தசையைப் பெறுகிறானேயல்லது அந்தப் பிராயச்சித்தத்தினால் நரகத்தைத்தரவல்லதாகிய பாபசக்தி ஒழிகிறதில்லை என்பதுமாம். அறிந்துசெய்த பாபவிஷயத்தில் லோகத்தில் வியவஹாரசித்தி இரட்டிப்புப் பிராயச்சித்தத்தினால் சம்பவிக்குமென்பதும் பரலோகசித்தியை அபேக்ஷித்தால் அறிந்து பாபம்செய்தவன் தனக்குப் பிராயச்சித்தமில்லாமையால் மலையினின்று விழுந்தும் அக்நியில் விழுந்தும் சரீரத்தை யொழிப்பதைச் செய்யவேண்டுமென்று வேறு ஸ்மிருதியிலும் சொல்லியபடி மரணாந்த பிராயச்சித்தத்தைச் செய்தால் நரக நிவர்த்திவந்து பரலோகம் சித்திக்குமென்பதும் நிச்சயிக்கப்பட்டன.

பின்னும்சிலர் அறிந்து பாபத்தைச் செய்தவன் நரகத்தை ஒழிப்பதற்காக மரணாந்தமான பிராயச்சித்தத்தைச் செய்யவேண்டுமென்பது சரிதானென்றும் பிராயச்சித்தத்தைச் செய்துகொண்டால் இங்குச் சிஷ்டர்நடுவில் வியவஹாரசித்திமாத்திர முண்டாகுமே யல்லது நரகசித்தி ஒழியாதென்பது சரியல்லவென்றும், ஏனெனில் அறிந்து பாபத்தைச் செய்தவன் பிராயச்சித்தத்தைச் செய்துகொண்டால் நரக நிவர்த்தி யுண்டாகுமாகிலும் இங்குச் சிஷ்டர்களில் சேர்க்கையை அடையமாட்டானென்றும் முன்சொன்ன யாக்கியவல்கிய வசநத்தில் "காமதோ வ்யவஹார்யஃ" என்கிற விடத்தில் காமதஃ-அவ்யவஹார்யஃ என்று பதச்சேதஞ்செய்தால் இந்த அர்த்தம் உண்டாகிறதென்றும், சிசுஹத்தியைச்செய்தவன், செய்தநன்றியைமறந்தவன், சரணமடைந்தவனைக் கொன்றவன், ஸ்திரீவதம் செய்தவன் ஆகிய இவர்கள் பிராயச்சித்தத்தினால் பரிசுத்தர்களா யிருந்தபோதிலும் இவர்களோடு ஸஹவாஸம் செய்யலாகாதென்பது மநு வசநத்தினால் கிடைத்ததென்றும் சொல்லுகிறார்கள். ஆகையால் நரகத்தையொழிப்பதற்காகவாகிலும் இந்த லோகத்தில் சிஷ்டரில் சேர்க்கையை அடைவதற்காகவாகிலும் செய்யத்தக்கதான பிராயச்சித்தம் அறிந்து செய்யப்பட்ட பாபத்திற்கும் உண்டென்பது பெறப்பட்டது. (௧)

௨। వేదవేదాంగవిదుషాం ధర్మశాస్త్రంవిజానతామ్ ।
స్వధర్మరతవిప్రాణాం స్వకంపాపంనివేదయేత్ ॥

பாபத்தைச் செய்தவன் பரிஷத்தை அடைவது. (இ-ள்.) பாபத்தைச் செய்தவன் வேதங்களையும் வேதாங்கங்களையும் அறிந்தவர்களும் தர்மசாஸ்திரத்தைக் கற்றுணர்ந்தவர்களும் தம் வர்ணாச்சிரமதர்மங்களை அன்புடன் அநுஷ்டிப்பவர்களுமான பிராம்மணர்களுக்குத் தன்பாபத்தை அறிவிக்கக்கடவன். (எ-று.)

இதனால் பேர்மாத்திரத்தினால் பிராம்மணர்களா யிருப்பவர்களும் வேதங்களை ஓதாமல் மநுவாதி தர்மசாஸ்திரங்களை மாத்திரம் தெரிந்துகொண்டவர்களும், அந்நியருக்குத் தர்மங்களை உபதேசிப்பவர்களாயினும் அந்தத்தர்மங்களில் தமக்குரியவைகளை அநுஷ்டிக்காதவர்களுமான பிராம்மணர்கள் பரிஷத்திற்குத் தக்கவர்களல்லரென்றும், அவர்கள் விதிக்கும் பிராயச்சித்தமும் பாபத்தைப்போக்கவல்லதல்லவென்றும் சொல்லப்பட்டது. தமக்குரிய தர்மாநுஷ்டானத்தில் நிலைத்திருப்பவர்களான வேதம் முதலிய சாஸ்திரங்களை அறிந்த பிராம்மணர்களெதிரில் பாபஞ்செய்தவன் தன்பாபங்கள் முழுதும் சொல்வதே பரிஷத்தை அடைவதாகுமென்றறிக. ஒருவனுக்குத் தான் செய்தது பாபகிருத்தியமாகுமோ வென்கிற ஸம்சயமிருந்தால் அதுவிஷயத்தைப் பெரியோர்கள் சபையாகிற பரிஷத்தை அடைந்து முழுதும் சொல்லி மனந்தெளிந்தபின்பு புசிக்கவேண்டுமென்றும், அப்படி கேட்டுத் தெளியாமல் புசித்தவன் தான் செய்த பாபத்தை அதிகப்படுத்துகிறானென்றும், பாபத்தைச்செய்து அதை மறைக்கக்கூடாதென்றும், மறைத்தாலும் அந்தப் பாபம் அதிகமாகுமென்றும், பாபம் சிறியதாகிலும் பெரியதாகிலும் அதைத் தர்மத்தை அறிந்தவர்களுக்குச் சொன்னால் அவர்கள் வைத்தியர்கள் ரோகிக்கு ஹிதம் சொல்வதுபோலப் பாபத்திற்குப் பிராயச்சித்தத்தைச் சொல்லி அவனை ரக்ஷிக்கிறார்களென்றும், பிராயச்சித்தத்தைக் கேட்டபின் பாபியானவன் வெட்கமடைந்து ஸத்தியத்தில் நிலைத்தும் மிருதுவான ஸ்வபாவத்தையும் நல்ல எண்ணத்தையு முடையவனாகி அடியேன் சுத்தனாகும்படி அநுக்கிரகிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கக் கடவனென்றும், பாபஞ்செய்தவனான க்ஷத்திரியன் அல்லது வைசியன் உடனே மனதில் பரிதபித்து உடுத்தவஸ்திரத்துடன் மௌனமாக ஸ்நானம்செய்து பரிஷத்தை அடைந்து ஈரவஸ்திரத்து

டன் பூமியில் ஸாஷ்டாங்கமாகப் பிரணாமம்செய்து மௌநமா யிருக்கவேண்டுமென்றும் அங்கிரசுசொன்னார். (௨.)

3 ॥ సావిత్ర్యాశ్చాపిగాయత్ర్యా స్సంధ్యోపాస్త్యగ్నికార్యయోః ।
అజ్ఞానాత్కృషికర్తారః బ్రాహ్మణానామధారకాః ॥

நாமதாரக பிராம்மணஸ்வரூபம். (இ-ள்.) ஸவிதாவை, (சூரியனை) ச்சொல்லுவதினால் ஸாவித்திரீ என்றும், ணிய என்னு மக்ஷரங்களைப் பிரித்துச் சொல்லில் இருபத்துநான்கு அக்ஷரமுடையதாகையால் காயத்திரீ என்றும் சொல்லப்படுகிற மஹாமந்திர விஷயத்திலும் ஸந்தியா வந்தநம், ஔபாசநம் முதலிய அக்நிகார்ய விஷயத்திலும் ஞாநமில்லாமையால் யாகம்செய்வித்தல் ஓதுவித்தல்முதலிய ஜீவனோபாயங்களில் சக்தியில்லாமல் ஜீவநத்திற்காகக் கிருஷியைச்செய்பவர்களான பிராம்மணர்கள் நாமதாரகர்கள் (பிராம்மணனென்கிற பேரைத்தரிப்பவர்கள்) என்னப்படுவார்கள்.(எ-று.)

இவர்கள் பரிஷத்துக்குத் தக்கவர்களல்லரென்பது கருத்து. பிராம்மணகுலத்தில் ஜநித்த சிஷ்டர்களான மாதா பிதாக்களிடத்தில் ஜநநத்தையும் அப்படிப்பட்டவர்களிடத்தில் உபநயந ஸம்ஸ்காரத்தையும் மந்திரோபதேசங்களையும் பெறுதல், ஸத்தானசௌசம் முதலிய ஆசாரம், சிறந்த சாஸ்திரஞாநம், வேதத்தில் சொல்லிய தர்மங்களைத் தவறாது அநுஷ்டித்தல் ஆகிய இவைகளையுடையவன் பிராம்மணனாகிறான். பிர்ம்மமென்பதுவேதம், அதைஓதிஅதில்சொல்லிய அர்த்தங்களை அறிந்து அதின்தர்மங்களைஅநுஷ்டிப்பவன் முக்கிய பிராம்மணன் என்று அங்கிராவும், பிராம்மணனுடைய பீஜத்திற்கு ஜநித்து உபநயந முதலிய மந்திரஸம்ஸ்காரங்களில்லாமல் ஜாதிமாத்திரத்தை உடையவன் பிராம்மண னல்லனென்று வியாஸரும், கர்ப்பாதாநந் தொடங்கி உபநயநங் கூடிய ஸம்ஸ்காரங்களைச் செய்துகொண்டவனேயாகிலும் தான் வேதத்தை ஓதாமலும் ஓதுவிக்காமலும் இருப்பவன் பிராம்மண ப்ருவனென்னப்படுவனென்றும் இருபத்துநால்வர் மதத்தில் சொல்லப்பட்டது. (௩)

४ ॥ అవ్రతానామమంత్రాణాం జాతిమాత్రోపజీవినామ్ ।
సహస్రశస్సమేతానాం పరిషత్త్వంనవిద్యతే॥

பிராம்மண ப்ருவ லக்ஷணமும் இன்னார் பரிஷத்தாகமாட்டார்களென்பதும் (இ - ள்.) பிராஜாபத்தியம் ஸௌம்மியம் முதலிய விரதங்களை அநுஷ்டிக்காதவர்களும் வேதத்தை ஓதாதவர்களுமா

இப் பிராம்மணஜாதியில் பிறந்ததைமாத்திரம் சொல்லிக்கொண்டு பிழைக்கிறவர்கள் ஆயிரம்பேர்களாகச் சேர்ந்தாலும் அவர்களுக்குப் பரிஷத்தன்மை கிடையாது. (எ-று.)

இதனால் பெரியோர்களுடைய அநுஷ்டாநத்தையும் அவர்கள் விதிப்பதையும் பார்த்திருப்பதினால் ஜாதிமாத்திரப் பிராம்மணர்களுக்கும் பிராயச்சித்தத்தை விதிக்கத் தெரிந்திருந்தபோதிலும் அவர்கள் விதிக்கத்தக்கவர்களல்லரென்று சொல்லப்பட்டது. ஆயிரம்பேர்களாகச் சேர்ந்தாலும் என்றதனால் வேதாந்தவிசாரம் செய்த பிராம்மணன் ஒருவனுயிருந்தாலும் அவன் பரிஷத்தாவானென்றும், வேதாந்தஞாந மில்லாம லிருந்தாலும் வேததர்மங்களை யறிந்த நால்வர் பரிஷத்தாவார்க ளென்றும் சொல்லுவதுபோல வேதயோதாதவர்கள் ஆயிரம்பேர் கூடினால் பரிஷத்தாவார்க ளென்கிறசங்கை இதனால்ஒழிக்கப்பட்டது. இவர்களைப்போல நாஸ்திகர்முதலியவர்களும் பரிஷத்தாக மாட்டார்களென்று இருபத்து நால்வர்மதத்தில் சொல்லப்பட்டது. (௪)

౫ ॥ యద్వదంతితమోమూఢా మూర్ఖాధర్మమతద్విదః ।
తత్పాపంశతధాభూత్వా తద్వక్తౄనధిగచ్ఛతి ॥

(இ-ள்) புத்திக்குறைவினால்சூக்ஷ்மநியாயங்களில்மூடர்களும், தம்மைப் பண்டிதரென்று நினைத்துக்கொண்டவர்களும், இன்னபாபத்திற்கு இவ்விதமான பிராயச்சித்தமென்று அறியாதவர்களுமான புருஷர்கள் எந்தப்பாபத்திற்குப் பிராயச்சித்தத்தை வேருகச்சொல்லுகிருர்களோ அந்தப்பாபமானது நூறுபங்கு அதிகமாகி அந்தப்பிராயச்சித்தம் சொன்ன மூடர்களையே அடைகிறது. (எ-று.)

பிராயச்சித்தத்தை வேருகச் செய்வித்ததினால் இவர்களும் பாபிகளாகிருர்களென்பது கருத்து. (௫)

౬ ॥ అజ్ఞాత్వాధర్మశాస్త్రాణి ప్రాయశ్చిత్తందదాతియః ।
ప్రాయశ్చిత్తీభవేత్పూతః కిల్బిషంపరిషద్వ్రజేత్ ॥

(இ-ள்.) தர்மசாஸ்திரங்களைப் படியாமல் பெரியோர்களிடத்தில் பிராயச்சித்த விதிகளைப் பார்த்து அறிந்துகொண்டு எவன் பிராயச்சித்தத்தை விதிக்கிருனே அந்தப் பிராயச்சித்தம் பெரியோர்களிடத்தில் அறிந்து சொன்னதாகையால் அதைச்செய்துகொண்டவன் சுத்தனுகிருன், ஆனால் அதை விதித்தவன் பாபத்தை அடைகிருன். (எ-று.)

விதித்தவன் பாபத்தை அடைகிறனென்றால் இவன் தர்மசாஸ்திரங்களைப் படியாதவனாகையால் தர்மசாஸ்திரவசநங்களைச் சொல்லச்சக்தியில்லாதவனும், ரிஷிகளுடைய விதிவசநங்களைச் சொல்லிக்கொண்டே பிராம்மணர்கள் பிராயச்சித்தத்தை விதிப்பார்களென்று இந்தக்காண்டம் மூன்றும் அத்தியாயம் முப்பத்தஞ்சாவது சுலோகத்தில் எடுத்துரைத்த சாஸ்திரமுறையைத் தவிர்ந்தவனுமாகிப் பாபத்தை அடைகிறனென்பது கருத்து. தர்மங்களை விதிக்கிறபுருஷர்கள் மஹரிஷிகளுடைய விதிவசநங்களைச் சொல்லிக்கொண்டு அவைகளில் சொல்லிய பிராயச்சித்தத்தை ஒருவனுக்கு விதிக்கவேண்டுமென்றும், அவனுக்கு அநுக்கிரகம் செய்யத்தக்க நியாயமான அசக்தியிருந்தால் பிராயச்சித்தத்தை விதிக்காமலே நீ பரிசுத்தனாகக்கடவை என்று அநுக்கிரகத்தைச் செய்யவேண்டுமென்றும், ரிஷிவசநங்களைக்கடந்து தங்கள் புத்தியினால் ஒன்றையும் நிச்சயித்து விதிக்கலாகாதென்றும் அங்கிரசு சொன்னார். தர்மசாஸ்திரத்தைப் படித்திருந்தாலும் நியாயங்களை நிர்ணயிக்கத்தக்க வல்லமையில்லாமையால் ஸூக்ஷ்மமான பிராயச்சித்தத்தை விதிக்க அறியாத மூடனைப்பற்றியது ஐந்தாவது சுலோகமென்றும், பெரியோர்களிடத்தில் பிராயச்சித்த விதிகளைப் பார்த்தும், கேட்டும் அறிந்தவனாகிலும், தர்மசாஸ்திரங்களைப் படித்தறியாமையால் சுலோகங்களைச் சொல்லிக்கொண்டே விதிக்கத்தெரியாத மூடனைப்பற்றியது ஆறாவது சுலோகமென்றும் அறிக. (சு)

எ ॥ చత్వారో వా త్రయో వాపి యం బ్రూయుర్వేదపారగాః ।
స ధర్మ ఇతి విజ్ఞేయో నేతరైస్తు సహస్రశః ॥

(இ-ள்.) வேதம் முதலிய சாஸ்திரங்களைக் கரைகண்ட நான்கு அல்லது மூன்று பிராம்மணர்கள் சேர்ந்து எதைச் சொல்லுகிறார்களோ அது தர்மமென்று அறியத்தக்கது. அப்படியல்லாத மூடர்கள் ஆயிரம்பேர் கூடிச்சொன்னாலும் அது தர்மமாகாது. (எ-று.)

இதனால் ஒருவனுக்குத் தர்மசாஸ்திரஞானமிருந்தபோதிலும், ஒரு நியாயத்தை நிர்ணயம் செய்யவேண்டிய தருணத்தில் ஊன்றிப்பாராமை முதலிய மனதின் தோஷம் வருமென்கிற சங்கையினால் அவனைப்போன்ற மூவருடன் அல்லது நால்வருடன்கூடி ஆலோசிக்கவேண்டுமென்கிறார். சாஸ்திரமுறையை அறியாதவர்கள் ஆயிரம்பேர்கூடி நிச்சயித்துச் சொன்னபோதிலும் அது தர்மமாக அங்கிகரிக்கத் தகாதென்றறிக. (எ)

౮ ॥ ప్రమాణమార్గంమార్గంతో యేధర్మంప్రవదంతివై ।
తేషాముద్విజతేపాపం సద్భూతగుణవాదినామ్ ॥

(இ-ள்.) பிரமாணமார்க்கமென்று சொல்லப்படுகிற தர்மசாஸ்திரத்தின் முக்கியமான கருத்தை நியாயங்களைக்கொண்டு நிச்சயித்துத் தர்மத்தைச்சொல்லுகிறவர்கள் சாஸ்திரங்களை அடிக்கடிப்பார்த்து ஒருவர்க்கொருவர் விசாரித்து மனதில் சலிக்காதவர்களாகி நிதானத்துடன் நிச்சயித்ததும் வேறுபாட்டை அடையாததுமான ஸத்தானதர்மத்தை யுபதேசிக்கிறார்களாகையால் அவர்கள் விஷயத்தில் பாபம் பயப்படுகிறது (நாசத்தைஅடையத்தக்கதாகிறது). (எ-று).

பாபியானவன் தன் பாபத்தைத் தங்களிடத்தில் சொல்லிக்கொண்டால் தர்மசாஸ்திரத்தைக் கற்றுணர்ந்தவர்கள் கூடிக் கிரமமாகச் சாஸ்திரவசநங்களை அடிக்கடி பார்த்தும் ஒருவர்க்கொருவர் விசாரித்தும் ரஹஸ்யமான அர்த்தத்தை அறிந்தும் அவனுக்குப்பிராயச்சித்தத்தைச் சொல்லவேண்டுமென்று அங்கிரசு சொன்னார். (அ)

౯ ॥ యదశ్మనిస్థితంతోయం మారుతార్కేణశుష్యతి ।
ఏవంపరిషదాదేశా న్నాశయేత్తస్యదుష్కృతమ్ ॥
౧౦ ॥ నైవగచ్ఛతికర్తారం నైవగచ్ఛతిపర్షదమ్ ।
మారుతార్కాగ్నిసంయోగా త్పాపంనశ్యతితోయవత్ ॥

பாபம் க்ஷயிக்கும்வகை. (இ-ள்.) கல்லில் தேங்கிய ஜலமானது காற்றினாலும் சூரியனாலும் வற்றிப்போகிறதுபோல பரிஷத்தானது சாஸ்திரவிதிப்படி பிராயச்சித்தத்தை யுபதேசிப்பதினால் பாபிஷ்டனுடைய பாபத்தை நசிக்கச்செய்கிறது. பிராயச்சித்தம் செய்துகொண்டபின்பு அந்தப்பாபமானது பாபம்செய்தவனைப்பற்றுகிறதில்லை. பரிஷத்தையும் அடைகிறதில்லை. வாயு, சூரியன், அக்நி இவர்களின் சம்பந்தத்தினால் ஜலம் தானே நசித்துப் போவதுபோல் பாபம் நசித்துப்போகிறது. (எ-று).

இவ்விதமாக இருபத்துநால்வர்மதத்திலும் அங்கிர ஸ்மிருதியிலும் சொல்லப்பட்டது. (௯-௧௦)

౧౧ ॥ చత్వారోవాత్రయోవాపి వేదవంతోగ్నిహోత్రిణః ।
బ్రాహ్మణానాంసమర్థాయే పరిషత్సాభిధీయతే ॥
౧౨ ॥ అనాహితాగ్నయోయేచ వేదవేదాంగపారగాః ।
పంచత్రయోవాధర్మజ్ఞాః పరిషత్సాప్రకీర్తితా ॥

౧౩ ॥ మునీనామాత్మవిద్యానాం ద్విజానాంయజ్ఞయాజినామ్ ।
వేదవ్రతేషుస్నాతానా మేకోఽపిపరిషద్భవేత్ ॥
౧౪ ॥ పంచపూర్వేమయాప్రోక్తా స్తేషాంచాసంభవేత్రయః ।
స్వవృత్తిపరితుష్టాయే పరిషత్సాప్రకీర్తితా ॥

பரிஷத்தின்தாரதம்மியம். (இ-ள்.) வேதமோதிச் சிறந்தவர்களும் அக்கிஹோத்திரம் செய்தவர்களுமாகிய பிராம்மணர்களில் மிகுந்த சமர்த்துடையவர்களான நால்வர் முக்கியபரிஷத்தென்றும், அப்படிக் கிடையாவிட்டால் மூன்றுபேர் குறைந்த பக்ஷமான பரிஷத்தென்றும் சொல்லப்படுகிறார்கள். அக்கிஹோத்திரம் செய்யாதவர்களும் வேதவேதாங்கங்களைக் கரைகண்டவர்களும் தர்ம சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்தவர்களுமான பிராம்மணர்களில் ஐந்துபேர் முக்கிய பக்ஷமான பரிஷத்தென்றும் மூன்றுபேர் குறைந்தபக்ஷமான பரிஷத்தென்றும் சொல்லப்படுகிறார்கள். பிரமவித்தையை யோதினவர்களும் யக்கியசீலர்களும் பரமாத்துமாவைத் தியானிப்பவர்களும் வேதவிரதங்களை அநுஷ்டித்து ஸ்நாதகர்களுமான பிராம்மணர்களில் ஒருவன்மாத்திரமே பரிஷத்தாகச்சொல்லப்படுவான். அக்கிஹோத்திரம்செய்தவர்களில் இரண்டுபக்ஷமும், அதைச் செய்யாதவர்களில் இரண்டுபக்ஷமும், ஆத்துமஞானமுள்ளவர்களில் ஒருபக்ஷமுமென்று ஐந்துபக்ஷங்கள் என்னால்சொல்லப்பட்டன. அந்தப்பக்ஷங்களுடைய அஸம்பவத்தில் (கிடையாதபக்ஷத்தில்) ஆயுதமுதலியவைகளால் பிழைக்காமல் தமக்குரியஜீவனோபாயங்களால் திருப்தியடைந்திருக்கும்பிராம்மணர்களில் மூவர் பரிஷத்தென்று சொல்லப்படுவோர்கள்.

౧౫ ॥ అతఊర్ధ్వంతుయేవిప్రాః కేవలంనామధారకాః ।
పరిషత్త్వంనతేష్వస్తి సహస్రగుణితేష్వపి ॥

வேதத்தைஓதாத பிராம்மண ஸ்வரூபம். (இ-ள்.) கீழ்ச்சொன்ன பிராம்மணர்களன்றிப் பிராம்மணனென்கிற பேரைமாத்திரம் தரிக்கின்றவர்கள் ஆயிரம்மடங்கு அதிகமாகக் கூடினாலும் அவர்களிடத்தில் பரிஷத்தன்மை உண்டாகாது. (எ-று). (கரு)

౧౬ ॥ యథాకాష్ఠమయోహస్తీ యథాచర్మమయోమృగః ।
బ్రాహ్మణస్త్వనధీయాన స్త్రయస్తేనామధారకాః ॥

(இ-ள்.) வேதாத்தியயநம் செய்யாத பிராம்மணன் கட்டையினால் செய்யப்பட்ட யானைபோலவும் தோலால்செய்யப்பட்ட

மான்போலவுமாகிப் பிராம்மணனென்னும் பேரை மாத்திரம் தரிப்பவனுகிருன். (எ-று).

யானையைப்பார்த்து யானைஎன்றும் மானைப்பார்த்து மானென்றும் சொல்லுவதற்கு இவைகளிடத்தில் யானை மான் இவைகளின் தன்மை நிமித்தமாக இருப்பதுபோல் பிராம்மணனைப்பார்த்துப் பிராம்மணனென்று சொல்லுவதற்குப் பிராம்மணத் தன்மையான வேதமோதுதல் நிமித்தமாகிறது. அஃதில்லாதவனைப்பிராம்மணனென்று சொல்லுவது கட்டையைப்பார்த்து ரூபமாத்திரத்தினுலே யானையெனச்சொல்வதுபோலாகிறதென்றறிக. (கசு)

౧౭ ॥ గ్రామస్థానంయథాశూన్యం యథాకూపస్తునిర్జలః ।
యథాహుతమనగ్నౌచ అమంత్రబ్రాహ్మణాస్తథా ॥

(இ-ள்.) மந்திரமறியாத(வேதமோதாத)பிராம்மணனைப் பிராம்மணனென்றுசொல்லுவது ஜநசூந்யமானவிடத்தைக் கிராமமென்றும் ஜலமில்லாதபள்ளத்தைக் கிணறென்றும் சாஸ்திரவிதிப்படி சுத்திசெய்யப்படாமையால் அக்நித்தன்மையையடையாத அக்நியாபாஸத்தில் ஹோமம்செய்யப்பட்டதை ஆஹுதிஎன்றும் சொல்வதுபோலாகும். (எ-று).

ஜநங்களோடுகூடியிருத்தல், ஜலாதாரமுடையதாயிருத்தல், சாஸ்திரவிதிப்படி சிலஸம்ஸ்காரங்கள்செய்யப்பட்டு ஹோமத்திற்குரியதான அக்நியில் ஹோமம்செய்தல் ஆகிய இந்தலக்ஷணங்களைக் கிரமமாக உடையவைகளாயிராத கிராமம், கூபம்(கிணறு), ஹோமம் இவைகள்சிறந்தவைகளாகாமல் கிராமாபாஸம், கூபாபாஸம், ஹோமாபாஸம் என்னப்படுவனபோல் வேதமோதாத பிராம்மணன் பிராம்மணுபாஸனென்னப்படுவானென்றறிக. (கஎ)

౧౮ ॥ యథాషండోఫలస్త్రీషు యథాగౌరూషరాఫలా ।
యథాచాజ్ఞేఫలందానం తథావిప్రోనృచోఫలః ॥

(இ-ள்.) ஸ்திரீகள்விஷயத்தில் ஆண்தன்மையுடைய புருஷன் கிடையாதபக்ஷத்தில் புருஷாபாஸனுன நபும்ஸகன் எப்படிப் புத்திரனை ஜநிப்பிப்பதாகிய பிரயோஜநத்தைத்தரமாட்டானே, முக்கியமான நிலங்கிடையாதபக்ஷத்தில் களர்பூமியானது எப்படிவிளைவாகிய பலனைத்தரமாட்டாதோ, ஞாநமில்லாத மூடன்விஷயத்தில் செய்ததாநம் எப்படித் தாநபலனைத்தரமாட்டாதோ, அப்படி ருக்கு வேதம் முதலியவேதங்களை ஓதாத பிராம்மணன் பிராயச்சித்தோப

தேசத்தினுல் பாபநிவிர்த்தியாகிய பலனைத்தரத் தக்கவனுகமாட்டான். (எ-று).

இதனுல் லோகத்தில் முக்கியவஸ்துகிடையாதபக்ஷத்தில் அதற்குப்பதிலாக முக்கியமாகாத வஸ்துவைக்கொண்டுஅந்தக்கிரியையைச்செய்வதுபோலவும் அதாவது யக்கியத்தில் ஸோமமென்னும் ஒருவிதக்கொடி கிடையாதபக்ஷத்தில் அதற்குப்பதிலாக பூதீகமென்னும் வேறொருகொடியைக்கொண்டு அதைச்செய்ய விதியிருப்பதுபோலவும் சம்பாமுதலிய முக்கியதாநியங்களால் செய்துகொள்ளவேண்டிய பசிநிவிர்த்தியைத் தாநியாபாஸங்களான வரகுமுதலியவைகளால் செய்துகொள்வதுபோலவும் பிராயச்சித்தத்தை விதிக்கும் விஷயத்தில் வேதமோதின முக்கியபிராம்மணர்கள் கிடையாதபக்ஷத்தில் முக்கியரல்லாதவர்களான (வேதமோதாமல் மூடர்களான) பிராம்மணுபாஸர்களைக்கொண்டு பிராயச்சித்தங்களை விதித்துக்கொண்டால் அதுபாபநிவிர்த்தியாகிய பலனைத் தரத்தக்கதாகாதென்பதற்கு நபும்ஸகன்முதலிய திருஷ்டாந்தம்கூறப்பட்டது.

௧௯ ॥ చిత్రకర్మ యథానేకై రంగైరున్మీల్యతే శనైః ।
బ్రాహ్మణ్యమపి తద్వద్ధి సంస్కారైర్మంత్రపూర్వకైః ॥

(இ-ள்.) சித்திரவேலையானது அநேகமாயுள்ள அங்கங்களால் அதாவது பலவிதவர்ணங்களை அந்தந்த இடங்களுக்குத்தக்கபடி கொடுக்கிறதினுல் எப்படி மெள்ளமெள்ளப் பிரகாசத்தை அடைகிறதோ அப்படிப் பிராம்மணத்தன்மையும் உபநயநம்முதலிய மந்திர ஸம்ஸ்காரங்களால் பிரகாசத்தை (உத்கர்ஷத்தை) அடைகிறது.

இதனுல் நாமதாரகப்பிராம்மணனுக்கும் ஸம்ஸ்காரங்கள் ஏற்றவைகளென்பது சொல்லப்பட்டது. (௧௯)

௨௦ ॥ ప్రాయశ్చిత్తం ప్రయచ్ఛంతి యేద్విజానామధారకాః ।
తేద్విజాఃపాపకర్మాణ స్సమేతానరకంయయుః ॥

(இ-ள்.) உபநயநம்முதலிய ஸம்ஸ்காரங்களைச் செய்துகொண்டவனுன ஒரு உத்தமபிராம்மணனேடு கூடினவர்களாய் நாமதாரகப் பிராம்மணரென்னும் பேரைமாத்திரமுடைய எந்தப் பிராம்மணர்கள் பிராயச்சித்தத்தை விதிக்கிருர்களோ, பாபகிருத்தியத்தைச்செய்பவர்களான அந்தப்பிராம்மணர்கள் நரகத்தைஅடைகிருர்கள். (எ-று).

உபநயநம்முதலிய ஸம்ஸ்காரங்களோடுகூடின பிராம்மணன் நரகத்திற்கு அதிகாரியல்லாதவனேயாகிலும் நாமதாரகப்பிராம்மணர்க்

ளோடு கூடினதோஷத்தினுல் அவனும் அவர்களோடு நரகத்தை யடைகிருனென்று இருபத்துநால்வர்மதத்தில் சொல்லப்பட்டது.

౨౧ ॥ యేపఠంతిద్విజావేదం పంచయజ్ఞరతాశ్చయే ।
త్రైలోక్యంతారయంత్యేతే పంచేంద్రియరతాఅపి ॥

எந்தப்பிராம்மணர்கள் வேதாத்தியயநம்செய்து பஞ்சமஹாயக்ஞியங்களை அநுஷ்டிக்கிருர்களோ அவர்கள் ஐந்துவிதமான கர்மேந்திரியங்களுக்குப் பிரீதியைச்செய்பவர்களான கிருகஸ்தர்களாயிருந்தபோதிலும் மூன்றுலோகத்தையும்கரையேற்றுகிருர்கள் (பாபத்தினின்றும் ரக்ஷிக்கிருர்கள்.) (எ-று).

நாடோறும் வேதம் ஓதுவதும் பஞ்சமஹாயக்ஞியங்களைச்செய்வதும் சகலவிதபாபங்களையும் விரைவில் போக்குமென்று மநுசொன்னுர். சிரத்தையில்லாமையால் ஓதிய வேதத்தைத் தரிக்கமாட்டாதவர்களும் பஞ்சமஹாயக்ஞியங்களை அநுஷ்டிப்பதினுல் சுத்தராகிருர்களென்பதுமுதலியவைகள் ஆசாரகாண்டம் முதல் அத்தியாயத்தில் சொல்லப்பட்டன. (உக)

౨౨ ॥ సంప్రణీతఃశ్మశానేషు దీప్తోగ్నిస్సర్వభక్షకః ।
ఏవంచవేదవిద్విప్రః సర్వభక్షోఽపిదైవతమ్ ॥

வேதத்தைப்புகழ்தல் (இ-ள்.) மயாநங்களில் சவங்களைக்கொளுத்துவதில் உபயோகப்பட்டிருக்கிற அக்கியானவன் சகலத்தையும் பக்ஷிப்பவனுயிருந்தபோதிலும் எப்படித் தெய்வத்தன்மையை விடாதவனுகவே பிரகாசிக்கிருனே அப்படி வேதங்களை ஓதி யுணர்ந்த பிராம்மணன் சகலத்தையும் பக்ஷிப்பவனுயிருந்தபோதிலும் அதாவது பராந்நம்முதலியவைகளைப் புசித்தாலும் அவன் பூமிதேவனேயாகிருன். (எ-று).

லோகத்தில் மனிதர்களுடைய பாபமானது அவர்களுடைய அந்நத்தைப் புசிப்பவனைச் சேருமாகையினுல் பராந்நபோஜநத்தை நீக்கவேண்டுமென்று சொல்லியிருந்தபோதிலும், ஸ்மிருதிகளில் வேதமோதின பிராம்மணனுக்கு அவனேதியிருக்கும் மந்திரங்களில் ஒவ்வொன்றே வெகுபாபங்களைப் போக்கவல்லதாகையால் இதுதோஷமாகாது என்றறிக. ஒருவனுடைய பொருளைத் தன்னுடையதென்று பொய்சொல்வதினுலும் சௌசாசாரங்களில்லாமையால் தாநம்கொடுக்கத் தகாதவர்களுக்கு ஸ்நேஹத்தினுல் தேவபிதிர்கர்மங்களில் ஏதேனுமொன்றைக் கொடுப்பதினுலும் தன்வீட்டிற்குவந்த

யோக்கியர்களான அதிதிகளுக்குக் கொடாமல் போவதினாலும் மற்றும் சிலதோஷங்களைச் செய்வதினாலும் அயல்மாதனை ஆடையணியாமலிருக்கும் தருணத்தில் பார்ப்பதினாலும் விஷ்ணுமுதலிய தேவதைகளைப்பார்த்தும் நமஸ்காரம்செய்யாமல் போவதினாலும் குதிரை, எருமை, கடா, காலபுருஷன்முதலிய தாநங்களை வாங்குவதினாலும் அநேகவிததோஷங்களோடு கூடின பராந்நம்முதலிய அந்நங்களைப் புசிப்பதினாலும் மற்றும்கிரியைகளாலும் எனக்கு உண்டாகின்ற சகலவிததோஷங்களினின்றும் என்னை அக்நிதேவன் விடுவிக்கக்கடவனென்னும் பொருளுள்ளதான "యదన్నమద్మ్యనృతేన" என்று தொடங்கியுள்ள மந்திரத்தைச் சொல்லவேண்டும். பவமாநஸூக்தம்முதலிய மந்திரத்தின்மகிமையானது கிரயம், விக்கிரயம், யோநிதோஷம், பக்ஷிக்கத்தகாதவைகளைப் பக்ஷித்தல், தகாத தாநங்களை வாங்குதல் முதலிய தோஷங்களைப் போக்குமென்று சொல்லப்படுகிறது பக்ஷிக்கத்தகாதபோஜநத்தைப் புசித்தால் அந்தப்பாப நிவர்த்திக்காக "పంథామథిదివః" என்னும் ஸாமத்தை ஸாமவேதிகளும் ஓதுகிறார்கள். கெட்டதாநங்களை வாங்கினவனும் தோஷமுள்ள அந்நத்தைப் புசித்தவனும் "తరత్సమంది" என்னும் மந்திரத்தை மூன்றுநாள் ஜபித்தால் சுத்தராகிறார்களென்றும் எவ்விதபாதகத்தைச் செய்தவனேயாகிலும் ருக்வேதத்தை ஓதித்தரிப்பவன் பாபத்தைஅடைகிறதில்லையென்றும் மநுசொன்னார். (உஉ)

౨3 ॥ అమేధ్యానిచసర్వాణి ప్రక్షిప్యంతేయథోదకే ।
తథైవకిల్బిషంసర్వం ప్రక్షిపేచ్చద్విజోత్తమే॥

(இ-ள்.) சகலவித அசுத்தவஸ்துக்களும் எப்படி ஜலத்தில் போடப்படுகின்றனவோ அப்படியே சகலவிதபாதகமும் வேதமோதினபிராம்மணோத்தமனிடத்தில் போடப்படவேண்டும். (எ-று.)

பிராம்மணனிடத்தில் பாபத்தைப்போடுவதாவது தன்பாபத்தையொழிக்க வேண்டுமென்று பெரியோர்களுக்கு அறிவித்தலாம். இதைக்கேட்டவுடனே இதனால் பெரியோர்கள் கெடுதியடையாமல் தக்க பிராயச்சித்தோபதேசத்தினால் பாபியைப் பாபத்தினின்று விடுவிக்கிறார்கள். இது கங்கையானது தன்னிடத்தில் ஸ்நாநம்செய்கிறவர்களுடைய தேகமலங்கள் விழுவதினால்தான் அசுசியாகாமல் ஸ்நாநம்செய்பவர்களைச் சுத்தர்களாகச்செய்வதுபோலாகு மென்றறிக. இதனால்கீழே இருபத்தோராவது சுலோகத்தில் வேதமோதின பிரா

ம்மணர்கள் மூன்றுலோகத்தையும் பாபத்தினின்று ரக்ஷிக்கிறார்களென்றுசொன்னது விவரிக்கப்பட்டது. (௨௩)

౨౪ ॥ గాయత్రీరహితోవిప్ర శ్శూద్రాదప్యశుచిర్భవేత్ ।
గాయత్రీబ్రహ్మతత్త్వజ్ఞా స్సంపూజ్యంతేజనైర్ద్విజాః ॥

(இ-ள்.) காயத்ரி மந்திரமில்லாதவன் அதாவது ஆலஸ்யத்தினல் காயத்ரியை நித்தியமும் ஜபிக்காதவன் சூத்திரனைக்காட்டிலும் அசுத்தனவான். காயத்திரி தத்துவமான அங்கநியாஸம் தியாநம் முதலியவைகளையும், பிரமதத்துவமான வைதிககர்மங்களை அநுஷ்டிப்பதையும் கிரமமாக அறிந்த பிராம்மணர்கள் ஜநங்களால்பூஜிக்கப்படுகிறார்கள். (எ-று.)

இங்கு காயத்திரியில் பிரமதத்துவத்தை அறிந்தவர்களென்கிற அர்த்தமுமுண்டு. அப்போது வேதாந்தங்களில் சொல்லப்பட்ட பரமாத்துமாவின் ஸ்வரூபத்தைக் காயத்திரியில் ‘‘భర్గ’’ என்னும் சப்தத்தின்பொருளாக அறிந்தவர்கள் என்று பொருள் கொள்ளவேண்டும்.

౨౫ ॥ దుశ్శీలోపిద్విజఃపూజ్యో నతుశూద్రోజితేంద్రియః ।
కఃపరిత్యజ్యగాందుష్టాం దుహేచ్ఛీలవతీంఖరీమ్ ॥

சூத்திரவாக்கியதூஷணம் (இ-ள்.) இந்திரியபரவசனுகிக்கெட்ட நடத்தையோடுகூடியிருந்தபோதிலும் பிராம்மணன் பூஜிக்கத்தக்கவனுகிறான். இந்திரியங்களை ஜயித்துச் சாஸ்திரமுறை தவருதவனுயிருந்தபோதிலும் சூத்திரன் பூஜிக்கத்தகாதவனுகிறான். அதற்குத்திருஷ்டாந்தம். உதைப்பது முதலிய சேஷ்டைகளால் துஷ்டையானபசுவைவிட்டுப் பாலுள்ளதென்று பெண்கழுதையையெவன்கறப்பன்?

இதனல் ஒருகிராமத்தில் பிராம்மணர்கள் மனம்போன்ற வழிபோகிறவர்களாகி அநுஷ்டாநத்தைத் தவிர்ந்திருந்து அங்கு சூத்திரர்கள் மனதை ஜயித்தவர்களாகிச் சாஸ்திரவிதிப்படி நடப்பவர்களாயிருந்தால் அந்தச்சூத்திரர்கள் பரிஷத்தாகக்கூடுமென்னும் சங்கை ஒழிக்கப்பட்டது. நாய்த்தோலில்வைத்த பாலானது பிராம்மணுகளால் எப்படிப் பாநம்செய்யத்தக்கதன்ற அப்படியே சூத்திரமுகத்தினின்று உண்டானவிதிவிலக்குமுதலிய வாக்கியங்கள் ஒருகாலும் கேட்கத்தக்கவைகளல்லவென்றும், சகலசாஸ்திரங்களையும் கற்றுணர்ந்த சூத்திரனுடைய வாக்கியம் நல்லவிஷயமாயிருந்தபோதிலும் அது கேட்கத்தகாததாய்நாயினல் தொடப்பட்ட அவிஸுபோலாகுமென்றும், சூத்திரன் தனக்குள்ள சாஸ்திரஞானத்தினல்

கொழுப்படைந்து பிராம்மணர்களுடன் ஸம்பாஷணம் செய்தானு கில் அவன் மகாப்பிரளயம் வரையில் நரகத்தில் அழுந்திக்கிடப்பா னென்றும், கிருஷ்ணசர்ப்பம், துஷ்டனுன பிராம்மணன், சாஸ்திரா ர்த்தங்களை உபந்யாஸம் செய்கிற சூத்திரன், அந்நியபுருஷனுல் உண் டாக்கப்பட்ட கர்ப்பம்ஆகிய இவைகள் வெகுதூரத்தில் விடத்தக்கன வாமென்றும் இருபத்துநால்வர்மதத்தில் சொல்லியிருப்பதால் ஜாதி ஆசாரம் இவ்விரண்டில் ஜாதியின் உயர்வை முக்கியமாய்க் கொள்ள வேண்டுமென்பதும் ஆசாரத்தை இருந்தமட்டில் பார்த்து அங்கீகரி க்கவேண்டுமென்பதும் ஸ்பஷ்டமாகின்றன. (உ-ரு)

அ௨ ॥ ధర్మశాస్త్రరథారూఢా వేదఖడ్గధరాద్విజాః ॥
క్రీడార్థమపియంబ్రూయుః సధర్మః పరమఃస్మృతః ॥

பிராம்மணர்கள் (இந்திரியஜயத்தைப் பெருதவர்களாகிலும்) தர்மசாஸ்திரமென்னும் ரதத்தில் ஏறினவர்களும் வேதங்களென்னு ம் கத்தியைக் கையிலேந்தினவர்களுமாகி விளையாட்டுக்காக வாகிலு ம் யாதொன்றைச்சொல்லுகிருர்களோ அதுவே உத்தமதர்மமாகும்.

யுத்தத்திற்காக ரதத்தின்மேலேறிக் கையுங்கத்தியுமாய் நிற்கு மொரு மஹாவீரன் ரணரங்கத்தில் யுத்தமின்றி ஒருமுகூர்த்தம் வெறுமனே யிருந்தபோதிலும் சூரத்தன்மையை அநுஸரித்து எப் படிக்கத்தியைச் சுழற்றுவது முதலிய யுத்தத்திற்குரிய கிருத்தியங்க ளையே லீலையாகச்செய்வனே அப்படியே வேதங்களையும் தர்மசா ஸ்திரங்களையுங் கற்றுணர்ந்தவர்கள் இந்திரிய பரவசர்களேயாகிலும் அவர்கள் லீலையாகச் சொல்லுவதும் சாஸ்திரவிதியைத் தவறியிரா தென்றும் அவர்கள்பரிஷத்தில் உட்கார்ந்து தர்மத்தை அறிந்து சொ ல்லாவிட்டாலும் சாஸ்திரத்திற்குவிரோதமாகச்சொன்னுலும் அவர் கள் மஹாபாபிகளாவார்களென்னும் சாஸ்திரமுறையை நினைத்துத் தர்மத்தையே சொல்லுவார்களென்று மறிக. (உசு)

அ௩ ॥ చాతుర్వైద్యోవికల్పీచ అంగవిద్ధర్మపాఠకః ।
త్రయశ్చాశ్రమిణోముఖ్యాః పర్షదేషాదశావరా ॥

கோவதம்முதலிய பிராயச்சித்த விஷயத்தில் பரிஷத்தின் சங் கியை. (இ-ள்.) நான்குவேதங்களையும் அங்கங்களின்றி முழுதும் ஓதினவன் சாதுர்வைத்தியனென்றும், தர்மம், பரிஷத்து, பிராயச் சித்தத்தின் கிரமம் இவைகளை அறிந்தவன் விகல்பியென்றும்,

சிக்ஷை, வியாகரணம், சந்தஸு, நிருக்தம், ஜோதிஷம், கல்பம் என்னும் ஆறு அங்கங்களையும் அறிந்தவன் அங்கவித் என்றும், வேதங்களை முழுதுமோதி வேதவிரதங்களையும் அநுஷ்டித்து ஸ்நாதகனுகி நல்லகுலம் ஆசாரம் இவைகளோடுகூடித் தர்மசாஸ்திரங்களை வெகுவாய்ப்படித்தவன் தர்மபாடகனென்றும், சொல்லப்பட்டுக் கார்ஹஸ்தியம் முதலிய மூன்ருச்சிரமங்களில் ஒன்றி லிருப்பவர்களான இவர்கள் முக்யராவார்கள். கீழ்ச்சொன்ன குணங்களோடு கூடின பத்துபேரைத் தாழ்ந்தகணக்காக வுடையது பரிஷத்தென்று சொல்லப்படும். (எ-று.)

இதனுல்ப்பத்துப்பேர்களுக்கு அதிகமாகக்கூடினதும் பரிஷத்தாகுமென்றும் பத்துப்பேருக்குக் குறைந்தபக்ஷமானபரிஷத்து கிடையாதென்றும் சொல்லப்பட்டது. கீழே பதினோராவது சுலோகத்தில் நாலு அல்லது மூன்று பிராம்மணர்களின் கூட்டம் பரிஷத்தாகுமென்று சொன்னது கோவதத்திற்குத் தாழ்ந்தபாபத்தைப்பற்றியதும், இந்தப்பத்துப்பேரென்பது பிராம்மணனுக்குப் பிராயச்சித்தத்தைச் சொல்லவேண்டியதைப்பற்றியதுமாகும். பிராம்மணனுக்குப் பிராயச்சித்தத்தைவிதிக்கச்சேர்ந்த பரிஷத்தைக்காட்டிலும் க்ஷத்திரியனுக்கு விதிக்க இரட்டிப்பும் வைசியனுக்கு விதிக்க மூன்றத்தனையும் அதிகமாகச் சேரவேண்டுமென்றும், பிராம்மணனுக்குப் பிராம்மணனும் க்ஷத்திரியனுக்குக் குருவும், வைசியனுக்குப் புரோஹிதனும் பிராயச்சித்தத்தை விதிக்கத்தக்கவர்களென்றும், பிராயச்சித்தத்தை விதித்தபின் தாங்கள் தப்தகிருச்சிரத்தைச்செய்யக்கடவர்களென்றும், அங்கிராசொன்னுர். பரிஷத்து க்ஷத்திரிய வைசியர்கள் விஷயத்தில் அதிகப்படுவதுபோல்பிராயச்சித்தமும் அதிகப்படுகிறதென்பதும், இந்த அதிகவிதி உத்தமஜாதிவதத்தில் சொல்லத்தக்கதென்பதும், தாழ்ந்தஜாதிவதத்தில் பிராயச்சித்தம் குறைவுபடுமென்பதும், இருபத்துநால்வர்மதத்தின் கருத்துக்களாம். (உஎ)

௨௮ ॥ రాజ్ఞశ్చానుమతేస్థిత్వా ప్రాయశ్చిత్తంవినిర్దిశేత్ ।
స్వయమేవనకర్తవ్యం కర్తవ్యాస్వల్పనిష్కృతిః ॥

அரசனுடைய அநுமதியைப்பெறவேண்டுமென்பது. (இ-ள்.) (பிராயச்சித்தத்தை விதிக்கின்ற புருஷன்) அரசனுடைய அநுமதியில் நிலைத்தவனுகிப் பிராயச்சித்தத்தை விதிக்கக்கடவன். தானுக விதியைச் செய்யக்கூடாது. பிராயச்சித்தம் அல்பமாயிருந்தால் தானே சொல்லலாம். (எ-று.)

கோவதப் பிராயச்சித்தம் அல்பமாகையால் இதற்குமேற்பட்ட ஸகல பிராயச்சித்தங்களையும் அரசனுடைய அநுமதியைப்பெற்றே விதிக்கவேண்டுமென்பது தேவலர் ஹாரீதர் முதலியவர்களுடைய வசநங்களால் ஸ்பஷ்டமாகிறது. (உஅ)

௨௯ ‖ బ్రాహ్మణాంస్తానతిక్రమ్య రాజాకర్తుంయదీచ్ఛతి ।
తత్పాపంశతధాభూత్వా రాజానమధిగచ్ఛతి ‖

(இ-ள்.) பரிஷத்திற்குரிய அந்தப் பிராம்மணர்களை அதிக்கிரமித்து அரசனானவன் பிராயச்சித்தத்தைச் செய்விக்க இச்சித்தால் அந்தப் பாபம் ஒன்று நூறாகி அவனை அடைகின்றது. (எ-று).

இதனால் பிராயச்சித்தவிஷயத்தில் பரிஷத்து ராஜாவை அதிக்கிரமிக்காததுபோல் ராஜாவும் பரிஷத்தை அதிக்கிரமிக்கத் தகாதென்பது சொல்லப்பட்டது. (உக)

௩௦ ‖ ప్రాయశ్చిత్తంసదాదద్యా ద్దేవతాయతనాగ్రతః ।
ఆత్మకృచ్ఛ్రంతతఃకృత్వా జపేద్వై వేదమాతరమ్ ‖

பரிஷத்தால் அநுஷ்டிக்கத்தக்க நியமவிஷயங்கள். (இ-ள்.) பிராம்மணன் பாபியானவனுக்கு எப்போதும் தேவாலயத்திற்கு எதிரில் பிராயச்சித்தத்தைக் கொடுக்கவேண்டும், பின்புதானும் கிருச்சிரத்தைச் செய்து வேதமாதாவான காயத்திரியை ஜபிக்கவேண்டும். (எ-று.)

பிராயச்சித்தத்தைக் கொடுத்தலாவது உபதேசித்தலாம். பாதகஞ்செய்து பிராயச்சித்தத்தை விதிக்கத்தக்கவர்களைத் தேடிப் பரிதபிக்கிறவர்களுக்குப் பிராயச்சித்தவிதியை அறிந்த ஒருவன் விதிக்காமல் போனால் அவன் அந்தப் பாபத்தில் ஸமமான பாகத்தைப் பெறுகிறானாகையால் பாபத்தைச்செய்து பரிதபிக்கிறவன் பிராம்மணனாயிருந்தால் பின்னும் அதிகமாக அவனைத் தேற்றிப் பிராயச்சித்தத்தை விதிக்கவேண்டுமென்பதே பரிஷத்தின் தர்மமென்றும் அவனுக்கு நன்றாகத் தெரியும்வரையில் பிராயச்சித்தவிதிகளைப் போதித்தால் அவனைப்போல் விதித்தவர்களும் ஸம பலனைப் பெறுவார்களென்றும், கிரமமாக ஸங்மானித்தல், பூஜித்து அழைத்தல், வணங்கிக்கேட்டல், முதலிய முறைதப்பாமல் பரிதபித்துவணங்கி யாசிப்பவனுக்கே பிராயச்சித்தத்தைச் சொல்லவேண்டுமென்றும், அப்படி யல்லாதவனுக்குப் பிராயச்சித்தம் சொல்லத்தக்கதல்லவென்றும் அங்கிராவும்,பாபியானவன் பிரயத்தினப்பட்டுப் பத்து

பேர்களுக்குக் குறையாமல் பரிஷத்தைச் சேர்த்துப் பக்தியுடன் அவர்களை வணங்கிப் பிராயச்சித்தத்தைப் பிரார்த்திக்கக்கடவனென்று ஹாரீதரும், பிராயச்சித்தவிதியை அறியாமையினலாவது அறிந்தே வேறு எண்ணத்தினலாவது விபரீதமாகச் சொன்னவன் மஹா பாபத்தை அடைகிருனென்றும், சரீரத்தின் வலிவு, ஆயுள், காலம், தொழில் இவைகளுக் கநுகுணமாகத் தர்மத்தைத் ஆராய்ந்து பிராயச்சித்தம் சொல்லக்கடவதென்றும் போதாயநரும், எந்தப்பிராயச்சித்தத்தினல் சுத்தியை அடைகிருனே எதை அநுஷ்டித்தால் பிராணபயத்தையாவது பெருந்துன்பத்தையாவது அடையமாட்டானே அவ்விதமானவிரதத்தை உபதேசிக்கவேண்டுமென்று ஹாரீதரும் சொன்னர்கள்.

பாரிஷத்தின் தர்மங்கள். பாதகத்தைச்செய்து பரிதபித்துப் பாதத்தில் பக்தியுடன் வந்து விழுந்தவனைப் பெரியோர்கள் பீடத்தின்மீது உட்காரவைத்து எதற்காகப் பிராம்மணர்களைத் தேடுகின்றாயென்றும், இந்தப் பரிஷத்தில் ஸத்தியமாக உனது சரித்திரத்தைச் சொல்லென்றும், ஸகல லோகங்களும் தர்மங்களும் ஸத்தியத்தில் நிலைத்திருக்கின்றனவாகையால் நீ ஸத்தியத்தைச் சொன்னல் சுபத்தை அடைகின்றாயென்றும் சொல்லக்கேட்டு அவன் ஸத்தியமாகத் தன்னுடைய பாதகத்தை அறிவித்தபின் அவனை அப்புறப்படுத்திப் பரிஷத்தில் தர்மபாடகரென்னும் பிராம்மணர்களும் மற்றவர்களுமாகத் தர்மங்களை நன்காராய்ந்து நிச்சயித்ததும் பிராணபயத்தைத் தராததுமான பிராயச்சித்தத்தை ஒருவனைக்கொண்டு அவனுக்கு இதை நீ சிரத்தையுடன் பிரயத்நப்பட்டாவது செய்தாயானல் பரிசுத்தனகிறு யென்று சொல்லிச் சிவாலய விஷ்ணுவாலயங்களில் ஏதேனுமொரு ஆலயத்தின் முன்பாக நின்று அவனுக்கு விதித்துத் தாங்களும் விதித்த பிராயச்சித்தத்திற் கீடாகக் கிருச்சிரத்தையநுஷ்டித்து முடிவில் காயத்திரிஜபத்தைச் சக்திக்குத்தக்கபடிச் செய்யக்கடவர்களென்று அங்கிராசொன்னர்.

இந்த அத்தியாயத்தில் சொல்லிய பரிஷத்தின் லக்ஷணம் முதலியவைகள் மேலே சொல்லப்போகிறவைகளும் கீழேசொல்லப்பட்டவைகளுமான சகல பிராயச்சித்த விஷயத்திலும் ஸமானமான வைகளென்றறிக. (௬௦)

3೧ ॥ ఏకేకం వసనం కృత్వా త్రిసంధ్య మవగాహనం ।
గవాం మధ్యే వసేద్రాత్రౌ దివా గాశ్చాప్యనువ్రజేత్ ॥

கோவதப்பிராயச்சித்தம். (இ-ள்.) கோவதம்செய்தவன் குடுமியையும் க்ஷௌரம்செய்வித்துக்கொண்டு மூன்றுஸந்தியாகாலங்களிலும் நதிமுதலியதீர்த்தங்களில் ஸ்நாநத்தைச்செய்து ராத்திரியில் பசுக்களைக் கட்டுகிற தொழுவத்தில் பசுக்கள்நடுவில் படுத்திருந்து பகலில் பசுக்களைப் பின்தொடர்ந்து செல்லக்கடவன். (எ-று)

முதல்சுலோகத்தில்கேள்விசெய்த கோவதப்பிராயச்சித்தத்தை இதுமுதலாகச்சொல்லுகிறார் பராசரர். (௩௧)

32 ॥ ఉష్ణే వర్షతి శీతే వా మారుతే వాతి వా భృశం ।
న కుర్వీతాత్మనస్త్రాణం గోరకృత్వా తు శక్తితః ॥

(இ-ள்.) கிரீஷ்மகாலத்தில் உண்டானதாபத்திலும் மழைபெய்யுந்தருணத்திலும் குளிர்காலத்திலும் பெருங் காற்று வீசும்பொழுதும் தன்சக்திக்கிடாகப் பசுவுக்கு வெயில் மழை குளிர் காற்று இவைகளுடைய வருத்தமில்லாதபடி முன்னே பசுக்களை ரக்ஷிக்காமல் ஒருவன் தன்னை ரக்ஷிக்கக்கடவனல்லன். (எ-று.)

இதனால் பசுக்களை வெயில் மழைமுதலிய பீடைகளினின்று காப்பாற்றச்சக்தியில்லாதவன் தன்னையும் ரக்ஷித்துக்கொள்ளக்கூடாதென்றறிக. (௩௨)

33 ॥ ఆత్మనో యది వాన్యేషాం గృహే క్షేత్రే ఖలేథవా ।
భక్షయంతీం న కథయే త్పిబంతం చైవ వత్సకం ॥

(இ-ள்.) ஒருவன் தன்னுடையதான அல்லது அயலாருடையதான வீடு கழனி களம் இவைகளில் பட்டிமேய்கின்றபசுவை அதைத்தடுப்பவனுக்குச் சொல்லக்கடவனல்லன். அப்படியே கறக்கவேண்டியகாலந்தவிர மற்றக்காலத்தில் ஊட்டுகின்ற கன்றையும் அதைத்தடுப்பவனுக்குத் தெரிவிக்கக்கடவனல்லன். (எ-று). (௩௩)

34 ॥ పిబంతీషు పిబేత్తోయం సంవిశంతీషు సంవిశేత్ ।
పతితాం పంకలగ్నాం వా సర్వప్రాణైస్సముద్ధరేత్ ॥

(இ-ள்.) பசுக்களின்பின் சஞ்சரிப்பதாகியவிரதத்தை அநுஷ்டிக்கிறவன் பசுக்கள் தண்ணீர் குடித்தபின் தான் தண்ணீரைக் குடிக்கக்கடவன்; பசுக்கள் படுத்துக்கொண்டபின் தான்படுத்துக்கொள்ளக்கடவன்; அல்லது உட்காரக்கடவன்; கிழத்தனத்தால் அல்லது வியாதியினால்விழுந்ததும் அல்லது சேற்றில் அழுந்தியிருப்பதுமான

பசுவைத் தன்பிராணனெல்லாவற்ருடும் அதாவது தன்பலத்தை முழுமையும் உபயோகித்து அல்லது தன்பிராணனில் ஆசைவைக் காமல் துணிவுடன் வெளியே எடுத்துவிடக்கடவன். (எ-று.) (ரு.ச)

౩౫ ॥ బ్రాహ్మణార్థే గవార్థే వా యస్తుప్రాణాన్ పరిత్యజేత్ ।
ముచ్యతేబ్రహ్మహత్యాయా గోప్తాగోర్బ్రాహ్మణస్యచ ।

(இ-ள்.) பிராம்மணர்நிமித்தத்திலும் பசுக்கள் நிமித்தத்திலும் எவன் சிரமப்பட்டு உபகாரஞ்செய்யப் பிராணனைவிடுகிருனே, கோ பிராம்மணரக்ஷகனுன அவன் பிரமஹத்தியினின்று விடப்படுகிருன்.

౩౬ ॥ గోవధస్యానురూపేణ ప్రాజాపత్యంవినిర్దిశేత్ ।
ప్రాజాపత్యంతతఃకృచ్ఛ్రం విభజేచ్చచతుర్విధమ్ ॥

(இ-ள்.) கோவதத்திற்குத்தக்கபடி பிராஜாபத்திய கிருச்சிரத் தை விதிக்கவேண்டும். பிராஜாபத்தியகிருச்சிரத்தை மேலேசொ ல்லப்போகிறபடி நான்குவிதமாகப்பிரிக்கவேண்டும்.(எ-று.)

வதத்தின்வகைகளுக்கீடாக நான்குவிதமான பிராஜாபத்திய கிருச்சிரங்களில் ஏதேனுமொன்றையே அநுஷ்டிக்கவேண்டுமென் பது கருத்து. (ரு.ரு)

౩౭ ॥ ఏకాహమేకభక్తాశీ చైకాహంనక్తభోజనః ।
అయాచితాశీచైకాహమేకాహంమారుతాశనః ॥

౩౮ ॥ దినద్వయంచైకభక్తో ద్విదినం నక్తభోజనః ।
దినద్వయమయాచీస్యా ద్ద్విదినంమారుతాశనః ॥

౩౯ ॥ త్రిదినంచైకభక్తాశీ త్రిదినంనక్తభోజనః ।
దినత్రయమయాచీస్యా త్త్రిదినంమారుతాశనః ।

౪౦ ॥ చతురహంత్వేకభక్తాశీ చతురహంనక్తభోజనః।
చతుర్దినమయాచీస్యా చ్చతురహంమారుతాశనః॥

(இ-ள்.) ஒருநாள் பகலில்மாத்திரம் புசிப்பவனும் ஒருநாள் ராத்திரியில்மாத்திரம் புசிப்பவனும் ஒருநாள் யாசிக்காமல்வந்த தைப் புசிப்பவனும் ஒருநாள் வாயுவைப்புசிப்பவனுயு மிருப்பது ஒருவித கிருச்சிரமாகும். இரண்டுநாள் பகலில் மாத்திரம் புசிப் பவனும் இரண்டுநாள் இரவில்மாத்திரம் புசிப்பவனும் இரண்டு நாள் யாசிக்காமல் கிடைத்ததைப் புசிப்பவனும் இரண்டுநாள் வாயுவைப் புசிப்பவனுயு மிருப்பது ஒருவித கிருச்சிர மாகும்.

மூன்றுநாள் பகலில்மாத்திரம்புசிப்பவனுகியும், மூன்றுநாள் இரவில் மாத்திரம்புசிப்பவனுயும், மூள்றுநாள் வாயுவைப் புசிப்பவனுயுமிருப்பது ஒருவித கிருச்சிரமாகும். நாலுநாள் பகலில் மாத்திரம் புசிப்பவனுயும் நாலுநாள் இரவில்மாத்திரம் புசிப்பவனுயும் நாலுநாள் யாசிக்காமல்வந்ததைப்புசிப்பவனுயும் நாலுநாள் வாயுவைப் புசிப்பவனுயுமிருப்பது ஒருவிதகிருச்சிரமாகும். (எ-று.)

வாயுவைப் புசிப்பதாவது சுத்தோபவாஸமாயிருப்பதாம்.

இந்தநாலுவித கிருச்சிரங்களில் ஒருவருஷத்திய பசுவதத்திற்கு முதலில்சொல்லிய கிருச்சிரமும், இரண்டுவருஷத்திய பசுவதத்திற்கு இரண்டாவதான கிருச்சிரமும், மூன்றுவருஷத்திய பசுவதத்திற்கு மூன்ருவதான கிருச்சிரமும், மூன்றுவயதிற்கு மேற்பட்டபசுவதத்திற்கு நான்காவதான கிருச்சிரமும் செய்யத்தக்கவைகளாமென்பது கருத்து. (கூஎ, கூஅ, கூகூ, சூ0)

౪౧ ॥ ప్రాయశ్చిత్తే సమాచీర్ణే కుర్యాద్బ్రాహ్మణభోజనమ్ ।
విప్రాణాం దక్షిణాం దద్యాత్పవిత్రాణి జపేద్ద్విజః ॥

(இ-ள்.) இவ்விதமாகப் பிராயச்சித்தம்செய்து முடிந்தவளவில் பிராம்மணன் பிராம்மணருக்குப் போஜனத்தைச் செய்வித்து அவர்களுக்குத் தக்ஷிணையையும் கொடுத்துப் பின்பு பவமாந ஸூக்தம் முதலிய பரிசுத்தமான மந்திரங்களை ஜபிக்கக்கடவன். (எ-று).

பிராம்மணருக்குப் போஜநம், தக்ஷிணை, மந்திரஜபம் இவைகளைத் தன் சக்திக்கிடாகச்செய்யக்கடவனென்பது கருத்து. (சூக)

౪౨॥ బ్రాహ్మణాన్భోజయిత్వాతు గోఘ్నశ్శుద్ధ్యేన్న సంశయః ॥

(இ-ள்.) கோவதம்செய்தவன் பிராம்மணர்களுக்குப் போஜனம் செய்வித்தால் சுத்தியை யடைகிருன். சந்தேகமில்லை. (எ-று)

தான் பிராயச்சித்தத்தினல் சுத்தனுகிவிட்டதைப் பிரசித்திசெய்வதற்காகத்தன்பந்துக்களனைவருக்கும் போஜனம்செய்விக்கவேண்டுமென்பது சொல்லப்பட்டது. முப்பத்தோராவது சுலோகந்தொடங்கிப் பராசரமுனிவர் சொன்ன சிகாவபநம்,திரிகால ஸ்நாநம், பசுக்களைப் பின்செல்லல், பசுக்களுடன் சயநித்தல், அவைகளுக்குப் புல்கொடுத்தல், பிராஜாபத்திய கிருச்சிரத்தை செய்தல், பிராம்மண போஜநம் செய்வித்தல் ஆகிய இவைகள் சியவனருக்கும் சம்மதமானவைகளாம்.பராசரர் அருளிச்செய்த கோவதப்பிராயச்சித்தத்தைக்காட்டிலும் சிலர் ஒருமாஸம்,இரண்டுமாஸம், மூன்றுமாஸங்களில்

செய்யத்தக்கவைகளாயும், சிலர் ஒன்று தொடங்கி ஆயிரம் வரையி ல் கோதாநங்களைச் செய்யவேண்டுமென்றும், சிலர் பன்னிரண்டு நாள் உபவாசம் இருக்கவேண்டுமென்றும், இவ்விதமாகச்சொல்லி யிருப்பதைப்பற்றி சில ஏற்பாடு நீதியை அனுசரித்துச்செய்யத்தக்க வைகளாகும். அவைகளில் இங்கு மாதவாசாரியர் சில்வற்றைக் கூறு கிருர். அவையாவன;—கோவதம் செய்தவன் ஒருமாஸம் நியமத்து டன் பஞ்சகவியத்தைக்குடித்துக்கொண்டு பசுத்தொழுவத்தில் சயநி ப்பவனும் பசுக்களைப் பின்தொடர்ந்து செல்லுகிறவனுமாகிக் கோ தாநம் செய்வதினல் சுத்தனகிருனென்றும், அல்லது பிராஜாபத் திய கிருச்சிரத்தையும் அதிகிருச்சிரத்தையும்செய்துமூன்றுஉபவாச மிருந்து ஒருவிருஷபத்துடன் பத்துப்பசுக்களைத்தாநம்செய்வதினல் சுத்தனகிருனென்றும் யாக்ஞியவல்கியர் சொன்னர்.இவ்விஷயத்தில் ஜாதிமாத்திரப் பிராம்மணனுடைய பசுவைக்கொன்ருல் மூன்று நாள் உபவாஸமும் ஒருவிருஷபத்துடன் பத்துப்பசுக்களைத் தாநம் செய்தலும், க்ஷத்திரியனுடைய பசுவைக்கொன்ருல் பஞ்சகவியத் தைப் புசித்தல் பசுவைப்பின்செல்லுதல் முதலிய விரதமும், வைசி யனுடைய பசுவைக்கொன்ருல் ஒருமாஸம் அதிகிருச்சிரமும், சூத் திரனுடைய பசுவைக்கொன்ருல் பிராஜாபத்திய கிருச்சிரமும் செ ய்யத்தக்கவைகளாமென்று ஏற்பாடு செய்யத்தக்கது. கோஹத்தி யைச்செய்தவன் திநத்திற்கு மூன்றுபலம் விழுக்காடு ஒருமாஸம் பஞ்சகவியத்தைமாத்திரம் குடிப்பதையாவது பராக கிருச்சிரத்தை யாவது பிராஜாபத்திய கிருச்சிரத்தையாவது செய்யக்கடவனெ ன்று விஷ்ணுசொன்ன மூன்றுவித பிராயச்சித்தங்களும் க்ஷத்திரிய னுடைய பசுவைக் கொன்றதைப்பற்றியவைகளாம். கோவதம்செய் தவன் பஞ்சகவியத்தைமாத்திரம் குடிப்பவனகி உபவாஸமிருந்து சிகையோடு ஸர்வாங்கமும் க்ஷெளரம்செய்வித்துக்கொண்டு பசுத் தோல்போர்வையைத் தரித்துப் பசுக்களைப்பின்ருடர்ந்து செல்லு வதையும் பசுத்தொழுவத்தில் சயநிப்பதையும் செய்து பசுவைத் தா நம் செய்யக்கடவனென்று சங்கலிகிதர்கள் சொன்னது வைசியனு டைய பசுவைக்கொன்ற விஷயத்தைப்பற்றியதாம். பசுவைக்கொன் றவன் பசுவைப்போல் பசுத்தொழுவத்தில் தரையில் சயநிப்பவனகி அரைமாஸம் இந்திரியங்களை ஜயித்து மாவு, யவஅரிசி அந்நம், பால், தயிர்,நெய் இவைகளைக்கிரமமாக ஒருதரம்புசிப்பவனகி நகம் ரோமம் இவைகளை க்ஷெளரத்தாலொழித்துத் திரிகாலமும் ஸ்நாநம்செய்தல் பசுவைப்பின்செல்லுதல் இவைகளைச் சிரத்தையுடன் செய்து நித்தி

யமும் காயத்திரி மந்திரத்தையும் பின்னும் சில பரிசுத்தமான மந்திரங்களையும் பக்தியுடன் ஜபித்து இவ்விதமாக ஒன்றரைமாஸம் விரதத்தை அநுஷ்டித்துப் பின்பு பிராம்மணபோஜநம் செய்வித்து விருஷபத்துடன் கறுத்த பசுவைத் தாநம்செய்தால் பாபத்தினின்று விடப்படுகிறானென்கிற ஸம்வர்த்தவசநம் பிராம்மணனுடைய பசுவைக்கொன்றதைப் பற்றியதாகும்.

கோவதம்செய்தவன் கோதாநஞ்செய்தல், தொழுவத்தில் சயநித்தல், பன்னிரண்டுநாள் பஞ்சகவிய பிராசநம்செய்து பசுக்களைப் பின்செல்லல் ஆகிய இவைகளைச் செய்யக்கடவனென்கிற ஸுமந்துவசநம் சூத்திரனுடைய பசுவைக்கொன்றதைப் பற்றியதாம். உபபாதகமாகிய கோவததோஷத்தை அடைந்தவன் ஒருமாஸம் யவஅரிசி அந்நத்தைப் புசித்துப் பசுத்தொழுவத்தில் வசித்து ஈரமான தோலால் போர்க்கப்பட்டு நான்காவது காலத்தில் அதாவது இன்றுபகலில் புசிப்பவன் இன்றைய இரவு, நாளையபகல் ஆகிய இரண்டாவது மூன்றாவது காலங்களில் புசியாமல் நாளையராத்திரியில் உப்பு, புளிப்பு, காரம் இவைகளைத் தவிர்ந்த போஜநத்தை மிதமாகப்புசித்தும், கோமூத்திரத்தில் இரண்டுமாஸம் ஸ்நாநம்செய்தும், பசுக்களைப் பகலில் பின்றொடர்ந்து கோதூளிகளைப் புசித்தும், பசுக்கள் நிற்கையில் தானும் நின்றும் அவைகள் படுக்கையில் தானும்படுத்தும் திருடர் புலிமுதலிய பயங்களினின்று அவைகளை ரக்ஷித்துச் சிசுருஷைசெய்து நமஸ்கரித்து இரவில் வீராஸநத்தில் உட்கார்ந்தும், வெயில் மழை நோய் இவைகளால் வருந்துகையிலும் சேற்றில் அழுந்திக்கிடக்கையிலும் தன்பிராணனை யொழித்தாவது அவைகளை ரக்ஷிக்கக்கடவனென்று இதுமுதலாக மூன்றுமாஸ விரதத்தைச் சொன்ன ஸம்வர்த்தவசநம் பிராம்மணனுடைய பசுவை அறிந்து கொன்றதைப்பற்றியதாகும். உபபாதகமாகிய கோவதத்தைச்செய்தவன் தொழுவத்தில் தோலினால் போர்க்கப்பட்டவனாகி யவஅரிசி அந்நத்தை உப்பு காரம் புளிப்பு இவைகளைத் தள்ளி ஆறவது காலத்தில் அதாவது இன்று பகலில் புசித்தவன் மூன்றாவதுநாளிரவில் புசித்து இரண்டுமாஸம் கோமூத்திர ஸ்நாநம் செய்பவனாகி யதியைப்போல் தண்டத்தையும் மந்திரபூர்வகமாக முஞ்சி அரைஞாண் இவைகளையும் தரித்து ஜலத்தினால் கால்அலம்பி பசுக்களைப் பின்சென்று சிசுருஷைசெய்து நமஸ்கரித்து அந்தத் தூளிகளைப் புசித்து ராத்திரியில் வீராஸநத்தில் உட்கார்ந்து யமமுனிவரால் சொல்லப்பட்ட கோஸ்துதியாகிய கோமதீவித்தையையும் பிரணவத்தையும் வேதத்தையும் ஜபித்து விருஷபத்

துடன் பத்துப்பசுக்களை அல்லாத பக்ஷத்தில் தன் சகலதநத்தையும் தாநம்செய்து இவ்விதமாக இரண்டுமொஸம் விரதத்தை அநுஷ்டித்தால் சுத்தனுகிறுனென்கிற அங்கிராவினுடைய வசநமும் பிராம்மணனுடையதான யௌவந பருவமுடைய பசுவை அறிந்து கொன்றதைப் பற்றியதாகும். இவ்விதமாகப் பதின்மூன்றுமாஸ விரதத்தை ஹாரீதரும் ஆறுமாஸ விரதத்தை வசிஷ்டரும் தேவலரும் சொன்னது யாகம் செய்து கொண்டிருக்கிற பிராம்மணனுடைய பசுவை அறிந்துகொன்றதைப் பற்றியதாகும். மற்ற வியாஸாதிமுநிகள் கோவதத்தைப்பற்றிச் சொல்லியவசநங்களில் உண்டாகிய சிலவேறுபாட்டுக்கும் இது போல ஊஹித்து இந்தவசநம் இவ்விதமான கோவதத்தைப்பற்றியதென்று நிஷ்கர்ஷிக்க வேண்டும் என்பவைகளே. (சுக௦)

ஐந்தாவது அத்தியாயம் முற்றிற்று.

ஆருவது அத்தியாயம்.

அவதாரிகை. கீழ் ஐந்தாவது அத்தியாயத்தில் கோவதத்திற்குச் சாமாநியமான பிராயச்சித்தத்தைச் சொல்லி இந்த ஆருவது அத்தியாயத்தில் பசுக்களைத்தடுத்தல் கட்டுதல்முதலிய நிமித்தங்களை அநுஸரித்து விசேஷமான பிராயச்சித்தத்தை ஸ்ரீ பராசரமுநிவர் அருளிச்செய்கின்றுர்.

౧॥ గవాంసంరక్షణార్థాయ నదుష్యేద్రోధబంధయోః ।

తద్వధంతునతంవిద్యాత్కామకారకృతంతథా ॥

(இ-ள்.) பசுக்களுடைய ரக்ஷணத்திற்காக இடைச்சேரியில் அல்லது தொழுவத்தில் அவைகளைத் தடுத்தல் கட்டுதல் இவைகளைச்செய்தவன் தோஷத்தையடையமாட்டான். தடுப்பதும் கட்டுவதும் ஒருவனுல் அறிந்துசெய்யப்பட்டனவாகிலும் அவற்றைப் பசுவின் வதரூபமாக யாரும் அறியக்கடவரல்லர் (எ-று.)

புல்லைத்தின்னவொட்டாமல் பசுவைத்தடைசெய்வது ரோதமென்னப்படும். பால்கறக்கவேண்டிய பசுவைக் கயிற்றினுல் காலிலும் கழுத்திலும் கட்டுவது பந்தமென்னப்படும். இந்தரோதமும் பந்தமும் பசுவுக்கு ஹிதமென்றும் அஹிதமென்றும்இரண்டுவிதமாகும்.வியாதிமுதலிய பீடையுள்ள பசுவுக்குப் புல்லைத்தின்னும விருப்பதற்காகச் செய்யும் ரோதமானது (தடையானது) ஹிதமாகும்(இஷ்டமாகும்). ரோகமின்றிப் பசித்திருக்கும்போது புல்லைத்தின்னவொட்டாமல் செய்யும் தடையானது பசுவுக்கு அஹிதமாகும் (விரோதமாகும்).

இதுபோல் கட்டுவதும் இரண்டுவிதமாகும். அவைகளில் பசுரக்ஷண த்திற்காகச் செய்யப்பட்டரோதமும் பந்தமும் பசுவுக்குப் பிரியமா கையால் அவைகளைச்செய்தவனுக்குப் பிராயச்சித்தம் வேண்டுவ தில்லை யென்பது கருத்து. ஸாயங்காலத்தில் ரக்ஷிப்பதற்காகப் பசுக் களைத் தடுத்தவனும் கட்டினவனும் தோஷத்தை அடையமாட்டார் களென்று அங்கிரசுசொன்னார். (௧)

౨॥ దండాదూర్ధ్వంయదన్యేన ప్రహారాద్యదిపాతయేత్ ।
ప్రాయశ్చిత్తంయథాప్రోక్తం ద్విగుణంగోవధేచరేత్॥

(இ-ள்.) பெரு விரல் பருமனுள்ளது தண்டமென்று தண்ட லக்ஷணத்தைப் பத்தாவதுசுலோகத்தில் சொல்லப்போகிறார் பரா சரர். அந்தத்தண்டத்தைக்காட்டிலும் மேற்பட்டதான வேறொரு பெருந்தடியினால் பசுவைக்கொன்றவன் கோவதத்திற்குச் சொல்லிய பிராயச்சித்தம் எதுவோ அதை இரட்டிப்பாகச் செய்யக்கடவன்.

அறியாமல்செய்த கோவதத்திற்கு முன் ஐந்தாவது அத்தியாய த்தில் சொல்லிய பிராயச்சித்தத்தை இரண்டுபெங்கு அதிகமாகச் செ ய்யவேண்டு மென்றறிக. (௨)

౨పు॥ రోధబంధనయోక్త్రాణి పాతశ్చేతిచతుర్విధమ్ ॥

(இ-ள்.) ரோதம் (தடைசெய்தல்), பந்தநம் (கட்டுதல்), யோ க்திரம் (பூட்டாங்கயிறு), பாதம் (கல்தடிமுதலியவைகளால் அடித் தல்) என்று கோவதநிமித்தம் நான்குவிதமாம். (எ-று.) (௨௧)

3పు॥ ఏకపాదంచరేద్రోధే ద్వౌపాదౌబంధనేచరేత్ ॥
యోక్త్రేషుపాదహీనంస్యా చ్చరేత్సర్వంనిపాతనే ॥

(இ-ள்.) ரோதம் என்னும் நிமித்தத்தினால் கோவதம் செய்த வன் (ஐந்தாவது அத்தியாயத்தில் முப்பத்தேழு முப்பத்தெட்டு முப் பத்தொன்பது இந்தச் சுலோகங்களில் கோவதப் பிராயச்சித்தமா கச் சொல்லியிருக்கிற பிராஜாபத்திய கிருச்சிரத்தில்) கால்பாகத்தை யும் பந்தநம் என்னும் நிமித்தத்தில் அரைபாகத்தையும் யோக்திரம் என்னும் நிமித்தத்தில் முக்கால்பாகத்தையும் நிபாதநமென்னும் நிமித்தத்தில் முழுமையையும் செய்யக்கடவன் (எ-று.)

கோவதத்தைப்பற்றி இரண்டுமாஸம் பிராஜாபத்திய கிருச்சிர த்தை அநுஷ்டிப்பது பிராயச்சித்தமாமென்றும், ரோதமென்னும் நிமித்தத்தில் இதில் கால்வாசியும், பந்தந மென்னும் நிமித்தத்தில்

இதில் அரைவாசியும், யோக்திர மென்னும் நிமித்தத்தில் முக்கால் வாசியும், நிபாதநமென்னும் நிமித்தத்தில் முழுமையும் செய்ய வேண்டுமென்று அங்கிரசுசொன்னது பராசரர் விதிக்கு வேறுகிறதே யெனில் ஒன்று சில குண விசேஷத்தையுடைய கோவைக் கொன்றதைப் பற்றியதென்றும் மற்றொன்று சில குணத்தினால் குறைந்த தான கோவைக்கொன்றதைப் பற்றியதென்றும் ஏற்பாடு செய்யத் தக்கதாம். இப்படியே மற்ற வசநங்களுக்கும் பார்த்துக்கொள்ள வேண்டும். (௯௨)

౪॥ గోష్ఠే వాపి గృహే వాపి దుర్గేష్వప్యసమస్థలే ॥

౫॥ నదీష్వథ సముద్రేషు త్వన్యేషు చ నదీముఖే ॥

దగ్ధదేశే మృతా గావ స్తంభనాద్రోధ ఉచ్యతే ॥

ரோதமென்னும் நிமித்தம் இதுவென்பது. (இ-ள்.) தொழுவத்திலாவது கிருகத்திலாவது மலையின் நுனிப்பிரதேசத்திலாவது நடக்கக்கூடாத வழிமுதலிய துர்க்க ஸ்தாநங்களிலாவது மேடுபள்ளமான பூமியிலாவது ஆறுகளிலாவது கடலிலாவது நடைபாவி கிணறு முதலிய மற்ற இடங்களிலாவது ஆறும் கடலும் சேருகிற விடத்திலாவது காட்டுத்தீயினால் தஹிக்கப்பட்டுச் சுடுகையுள்ள சாம்பல்மண்ணிலாவது பசு அகப்பட்டுக்கொண்டதனால் வெளியே போகாமலிருக்கை ரோதம் என்னப்படும்.

மேற்கண்டவிடங்களில் மரிப்பது ரோதமென்னும் நிமித்தத்தினால் மரிப்பதென்றும் அதற்குக் கிருச்சிரத்தில் கால்பாகம் பிராயச்சித்தமாமென்றும் ஆபஸ்தம்பர் விதித்தார். (௪, ௫)

౬॥ యోక్త్రదామకదోరైశ్చ కంఠాభరణభూషణైః ।

గృహే వాపి వనే వాపి బద్ధా స్యాద్గౌర్మృతా యది ॥

౭॥ తదేవ బంధనం విద్యాత్ కామాకామకృతం యది ॥

பந்தம் என்னும் நிமித்தம் இதுவென்பது. (இ-ள்.) நுகத்தடித்தொளையில்பூட்டுங் கயிறு, பசுக்களைக்கட்டுகின்ற தாமணியாகிய சாதாரண கயிறு, கண்டாபரணமென்னும் கழுத்தில் கட்டியமணி சலங்கை முதலியவைகள், பூஷணமாக நெற்றியில் கட்டப்பட்ட பலகறைமுதலியவைகள் ஆகிய இந்த ஸாதநங்களால் வீட்டில் அல்லது வநத்தில் கட்டுப்பட்டுப் பசு மரித்தால் அதற்குக்காரணமாகிய பூட்டாங்கயிறு முதலியவைகள் பந்தமென்று அறியத்தக்கவைகள். அந்தப்பந்தமென்னும் நிமித்தம் அறிந்துசெய்யப்பட்டதும் அறியா

மல் செய்யப்பட்டதுமென்று இரண்டுவிதமாகும். பசுக்களைப் பூட்டாங்கயிறு தாமணி முதலியவைகளால் கட்டுவது அறிந்துசெய்யப்பட்டபந்தமாகும். தொழுவத்தில் கட்டியதாமணியிலுள்ள பூட்டாங்கயிறு முதலியவைகளில் பசுவானது தன்காலை மாட்டிக்கொண்டால் அது புருஷன் அறியாமல்செய்த பந்தமென்னப்படும். (எ-று.)

கழுத்தில்கட்டிய ஆபரணம் முதலியவைகளின் தோஷத்தால் பசு மரணத்தை அடைந்தால் கட்டினவன் பிராஜாபத்திய கிருச்சிரத்தில் பாதிசெய்யவேண்டுமென்று ஆபஸ்தம்பர் சொன்னார். (சூ?)

௨௪॥ హలేవాశకటేపంక్త్యా పృష్ఠేవాపీడితోనరైః।

గోపతిర్మృత్యుమాప్నోతి యోక్త్రాద్భవతితద్వధః ॥

யோக்திரமென்னும் நிமித்தம் இதுவென்பது. (இ-ள்.) கலப்பையிலாவது வண்டியிலாவது களத்தில் வரிசையாகக்கட்டுகிற பிணைக்கயிற்றிலாவது முதுகில் அதிகபாரத்தை ஏற்றி மனிதர்களால் பீடிக்கப்படுகையிலாவது விருஷபமானது மரித்துவிட்டால் அந்த வதம் யோக்திரம் என்னும் நிமித்தத்தினால் உண்டானது.

தமநமென்பது உழுவது பாரத்தைச் சுமப்பது முதலிய விஷயங்களில் பழக்கமில்லாத எருதைப் பழகச்செய்வதற்காகச் சிக்ஷித்தலாம். தாமநமென்பது காலில்கட்டிய கயிற்றினால் அடித்தலாம். ரோதமென்பது கழுத்தில் கயிறுமுதலியவைகளால் கட்டித்தடுத்தலாம். ஸங்காதமென்பது பிணையில் கட்டுதலாம். பந்தநமென்பது தாமணியில் கட்டுதலாம். நஸ்தம் என்பது மூக்குச்சந்தில் கயிற்றைமாட்டி இழுத்தலாம். இவைபோன்ற மற்றுமுள்ளசகலவித கயிறுகளால் எருதுக்கு மரணமுண்டாகும்படி செய்தவன் முக்கால் கிருச்சிரத்தை அநுஷ்டிக்கவேண்டுமென்று ஆபஸ்தம்பர் விதித்தார்.

௫ ॥ మత్తఃప్రమత్తఉన్మత్త శ్చేతనోవాప్యచేతనః ॥

௬ ॥ కామాకామకృతక్రోధో దండైర్హన్యాదథోపలైః ।

ప్రహృతోవామృతోవాపి తద్ధేతుర్వినిపాతనే ॥

நிபாதமென்னும் நிமித்தம் இதுவென்பது. (இ-ள்.) செல்வமிகுதியால் மதித்தவனும் மத்தியபாநம்முதலியவைகளால் பரவசனாயிருப்பவனும் வியாதி முதலியவைகளால் உன்மத்தனானவனும் உலகத்திலுள்ள வியவஹாரங்களை அறிந்தவனும் அவைகள் விஷயத்தில் மூடனாயிருப்பவனும் ஆகிய இவ்வித புருஷர்களில் எவனாகிலும் பசுவைக் கொல்லவேண்டுமென்கிற புத்தியினாலும் வீணான சேஷ்

டைகளாலும் உண்டான கோபத்தை யுடையவனுகித் தடிகளால் அல்லது கற்களால் பசுவை அடித்தாலும் கொன்ருலும் இது நிபாதமென்னும் நிமித்தத்திஞல் உண்டான மரணமென்னப்படும். (எ-று).

கற்களாலாவது பெருந்தடிகளாலாவது கயிறுகளாலாவது ஆயுதங்களாலாவது பசுவை அடித்துக்கொல்லுகிறவன் பிராஜாபத்திய கிருச்சிரத்தை முழுதும் அநுஷ்டிக்கக் கடவனென்று ஆபஸ்தம்பர் சொன்னுர். (அ-கூ)

౧౦ ॥ అంగుష్ఠమాత్రస్థూలస్తు బాహుమాత్రప్రమాణకః।
ఆర్ద్రస్తుసపలాశశ్చ దండఇత్యభిధీయతే ॥

தண்டலக்ஷணம். (இ-ள்.) பெருவிரல் பருமனுடையதும் ஒருகையளவு நீளமுடையதும் ஈரமுடையதும் இலைகளோடு கூடியதும் தண்டமென்னப்படும். (எ-று).

பெருவிரல் பருமனுடையது என்றதிஞல் அதற்கு மேற்பட்ட பருமனுடைய தடி பசுவை அடிப்பதற்கு உபயோகிக்கத்தகாததென்றும் அதற்குக் குறைந்த பருமனுடையது வதநிமித்தமாகாததென்றும் நீளம் கையளவு என்றதிஞல் அதற்கு அதிகமான நீளமுள்ள தண்டத்தைக்கொண்டு பசுவை அடித்தால் முகம்வாயில் அந்தத் தண்டம் சென்று கண்களில் அடிபட்டு அதஞல் அதற்கு அதிகவருத்தமுண்டாகுமென்றும் ஈரம் இலை இவைகளோடு கூடிய தண்டத்தால் அடித்தால் அது நோயைத் தராதென்றும் அறிக. (க0)

౧౧ ॥ మూర్ఛితః పతితో వాపి దండేనాభిహతస్యతు ।
ఉత్థితస్తుయదాగచ్ఛే త్పంచసప్తదశైవవా ॥
౧౨ ॥ గ్రాసంవాయదిగృహ్ణీయా త్తోయంవాపిపిబేద్యది ।
పూర్వంవ్యాధ్యుపసృష్ట శ్చేత్ప్రాయశ్చిత్తంనవిద్యతే ॥

(இ-ள்.) முன் வியாதியிஞல் பீடிக்கப்பட்டதும் நடக்கமாட்டாமையால் தண்டத்திஞல் அடிக்கப்பட்டதுமான பசுவானது மூர்ச்சையடைந்தாலும் கீழேவிழுந்தாலும் அது பின்பு எழுந்திருந்து ஐந்து அல்லது ஏழு அல்லது பத்து அடி நடந்தபக்ஷத்திலும் எழுந்திருக்கச் சக்தியற்றுப் படுத்தபடியே புல்முதலிய ஆஹாரத்தைத் தின்றபக்ஷத்திலும் அப்படித்தின்னச்சக்தியற்றுத்தண்ணீரையாவது குடித்தபக்ஷத்திலும் அடித்த புருஷனுக்குப் பிராயச்சித்தம் இல்லை.

பசுவானது அடிக்கப்பட்டு விழுந்தபின் எழுந்திருத்தல் புல்லை

த்தின்னுதல் தண்ணீர்குடித்தல் இவைகளைச்செய்யாமல் மூர்ச்சை யடைந்தபடியே மரணமடைந்தால் அடித்தவன் பிராயச்சித்தத்தைச் செய்யவேண்டியவ னாகிருனென்று அறிக. (கக,கஉ)

౧౩ ॥ పిండస్థేపాదమేకంతు ద్వౌపాదౌగర్భసమ్మితే ।
పాదోనంవ్రతముద్దిష్టం హత్వాగర్భమచేతనమ్ ॥

பசுவின் கர்ப்பத்தை அழித்தலின் பிராயச்சித்தம். (இ - ள்.) அரைமாஸத்திற்குட்பட்ட கர்ப்பம் பிண்டம் (உருண்டைவடிவை யடைந்தது) என்னப்படும். அதை அழித்தவன் பிராஜாபத்திய கிருச்சிரத்தில் கால்பாகத்தைச் செய்யவேண்டும். ஒருமாஸத்திய கர்ப்பமானது ஸம்மிதம் (கடினத்தன்மையை அடைந்தது) என்னப் படும். அதை அழித்தவன் கிருச்சிரத்தில் அரைபாகத்தைச் செய்ய வேண்டும். ஒருமாஸத்திற்குமேல் ஏழுமாஸத்திற்குட்பட்ட கர்ப்பம் அசேதநம் (பிராணவாயு ஸம்பந்தமில்லாதது) என்னப்படும். அதை அழித்தவன் கிருச்சிரத்தில் முக்கால்பாகத்தைச் செய்யவேண்டும்.

ஸசேதநமான (பிராணவாயு சம்பந்தமுள்ள) கர்ப்பத்தை அழி த்தவனுக்குப் பிராயச்சித்தத்தைமேலே பதினுருவது சுலோகத்தில் சொல்லப்போகிருர் பராசரர் என்றறிக. (கங)

౧౪ ॥ పాదేంగరోమవపనం ద్విపాదేశ్మశ్రుణోపిచ ।
త్రిపాదేతుశిఖావర్జం సశిఖంతునిపాతనే ॥

க்ஷௌரவிசேஷங்கள். (இ-ள்.) பாத கிருச்சிர பிராயச்சித்த த்தில் தேஹத்திலுள்ள மயிர்களை க்ஷௌரம் செய்வித்துக்கொள்ள வேண்டும். அர்த்தகிருச்சிர பிராயச்சித்தத்தில் மீசைமுதலிய மயிர்க ளைக் கழிக்கவேண்டும். முக்கால் கிருச்சிரத்தை அநுஷ்டிக்கையில் குடுமியைவிட்டு மிகுந்த மயிர்களைக் கழிக்கவேண்டும். நிபாதநமென் கிற பிராணசம்பந்தமுடைய பூர்ணமான கர்ப்பத்தை அழித்தவன் செய்துகொள்ளும் பிராயச்சித்தத்தில் குடுமியுடன் ஸர்வ அங்கங் களையும் க்ஷௌரம் செய்வித்துக்கொள்ளவேண்டும். (எ-று).

பாதகிருச்சிரத்தில் நகங்களையும் தேகத்திலுள்ள மயிர்களையும் அர்த்தகிருச்சிரத்தில் மீசையையும் முக்கால் கிருச்சிரத்தில் குடுமி யைமட்டும்விட்டு மற்றவைகளையும் பூர்ணகிருச்சிரத்தில் குடுமியை யுஞ் சேர்த்து மற்றவைகளையும் க்ஷௌரஞ் செய்வித்துக்கொள்ள வேண்டுமென்று ஆபஸ்தம்பர்சொன்னர். (கச)

౧౫ ॥ పాదేవస్త్రయుగంచైవ ద్విపాదేకాంస్యభాజనమ్ ।
త్రిపాదేగోవృషందద్యాచ్చతుర్థేగోద్వయంస్మృతమ్ ॥

(இ-ள்.) பாதகிருச்சிரத்தில் இரண்டு வஸ்திரத்தையும் அர்த்த கிருச்சிரத்தில் வெண்கலபாத்திரத்தையும் முக்கால் கிருச்சிரத்தில் ஒருவிருஷபத்தையும் பூர்ணகிருச்சிரத்தில் இரண்டு பசுக்களையும் தானம்செய்யவேண்டும். (எ-று.)

அர்த்தகிருச்சிரத்தில் வெண்கலபாத்திரதானம் அசக்தனைப்பற்றியதென்றும் சக்தன் ஸ்வர்ணதானம் செய்யக்கடவனென்றும் சங்கர் விதித்தார். (கரு)

౧౬ ॥ నిష్పన్నసర్వగాత్రస్తు దృశ్యతేవాసచేతనః ।
అంగప్రత్యంగసంపూర్ణే ద్విగుణంగోవ్రతంచరేత్ ॥

(இ-ள்.) கோகர்ப்பமானது எட்டாவதுமாஸத்தில் ஸகல அவயவங்களும் அமைந்ததாகிப் பிரஸவத்திற்குச் சமீபகாலத்தில் தாய் வயிற்றில் இங்குமங்கும் ஸஞ்சரிப்பதால் பிராணனோடு கூடியதாகக் காணப்படுகிறது. அங்கங்களோடும் பிரத்தியங்கங்களோடும் கூடின பூர்ணமான அந்தக்கர்ப்பத்தின் வதத்தில் இரட்டிப்பான கோவிரதத்தைச் செய்யவேண்டும். (எ-று).

தலை கைகள் மார்பு இரண்டுபக்கம் இடுப்பு கால்கள் ஆகிய ஆறும் அங்கங்களென்றும், கழுத்து புஜங்கள் முதுகு வயிறு துடைகள் முழந்தாள்கள் ஆகிய ஆறும் பிரத்தியங்கங்களென்றும் வேறு ஸ்மிருதியில் சொல்லப்பட்டன. இந்த அங்கங்களாலும் பிரத்தியங்கங்களாலும் நிறைந்த கர்ப்பத்தின் வதத்தில் இரண்டுபிராஜாபத்தியகிருச்சிரங்களைச் செய்யவேண்டுமென்றறிக. (கசு)

౧౭ ॥ పాషాణేనాపిదండేన గావోయేనాభిఘాతితాః ।
శృంగభంగేచరేత్పాదం ద్వౌపాదావస్థిభంజనే ॥

౧౮ ॥ త్రిపాదంచైవకర్ణేతు చరేత్సర్వంనిపాతనే ॥

அவயவங்களைச் சேதித்தலின் பிராயச்சித்தம். (இ-ள்.) கல்லினால் அல்லது தண்டத்தினால் எந்தப் பசுக்கள் அடிக்கப்பட்டனவோ அந்தப் பசுக்கள் மரணமடையாவிடினும் அவைகளின் கொம்பு ஒடிந்தால் அடித்தவன் கிருச்சிரத்தில் கால்பாகத்தையும், எலும்புமுறிந்தால் அரைபாகத்தையும், ஒருகாது அழிந்தால் முக்கால்பாகத்தையும் தேகத்தின் அவயவங்கள் யாவும் முறிந்தால் பூர்ணகிருச்சிரத்தையும் செய்யக்கடவன். (எ-று.)

பசுக்களை அடித்து அவைகளின் எலும்பை முறிப்பது அல்லது வாலை ஒடிப்பது அல்லது கொம்பை ஒடிப்பது ஆகிய இம்சைகளைச் செய்கிறவன் அரைமாஸம் யவஅரிசி அந்நத்தைப் புசிப்பதாகிய விரதத்தைச்செய்யக்கடவனென்று அங்கிராவும், எலும்பைமுறித்தும் கொம்பை ஒடித்தும் தோலைக்கிழித்தும் வாலை ஒடித்தும் இம்சிப்பவன் அரைமாஸம் யாவகவிர்தத்தைச் செய்யக்கடவனென்று ஆபஸ்தம்பரும் சங்கரும்சொன்னது ஒரு அடியால் அல்லது ஒருகாலத்தில் பல அங்கங்களை அழித்த விஷயமென்றறிக. பசுவை ஒருவன் அடித்து அதின் கொம்பை அல்லது எலும்பை முறித்தாலும், தோலைப்போக்கினாலும் அவன் பத்துநாள் பிராணதாரணத்திற்குப் பால் முதலியவைகளைக் குடித்து உபவாஸமிருக்கவேண்டுமென்றும் அந்தப் பசு பிழைத்தபோதிலும் இந்தப் பிராயச்சித்தம் செய்யத்தக்கதாமென்றும் அங்கிரசு சொன்னது கீழ் விதித்த பிராயச்சித்தங்களைச் செய்ய அசக்தனைப்பற்றியதென்றறிக. (௧௭,௧௭௨)

౧౭॥ శృంగభంగేస్థిభంగేచ కటిభంగేతథైవచ ।
యదిజీవతిషణ్మాసాన్ ప్రాయశ్చిత్తంనవిద్యతే ॥

(இ-ள்.) பசுவை ஒருவன் அடித்ததனால் அதற்குக் கொம்பு ஒடிந்தும், எலும்பு முறிந்தும், இடுப்பு ஒடிந்தும், பின்பு ஆறுமாஸம் அந்தப் பசு பிழைத்திருந்தால் அடித்தவனுக்குப் பிராயச்சித்தம் செய்ய வேண்டியதில்லை. (எ-று.)

கொம்பு முதலியவைகள் ஒடிந்தபின் ஆறுமாஸத்திற்குள் அந்தப் பசு மரித்தால் கொம்பு ஒடிந்த காரணத்தினால் மரித்ததோ என்கிற சங்கையினால் கோவதப் பிராயச்சித்தமே செய்யத்தக்கதாகுமென்றும்,ஆறுமாஸம் பிழைத்திருந்தால் கோவதப் பிராயச்சித்தம் செய்யத்தக்கதில்லை என்றும், கொம்பு ஒடிந்த நிமித்தத்திற்குரிய பிராயச்சித்தம் செய்யத்தக்கதென்றுமறிக. (௧௮௨)

౧౮॥ వ్రణభంగేతుకర్తవ్యం స్నేహాభ్యంగస్తుపాణినా ।
యవసశ్చోపహర్తవ్యో యావద్దృఢబలోభవేత్ ॥

(இ-ள்.) பசுவுக்குத் தோலைப்போக்கிப் புண்ணும் கொம்பு முதலியவைகளின் பங்கமும் செய்யப்பட்டால் அந்த இடத்தில் கையினால் எண்ணெயை நன்றாகப் பூசவேண்டும். எவ்வளவுகாலத்திற்குள் அந்தப் பசு அதிக பலத்தை உடையதாகுமோ அவ்வளவுகாலம்வரையில் அதற்கு நல்ல புல்லை ஆஹாரமாகப் போடவேண்டும். (எ-று).

புண்ணில் எண்ணெயைப்பூசவேண்டுமென்பது தக்க ஔஷதங்களையும் கொடுக்கவேண்டுமென்பதற்கும் புல்லைப்போடவேண்டுமென்பது சகலவித ஆகாரங்களையும் புசிப்பிக்கவேண்டு மென்பதற்கும் குறியாகின்றன. இதனால் பசுவை அடித்தவன் அங்கக்குறைவு முதலிய நிமித்தங்களில் விதித்திருக்கும் பிராயச்சித்தத்தைச் செய்துகொள்வதோடு அடிபட்டபசுவின் புண்ணை வைத்தியத்தினால் ஆறச்செய்யவேண்டுமென்பதும் சொல்லப்பட்டது. பசுவையடித்தவன் புல்முதலிய ஆகாரங்களைக்கொடுத்து அந்தப்புண் ஆறுகிறவரையில் வைத்தியம்செய்து பின்பு பிராம்மணர்களுக்குத் தக்ஷிணைகொடுத்தால் பாபத்தினின்று விடுபடுகிறானென்றறிக. (ககூ)

౨౦పు॥ యావత్సంపూర్ణ సర్వాంగస్తావత్సంపోషయేన్నరః ।
గోరూపం బ్రాహ్మణస్యాగ్రే నమస్కృత్వా విసర్జయేత్ ॥

(இ-ள்.) அடிபட்டு ஒடிந்ததும் முறிந்ததும் கிழிந்ததுமான பசுவின் அங்கங்கள் பரிபூர்ணமாய்வளர்ந்து வருகிறவரையில் அடித்த மனிதன் நன்றாக அந்தப்பசுவைப் போஷிக்கக்கடவன். பின்பு அந்தப் பசுவின் ரூபத்தைப் பிராம்மணனுக் கெதிரில் அது தன் அபராதத்தை க்ஷமிக்கவேண்டுமென்கிற புத்தியால் நமஸ்கரித்து சிகிச்சைசெய்வதைவிடக்கடவன். (எ-று.) (உ0)

౨౧పు॥ యద్యసంపూర్ణసర్వాంగో దీనదేహోభవేత్తదా ।
గోఘాతకస్యతస్యార్ధం ప్రాయశ్చిత్తంవినిర్దిశేత్ ॥

(இ-ள்.) விடாமல் வைத்தியம்செய்தபோதிலும் அந்தப்பசுதேகத்தில் புண்முதலியவைகள் ஆறாமல் அங்கபூர்த்தியை அடையாததாய் இளைத்ததேகமுடையதாகிவிட்டால் அப்போது கோஹத்தியைச் செய்தவனுக்குச் சொல்லிய பிராயச்சித்தத்தில் பாதி அதை அடித்தவனுக்கு விதிக்கவேண்டும். (எ-று.) (உக)

౨౨పు॥ అన్యత్రాంకనలక్ష్మభ్యాం వాహనే మోచనే తథా ।
రాత్రౌ సంగోపనార్థంతు నదుష్యేద్రోధబంధయోః ॥

(இ-ள்.) பிதிர்கர்மத்தில் செய்யும் விருஷோத்ஸர்ஜனமென்னும் கிரியையில் (எருதை மந்திரபூர்வகமாகத் தன் பாத்தியதையை யொழித்துப் பிதிர்க்களை உத்தேசித்து விடுதலில்) அக்கினியினாலும் சாணி மஞ்சள் இவைகளாலும் தற்காலத்தில்செய்யும் சில அடையாளங்களையுடைய எருதுகள்தவிர வேறு எருதுகளின்மேல் கோணிமுதலி

யவைகளில் கட்டினசுமைகளை ஏற்றுவதிலும் இறக்குவதிலும் ராத்திரியில் ரக்ஷிப்பதற்காக அவைகளைத் தடுப்பதிலும் கட்டுவதிலும் மனிதன் தோஷத்தை அடைகிறதில்லை. (எ-று.) (௨௨ம்)

இதனால் முத்திரைபோட்டுவிட்ட எருதின்மேல் பாரத்தை ஏற்றுவதும் இறக்குவதும் சாஸ்திரத்தினால் விலக்கப்பட்டவைகள் என்றறிக.

౨౩॥ అతివాహేఽతిదాహేచ నాసికాచ్ఛేదనేతథా ।
నదీపర్వతసంచారే ప్రాయశ్చిత్తంవినిర్దిశేత్ ॥

(இ-ள்.) சுமக்கத்தக்கதைக்காட்டிலும் அதிகமான சுமையை ஏற்றுதல், வியாதி யொழிவதற்கும் சில நிமித்தங்களில் அடையாளம்செய்வதற்கும் அக்கியால் சூடுபோடவேண்டிய அம்சத்தைக்காட்டிலும் அதிகமாகச்சூடுதல், கயிற்றைக்கோர்ப்பதற்காக மூக்கைக்குத்துதல், ஆறு மலைமுதலிய ஸங்கடமானஇடங்களில் சஞ்சரிக்கச்செய்தல் ஆகியஇவைகளைச் செய்தவனுக்குப் பிராயச்சித்தத்தை விதிக்கவேண்டும். (எ-று.) (௨௩ம்)

౨౪॥ అతిదాహేచరేత్పాదం ద్వౌపాదౌవాహనేచరేత్ ।
నాసిక్యేపాదహీనంతు చరేత్సర్వంనిపాతనే॥

(இ-ள்.) அதிகமாகச்சூடுவதில் பிராஜாபத்திய கிருச்சிரத்தில் கால்பாகத்தையும், அதிகபளுவைச் சுமத்துவதில் அரைபாகத்தையும், மூக்கைக்குத்துவதில் முக்கால்பாகத்தையும், மலைமுதலிய இடங்களிலிருந்து விழுந்து மரணமடைவதில் முழுமையும் செய்யவேண்டும். (எ-று.)

இங்கு அதிதாஹம் என்கிறவிடத்தில் அதிதோஹம் (அதிகமாகப் பாலைக்கறப்பது) என்றும் பாடமுண்டு. அந்தப்பக்ஷத்தில் கன்றுக்குப் பாலைமீத்தாமல் முழுதும்கறப்பது அதிதோஹமென்னப்படும். அதைச்செய்தவன் கன்றைக்கொன்றதும், பசுவைக்கொன்றதுமாகிய இரண்டுவிதபாபத்திற்கும் பிராயச்சித்தம் செய்துகொள்ளத்தக்கவனாகிறான். கொம்பைஒடித்தல், அதிகமாகச்சுமையை ஏற்றல், காதைக்குத்துதல், காதைஅறுத்தல், கட்டுதல், அதிகமாகப்பாலைக்கறத்தல் ஆகிய இவைகளைச்செய்தவன் சாந்திராயண கிருச்சிரத்தைச் செய்யக்கடவனென்று ஹாரீதர்சொன்னது இவ்விதங்களான பலநிமித்தங்கள் கூடியதைப்பற்றிய தென்றறிக. (௨௪ம்)

௨௫௯॥ కాష్ఠలోష్టకపాషాణై శ్శస్త్రైర్వోద్ధతాబలాత్ ।
వ్యాపాదయతియోగాంతు తస్యశుద్ధింవినిర్దిశేత్ ॥
௨௬௦॥ చరేత్సాంతపనంకాష్ఠే ప్రాజాపత్యంతులోష్టకే।
తప్తకృచ్ఛ్రంతుపాషాణే శస్త్రేప్యతికృచ్ఛ్రకమ్ ॥

கட்டைமுதலியவைகளால் செய்த பசுவதத்திற்குப்பிராயச்சித்தம். (இ-ள்.) கட்டை, மண்ணாங்கட்டி, கற்கள் அல்லது ஆயுதங்கள் இவைகளைக்கொண்டு மதமடைந்தயாவனொருவன் தன் பலத்தினால் பசுவைக்கொல்லுகிறானோ அவனுக்குப் பிராயச்சித்தத்தைப் பின்வருமாறு விதிக்கவேண்டும். அதாவது கட்டைநிமித்தமானவதத்தில் ஸாந்தபநகிருச்சிரத்தையும், மண்ணாங்கட்டி நிமித்தமானவதத்தில் பிராஜாபத்தியகிருச்சிரத்தையும், கல் நிமித்தமானவதத்தில் தப்தகிருச்சிரத்தையும், ஆயுதநிமித்தமானவதத்தில் அதிகிருச்சிரத்தையும் விதிக்கவேண்டுமென்பதேயாம். (எ-று.)

பிராஜாபத்திய கிருச்சிரம் தப்தகிருச்சிரம் இவைகளின் லக்ஷணம் முன்னமே சொல்லப்பட்டது. ஸாந்தபநகிருச்சிரம் அதிகிருச்சிரம் இவைகளின்லக்ஷணத்தை மேலேசொல்லப்போகிறார் பராசரர். கட்டைமுதலிய நிமித்த வேறுபாட்டினால் பசுவதமென்னுமொருவித தோஷத்திற்குப் பிராயச்சித்த வேறுபாடுசொல்லக்கூடுமோவெனில் சாஸ்திரம் விதித்தவிஷயத்தில் யுக்திவிசாரம் செய்யத்தகாததாகையாலும், ரிஷிகளுடைய வசநங்களுக்கு அர்த்தபேதத்தினால் விரோதம் ஸம்பவித்தஇடத்தில் மாத்திரம் யுக்திகளைக்கொண்டு நியாயவிசாரம் செய்யவேண்டுமாகையாலும், இந்தச்சுலோகத்தில் விதித்தபடியே அநுஷ்டிக்கத்தக்கதென்பது கருத்து. (௨௫௯,௨௬௦)

௨௬௧॥ పంచసాంతపనేగావః ప్రాజాపత్యేతథాత్రయః ।
తప్తకృచ్ఛ్రేభవంత్యష్టౌ అతికృచ్ఛ్రేత్రయోదశ ॥

(இ-ள்.) கீழ்ச்சொன்ன ஸாந்தபநகிருச்சிர பிராயச்சித்தத்தில் ஐந்து பசுக்களும், பிராஜாபத்தியகிருச்சிரத்தில் மூன்றுபசுக்களும், தப்தகிருச்சிரத்தில் எட்டுப்பசுக்களும், அதிகிருச்சிரத்தில் பதின்மூன்றுபசுக்களும், தாநம்செய்யத்தக்கவைகள். (எ-று.) (௨௬௧)

௨௬௨॥ ప్రమాపణేప్రాణభృతాం దద్యాత్తత్ప్రతిరూపకమ్ ।
తస్యానురూపంమూల్యంవా దద్యాదిత్యబ్రవీన్మనుః ॥

(இ-ள்.) பிராணிவதத்தில் அதற்குப் பதிலாக அதேவிதமான மற்றொருபிராணியையாவது அதற்கீடான தனத்தையாவது அந்தப்

பிராணி நஷ்டத்தையடைந்தவனுக்குக் கொடுக்க வேண்டுமென்று மநுசொன்னார். (எ-று.) (உஅ௨)

౨౯పు॥ దహనాత్తువిపద్యేత అనడ్వాన్ యోక్త్రియంత్రితః ।
ఉక్తంపరాశరేణైవ హ్యేకపాదంయథావిధి ॥

(இ-ள்.) வீட்டில் பூட்டாங்கயிற்றில் கட்டப்பட்ட விருஷப மானது வீடு தீப்பற்றியெரிந்தகாரணத்தினால் மரணத்தையடைந் தால் அந்தவிருஷபத்தைக்கட்டினவன் விருத்தபராசரரால் சொல் லப்பட்ட பிராஜாபத்தியகிருச்சிரத்தில் கால்பாகத்தை விதிப்படி செய்யக்கடவன். (எ-று) (உகூ௨)

౩౦పు॥ రోధనంబంధనంచైవ భారఃప్రహరణంతథా ।
దుర్గప్రేరణయోక్త్రంచ నిమిత్తానివధస్యషట్ ॥

(இ-ள்.) மலைமுதலிய ஸங்கடமான இடங்களில் தடைபடுதலா கிய ரோதம், கயிறுமுதலியவைகளால் கட்டுப்படுதலாகிய பந்தம், அ திகமாகப் பளுவையேற்றுதல், கட்டைமுதலியவைகளால் அடித்தல், சுமையையேற்றி மலைமுதலிய ஸங்கடமான இடங்களில் நடத்துதல், பூட்டாங்கயிறுஆகிய இந்த ஆறுநிமித்தங்கள் கோவதத்திற்குச்சொல் லப்பட்டன. (எ-று.) (௩0௨)

౩౧పు॥ బంధపాశేసుగుప్తాంగో మ్రియతేయదిగోపశుః ।
భవనేతస్యపాపీస్యాత్ ప్రాయశ్చిత్తార్ధమర్హతి ॥

(இ-ள்.) கட்டுவதற்குரிய கயிறுகளால் நன்றாகச் சுற்றிக்கொள் ளப்பட்ட சரீரத்தையுடையதாகிப் பசுவானது ஒருவீட்டில் மரண மடைந்ததேயானால் அந்தவீட்டிலிருப்பவன் பாபியாகிறான். கோ வதத்திற்குரிய கிருச்சிரத்தில் பாதியைச் செய்யத்தக்கவனாகிறான்.

கட்டுவதற்குரிய கயிறுகளால் என்பதினால் கட்டத்தகாதகயிறு களால் கட்டப்பட்டு மரணமடைந்தால் பூர்ணமான கிருச்சிரமே செ ய்யத்தக்கதாமென்றறிக. (௩க௨)

౩౨పు॥ నారికేళైశ్చశాణపాశైశ్చాపిమౌంజైశ్చవల్కశృంఖలైః ।
ఏతైస్తుగావోయదిబంధనీయాః బధ్వాపితిష్ఠేత్పరశుంగృహీత్వా ॥

(இ-ள்.) தென்னை நார்க் கயிறுகளாலும், சணல்நூல் கயிறுகளா லும், முஞ்சம்புல்கயிறுகளாலும், பருத்திநூல்கயிறுகளாலும், இரு ம்பு தாம்பிரம் முதலியவைகளால் செய்யப்பட்ட சங்கிலிகளாலும்

பசுக்கள்கட்டத் தகுந்தவைகளன்று.வேறுகயிறுகள் அகப்படாததாப் போதாவதொருகாலத்தில் கீழ்ச்சொன்ன கயிறுகளால் கட்டினவன் அந்தக்கயிறுகளால் வருத்தம் ஸம்பவித்தால் அதை விடுவிப்பதற்காகக் கையில் பரசுவென்னும் கண்டகோடாலியைப் பிடித்துக்கொண்டு ஜாக்கிரதையாக அங்கிருக்கவேண்டும். (எ-று.)

தென்ன நார்க்கயிறுகளா லென்றது மற்று மிங்குச் சொல்லப்படாத சகலவித உறுதியானகயிறுகளுக்கு முபலக்ஷணமென்றறிக.

33 ॥ కుశైఃకాశైశ్చబధ్నీయా ద్గోపశుందక్షిణాముఖమ్ ॥

(இ-ள்.) குசமென்னுந் தர்ப்பைப்புல்கயிறுகளாலும் காசமென்னும் நாணற்புல்கயிறுகளாலும் பசு எருது இவைகளைத் தெற்குமுகமாகநிறுத்திக் கட்டவேண்டும். (எ-று.)

மேடு பள்ளம் முதலிய தோஷங்களில்லாத இடத்தில் காசங்களாலும் குசங்களாலும் பசுவைக்கட்டவேண்டுமென்று வியாஸர் அருளிச்செய்தார். (ருரு)

33பு। పాశలగ్నాగ్నిదగ్ధేషు ప్రాయశ్చిత్తంనవిద్యతే ॥

(இ-ள்.) (வீடுதீப்பட்டெரிகைமுதலியகாலத்தில்) பசுவின்கழுத்தில் கட்டப்பட்டகயிற்றில் பற்றிய தீயினால் பசுவானது கழுத்தில் கொளுத்தப்படும்விஷயத்தில் வீட்டுக்காரனுக்குப் பிராயச்சித்தம் செய்யத்தக்கதன்று. (எ-று.)

தென்ன நார்க்கயிறுமுதலிய கயிறுகளில்பற்றிய தீயானது உடனே அவியாமல் அந்தக்கயிறுகளால் கட்டப்பட்ட பசுவுக்குத் துன்பம் ஸம்பவிக்குமாகையால் அவைகளால் பசுவைக்கட்டக்கூடாதென்றும், குசகாசங்களின் கயிறுகளில் பற்றிய தீயானது உடனே அவிந்து அந்தக்கயிறுகளும் சாம்பலாகிவிடுமாகையால் அதிகதுன்பம் நேரிடாதென்கிற கருத்தினால் அவைகள் கட்டத்தக்கவைகளென்றும் ஒருதடவையே அல்பமாகச்சுடுஉண்டாமாகையால் பிராயச்சித்தமில்லையென்றும் அருளிச்செய்தார் பராசரர். (ருரு௭)

34பு। యదితత్రభవేత్కాష్ఠం ప్రాయశ్చిత్తంకథంభవేత్ ।
జపిత్వాపావనీందేవీం ముచ్యతేతత్రకిల్బిషాత్ ॥

(இ-ள்.) குசகாசங்களென்கிற தர்ப்பை நாணல் புற்களால் செய்யப்பட்ட கயிறுகளில் குசகாசங்களினுடைய வேர்க்கட்டைசேர்ந்திருந்து அதில்பற்றிய தீயினால் அல்பபாகம் பசுவின்கழுத்தில் தோல் கொளுத்தப்பட்டால் அப்படிச்செய்வித்தவன் மிகவும் சுத்தி

யைத் தரவல்லதாகிய காயத்ரியை ஜபித்தால் பாபத்தினின்று விடு படுகிறான். (எ-று.) (ருச ०)

౩౫॥ ప్రేరయన్కూపవాపీషు వృక్షచ్ఛేదేషు పాతయన్ ।
గవాశనేషు విక్రీణం స్తతః ప్రాప్నోతి గోర్వధమ్ ॥

(இ-ள்.) பாழ்ங்கிணறு இடிந்த நடைபாவி இவைகள்உள்ள இடங்களிலும் மரங்களை வெட்டித்தள்ளுமிடத்திலும் பசுவை மேய் வதற்காக ஓட்டினவன் கிணற்றில்விழுதல் அங்குவெட்டப்படுகிற மரங்கள்சாய்ந்து மேலேவிழுதல் ஆகிய இவைகள்நேரிட்டு பசுமரித் தால் பசுவைக்கொன்றவனாகிறான். கோமாம்ஸத்தைப் புசிப்பவர் களான மிலேச்சர்களுக்குப் பசுவை விக்கிரயம்செய்தவனும் கோவத தோஷத்தை அடைகிறான். (எ-று.)

இந்த மூன்றுஇடங்களில் பசுவைஓட்டி அனுப்பினவன் கோவி ரதத்தை அநுஷ்டிக்கத்தக்கவனென்பது கருத்து. (ருடு ०)

౩౬॥ ఆరాధితస్తు యః కశ్చిద్భిన్నవక్షా యదా భవేత్ ।
శ్రవణం హృదయం భిన్నం మగ్నో వా కూపసంకటే ॥

౩౭॥ కూపాదుత్క్రమణే చైవ భగ్నో వా గ్రీవపాదయోః ।
స ఏవ మ్రియతే తత్ర త్రీన్పాదాంస్తు సమాచరేత్ ॥

(இ-ள்.) விருஷோத்ஸர்ஜநம் என்னும்கர்மத்தில் விதிப்படி பூசிக்கப்பட்டு விடப்பட்ட ஒருவிருஷபமானது வேகமாக ஓடுகை யில் மார்பில் நோயை அடைந்தாவது காதும் மார்பும் பிளந்தாவது தண்ணீர்நிறைந்து புல்மூடியகிணற்றில் விழுந்தழுந்தியாவது அந்த க்கிணற்றினின்று கரையேறுகையில் கழுத்து கால் இவைகள் முறி ந்தாவது அந்தவிருஷபம்மரித்தால் விருஷபத்தைவிட்டோட்டின வன் முக்கால்கிருச்சிரத்தை அநுஷ்டிக்கத்தக்கவனாகிறான். (எ-று.)

கீழ்ச்சொன்ன ஸங்கடமான இடங்களில் போகாதபடி விருஷ பத்தைத் தடுக்கவேண்டுமென்றும் தடுக்காமலிருந்தவன் பிராயச்சித் தத்தைச் செய்துகொள்ளவேண்டுமென்றுமறிக. (ருசு ०, ருஎ ०)

౩౮॥ కూపఖాతే తటాబంధే నదీబంధే ప్రపాసు చ ।
పానీయేషు విపన్నానాం ప్రాయశ్చిత్తం న విద్యతే ॥

(இ-ள்.) ஆழமுள்ளகிணற்றிலும், பெருங்குளத்திலும், ஆற்றில் அணைகட்டித்தேக்கியஜலத்திலும், கோடைகாலத்தில் பசுக்களுக்

காக மரம்முதலியவைகளால் கப்பரைபோல் செய்துவைக்கப்பட்ட தண்ணீர்த்தொட்டிகளிலும், தண்ணீர்குடிக்க இழிந்து ஜலத்தில்விழுந்துமரித்த பசுக்கள் விஷயத்தில் அவைகளை யுடையவருக்குப் பிராயச்சித்தம் செய்யவேண்டுவதில்லை. (எ-று.) (௩௮௭)

౩౯॥ కూపఖాతేనదీఖాతే తటాఖాతేతథైవచ ।

అన్యేషుధర్మఖాతేషు ప్రాయశ్చిత్తంనవిద్యతే ॥

(இ-ள்.) இழியத்தக்கவழியுடன் நீளமாகவெட்டிய நடைபாவிகளிலும் ஆற்றில்கட்டிய அணையிலும், பெருங்குளத்திலும் மற்றும் தர்மத்திற்காக கல் பலகைமுதலியவைகளால் செய்துவைத்த தண்ணீர்த்தொட்டிகளிலும், பசு விழுந்துமரித்தால் வெட்டிவைத்ததார்மிகன் பிராயச்சித்தம்செய்துகொள்ளவேண்டுவதில்லை. (எ-று.) (௩௯௭)

౪౦। వేశ్మద్వారేనివాసేషు యోనరః ఖాతుమిచ్ఛతి ।

స్వకార్యగృహఖాతేషు ప్రాయశ్చిత్తంవినిర్దిశేత్ ॥

(இ-ள்.) (தர்மமல்லாதவேறு) சிலகாரியங்களுக்காகத் தன்வீட்டினுடைய வாசற்படியிலாவது விசாலமான கூடம்போன்ற தொழுவத்திலாவது வீட்டிற்குச்சமீபத்திலாவது பள்ளம்வெட்டிவைத்தவனுக்குப் பிராயச்சித்தத்தைவிதிக்கவேண்டும். (எ-று.) (௪0௭)

౪౧। నిశిబంధనరోధేషు సర్పవ్యాఘ్రహతేషుచ ।

అగ్నివిద్యుద్విపన్నాసు ప్రాయశ్చిత్తంనవిద్యతే ॥

(இ-ள்.) இரவில் ரக்ஷிப்பதற்காகப் பசுக்கள் தடுக்கப்பட்டும் கட்டப்பட்டுமிருக்க அந்தப்பசுக்கள் ஸர்ப்பம், புலி, காட்டுத்தீ, இடி இவைகளால் மரணமடைந்தால் அந்தப்பசுக்களை உடையவர்களுக்குப் பிராயச்சித்தம் இல்லை. (எ-று.)

கீழ்ச்சொன்ன ஆபத்துக்களினின்று பசுக்களைரக்ஷிக்கத் தனக்குச்சக்தியிருந்தும் உபேக்ஷித்தவன் பிராஜாபத்தியகிருச்சிரத்தைச் செய்யவேண்டுமென்று வியாஸரும், வேறுகாரியத்தினால் தடைபட்டுச்செய்த உபேக்ஷயாகில் பாதிப்பிராயச்சித்தமே பசுவையுடையவனால் செய்யத்தக்கதாமென்று விஷ்ணுவும் சொன்னார்கள். (௪க௭)

౪౨॥ గ్రామఘాతేశరౌఘేణ వేశ్మభంగాన్నిపాతనే ।

అతివృష్టిహతానాంచ ప్రాయశ్చిత్తంనవిద్యతే ॥

(இ-ள்.) கிராமத்தில் யுத்தம்நடக்கையில் சத்துருசேனைகளால் உண்டான பாணக்கூட்டத்தினாலும், வீடு இடிந்துவிழுதலினாலும்,

பெருமழையினாலும் அடிபட்டு மரிக்கின்ற பசுக்கள்விஷயத்தில் அவைகளையுடையவனுக்குப் பிராயச்சித்தம் விதிக்கவேண்டுவதில்லை. (எ-று.) (௪௨௰)

౪౩॥ సంగ్రామేనిహతాయేచ యేదగ్ధావేశ్మకేషుచ।
దావాగ్నిగ్రామఘాతేషు ప్రాయశ్చిత్తంనవిద్యతే॥

(இ-ள்.) யுத்தத்தில் அடிக்கப்பட்டு மரித்தபசுக்கள் எவைகளோ, சேனைகளிறங்கும் பாளயத்தில் புல்குடிசையில் கட்டப்பட்டு அங்குச்சத்துருக்களால் கொளுத்தப்பட்டபசுக்கள் எவைகளோ, காட்டுத்தீயினால் சமீபத்திலிருக்கும் கிராமம் எரிகையில் அங்கு அகப்பட்டுக்கொண்டு மரித்த பசுக்கள் எவைகளோ அந்தப்பசுக்கள்விஷயத்தில் பசுக்களையுடையவர்களுக்குப் பிராயச்சித்தம் செய்யத்தக்கதில்லை. (எ-று.) (௪௩௰)

౪౪॥ యంత్రితాగాశ్చికిత్సార్థం మూఢగర్భవిమోచనే।
యత్నేకృతేవిపద్యేత ప్రాయశ్చిత్తంనవిద్యతే॥

(இ-ள்.) காயத்தைஆற்றுவது, நோய்க்குச்சுடுவதுமுதலிய சிகிச்சைசெய்வதற்காகக் கட்டப்பட்டசமயத்திலும் கன்றுபோடமாட்டாமல் வருந்துகையில் அந்தக்கர்ப்பத்தை வெளிப்படுத்தவேண்டிச்செய்த பிரயத்நத்திலும் ஒருபசுமரித்தால் அதற்காகக் கட்டினவனுக்காவது பிரயத்நம்செய்தவனுக்காவது பிராயச்சித்தம்இல்லை. (எ-று.)

எருதும், பசுவும், பிராம்மணனும், நோயால்வருந்துகையில் ஒரு புருஷன் எருதை அல்லது பசுவை நோயுள்ளவிடத்தில் சூடுதல் ஔஷதங்கொடுத்தல் நரம்புகளைச்சரிசெய்தல் பசுவின்வெளிப்படாத கர்ப்பத்தைக் கையைக்கொடுத்துஇழுத்தல் இவைகளைச்செய்கையில் எருதாவது பசுவாவது மரித்தாலும் பிராம்மணர்களுக்கு ஆபத்திற்குத்தக்க வயித்தியங்களைச்செய்யுந்தருணத்தில் அவர்கள்மரித்தாலும் சிகிச்சைசெய்தவன் பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டுவதில்லை என்று ஸம்வர்த்தர் யாக்கியவல்கியர் அங்கிரசு இவர்கள்சொன்னார்கள். (எ-று.) (௪௪௰)

౪౫॥ వ్యాపన్నానాంబహూనాంచ బంధనేరోధనేపివా।
భిషఙ్మిథ్యాప్రచారేణ ప్రాయశ్చిత్తంవినిర్దిశేత్॥

(இ-ள்.) பந்தநத்தினாலாவது தடுத்து ஓரிடத்தில் அடைப்பதினாலாவது விரோதமான வயித்தியங்களைச்செய்வதினாலாவது ஓரே

காலத்தில் மரித்த அநேகபசுக்கள்விஷயத்தில் முன்சொன்னபிராய ச்சித்தத்தை (இரட்டிப்பாக) ச்செய்ய விதிக்கவேண்டும். (எ-று.)

இதனால் ஒருவன்செய்த ஒருகிரியையினால் பல பசுக்கள்மரித்தால் மரணநிமித்தமான கிரியை ஒன்றாகையால் ஓரேபிராயச்சித்தம் செய்யத்தக்கதா? மரித்தபசுக்கள் வெகுவாகையால் பசுக்களின்கணக்கை அநுஸரித்துத் தனித்தனியே பிராயச்சித்தம் செய்யத்தக்கதா? என்கிற சங்கைக்கு ஸமாதாநம் சொல்லப்பட்டது. ஒரு கிரியையினால் வெகுபசுக்கள்மரித்தால் இரட்டிப்புப் பிராயச்சித்தம் செய்யத்தக்கதாமென்று ஸம்வர்த்தர் ஆபஸ்தம்பர் இவர்கள்சொன்னார்கள்.

౪౬౫॥ గోవృషాణాంవిపత్తౌచ యావంతఃప్రేక్షకాజనాః ।
అనివారయతాంతేషాం సర్వేషాంపాతకంభవేత్ ॥

(இ-ள்.) சேற்றிலழுந்துவது முதலிய ஆபத்தானது பசு எருது இவைகளுக்கு நேரிடுகையில் பார்த்துக்கொண்டிருந்து அந்தத்தருணத்தில் தம்தம் சக்திக்கிடாக அவைகளின் ஆபத்தைப்போக்காதவர்களான ஜநங்களனைவருக்கும் பாபமுண்டு. (எ-று.)

ஒருபசுவை அல்லது ஒருபிராணியைக்கொன்றவன், அதற்குரிய மந்திரத்தை உபதேசித்தவன், அதின்விதிகளை நன்றாகத்தெரிவித்தவன், வதத்தில் உற்சாகத்தை உண்டுபண்ணினவன், வதத்திற்குச் சிலவிஷயத்தில் ஸகாயமாயிருந்தவன், வதத்திற்குத்தக்கவழிகளைக் காட்டினவன், வதவிஷயத்தில் முக்கியமான ஆதரவாயிருந்தவன், வதம்செய்ய ஆயுதத்தைக்கொடுத்தவன், வதத்தொழிலைச் செய்பவர்களுக்கு அன்னமிட்டவன், வதத்தினின்று மீட்கச்சக்தியிருக்கையில் உபேக்ஷைசெய்தவன், இது கொல்லத்தக்கதென்று ஒருபிராணி விஷயமாகப் பலதோஷங்களைச் சொன்னவன், ஒருவன்செய்த வதத்தை ஆமோதித்தவன் ஆகிய தகாதகாரியங்களைச் செய்தவர்களான இவர்களனைவரும் பிராயச்சித்தம் செய்துகொள்ளத்தக்கவர்களென்று பைடீநஸிசொன்னார். (சகூ௨)

౪౭౫॥ ఏకోహతోయైర్బహుభిస్సమేతై ర్నజ్ఞాయతేయస్యమృతోఽభి
ఘాతాత్। దిష్టేనతేషాముపలభ్యహంతా నివర్తనీయోనృప
సన్నియుక్తైః ॥

(இ-ள்.) கும்பலாகக்கூடி அடிக்கிற வெகுபேர்களால் ஒருபசு அல்லது விருஷபம் அடிக்கப்பட்டு மரணமடைந்தால் எல்லாரும் பசுவை அடித்திருந்தாலும் பிராணனைப்போக்கத்தக்க அடியானது

இவனுடையது என்று கூட்டத்தில் பிரித்தறியப்படாமையால் அரசனு லேவப்பட்டவர்கள் சந்தேகவிஷயமான ஒருவனை நெருப்பில் தள்ளி அவனை அக்நி தகிக்காமலிருந்தால் அவன்பாபத்தைச்செய்யாதவனென்றும் தகித்தால் பாபத்தைச்செய்தவனென்றும் அறிவதாகிய இதுமுதலிய சில தெய்வஸாக்ஷியத்தால் கொன்றவனை நிச்சயித்து அடித்தவர்கள் கும்பலினின்று அவனைப்பிரித்துப் பின்பு விதிப்படி அவனுக்குப் பிராயச்சித்தத்தைச்செய்விக்கக்கடவர்கள்.(சஎ௯)

౪౮ ॥ ఏకాచేద్బహుభిఃకాచిద్దైవాద్వ్యాపాదితాయది ।
పాదపాదంతుహత్యాయాం చరేయుస్తేపృథక్పృథక్ ॥

(இ-ள்.) அநேகபுருஷர்களால் ஒருபசுவானது அடிக்கப்பட்டு மரித்தால்அடித்தவர்கள் தனித்தனியே கோவத பிராயச்சித்தத்தில் கால் பாகத்தை அநுஷ்டிக்கக் கடவர்கள். (எ-று.)

கீழ்ச்சுலோகத்தில் பலபேர்கூடி அடித்துப் பசுவைக்கொன்ருல் அதில் முக்கியனுனபாபிக்குப் பிராயச்சித்தமும் இந்தச்சுலோகத்தில் மற்றுள்ளவர்களுக்குப் பிராயச்சித்தமும் சொல்லப்பட்டனவென்றறிக. (சஅ௯)

౪౯ ॥ హతేషురుధిరందృశ్యం వ్యాధిగ్రస్తఃకృశోభవేత్ ।
లాలాభవతిదంతేషు ఏవమన్వేషణంభవేత్ ॥

(இ-ள்.) ரக்தம் வடிந்தும் உடம்பு இளைத்தும் சொள்ளுபெருகியும் மரணமடைந்தபசுக்களுக்குக் கிரமமாக அடித்தது, நோயால் பீடிக்கப்பட்டது, பாம்புகடித்ததுஆகிய இவைகளை அவைகளின் மரணத்துக்குக் காரணங்களாக நிச்சயிக்கவேண்டும். (எ-று.) (சகூ௯)

౫౦ ॥ గ్రాసార్థంచోదితోవాపి అధ్వానంచైవగచ్ఛతి ।

(இ-ள்.) அடிக்கப்பட்ட எந்தப்பசுவானது ஒருவனுல் ஏவப்பட்டபின் புல் மேய்வதற்கு நடந்துபோகிறதோ (அந்தப்பசுவுக்கு உடம்பினுள் சில அவயவங்கள் ஒடிந்திருக்கின்றனவென்று அறிந்து அதற்குரிய பிராயச்சித்தம் அநுஷ்டிக்கத்தக்கது) (எ-று.) (௫0)

౫౧ ॥ మనునాచైవమేకేన సర్వశాస్త్రాణిజానతా ।
ప్రాయశ్చిత్తంతుతేనోక్తం గోఘ్నశ్చాంద్రాయణంచరేత్ ॥

(இ-ள்.) க்லிதர்மங்களையும் அவைகளைச்சொல்லுகிற வேதசாஸ்திரங்களையும்அறிந்திருக்கிற என்னுல் கோவத பிராயச்சித்தம் சொல்

லப்பட்டபடியே சகலசாஸ்திரங்களையுமறிந்தவரும் முனிசிரேஷ்டரு மான அந்த மநுவாலும் கோவதத்தைச்செய்தவன் சாந்திராயண விரதத்தை அநுஷ்டிக்கக்கடவனென்று பிராயச்சித்தம் சொல்லப்பட்டது. (எ-று.)

இந்த மநு விதித்த பிராயச்சித்தமானது பராசரர் கீழே எடுத்துக் கூறுத நிமித்தங்களில் நேரிட்டதும் சில அடையாளங்களைக்கொண்டு நிச்சயிக்கக்கூடாமலிருந்து எதனுல் இந்தவதம் நேரிட்டதோ வென்று சங்கிக்கத்தக்கதுமான கோவதத்தைப்பற்றியதென்று அறியத்தக்கது. (ருக)

౫౨ ॥ కేశానాంరక్షణార్థాయ ద్విగుణంవ్రతమాచరేత్ ।
ద్విగుణేవ్రతఆదిష్టే దక్షిణాద్విగుణాభవేత్ ॥

(இ-ள்.) இந்த அத்தியாயம் பதினுன்காவது சுலோகத்தில் எடுத்துரைக்கப்பட்ட க்ஷெளரத்தைத்தலையில் குடுமியைரக்ஷித்துக்கொள்ளுவதற்காகச் செய்துகொள்ளாதவன் கோவதவிரதத்தை இரட்டிப்பு அதிகமாகச்செய்யக்கடவன். இரட்டித்த விரதம் உபதேசிக்கப்பட்ட இடத்தில் தக்ஷிணையும் இரண்டத்தனையாகும். (எ-று.) (ருஉ)

౫౩ ॥ రాజావారాజపుత్రోవా బ్రాహ్మణోవాబహుశ్రుతః ।
అకృత్వావపనంతస్య ప్రాయశ్చిత్తంవినిర్దిశేత్ ॥

ராஜாக்களைப்பற்றியக்ஷெளரவிலக்கு. (இ-ள்.) ராஜா, ராஜகுமாரன், வேதவேதாங்கங்களைக் கற்றுணர்ந்த பிராம்மணன் ஆகிய இவர்களுக்கு ஒருவன் கோவத பிராயச்சித்தத்தை க்ஷெளரத்தைச் செய்விக்காமல் விதிக்கக்கடவன். (எ-று.)

க்ஷெளரம், இரட்டிப்புதக்ஷிணையுடன் கூடின இரட்டிப்புப்பிராயச்சித்தம் இவைகளில் ஒன்றைக் கோவதத்தில் அநுஷ்டிக்க வேண்டுமென்று சங்கரும், அப்படிக்கில்லாமல் க்ஷெளரமின்றிச் சாதாரணமாகச்செய்த பிராயச்சித்தம் பாபத்தைப்போக்காதென்றும் க்ஷெளரம்செய்வித்துக்கொள்ளாமல் இரட்டிப்பாகப் பிராயச்சித்தத்தையும் அனுஷ்டிக்காதவனுக்குச் சாதாரணபிராயச்சித்தத்தைவிதித்தவனும் நரகத்தை அடைகிருனென்றும் பாபங்கள் தலைமயிரைப்பற்றிக்கிடக்குமாகையால் க்ஷெளரம் விதிக்கப்படுகிறதென்றும் ஆபஸ்தம்பரும் சொன்னுர்கள். (ருஙு)

౫౪ ॥ సర్వాన్కేశాన్సముద్ధృత్య ఛేదయేదంగుళద్వయమ్ ।
ఏవంనారీకుమారీణాం శిరసోముండనంస్మృతమ్ ॥

ஸ்திரீகளைப்பற்றியக்ஷௌர விசேஷம். (இ - ள்.) பதியுடன் கூடியிருக்கும் ஸுமங்கலிகள், கந்நிகைகள் இவர்களுக்குக் கோவத பிராயச்சித்தத்தில் தலைமயிர்களெல்லாவற்றையும் நன்றாகத்தூக்கிக் கட்டி நுனியில் இரண்டுவிரற்கடை கத்திரிக்கவேண்டும். இதுவே சுமங்கலிக்கும் கந்நிகைக்கும் க்ஷௌரமாகும். (எ-று.)

நாரி என்னும் பதமே ஸ்திரீகளைச்சொல்லுவதாயிருக்க இங்கு நாரி என்றும் குமாரியென்று மிரண்டுபதங்களால் ஸ்திரீகளைச்சொன்னபடியால் நாரியென்பவள் சுமங்கலியென்றும், குமாரி என்பவள் விவாகமாகாத கந்நிகை என்றும் பொருள்கொள்ளவேண்டுமென்றும் இதனால் விதவை விஷயத்தில் க்ஷௌரத்தைப்பற்றி விவாதமில்லை என்பது பெறப்பட்டதென்றும் மாதவாசாரியர் உரைத்தார். (௫௪)

౫౫ ॥ నస్త్రియాః కేశవపనం నదూరేశయనాసనమ్ ।
నచగోష్ఠేవసేద్రాత్రౌ నదివాగాఅనువ్రజేత్ ॥

౫౬ ॥ నదీషుసంగమేచైవ అరణ్యేషువిశేషతః ।
నస్త్రీణామజినంవాసో వ్రతమేవసమాచరేత్ ॥

(இ-ள்.) கோவதப்பிராயச்சித்தத்தில் ஸ்திரீக்குக்ஷௌரமில்லை அதாவது கீழ்ச்சுலோகத்தில் சொல்லியபடி நுனிமயிரைக் கத்திரிப்பதன்றிப் புருஷனுக்குப்போல் முழுதும்க்ஷௌரமில்லை. வெகுதூரத்தில்சயநமும் உட்கார்தலும் ஸ்திரீக்கு இல்லை அதாவதுபசுவைப் பின்றொடர்ந்துசெல்லுகையாகிற விரதத்தில் ஊருக்குவெளியில் பசு சயநித்தபோதும் ஒருவிதமாகப் பசு உட்கார்ந்தபோதும் விரதத்தை அநுஷ்டிப்பவள் சயநிப்பதையும் உட்காருவதையும் செய்யவேண்டுமென்கிற விதியில்லை. ராத்திரியில் பசுவின்தொழுவத்தில்சயநித்தல், பகலில் பசுக்களைப் பின்றொடர்ந்துசெல்லுதல், ஆறுகளிலும் ஆறுகள் சேருமிடத்திலும் காட்டிலும் பசுவுடன் வசித்தல், ஈரத்தோலை வஸ்திரமாகத் தரித்தல் ஆகிய இவைகளை விட்டு ஸ்திரீகள் விரதத்தைமாத்திரம் அநுஷ்டிக்கவேண்டும். (எ-று.) (௫௫, ௫௬)

౫౭ ॥ కుర్యాత్త్రిషవణస్నానం సురాణామర్చనంతథా ।
బంధుమధ్యేవ్రతంతాసాం కృచ్ఛ్రంచాంద్రాయణాదికమ్ ॥

(இ-ள்.) கோவதத்தில் ஸ்திரீ மூன்றுகாலத்திலும் ஸ்நாநத்தையும் தேவதா பூஜையையும் சாந்திராயணம்முதலிய கிருச்சிரத்தையும் செய்யக்கடவள். ஸ்திரீகளுக்கு விரதாநுஷ்டாநம் பந்துக்கள் நடுவில் செய்யத்தக்கதாம். (எ. று.)

புருஷன் ஜநமில்லாதவிடத்தில்விரதத்தைஅநுஷ்டிப்பதுபோல் ஸ்திரீகள் அநுஷ்டிக்கத்தகாது என்பது கருத்து. (ருள)

౫౭॥ గృహేషుసతతంతిష్ఠే చ్ఛుచిర్నియమమాచరేత్ ॥

(இ-ள்.) ஸ்திரீயானவள் எப்பொழுதும் தன்வீட்டில் பரிசுத்தையாயிருந்து கோவிரதத்தை அநுஷ்டிக்கக்கடவள்.(எ-று) (ருள௨)

౫౮॥ ఇహయోగోవధంకృత్వా ప్రచ్ఛాదయితుమిచ్ఛతి ।
సయాతినరకంఘోరం కాలసూత్రమసంశయమ్ ॥

౫౯॥ విముక్తోనరకాదస్మా న్మర్త్యేలోకేషుజాయతే ।
క్లీబోదుఃఖీచకుష్ఠీచ సప్తజన్మానివైనరః ॥

பிராயச்சித்தம் செய்யாதபக்ஷத்தில் தோஷமுண்டென்பது.

(இ-ள்.)இந்தலோகத்தில் எவன் கோவதத்தைச்செய்து அதை அறிந்தவர்களுக்கு லஞ்சம் கொடுத்து மறைக்க இச்சிக்கிருனே அவன் கால் சூத்திரமென்னும் கோரமாகிய நரகத்தை நிச்சயமாய்அடைகிருன். தக்க காலம் கடந்தபின் அதினின்று விடுபட்டு மநுஷியலோகத்தில் ஏழு ஜந்மங்களில் இடைவிடாமல் நபும்ஸகனும் துக்கமுடையவனும் குஷ்டநோயுடையவனுமாக ஜநிக்கிருன்.(எ-று.)

கோவதத்தைச்செய்தவர்கள் கீழே இரண்டு அத்தியாயங்களில் சொல்லப்பட்ட பிராயச்சித்தத்தை அநுஷ்டிக்காவிட்டால் அவர்கள் மரித்தபின் மஹா நரக துக்கத்தை அநுபவித்துப் பின்பு இந்த லோகத்திலும் நரக துக்கம்போன்ற துக்கத்தைத் தருவதாகிய பிறப்பையும் அடைகிருர்களென்றறிக. (ருஅ௨,ருகூ௨)

౬౦॥ తస్మాత్ప్రకాశయేత్పాపం నిదిష్టంవ్రతమాచరేత్ ।
స్త్రీబాలనృపగోవిప్రే ష్వతికోపంవిసర్జయేత్ ॥

(இ-ள்.) பாபத்தைச்செய்து அதை மறைப்பதினுல் அநர்த்தம் விளையுமாகையால் பாபஞ்செய்தவன் தன் பாபத்தைப் பெரியோர்கள் முன் வெளியிட்டு அதற்கு அவர்கள்சொல்லும் பிராயச்சித்தத்தை அநுஷ்டிக்கக்கடவன். பின்பு இவ்வித பாபம் தனக்கு இனிமேல் நேரிடாமைக்காக ஸ்திரீ, சிறுவன், அரசன், பசு, பிராம்மணன் இவர்கள் விஷயத்தில் அதிக கோபத்தைச் செய்யாமல் விடக்கடவன். (எ-று.) (சூ0௨)

ஆருவது அத்தியாயம் முற்றிற்று.

ஏழாவது அத்தியாயம்.

அவதாரிகை. கீழே ஐந்து ஆறு இந்தஅத்தியாயங்களில் உபபாதகமான கோவதத்திற்குப் பிராயச்சித்தமானது ஸாமாந்ய விதியாலும் விசேஷவிதியாலும் சொல்லப்பட்டது. இந்த ஏழாவது அத்தியாயத்தில் புணரத்தகாத மாதரைப்புணருவதாகிய உபபாதகத்திற்குப் பிராயச்சித்தம் சொல்லப்படுகிறது. முதல்சுலோகத்தில் நான்கு வர்ணத்தாருக்கும் புணரத்தகாத மாதரைப்புணருவதின் பிராயச்சித்தத்தைச் சொல்லுகிறேனென்று பிரதிக்ஞைசெய்கிறார் ஸ்ரீபராசரர்.

౧ ॥ చాతుర్వర్ణ్యేషుసర్వేషు హితంవక్ష్యామినిష్కృతిమ్ ।
అగమ్యాగమనేచైవశుద్ధ్యై చాంద్రాయణంచరేత్ ॥

(இ-ள்.) அநுலோம பிரதிலோம வர்ணங்களுட்பட ஸகலவிதமான பிரமக்ஷத்திரிய வைசிய சூத்திரர்களென்னும் நான்கு வித வர்ணத்தாருக்கும் இதமான பிராயச்சித்தத்தைச்சொல்லுகிறேன். புணரத்தகாத ஸ்திரீயைப்புணர்ந்தவன் சுத்தியைப்பெறுவதற்காகச் சாந்திராயணகிருச்சிரத்தைச் செய்யக்கடவன் என்கிறார் பராசரர். (எ-று)

அநர்த்தமானநரகத்தை ஒழிப்பதாகையால் பிராயச்சித்தத்தை இதம் என்கிறார். சாஸ்திரவிதிப்படி ருதுகாலத்தில் பதியினால் புணரத்தக்கவளான தன்னுடையமனைவியைவிட்டு மற்றஸ்திரீகளைப்புணருவதாகிய விலக்கிய கர்மத்தைச்செய்தவன் மஹாபாபியாகையால் அவனைப்பற்றிப் பிராயச்சித்தம்இங்குவிதிக்கப்படுகிறதென்றறிக. (க)

౨ ॥ ఏకైకంహ్రాసయేద్గ్రాసంకృష్ణేశుక్లేచవర్ధయేత్ ।
అమావాస్యాంనభుంజీత హ్యేషచాంద్రాయణోవిధిః ॥

சாந்திராயண கிருச்சிரத்தின் லக்ஷணம். (இ-ள்.) கிருஷ்ணபக்ஷத்தில் பிரதமைதொடங்கிப் புசிக்கையில் நிதம் ஒவ்வொரு கவளத்தைக் குறைத்து அமாவாஸ்யை யன்றைக்குப் புசியாமலிருந்து சுக்லபக்ஷத்தில் பிரதமைதொடங்கித் நிதம் ஒவ்வொரு கவளத்தை விருத்திசெய்து புசிப்பதுவே சாந்திராயணகிருச்சிரத்தின் விதியாம். (எ-று.)

யவமத்தியமென்றும்பிபீலிகாமத்தியமென்றும் சாந்திராயண கிருச்சிர மிருவகைப்படும். அவற்றில் யவமென்பது அடியிலும் கடையிலும் சிறுத்து நடுவில் பருத்திருக்குமொருவிததானியம். அதினுடைய

நடுப்பாகத்தைப்போன்ற நடுப்பாகத்தையுடையது யவமத்தியமாம். அதாவது சுக்கிலபக்ஷபிரதமைதொடங்கித் திநம் ஒவ்வொருகவளம் விழுக்காடு போஜநத்தில்வளர்ந்துவந்து பூர்ணிமையில் பதினைந்துகவளமாகிக்கிருஷ்ணபக்ஷ பிரதமைமுதல் திநம் ஒவ்வொருகவளமாகப் போஜநத்தில்குறைந்துவந்து அமாவாஸ்யையில் கவளம் சூனியமாகிறதாகையால் நடுவில் பருத்து அடியிலும் நுனியிலும் சிறுத்து யவமத்தியமென்னப்படுகிற இது ஒருவித சாந்திராயணமாகும். பிபீலிகை என்பது எறும்பு. அதின்மத்தியபாகம் சிறுத்துத் தலையும் கீழ்ப்பாகமும் பருத்திருக்குமாகையால் அதுபோல் கிருஷ்ணபக்ஷ பிரதமைதொடங்கிக்கவளத்தை ஒவ்வொன்றாகக் குறைத்துவந்து அமாவாஸ்யையில் கவளமேயில்லாமல் சுக்கிலபக்ஷபிரதமைதொடங்கித் திநம் ஒவ்வொருகவளமாக விருத்தியாக்கிவரப் பூர்ணிமையில் கவள பூர்த்தியாகையால் பிபீலிகையின் மத்தியம்போன்ற சிறுத்த மத்தியபாகத்தையுடையதாகிய இது வேறொருவித சாந்திராயணமாகும். இவைகளில் பிபீலிகாமத்திய சாந்திராயண விரதத்தை இங்கு பராசரர் அருளிச்செய்தார். இரண்டுவித சாந்திராயணத்தையும் இவ்விதமாகவே வசிஷ்டரும்சொன்னார். இந்தச்சாந்திராயணவிரதத்தை அநுஷ்டிப்பவன் இதற்கு அங்கமாக மூன்றுகாலத்திலும் ஸ்நாநத்தைச் செய்யக்கடவனென்று மநுசொன்னார்.

பின்னும் ரிஷி சாந்திராயணமென்றும், சிசுசாந்திராயணமென்றும், யதிசாந்திராயணமென்றும் இந்த விரதம் மூவகைப்படுமென்றும், திநம் மூன்று கவளங்கள் விழுக்காடு ஒருமாஸம் புசிப்பது ரிஷி சாந்திராயணமென்றும், காலையில் நான்குகவளங்களும், ஸாயங்காலம் நான்கு கவளங்களுமாக ஒருமாஸம்புசிப்பது சிசுசாந்திராயணமென்றும், தினந்தோறும் உச்சிகாலத்தில் எட்டுக்கவளங்களை ஒருமாஸம் புசிப்பது யதிசாந்திராயணமென்றும் யமமுனிவர் சொன்னார். பிபீலிகாமத்தியமென்றும், யவமத்தியமென்றும், யதிசாந்திராயணமென்றும், சிசுசாந்திராயணமென்றும் மூன்றுகவளங்களைப்புசிப்பது ஸௌமியசாந்திராயணமென்றும் சாந்திராயணம் ஐந்துவகைப்படுமென்று விஷ்ணுகூறினார். இதில்சொல்லவேண்டிய மந்திரங்களைச் சாந்திராயண பிரயோகத்திலும் கௌதம தர்மத்திலும் கண்டுகொள்க. (உ)

3 । కుక్కుటాండప్రమాణంతు గ్రాసం వై పరికల్పయేత్ ।
అన్యథా భావదోషేణ నధర్మోఽనచశుధ్యతి ॥

(இ-ள்.) சாந்திராயணவிரதத்தை அநுஷ்டிப்பவன் குக்குடாண்டத்தளவுடையதான (கோழிமுட்டையளவுடையதான) கவளத்தைச்செய்துகொள்ளக்கடவன். இந்தஅளவைக்காட்டிலும் அதிகஅளவுடைய கவளத்தைப்புசிப்பதில் தோஷமாகையால் அதனால் சந்திரலோகத்தை அடைவதாகிய தர்மமானது இந்தவிரதத்தில் உண்டாகிறதில்லை. விரதத்தை அநுஷ்டிப்பவனும் சுத்தியை அடைகிறதில்லை. (எ-று.)

சாந்திராயணவிரதத்திற்குப்புண்ணியலோகத்தை அடைவிப்பதும் நரகத்தையொழிப்பதுமான இரண்டுவிதபலனுண்டென்றுசொல்லப்பட்டது. மனதினாலும் வாக்கினாலும் செய்கையினாலும் பாபத்தைச்செய்த இருபிறப்பாளன் விதிப்படி கவளத்தைப் புசிப்பவனாகி ஆறுமாஸம் சாந்திராயணத்தை அநுஷ்டித்தானானால் அவன் பாபத்தினின்று விடப்பட்டுச் சந்திரலோகத்தை அடைகிறானென்று யமமுனிவர்சொன்னார். (௩)

౪ ॥ ప్రాయశ్చిత్తే తతశ్చీర్ణే కుర్యాద్బ్రాహ్మణభోజనమ్ ।
గోద్వయం వస్త్రయుగ్మం చ దద్యాద్విప్రేషు దక్షిణామ్ ॥

(இ-ள்.) சாந்திராயணமென்னும் பிராயச்சித்தமானது அநுஷ்டித்து முடிந்தவளவில் சக்திக்கீடாகப் பிராம்மணபோஜநத்தைச் செய்வித்து இரண்டுபசுவையும் இரண்டுவஸ்திரத்தையும் பிராம்மணர்கள்விஷயத்தில் தக்ஷிணையாகக் கொடுக்கவேண்டும். (எ-று.) (௪)

౫ ॥ చండాలీం వా శ్వపాకీం వా అనుగచ్ఛతి యో ద్విజః ।
త్రిరాత్రముపవాసిత్వా విప్రాణామనుశాసనాత్ ॥

౬ ॥ సశిఖం వపనం కృత్వా ప్రాజాపత్యద్వయం చరేత్ ।
గోద్వయం దక్షిణాం దద్యాచ్ఛుద్ధిం పారాశరోఽబ్రవీత్ ॥

சண்டாளஸ்திரீமுதலியவர்களைப் புணர்தலின்பிராயச்சித்தம்.

(இ-ள்.) சண்டாள ஸ்திரீயையாகிலும் சுவபாகஸ்திரீயை யாகிலும் புணர்ந்த பிராம்மணன் பிராம்மணர்களுடைய அநுமதியினால் மூன்றுநாள் உபவாஸமிருந்து குடுமியுட்பட க்ஷௌரம்செய்வித்துக்கொண்டு இரண்டுபிராஜாபத்திய கிருச்சிரங்களை அநுஷ்டித்து விருஷபத்துடன் பசுவைத் தக்ஷிணையாகக் கொடுத்தால்சுத்தனாகிறானென்று விருத்தபராசரர் கூறினார். (எ-று.)

பிராம்மணஸ்திரீயினிடத்தில் சூத்திரனுக்குப்பிறந்தவளும், ஜாதி, ஆச்சிரமம், தொழில், இவைகளால் உயர்ந்திருந்து தாழ்ந்தஜாதி ஆச்சிரமம் தொழில் இவைகளைப்பற்றுவதால் ஆரூடபதிதன் என்று சொல்லப்படுகிறவனுக்குப் பிறந்தவளும், சண்டாளியாகி இவள்ஸந்ததியில் பிறந்தவளும் சண்டாளஸ்திரீஎன்னப்படுவாள். க்ஷத்திரியஸ்திரீயினிடத்தில் சூத்திரனுக்குப்பிறந்த க்ஷத்தாவுக்கும் சூத்திரஸ்திரீயினிடத்தில் க்ஷத்திரியனுக்குப்பிறந்த உக்கிரா என்பவளுக்கும் பிறந்த பெண் சுவபாகிஎன்னப்படுவாள். (ரு,சு.)

௭ ॥ క్షత్రియోవాథ వైశ్యోవా చండాలీంగచ్ఛతోయది ।
ప్రాజాపత్యద్వయంకుర్యా ద్దద్యాద్గోమిథునద్వయమ్ ॥

(இ-ள்.) க்ஷத்திரியனாவது வைசியனாவது சண்டாளஸ்திரீயைப் புணர்ந்தால் இரண்டுபிராஜாபத்தியகிருச்சிரத்தைச்செய்து இரண்டு விருஷபங்களுடன் இரண்டுபசுக்களைத் தக்ஷிணையாகக் கொடுக்கக்கடவர்கள். (எ-று.) (எ)

அ ॥ శ్వపాకీంవాథచండాలీం శూద్రోవాయదిగచ్ఛతి ।
ప్రాజాపత్యంచరేత్కృచ్ఛ్రం చతుర్గోమిథునందదత్ ॥

(இ-ள்.) சக்கிலிச்சியை அல்லது சண்டாளஸ்திரீயைப்புணர்ந்த சூத்திரன் ஒரு பிராஜாபத்தியகிருச்சிரத்தைச் செய்து நான்குவிருஷபங்களுடன் நான்கு பசுக்களைத் தக்ஷிணையாகக் கொடுக்கக்கடவன். (எ-று.)

சண்டாளஸ்திரீயைப் புணருவதைப்பற்றி மற்ற ஸ்மிருதிகளில் சொல்லிய பிராயச்சித்தங்களில் பராசரர்விதித்த பிராயச்சித்தத்தைக்காட்டிலும் சில அதிகமானவைகளாயும், சில குறைந்தவைகளாயும் காணப்படுகின்றன. அவைகளில் தாயுடன் பிறந்தவள், தகப்பனுடன்பிறந்தவள், மருமகள், உடன்பிறந்தவளுடைய பெண், ஸகோதரி, சண்டாளஸ்திரீ ஆகிய இவர்களைப்புணர்ந்தால் தப்தகிருச்சிரம் செய்யத்தக்கதென்றுஸமந்து சொன்னது இவர்களை அறியாமல் புணர்ந்து சுக்கிலத்தைவிடுவதற்குமுன் புணர்ச்சியினின்றுமொழிந்தவனைப்பற்றியதென்றும், மஹாபாதகம்செய்தவன், சண்டாளன், இவர்களுடையஸ்திரீகளைப்புணர்ந்தும் இவர்களிடத்தில் தாநம் வாங்கியும் இருப்பவன் மாஸோபவாஸத்தையாவது சாந்திராயணகிருச்சிரத்தையாவது செய்யக்கடவனென்று அங்கிரசுசொன்னதில் அறிந்து சண்டாளஸ்திரீயைப்புணர்ந்து சுக்கிலத்தை ஒழிப்பதற்கு

முன்புணருவதைத்தவிர்ந்தவனான அசக்தன் சாந்திராயணத்தையும் சக்தியுள்ளவன் மாஸோபவாஸத்தையும் செய்யவேண்டுமென்றும் வியவஸ்தை செய்யத்தக்கதென்றும் அறிக. விருஷபத்துடன் ஒரு பசுவைத் தக்ஷிணையாகக்கொடுத்து இரண்டுபிராஜாபத்திய கிருச்சிரங்களைச் செய்யவேண்டுமென்று பராசரர்சொன்னதற்கு இந்தமாஸோபவாஸம் பதிலாகுமென்பதுகருத்து. அறியாமல் சண்டாளஸ்திரீயைப்புணர்ந்த பிராம்மணன் தப்தகிருச்சிரத்தினாலும் இரண்டுபிராஜாபத்திய கிருச்சிரங்களாலும் சுத்தியடைகிறானென்றும், அறிந்து சண்டாளஸ்திரீயைப் புணர்ந்த பிராம்மணன் சாந்திராயணத்தினாலும் இரண்டுபிராஜாபத்திய கிருச்சிரங்களாலும் சுத்தியடைகிறானென்றும் சங்கர்சொன்னது பராசரர்விதியோடொத்த விஷயமாகும். சண்டாளன் புல்கஸன் இவர்களுடைய ஸ்திரீகளை அறிந்து புணர்ந்தவன் அப்தகிருச்சிரத்தையும், அறியாமல்புணர்ந்தவன் இரண்டுசாந்திராயணங்களையும், செய்யவேண்டுமென்று யமமுனிவர்சொன்ன இரண்டுபக்ஷமும் சுக்கிலத்தை ஒழிப்பதுவரையிலும் ஒருதரம் செய்த புணர்ச்சியைப்பற்றியதாகும். அந்தியாவஸாயிகளென்றுசொல்லப்படுகிற சில அதமஜாதிஸ்திரீகளைஅறிந்து புணர்ந்தால் அப்தகிருச்சிரத்தையும், அறியாமல் புணர்ந்தால் பனிரண்டுநாளில் செய்யத்தக்க ஒரு பிராஜாபத்திய கிருச்சிரத்தையும் செய்யவேண்டுமென்று கௌதமர்சொன்னதில் அப்தகிருச்சிரபக்ஷம் யமமுனிவர்வசநத்தையும், பன்னிரண்டுநாளில் செய்யத்தக்க கிருச்சிரபக்ஷம் ஸ்வமந்து சொன்னதப்தகிருச்சிரத்தையும் அநுஸரித்தவைகளாம். சண்டாளஸ்திரீகளைப் புணர்ந்தாலும் அவர்களது அந்நத்தைப்புசித்தாலும் அவர்களைக்கொன்றாலும், பராககிருச்சிரத்தால் சுத்தியென்று அங்கிராசொன்னது தப்தகிருச்சிரத்திற்குச் சமானவிஷயம். சண்டாளஸ்திரீகமநம் செய்தவன் பன்னிரண்டுநாள் புசிக்காமல் ஜலத்தைமாத்திரம் குடிப்பவனாயும், பன்னிரண்டுநாள் உபவாஸமிருந்தும் அல்லது அசுவமேதத்தினுடைய அவபிருதத்தில் ஸ்நாநத்தைச்செய்தும் சுத்தனாகிறானென்று வஸிஷ்டர்சொன்னது யமமுனிவர்சொன்ன இரண்டுசாந்திராயணங்களோடு ஸமாநவிஷயம். சண்டாளஸ்திரீகமநம்செய்த இருபிறப்பாளன் பிராஜாபத்தியகிருச்சிரம், தப்தகிருச்சிரம், அதிகிருச்சிரம் இவைகளால் சுத்தனாகிறானென்று ஸம்வர்த்தர் சொன்னது இரண்டு சாந்திராயணங்களோடு ஸமாநவிஷயம்.

விருஷளியைஒருநாள் புணர்ந்த இருபிறப்பாளன் பிக்ஷாந்நத்தைப்புசிப்பவனும் நித்தியமும்மந்திரஜபத்தைச்செய்பவனுமாகி இவ்

விதமாகமூன்றுவருஷம் விரதத்தைஅநுஷ்டித்தால் சுத்தனுகிருனென்றுமநுசொன்னுர். சண்டாளஸ்திரீ, வியபிசாரம் செய்பவள், தாஸி, ரஜஸ்வலையானஸ்திரீ,விவாகமாகாதகந்நிகை,தனக்குச்சரியான கோத்திரமுடையவனுல் விவாகம்செய்யப்பட்டவள் ஆகிய இவர்கள் விருஷளிஎன்னப்படுவார்களென்று வேறுஸ்மிருதியில் சொல்லப்பட்டது. கீழ்ச்சொன்ன மநுவசநம் இவர்களை ஒருநாள் புணர்ந்தவனைப் பற்றியது. தன் ஸ்நேகிதனுடைய பாரியை, தன்னுடையபெண், உடன்பிறந்தவள் முதலிய பெண்கள், தன் கோத்திரத்தை யுடைய பெண்கள், மருமகள், சண்டாளஸ்திரீ ஆகிய இவர்களைப்புணருவது குருபத்நியைப் புணருவதற்கு ஸமமாகுமென்று யமமுநிவரும் யாக்கியவல்கியரும் சொன்னது ஒருபக்ஷகாலம்அவர்களைப் புணர்ந்ததைப்பற்றியதென்றும், கீழ்ச்சொன்னஸ்திரீகளைப்புணர்ந்தால்குருபத்நிகமநத்திற்குரியபிராயச்சித்தம் செய்யத்தக்கதென்றும் மநுசொன்னது ஒருமாஸம் இவர்களைப் புணர்ந்ததைப்பற்றியதென்றும், கீழ்ச்சொன்னஸ்திரீகளைப்புணர்ந்தால்பிராணத்தியாகமேபிராயச்சித்தமாகவிதிக்கப்படுகிறதென்று யமமுனிவர்சொன்னது ஒருவருஷகாலம் புணர்ந்ததைப்பற்றியதென்றும் மாதவாசாரியர் உரைத்தார். (அ)

௯ ॥ మాతరంయదిగచ్ఛేత్తు భగినీంస్వసుతాంతథా ।
ఏతాస్తుమోహితోగత్వా త్రీణికృచ్ఛ్రాణిసంచరేత్ ॥

௯ய ॥ చాంద్రాయణత్రయంకుర్యా చ్ఛిశ్నచ్ఛేదేనశుధ్యతి ॥

தாய்முதலியவர்களைப் புணர்தலின் பிராயச்சித்தம். (இ-ள்.) தன்மாதாவையும், ஒருதாய்வயிற்றில் பிறந்தவளான ஸகோதரியையும், தன் வர்ணத்தையுடைய பாரியையிடத்தில் பிறந்தபெண்ணையும் அறியாமல் புணர்ந்தவன் மூன்று பிராஜாபத்திய கிருச்சிரங்களையும் மூன்று சாந்திராயணங்களையும் செய்வதினுலும்ஆண்குறியை அறுத்துக்கொள்ளுவதினுலும் சுத்தனுகிருன். (எ-று.)

இது உபபாதக பிராயச்சித்த பிரகரணமாகையால் அதிபாதகத்தில் ஒன்ருகிய தாயைப்புணருவதின் பிராயச்சித்தத்தை இங்குச்சொன்னது புணரத்தகாத ஸ்திரீகளைப் புணருவதின்பேதமாகையா லென்றறிக. பிராஜாபத்திய கிருச்சிரமென்றும், சாந்திராயணமென்றும், ஆண்குறியை யறுப்பதென்றும் சொல்லப்பட்ட மூன்றுவிதமான பிராயச்சித்தங்களும் எண்வகைப் புணர்ச்சிகளின் பேத

ங்களுக்கிடாக நிச்சயிக்கத் தக்கவைகள். புணர்ச்சியின்எண்வகையா வன; புணர்ச்சியை ஸ்மரித்தல், அதை வாயால் சொல்லுதல், ஸ்திரீகளோடு சொக்கட்டான் ஆடுவதுமுதலிய விளையாட்டு, புணருவதைப்பற்றி ஸ்திரீகளைப் பார்த்தல், புணருவதைப்பற்றி ஸ்திரீகளுடன்ஏகாந்தமாகப் பேசுதல், அதைச் சங்கற்பித்தல், அதைப் பற்றிப்பிரயத்தநம் செய்தல், புணர்ச்சியைச்செய்தல் ஆகிய இவைகளே யென்றும் இவைகளில்லாமை பிரமசரியமென்றும் ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டது. இவைகளில் ஸ்மரித்தல் முதலிய ஐந்து விதபாபங்களுக்கு மூன்று பிராஜாபத்திய கிருச்சிரங்களும், சங்கற்பித்தல் பிரயத்தநம்செய்தல் இவைகளுக்கு மூன்று சாந்திராயனங்களும், புணர்ச்சியைச்செய்தலுக்கு ஆண்குறியை அறுத்துகொள்ளுதலும் பிராயச்சித்தமாகுமென்று கண்டுகொள்க. இங்கு அறியாமல் செய்த புணர்ச்சி என்று மூலத்திலிருப்பதால் இந்தப்புணர்ச்சியில் இவளைப் புணரவேண்டுமென்று மனதினால் நிச்சயிப்பதாகிய ஸங்கற்பம் எவ்விதமாக உண்டாகலாமெனில் அல்பமான இருளுள்ளவிடத்தில் ஒருஸ்திரீயைத் தன்மாதாவென்று அறியாமல் அவளைப்புணர எண்ணுதலும் பிரயத்தனித்தலும் கூடுமென்றும் தாயென்று அறிந்தாலும் அவளைச் சேருவதில் அதிகதோஷ முண்டென்கிற ஞானமில்லாத பக்ஷத்தில் ஸங்கல்பமுதலானவைகளுண்டாகலாமென்றும் கொள்க,

தாய்விஷயத்திலும் உடன்பிறந்தாள் விஷயத்திலும் பிராயச்சித்தத்தைச் சமமாகச்சொன்னது தாயைப்போல் உடன்பிறந்தவளை உபசரிக்க வேண்டுமென்பதற்காக வென்றறிக. அறியாமல் அடிக்கடி தாயைப் புணருவதின் பிராயச்சித்தத்தைக் காட்டிலும் அறிந்து ஒருதடவை தாயைப்புணர்ந்தவிஷயத்தில் தலைமுழுதும் க்ஷௌரம்செய்வித்துக்கொண்டு உடம்பு முழுதும் நெய்யையும் சாணியையும் தடவிப் பாதந்தொடங்கி நெருப்பினால் தன் சரீரத்தைத் தகித்தால் சுத்தியுண்டாகிறதென்று வசிஷ்டர்சொன்னார். அறிந்து அடிக்கடி தாயைப்புணருவதற்கு என்ன பிராயச்சித்தமெனில் கீழ்ச்சொன்னபடி சாணியைப்பூசி நெருப்பினால் தகிக்குந்தருணத்தில் ஈரச்சாணியாயிருந்தால் மெதுவாகக்கொளுத்துமென்றும், உலர்ந்தசாணியாயிருந்தால் சீக்கிரமாகக்கொளுத்துமென்றும் ஊகிக்கப்பட்ட உபத்திரவ பேதமே பிராயச்சித்தமாகுமென்றறிக. (ச, கூ0)

౧౦ ॥ మాతృష్వస్రాగమేచైవ మాతృమేద్రనికర్తనమ్ ॥

(இ - ள்.) தாயைப்புணருவதற்குச்சொல்லிய பிராயச்சித்தம் போல் தாயுடன்பிறந்தவளைப் புணருவதிலும் சிசிநவிருஷணங்களை அறுப்பதாகிய பிராயச்சித்தம் செய்யத்தக்கதாம். (எ-று).

அறிந்துசெய்த விஷயத்தில் கீழ்ச்சொன்ன இரண்டுவித பிராயச்சித்தங்களும் செய்யத்தக்கவைகளாமென்றறிக. தாயைப்புணருவதிலும் தாயுடன் பிறந்தவளைப் புணருவதிலும் இங்குச் சமமான பிராயச்சித்தம்செய்ய விதித்ததாக ஸந்தேகிக்கத் தக்கதன்று. அறியாமல் தாயைப்புணருவதும் அறிந்து தாயுடன்பிறந்தவளைப் புணருவதும் சமதோஷமாகுமென்றும் இந்தச்சுலோகம் அறிந்து தாயுடன் பிறந்தவளைப் புணருவதைப்பற்றியதென்று மறிக. (கo)

౧౧ ॥ అజ్ఞానేనతుయోగచ్ఛే త్కుర్యాచ్చాంద్రాయణద్వయం ।
దశగోమిథునందద్యా చ్ఛుద్ధింపారాశరోబ్రవీత్ ॥

(இ-ள்.) ஒருவன் அறியாமையினால் தாயுடன்பிறந்தவளைச்சேர்ந்தானேயானால் அவன் இரண்டுசாந்திராயணத்தைச் செய்து பத்து கோமிதுநத்தைத் தாணங்கொடுத்தால் சுத்தனாகிறானென்று விருத்தபராசரர்சொன்னார். (எ-று.)

ஒரு பசுவும் ஒருவிருஷபமும் சேர்ந்தது கோமிதுநமாம்.

தந்தையுடன்பிறந்தவள், தாயுடன்பிறந்தவள், அம்மான்பாரியை, மருமகள், தாய்க்குச் சக்களத்தியானவள், உடன்பிறந்தவள், குருபுத்திரி, குருபத்திநி, தன்பெண் ஆகிய இவர்களைப் புணர்ந்தவன் குருபத்திநிகமநம் செய்ததோஷத்தை அடைகிறானென்கிற யாக்கியவல்கியவசநம் அறிந்து செய்தபுணர்ச்சியைப்பற்றியதென்றும், இங்குச்சொன்ன சாந்திராயண விரதம் அறியாமல் தாயுடன்பிறந்தவளைப் புணருவதைப்பற்றியதென்றும் இவ்விதமாகவே சிறியதகப்பன்பாரியை, மாமியார் பின்னும் யாக்கியவல்கியவசநத்தில் சொன்ன ஸ்திரீகள் ஆகிய இவர்களைப் புணர்ந்தவன் சாந்திராயணத்தைச் செய்யக்கடவனென்றும் ஹாரீதர் சங்கலிகிதர்கள் யமமுனிவர் இருபத்துநால்வர் ஆகிய இவர்கள் சொன்னார்கள். மூலவசநத்தில் அறியாமல் தாயுடன்பிறந்தவளைப் புணருவதற்கு இரண்டுசாந்திராயணமும் இருபது கோதானமும் கீழ்ச்சொன்ன ரிஷிவசநங்களில் ஒரு சாந்திராயணமும் சொல்லப்பட்டதென்னவெனில், சுக்கிலத்தை ஒழிப்பதற்குமுந்திப் புணர்ச்சியினின்று மொழிந்தவனைப் பற்றியது ஒருசாந்திராயணபக்ஷமென்றும், பரிபூர்ணமாகப் புணர்ந்தவனைப்பற்றியது இரண்டுசாந்திராயணபக்ஷமென்றும் பொருள்கொள்ளவேண்டுமாத

லால் விரோதமில்லை. கீழ்ச்சொன்ன ஸ்திரீகளைப் புணர்ந்தவன் தப்தகிருச்சிரத்தைச் செய்யக்கடவனென்று இருபத்துநால்வரும் ஸம்வர்த்தரும் சொன்னது இவர்களுடன் புணர்ச்சிக்கு முந்திய லீலைகளைமாத்திரம் செய்து யோநிலிங்க ஸம்பந்தத்திற்குமுன் ஒழிந்தவனைப்பற்றியதென்று அறியத்தக்கது. (கக)

౧౨ ॥ పితృదారాంత్సమారుహ్య మాతురాప్తాంతుభ్రాతృజామ్ ।
గురుపత్నీంస్నుషాంచైవ భ్రాతృభార్యాంతథైవచ ॥
౧౩ ॥ మాతులానీంసగోత్రాంచ ప్రాజాపత్యత్రయంచరేత్ ।
గోద్వయందక్షిణాందద్యాచ్ఛుధ్యతేనాత్రసంశయః ॥

(இ-ள்.) தன்மாதாவைக்காட்டிலும் தந்தையின்வேறான பாரியைகளையும், மாதாவுக்குத் தோழியானவளையும், ஸகோதரனுடைய பெண்ணையும் குருபத்நியையும், மருமகளையும், ஸகோதரனுடைய மனைவியையும், அம்மான்மனைவியையும், தன்கோத்திரத்தையுடையவளையும் புணர்ந்தவன் மூன்று பிராஜாபத்திய கிருச்சிரங்களைச்செய்துவிருஷபத்துடன் ஒருபசுவைத் தக்ஷிணையாகக்கொடுத்தால் சுத்தனாகிறான், இதில் ஸந்தேகமில்லை. (எ-று).

கர்ப்பாதாநம் தொடங்கியுள்ள ஸகல ஸம்ஸ்காரங்களையும் தனக்கு விதிப்படிசெய்து ஜீவனத்தைக் கற்பித்த பிராம்மணன் குருவென்றும், அல்பமாகவாகிலும் அதிகமாகவாகிலும் ஞானவிஷயத்தில் உபகாரம் செய்தவனும் குருவென்றும் மநுவும், தாய், தந்தை, தந்தை விவாகம்செய்துகொண்ட வேறுஸ்திரீகள், ஆசாரியன், வித்தையைக்கற்பித்தவன், மூத்தசகோதரன், ருத்துவிக்கு, ஆபத்தில் அபயதானம் செய்தவன், அன்னமிட்டவன், ஆகிய இவர்கள் குருவென்னப்படுவார்களென்றுவியாஸரும்சொல்லியிருக்கிறபடி மூலவசனத்தில்குருபத்நியையும் என்கிறவாக்கியத்தில் குருவென்கிறபதத்திற்குப்பிதாமுக்கியமானபொருளாக வேண்டியதாகையால், பிதாவின் பாரியைகளையும் என்று முதலில் தனித்தெடுத்திருப்பதைப் பற்றிப் பிதாசோதரர்முதலியவர்களும்குருவாகி அவர்கள்பாரியைகளும்குருபத்நிகளென்னப்படுவார்களென்றறிக. இவர்களை அறியாமல் ஒருதரம் புணர்ந்தவன் தக்ஷிணையுடன் மூன்று பிராஜாபத்திய கிருச்சிரங்களைச் செய்யக்கடவனென்றும், அறிந்து புணர்ந்தவன் அக்நியில் விழுந்து மரிக்கக்கடவனென்றும் இதுதவிர வேறுசுத்தி அவனுக்கு இல்லையென்றும் இருபத்து நால்வர்மதத்தில் சொல்லப்பட்டது. தாயைப்புணருதல், தன்பெண்ணைப் புணருதல், மருமகளைப் புண

ருதல் ஆகிய இவைகள் அதிபாதகமென்றும் இவைகளைச் செய்தவர்கள் அக்கினியில்விழுந்து மரிக்கக்கடவர்களென்றும் விஷ்ணுவும், பொன்திருடினவன், மத்தியபானம் செய்தவன், பிரமஹத்திசெய்தவன், குருதாரகமனஞ்செய்தவன் ஆகிய மஹாபாதகம்செய்தவர்கள் தரையில் சயனித்தல், ஜடையைத்தரித்தல், சருகு கிழங்கு பழம் முதலியவைகளை ஒரேவேளை புசித்தல் ஆகிய இவைகளைப் பன்னிரண்டு வருஷங்கள் செய்துகொண்டுவந்த பின்பு சுத்தியையடைகிறார்களென்று சங்கரும்சொன்னதுதன்வர்ணத்தியஸ்திரீயையும் உத்தமவர்ணத்திய ஸ்திரீயையும் பிதாவின்பத்தினியையும் அறியாமல் புணர்ந்ததைப்பற்றியதாகும். தன்மாதாவைவிட்டுப் பிதாவின் மற்ற பாரியைகளையும், உடன்பிறந்தவளையும், மாதாவின் தோழியையும், மாற்றாந்தாய்க்குப் பிறந்தவளான தங்கையையும் புணர்ந்த நராதமன் தப்தகிருச்சிரததைச் செய்யக்கடவனென்று ஸம்வர்த்தர்சொன்னது தாழ்ந்தவர்ணத்தில் பிறந்த குருபத்நிமுதலியவர்களைப் புணர்ந்து சுக்கிலத்தையொழிப்பதற்குமுன் ஒழிந்தவனைப் பற்றியது. அறியாமல் குருபத்நியைப்புணர்ந்தவன் பிராஜாபத்தியகிருச்சிரத்தைச் செய்யக்கடவனென்றும் அல்லது மூன்றுமாஸம் வேதஸம்ஹிதாபாராயணத்துடன் சாந்திராயணகிருச்சிரத்தைச்செய்யக்கடவனென்றும், யாக்கியவல்கியர்சொன்னது பிராம்மணஸ்திரீக்குப் பிறந்தவன் சூத்திரஜாதியில் பிறந்தவளான குருபத்நியைப் புணர்வதைப்பற்றியது. தன்வர்ணத்தில் பிறந்தவளான குருபத்நி வியபிசாரம் செய்பவளாயிருக்க அவளை அறியாமல் புணர்ந்தவன் பிராஜாபத்திய கிருச்சிரத்தைச் செய்யக்கடவனென்று வியாக்கிரமுனிவர் சொன்ன விரதத்தோடு வேதஜபத்தையும் சாந்திராயணகிருச்சிரத்தையும் செய்யவேண்டுமென்றறிக. கிருச்சிரத்தையும் அதிகிருச்சிரத்தையும், கிருச்சிராதிகிருச்சிரத்தையும், குருபத்நியான க்ஷத்திரியவர்ணத்து ஸ்திரீயைப்புணர்ந்தவன் மூன்றுமாஸம் செய்யக்கடவனென்று அந்த வியாக்கிரமுனிவர் சொன்னதில் அறிந்து அவளை ஒருதரம் புணர்ந்ததும் இருவரும்சம்மதித்துப் புணர்ந்ததுமாகில் அதிகிருச்சிரமும் அவளால் உற்சாகப்படுத்தப்பட்டுத்தான் புணர்ந்ததாகில்கிருச்சிரமும் அவளைத்தான் உற்சாகப்படுத்திப் புணர்ந்தானாகில் கிருச்சிராதிகிருச்சிரமும் இதுவிடாமல் செய்யப்பட்டால் மரணாந்த பிராயச்சித்தமும் செய்யத்தக்கனவாமென்றறிக.

தாயுடன்பிறந்தவள், மாமியார், அம்மானுடைய பாரியை, தகப்பனுடன்பிறந்தவள், சிறியதகப்பன், தோழன், சிஷியன் ஆகிய

இவர்களுடையஸ்திரீகள்,உடன்பிறந்தவள்,அவளுக்குத்தோழி, மருமகள், பெண், குருபத்திநி,தன்கோத்திரமுடையவள், சரணமடைந்தவள், ராஜபத்திநி, ஸந்நியாஸவிரதத்தை அநுஷ்டிப்பவள், வளர்த்த தாய்,பதிவிரதை, உத்தமவர்ணத்திய ஸ்திரீ ஆகிய இவர்களில் யாரைப்புணர்ந்தாலும் குருதாரகமநம்செய்ததாகுமென்று நாரதர் சொன்னது அறியாமல் பலதடவை இவர்களைப் புணருவதையும், அறிந்து ஒருதரம் புணருவதையும் பற்றியதென்றறிக. தன்தோழி, தன்னுடன்பிறந்தவள், தன்கோத்திரமுடையவள், சிஷியபத்திநி, மருமகள் இவர்களையும் பசுவையும் புணர்ந்தவன் குருதாரகமநம் செய்தவனாகிறானென்று வஸிஷ்டரும், கீழ்ச்சொன்ன ஸ்திரீகளையும் சண்டாள ஸ்திரீயையும் புணர்ந்தவன் குருதாரகமந பிராயச்சித்தத்தைச் செய்யக்கடவனென்று மநுவும், தன்னை யடுத்திருப்பவன், பண்டிதன், அக்நிஹோத்திரம்செய்தவன் இவர்களுடைய ஸ்திரீகளையும், மற்றும் கீழேசொன்ன ஸ்திரீகளையும் புணர்ந்தவன் குருதாரகமந பிராயச்சித்தம் செய்யவேண்டுமென்று வியாக்கிரமுநிவரும், சிறியதகப்பன், சகோதரன், இவர்களுடைய ஸ்திரீகளைப் புணர்ந்தவன் குருபத்திநிகமநத்தைச் செய்தவனாகிறானென்று ஸம்வர்த்தரும், இப்படியே அத்தை, சிறியதாயார், பெரியதாயார் அம்மானுடையபாரியை, மருமகள், சிறியதகப்பன் மனைவி, உடன்பிறந்தவள், குருபுத்திரி, குருபத்திநி, தன்பெண் ஆகிய இவர்களைப் புணர்ந்தவன் குருதாரகமநம் செய்தவனென்று யாக்கியவல்கியரும் சொன்ன இந்தவசநங்களுக்குக்கீழ் நாரதவசநத்திற்கு வியவஸ்தை செய்ததுபோல் வியவஸ்தைசெய்யவேண்டும்.

கீழ்ச்சொன்ன பாபங்களில் அல்பமான சாந்திராயண கிருச்சிரம் முதலிய பிராயச்சித்தங்களையுடைய சில பாபங்கள் அல்பமான சம்பந்தத்தை உடையவர்கள் திறத்தில் செய்யத்தக்கனவாமென்றறிக. பிதாவின் பத்திநிகளனைவரும் மாதாக்களும்,அவர்களுடன் பிறந்தவர்க ளனைவரும் அம்மான்களும், அவர்களுடன் பிறந்த ஸ்திரீகள் சிறியதாயார் பெரியதாயார்களும், உடன்பிறந்தவளுடைய சக்களத்திகள் உடன்பிறந்தவர்களும் அவர்களுடைய பிள்ளைகள் உடன்பிறந்தாளுடையபிள்ளைகளும் ஆகிறார்களென்று ஸம்பந்தவிஷயத்தை ஸுமந்துசொன்னார். இங்கு தன்னைப்பெற்றவளை மாதாவென்று சொல்லவேண்டியிருக்கப் பிதாவின் பத்திநிகளனைவரையும் மாதாக்களென் றிவ்விதம் முக்கியமாக ஒருவனைச் சொல்லவேண்டிய பேரால்சொல்லப்பட்ட முக்கியரல்லாத மற்றொருவர் விஷயத்தில்

செய்த பாபத்திற்குப் பிராயச்சித்தம் அல்பமாகுமென்றறிக. குருவின்பெண்ணையும் தன்பெண்ணையும் ஸகோதரியையும் அவளுடைய பெண்ணையும் புணர்ந்தவன் சாந்திராயண விரதத்தையும், ஏழு தலைமுறைக்குட்பட்ட ஞாதியின்பெண்ணையும்அம்மான்பத்நியையும் மருமகளையும் தாயார்வம்சத்தில் ஏழுதலைமுறைக்குட்பட்ட பெண்ணையும் அஞ்ஞானத்தினால் புணர்ந்தவன் பராக கிருச்சிரத்தையும், ஸ்நேகிதனுடைய பத்நியையும் மாமியாரையும் புணர்ந்தவன் ஒரு நாள் உபவாஸமிருந்து இரண்டு தப்தகிருச்சிரங்களையும், செய்யக் கடவர்களென்று ஸம்வர்த்தரும், தாயுடன்பிறந்தவள்,தகப்பனுடன் பிறந்தவள்,மாமியார், மருமகள், உடன்பிறந்தவள், அவளுடையபெண், சண்டாளஸ்திரீ ஆகிய இவர்களைப் புணர்ந்தவன் மூன்று தப்த கிருச்சிரங்களையும் ஸாந்தபநகிருச்சிரத்தையும் செய்யக்கடவனென்று ஸுமந்துவும், தனக்கு இளையசகோதரனுடைய மனைவியை அறிந்து புணர்ந்தவன் சாந்தபந கிருச்சிரத்தை அல்லது இரண்டு பிராஜாபத்திய கிருச்சிரங்களைச் செய்யக்கடவனென்றும், அம்மான்மனைவி, சிறியதகப்பனுடையபெண் இவர்களைப் புணர்ந்தவன் தப்தகிருச்சிரத்தைச் செய்யக்கடவனென்றும், இவர்களுடையபெண்களைப் புணர்ந்தவன் ஷட்ராத்திர கிருச்சிரத்தையும், அதாவது ஆறுநாள் பிராஜாபத்திய கிருச்சிரத்தையும், குருவின்பெண்ணைப் புணர்ந்தவன் பராக கிருச்சிரத்தையும், உடன்பிறந்தவளுடைய பெண்ணைப்புணர்ந்தவன் சாந்திராயண கிருச்சிரத்தையும், அம்மானுடையபெண் அத்தையின்பெண் இவர்களைப்புணர்ந்தவன் ஹாரீதவசநத்தின்படி பிராஜாபத்திய கிருச்சிரத்தையும், மாதாவின் சகோதரியின் பிள்ளையினுடைய மனைவியையும் சிறியதகப்பன் பிள்ளையினுடைய மனைவியையும் அறிந்து புணர்ந்தவன் ஸபாத கிருச்சிரத்தை அதாவது ஒன்றேகால் பிராஜாபத்திய கிருச்சிரத்தையும், பெண்வயிற்றுப்பெண்ணையும் பிள்ளைவயிற்றுப்பெண்ணையும் புணர்ந்தவன் பிராஜாபத்திய கிருச்சிரத்தையும் சாந்திராயணத்தையும், உடன்பிறந்தவள் பெண்ணினுடையபெண்ணையும் தன்மருமகளையும் புணர்ந்தவன் பராககிருச்சிரத்தையும், உபாத்தியாயருடைய மனைவியைப்புணர்ந்த பிராம்மணன் சாந்திராயணத்தையும் ஆசாரியன்மனைவியைப் புணர்ந்தவன் போதாயநர் வசநத்தின்படி பராக கிருச்சிரத்தையும் ஸம்பந்தியின் ஸ்திரீயைப்புணர்ந்தவன் ஸபாத கிருச்சிரத்தையும், விதவையைப்புணர்ந்தவன் ஒரு உபவாஸத்தோடு பிராஜாபத்திய கிருச்சிரத்தையும், ஒருவித விரதத்தை அநுஷ்டிக்கும் ஸ்திரீயைப்

புணர்ந்தவன் பராககிருச்சிரத்தையும், ஸ்நேஹிதன் மனைவியையும் ஞாதியின்மனைவியையும் தன் பந்துஜநங்களின் மனைவியையும் புணர்ந்தவன் சிலநியமங்களைத் தவிர்ந்து அதனால்பிராகிருதமென்னப்பட்ட பிராஜாபத்திய கிருச்சிரத்தையும் பின்பு கால்வாசி கிருச்சிரத்தையும், குமாரியைப்புணர்ந்தவன் சாந்திராயணத்தையும், பரிசுத்தையான ஸ்திரீயைப் புணர்ந்தவன் சாந்திராயணத்தையும் செய்துகொள்ளக்கடவர்களென்று இருபத்துநால்வரும் சொன்னார்கள்.

இந்தப் பிராயச்சித்தங்களைத் தேசாந்தரஞ்சென்றவன், வியாதியுள்ளவன், ஸந்நியாசி, பிரமசாரி, இவர்களுக்குத்தக்கபடியும் பாபத்தின் கௌரவ லாகவங்களை ஆராய்ந்தும் அதாவது பாபம் அறிந்து செய்யப்பட்டது அறியாமல்செய்யப்பட்டது அடிக்கடிசெய்யப்பட்டது ஒருதரம்செய்யப்பட்டது இதுமுதலிய பாபவகைகளை ஆராய்ந்து தக்கபடி விதிக்கவேண்டுமென்றறிக. மூலவசநத்தில்சொன்ன ஸ்திரீகள் தவிர மற்ற அந்நிய ஸ்திரீகளைப் புணர்ந்த விஷயத்தில் வியாக்கிரமுனிவர் சொன்ன பிராயச்சித்தம் செய்யத்தக்கதாகும். இந்தவசநம் இந்தக்காண்டம் முதல் அத்தியாயத்தில் ஜாரப்பிராயச்சித்தத்தில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

சூத்திரஸ்திரீயைப்புணர்ந்த பிராம்மணன் அதிகிருச்சிரத்தையும் வைசியஸ்திரீயையும் க்ஷத்திரியஸ்திரீயையும் புணர்ந்த பிராம்மணன் சாந்திராயணத்தையும்செய்துகொள்ளவேண்டுமென்று கண்ணுவர் உரைத்தார். பிராம்மணனால்விவாகம்செய்துகொள்ளப்பட்டவர்களான நான்குவர்ணத்திய ஸ்திரீகளையும் வேறுபிராம்மணன் புணர்ந்தால் பிராம்மணஸ்திரீயைப்புணர்ந்ததற்குஅவன் வியாக்கிரமுனியால் கீழே சொல்லப்பட்ட பிராயச்சித்தத்தையும்அந்தவிதியை அநுஸரித்துக்ஷத்திரியஸ்திரீமுதலிய மற்ற மூன்றுவர்ணத்திய ஸ்திரீகளைப்புணர்ந்ததற்குக்கிரமமாக கால்கால்பாகம் குறைவாகப்பிராயச்சித்தத்தையும் செய்துகொள்ளவேண்டுமென்றுகண்டுகொள்க. இந்தநீதியானதுக்ஷத்திரியன்விவாகம்செய்துகொண்டஸ்திரீகள்விஷயத்திலும்ஊஹித்துக்கொள்ளத்தக்கது. பிராம்மணன்மனைவியான சூத்திர ஸ்திரீயைப் புணர்ந்த வேறுபிராம்மணன் பிராஜாபத்தியகிருச்சிரத்தைச் செய்யக்கடவனென்று வசிஷ்டர்சொன்னார். பிராம்மணன்தானே ஆசைப்பட்டு வேறொரு பிராம்மணபத்நியைச் சேர்ந்தால் இவன்தர்மசீலனாயிருந்தால் கிருச்சிரத்தையும் அல்லாதவனாயிருந்தால் அதிகிருச்சிரத்தையும் செய்யக்கடவனென்று வசிஷ்டர்சொன்னது அறியாமல் ஒருதடவை புணர்ந்ததைப் பற்றியதாகுமென்றும் அறிந்து செய்தபக்ஷத்தில் இரட்டிப்பாகுமென்றுமறிக. பிராம்மணனுக்கு க்ஷத்திரியாதிகளின் ஸ்திரீகமநத்தில் சொல்லிய பிராயச்சித்தமே க்ஷத

திரியாதிகளுக்குத் தந்தம் வர்ணத்திய ஸ்திரீகமநத்தில் செய்யத்தக்கதாமென்று பிரஜாபதியும், கர்ப்பமுண்டாகும்வரையில் பரதாரகமநம் செய்தவன் இரண்டுவருஷம் பிராயச்சித்தத்தையும், சுரோத்திரிய பிராம்மண பத்நிவிஷயமாகில் மூன்றுவருஷம் பிராயச்சித்தத்தையும் செய்யக்கடவனென்று யமமுனிவரும் சொன்னார்கள். க்ஷத்திரியன் அல்லது வைசியன் பிராம்மணஸ்திரீகமநத்தைச் செய்த பக்ஷத்தில் இவர்கள் கோமூத்திரத்தில் பசநம்செய்யப்பட்ட யவஅரிசி அந்நத்தைப்புசிப்பதாகிய விரதத்தை விதிப்படி அரைமாஸம் அநுஷ்டித்தால் சுத்தராகிறார்களென்றும், சூத்திரன் பிராம்மணஸ்திரீயைக் காமபீடிதனாகிப் புணர்ந்தால் யவஅரிசி அந்நத்தைப்புசிப்பதாகிய விரதத்தை விதிப்படி ஒருமாஸம் அநுஷ்டித்தால் சுத்தனாகிறானென்றும் ஸம்வர்த்தர்சொன்னது மிகவும் வியபிசாரம் செய்பவளான பிராம்மணஸ்திரீ ஸங்கமத்தைப்பற்றியது. அப்படியல்லாத பிராம்மணஸ்திரீகமநத்தில் வதமே பிராயச்சித்தமாக விதிக்கப்படுகிறது. அதாவது சூத்திரன் பிராம்மணஸ்திரீயைப் புணர்ந்தானாகில் அந்தச் சூத்திரனை விலாமிச்சை அல்லது விழல் என்னும் புற்களால் சுற்றி அக்நியில்போட்டுக் கொளுத்தவேண்டுமென்றும், அந்தஸ்திரீக்கு க்ஷௌரமும் நெய்யினால் அப்பியங்கஸ்நாநமும் செய்வித்து அவளை வஸ்திரமில்லாதவளாகக் கறுத்த கழுதைமேலேற்றிப் பெரிய தெருவில் வலம்வரச்செய்தால் அவள் சுத்தையாகிறாளென்றும், பிராம்மணஸ்திரீகமநம்செய்த வைசியனைச் சிவந்த தர்ப்பங்களால் சுற்றி அக்நியில்போட்டுக் கொளுத்தவேண்டுமென்றும், அந்தப்பிராம்மணஸ்திரீக்கு க்ஷௌரமும் நெய்யினால் அப்பியங்கஸ்நாநமும் செய்வித்து அவளை வஸ்திரமில்லாதவளாகச் சிவந்தகழுதைமேலேற்றிப் பெரிய தெருவில் வலம்வரச் செய்தால் அவள் சுத்தையாகிறாளென்றும், பிராம்மணஸ்திரீகமநம் செய்த ராஜாவை நாணற்புற்களால் சுற்றி அக்நியில் எறிந்துவிடவேண்டுமென்றும் அந்தஸ்திரீயைக் கீழ்ச்சொல்லியபடிசெய்து வெளுத்தகழுதைமேலேற்றி ஊர்வலம் வரச்செய்யவேண்டுமென்றும் இவ்விதமாக க்ஷத்திரிய ஸ்திரீகமநம் செய்த வைசியனையும் அந்தக்ஷத்திரியஸ்திரீயையும் க்ஷத்திரிய வைசியஸ்திரீகளைப் புணர்ந்த சூத்திரனையும் அந்த க்ஷத்திரிய வைசியஸ்திரீகளையும் செய்யவேண்டுமென்றும் வசிஷ்டர்சொன்னார்.

ஸ்வைரிணிஎன்னும் **வியபிசாரஸ்திரீகமந பிராயச்சித்தம்.** வியபிசாரம்செய்கிற சூத்திரஸ்திரீகமநம் செய்த பிராம்மணன் ஸசேலஸ்நாநம்செய்து பூர்ணகும்பத்தைத் தாநம்செய்யக்கடவனென்றும்

வியபிசாரம்செய்கிற வைசியஸ்திரீகமநம்செய்த பிராம்மணன் நான்காவதுகாலத்தில் புசித்துப் பிராம்மணபோஜநத்தைச் செய்விக்கக்கடவனென்றும் அப்படிப்பட்ட க்ஷத்திரியஸ்திரீயைச்சேர்ந்த பிராம்மணன் மூன்றுநாள் உபவாஸமிருந்து ஒருஆடகம் அளவுடைய யவதானியத்தைத்தாநம் செய்யவேண்டுமென்றும்அப்படிப்பட்ட பிராம்மணஸ்திரீகமநத்தைச்செய்தபிராம்மணன்மூன்றுநாள்உபவாஸமிருந்து நெய்ப்பாத்திரத்தைத் தாநம் செய்யக்கடவனென்றும் சங்கலிகிதர்கள் சொன்னார்கள்.

வர்த்தகி என்னும் வியபிசாரம் செய்கிற பிராம்மணஸ்திரீயைப் புணர்ந்த பிராம்மணன் வேறொரு பிராம்மணனுக்கு ஏதேனுமொன்றைத் தாநம் செய்யக் கடவனென்றும் வர்த்தகியான க்ஷத்திரியஸ்திரீயைப் புணர்ந்த பிராம்மணன் ஒருவில்லைத் தாநம்செய்யக்கடவனென்றும் வர்த்தகியான வைசியஸ்திரீயைப்புணர்ந்த பிராம்மணன் வஸ்திரத்தைத்தாநம் செய்யக்கடவனென்றும், அப்படிப்பட்ட சூத்திரஸ்திரீகமநம்செய்த பிராம்மணன் பிராம்மணனுக்குப் பால்குடத்தைக்கொடுப்பதோடு ஒருநாள் உபவாஸமிருந்து பிராம்மணபோஜநம் செய்விப்பதை அநுஷ்டிக்கக்கடவனென்றும் முப்பத்தறுவர்மதத்தில்சொல்லப்பட்டது.

வியபிசாரத்தினால் நாலுபேரைப்புணர்ந்தவள் ஸ்வைரிணீஎன்றும் ஐந்துபேரைப்புணர்ந்தவள் வர்த்தகிஎன்றும் வேறுஸ்மிருதியில் சொல்லப்பட்டது. இங்குச்சொன்ன பிராயச்சித்தம் கர்ப்பந்தரிக்காத ஸங்கமத்தைப்பற்றியதென்றறிக. கர்ப்பந்தரித்தவிஷயத்தில் ஸாதாரணமானபுணர்ச்சி விஷயத்தில் சொல்லியபிராயச்சித்தத்தை இரட்டிப்பாகச் செய்யவேண்டுமென்று உசநாசொன்னார். சூத்திரஸ்திரீயிடத்தில் கர்ப்பாதாநம்செய்தவன் மூன்றுவருஷகாலம் நாலாவதுகாலமான ராத்திரியில் புசிக்கக்கடவனென்றும் கர்ப்பந்தரியாதபுணர்ச்சிவிஷயத்தில் தாழ்ந்தஜாதிகளான சூத்திரர்களுடைய ஸ்திரீயை அறிந்து புணர்ந்த பிராம்மணன் பிராஜாபத்திய கிருச்சிரத்தையாவது வருணனை உத்தேசித்த யாகத்தையாவது செய்யக்கடவனென்றும் இருபத்துநால்வர்மதத்தில் சொல்லப்பட்டது.

புல்கஸீகமநப்பிராயச்சித்தம். புல்கஸியை அறிந்தாவது அறியாமலாவது புணர்ந்தவன் சாந்திராயணகிருச்சிரத்தினால் சுத்தனாகிறானென்றும், நட்டுவக்காரஜாதிப்பெண், கூத்தாடிப்பெண், வண்ணாரப்பெண், மூங்கில்பாய்வேலை செய்யுமொருவித ஜாதிப்பெண், தோல்வேலைசெய்து ஜீவிக்கும் ஒருவிதஜாதிப்பெண் ஆகிய இவர்களைப்

புணர்ந்தவன் சாந்திராயணத்தினால் சுத்தனாகிறானென்றும் ஸம்வர்த்தர்சொன்னார். வண்ணான், வேடன், கூத்தாடி மூங்கில்வேலையால் பிழைக்குமொருவித ஜாதியான், தோல்வேலையால் பிழைக்குமொருவிதஜாதியான் இவர்களுடைய ஸ்திரீகமநத்திலிரண்டு சாந்திராயணம் செய்யத்தக்கனவாமென்று பிருஹத்ஸம்வர்த்தரும்,மிலேச்சஸ்திரீ,நட்டுவப்பெண், வண்ணாரப்பெண், புருடனொன்னும்குருவிக்காரப்பெண் இவர்கள்கமநத்தி லிரண்டு சாந்திராயணங்கள் செய்யத்தக்கவைகளென்று ஆபஸ்தம்பரும்சொன்னது அடிக்கடிபுணருவதைப்பற்றியதென்றும் கீழ்ச்சொன்ன ஸ்திரீகமநத்தில் ஒருபிராஜாபத்திய கிருச்சிரம் செய்யத்தக்கதென்கிற சாதாதபவசநம் சுக்கிலத்தைவிடுவதற்குமுன் ஒழிந்த புணர்ச்சியைப் பற்றியதென்று மறிக. காபாலிக மதத்திலிருக்கும் ஸ்திரீயின் அந்நத்தை அறிந்து புசித்தவனும் அவளை அறிந்துபுணர்ந்தவனும் அப்தகிருச்சிரத்தையும் அறியாமல் புசித்தவனும் புணர்ந்தவனும் இரண்டுசாந்திராயணங்களையும் செய்யக்கடவர்களென்று யமமுனிவர்சொன்னார்.

கர்ப்பத்தை உண்டுபண்ணுதலின் பிராயச்சித்தம். பிராம்மணஸ்திரீகமநத்தில் பிராஜாபத்திய கிருச்சிரத்தையும், கர்ப்பத்தை உண்டுபண்ணினால் ஸாந்தபநகிருச்சிரத்தையும், க்ஷத்திரியஸ்திரீயிடத்தில் கர்ப்பத்தைஉண்டுபண்ணினால் பராக கிருச்சிரத்தையும் வைசியஸ்திரீயிடத்தில்கர்ப்பத்தைஉண்டுபண்ணினால் திரிராத்திரகிருச்சிரத்தையும், சூத்திரஸ்திரீயிடத்தில் கர்ப்பத்தை உண்டுபண்ணினால் இருபிறப்பாளன் சாந்திராயணவிரதத்தையும், சண்டாளஸ்திரீயிடத்தில் கர்ப்பத்தை உண்டுபண்ணினால் குருதாரகமந விரதத்தையும், செய்யவேண்டுமென்றும் விதவாகமநத்தில் ஒருபகல் ஒரு இரவோடு கூடிச்செய்யத்தக்க பிராஜாபத்தியகிருச்சிரம் பிராயச்சித்தமாமென்றும் ஒருவித விரதத்தை அநுஷ்டிப்பவளைப் புணர்ந்த விஷயத்தில் ஒன்றேகால் பிராஜாபத்தியகிருச்சிரம் செய்யத்தக்கதாமென்றும் இருபத்துநால்வர் மதத்தில் சொல்லப்பட்டது. எந்தப்பிராம்மணன் தன் தர்மபத்நியினுடைய முகத்தில் மைதுநத்தைச் செய்கிறானோ அவன் தோஷத்தை அடைகிறானென்றும் பிராஜாபத்தியகிருச்சிரத்தால் அந்தத்தோஷம் நிவாரணமாகிச் சுத்தனாகிறானென்றும் உசநாஎன்பவர்சொன்னார்.

ரஜஸ்வலையைப்புணருவதின் பிராயச்சித்தம். ரஜஸ்வலையாயிருப்பவள், கர்ப்பிணி,மகாபாதகம் செய்தவள் ஆகிய இவர்களைப்புணர்ந்தவன் அதிகிருச்சிரத்தைச் செய்யக்கடவனென்றுஸம்வர்த்தரும்,

அஞ்ஞாநத்தினல் ரஜஸ்வலையைப்புணர்ந்தபிராம்மணன்பிராஜாபத்தியகிருச்சிரத்தினுலும் பிராம்மணபோஜநம் செய்விப்பதினுலும் சுத்தனுகிருனென்று ஆபஸ்தம்பரும், ரஜஸ்வலையை முதல்நாளில்புணர்ந்தவன் பராககிருச்சிரத்தையும், இரண்டாவதுநாளில்புணர்ந்தவன் ஸாந்தபநகிருச்சிரத்தையும், மூன்ருநாளில்புணர்ந்தவன் பிராஜாபத்தியகிருச்சிரத்தையும் செய்யவேண்டுமென்று இருபத்துநால்வர் மதத்திலும், ஜலத்தில் மலமூத்திரங்களை யொழித்தாலும், நாய் காக்கை இவைகள் தன்மேல்பட்டாலும், உடுத்திருந்த வஸ்திரத்தோடு ஸ்நாநம்செய்து மஹாவியாஹிருதிகளால் ஹோமம்செய்வது பிராயச்சித்தமாமென்றும் ரஜஸ்வலையைப்புணருவதிலும்இதுவே பிராயச்சித்தமாமென்றும்,சாதாதபரும், ரஜஸ்வலையைப்புணருவதில்கறுத்தலிங்கத்தையுடையதான வெளுத்தவிருஷபத்தைத் தாநம் செய்யக்கடவனென்று வசிஷ்டரும்,பெண்குதிரைமுதலியவைகளிலும், புருஷனிடத்திலும், ரஜஸ்வலையினிடத்திலும், ஸ்திரீசரீரத்தில் யோநியல்லாதவிடத்திலும் ஜலத்திலும் சுக்கிலத்தைவிட்டவன் ஸாந்தபநகிருச்சிரத்தைச் செய்யக்கடவனென்று மநுவும், ரஜஸ்வலையைப்புணருவதில் மூன்றுநாள் உபவாஸமிருக்கவேண்டுமென்று கௌதமரும்;மூன்றுஉபவாஸத்துடன் நெய்யைக்குடிக்கவேண்டுமென்று சங்கலிகிதர்களும் சொன்னுர்கள். இந்தவசநங்களில் ஓரேபாபத்தைப்பற்றிச் சில அதிகபிராயச்சித்தத்தையும் சில குறைந்தபிராயச்சித்தத்தையும் விதிப்பதை ஆலோசித்து இருவரும் சம்மதித்தவிஷயத்தைப்பற்றியும் ஒருவர்சம்மதித்தவிஷயத்தைப்பற்றியும் என்று அந்தந்த வசநங்களின் பொருளுக்குத்தக்க ஏற்பாடுசெய்யத்தக்கதென்றறிக.

அத்தைமகள் அம்மான்மகள் முதலியவர்களின் விவாகத்தின் பிராயச்சித்தம். அத்தையின்பெண்ணையும் அம்மான்பெண்ணையும் தாய்கோத்திரத்தையுடையவளையும் தனக்குச்சரியான வயதுடையவளையும் விவாகம்செய்துகொண்டவன் சாந்திராயண விரதத்தைச் செய்து அவளைப்பரித்தியாகம்பண்ணி அந்நவஸ்திரங்களைக்கொடுத்து அவளைக்காப்பாற்றக்கடவனென்று சுமந்துவும், தன்கோத்திரத்தை அல்லது தன்பிரவரத்தை யுடைய பெண்ணை விவாகம்செய்து அவளிடத்தில் சுக்கிலத்தை ஒழித்தவன் அதிகிருச்சிரத்தைச் செய்யக்கடவனென்று சாதாதபரும், தன்கோத்திரத்தையுடைய பெண்ணை அஞ்ஞாநத்தினல் விவாகம் செய்துகொண்டால் அவளைத் தாயைப்போல் ரக்ஷிக்கவேண்டுமென்றும் அவளிடத்தில் சந்ததியை உண்டுபண்ணினுல்பாதகிருச்சிரத்தைச்செய்து மந்திரங்களால் ஓமம் பண்ணவேண்டுமென்றும் போதாயநரும் சொன்னுர்கள்.

ஆசாரகாண்ட மிரண்டாவதுஅத்தியாயத்தில் விவாகபிரகரண த்தில் அத்தைமகளுக்கும் அம்மான்மகளுக்கும் விவாகத்தை அங்கீக ரித்துச்சொல்லி இங்கு அதைப்பற்றிப் பிராயச்சித்தம் விதிப்பது வி ருத்தமன்றோவெனில் பிராம்மம்முதலிய வைதிகவிதிகளால் விவா கம்செய்யப்பட்டால் அம்மான்மகளுக்கு மாதிர்கோத்திரமும் மாதிர் ஸாபிண்டியமுமொழிகின்றனவென்று அங்கு விவாகம் ஒப்புக்கொள் ளப்பட்டது. அப்படிச்செய்யாமல் ஆஸுரம்முதலிய விதிகளால் வி வாகம் செய்துகொள்ளப்பட்டால் அந்தப்பெண்களுக்கு மாதிர்கோத் திரமும் மாதிர்ஸாபிண்டியமும்ஒழியாவாகையால்அப்படிப்பட்டஅம் மான்பெண்விவாகத்தைப்பற்றியது இந்தப்பிராயச்சித்தவிதியென்ற றிக. குருதாரகமந பிராயச்சித்தவிஷயத்தில் முன்சொன்னதைக்காட் டிலும் வேறுவிதமாக அதாவது மஹாவிரதத்தையாவது அநுஷ்டிக் கக்கடவனென்றும் தன்பொருளெல்லாவற்றையுமாவது கொடுக்கக் கடவனென்றும் குருநிமித்தமாக யுத்தத்தில் மரணத்தையாவது அ டையக்கடவனென்றும் அங்கிராவும், குருதாரகமநம்செய்தவன் ஒரு வருஷகாலம் முள்ளுள்ளமரத்தின் கிளையைத்தழுவிக்கொண்டு தரை யில்படுப்பவனாகி மூன்றுகாலங்களிலும் பிக்ஷைஏந்திப் புசித்தும்அல் லது அசுவமேதத்தில் அவபிர்தஸ்நாநம் செய்தும் சுத்தனாகிறானென் றும் சுமந்துவும் சொல்லியிருக்கிறார்களே எனில் கீழ்ச்சொன்ன கிர மப்படி குரு, அவருடைய மனைவிகள், அவர்களைப் புணர்ந்தவகை இவைகளின் பேதங்களை அநுஸரித்து இந்த வசநங்களுக்கு விய வஸ்தை செய்யத்தக்கதென்றறிக. (கஉ, கஙூ)

౧౪ ॥ పశువేశ్యాభిగమనే మహిష్యుష్ట్రీకపీంతథా ।
ఖరీంచసూకరీంగత్వా ప్రాజాపత్యంసమాచరేత్ ॥

பசுவையும் தாஸி முதலியவர்களையும் புணர்தலின் பிராயச் சித்தம். (இ-ள்) குதிரைமுதலிய பசுக்களையும் விலைமாதர் முதலிய ஸ்திரீகளையும், எருமை, பெண்ஒட்டகம், பெண்குரங்கு, பெண்கழு தை, பெண்பன்றி ஆகிய இவைகளையும் புணர்ந்தவன் பிராஜாபத் தியகிருச்சிரத்தைச் செய்யக்கடவன் (எ-று)

தாஸிவிஷயத்தில் சொல்லிய இந்தப்பிராயச்சித்தம் கர்ப்பந்த ரிப்பதற்கு முந்திய ஸங்கமத்தைப்பற்றியதென்றறிக. தாஸியினிட த்தில் கர்ப்பத்தை உண்டுபண்ணினவன் பிக்ஷாந்நத்தைப் புசிப்பவ னாகி இந்திரியங்களை ஜயித்து லக்ஷம்தரம் காயத்திரியை ஜபித்தால் சுத்தனாகிறானென்று கண்ணுவர் சொன்னார். பெட்டை நாயைப்

புணர்ந்த இருபிறப்பாளன் அதிகிருச்சிரத்தைச் செய்யக்கடவனெ ன்று இருபத்துநால்வர் மதத்தில் சொல்லப்பட்டது. (கங)

౧౪॥ గోగామీచ త్రిరాత్రేణ గామేకాం బ్రాహ్మణోదదత్ ॥

(இ-ள்) கோவைப்புணர்ந்த பிராம்மணன் ஒருகோதானத்தை யும் திரிராத்திர கிருச்சிரத்தையும் செய்தால் சுத்தனாகிறான். (எ-று)

இந்தவிதி ஒருதரம் புணர்ந்து சுக்கிலத்தை விடுகிறதற்குமுன் ஒழிந்தவனைப்பற்றியதென்றறிக. சுக்கிலத்தையொழிக்கும் வரை யிலும் கோகமநம்செய்தவன் ஸாந்தபந கிருச்சிரத்தைச் செய்யக்கட வனென்று ஸம்வர்த்தர் சொன்னார். அயல்மாதரையும் பசுவையும் புணர்ந்தவன் தப்தகிருச்சிரத்தைச் செய்யக்கடவனென்று ஜாபாலி சொன்னது அடிக்கடி புணர்ந்தவிஷயம். அயல் மாதரிடத்திலும், பசுயோநியிலும், மற்றும் திரியக்ஜாதிகளிலும், ஆகாசத்திலும், ஜல த்திலும், பகலிலும், வண்டியிலும், புணர்ந்து சுக்கிலத்தை விட்டவ ன் ஸசேலஸ்நாநத்தோடு கோவிரதத்தைச் செய்யக்கடவனென்று விஷ்ணுசொன்னது அடிக்கடி இந்தப் பாபத்தை வழக்கமாகச்செய் பவனைப்பற்றியது. திரியக்யோநிகளில் புணர்ந்தவன் பசுவைத்தவிர மற்றப் பசுஜாதிவிஷயத்தில் ஸசேலஸ்நாநத்தைச்செய்து புற்களைப் பசுக்களுக்குப்போட்டு ஒருவருஷம் பிராஜாபத்திய கிருச்சிரத்தைச் செய்யக்கடவனென்று சங்கலிகிதர்கள் சொன்னது வேதங்களை ஒதி யுணர்ந்த பிராம்மணன் பசுவைப் புணர்ந்ததைப் பற்றியது. எருது கட்டின வண்டிமுதலிய வாகநங்கள்மேலேறியிருக்குந் தருணத்தில் அங்கு ஸ்திரீகமநத்தைச்செய்த இருபிறப்பாளன் மூன்றுநாள் உப வாஸமிருந்து ஸசேலஸ்நாநம்செய்து பசுக்களுக்கு ஒரு ஆடகப்பிர மாணம் யவதாநியத்தைக் கொடுத்து நெய்யைக்குடித்தால் சுத்தனா கிறானென்று யமமுனிவர் சொன்னார். எருதுகட்டிய வாகநத்தின் மேல் ஏறிக்கொண்டிருக்கையில் புருஷனிடத்திலாவது ஸ்திரீயினி டத்திலாவது ஜலத்திலாவது பகலில் மைதுநம்செய்த பிராம்மணா ன் ஸசேலஸ்நாநம் செய்யக்கடவனென்று மநுசொன்னார். (கச)

౧౫ ॥ మహిషీముష్ట్రికీగామీ త్వహోరాత్రేణశుధ్యతి॥

(இ-ள்) எருமை, பெண்ஒட்டகம், பெண்கழுதை இவைகளைப் புணர்ந்தவன் ஒருநாள் உபவாஸத்தினால் சுத்தனாகிறான். (எ-று)

இந்தவிதி எருமை முதலியவைகளை ஒருதடவை புணர்ந்தவ னைப்பற்றியதென்றும் கீழேபதினான்காவது சுலோகத்தில் சொன்ன

விதி அடிக்கடி அவைகளைப் புணர்ந்தவனைப் பற்றியதென்றும் அறிக. (கரு)

౧౬॥ డామరే సమరే వాపి దుర్భిక్షే వా జనక్షయే ।
బందిగ్రాహే భయార్తే వా సదా స్వస్త్రీం నిరీక్షయేత్ ॥

(இ-ள்) சத்துருசேனையினால் வந்த தேசபீடையிலாவது யுத்தத்திலாவது மழையில்லாமையினால் அன்னமின்றி வருந்துகிற துர்ப்பிக்ஷத்திலாவது வைசூரிமுதலிய பீடைகளால் உண்டான ஜனக்ஷயத்திலாவது பலாத்காரத்தினால் ஸ்திரீகளை அபகரிக்கையிலாவது திருடர் அரசர்முதலியவர்களிடத்தில் பயநிமித்தமான பீடையிலாவது இன்னும் இவைபோன்ற ஆபத்துக்களிலாவது எப்போதும் புருஷன் தன்ஸ்திரீயை உபேக்ஷிக்காமல் பார்க்கக்கடவன். (எ-று.) அவளை எப்படியாவது ரக்ஷிக்கவேண்டுமென்பது கருத்து. (கசு)

౧౭॥ చండాలైస్సహ సంపర్కం యా నారీ కురుతే తతః ।
విప్రాన్ దశావరాన్ కృత్వా స్వకం దోషం ప్రకాశయేత్ ॥

౧౮॥ ఆకంఠసమ్మితే కూపే గోమయోదకకర్దమే ।
తత్ర స్థిత్వా నిరాహారా త్వహోరాత్రేణ నిష్క్రమేత్ ॥

౧౯॥ సశిఖం వపనం కృత్వా భుంజీయాద్యావకౌదనమ్ ।
త్రిరాత్రముపవాసిత్వా త్వేకరాత్రం జలే వసేత్ ॥

౨౦॥ శంఖపుష్పలతామూలం పత్రం వా కుసుమం ఫలమ్ ।
సువర్ణం పంచగవ్యం చ క్వాథయిత్వా పిబేజ్జలమ్ ॥

౨౧॥ ఏకభక్తం చరేత్పశ్చాద్యావత్పుష్పవతీ భవేత్ ।
వ్రతం చరతి తద్యావత్తావత్సంవర్తతే బహిః ॥

(இ-ள்.) கீழேசொன்ன ஆபத்துக்களில் ஒருவன் தன் ஸ்திரீயை ரக்ஷிக்கச் சக்தியற்றிருக்கையில் எந்தஸ்திரீ சண்டாளர்களோடு ஸங்கமத்தைச் செய்கிறாளோ அவள் இந்தக் காண்டம் ஐந்தாம் அத்தியாயத்தில் சொல்லிய பரிஷத்திற்கேற்றவர்களும் பத்துப்பேரை தாழ்ந்தகணக்காகவுடையவர்களுமான பிராம்மணர்களைப் பரிஷத்தாக ஏற்படுத்தி அவர்கள்முன் தன்பாபத்தை அறிவித்து அவர்களுடைய அநுமதிபெற்றுப் பிராயச்சித்தத்தை மேலேசொல்லுகிறபடிசெய்து சாணிச்சேற்றையும் சாணிஜலத்தையும் பூர்ணமாகவுடையதும் தன்கழுத்தளவு ஆழமுள்ளதுமான கிணற்றில் ஆகார

மின்றி ஒருநாள் இருந்து மறுநாள் வெளிப்பட்டு க்ஷௌரம்செய்வித்துக்கொண்டு யவஅரிசிஅந்நத்தைப் புசித்துப் பின்பு மூன்றுநாள் உபவாஸமிருந்து நாலாவது நாள்முழுதும் கழுத்தளவு ஜலத்தில் நின்று ஐந்தாவதுநாள் சங்கபுஷ்பமென்னும் ஒருவிதமான ஓஷதியினுடைய கொடி, வேர், இலை, புஷ்பம், பழம் இவைகளோடும் சுவர்ணத்தோடும் பஞ்சகவியத்தோடும் சேர்த்துக் கொதிப்பிக்கப்பட்ட ஜலத்தைக் குடித்துப் பின்பு ஆறுவது நாள்தொடங்கி ருதுவாகும் வரையிலும் ஒருவேளை புசித்துக்கொண்டு எவ்வளவுகாலம் இந்தவிரதத்தைச் செய்கிறளோ அவ்வளவுகாலம் வீட்டிற்கு வெளியில் வசிக்கக்கடவள். (எ-று). (கஎ, கஅ, கக, உ0, உக)

౨౨ ॥ ప్రాయశ్చిత్తే తతశ్చీర్ణే కుర్యాద్బ్రాహ్మణభోజనమ్ ।
గోద్వయం దక్షిణాం దద్యా చ్ఛుద్ధిం పారాశరో౽బ్రవీత్ ॥

(இ-ள்.) இவ்விதமான பிராயச்சித்தமானது அநுஷ்டிக்கப்பட்டபின்பு பிராம்மணபோஜநத்தைச் செய்வித்து எருதுடன்பசுவைத் தக்ஷிணையாகக்கொடுத்தால் சுத்தியுண்டாகுமென்று விருத்தபராசரர் கூறினர். (எ-று).

இவ்விதமாக விரதத்தைச்சொல்லி வருகையில் சங்கபுஷ்பமென்னும் கொடிமுதலியவைகளைச்சேர்த்துக் கொதிக்கவைத்த பாலைக் குடிக்கவேண்டுமென்று ஸ்வாயம்புவமநு சொன்னது அறியாமல்செய்த சண்டாள ஸங்கமத்தைப்பற்றியதென்றறிக. அறிந்து சண்டாள ஸங்கமத்தைச்செய்த ஸ்திரீ அப்த கிருச்சிரத்தைச் செய்யக்கடவளென்றும் சண்டாளஸங்கமத்தைச்செய்து கர்ப்பந்தரித்தவள் பிரஸவிக்கும்வரையில் பிராயச்சித்தத்தைச்செய்துகொள்ளத்தக்கவளல்லளென்றும் அவ்வளவுகாலம் வீட்டில் வசிக்கவும் தன்சரீரத்திற்கு அலங்காரங்களைச்செய்யவும் தன் பதியோடு சயநிக்கவும் பந்துக்களோடு புசிக்கவும் தகாதென்றும், பிரஸவித்தபின் அப்தகிருச்சிர பிராயச்சித்தத்தைச்செய்யக்கடவளென்றும்; பின்பு பிராம்மணனுக்கு ஸ்வர்ணத்தையாவது பசுவையாவது தக்ஷிணையாகக்கொடுக்கவேண்டுமென்றும் ரிசியசிருங்கமுனிவர் சொன்னர். அறிந்து சண்டாள ஸங்கமத்தை அல்லது சண்டாளாந்ந போஜநத்தைச் செய்தவள் நன்ருகக் கொழுந்துவிட்டுக் கிளர்ந்தெரிகிற அக்நியில் விழுந்து மரிப்பதினுல் சுத்தியை அடைகிருளென்று உசநா சொன்னர். இங்கு சொன்ன சண்டாள ஸங்கமம் சுக்கிலத்தை யொழிப்பதுவரையில் பூர்ணமாகச்செய்ததென்றறிக. (உஉ)

౨౩ ॥ చాతుర్వర్ణ్యస్యనారీణాం కృచ్ఛ్రంచాంద్రాయణంస్మృతమ్ ।
యథాభూమి స్తథానారీ తస్మాత్తాంనతుదూషయేత్ ॥

(இ-ள்.) நான்குவர்ணத்திய ஸ்திரீகளுக்கும் சண்டாளஸங்கமத்தில் சாந்திராயணகிருச்சிரம் விதிக்கப்பட்டது. பூமி எப்படியோ அப்படியே ஸ்திரீயுமாகிறு ளாகையால் ஸ்திரீயானவள் தூஷிக்கக் கடவள் அல்லள். (விடத்தக்கவளல்லள்.) (எ-று).

சண்டாளன் வசித்தபூமியை எப்படிச் சில சுத்திகளைச்செய்து அங்கீகரிக்கிறார்களோ அப்படியே சண்டாளஸங்கமஞ்செய்த ஸ்திரீயையும் அவள் விதிப்படி பிராயச்சித்தஞ்செய்துகொண்டபின் அங்கிகரிக்கவேண்டுமென்பது கருத்து. இங்குச்சொன்ன சண்டாள ஸம்ஸர்க்கம் சுக்கிலத்தை விடுவதற்குமுன் ஒழிந்தவிஷயமென்றறிக. ஸ்திரீக்குப் பூமியைத் திருஷ்டாந்தம் சொன்னதினால் சண்டாளஸங்கமஞ்செய்த ஸ்திரீயைப் பரித்தியாகம் செய்யவேண்டுமென்னும் சங்கை ஒழிக்கப்பட்டது. சண்டாளசங்கமத்தைப் பிராம்மணஸ்திரீ அறிந்துசெய்தபக்ஷத்தில் நாலு சாந்திராயணத்தையும் அறியாமல்செய்தபக்ஷத்தில்இரண்டுசாந்திராயணத்தையும் செய்யவேண்டுமென்று ஸம்வர்த்தர் அதிகமாகப் பிராயச்சித்தத்தை விதித்திருக்கிறபடியால் மூலத்தில் நான்கு வர்ணத்திய ஸ்திரீகளுக்கு மென்கிறவிடத்தில் பிராம்மணவர்ணத்தைத் தவிர மூன்றுவர்ணங்களையும் பொருளாகக் கொள்ளவேண்டும். (உங)

౨౪॥ బందీగ్రాహేణయాభుక్తా హత్వాబద్ధ్వాబలాద్భయాత్ ।
కృత్వాసాంతపనంకృచ్ఛ్రం శుద్ధింపారాశరోబ్రవీత్ ॥
౨౫॥ సకృద్భుక్తాతుయానారీ నేచ్ఛంతీపాపకర్మభిః ।
ప్రాజాపత్యేనశుద్ధ్యేత ఋతుప్రస్రవణేనచ॥

(இ-ள்.) ஆபத்காலத்தில் சூத்திரர்முதலியவர்களால் பலாத்காரத்தினால் பிராம்மணஸ்திரீ அநுபவிக்கப்பட்டால் அவள் தலைமுழுதும் க்ஷௌரம்செய்வித்துக்கொண்டு ஸாந்தபநகிருச்சிரத்தைச் செய்தால் சுத்தியை அடைகிறுளென்று விருத்தபராசரர் கூறினார். எந்தஸ்திரீயானவள் தான் இச்சிக்காதவளாகிப் பாபசீலர்களான சில சூத்திராதிகளால் ஒருதரம் அநுபவிக்கப்பட்டாளோ அவள் பிராஜாபத்திய கிருச்சிரத்தாலும் ருதுவாகிறதினாலும் சுத்தையாகிறுள். (எ-று).

கர்ப்பத்தில் பிராயச்சித்தம்செய்தால் கர்ப்பம்சேதமாகுமாதலால் பிரஸவித்த பின்பு யவஅரிசி அங்கபோஜநவிரதத்தை ஒருமாஸம் அநுஷ்டித்துத் தோஷமில்லாத அந்தச்சிசுவுக்கு விதிப்படி ஜாதகர்மம் முதலிய ஸம்ஸ்காரங்களைச் செய்யவேண்டுமென்று வேறு ஸ்மிருதியில் சொல்லப்பட்டது. (உச,உரு)

௨௬॥ పతత్యర్ధం శరీరస్య యస్యభార్యాసురాంపిబేత్ ।
పతితార్ధశరీరస్య నిష్కృతిర్నవిధీయతే ॥

(இ-ள்.) எந்தப்பிராம்மணனுடைய மனைவியானவள் எந்தவர்ணத்தில் பிறந்தவளாகிலும் கள்ளைக்குடிக்கிருளோ அவனுடைய ஸ்திரீ புருஷரூபமானசரீரத்தில் பாதிபாகமானது தோஷத்தைஅடைகிறது. தோஷத்தைஅடைந்த பாதிசரீரத்தையுடையவனான புருஷனுக்கு அல்லது தோஷத்தைஅடைந்த ஸ்திரீரூபமான பாதிசரீரத்திற்கு ஸுராபாநத்திற்கு விதித்திருக்கும் பிராயச்சித்தம்தவிர வேறு பிராயச்சித்தம் விதிக்கப்படவில்லை. (எ-று.)

மனைவியானவள் கணவனுடைய பாதிசரீரமானவளென்பது வேதத்தில்சொல்லப்பட்டது. ஸுராபாநப்பிராயச்சித்தமே அவளால் செய்யத்தக்கதென்பதுகருத்து.பதிதார்த்தசரீரன்என்னும் வாக்கியத்திற்குப்பதிதமான பாதிசரீரத்தையுடைய புருஷனுக்கு என்று அர்த்தம்செய்கிறபக்ஷத்தில் புருஷன்தான் கள்ளைக்குடியாதவனேயாகிலும் தன்மனைவி கள்ளைக்குடித்தநிமித்தத்தினுல் கர்மாநுஷ்டானத்தில் தனக்கு அதிகாரந்தவறுகிறபடியால் தானும் பிராயச்சித்தத்தைச் செய்துகொள்ளவேண்டுமென்று அர்த்தமாகிறது. இந்தநீதியையநுஸரித்தே ஸ்திரீசெய்ததோஷத்தினுல்புருஷனுக்குஎப்படிபாபம் ஸம்பவிக்கிறதோ அப்படியே புருஷன் செய்த தர்மத்தினுல் ஸ்திரீக்குச் சுத்தி ஸம்பவிக்கிறதென்று சங்கிக்கவேண்டியதில்லையென்றும், ஏனெனில் கள்ளைக்குடித்த பிராம்மண ஸ்திரீயானவள் இறந்தபின் தன்பதியின்லோகத்தை அடையாமல் இந்தலோகத்திலேயே பெண்நாயாகவும், பெண்கழுகாகவும், பெண்பன்றியாகவும், பிறக்கிருளென்று யாக்ஞவல்கியரும், கள் சாராயம்முதலியவைகளைக் குடித்த பிராம்மணஸ்திரீ தேவர்களால் பிதிர்லோகத்தை அடைவிக்கப்படாமல் இந்தலோகத்திலேயே புண்ணியம் க்ஷயித்துக் கொள்ளிவாய்ப்பிசாசமாகப் பிறக்கிருளென்று வஸிஷ்டரும்சொன்னுர்கள். பாபம் செய்த ஸ்திரீயானவள் பிராயச்சித்தத்தினுல் சுத்தியை அடைகிருளேயன்றி பதியின் புண்ணியத்தினுல் சுத்தியை அடைகிறதில்லையென்றறிக. (உசு)

௮௨பு॥ గాయత్రీంజపమానస్తు కృచ్ఛ్రంసాంతపనంచరేత్ ॥

பதிதார்த்தசரீரபிராயச்சித்தம். (இ-ள்.) பதிதமான பாதி சரீரத்தையுடையவன் விரதம்முடிகிறவரையில் காயத்திரியை ஜபிப்பவனாய் ஸாந்தபநகிருச்சிரத்தைச் செய்யக்கடவன். (எ-று.) (உசுற)

௨௯பு॥ గోమూత్రంగోమయంక్షీరం దధిసర్పిఃకుశోదకమ్।
ఏకరాత్రోపవాసశ్చ కృచ్ఛ్రంసాంతపనంస్మృతమ్ ॥

(இ-ள்.) **ஸாந்தபநகிருச்சிரத்தின்லக்ஷணம்.** கோமூத்திரத்தை ஒருநாள்குடித்துக் கோமயத்தைஒருநாள்புசித்து க்ஷீரத்தைஒருநாளும் தயிரைஒருநாளும் நெய்யைஒருநாளும் தர்ப்பஜலத்தை ஒருநாளுமாகக்குடித்து ஒருநாள் உபவாஸமிருப்பது ஸாந்தபநகிருச்சிரமாகும்.

ஸாந்தபநகிருச்சிரம் வெகுவிதமாகையால் இங்குச்செய்யவேண்டிய ஸாந்தபநவிசேஷமிதனுல் சொல்லப்பட்டது. த்விராத்திரஸாந்தபநம் த்ரிராத்திரஸாந்தபநம் என்று ஸாந்தபநம்இரண்டுவிதமாகச் சொல்லப்படும். அதினுடையலக்ஷணம் பிராயச்சித்தகாண்டம்முதல் அத்தியாயத்தில் யாக்கியவல்கியருடைய இரண்டுவசநங்களை உதாஹரணமாகக்காட்டிச் சொல்லப்பட்டது. இதுவரையில் அந்நியபுருஷஸங்கமத்தைச்செய்து அதைத்தோஷமென்றுவிட்டுத் தோஷத்தைச் செய்தோமென்று பரிதபித்தஸ்திரீக்குப் பிராயச்சித்தம் சொல்லப்பட்டது. இனிமேல் பரபுருஷஸங்கமத்தினின்று ஒழியாமலும் பரிதபிக்காமலும் இருக்கிற ஸ்திரீயை நீக்கிவிடுதல் விதிக்கப்படுகிறது.

௩௦பு॥ జారేణజనయేద్గర్భం మృతేవ్యక్తేగతేపతౌ।
తాంత్యజేత్పరేరాష్ట్రే పతితాంపాపకారిణీమ్ ॥

(இ-ள்.) **வியபிசாரிணியைநீக்கிவிடுதல்.** பதியானவன்மரணமடைந்தவளவிலும் தேசாந்தரம்சென்றவனாய் அவன் இன்னவிதமாக இங்கிருக்கிறானென்று அறியப்படாதவளவிலும் எந்தஸ்திரீயானவள் தன்னிச்சைப்படி நடப்பவளாய் ஜாரபுருஷனால் கர்ப்பத்தையுண்டுபண்ணிக்கொள்ளுகிறாளோ, பாபத்தைச்செய்பவளும் பதிதையானவளுமான அவளை வேறொருராஜ்ஜியத்திற்குஓட்டிவிடவேண்டும்(எ-று)

பிரமகத்திமுதலிய மகாபாதகங்களைச் செய்தவளைத்தவிர மற்ற ஸ்திரீகளைப் பரித்தியாகம்செய்யக்கூடாதென்றும், அவளுக்கு அந்த மகாபாதகங்கள் விஷயத்திலும் வீட்டுவெளிப் பிராயச்சித்தத்தைச் செய்விக்கவேண்டுமென்றும், பதியினால்விடப்பட்டவளாய் அல்ப

மாகவாகிலும் அதிகமாகவாகிலும் அவள்பிராயச்சித்தத்தைச்செய்து கொண்டால் அந்தப்பாபம் ஒன்று நூருய்ப்பக்துக்களே அடைகிறதென்றும், அந்தஸ்திரீயினிடத்திலும் அவள்பிறந்தகுலத்தாரிடத்திலும் எத்தனை மயிர்களிருக்கின்றனவோ அத்தனையாயிரம் வருஷகாலம் கும்பீபாகநரகத்தில் ஸ்திரீயைப் பரித்தியாகம் செய்தவனும் அவன் ஞாதிகளும் பசநம்செய்யப்படுகிருர்களென்றும், தாய்தந்தைகளேயும், ஸ்நேகிதன் பிள்ளே இவர்களேயும் பரித்தியாகம் செய்தவர்கள் அஸிபத்திரவநம், (சிறுகத்திகளே இலேகளாகவுடையகாடு) என்னும் நரகத்தை அடைந்து பின்பு சண்டாள யோநியில் நூறு ஜந்மமெடுக்கிருர்களென்றும், இருபத்துநால்வர்மதத்தில் ஸ்திரீகளேப் பரித்தியாகம்செய்வது விலக்கப்பட்டதே யெனில் இந்த விலக்கு தோஷத்தைச்செய்து பின்பு பரிதபித்துப் பிராயச்சித்தத்திற்கேற்ற தசையிலிருக்கும் ஸ்திரீகளுடைய பரித்தியாகத்தைப் பற்றியதென்று அறிக. ஏனெனில் பாபத்தைச்செய்கிற ஸ்திரீகளில் சுவபாகஜாதியால் அநுபவிக்கப்பட்டவள், பதியைக்கொன்றவள், புத்திரனைப் புணருகிறவள், பிதாவைப் புணருகிறவள் ஆகிய நால்வரும் பரித்தியாகம் செய்யத்தக்கவர்களென்று இருபத்துநால்வரும், தன்சிஷியனைப் புணருகிறவள், தன்குருவைப்புணருகிறவள், பதியைக்கொன்றவள், ஜுங்கிலனென்கிற சுவபாகர்முதலிய ஹீநஜாதிகளேப்புணருகிறவள் ஆகிய இந்த நால்வகையினரான ஸ்திரீகளேப் பரித்தியாகஞ்செய்யவேண்டுமென்று வஸிஷ்டரும், வியபிசாரத்தைச் செய்தவள் ருதுவினுல் சுத்தையாகிருளென்றும், அந்நிய புருஷனுல் கர்ப்பத்தைத் தரித்தாலும், கர்ப்பத்தை அழித்தல், பதியைக்கொல்லுதல் முதலிய மஹாபாதகங்களேச் செய்தாலும் அந்தஸ்திரீயைப் பரித்தியாகம் செய்யவேண்டுமென்று யாக்கியவல்கியரும் விதித்தார்களாகையாலும் பதிதையானஸ்திரீயைக் கணவன் தன்வீட்டிலேயே நடைசெய்யக் கடவனென்கிற மநுவசநமிருக்கிறதே யெனில் அது பர்த்தாவினுடன் இருப்பவளேப் பற்றியதாய் மேல்சுலோகம் அவளுக்குப் பிராயச்சித்தத்தை விதிக்கிறதாகையாலும் மூலவசநம் பர்த்தா இல்லாத வியபிசார ஸ்திரீயைப்பற்றியதாய் வேறுவிஷயமாய்விட்டமையாலும் வியபிசாரம் செய்பவளே வீட்டில் அதிகாரமில்லாதவளாக்கி வஸ்திராபரணுதிகளின்றி ஆகாரம் மாத்திரம் கொடுத்துப் பர்த்தா அவளே அவமதிசெய்யக்கடவனென்கிற யாக்கியவல்கிய வசநமும் பர்த்தாவுடனிருப்பவளேப்பற்றியதாய் மூலவசநத்தோடு சேராமையாலும் மூலவசநத்தில்சொல்லிய ஸ்திரீயின் பரித்தியாகத்தி

ற்கு ஒருவிதமான விரோதமுங் காணப்படவில்லையென்றும் இது பர்த்தா இல்லாத தருணத்தில் ஜாரபுருஷனுல் உண்டுபண்ணப்பட்ட கர்ப்பமுடையவளாய்ப் பிரசித்தவியபிசாரமுடையவளைப் பற்றியதென்றும் அறிக. (உஅ)

உகூ ய॥ బ్రాహ్మణీతుయదాగచ్ఛేత్పరపుంసాసమన్వితా ।

సాతునష్టావినిర్దేశ్యానతస్యాగమనంపునః ॥

(இ-ள்.) பிராம்மணஸ்திரீயானவள் அந்நியபுருஷனேடு ஆசையைத்தோற்றுவிப்பதாகிய சிரித்துப்பேசுவது முதலியவைகளைச்செய்துகொண்டு தேசாந்தரத்தை அல்லது வேறொருகிராமத்தை அடைந்தவளாய்வர ஸாவகாசப்பட்டால் அவள் நஷ்டை அதாவது தோஷத்தினுல் நசித்தவளென்று பந்துக்கள்நடுவில் சொல்லத்தக்கவள். அவள் மறுபடியும் தன் வீட்டைஅடைவது தகாது. (எ-று.)

வீட்டிற்குவந்தாலும் வெளிப்படுத்தத் தக்கவளென்றறிக. அந்நிய புருஷனேடு என்கிற விடத்தில் பாலியம், யௌவநம்,வார்த்திகமென்னும் பருவங்களில் கிரமமாக ஸ்திரீக்கு ரக்ஷகர்களாக மநுயாக்கிய வல்கியர்களால் சொல்லப்பட்ட பிதா, பர்த்தா, புத்திரன் ஆகிய இவர்கள் தவிர மற்றவர்களோடு என்றுபொருள்கொள்ளவேண்டும். (உகூ)

௩௦ ய॥ కామాన్మోహాత్తుయాగచ్ఛేత్త్యక్త్వాబంధూన్పతింసుతాన్ ॥

సాతునష్టాపరేలోకే మానుషేషువిశేషతః ॥

(இ-ள்.) ஸ்திரீயானவள் பதியில்லாதபக்ஷத்தில் தாய், தந்தை, மகன், சகோதரன், மாமனுர், மாமியார், அம்மான் இவர்களிடத்தில் வசிக்கவேண்டுமென்றும் அப்படிவசிக்காதபக்ஷத்தில் நிந்திக்கப்படுவாளென்றும் சொல்லுகிற ஸ்திரீ தர்மத்தை அறியாமையினுலாவது காமத்தினுலாவது எந்த ஸ்திரீயானவள் பந்துக்களையும் பதியையும் பிள்ளைகளையும்விட்டு அயலூர்முதலிய விடங்களில் நெடுநாள் வசிக்கப்போய்விடுகிருளோ அவள்பரலோகத்தில்நஷ்டையானுள், (இழந்தவளானுள்)மானிடலோகத்திலும் விசேஷ நஷ்டையானுள். (எ-று.)

பரலோகத்தில் நஷ்டையானுளென்றதனுல்பரலோகத்தைஇழந்து நரகத்தை அடைகிருளென்றும், மானிடலோகத்தில் நஷ்டையானுளென்றதனுல் லஜ்ஜை அநுதாபங்களுண்டாய்ப் பிராயச்சித்தத்தைச் செய்துகொண்டாளாகில் பரலோகத்தைச் சுகமாக அடை

கிருளே யல்லது இந்த மநுஷியலோகத்தில் பந்துக்கள் நடுவில் மறுபடியும் சேருவதில்லையென்றும் கண்டுகொள்க. (௩0௨)

3०५। మదమోహగతానారీ క్రోధాద్దండాదితాడితా ।
అద్వితీయాగతాచైవ పునరాగమనంభవేత్ ॥

(இ-ள்.) தன்புருஷன், மாமனார்முதலியவர்களை அலக்ஷியம்செய்யத்துணிவைத் தருவதாகிய மதம், ஸ்திரீகளுக்குப் பதி சிசுரூஷை முக்கிய தர்மமென்னும் நீதியை அறியாமை, ஆகிய இவைகளை அடைந்திருக்கிற ஸ்திரீயானவள் சிக்ஷிப்பதற்காகப் பதிமுதலிய பெரியோர்களால் கோபத்தினால் தடிமுதலியவைகளைக்கொண்டு அடிக்கப்பட்டவளாய் அந்தநோயினால் பதியையும்பந்துக்களையும்விட்டுத் தானொருத்தியாய்த் தன்னிச்சையால் வெளியேபோனால் திரும்பித் தன்வீட்டைச்சேருவாள். (எ-று.)

எந்தஸ்திரீயானவள் கோபத்தினால் தன் கிருகத்தினின்று வெளிப்படுகிருளோ அவள் வீட்டில் தடுக்கத்தக்கவளென்றும் தடுக்க அசாத்தியமானபக்ஷத்தில் பந்துக்கள் கூட்டத்தில்விடத் தக்கவளென்றும் மநுசொன்னார். அந்தக்கோபம் அடங்கும் வரையில் பந்துக்கள் நடுவில்விடத் தக்கவளென்றறிக. (௩௧௨)

3-௨५॥ దశమేతుదినేప్రాప్తే ప్రాయశ్చిత్తంనవిద్యతే ।
దశాహంనత్యజేన్నారీం త్యజేన్నష్టశ్రుతాంతథా ॥

(இ-ள்) பதியினால் அல்லது பந்துக்களால் அடிக்கப்பட்டுக்கோபத்தினால் வெளியேசென்றவள் பத்தாவதுநாளில் வீட்டிற்கு வந்தாளாகில்பிராயச்சித்தம்செய்துகொள்ளத்தக்கவளன்று. பத்துநாளைக்குள்அவள் வியபிசாரம்செய்ததாகக்கேள்விப்படாதபக்ஷத்தில்அந்தஸ்ரீயை விடத்தகாது. அவள்நஷ்டையானாள் (சீலத்தை இழந்தவளானாள்)என்றுசொல்லக்கேட்டுப் பத்துநாளைக்குள் பிராயச்சித்தத்தைச் செய்துகொள்ளாதவளைப் பரித்தியாகம் செய்யவேண்டும்.(எ-று)

33 ॥ భర్తాచైవచరేత్కృచ్ఛ్రం కృచ్ఛ్రార్ధంచైవబాంధవాః ॥

(இ-ள்.) வெளிப்பட்டுப் பத்துநாளைக்குள் வியபிசாரம்செய்தாளென்று கேள்விப்பட்டும் அவளைவிடாத பர்த்தாவானவன் பிராஜாபத்திய கிருச்சிரத்தையும் பந்துக்கள் அர்த்தகிருச்சிரத்தையும் செய்துகொள்ளக்கடவர்கள். (எ-று.) (௩௩)

33५। తేషాంభుక్త్వాచపీత్వాచ అహోరాత్రేణశుధ్యతి ।

(இ-ள்.) அப்படிப் பிராயச்சித்தம் செய்துகொள்ளாதவர்களுடைய அந்நத்தையும் தீர்த்தத்தையும் புசித்துப் பாநஞ்செய்தவன் ஒருநாள் உபவாஸத்தினுல் சுத்தனுகிருன். (எ-று.) (கூகூ௦)

౩౮౯॥ బ్రాహ్మణీతుయదాగచ్ఛే త్పరపుంసావివర్జితా ।
గత్వాపుంసశ్శతంయాతి త్యజేయుస్తాంతుగోత్రిణః ॥

(இ-ள்) பிராம்மண ஸ்திரீயானவள் கோபித்தவளாகி அந்நியபுருஷனேடு சேராமல் தனித்து வெளிப்பட்டுப்போனுளேயாகில் (அப்போது பரபுருஷஸகவாஸமில்லையேயாகிலும்) வெளியேசென்று நூறுபுருஷர்களை அடைகிருளென்றெண்ணி அவளைப் பந்துக்கள் விடக்கடவர்கள். (எ-று.)

கிருகத்தைவிட்டு வெளியில்சென்றவளான பிராம்மணஸ்திரீ வெகுபுருஷர்களோடு கூடிவாசஞ்செய்தாளாகில் அவள் வியபிசாரி என்னப்படுவாளென்று பிரஜாபதிசொன்னுர். (கூசா௦)

౩౫౯॥ పుంసాయదిగృహంగచ్ఛే త్తదశుద్ధంగృహంభవేత్ ।
పతిమాతృగృహంగచ్ఛే జ్జారస్యైవతుతద్గృహమ్॥

வியபிசாரி பிரவேசித்தவீட்டின் சுத்தி (இ-ள்.) கீழ்ச்சுலோகத்தில்சொல்லப்பட்ட கெட்டபிராம்மணியானவள் சண்டாளஸ்திரீயாகிருளாகையால் அவள் தான் வாசம்செய்வதற்காகத் தன்பதி, மாதா, தன்னைப்புணர்ந்த ஜாரபுருஷன் ஆகிய இவர்களில் எவருடைய கிருகத்தில் பிரவேசிக்கிருளோ அந்தக்கிருகமானது அசுசியாகிறது. (எ-று.)

அந்தவீட்டிற்குச் சண்டாளன் புகுந்தவீட்டிற்குச் செய்யத்தக்கதாக இந்தக்காண்டம் மூன்ருவது அத்தியாயத்தில் விதித்திருக்கிற சுத்தியைச்செய்யவேண்டுமென்றறிக. (கூடு௦)

౩౬౯॥ ఉల్లిఖ్యతద్గృహంపశ్చా త్పంచగవ్యేనసేచయేత్ ।
త్యజేచ్చమృణ్మయంపాత్రం వస్త్రంకాష్ఠంచశోధయేత్ ॥

౩౭౯॥ సంభారాంచ్ఛోధయంత్సర్వా న్గోకేశైశ్చఫలోద్భవాన్ ।
తామ్రాణిపంచగవ్యేన కాంస్యానిదశభస్మభిః ॥

౩౮౯॥ ప్రాయశ్చిత్తంచరేద్విప్రో బ్రాహ్మణైరుపపాదితమ్।
గోద్వయందక్షిణాందద్యా త్ప్రాజాపత్యద్వయంచరేత్ ॥

౩౯౫|| ఇతరేషామహూరాత్రం పంచగవ్యంచశోధనమ్ ।
ఉపవాసైర్వ్రతైఃపుణ్యైస్స్నానసంధ్యార్చనాదిభిః ।
౪౦౫ || జపహోమదయాదానైశ్శుధ్యంతేబ్రాహ్మణాదయః ।
ఆకాశంవాయురగ్నిశ్చ మేధ్యంభూమిగతంజలమ్ ।
నదుష్యంతిచదర్భాశ్చ యజ్ఞేషుచమసాయథా ॥

(இ-ள்.) வியபிசாரி பிரவேசித்தவீட்டின் பூமியைச் சீவியெடுத்துப் பஞ்சகவியத்தினால் பூமியையும் சுவரையும் புரோக்ஷித்து மண்பாத்திரத்தை யெடுத்தெறிந்து வஸ்திரத்தையும் காஷ்டத்தையும் மற்றுமுள்ள தாநியம் முதலிய ஸகலஸம்பாரங்களையும் விதிப்படி அலம்பித் தெங்கு, விளா, சுரை, வில்வம், இவைகளால் செய்த குடுக்கைமுதலிய பாத்திரங்களைப் பசுவின் வால் மயிர்களால் துடைத்துத் தாம்பிரபாத்திரங்களுக்கு முன்சொல்லிய புளியினால் செய்யும் சுத்தியன்றிக்கே இங்குத் தாம்பிரபாத்திரங்களுக்குப் பஞ்சகவியத்தினாலும் வெண்கலபாத்திரங்களுக்குப் பத்துதரம் சாம்பலினாலும்சுத்தி செய்துஅந்தவீட்டுக்காரன் பரிஷத்தில் பிராம்மணர்களால் விதிக்கப்பட்ட பிராயச்சித்தத்தைச் செய்துகொள்ளக்கடவன். அதாவது விருஷபத்துடன் ஒருபசுவைத் தக்ஷிணையாகக்கொடுத்து இரண்டு பிராஜா பத்தியகிருச்சிரத்தைச் செய்யக்கடவன். மற்றும் அந்த வீட்டிலிருப்பவர்களுக்கு ஒருநாள் உபவாஸமும், பஞ்சகவியத்தைக்குடிப்பதும் பிராயச்சித்தமாகும். அந்தவீட்டில் வசிப்பவர்களோடு ஸகவாஸபோஜநாதிகளைச்செய்கிற வேறொருவீட்டிலிருப்பவர்ளான பிராம்மணாதிகள் கீழ்ச்சொன்ன உபவாஸம் பிராஜாபத்தியகிருச்சிரவிரதம் பஞ்சகவியபிராசநம் இவைகளில் ஒன்றை அநுஷ்டிப்பதினாலும் புண்ணியங்களான ஸ்நாநம் ஸந்தியாவந்தநம் தெய்வதார்ச்சநம் இவைமுதலிய தர்மங்களாலும், ஜபம், ஹோமம், ஜீவகாருண்ணியம் தாநம் இவைகளாலும் சுத்தியையடைகிறார்கள். வியபிசாரி புகுந்த வீட்டைச் சேர்ந்தவைகளான ஆகாசம், வாயு, அக்னி, பூமியில் தேங்கியஜலம் அதாவது கிணற்றுநீர், தர்ப்பங்கள் ஆகிய இவைகள் யக்கியங்களில் சமஸை என்னும் பாத்திரம்போல் தோஷத்தை அடையமாட்டா. (எ-று.)

ருத்துவிக்குவினுடைய எச்சில்பட்டபோதிலும் யக்கியத்தில் சமஸை என்னும் பாத்திரத்திற்குத் தோஷமில்லாமை சாஸ்திரத்தினால் விதிக்கப்பட்டதுபோல் கீழ்ச்சொன்ன ஆகாசம்முதலிய

வஸ்துக்கள் ஸ்வபாவத்தில் ஒன்ருேடு சம்பந்தத்தை யடையாதவை களாகையால் தாமே சுத்தவஸ்துக்களென்றறிக. வியபிசாரி விஷயத்தில் சண்டாளஸ்திரீ நியாயத்தை அங்கீகரித்துச் சொல்லிய இந்தப்பிராயச்சித்தம் நெடுநாள் வசித்தவீட்டைப்பற்றியதென்றும் ஒருதரம் பிரவேசித்தவீட்டிற்குச் சாணியினுல்மெழுகுவதுபெருக்குவது இவைகளால் சுத்தியுண்டாமென்றும் மாதவாசாரியர் உரைத்தார்.

ஏழாவது அத்தியாயம் முற்றிற்று.

எட்டாவது அத்தியாயம்.

அவதாரிகை. ஏழாவது அத்தியாயத்தில் உபபாதக விசேஷமான புணரத்தகாதமாதரைப் புணருவதின் பிராயச்சித்தத்தையும் அதின் பிரஸங்கத்தினுல் குருபத்நியைப்புணருவது முதலியவற்றின் பிராயச்சித்தத்தையும் அருளிச்செய்து இந்த எட்டாவது அத்தியாயத்தில் புசிக்கத்தகாத வஸ்துவைப் புசிப்பதற்குப் பிராயச்சித்தத்தை முக்கியமாகச் சொல்லுகிருர் ஸ்ரீபராசரமஹாமுநிவர்.

௧ ॥ అమేధ్యరేతో గోమాంసం చండాలాన్నమథాపివా ।
యది భుక్తంతువిప్రేణ కృచ్ఛ్రంచాంద్రాయణంచరేత్ ॥

புசிக்கத்தகாததைப் புசிப்பதின் பிராயச்சித்தம். (இ-ள்.) அமேத்தியமென்னும்மலம் மூத்திரம் முதலியவைகள் அவைகளுடன் சேர்ந்த அந்நம், சுக்கிலம், கோமாம்ஸம், சண்டாளாந்நம் ஆகிய இவைகளைப் புசித்தபிராம்மணன் சாந்திராயண கிருச்சிரம் செய்யக்கடவன்.

பிராம்மணனுக்கு மலமூத்திராதி போஜநம் ஸம்பவிக்காதாகிலும் அவைகளின் ஸம்பந்தமுடைய அந்நபோஜனமானது சிறியகுழந்தைகளுடன் புசித்தல்முதலிய நிமித்தங்களால் நேரிடுமென்றும், களயோநிஎன்னும் வியாதியுடையவர்களுக்குச் சுக்கிலத்தைப் பாநம்செய்வது நேரிடுமென்றும், கோமாம்ஸ சண்டாளாந்நங்களின் போஜநம் சிறைச்சாலையில் அடைபட்டிருக்குங் காலத்தில் நேரிடுமென்றும் கண்டுகொள்க. (க)

௨ ॥ తథైవక్షత్రియోవైశ్యో ప్యర్ధంచాంద్రాయణంచరేత్ ।
శూద్రోప్యేవంతథాభుక్త్వా ప్రాజాపత్యంసమాచరేత్ ॥

(இ-ள்.) பிராம்மணன் புசிக்கத்தகாததைப் புசித்தாலெப்படியோ அப்படியே க்ஷத்திரியனும் வைசியனும் பாதிசாந்திராயணம்

செய்துகொள்ளக்கடவர்கள். சூத்திரனும் அப்படியே அமேத்திய வஸ்து போஜநத்தில் பிராஜாபத்திய கிருச்சிரத்தைச்செய்துகொள்ளக்கடவன். (எ-று) (௨)

౩ ॥ పంచగవ్యంపిబేచ్ఛూద్రో బ్రహ్మకూర్చంపిబేద్ద్విజః ।
ఏకద్విత్రిచతుర్గావో దద్యాద్విప్రాద్యనుక్రమాత్ ॥

(இ-ள்.) புசிக்கத்தகாததைப்புசித்த சூத்திரன் சாந்திராயணத்தைமுடித்தபின் பஞ்சகவியத்தைப் பாநம்செய்யக்கடவன், த்விஜரென்னும் பிராம்மண க்ஷத்திரிய வைசியர்கள் மந்திரபூர்வகமான பிரமகூர்ச்ச பஞ்சகவியத்தைப் பாநம்செய்யக்கடவர்கள். பிராம்மணாதிகள் கிரமமாக ஒன்று இரண்டு மூன்று பசுக்களையாவது தாநம்செய்யக்கடவர்கள். (எ-று).

பசுக்களையாவது என்றதினால் பசுக்கள் கிடையாதபக்ஷத்தில் ஸ்வர்ணத்தைக்கொடுக்கவேண்டுமென்பது கருத்து. (௩)

౪ ॥ శూద్రాన్నంసూతకాన్నంచ అభోజ్యస్యాన్నమేవచ ।
శంకితంప్రతిషిద్ధాన్నం పూర్వోచ్ఛిష్టంతథైవచ ॥
౫ ॥ యదిభుక్తంతువిప్రేణ అజ్ఞానాదాపదోపివా ।
జ్ఞాత్వాసమాచరేత్కృచ్ఛ్రం బ్రహ్మకూర్చేనపావనమ్ ॥

(இ-ள்.) சூத்திரனுடைய அந்நமும், ஜநநாசௌசம் மரணாசௌசமுள்ளவர்களுடைய அந்நமும், புசிக்கத்தகாதவர்களுடைய அந்நமும், விஷம்முதலிய ஸம்பந்தத்தையுடையதோவென்று சந்தேகிக்கத்தக்கதான அந்நமும், பசுமுகருதல் முதலிய தோஷங்களால் நிஷித்தமான அந்நமும், பாத்திரத்தில் பரிமாறின அந்நத்தில் புசித்த சேஷமாகிக் காலாந்தரத்தில் அது புசிக்கத்தக்கதானால் பூர்வோச்சிஷ்டமென்னப்படுகிற அந்த அந்நமும், அஞ்ஞாநத்தினாலாவது ஆபத்தினாலாவது பிராம்மணனால் புசிக்கப்பட்டுப் பின்பு அறியப்பட்டால் அவன் பரிசுத்திஹேதுவான பிராஜாபத்திய கிருச்சிரத்தைப் பிரமகூர்ச்ச பஞ்சகவியத்துடன் செய்யவேண்டும். (எ-று.)

ஆஹிதாக்கியான பிராம்மணன் சூத்திராந்நத்தைப் புசித்தானாகில்அவன்சூத்திரனோடு ஸமானமாய் மரித்தபின் நாயாகப் பிறக்கிறானென்றும், சூத்திரனுடைய அந்நத்தைப் புசிப்பவனாய்ப் பிராம்மணன் வேதத்தை ஓதினானாகில் அந்த அத்தியயநபலனைச் சூத்திரன் அடைகிறானென்றும், அந்தப் பிராம்மணன்சூத்திரனாகிறானென்றும், பிராம்மணன் சூத்திராந்நத்தை மோந்தாலும் ஸ்பரிசித்தாலும் அந்

ந அந்நத்தின் ஆவி தன்மேல் பட்டாலும் அதைப்பெற்றுக்கொண்டாலும் அதைச் சிலாகித்தாலும் அவன் அந்த அந்நத்தைப் புசித்தவனுகிறானென்றும், சூத்திரனைப் பிராம்மணன் அநுக்கிரகிக்கவேண்டுமானால் சூத்திரனிடத்தில் அவனுக்குப் புரோகிதனான பிராம்மணன் ஆமமாகவாவது சமைத்ததாகவாவது அந்நத்தை வாங்கிக்கொள்ளலாமென்றும், அதை வாங்கியபின் ஆமத்தை குரு அதிதிகள் இவர்களுக்கும் அந்நத்தைத் தன் வேலைக்காரனுக்கும் கொடுக்கவேண்டுமேயன்றி அதனால்தான் திருப்தி அடையக்கூடாதென்றும், சூத்திராந்ந ரஸத்தினால் எவனுடைய சரீரம் வளருகிறதோ அவன் ஜபம் ஹோமம் அத்தியயநம் இவைகளைச்செய்தபோதிலும் அவனுக்கு நற்கதியில்லையென்றும், ஆறுமாஸகாலம் விடாமல் சூத்திராந்நத்தைப் புசித்தவன் பிழைத்திருக்கையில் சூத்திரனாய்மரித்தபின் நாயாகப்பிறக்கிறானென்றும், சூத்திராந்நபோஜநத்தை விடாதவனாகவே மரித்தானாகில் ஆஹிதாக்நியானவன்கூட சூத்திரன் அடையுங்கதியைத்தானே அடைகிறானென்றும் அங்கிரசு சொன்னார்.

ராஜாந்நம் தேஜஸையும், சூத்திராந்நம் வேதாத்தியயநம் சிலம் இவைகளையும், தட்டான்முதலியவர்களின் அந்நம் ஆயுளையும், தோல்வேலைக்காரனுடைய அந்நம் புகழையும், போக்குமென்று போதாயநர்சொன்னார். சூத்திராந்நத்தை அறியாமலாவது ஆபத்திலாவது புசித்தவனுக்குப் பிரம கூர்ச்சமும் அறிந்து புசித்தவனுக்குப் பிராஜாபத்திய கிருச்சிரமும் பிராயச்சித்தமென்றறிக. தச்சன், வண்ணான், திருடன், ஜநநமரணசௌசங்களையுடையவன் ஆகிய இவர்களுடைய அந்நத்தைப் புசித்தால் ஸ்வர்க்கத்திலிருப்பவனும் பதிதனாகிறானென்று மநு சொன்னார். மூலத்தில் புசிக்கத்தகாதவர்களுடைய அந்நமென்றது பிராம்மணனைப் புசிப்பிக்கத்தகாதவர்களான கூத்தாடி நட்டுவக்காரன், தச்சன், பதிதன் முதலியவர்களுடைய அந்நமென்றறிக. மூலத்தில் ஸந்தேகிக்கத்தக்கதான அந்நமென்றது இரண்டுவிதமாம். அதாவது சில தேசங்களில் பிரேத பூத கணங்களான ரூபத்தைத் தரித்திருக்கிற சில தாமஸ தேவதைகளுக்குத்திருப்தி செய்வதின் பொருட்டு நரபலிகொடுக்கவெண்ணி மனிதர்களைக் கொல்லுவதற்காக அந்நத்தினடுவில் விஷத்தை மறைத்துக்கொடுக்கிறார்களென்பது பிரசித்தமாகையால் அவ்விதமான அந்நமோவென்கிற சங்கை ஒன்று. சிரத்தையுடைய சில சூத்திரர்கள் சுரோத்திரியர்களான பிராம்மணர்கள் தங்களுடைய கிருகத்தில் புசிக்கவில்லையேயென்று வருந்திமற்றொரு சுரோத்திரிய

பிராம்மணனது கிருகத்தில் ஸகலவஸ்துக்களையும் கொடுத்து அவர்களைக்கொண்டு பசநம்செய்வித்த அந்நத்தைப்புசிக்கச்செய்கிறது மற்றொன்று. அந்த அந்நமும் தோஷமுடையது. இவ்விரண்டு சந்தேகத்துக்கும் விஷயமாகாத அந்நமே பிராம்மணனுக்குப் புசிக்கத்தக்கதென்றறிக. (௪, ௫)

௬ । బాలైర్నకులమార్జారై రన్నముచ్ఛిష్టితం యదా ।
తిలదర్భోదకైః ప్రోక్ష్య శుధ్యతే నాత్ర సంశయః ॥

(இ-ள்.) பாலர்களாலும் கீரிப்பிள்ளை பூனை இவைகளாலும் எச்சிலாக்கப்பட்ட அந்நமானது எள்ளோடுகூடிய தர்ப்பஜல புரோக்ஷணத்தினால் சுத்தியை அடைகிறது. இதுவிஷயத்தில் ஸந்தேகமில்லை (எ-று.)

நாய் காக்கை இவைகள் எச்சிலாக்கின அந்நத்தைப் புசித்தால் மூன்றுநாள் உபவாஸமும், பூனை எலி இவைகளின் எச்சிலைப்புசித்தவனுக்குப் பஞ்சகவியத்தைக் குடிப்பதும் பிராயச்சித்தமாமென்று ஸம்வர்த்தர்சொன்னதில் சாஸ்திர விதிப்படி பஞ்சகவியத்தைக்குடிக்கச் சக்தியில்லாதவனைப்பற்றியது மூன்றுநாள் உபவாஸமென்றறிக. பிராம்மணன்வேறொரு பிராம்மணனுடைய எச்சிலைப்புசித்தானாகில் நூறுபிராணாயாமங்களையும் க்ஷத்திரியனுடைய எச்சிலைப் புசித்தானாகில் ஆயிரம் பிராணாயாமங்களையும்வைசியனுடைய எச்சிலைப் புசித்தானாகில் பதினாயிரம் பிராணாயாமங்களையும் செய்யக்கடவனென்றும், அறிந்துகீழ்ச்சொன்னவர்களுடைய எச்சிலைப்புசித்தால் வர்ணக்கிரமமாகப் பிராஜாபத்தியம், கிருச்சிரம், அதிகிருச்சிரம் இவைகளைச்செய்யக்கடவனென்றும், சூத்திரனுடைய எச்சிலைப்புசித்தால் ஏழுநாள் கஞ்சியைக் குடிப்பவனாய் உபவாஸமிருக்கக்கடவனென்றும் அறிந்துசெய்தபக்ஷமானால் பராககிருச்சிரத்தைச் செய்யக்கடவனென்றும் இருபிறப்பாளர்களுடைய எச்சிலைப்புசித்தாலும், பிராம்மணனெச்சில்பட்ட ஜலத்தைக்குடித்தாலும் சூத்திரன் பன்னிரண்டு பிராணாயாமங்களைச் செய்யக்கடவனென்றும், இருபிறப்பாளரது எச்சிலைப்புசித்த க்ஷத்திரியன் முப்பது பிராணாயாமங்களையும் வைசியன் நாற்பது பிராணாயாமங்களையும் செய்யக்கடவர்களென்றும், சூத்திரனது எச்சிலை இருபிறப்பாளர் புசித்தால் மூன்றுநாள் தர்ப்பஜலத்தைக் குடித்துஉபவாஸமிருக்கவேண்டுமென்றும் அறிந்து புசித்தார்களாகில் வர்ணக்கிரமமாகப் பஞ்சகவியத்தைக் குடிப்பதுடன் மூன்று, நாலு, ஐந்து, நாட்கள் உபவாஸமிருக்கக்கடவர்களென்றும் இவ

ர்கள் அந்தியஜாதிகளின் எச்சிலை அறியாமல் புசித்தார்களாகில் மஹாஸாந்தபநகிருச்சிரத்தையும் அறிந்து புசித்தார்களாகில் சாந்திராயண கிருச்சிரத்தையும் செய்யக்கடவர்களென்றும் உசநா சொன்னர். (௭)

౭ । ఏకపఙ్క్త్యుపవిష్టానాం విప్రాణాంసహభోజనే ।
యద్యేకో౽పిత్యజేత్పాత్రం శేషమన్నంనభోజయేత్ ॥

౮ । మోహాద్భుంజీతయస్తత్ర పఙ్క్త్యాముచ్ఛిష్టభోజనే ।
ప్రాయశ్చిత్తంచరేద్విప్రః కృచ్ఛ్రంసాంతపనంచరేత్ ॥

ஒருபந்தியில் புசிக்கையில் ஸம்பவிக்கும் எச்சில் போஜனத்தின் பிராயச்சித்தம். (இ-ள்.)வெகுபேர்கூடிப்புசிக்கையில்ஒருபந்தியில் உட்கார்ந்தவர்களான பிராம்மணர்களுக்குள் ஒருவன்தான் போஜநபாத்திரத்தைவிட்டு எழுந்தானுகில் மற்றப் பிராம்மணர்கள் அப்போது புசித்து மிகுந்திருக்கும் அந்நத்தைப் புசிக்கக்கூடாது. இந்த விலக்கை அறியாமல் அஞ்ஞாநத்தினுல் எவன் புசிக்கிருனே அந்தப்பிராம்மணன் அந்தப்பந்தியில் செய்த எச்சிலந்ந போஜநவிஷயத்தில் ஸாந்தபநகிருச்சிரத்தைச் செய்யக்கடவன். (எ-று).

౯ ॥ పియ్యూషం శ్వేతలశునం వృంతాకఫలగృంజనం
పలాండువృక్షనిర్యాస దేవస్వకరకానిచ ॥

౧౦ ॥ ఉష్ట్రీక్షీరంమృగీక్షీర మజ్ఞానాద్భుంజతేద్విజః ।
త్రిరాత్రముపవాసేన పంచగవ్యేనశుధ్యతి ॥

புதிதானபால் முதலியவைகளைப் புசித்தலின் பிராயச்சித்தம். (இ-ள்) பீயூஷம்(புதிதாகியபால்)ஒட்டகத்தின்பால், மானின்பால், வெள்ளுள்ளி, வெண்கத்திரி, வெங்காயம், கிருஞ்சநமென்னுமொருவகைப் பச்சிலை,மரத்தின் பிசின்,ஒருதேவதைக்கென்றுஏற்படுத்தப்பட்ட கழனி தோட்டம் இவைகளில்உண்டானதாகிய தெய்வசொத்து, பூமியில் குடைபோல் முளைத்தெழுந்த காளான் ஆகிய இவைகளை அறியாமல் குடித்தவனும் புசித்தவனுமான இருபிறப்பாளன் மூன்றுநாள் உபவாஸத்திஞலும் பஞ்சகவ்யத்திஞலும் சுத்தனுகிருன். (எ-று)

புதிதாகியபால் என்கிறவிடத்தில் பிரஸவகாலத்திய பாலென்றும், பத்துநாட்களுக்குட்பட்ட பாலென்றும், பத்துநாட்களுக்கு மேலும், பிரஸவ நிமித்தமாகப் பெருகுகிற ரக்தம் முதலிய ஈரமிரு

க்கும் காலம்வரையிலும் கறக்கிறபாலென்றும் அர்த்தம்சொல்லு கிறுர்கள். பெருங்காயம் புசிக்கலாமென்று சாஸ்திரவிதி யிருக்கிற திஞல் மரத்தின்பிசின் என்பதைப் பெருங்காயந்தவிர மற்றப் பிசி னென்று அர்த்தங் கொள்ளவேண்டும். வெள்ளுள்ளி என்றதனுல் சிவந்த உள்ளியையும் வெண்கத்திரி என்றதனுல் கறுத்த கத்தி ரியையும் புசிப்பதற்கு இது பிராயச்சித்தமாகாதென்றறிக. கிருஞ்ச நமென்பது ஒருவித பச்சிலை. அதின் பொடியைக் காநம் செய்கிற வர்கள் கண்டசுத்திக்காகவும் தாஸிகள் மதித்திருப்பதற்காகவும் பு சிக்கிறுர்கள். இதைப் பருத்த கிழங்குடைய ஒருவித வெள்ளுள்ளி என்றும் சொல்லுவார்கள். (கூ-கഠ)

౧౧ ॥ మండూకం భక్షయిత్వాతు మూషికామాంసమేవచ ।
జ్ఞాత్వావిప్రస్త్వహోరాత్రం యావకాన్నేనశుధ్యతి ॥

(இ-ள்) தவளையையும் எலி மாம்ஸத்தையும் புசித்துப் பின்பு அதை அறிந்த பிராம்மணன் ஒருபகலும் ஒரு இராத்திரியும்யவஅரிசி அந்நத்தைப் புசிப்பதாகிய விரதத்திஞல் சுத்தனுகிறுன். (எ-று)

இந்தப் பிராயச்சித்தம் அறியாமல் ஒருதரம் புசித்ததைப்பற்றி யதாகும். பலதடவைகளில் புசித்தவன் மூன்றுநாள் பஞ்சகவியப் பிராசநத்துடன் உபவாசமிருக்கவேண்டுமென்று உசநாசொன்னுர்.

౧౨ ॥ క్షత్రియశ్చాపివైశ్యశ్చ క్రియావంతౌశుచివ్రతౌ।
తద్గృహేషుద్విజైర్భోజ్యంహవ్యకవ్యేషునిత్యశః ॥

(இ-ள்) க்ஷத்திரியன் வைசியன் ஆகிய இவர்கள் தங்களுக்குச் சொல்லியபடி வேதமோதுதல் யாகம்செய்தல்முதலிய கிரியைகளுட ன் கூடியவர்களும் ஸ்மிருதிகளில் தங்களுக்குச் சொல்லிய சுசியான விரதங்களை அநுஷ்டிப்பவர்களுமா யிருந்தால் அவர்களுடைய கிருகத்தில் ஹவ்ய கவ்யங்களில் பிராம்மணர்கள் புசிக்கலாகும்.

ராஜாவின் அந்நம் தேஜஸைப்போக்குமென்று ஸுமந்துமுத லியவர்கள் விதித்த நிஷேதமானது கீழ்ச்சொல்லிய குணமில்லாத க்ஷத்திரியன் வைசியன் இவர்களுடைய அந்நத்தைப் புசிப்பதைப் பற்றியதாகு மென்றறிக. (கஉ)

౧3 ॥ ఘృతంక్షీరం తథాతైలం భక్ష్యంస్నేహనపాచితమ్ ।
గత్వా[illegible]డీతచేవిప్రో భుంజీయాచ్ఛూద్రభోజనమ్ ॥

(இ-ள்) நெய், பால், எண்ணெய், எண்ணெயில் பசநம்செய்த பூரி முறுக்கு முதலிய பக்ஷியங்களாகிய சூத்திர ஸம்பந்தமான வஸ்துக்களைப் பிராம்மணன் நதியின்கரைக்குச் சென்று அங்கு புசிக்கக் கடவன் (எ-று)

அவைகளைச் சூத்திரனிடத்தில் வாங்கிக்கொண்டு அவன்வீட்டில் புசிக்காமல் ஆற்றங்கரையில் புசிக்கலாமென்கிற இந்தவிதி ஆபத்காலத்தில் பிராம்மணாதிகள் அந்நமிடக் கிடையாத பக்ஷத்திலென்றறிக. ஆபத்தையடைந்த பிராம்மணன் எவ்விடத்தில் அந்நத்தை வாங்கிப் புசித்தாலும் அவன் அக்நிக்கும் சூரியனுக்கும் சமானமான வனுகையால் பாபத்தை அடையமாட்டானென்று யாக்கியவல்கியர் சொன்னார். (கரு)

౧౪ ॥ మద్యమాంసరతంనిత్యం నీచకర్మప్రవర్తకం ।
తంశూద్రంవర్జయేద్విప్ర శ్శ్వపాకమివదూరతః॥

(இ-ள்.) மத்ய மாம்ஸங்களைப் புசிப்பவனும் நித்தியமும், பிரதிலோமஜாதிகளான சூதன்முதலியவர்களுடைய தேர் ஓட்டுவது முதலான வேலைகளைச்செய்பவனுமான சூத்திரனைப்பிராம்மணன் சக்கிலியை விடுவதுபோல் தூரத்தில் விடக்கடவன். (எ-று.)

அதாவது அவனுடைய நெய் பால் பக்ஷியம் முதலியவைகளை விடக்கடவனென்பது கருத்து. (கச)

౧౫ ॥ ద్విజశుశ్రూషణరతా న్మద్యమాంసవివర్జితాన్ ।
స్వకర్మనిరతాన్నిత్యం తాంశ్శూద్రాన్నత్యజేద్ద్విజః॥

(இ-ள்.) பிராம்மண சிசுரூஷையில் ஆஸக்தியுடையவர்களும் மத்ய மாம்ஸங்களை ஒழித்தவர்களும் கர்மங்களில் சிரத்தையுடையவர்களுமான சூத்திரர்களைப் பிராம்மணன் விடக்கடவனல்லன்.(எ-று)

இவர்களுடையபக்ஷியாதிகளைப் புசிக்கக் கடவனென்பது கருத்து.

౧౬ ॥ అజ్ఞానాద్భుంజతేవిప్ర స్సూతకేమృతకేపివా ।
ప్రాయశ్చిత్తంకథంతేషాం వర్ణేవర్ణేవినిర్దిశేత్ ॥

౧౭ ॥ గాయత్ర్యష్టసహస్రేణ శుద్ధిస్స్యాచ్ఛూద్రసూతకే ।
వైశ్యేపంచసహస్రేణ త్రిసహస్రేణక్షత్రియే ॥

౧౮ ॥ బ్రాహ్మణస్యయదాభుక్తే ద్వేసహస్రేతుజాపయేత్ ।
అథవావామదేవ్యేన సామ్నాచైకేనశుధ్యతి॥

(இ-ள்) எந்தப் பிராம்மணர்கள் அஞ்ஞானத்தினல் ஜநநாசௌசத்திலும் மரணசௌசத்திலும் அதாவது இவ்விரண்டுவித ஆசௌசமுடைய சூத்திரனது அந்நத்தைப்புசிக்கிருர்களோ அவர்களுக்கு வர்ணங்கள்தோறும் ஆசௌசத்தில் அந்நத்தைப்புசிப்பதற்குப் பிராயச்சித்தம் எப்படி விதிக்கவேண்டுமெனில், ஆசௌசமுடைய சூத்திரனது அந்நத்தைப் பிராம்மணன்புசித்தால் எண்ணுயிரங்காயத்திரியை ஜபிப்பதாலும் ஆசௌசமுடைய வைசியனது அந்நத்தைப்புசித்த பிராம்மணன் ஐயாயிரங்காயத்திரியை ஜபிப்பதாலும் ஆசௌசமுடைய க்ஷத்திரியனது அந்நத்தைப்புசித்த பிராம்மணன் மூவாயிரங் காயத்திரியை ஜபிப்பதாலும் ஆசௌசியான பிராம்மணனுடைய அந்நத்தைப் புசித்த பிராம்மணன் இரண்டாயிரம் காயத்திரியை ஜபிப்பதினுலும் அல்லது வாமதேவியமென்னு மொரு ஸாமத்தை ஜபிப்பதினுலும் சுத்தியை அடைகிருர்கள். (எ-று.)

தான் எந்த வர்ணத்திய ஆசௌசத்தில் அந்நத்தைப் புசித்தானே அந்த ஆசௌசகாலம் தானும் ஆசௌசியாயிருந்து அந்தநாட்கள் கடந்தபின் இந்தப்பிராயச்சித்தங்கள் அநுஷ்டிக்கத்தக்கனவாமென்று விஷ்ணுசொன்னுர். நவசிராத்தபோஜநத்தில் பிராஜாபத்தியகிருச்சிரத்தையும், ஆத்யமாஸிகமான ஏகோத்திஷ்ட போஜநத்தில் கால்பாகம் குறைந்ததாகப் பிராஜாபத்திய கிருச்சிரத்தையும், திரைபக்ஷிகபோஜநத்தில் அதில்பாதியும்,இரண்டாவது மாஸிகாந்நபோஜநத்தில் பஞ்சகவிய பிராசநமும் செய்யத் தகுமென்று விஷ்ணுசொன்னது ஆபத் காலவிஷயம். ஆபத்தில்லாதகாலத்தில் நவ சிராத்தபோஜநத்தில் சாந்திராயணத்தையும் ஏகோத்திஷ்ட போஜநத்தில் பிராஜாபத்திய கிருச்சிரத்தையும் பிரத்தியாப்திகபோஜநத்தில் ஒரு நாள் உபவாஸத்தையும் பிராயச்சித்தமாகச் செய்யவேண்டுமென்று ஹாரீதர்சொன்னுர். பின்னும் நவ சிராத்தத்தில் பிராஜாபத்தியகிருச்சிரத்தையும், மாஸிகபோஜநத்தில் கால்பாகங்குறைந்த பிராஜாபத்தியகிருச்சிரத்தையும்,திரைபக்ஷத்தில்அதில் பாதியும்,இரண்டாவது மாஸிகத்தில்அதில்கால்பாகத்தையும்,ஆருவதுமாஸத்திய ஊநத்திலும் ஆப்தீகத்திலும் கால்பாகங்குறைந்ததாகப் பிராஜாபத்தியகிருச்சிரத்தையும், மாஸிகங்களில் மூன்றுநாளும் பிரத்தியாப்திகத்தில் ஒரு நாளும் உபவாஸத்தையும் அநுஷ்டிக்கவேண்டுமென்று இருபத்துநால்வர்மதத்தில் சொல்லப்பட்டது.

நாந்தி சிராத்த போஜனபிராயச்சித்தம். பிரமோதநமென்னும் யக்கியத்தில் ஒருவிதக்கிரியை, ஸௌமியவிரதம்,. ஸீமந்தம், ஜாத

கர்மம், நவசிராத்தம் இவைகளில் புசித்தவன் சாந்திராயண கிருச்சிரத்தைச்செய்யக்கடவனென்று தௌமியர் சொன்னார்.

௧௯ ॥ శుష్కాన్నంగోరసంస్నేహం శూద్రవేశ్మనఆగతమ్ ।
పక్వంవిప్రగృహేపక్తం భోజ్యంతన్మనురబ్రవీత్ ॥

சூத்திராதிஜாதிகளிடத்தில் அரிசிமுதலியவைகளை வாங்குவது. (இ-ள்.) நெல் அரிசிமுதலியவை, பால்முதலியவை, எண்ணெய், இவைகளைச் சூத்திரனுடைய கிருகத்தில்வாங்கிப் பிராம்மணனுடைய கிருகத்தில் பசநம் செய்தால் அந்தப்பக்குவாந்நமானது பிராமணர்களால் புசிக்கத்தகுமென்று மநு சொன்னார். (எ-று.) (௧௯)

௨௦ ॥ ఆపత్కాలేషువిప్రేణ భుక్తంశూద్రగృహేయది ।
మనస్తాపేనశుద్ధ్యేత ద్రుపదాంవాజపేచ్ఛతమ్ ॥

(இ-ள்.) அந்நத்திற்குவருந்திப் பிராணபயம் நேரிடுவது முதலிய ஆபத்காலங்களில் சூத்திரன் வீட்டில் பிராம்மணனால் அந்நம்புசிக்கப்பட்டதேயானால் புசித்ததைப்பற்றி உண்டான மனஸ்தாபத்தினால் அந்தப்பிராம்மணன் சுத்தியை அடைகிறான். ஆனாலும், துருபதை என்னும் ருக்கை நூறுதரம் ஜபிக்கக்கடவன். (எ-று.)

இங்கு வேதத்தைமாத்திரம் ஓதினவன் துருபதை என்னும் மந்திரஜபத்தினாலும், வேதத்தை ஓதி அர்த்தங்களை அறிந்து அந்த விதிப்படி அநுஷ்டிப்பவன் மனஸ்தாபத்தினாலும் சுத்தியை அடைகிறார்களென்றறிக. (௨௦)

௨௧ ॥ దాసనాపితగోపాల కులమిత్రార్ధశీలినః ।
ఏతేశూద్రేషుభోజ్యాన్నా యశ్చాత్మానంనివేదయేత్ ॥

ஸச்சூத்திரவிசாரம். (இ-ள்). தாஸன், நாபிதன், கோபாலன், குலமித்திரன், அர்த்தசீலி, ஆத்மநிவேதகன் ஆகிய ஆறு வகையினரான இவர்கள் சூத்திரர்களுக்குள் பிராம்மணாதிகளால் புசிக்கத்தக்க அந்நத்தையுடையவர்கள். (எ-று.) (௨௧)

௨௨ ॥ శూద్రకన్యాసముత్పన్నో బ్రాహ్మణేనతుసంస్కృతః ।
సంస్కారాత్తుభవేద్దాస అసంస్కారాత్తునాపితః ॥

௨௩ ॥ క్షత్రియాచ్ఛూద్రకన్యాయాం సుతోజాయేతనామతః ।
సగోపాలఇతిజ్ఞేయో భోజ్యోవిప్రైర్నసంశయః ॥

౨౪ ॥ వైశ్యకన్యాసముద్భూతో బ్రాహ్మణేనతుసంస్కృతః ।
సహార్ధికఇతిజ్ఞేయో భోజ్యోవిప్రైర్నసంశయః ॥

(இ-ள்.) பிராம்மணனால் விவாகம்செய்யப்பட்டவளான சூத்திரப்பெண்ணினிடத்தில் பிறந்தவனாகிப் பிராம்மணனால் மந்திரமின்றிக் கர்ப்பாதானம் முதலிய ஸம்ஸ்காரங்கள் செய்யப்பட்டவன் ஸம்ஸ்காரமென்னும்ஹேதுவினால்தாஸனென்றும் ஸம்ஸ்காரம் செய்யப்படாதவன் நாபிதனென்றும் சொல்லப்படுவோர்கள். க்ஷத்திரியனால் விவாகம் செய்யப்பட்டவளான சூத்திரப்பெண்ணுக்குப் பிறந்தவன் கோபாலனென்னப்படுவான். அவன் பிராம்மணர்களால் புசிக்கத்தக்க அந்நத்தையுடையவன். சந்தேகமில்லை. வைசியன் சூத்திரப்பெண்ணை விவாகம்செய்து அவளிடத்தில் உண்டுபண்ணின பிள்ளை குலமித்திரனென்னப்படுவான். பிராம்மணன் வைசியப்பெண்ணை விவாகம்செய்து அந்தப்பெண்ணினிடத்தில் உண்டுபண்ணப்பட்டவனும் ஸகலஸம்ஸ்காரங்களையும் பெற்றவனுமான பிள்ளை அர்த்திகன் அல்லது அர்த்தசீரி என்னப்படுவான். அவன் பிராம்மணர்களால் புசிக்கத்தக்க அந்நமுடையவனாகிறான், ஸந்தேகமில்லை. (எ-று.)

எவன் தன் வாக்கு மனம் காயம் இவைகளின் தொழிலால் உனக்கடிமை என்னும் பொருளைப் பிராம்மணனுக்கு அறிவிக்கிறானோ அவன் ஆத்துமநிவேதகனென்றறிக. (உஉ,உரு,உச)

౨౫ ॥ భాండస్థితమభోజ్యేషు జలందధిఘృతంపయః ।
అకామతస్తుయోభుంక్తే ప్రాయశ్చిత్తంకథంభవేత్ ॥

౨౬ ॥ బ్రాహ్మణఃక్షత్రియోవైశ్య శ్శూద్రోవాఉపసర్పతి ।
బ్రహ్మకూర్చ్చోపవాసేన యోజ్యావర్ణస్యనిష్కృతిః ॥

౨౭ ॥ శూద్రాణాంనోపవాసస్స్యా చ్ఛూద్రోదానేనశుధ్యతి।
బ్రహ్మకూర్చమహోరాత్రం శ్వపాకమపిశోధయేత్ ॥

(இ-ள்,) பிராம்மணாதிகள் பாநம்செய்யத்தகாத நீசஜாதிகளுடைய பாண்டத்திலிருக்கும் ஜலம் தயிர் பால் ஆகிய இவைகளை அறியாமல் எவன் புசிக்கிறானோ அவனுக்குப் பிராயச்சித்தம் எவ்விதமாகுமெனில், பாண்டத்திலிருக்கும் ஜலம் முதலியவற்றை மற்றொருபாத்திரத்தில் கிரகித்துக்கொள்ளாமல் பாநம்செய்வது பிராயச்சித்த நிமித்தமாகுமென்றறிக. இவ்விதமாகப் பாநம்செய்த பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் ஆகிய இவர்க

ளில் யாரோனும் வந்து பிராயச்சித்தத்திற்காக அடுத்தால் அந்த ஸக லவர்ணத்தாருக்கும் ஒருநாள் உபவாசத்துடன் பிரமகூர்ச்ச பஞ்சக விய பிராசநம் பிராயசித்தமாக விதிக்கத்தகும். சூத்திரர்களுக்கு உப வாஸம் விதிக்கத்தக்கதன்று. சூத்திரன் அதற்குப்பதிலாகத் தாநத்தி னால் சுத்தனாகிறான். ஒருபகல் ஒரு ராத்திரியுபவாஸத்துடன் செய்த பிரம கூர்ச்ச பாநமானது சுவபாகனைப் போன்றவனையும் பரிசுத்தமா க்கும். (எ-று.) (௨௫, ௨௬, ௨௭)

௨௮ ॥ గోమూత్రంగోమయంక్షీరం దధిసర్పిఃకుశోదకమ్ ।
నిర్దిష్టంపంచగవ్యంతు పవిత్రంపాపశోధనమ్ ॥

(இ-ள்.) கோமூத்திரம், கோமயம், பசுவின்பால், பசுவின்தயிர், பசுவின்நெய், தர்ப்பஜலம் ஆகிய இவைகள் கூடியது பாபத்தைப் போக்குவதும் பரிசுத்தமுமான பஞ்சகவியமென்று பெரியோர்க ளால் சொல்லப்பட்டது. (எ-று.) (௨௮)

௨௯ ॥ గోమూత్రంకృష్ణవర్ణాయాః శ్వేతాయాశ్చైవగోమయమ్ ।
పయశ్చతామ్రవర్ణాయాః రక్తాయాగృహ్యతేదధి ॥

௨௯½ ॥ కపిలాయాఘృతంగ్రాహ్యం సర్వంకాపిలమేవచ ।

(இ-ள்.) கறுத்த பசுவின் மூத்திரமும் வெளுத்த பசுவின்சாணி யும் சிவந்தபசுவின் பாலும் அதிக ரக்தநிறமுடைய பசுவின்தயி ரும் கபிலைப்பசுவின் நெய்யும் கிரகிக்கத்தகும். இவ்விதமான பசுக் கள் கிடையாத பக்ஷத்தில் கபிலைப்பசுவினுடைய நெய் தயிர்முதலிய ஸகலமும் கிரகித்துக் கொள்ளத்தகும். (எ-று.) (௨௯, ௨௯½)

30 ॥ మూత్రమేకపలందద్యా దంగుష్ఠార్ధంతుగోమయమ్ ॥

31 ॥ క్షీరంసప్తపలందద్యా ద్దధిత్రిపలముచ్యతే ।
ఘృతమేకపలందద్యా త్పలమేకంకుశోదకమ్ ॥

பஞ்சகவியப்பிரமாணம். (இ-ள்.) கோமூத்திரம் ஒருபலமும் பெருவிரலின் மேற்பாதிபாகத்தளவு கோமயமும் ஏழுபலம் பாலும் மூன்றுபலம் தயிரும் ஒருபலம் நெய்யும் ஒருபலம் தர்ப்பஜலமும் சேர்க்கத்தக்கனவாம். (எ-று.) (௩0, ௩௧)

32 ॥ గాయత్ర్యా౽౽దాయ గోమూత్రంగంధద్వారేతిగోమయమ్ ।
ఆప్యాయస్వేతిచక్షీరం దధిక్రావ్ణ్ణస్తథాదధి ॥

33 ॥ తథాశుక్రమసీత్యాజ్యం దేవస్యత్వాకుశోదకమ్ ।
పంచగవ్యమృచాపూతం స్థాపయేదగ్నిసన్నిధౌ ॥

(இ-ள்.) கோமூத்திரத்தைக் காயத்திரியினாலும் கோமயத்தை "கந்தத்துவாரம்" என்னும் ருக்கினாலும் பாலை "ஆப்பியாஸ்வ" என்னும் மந்திரத்தினாலும் தயிரை "ததிக்குராவ்ணஃ" என்னும் மந்திரத்தினாலும் நெய்யை "சுக்கிரமஸி" என்னும் மந்திரத்தினாலும் தர்ப்ப ஜலத்தை "தேவஸ்யத்வா" என்னும் மந்திரத்தினாலும் ஜபித்துப் பஞ்சகவியத்தை ஒன்றாகச்சேர்த்து ஹோமத்திற்காக அக்கினியின் ஸமீபத்தில் அதை ஸ்தாபிக்கவேண்டும். (எ-று.) (கூஉ, கூகூ)

౩౩ ప॥ ఆపోహిష్ఠేతిచాలోడ్య మానస్తోకేభిమంత్రయేత్॥

(இ-ள்.) அக்கினியின் ஸமீபத்தில் வைக்கப்பட்ட பஞ்சகவியத்தை "ஆபோஹிஷ்டா" என்று தொடங்கியுள்ள மூன்று ருக்குகளால் ஒன்றாகக்கலக்கி "மாநஸ்தோகே" என்னுமொரு ருக்கினால் அபிமந்திரிக்கவேண்டும். (எ-று.) (கூ௪)

౩౪ ప॥ సప్తావరాస్తుయేదర్భా అచ్ఛిన్నాగ్రాశ్శుకత్విషః।
ఏతైరుద్ధృత్యహోతవ్యం పంచగవ్యంయథావిధి॥

(இ-ள்.) குறைந்த பக்ஷம் ஏழுதர்ப்பங்களை யுடையவைகளும் அறுக்கப்படாத நுனியை யுடையவைகளும் ஈரமுள்ளவைகளும் அல்லது நிழலில் உலர்த்தப்பட்டவைகளா யிருக்கையால் கிளியின் வர்ணம்போன்ற வர்ணத்தை யடைந்தவைகளுமாயுள்ள தர்ப்பங்களால் அந்தப்பஞ்சகவியத்தை எடுத்துப் பலாச இலைகளால் விதிப்படி ஹோமம்செய்யவேண்டும். (எ-று.)

தர்ப்பங்களால் எடுத்துப் பலாசஇலைகளால் தேவதைகளை யுத்தேசித்துப் பஞ்சகவியத்தை ஹோமம்செய்யவேண்டுமென்று பிரஜாபதி சொன்னார். (கூ௫)

౩౫ ప। ఇరావతీఇదంవిష్ణు ర్మానస్తోకేతుశంవతీ।
ఏతాభిశ్చైవహోతవ్యం హుతశేషంపిబేద్ద్విజః॥

(இ-ள்.) "இராவதி" என்று தொடங்கியுள்ள மூன்று ருக்குகள், "இதம்விஷ்ணுஃ" "மாநஸ்தோகே" "சமக்நி" என்னும் ருக்குகள் ஆகிய இவைகளாலும் ஹோமம்செய்து மிகுந்ததைப் பிராம்மணன் பாநம் செய்யக்கடவன். (எ-று.) (கூ௬)

౩౬ ప॥ ఆలోడ్యప్రణవేనైవ నిర్మంథ్యప్రణవేనతు।
ఉద్ధృత్యప్రణవేనైవ పిబేచ్చప్రణవేనతు॥

(இ-ள்.) பிரணவத்தைச்சொல்லிக் கையிட்டுக் கலக்கிப் பிரணவத்தைச் சொல்லிச் சமித்தினுல் கடைந்து பிரணவத்தைச் சொல்லி எடுத்துப் பிரணவத்தைச்சொல்லிப் பாநம்செய்யவேண்டும். (எ. று.)

౩౭॥ యత్త్వగస్థిగతంపాపం దేహేతిష్ఠతిదేహినామ్।
బ్రహ్మకూర్చోదహేత్సర్వం ప్రదీప్తాగ్నిరివేంధనమ్॥

(இ-ள்.) மனிதர்களுடைய சரீரத்தில் எலும்பு தோல் இவைகளைப்பற்றியதாகிய எல்லாப்பாபங்களையும் கிளர்ந்தெரிகிற அக்நியானது கட்டையைத் தகிப்பதுபோல் பிரம கூர்ச்ச பஞ்சகவியமானது கொளுத்தும். (எ-று.)

கோவதம் முதலிய தோஷமானது அதிர்ஷ்டரூபமாகி ஆத்துமாவைப்பற்றி யிருந்து பிராயச்சித்தத்தினுல் உண்டாகின்ற அதிர்ஷ்டத்தினுல் நசிக்கிறது. அதுபோல் புசிக்கத்தகாத அந்நத்தைப்புசிப்பதினுல் உண்டாகும் தோஷமானது தோலாகவும் அஸ்தியாகவும் சரீரத்தில் அமைந்திருக்கையில் பஞ்சகவியமும் அப்படியே சரீரத்தில் அமைந்து காஷ்டத்தைப்பற்றிய அக்நியானது அதைத்தகிப்பதுபோல் அந்தத்தோஷத்தைத் தகிக்குமென்றறிக.

பிரமகூர்ச்சத்திற்குக்காலநிர்ணயம். சதுர்த்தசியில் உபவாஸமிருந்து பூர்ணிமையில் பிரமகூர்ச்சத்தைச்செய்து பாநம்செய்யவேண்டுமென்று பிரஜாபதியும், அப்படியே ஜாபாலியும், நதீதீரத்திலாவது பசுத்தொழுவத்திலாவது புண்ணியகரமான ஸ்தாநங்களிலாவது பிரமகூர்ச்சத்தைச் செய்யவேண்டுமென்று சாதாதபரும் சொன்ஞர்கள். (கஎ௭)

౩౮॥ పవిత్రంత్రిషులోకేషు దేవతాభిరధిష్ఠితమ్।
౩౯॥ వరుణశ్చైవగోమూత్రే గోమయేహవ్యవాహనః॥
దధ్నివాయుస్సముద్దిష్టః సోమఃక్షీరేఘృతేరవిః।

(இ-ள்.) தேவர்களால் வசிக்கப்பட்டதாகிய பஞ்சகவியமானது மூன்றுலோகங்களிலும் பரிசுத்தமானது. கோமூத்திரத்தில் வருணனும் கோமயத்தில் அக்நியும் தயிரில் வாயுவும் பாலில் சந்திரனும் நெய்யில் சூரியனும் வசிக்கிருர்கள். (எ-று) (கஅ, கக)

౪౦॥ పిబతఃపతితంతోయం భోజనేముఖనిస్సృతమ్।
అపేయంతద్విజానీయా ద్భుక్త్వాచాంద్రాయణంచరేత్

(இ-ள்.) போஜந ஸமயத்தில் தண்ணீர் குடிக்கிறவனுடைய முகத்தினின்றும் பெருகி போஜநபாத்திரத்தில் விழுந்தஜலமானது பிரம க்ஷத்திரிய வைசியர்களுக்குப் பாநம் செய்யத்தக்கதன்று. அதைப் பாநம்செய்தவன் சாந்திராயணத்தைச்செய்யக்கடவன். (எ-று.) (௪௦)

౪౧ ॥ కూపేతపతితం దృష్ట్వా శ్వసృగాలంచమర్కటమ్।
అస్థిచర్మాదిపతితంపీత్వా మేధ్యాఅపోద్విజః॥

౪౨ ॥ నారంతుకుణపంకాకం విడ్వరాహంఖరోష్ట్రికమ్।
గావయంసాప్రతీకంచ మాయూరంఖడ్గజంతథా॥

౪౩ ॥ వైయాఘ్రిమార్క్షంసైంహ్యం వాకూపేయదినిమజ్జతి।
తటాకస్యాథదుష్టస్య పీతంస్యాదుదకంయది।

౪౪ ॥ ప్రాయశ్చిత్తంభవేత్పుంసః క్రమేణైతేనసర్వశః।
విప్రశ్శుధ్యేత్త్రిరాత్రేణ క్షత్రియస్తుదినద్వయాత్॥

౪౪౫॥ ఏకాహేనతువైశ్యస్తు శూద్రోనక్తేనశుధ్యతి।

(இ-ள்.) கிணற்றில்விழுந்திருக்கிற நாய், குள்ளநரி, குரங்கு இவைகளையும், கிணற்றில் விழுந்திருக்கிற எலும்பு தோல் முதலியவற்றையும் பார்த்துப்பின்பு அசுத்தமான அந்த ஜலத்தை இருபிறப்பாளன் பாநம்செய்தால் அவன் பிராயச்சித்தம் செய்துகொள்ளத்தக்கவனுகிருன். மனிதர், காக்கை, நாட்டுப்பன்றி, கழுதை, ஒட்டகம், கவயமென்னுங் காட்டுப்பசு, யானை, மயில், கட்கமிருகம், புலி, கரடி, சிங்கம் ஆகிய இவைகளின் சம்பந்தமான பிணங்களைக் கிணறு தடாகம் இவைகளில் கண்டபின் அவைகளின் ஜலம் பாநம்செய்யப்பட்டதேயானுல் பாநம்செய்த புருஷனுக்கு மேலே சொல்லப்போகிற கிரமத்தினுல் பிராயச்சித்தம் செய்யத்தக்கதாம். அதாவது பிராம்மணன் மூன்றுநாள் உபவாஸத்தினுலும் க்ஷத்திரியன் இரண்டுநாள் உபவாஸத்தினுலும் வைசியன் ஒருநாள் உபவாஸத்தினுலும் சூத்திரன் பகவில் உபவாஸமிருந்து இரவில் புசிப்பதினுலும் சுத்தியை அடைகிருர்கள். (எ-று,) (௪௧, ௪௨, ௪௩, ௪௪, ௪௫)

౪౬॥ పరపాకనివృత్తస్య పరపాకరతస్యచ।
అపచస్యచభుక్త్వాన్నం ద్విజశ్చాంద్రాయణంచరేత్॥

பரபாக நிவிர்த்தன் முதலியவர்களுடைய அந்ந போஜநத்தின் பிராயசித்தம். (இ-ள்) பரபாக நிவிர்த்தனுடையவும் பரபாக ரதனு

டையவும் அபசன் என்பவனுடையவும் அந்நத்தைப் புசித்த இருபிற ப்பாளன் சாந்திராயணவிரதத்தை அநுஷ்டிக்கக்கடவன் (எ-று.)

பரபாக நிவிர்த்தன் முதலிய பிராம்மணர்களுடைய லக்ஷணத் தை மேலே பராசரர் சொல்லப்போகிறார். (௪௫௨)

౪౬౫॥ అపచస్యతుయద్దానం దాతుశ్చాస్యకుతఃఫలమ్।
దాతాప్రతిగ్రహీతాచ ద్వౌతౌనిరయగామినౌ॥

(இ-ள்.) அபசனென்னும் பிராம்மணன்பொருட்டு எந்தத்தா நம் செய்யப்படுகிறதோ, அந்தத் தாநம்செய்தவனுக்குத் தாநபலன் இல்லை. தாநம் செய்தவன் அதை வாங்கிக்கொண்டவன்ஆகிய இரு வரும் நரகத்தை அடைகிறார்கள். (எ-று.)

அபசனுடைய அந்நத்தைப் புசித்தவனுக்குத் தோஷமுண்டெ ன்று முன்னும் அவனுக்கு அந்நம் கொடுத்தவன் புசித்தவன் ஆகிய இருவருக்கும் தோஷமுண்டென்று இங்கும் சொல்லப்பட்டதென் றறிக. (௪௬௨)

౪౭౫॥ గృహీత్వాగ్నింసమారోప్య పంచయజ్ఞాన్ననిర్వపేత్।
పరపాకనివృత్తోఽసౌ మునిభిఃపరికీర్తితః॥

பரபாக நிவிர்த்தன் முதலியவர்களுடைய லக்ஷணம். (இ-ள்.) அக்நியைக் கிரஹித்துக்கொண்டு அதாவது விவாகம்செய்துகொண்டு அந்த அக்நியில் ஔபாஸநத்தைச் செய்பவனாகி அக்நியை ஆத்ம ஸமாரோபணம்செய்து (மந்திரத்தினால் தன்னிடத்தில் அக்நியை ஆ ரோபித்துக்கொண்டு) அதில் பஞ்சமஹாயக்கியங்களை விதிப்படி எவ ன் செய்யவில்லையோ வைசுவதேவாதிகளைச் செய்யாதவனான அவ ன்பரபாக நிவிர்த்தனென்று ரிஷிகளால்சொல்லப்படுகிறான். (எ-று.)

அதாவது வைசுவதேவத்திற்காகச்செய்யும் சமையல் பர பாக மாகும் (உத்தமபாகமாகும்). அதைச்செய்யாதவன் பரபாக நிவிர்த்த னென்றறிக. மேலும் பருடைய (அயலாருடைய) கிருகத்தில் செய்யும் பாகத்தினின்றும் ஒழிந்தவனென்று பொருளாகிப் பராந்ந போஜநத்தைத் தவிர்ந்தவனென்றாகிறது. இங்கு இவ்விதமான இர ண்டுபொருளும் கொள்ளவேண்டும். பராந்நபோஜநத்தைத் தவிர்ந்த து குணமாகிலும் வைசுவதேவத்தைத் தவிர்ந்தது தோஷமாகையால் பரபாக நிவிர்த்தனென்னும் பிராம்மணனுடைய அந்நமும் நிந்திக்கப் பட்டதென்றறிக. (௪௭௨)

౪౮ప|| పంచయజ్ఞాన్ స్వయంకృత్వా పరాన్నేనోపజీవతి।
సతతంప్రాతరుత్థాయ పరపాకరతస్తుసః॥

(இ-ள்) காலையில் எழுந்திருந்து எந்நாளும் பஞ்ச மஹா யக்கியங்களைத்தான் செய்கிறவனாய் எவன் பராந்நத்தாலேயே பிழைக்கிறானோ அவன் பரபாக ரதன் என்னப்படுவான். (எ-று.)

இவனிடத்தில் பஞ்ச மஹா யக்கியங்களை அநுஷ்டிப்பதாகிய குணமிருந்தும் பராந்நபோஜநமாகிய தோஷமிருப்பதால் பரபாக ரதனாகிய இவனும் நிந்திக்கப்படுகிறானென்று அறிக. அயலாருடைய அந்நத்தில் விருப்பமுடையவன் பரபாக ரதன் என்றுஅறிக. (சஅ௨)

౪౯ప|| గృహస్థధర్మీ యోవిప్రో దదాతిపరివర్జితః।
ఋషిభిర్ధర్మతత్త్వజ్ఞైర పచఃపరికీర్తితః॥

(இ-ள்.) எந்தப் பிராம்மணன் கிருகஸ்த தர்மத்தில்நிலைத்திருப்பவனாய் (దదాతి) ததாதி என்னுந் தாநக்கிரியையினால் விடப்பட்டிருக்கிறானோ, (அந்நதாநமில்லாமல் தான்மாத்திரமே புசிக்கிறானோ) அவன் தர்மசூக்ஷ்மங்களை அறிந்த ரிஷிகளால் அபசனென்று சொல்லப்படுகிறான். (எ-று.)

பரபாகநிவிர்த்தன் முதலியவர்களுடைய அந்ந போஜந விசேஷ பிராயச்சித்தம். விவாகாக்கினியைக் கிரகித்துக்கொண்ட மாத்திரத்தினால் தன்னைக் கிருகஸ்தனாக நினைத்துக்கொண்டு பஞ்சமஹாயக்கியங்களை எவன் செய்யவில்லையோ அவனுடைய அந்நத்தைப் புசித்தவன் மூன்றுபிராணாயாமங்களைச்செய்து நெய்யைக்குடித்தால் சுத்தனாகிறானென்று சாதாதபபிருஹஸ்பதிகள் சொன்னார்கள். பிராம்மண நிந்தையைச்செய்கிறவன் வேதவிக்கிரயம்செய்கிறவன் முதலியவர்களுடைய அந்நபோஜநத்திலும் கீழ்ச்சொன்னவிதமாகவே பிராயச்சித்தத்தைவியாஸபகவான் அருளிச்செய்தார். (சகூ௨)

౫౦ప || యుగేయుగేతుయేధర్మాస్తేషు తేషుచయేద్విజాః।
తేషాంనిందానకర్తవ్యా యుగరూపాహితేద్విజాః॥

(இ-ள்.) யுகங்கள்தோறும் தர்மங்கள் எந்தவிதங்களோ, அந்த யுகங்களில் இருபிறப்பாளர் யாரோ, அவர்கள் அந்த யுகங்களுக்குத் தக்கவர்களாயிருக்கையால் அவர்களை நிந்திக்கலாகாது. (எ-று.)

அந்தந்த யுகங்களில் பிறக்கும் வஸ்துக்களுக்குப் பலம், நிறம், பெருமை முதலானவைகள் அந்தந்த யுகத்திற் கீடாக உண்டாகின்றனவென்று பாரதம் ஆரணியபர்வத்தில் சொல்லப்பட்டது. (ருo௨)

౫౧౫॥ హుంకారం బ్రాహ్మణస్యోక్త్వా త్వంకారం చ గరీయసః ।
స్నాత్వా తిష్ఠన్నహశ్శేష మభివాద్య ప్రసాదయేత్ ॥

பிராம்மண திரஸ்கார பிராயச்சித்தம். (இ-ள்.) வேதமோதி னவன் பிராம்மண னென்னப்படுவான். லௌகிகமாய்ச் சாஸ்திர முறையைத் தவிர்ந்ததான ஒருவழியால் அவனை வசப்படுத்துவதற்காக எவன் ஹுஂம் என்று அதட்டுகிறானே, எவன் தன்னைக்காட்டிலும் வயதினாலும் வித்தையினாலும் உயர்ந்தவன் விஷயத்தில் நீ என்று ஒருமையாகச் சொல்லுகிறானே, இவர்கள் ஸ்நாநம்செய்து அன்றைய சூரியாஸ்தமயகாலம்வரையில் ஆகாரமில்லாமலிருந்து அலட்சியம் செய்யப்பட்டவரை அபிவாதநம்செய்து அவருடைய அநுக்கிரகத்தை அடையவேண்டும். (எ-று.) (ருகஉ)

౫౨౫॥ తాడయిత్వా తృణేనాపి కంఠే బద్ధ్వాపి వాససా ।
వివాదే వాపి నిర్జిత్య ప్రణిపత్య ప్రసాదయేత్ ॥

(இ-ள்.) பிராம்மணனை ஒரு புல்லாலாகிலும் அடித்தவனும் வஸ்திரத்தினால் கழுத்தில் கட்டினவனும் ஒருவித விவாதத்தினால் ஜயித்தவனும் அவனைச் சாஷ்டாங்கமாகச் சேவித்துப் பிரஸன்னனாகச்செய்துகொள்ளவேண்டும். (எ-று.) (ருஉஉ)

౫౩౫॥ అవగూర్య త్వహోరాత్రం త్రిరాత్రం క్షితిపాతనే ।
అతికృచ్ఛ్రం చ రుధిరే కృచ్ఛ్రోఽభ్యంతరశోణితే ॥

(இ-ள்.) பிராம்மணனைக் கொல்லும்பொருட்டுத் தடியாலோங்கினவன் ஒருநாள் உபவாஸத்தையும் பூமியில் அவனைத் தள்ளினவன் மூன்றுநாள் உபவாஸத்தையும் அடித்து ரக்தம் வடியச்செய்தவன் அதிகிருச்சிரத்தையும் உள்ளே காயமாய்ச் சரீரத்தில் ரக்தங்கட்டிக்கொள்ளும்படி செய்தவன் பிராஜாபத்திய கிருச்சிரத்தையும் செய்யவேண்டும். (எ-று.) (ருஙஉ)

౫౪౫॥ నవాహమతికృచ్ఛ్రీ స్యాత్ పాణిపూరాన్నభోజనః ।
త్రిరాత్ర ముపవాసీ స్యా దతికృచ్ఛ్రస్స ఉచ్యతే ॥

அதிகிருச்சிர லக்ஷணம். (இ-ள்.) மூன்றுநாள் ஒருவேளை போஜநமும் மூன்றுநாள் ராத்திரியில் மாத்திரம் போஜநமும்செய்து மூன்றுநாளுபவாஸமிருந்து இந்த ஒன்பதுநாட்களில் புசிக்கத்தக்கநாட்கள் ஆறில் தன் ஒரு கை நிறையத்தக்க அந்நத்தை மாத்திரம் புசிப்பதும் உபவாஸநாள் மூன்றில் சுத்தோபவாஸியாகவே யிருப்பதும் அதிகிருச்சிரமென்று சொல்லப்படுகிறது. (எ-று.) (ருசஉ)

௩௩௫ ॥ సర్వేషామేవపాపానాం సంకరేసముపస్థితే।
దశసాహస్రమభ్యస్య గాయత్రీశోధనంపరమ్॥

(இ-ள்.) இந்தக்காண்டம் முதல் அத்தியாயம்தொடங்கி இது வரையிலும் எட்டு அத்தியாயங்களால் சொல்லப்படாதவைகளான ஸகலவித பாபங்களின் ஸம்பந்தம் ஸம்பவித்தபக்ஷத்தில் அதற்குப் பதினாயிரந்தரம் காயத்திரியை ஜபிப்பது உத்தமமான பிராயச்சித்தமாம். (எ-று).

இந்தக் காயத்திரி ஜபமானது விஷ்ணு விசுவாமித்திரர்கள் சொல்லிய பிராஜாபத்தியம் முதலிய கிருச்சிரங்களுக்கும் உபலக்ஷணமாமென்று கொள்ளவேண்டும். (௬௫௦)

எட்டாவது அத்தியாயம் முற்றிற்று.

ஒன்பதாவது அத்தியாயம்.

அவதாரிகை. ஆசார காண்டத்தில் மூன்றுஅத்தியாயங்களால் எவ்வளவு ஆசாரங்கள் சொல்லப்பட்டனவோ, பிராயச்சித்த காண்டத்தில் எட்டுஅத்தியாயங்களால் எவ்வளவு பிராயச்சித்தங்கள் சொல்லப்பட்டனவோ அவைகளைக் காட்டிலும் அதிகங்களாய் மிருந்தவைகளாயுள்ள சில ஆசாரங்களையும் சில பிராயச்சித்தங்களையும் இந்த ஒன்பதா மத்தியாயத்தில் அருளிச்செய்கிறார் ஸ்ரீபராசரர்.

௧ ॥ దుస్స్వప్నం యదిపశ్యేత్తు వాంతేతుక్షురకర్మణి।
మైథునే ప్రేతధూమేచ స్నానమేవవిధీయతే॥

கெட்ட கனு முதலியவைகளைப் பார்ப்பதின் பிராயச்சித்தம்.

(இ-ள்.) கெட்ட கனுவைக்கண்டாலும், புசித்த அந்நத்தைக்கக்கினாலும், க்ஷௌரம் செய்வித்துக்கொண்டாலும், மைதுநம் செய்தாலும், பிணத்தின் புகையை முகர்ந்தாலும், அவைகள்நிமித்தமாக உடனே ஸ்நாநம் செய்யவேண்டுமென்று விதிக்கப்படுகிறது (எ-று).

கனுவானது நல்ல கனுவென்றும் கெட்ட கனுவென்று மிருவகைப்படும். அவைகளில் காணும் போது சுகத்தைத் தருவதும் பின்னிட்டு வரப்போகிற சுபத்தைத் தெரிவிப்பதுமானது நல்ல கனுவென்று சொல்லப்படும். காமிய கர்மங்களைச் செய்துகொண்டிருக்கையில் கனுவில் ஸ்திரீயைக்கண்டால் அந்தக் கர்மம் ஸித்திக்குமென்று

ஸாமவேதத்தில் சொல்லப்பட்டது. இந்தக் கனவிற்கு விபரீதமானதும் அதைக் காண்கிறவனுக்கு அப்போதே பயத்தைத் தருவதும் வரப்போகிற துக்கங்களைத் தெரிவிப்பதுமானது கெட்ட கனவென்று சொல்லப்படும். அதாவது கறுத்த சரீரத்தையும் கறுத்த பற்களையுமுடைய புருஷன் தன்னைக்கொல்லவும், பன்றி தன்னை அடிக்கவும்,குரங்கு தன்னை ஆக்கிரமிக்கவும், காற்று தன்னை அடித்துக்கொண்டுபோகவும், தான் ஸ்வர்ணத்தை விழுங்கி உமிழவும், தேனைக்குடிக்கவும், தாமரைத்தண்டு கிழங்குமுதலியவைகளைப்பக்ஷிக்கவும், ஒரு வெண்டாமரை மலரைத் தரிக்கவும், கழுதைகள் கட்டிய வாகநத்தின்மேலேறித் தென்திசையைநோக்கிப் போகவும், கறுத்த கன்றையுடைய கறுத்த பசுவையும் கண்டால் பிராண பயம் ஸம்பவிக்குமென்று சுருதியில் சொல்லப்பட்டது. இவ்விரண்டு விதகனுக்களின் பெருமை ஸ்வப்நாத்தியாயத்தில் அறியத்தக்கது.

மைதுந நிமித்த ஸ்நாநம். ருதுகாலத்தில் அதாவது பதினறு திநத்திற்குள் ஒருவன் தன் மனைவியைப் புணர்ந்தால் ஸ்நாநம் செய்யத்தக்கதென்றும், ருதுகால மல்லாத காலத்தில் புணர்ந்தால் மலமூத்திர விஸர்ஜநத்திற்குப்போல் சௌசம் செய்யத்தக்கதென்றும் சாதாதபர்சொன்னர். போஜநத்திற்குப்பின் வாந்தியெடுத்த பக்ஷத்தில் ஆசமநமேசெய்யத் தகுமென்று மநு சொன்னர். (க)

౨ ॥ అజ్ఞానాత్ప్రాశ్యవిణ్మూత్రం సురాసంస్పృష్టమేవచ।
పునస్సంస్కారమర్హంతి త్రయోవర్ణాద్విజాతయః॥

புநருபநயநம் செய்யவேண்டிய நிமித்தங்கள். (இ-ள்.) அஞ்ஞாநத்தினல் மலமூத்திரங்களையும் கள்ளோடுகலந்த வஸ்துக்களையும் குடித்துப் புசித்த இருபிறப்பாளரான மூன்று வர்ணத்தாரும் புநருபநயநத்தைச் செய்துகொள்ளத் தக்கவர்கள். (எ-று.)

இந்தப் புநருபநயநமானது பிராயச்சித்தம்செய்து முடிந்தபின் செய்யத்தக்கதென்றறிக. (உ)

3 ॥ అజినం మేఖలాదండో భైక్షుచర్యావ్రతానిచ।
నివర్తంతేద్విజాతీనాం పునస్సంస్కారకర్మణి॥

(இ-ள்.) பிரம க்ஷத்திரிய வைசியர்களுக்குப் பிராயச்சித்தமுடிவில் செய்யத்தக்கதான புநருபநயந விதியில் மான்தோல், மௌஞ்சி, தண்டம், பிக்ஷாசரணம், பிராஜாபத்திய ஸௌமிய ஆக்நேயம் முதலிய விரதங்கள் செய்யத்தகாதனவாம். (எ-று.) (ங)

౪ ॥ విణ్మూత్రస్యచశుద్ధ్యర్థం ప్రాజాపత్యంసమాచరేత్।
పంచగవ్యంచకుర్వీత స్నాత్వాపీత్వాశుచిర్భవేత్॥

(இ-ள்.) மலமூத்திரங்களுடைய பாநத்தில் சுத்தியின்பொருட்டுப் பிராஜாபத்திய கிருச்சிரத்தையும் பஞ்சகவிய ஸ்நாநத்தையும் அதின் பாநத்தையும் செய்யவேண்டும். (எ-று.)

முன் அத்தியாயத்தில் முதல் சுலோகத்தில் மலமூத்திரபோஜநப்பிராயச்சித்தம் சொல்லப்பட்டதேயெனில் அது அறிந்து செய்ததைப்பற்றியதென்றும் இங்குச்சொன்னது அறியாமல் செய்ததைப் பற்றியதென்றும் அறிக. மலமூத்திரங்களால் தூஷிக்கப்பட்ட ஜலத்தைக் குடித்தவன் ஸாந்தபந கிருச்சிரத்தைச் செய்யக்கடவனென்று கூர்மபுராணத்தில் சொல்லப்பட்டது. (௪)

౫ ॥ జలాగ్నిపతనేచైవ ప్రవ్రజ్యానాశకేషుచ।
ప్రత్యావసితవర్ణానాం కథంశుద్ధిర్విధీయతే॥

౬ ॥ ప్రాజాపత్యద్వయేనైవ తీర్థాభిగమనేనచ।
వృషైకాదశదానేన వర్ణాశ్శుధ్యంతితేత్రయః॥

౭ ॥ బ్రాహ్మణస్యప్రవక్ష్యామి వనంగత్వాచతుష్పథే।
సశిఖంవపనంకృత్వా ప్రాజాపత్యద్వయంచరేత్॥

౮ ॥ గోద్వయందక్షిణాందద్యా చ్ఛుద్ధింపారాశరోఽబ్రవీత్।
ముచ్యతేతేనపాపేన బ్రాహ్మణత్వంచగచ్ఛతి॥

தற்கொலையினின்றும் ஒழிந்தவனுக்குப் பிராயச்சித்தம்.

(இ-ள்.) ஆறு குளம் முதலிய ஜலத்திலும் அக்நியிலும் விழுந்து மரிப்பதிலும், மஹாபிரஸ்தாநமென்னும் மரணாந்தமான யாத்திரையிலும் சுத்தோபவாஸமிருந்தும் மரிப்பதிலும், முயன்றவர்களாகிப் பின்பு அதினின்றும் ஒழிந்தவர்களான நான்கு வர்ணத்தாருக்கும் பிராயச்சித்தம் எவ்விதமாக விதிக்கப்படுகிறதெனில், க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களான மூன்று வர்ணத்தாரும் கிரமமாக இரண்டு பிராஜாபத்திய கிருச்சிரங்களாலும் தீர்த்தயாத்திரையினாலும் ஒரு விருஷபத்துடன் பத்து கோதாநத்தாலும் சுத்தியை அடைகிறார்கள். பிராம்மணன் செய்யவேண்டுவதைச் சொல்லுகிறேன். நாற்சந்தியில் குடுமியுட்பட க்ஷௌரம் செய்வித்துக்கொண்டு காட்டைஅடைந்து இரண்டு பிராஜாபத்தியங்களைச்செய்து இரண்டு பசுக்களைத் தக்ஷிணையாகக்கொடுத்தால் பிராம்மணன் சுத்தியை அடைகிறானென்று

விருத்தபராசரர் சொன்னார். இந்த விரதத்தைச் செய்தபின் அவன் அந்தத்தற்கொலையாகிய பாபத்தினின்று விடப்பட்டவனாகிப் பிராம்மணத் தன்மையை அடைகிறான். (எ-று.)

பிராம்மணத்தன்மையை அடைகிறானென்றதனால் தற்கொலை செய்யமுயன்றபோதே பிராம்மணன் சண்டாளனாகிறானென்றும் பின்பு பிராயச்சித்தத்தினால் பிராம்மணனாகிறானென்று மறிக.

௯ ॥ స్నానాని పంచ పుణ్యాని కీర్తితాని మనీషిభిః।
ఆగ్నేయం వారుణం బ్రాహ్మం వాయవ్యం దివ్యమేవ చ॥

ஸ்நாநலக்ஷணம் (இ-ள்.) பெரியோர்களால் ஐந்து ஸ்நாநங்கள் புண்ணியகரங்களாகச் சொல்லப்பட்டன. அவைகள் ஆக்நேயம், வாருணம், பிராம்மம், வாயவ்யம், திவ்யம் என்பவைகளே. (எ-று.)

க0 ॥ ఆగ్నేయం భస్మనా స్నానమవగాహం తు వారుణమ్।
ఆపోహిష్ఠేతి చ బ్రాహ్మం వాయవ్యం గోరజస్స్మృతమ్॥

கக ॥ యత్తు సాతపవర్షేణ తత్స్నానం దివ్యముచ్యతే।
తత్ర స్నాత్వా తు గంగాయాం స్నాతో భవతి మానవః॥

(இ-ள்.) சாம்பலினால் ஸ்நாநம்செய்வது (கால்முதல் தலைவரையில் சகல அங்கங்களிலும் சாம்பலைப் பூசிக்கொள்ளுவது) ஆக்நேயமென்னப்படும். இதை வைராக்கியமுள்ளவன் கால் முதலாகவும் மற்றவர் தலை முதலாகவும் அநுஷ்டிக்கத்தகுமென்று லிங்கபுராணத்தில் சொல்லப்பட்டது. ஜலத்தில் முழுகுவது வாருணமென்னும் ஸ்நாநமாகும். "ஆபோஹிஷ்டா" முதலிய ருக்குகளால்தர்ப்பஜலங்களைப் புரோக்ஷித்துக்கொள்ளுவது பிராம்மமென்னும் ஸ்நாநமாகும். ஸாயங்காலத்தில் பசுவின் கால் தூளிகள் வாயுவினால் கிளப்பப்படுகையில் அவைகள் தன்மேல் படியும்படி நிற்பது வாயவ்ய ஸ்நாநமாகும். வெயிலில் மழைபெய்ய அதினால் நனைவதாகிய ஸ்நாநம் திவ்யஸ்நாநமாகும். அதில் ஸ்நாநம் செய்தமனிதன் கங்கையில் ஸ்நாநம் செய்தவனாகிறான். (எ-று.)

இவைகளின் பிரிவுகளும் லக்ஷணங்களும் ஆசாரகாண்டம் முதல் அத்தியாயத்தில் சொல்லப்பட்டன. (க0, கக)

க௨ ॥ స్నాతుం యాంతం ద్విజం సర్వే దేవాః పితృగణైస్సహ।
వాయుభూతాస్తు గచ్ఛంతి తృష్ణార్తాస్సలిలార్థినః॥

౧౩ ॥ నిరాశాస్తేనివర్తంతే వస్త్రనిష్పీడనేకృతే।
తస్మాన్నపీడయేద్వస్త్ర మకృత్వాపితృతర్పణమ్॥

(இ-ள்.) ஸ்நாநம் செய்வதற்காகச் செல்லுகிற இருபிறப்பாளனை ஸகல தேவதைகளும் பிதிர்க்கூட்டங்களோடுகூட வாயுவினுருவத்தைத் தரித்துத் தாகித்தவர்களாகித் தண்ணீரை வேண்டிப் பின் செல்லுகிறார்கள் (ஆகையால்) தர்ப்பணத்திற்குமுன் ஸ்நாநவஸ்திரத்தைப் பிழிந்தானாகில் அந்தப்பிதிர்க்களும் தேவர்களும் ஆசையற்றவர்களாகித்திரும்பிவிடுகிறார்கள். ஆகையால் பிதிர்தர்ப்பணத்தைச் செய்யாமல் ஸ்நாநவஸ்திரத்தைப் பிழியக்கூடாது. (எ-று.)

౧౪ ॥ రోమకూపేష్వవస్థాప్య యస్తిలైస్తర్పయేత్పితౄన్।
తర్పితాస్తేనసర్వేతు రుధిరేణమలేనచ॥

(இ-ள்.) திலதர்ப்பணம் செய்கையில் எள்ளைக் கையில் மயிரில்லாதவிடத்தில் வைத்தெடுத்துக்கொண்டு தர்ப்பணம்செய்யாமல் மயிருள்ளவிடத்தில் வைத்தெடுத்துக்கொண்டு எவன் தர்ப்பணம் செய்கிறானோ அவனால் அவன் பிதிர்க்கள் ரக்தத்தினாலும் மலத்தினாலும் தர்ப்பிக்கப்படுகிறார்கள். (எ-று.) (கச)

౧౫ ॥ అవధూనోతియఃకేశాన్ స్నాత్వాప్రస్రవతోద్విజః।
ఆచామేద్వాజలస్థోఽపి సబాహ్యఃపితృదైవతైః॥

(இ-ள்.) எந்தப்பிராம்மணன் ஸ்நாநம்செய்தபின் ஜலம் ஒழுகுகின்ற தலைமயிர்களை உதறுகிறானோ, எவன் ஸ்நாநம்செய்தபின் ஜலத்திலிருந்தபடியே ஆசமநத்தைச்செய்கிறானோ, அவர்கள் பிதிர்க்களாலும் தேவர்களாலும் அங்கீகரிக்கப்படாதவர்களாகி விலக்கப்பட்டவர்களாகிறார்கள். (எ-று.)

ஸ்நாநம்செய்தபின் ஈரவஸ்திரத்துடன் மலமூத்திரங்களை ஒழித்தவன் பிதிர்க்கிரியைகளையும் தெய்வகர்மங்களையும் செய்யத்தக்கவனல்லனென்றறிக. (கரு)

౧౬ ॥ శిరఃప్రావృత్యకంఠంవా ముక్తకచ్ఛశిఖోఽపివా।
వినాయజ్ఞోపవీతేన ఆచాంతోప్యశుచిర్భవేత్॥

(இ-ள்.) எவன் வஸ்திரத்தினால் தலையையும் கழுத்தையும் சுற்றிக்கொண்டாவது கச்சமில்லாதவனாகவாவது குடுமியை முடியாதவனாகவாவது யக்கியோபவீதமில்லாதவனாகவாவது ஆசமநம் செய்கிறானோ அவன் அசுத்தனாகிறான். (எ-று.) (கசு).

౧౭ ॥ జలేస్థలస్థోనాచామే జ్జలస్థశ్చబహిస్థ్సలే।
ఉభేస్పృష్ట్వాసమాచాంత ఉభయత్రశుచిర్భవేత్॥

(இ-ள்) ஸ்நாநம்செய்து ஈரவஸ்திரத்துடனிருக்கையில் கரையில் உட்கார்ந்து ஜலத்தில் ஜலபிந்துக்கள் விழும்படியாகவும் ஜலத்தில் நின்றுகொண்டு கரையில் ஜலபிந்துக்கள் விழும்படியாகவும் ஆசமநம் செய்யக்கூடாது. ஜலம் ஸ்தலமானகரை இவைகளிரண்டையும் ஸ்பரிசித்துக்கொண்டு நன்ருய் ஆசமித்தவன் ஜலம் ஸ்தலம் ஆகிய இரண்டிடத்திலும் சுத்தனுகிருன். (எ-று.)

ஒரு காலினுல் ஜலத்திலும் மற்ருெருகாலினுல் கரையிலுமாக உட்கார்ந்துகொண்டு ஆசமநம் செய்யத்தக்கதென்றறிக. (கஎ)

౧౮ ॥ స్నాత్వాపీత్వాక్షుతేసుప్తే భుక్త్వారథ్యాప్రసర్పణే।
ఆచాంతఃపునరాచామే ద్వాసోపిపరిధాయచ॥

(இ-ள்.) ஸ்நாநம் செய்தபின்னும், பாநம் செய்தபின்னும், தும்மலிலும், நித்திரை, போஜநம், வீதியில் ஸஞ்சரித்தல் ஆகிய இந்த நிமித்தங்களிலும்,வஸ்திரத்தைத்தரித்தபின்னும்,ஆசமநம்செய்தவன் மறுபடியும் ஆசமநம் செய்யக்கடவன். (எ-று.) (கஅ)

இரண்டாசமநம் செய்யத்தக்கதென்றறிக.

౧౯ ॥ క్షుతేనిష్ఠీవనేచైవ దంతోచ్ఛిష్టేతథాఽనృతే।
పతితానాంచసంభాషే దక్షిణంశ్రవణంస్పృశేత్॥

(இ-ள்.) தும்மலிலும், காறியுமிழ்தலிலும், பற்களின் எச்சிலிலும், பொய்வார்த்தையிலும், மகாபாபிகளுடன் ஸம்பாஷணத்திலும், பிராம்மணன் தனது வலக்காதைத் தொடக்கடவன். (எ-று.)

வலக்காதைத்தொடுவது ஆசமநத்திற்கு ஸமானமாகுமென்பது கருத்து. (கசு)

౨౦ ॥ అగ్నిరాపశ్చవేదాశ్చ సోమసూర్యానిలాస్తథా।
సర్వఏవతువిప్రస్య శ్రోత్రేతిష్ఠంతిదక్షిణే॥

(இ-ள்.) அக்நி, ஜலம், வேதங்கள் இவைகளுடன் சந்திரன், சூரியன், வாயு இவர்களனைவரும் பிராம்மணனுடைய வலக்காதில் வசிக்கிருர்கள். (எ-று.) (உ0)

౨౧ ॥ భాస్కరస్యకరైఃపూతం దివాస్నానంప్రశస్యతే।
అప్రశస్తంనిశిస్నానం రాహోరన్యత్రదర్శనాత్॥

(இ-ள்.) சூரியனது கிரணங்களால் பரிசுத்தமாகிய பகலில் செய்யும் ஸ்நாநம் உத்தமமாகும். இராகுதர்சநத்தைக் காட்டிலும் (சந்திர கிரகணத்தைக்காட்டிலும்) வேறாகிய நிமித்தத்தில் இரவில்செய்யும் ஸ்நாநம் உத்தமமாகாது. (எ-று.)

இதனால் அருணோதயகாலத்திற்கு முந்தியஸ்நாநம் விலக்கப்பட்டதென்றறிக. (உக)

௨௨ ॥ స్నానం దానం జపో హోమః కర్తవ్యో రాహుదర్శనే।
అన్యదా త్వశుచీ రాత్రి స్తస్మాత్తాం పరివర్జయేత్॥

(இ-ள்.) இராகுதர்சநமென்னும் சந்திரகிரகண புண்ணியகாலத்தில் ஸ்நாநம், தாநம், ஜபம், ஹோமம் இவைகள் செய்யத்தக்கவைகளாம். சந்திரகிரகணகாலந்தவிர மற்றராத்திரியானது சுசியாகாது. ஆகையால் அந்த இரவை ஸ்நாநாதிகளைச் செய்பவன் விடக்கடவன்.

௨௩ ॥ మరుతో వసవో రుద్రా ఆదిత్యాశ్చైవ దేవతాః।
సర్వే సోమం ప్రవిశంతే తస్మాద్దానం తు సంగ్రహే॥

(இ-ள்.) தேவர்களும் தேவஜாதிபேதங்களான வசுக்கள், ருத்திரர்கள், மருத்துக்கள் ஆகிய இவர்களும் சந்திரனை அடைகிறார்களாகையால் சந்திரகிரகணகாலத்தில் தாநம்செய்யவேண்டும். (உ௩)

௨௪ ॥ కలయజ్ఞే వివాహే చ సంక్రాంతౌ గ్రహణే తథా।
శర్వర్యాం దానమస్త్యేవ నాన్యత్రైవం విధీయతే॥

(இ-ள்.) கலயக்கியத்திலும் விவாகத்திலும் சூரியஸங்கிரமண காலத்திலும் கிரகணத்திலும் ராத்திரியில் ஸ்நாநம்உண்டு. இந்த நிமித்தங்களல்லாதகாலத்தில் ஸ்நாந தாநாதிகள் விதிக்கப்படவில்லை.

௨௫ ॥ పుత్రజన్మని యజ్ఞే చ తథా చాత్యయకర్మణి।
రాహోశ్చ దర్శనే దానం ప్రశస్తం నాన్యథా నిశి॥

(இ-ள்.) புத்திரஜநநத்திலும் யக்கியத்திலும் மரணத்திலும் சந்திரகிரகணத்திலும் இரவில் தாநம்செய்வது உத்தமமாகும். இந்த நிமித்தங்களில்லாத ராத்திரியில் தாநம்செய்யத்தகாது. (உ௫)

௨௬ ॥ మహానిశా తు విజ్ఞేయా మధ్యస్థప్రహరద్వయమ్।
ప్రదోషపశ్చిమౌ యామౌ దినవత్స్నానమాచరేత్॥

(இ-ள்.) முன்யாமம் பின்யாமம் இவைகளைத் தள்ளி நடுவிலுள்ள இரண்டு யாமங்கள் மகாராத்திரியென்னப்படும். முன்யாமம்

பின்யாமம் ஆகிய இவைகளில் பகலில்போல் ஸ்நாநத்தைச் செய்யக்கடவன். (எ-று.)

இந்த விதி ஆபத்காலவிஷயமாம். அல்லாத பக்ஷத்தில் சூரியகிரணங்களால் பரிசுத்தமான பகலில் ஸ்நாநம் செய்வது உத்தமமென்கிற வசநத்தோடு விரோதிக்கும். மகாராத்திரியில் காமியஸ்நாநம் நைமித்திகஸ்நாநம் இவைகள்தவிர மற்ற ஸ்நாநங்கள் செய்யத்தகாவென்று தேவலர்சொன்னார். (உசு)

౨౭ ॥ చైత్యవృక్షశ్చితిర్యూప శ్చండాలస్సోమవిక్రయీ ।
ఏతాంస్తుబ్రాహ్మణస్స్పృష్ట్వా సవాసాజలమావిశేత్ ॥

(இ-ள்.) மயானபூமியில் முளைத்தெழுந்தமரம், சிதைக்கட்டை, வேள்வியில் யூபஸ்தம்பம்ஆகிய இவைகளையும், சண்டாளன் ஸோமவிக்கிரயம் செய்பவன் இவர்களையும் பிராம்மணன் ஸ்பரிசித்தால் உடுத்தவஸ்திரத்துடன் ஜலத்தில் புகக்கடவன். (எ-று.)

இவைகளை ஸ்பரிசித்தகாலம் இரவாகில் அப்போது ராத்திரியிலும் ஸ்நாநம் செய்யவேண்டுமென்றறிக, (உஎ)

౨౮ ॥ అస్థిసంచయనాత్పూర్వం రుదిత్వాస్నానమాచరేత్ ।
అంతర్దశాహేవిప్రస్య హ్యూర్ధ్వమాచమనంభవేత్ ॥

(இ-ள்.) மரித்த பத்துநாட்களுக்குள் அஸ்தி ஸஞ்சயநத்திற்கு முன் மரித்தவனைப்பற்றி அழுதபிராம்மணன் ஸ்நாநம் செய்யக்கடவன். அஸ்திஸஞ்சயநத்திற்குமேல் அழுதவன் ஆசமநம்செய்யக்கடவன்.

౨౯ ॥ సర్వంగంగాసమంతోయం రాహుగ్రస్తేదివాకరే ।
సోమగ్రహేతథైవోక్తం స్నానదానాదికర్మసు ॥

(இ-ள்.) சூரியன் ராகுவினல் கிரகிக்கப்படுமளவில் ஸகலமான ஜலமும் கங்காநதிக்குச் சமமாகும். சந்திரகிரகணத்திலும் ஸகல ஜலமும் ஸ்நாநம்தாநம்முதலிய ஸகலகர்மங்கள் விஷயத்திலும் அவ்விதமாகவே சொல்லப்பட்டது. (எ-று.) (உகூ)

30 ॥ కుశపూతంతుయత్స్నానం కుశేనోపస్పృశేద్ద్విజః ।
కుశేనోద్ధృతతోయంయత్సోమపానసమంభవేత్ ॥

(இ-ள்.) பிராம்மணன்தர்ப்பத்தினல் பரிசுத்தமான ஸ்நாநம்செய்து தர்ப்பங்களைப் பவித்திரமாக விரலில் தரித்து ஆசமநம்செய்யக்கடவன். ஸந்தியாவந்தநத்தில் புரோட்சித்துக்கொள்ளுவதற்காகத்

தர்ப்பத்தின் நுனியால் எடுக்கப்பட்ட ஜலபிந்துவானது ஸோமபாநம்போல் உத்தமமாகும். (எ-று.) (௫0)

౩౧ ॥ అగ్నికార్యపరిభ్రష్టాః సంధ్యోపాసనవర్జితాః ।
వేదం చైవానధీయానాః సర్వే తే వృషలాః స్మృతాః ॥

ஹோமம்முதலியவைகளைத் தவிர்ந்தவன்விருஷளன்என்பது. (இ-ள்.) அக்நியின் காரியங்களான ஹோமம்முதலியவைகளினின்றும் ஒழிந்தவர்களும் ஸந்தியாவந்தநத்தினுல் விடப்பட்டவர்களும் வேதத்தை ஓதாதவர்களுமான ஸகலரும் விருஷளர்கள் (சூத்திரர்கள்) ஆகிறுர்கள். (எ-று.) (௫௧)

౩౨ ॥ తస్మాద్వృషలభీతేన బ్రాహ్మణేన విశేషతః।
అధ్యేతవ్యోఽప్యేకదేశో యది సర్వం న శక్యతే ॥

வேதமோதுவது ஆவசியகமேன்பது. (இ-ள்.) விருஷளத்தன்மை (சூத்திரத்தன்மை) வருமென்று பயந்தவனுன பிராம்மணனுல் வேதத்தில் முழுமையும் ஓதச்சாத்தியமாகாதபக்ஷத்தில் ஒருபாகமாவது அத்தியயநம் செய்யத்தக்கதாகும். (எ-று)

பிரமசாரிகளிரண்டு காலங்களிலும் ஸமித்தை ஓமம் செய்வதையும் கிருகஸ்தர்கள் ஔபாஸநத்தையும்விடாமல் செய்பவர்களாகிக் கூடியவளவில் வேதத்தையுமோதவேண்டுமென்றறிக. (௫௨)

౩౩ ॥ శూద్రాన్నరసపుష్టస్య హ్యధీయానస్య నిత్యశః ।
జపతో జుహ్వతో వాపి గతిరూర్ధ్వా న విద్యతే ॥

சூத்திரர்களது அந்நம்முதலியவைநிந்திக்கத்தக்கதேன்பது (இ-ள்) இடைவிடாமல் சூத்திரனுடைய அந்நரஸத்தினுல் வளர்ந்த சரீரத்தை யுடையவனுகி வேதாத்தியயநம் செய்கிற புருஷன் ஜபம்செய்கிறவனேயாகிலும் ஹோமம்செய்கிறவனேயாகிலும் அவனுக்கு உயர்ந்த கதி யில்லை. (எ-று) (௫௩)

౩౪ ॥ శూద్రాన్నం శూద్రసంపర్కం శూద్రేణ తు సహాసనమ్ ।
శూద్రాద్జ్ఞానాగమః కశ్చి జ్జ్వలంతమపి పాతయేత్ ॥

(இ-ள்) சூத்திரனது அந்நம், சூத்திரஸம்பர்க்கம் அதாவது சூத்திரனேடு ஒருவீட்டில் வசித்தல்; ஒருகாலத்தில் சூத்திரனேடு ஒரு பாய்முதலிய ஆஸநத்தில்கூட உட்காருதல், புராணுதிகளைக்கேட்டுத் தர்மங்களையும் அதர்மங்களையும் அறிந்திருக்கிற சூத்திரனிடத்

தினின்று ஞானத்தைப்பெறுதல் ஆகிய இவைகள் பிரமவொளியால் விளங்குகிற மஹாபுருஷனுகிய பிராம்மணனையும் நரகத்தில் தள்ளத் தக்கவைகள். (எ-று.) (௬௪)

3౫ ॥ యశ్శూద్ర్యాపాచయేన్నిత్యం శూద్రాచగృహమేధినీ ।
వర్జితఃపితృదేవేభ్యో రౌరవంయాతిసద్విజః॥

(இ-ள்.) எந்த இருபிறப்பாளன் தன்சமையலைச் சூத்திரஸ்திரீயினுல் நித்தியமும் செய்விக்கிருனே, சூத்திரஸ்திரீதானே எவனுக்குப் பாரியையாகிருளோ அவன் பிதிர்க்கிரியைகளிலும் தேவகிரியைகளிலும் பெரியோர்களால் அங்கீகரிக்கப்படாதவனுய் ரௌரவமென்னும் நரகத்தை அடைகிருன். (எ-று.) (௬௫)

3౬ ॥ మృతసూతకపుష్టాంగం ద్విజంశూద్రాన్నభోజినమ్ ।
అహంతన్నవిజానామి కాంకాంయోనింగమిష్యతి ॥

3౭ ॥ గృధ్రోద్వాదశజన్మాని దశజన్మానిసూకరః।
శ్వయోనౌసప్తజన్మాని ఇత్యేవంమనురబ్రవీత్॥

ஆசௌசமுடையவனதும் சூத்திரனதுமான அந்நத்தைப்புசித்தவன் இன்னகதியை அடைகிறனேன்பது. (இ-ள்.) பத்துநாட்களுக்குள் ஜநநமரணத் தீட்டுக்காரனுடைய அந்நத்தைப் புசித்து வளர்ந்த சரீரத்தையுடையவனும் சூத்திராந்நத்தைப் புசிப்பவனுமான பிராம்மணனை யானறியமாட்டேன். அதாவது அவன் அடையப் போகிறகதியை யானறியமாட்டேன். பன்னிரண்டுஜென்மங்கள் கழுகாகவும் பத்துஜன்மங்கள் பன்றியாகவும் ஏழுஜன்மங்கள் நாயாகவும் பிறக்கிருனென்றிவ்விதமாக மநு சொன்னுர். (எ-று.)

யானறியமாட்டேனென்று பராசரமுனிவர் சொன்னதினுல் அதிக துன்பத்தைத் தருவது கழுகுஜன்மமென்பது பெறப்பட்டதேயன்றிப் பராசரருடைய அறியாமைவெளியிடப்பட்டதென்று கொள்ளத்தக்கதன்று. (௬௬,௬௭)

3౮ ॥ దక్షిణార్థంతుయోవిప్ర శ్శూద్రస్యజుహుయాద్ధవిః।
బ్రాహ్మణస్తుభవేచ్ఛూద్ర శ్శూద్రస్తుబ్రాహ్మణోభవేత్ ॥

(இ-ள்.) தக்ஷிணை நிமித்தமாகச் சூத்திரனது அவிஸை எந்தப் பிராம்மணன் ஹோமம்செய்கிருனே, அந்தப்பிராம்மணன் சூத்திரனுகவும் சூத்திரன் பிராம்மணனுகவும் ஆகிருர்கள். (எ-று.)

இதனால் பிராம்மணனுக்குத் தோஷமேயன்றிச் சூத்திரனுக்குப் பலஸித்திக்குக் குறைவில்லை யென்றறிக. (௩௮)

౩౯ ॥ మౌనవ్రతంసమాశ్రిత్య ఆసీనోనవదేద్ద్విజః ।
భుంజానోహివదేద్యస్తు తదన్నంపరివర్జయేత్ ॥

ஸங்கல்பித்துக்கொண்ட மௌநவிரதத்தின் நியமம். (இ-ள்.) மௌநத்துடன் புசிக்கவேண்டுமென்னும் விரதத்தை ஆச்சிரயித்துப் பிராம்மணன் போஜநத்திற்கு உட்கார்ந்தபின் ஒருவசநத்தையும் சொல்லக்கடவனல்லன். அப்படிப்பட்ட விரதத்துட னிருப்பவன் புசிக்கும்போது பேசினால் அந்த அந்நத்தைப் புசிக்காமல் விடக்கடவன். (எ-று.) (௩௯)

౪౦ ॥ అర్ధంభుక్త్వాతుయోవిప్ర స్తస్మిన్పాత్రేజలంపిబేత్ ।
హతందైవంచపిత్ర్యంచ ఆత్మానంచోపపాతయేత్ ॥

போஜநம்செய்கிற பாத்திரத்தினால் ஜலம்குடிக்கக்கூடாதென்பது. (இ-ள்.) வெண்கலம்முதலிய பாத்திரத்தில் பரிமாறப்பட்ட அந்நத்தைப் பாதிபுசித்து அந்தப்போஜநத்தினடுவில் அந்தப் பாத்திரத்தைக் கையில் ஏந்திக்கொண்டு எவன் ஜலத்தைக்குடிக்கிருனே அவன் அந்தத்தோஷத்தினால் தான் அநுஷ்டிக்கிற தைவகிருத்தியம் பிதிர்கிருத்தியம் இவைகளையும் தன்னையும் அழிப்பவனாய்த் தன்னை நரகத்தில் தள்ளுகிருன். (எ-று.) (௪௦)

౪౧ ॥ భుంజానేషుతువిప్రేషు యోఽగ్రేపాత్రంవిముంచతి ।
సమూఢస్సచపాపిష్ఠో బ్రహ్మఘ్నశ్చఖలూచ్యతే ॥

தான்புசிக்கிற பந்தியிலிருப்பவர்களை எச்சிலாகச்செய்கிறவனைப் பற்றிய நிஷேதம். (இ-ள்.) ஒருபந்தியில் உட்கார்ந்து பிராம்மணர்கள் புசித்துக்கொண்டிருக்கையில் அவர்களுக்குமுன் தான் புசித்துப் பாத்திரத்தை எவன் விடுகிருனே, அதாவது உத்தராபோசநத்தைச்செய்து பாத்திரத்தினின்று கையைவாங்குகிருனே அவன் மூடனும் கொடியபாபத்தொழிலில் நிலைபெற்றவனும் பிரமஹத்தியைச் செய்தவனுமாகிருனென்று சொல்லப்படுகிருன். (௪௧)

౪౨ ॥ భాజనేషుచతిష్ఠత్సు స్వస్తికుర్వంతియేద్విజాః ।
నదేవాస్తృప్తిమాయాంతి నిరాశాఃపితరస్తదా ॥

(இ-ள்.) சிராத்தத்தில் நிமந்திரண பிராம்மணர்கள் புசித்த இலைகளிருக்கையில் எந்தப்பிராம்மணர்கள் சிராத்தம் செய்தவனைப்

பற்றி ஸ்வஸ்தியை (ஆசீர்வாதத்தை)ச்செய்கிருர்களோ அந்தச்சிராத்தத்தினுல் தேவர்கள் திருப்தியை அடைகிறதில்லை. அப்படியே பிதிர்க்களும் ஆசையற்றவர்களாகிருர்கள். (எ-று.) (சஉ)

౪౩ ॥ అస్నాత్వానైవభుంజీత అజప్త్వాజ్యమహూయచ ।
పర్ణపృష్ఠేనభుంజీత రాత్రౌదీపంవినాతథా ॥

(இ-ள்.) ஸ்நாநம்செய்யாமலும் மந்திரத்தைஜபிக்காமலும் நெய்யை ஆகுதிசெய்யாமலும் பிராம்மணன் புசிக்கக்கடவனல்லன். அப்படியே இலையின் பின்புறத்திலும் இரவில் தீபமில்லாமலும் புசிக்கக்கடவனல்லன். (எ-று.) (சஙு

౪౪ ॥ గృహస్థస్తుదయాయుక్తో ధర్మమేవానుచింతయేత్ ।
పోష్యవర్గార్థసిద్ధ్యర్థం న్యాయవర్తీతుబుద్ధిమాన్ ॥

౪౫ ॥ న్యాయోపార్జితవిత్తేన కర్తవ్యంహ్యాత్మరక్షణమ్ ।
అన్యాయేనతుయోజీవే త్సర్వకర్మబహిష్కృతః ॥

(இ-ள்.) கிருகஸ்த தர்மத்தை அநுஷ்டிப்பவன் புத்திரமித்திரகளத்திராதிகள் அவசியம் ரக்ஷிக்கத்தக்கவர்களென்னும் தயையோடுகூடிப் போஷியவர்க்கமான இவர்களுடைய போஷணத்திற்குரிய பொருள் சித்திக்கவேண்டியதின்பொருட்டுத் தர்மத்தையே சிந்திக்கக்கடவன், அதாவது சாஸ்திரத்தில் சொல்லியபடி யாகம்செய்வித்தல் முதலிய நிமித்தங்களால் பொருளைத்தேடக்கடவன். இப்படியானுல் அவன் நியாயவழியில் நிலைத்தவனுய்ப் பரலோகவிஷயமான புத்தியையுமுடையவனுகிருன். நியாயவழியில் சம்பாதிக்கப்பட்ட பொருளால் தன்னையும் தனது போஷியவர்க்கங்களையும் ரட்சிக்கவேண்டும். அவனவன் வர்ணத்திற்குரிய நியாயவழியால் சம்பாதிக்கப்படாத பொருளால் எவன் பிழைக்கிருனே அவன் ஸகல கர்மங்களிலும் விலக்கப்பட்டவனுகிருன். (எ-று.) (சச,சரு)

౪౬ ॥ అగ్నిచిత్కపిలాసత్రీ రాజాభిక్షుర్మహోదధిః ।
దృష్టమాత్రాఃపునంత్యేతే తస్మాత్పశ్యేతనిత్యశః ॥

நித்தியமுங்காணத்தக்க புண்ணியவஸ்து நிர்ணயம். (இ - ள்.) பார்த்தமாத்திரத்தில் பரிசுத்தியைச் செய்கிறபடியால் மஹாக்நிசயநம் செய்தவனையும் கபிலைப்பசுவையும் பன்னிரண்டுநாள் தொடங்கி ஆயிரம்வருஷம்வரையில் செய்யத்தக்கதாக விதிக்கப்பட்டிருக்கிற பல வித யக்கியங்களில் ஏதாவதொன்றைச் செய்தவனையும் சாஸ்திர

முறை தவருமல் பிரஜைகளைப் பரிபாலநம் செய்கிற அரசனையும் நான்காவதான ஸந்நியாஸாச்சிரமத்தை விதிப்படி அநுஷ்டிப்பவனை யும் கடலையும் நித்தியமும் பார்க்கவேண்டும். (எ-று.) (சசு)

౪౭ ॥ అరణీంకృష్ణమార్జారం చందనంసుమణింఘృతమ్ ।
తిలాన్కృష్ణాజినంఛాగం గృహేచైతానిరక్షయేత్ ॥

சுத்திக்காக வீட்டில் ரட்சிக்கத்தக்க வஸ்துக்கள். (இ-ள். கடைசலினுல் அக்கினியைக் கக்குவதான அரணியையும் கறுத்த பூனையையும் சந்தநத்தையும் பத்மராகம் முதலிய மணியையும் நெய்யையும் எள்ளையும் கிருஷ்ணஜிநத்தையும் ஆட்டையும் கிருகத்தில் ரட்சிக்கவேண்டும். (எ-று.) (சஎ)

౪౮ ॥ గవాంశతంసైకవృషం యత్రతిష్ఠత్యయంత్రితమ్ ।
తత్క్షేత్రందశగుణితం గోచర్మపరికీర్తితమ్ ॥

கோசர்மத்தின் லக்ஷணம். (இ-ள்.) ஒருவிருஷபத்துடன் கூடியவைகளான நூறுபசுக்கள் கட்டுப்படாதவைகளாய் அதாவது தம்மிச்சைக்கீடாக எவ்வளவு இடத்தில் நிற்குமோ அவ்வளவு இடம் பதின்மடங்கு அதிகமானது ஒரு கோசர்மம் என்றுசொல்லப் படும். (எ-று.)

பத்துமுழம் நீளமுடைய அளவுகோல் நாற்புறமும் முந்நூற்றைந்துகொண்ட பூமி கோசர்மமாகுமென்று மநு சொன்னுர்.(சஅ)

౪౯ ॥ బ్రహ్మహత్యాదిభిర్మర్త్యో మనోవాక్కాయకర్మజైః ।
ఏతద్గోచర్మదానేన ముచ్యతేసర్వకిల్బిషైః ॥

(இ-ள்.) மனம் வாக்கு, காயம் ஆகிய இவைகளின் செயலான பிரமஹத்தி முதலிய மஹா தோஷங்களையடைந்த மனிதன் கீழ்ச்சொன்ன கோசர்மமென்னு மளவையுடைய பூமியைத் தாநம்செய்வதினுல் ஸகலபாபங்களினின்று விடுபடுகிருன். (எ-று.) (சகூ)

౫౦ ॥ కుటుంబినేదరిద్రాయ శ్రోత్రియాయవిశేషతః ।
యద్దానందీయతేతస్మై తద్దానంశుభకారణమ్ ॥

தாநத்திற்கு அதிகபலனைத் தருவதான பாத்திர விசேஷம். (இ-ள்.) அதிகமான குடும்பத்தையுடையவனும் அதிகமான தாரித்திரியத்தை யுடையவனும் அதிகமாக வேதவேதாந்தங்களை யோதியுணர்ந்த சுரோத்திரியனுமான பிராம்மணன்பொருட்டு எந்தத்தாநம் கொடுக்கப்படுகிறதோ அந்தத்தாநமானது விசேஷபலத்திற்குக் காரணமாகும். (எ-று.) (ரு0)

౫౧ ॥ వాపీకూపతటాకాద్యై ర్వాజపేయశతైరపి ।
గవాంకోటిప్రదానేన భూమిహర్తా నవిశుధ్యతి ॥

அயலாருடைய பூமியை அபகரிப்பதில் அதிகதோஷமுண்டென்பது. (இ-ள்.) நடைபாவி கிணறு குளம் முதலியவைகளை வெட்டுவிப்பதினாலும் அநேகம் வாஜபேய யக்கியங்களைச் செய்வதினாலும் கோடி கோதானத்தினாலும் அயலார்பூமியை அபகரித்தவன் சுத்தியை அடையமாட்டான். (எ-று.)

இந்தவசநம் அயலார்பூமியை அபகரித்தலில் அதிகதோஷமுண்டென்பதைச் சொல்லிற்றே யன்றி ஒருவிதத்தாலும் அவனுக்குச் சுத்தியில்லையென்பதைச் சொல்லுவதில் கருத்துடையதன்று. (ருக)

౫౨ ॥ అష్టాదశదివాదర్వా క్స్నానమేవరజస్వలా ।
అతఊర్ధ్వం త్రిరాత్రం స్యా దుశనామునిరబ్రవీత్ ॥

ரஜஸ்வலையின் நியமங்கள். (இ-ள்.) ரஜஸ்வலையாயிருந்து நான்காவது நாளில் ஸ்நாநம் செய்தவள் அந்த ஸ்நாநதிநம்தொடங்கிப் பதினெட்டு நாட்களுக்குள் ரஜஸ்வலையானால் மூன்றுநாள் ஆசௌசமின்றியே ஸ்நாநத்தினால் சுத்தையாகிறாள். அதற்குமேலானால் மூன்றுநாள் ஆசௌசம் அநுஷ்டிக்கத்தகுமென்று உசநா என்னும் முனிவர் கூறினார். (எ-று.) (ருஉ)

౫౩ ॥ యుగంయుగద్వయంచైవ త్రియుగంచచతుర్యుగమ్ ।
చండాలసూతికోదక్యా పతితానామధఃక్రమాత్ ॥

சண்டாளன் முதலியவர்களுக்கு ஒதுங்கவேண்டிய அளவு. (இ-ள்.) சண்டாளன், பிரஸவித்தவள், ரஜஸ்வலையாயிருப்பவள், மஹாபாபம்செய்தவன் ஆகிய இவர்கள் விஷயத்தில் தலைகீழ்க்கிரமமாக ஒரு நுகத்தடிதூரம் இரண்டுநுகத்தடிதூரம் மூன்றுநுகத்தடிதூரம் நான்குநுகத்தடிதூரம் விட்டு ஒதுங்கவேண்டும். (எ-று)

மஹாபாபம்செய்தவனுக்கு ஒரு நுகத்தடி தூரமென்று இந்தக்கிரமப்படிப் பார்க்கவேண்டும். யுகமென்னும் நுகத்தடியின் பிரமாணத்தை லோகவியவகாரத்தினால் இவ்வளவென்று அறிந்துகொள்க.

౫౪ ॥ తతస్సన్నిధిమాత్రేణ సచేలంస్నానమాచరేత్ ।
స్నాత్వావలోకయేత్సూర్య మజ్ఞానాత్స్పృశ్యతేయది ॥

கீழ்ச்சொன்னபடி ஒதுங்காவிட்டால் அதின்சுத்தியின்கிரமம். (இ-ள்.) சண்டாளர்முதலியவர்கள் ஒதுங்காமல் கிட்டினால் தேக

16

ஸ்பரிசமில்லாதபக்ஷத்தில் ஸசேலஸ்நாநம் செய்யவேண்டும். அறியாமல் தொடப்பட்டால் ஸ்நாநம் செய்து சூரியனைப் பார்க்கவேண்டும். (எ-று.)

அறிந்து ஸ்பரிசித்தால் இதையே இரட்டித்தாவது அல்லது வேறு பிராயச்சித்தத்தையாவது செய்யவேண்டும். ஸங்கடமான விஷயத்தில் பட்டணமார்க்கத்தில் ஆபத்காலத்தில் ஒதுங்கக்கூடியவரையில் ஒதுங்குவதே அமையுமென்று ஸம்வர்த்தர்சொன்னார். (ருச)

౫౫ ॥ విద్యమానేషుహస్తేషు బ్రాహ్మణోజ్ఞానదుర్లభః ।
తోయంపిబతివక్త్రేణ శ్వయోనౌజాయతేధ్రువమ్ ॥

கவிழ்ந்துகொண்டு ஜலத்தை வாயினால் குடிப்பதின் பயன். (இ-ள்.) ஜலத்தையெடுத்துப் பாநம்செய்யக் கை இருக்க மூடனை எந்தப் பிராம்மணன் கவிழ்ந்துகொண்டு குளம் முதலிய இடங்களில் முகத்தினால் தண்ணீரைக் குடிக்கிறானோ அவன் நாயின் யோனியில் நிச்சயமாக ஜநிக்கிறான். (எ-று.)

இதுவரையில் ஆசாரகாண்டத்தின் சேஷமான பாகம் சொல்லப்பட்டது. இனிப் பிராயச்சித்தகாண்டத்தின் சேஷமான பாகம் சொல்லப்படுகிறது. (ருரு)

౫౬ ॥ యస్తుక్రుద్ధఃపుమాన్ బ్రూయా ద్భార్యాయామాతృగమ్యతామ్ ।
పునరిచ్ఛతిచేదేనాం విప్రమధ్యేతుశ్రావయేత్ ॥

౫౭ ॥ శ్రాంతఃక్రుద్ధస్తమోంధో వా క్షుత్పిపాసాభయార్దితః ।
దానంపుణ్యమకృత్వాతు ప్రాయశ్చిత్తందినత్రయమ్ ॥

౫౮ ॥ ఉపస్పృశేత్త్రిషవణం మహానద్యోస్తుసంగమే ।
చీర్ణాంతేచైవగాందద్యా ద్బ్రాహ్మణాన్భోజయేద్దశ ॥

தன்பத்நியைப் புணரமாட்டேனென்று சபதம்செய்து பின்பு புணருவதின் பிராயச்சித்தம்(இ-ள்.)எந்தப்புருஷனானவன்ஏதோ ஒருநிமித்தத்தினால் கோபித்துத் தன்பத்திநியைப்பார்த்துநீ எனக்கு இனிமேல் மாதாவைப்போல் புணரத்தகாதவளென்றுஅதாவதுஇனி உன்னைப்புணர்ந்தால்மாதாவைப்புணர்ந்ததுபோலாகட்டுமென்றுசத்தியமாகச்சொல்லுகிறானோ,அவன் அந்தப்பத்திநியைமறுபடியும்கோபந்தணிந்தபின் இச்சித்தானேயானால் அவன்பரிஷத்தாகிய பிராம்மணர்நடுவில்நான் அயலூருக்குப்போய்வந்த சிரமத்தினாலேயோ,வீட்டு

வேலையினாலுண்டான இளைப்பினாலேயோ, என்வசனத்தை அதிக்கிரமித்தாளென்று பத்தினியிடத்தில் கோபத்தினாலேயோ,அவள்தப்பைச் செய்யாமலிருக்கையிலும் அஞ்ஞானத்தினால் இவ்விதமாகச் சொல்லத்தகும், சொல்லத்தகாதென்கிற ஆலோசனை யற்றிருந்ததினாலேயோ, பசி, தாகம், இவைகளாலும் அரசர் முதலானவர்களிடத்தில் பயத்தினாலும் பீடிக்கப்பட்டதினாலேயோ கீழ்ச்சொன்ன காரணங்களில் ஏதேனுமொன்றினா லிந்தப்பிரதிக்கினையைச் செய்தேனேயல்லது அறிந்துசெய்யவில்லை என்றுசொல்லக்கடவன். இப்படிப் பிரதிக்கினைசெய்தவனும் தானம்செய்கிறேனென்று பிரதிக்கினைசெய்து அந்த ஆசையினால்வந்த பிராம்மணன்பொருட்டுத் தானத்தைக் கிஞ்சித்தேனும் கொடாதவனும் காசியாத்திரைமுதலிய தர்மவிஷயத்தைச்செய்யஸங்கல்பித்து விதிப்படி சிறிதுதூரம் வழிநடந்து பின்பு அசிரத்தையினால் அந்தப் புண்ணியத்தைச்செய்யாதவனும் மூன்று நாள் பிராயச்சித்தத்தைஅநுஷ்டிக்கக்கடவர்கள். அதாவது இரண்டு மகாநதிகள் கூடுகிற இடத்தில் மூன்றுகாலத்திலும் ஸ்நாநம்செய்து மூன்று உபவாஸமிருந்து பிராயச்சித்தத்தின் முடிவில் நான்காவது தினத்தில் கோதானத்தைச்செய்து பத்துப்பிராம்மணர்களைப் புசிப்பிக்கவேண்டுமென்பதாம் (எ-று.)

தன்பத்தினி விஷயத்தில் பிரதிக்கினைசெய்த பிராம்மணன் பிராஜாபத்திய கிருச்சிரத்தையும் க்ஷத்திரியன் ஒன்பதுநாள் பிராஜாபத்திய கிருச்சிரத்தையும் வைசியன் ஆறுநாள் பிராஜாபத்திய கிருச்சிரத்தையும் சூத்திரன் மூன்றுநாள் பிராஜாபத்திய கிருச்சிரத்தையும் செய்யவேண்டுமென்றும், இந்தக் காரியத்தை நான் செய்யாமற்போனால் பிராம்மண க்ஷத்திரிய வைசிய சூத்திரர்களில் ஒருவனைக் கொன்றவனாகக் கடவேனென்று ஒருவன் பிரதிக்கினை செய்து அந்தக்காரியத்தைச் செய்யாதபக்ஷத்தில் பிராம்மணனைக் கொன்றவனாகிறேனென்று பிரதிக்கினைசெய்திருந்தா லிவனுக்குப் பிரமஹத்திதோஷம் ஸம்பவிக்கிறதாகையால் அதற்கு யவஅரிசி அந்ந போஜநத்துடன் சாந்திராயண விரதத்தைச்செய்யவேண்டுமென்றும், க்ஷத்திரிய வத பிரதிக்கினையானால் பராககிருச்சிரத்தையும் வைசிய வத பிரதிக்கினையானால் பிராஜாபத்திய கிருச்சிரத்தையும் சூத்திர வத பிரதிக்கினையானால் த்ரிராத்திர கிருச்சிரத்தையும் செய்யவேண்டுமென்றும் யமமுநிவரும்,பொய்சொன்னால் அந்தப் பாபம் ஒழிவதற்காக ஸரஸ்வதி மந்திரங்களால் ஸரஸ்வதியை உத்தே

சித்துச் சரு ஹோமத்தைச்செய்யவேண்டுமென்றும், அல்லது கூச்மாண்டமென்னும் சிலமந்திரங்களால் அக்நியில் நெய்யை ஹோமம் செய்யவேண்டுமென்றும்,வருணமந்திரத்தினுலும்ஹோமம்செய்யவேண்டுமென்றும் மநுவும், ஒருவன் பிரதிக்ஞைசெய்து பின்பு இல்லையென்று பொய்சொன்னுலும் பொய் ஸத்தியம் சொன்னுலும் அவன் தப்தகிருச்சிரத்துடன் சாந்திராயணத்தைச் செய்யக்கடவனென்று ஹாரீதரும், ஸத்தியத்தை ஒருவன் சாக்ஷியாக நின்றுசொன்னுல் ஒருவர்ணிக்கு அதாவது ஸந்நியாசிக்கு அல்லது பிரமசாரிக்கு வதம் ஸம்பவிக்குமாகில் அந்தப் பாபத்திற்குப் பயந்து பொய்யைச்சொல்லி அவனைமீட்டுப் பின்பு அந்த ஸாக்ஷியானவன் தன் சுத்திக்காக ஸரஸ்வதி மந்திரங்களால் சருஹோமத்தைச் செய்யக்கடவனென்று யாக்ஞியவல்கியரும்,இதுபோல் தன்னுடைய ஆபத்திலும் அஸத்தியத்தைச் சொல்லி மீண்டுவரலாமென்று வியாக்கிர முனிவரும் சொன்னுர்கள். (௫௬, ௫௭, ௫௮)

௪௯ ॥ దురాచారస్యవిప్రస్య నిషిద్ధాచరణస్యచ ।
అన్నంభుక్త్వాద్విజఃకుర్యా ద్దినమేకమభోజనమ్ ॥

துர்ப்பிராம்மணகிருகபோஜநத்திற்குப்பிராயச்சித்தம். (இ-ள்.) சாஸ்திரங்களால் விதிக்கப்பட்ட ஆசாரங்களைத் தவிர்ந்தவனும் விலக்கப்பட்ட கிருத்தியங்களைச் செய்பவனுமான பிராம்மணனுடைய அந்நத்தைப்புசித்தபிராம்மணன் ஒருநாள் உபவாஸமிருக்கக் கடவன். (எ-று.) (௫௯)

௫௦ ॥ సదాచారస్యవిప్రస్య తథావేదాంతవేదినః ॥
భుక్త్వాన్నంముచ్యతేపాపా దహోరాత్రాంతరాన్నరః॥

ஸத்பிராம்மண கிருகபோஜந பிரயோஜநம். (இ-ள்.) ஸத்தான ஆசாரங்களையுடையவனும் வேதாந்தங்களைக் கற்றுணர்ந்தவனுமான பிராம்மணனுடைய அந்நத்தைப் புசித்தவன் அந்த ஒருநாளில் செய்திருக்கிற பாபத்தினின்றும் விடப்படுகிறுன். (எ-று.) (௬௦)

௫௧ ॥ ఊర్ధ్వోచ్ఛిష్టమధోచ్ఛిష్ట మంతరిక్షమృతేతథా।
కృఛ్రత్రయంప్రకుర్వీత అశౌచమరణేతథా ॥

ஆகாசமரண பிராயச்சித்தம். (இ-ள்.) ஆகாசமரணத்தில் அதாவது கட்டில்முதலிய படுக்கைகள்மேல் மரித்தலில் வாந்திமுதலிய மேல் எச்சிலைப்பற்றியும் மூத்திரம் முதலிய கீழ் எச்சிலைப்பற்றி

யும் ஸம்ஸ்காரம்செய்யப்போகிற புத்திராதிகள் அப்போது மரித்தவனுக்காக மூன்று பிராஜாபத்திய கிருச்சிரங்களையும், அப்படியே, ஆசௌசமரணத்திலும் அதாவது ரஜஸ்வலையாயிருப்பவள் பிரசவித்திருப்பவள் இவர்கள் மரணத்திலும் மூன்று பிராஜாபத்திய கிருச்சிரங்களையும் திரவியரூபமாகச் செய்யக்கடவர்கள். (எ-று.) (சூக)

௬௨ । కృచ్ఛ్రం దైవ్యయుతం చైవ ప్రాణాయామశతద్వయమ్।
పుణ్యతీర్థే నార్ద్రశిరస్స్నానం ద్వాదశసంఖ్యయా ॥

௬௨பு॥ ద్వియోజనే తీర్థయాత్రా కృచ్ఛ్రమేకం ప్రకీర్తితమ్॥

பிராஜாபத்திய கிருச்சிரத்திற்குப்பதில் இன்னதாகுமென்பது. (இ-ள்.) பதினாயிரம் காயத்திரீஜபமும், இருநூறு பிராணயாமங்களும், புண்ணியதீர்த்தத்தில் ஈரத்தலையுடன் செய்யப்படாத பன்னிரண்டு ஸ்நாநங்களும், அதாவது, புண்ணியதீர்த்தத்தில் ஒருதரம் ஸ்நாநம்செய்து ஸ்நாநாங்கமான தர்ப்பணஜபாதிகளை அநுஷ்டித்துத் தலைமயிரை உலர்த்தியபின் இரண்டாவது ஸ்நாநம்செய்து இவ்விதமாகச் செய்யப்பட்ட பன்னிரண்டு ஸ்நாநங்களும், புண்ணியதீர்த்தத்தை யுத்தேசித்து இரண்டு யோஜனதூரம் யாத்திரைசெய்வதும், ஆகிய இந்த நான்குவித அநுஷ்டாநங்களில் ஒவ்வொன்றும் பிராஜாபத்திய கிருச்சிரத்தின் பிரதிநிதியாகும். (எ-று.) (சூ௨,சூ௨௧)

௬௩பு॥ గృహస్థః కామతః కుర్యా ద్రేతస్స్కలనం భువి।
సహస్రం తు జపేద్దేవ్యాః ప్రాణాయామైస్త్రిభిస్సహ ॥

பூமியில்சுக்கிலத்தைவிடுவதின்பிராயச்சித்தம். (இ-ள்.) கிருகஸ்தனானவன் அறிந்து பூமியில் சுக்கிலத்தை விட்டானாகில் அவன் அந்தப்பாபநிவர்த்திக்காக மூன்று பிராணாயாமங்களுடன் காயத்திரியை ஆயிரந்தரம் ஜபிக்கக்கடவன். (எ-று.)

அறியாமல் சுக்கிலத்தைப் பூமியில் விழவிட்டால் (யந்மேத்ய ரேதஃ) என்று தொடங்கியுள்ள மந்திரங்களால் சிந்திய ரேதஸை அபிமந்திரித்து அதை அநாமிகை (மோதிர) விரலினால் எடுத்து ஸ்தநங்களிலும் புருவங்களின் நடுவிலும் தொடக்கடவன் என்று யாக்ஞவல்கியரும், பிரயத்தினப்பட்டுக் கிருகஸ்தன் சுக்கிலத்தைப் பூமியில் விட்டால் வருணமந்திரங்களை ஜபித்து ஸ்நாநாசமநங்களைச்செய்யவேண்டுமென்றும், அப்படிச்செய்த வாநப்பிரஸ்தனும் யதியும் இரண்டு சாந்திராயணங்களைச் செய்யவேண்டுமென்றும் கண்ணுவரும்,

ஸ்வப்நத்தில் அறியாமல் சுக்கிலத்தை யொழித்த பிரமசாரி ஸ்நாநத்தைச்செய்து சூரியனைப்பூசித்து (புநர்மாமைது) என்னும் ருக்கை ஜபிக்கக்கடவனென்று மநுவும் சொன்னார்கள். (சூகூ௨)

௨௪ யு|| చతుర్వేదోపపన్నస్తు విధివద్బ్రహ్మఘాతకే।
సముద్రసేతుగమనం ప్రాయశ్చిత్తం వినిర్దిశేత్ ॥

பிரமஹத்தியின்பிராயச்சித்தம். (இ - ள்.) ருக்குவேதம் முதலிய நான்குவேதங்களையும் ஓதியுணர்ந்த பிராம்மணன் அல்லது அவனைப் போன்றவர்களின் பரிஷத்தானது பிரமஹத்தி செய்தவன்விஷயத்தில் ஸமுத்திரத்தில் ஸ்ரீராமபிரானால் கட்டப்பட்ட ஸேதுவைப்பற்றி விதிப்படிசெய்யத்தக்கதான யாத்திரையைப் பிராயச்சித்தமாக விதிக்கவேண்டும். (எ - று.) (சூச௨)

௨௫ யு|| సేతుబంధపథేభిక్షాం చాతుర్వర్ణ్యాత్సమాచరేత్।
వర్జయిత్వావికర్మస్థాన్ ఛత్రోపానద్వివర్జితః॥

(இ-ள்) தம் தம் வர்ணத்திற்குரிய ஆசாரங்களைத் தவிர்ந்து விபரீதமான அநுஷ்டாநங்களையுடையவர்கள் தவிர மற்ற நான்கு வர்ணத்தாரிடத்திலும் ஸேதுக்குச்செல்லும் வழியில் பிக்ஷையேந்திப் புசிப்பவனும் குடை பாதரக்ஷை இவைகளில்லாதவனுமாகப் பிரமஹத்திசெய்தவன் யாத்திரை செய்யவேண்டும். (எ - று) (சூரு௨)

௨௬ யு|| అహందుష్కృతకర్మా చ మహాపాతకకారకః।
గృహద్వారేషు తిష్ఠామి భిక్షార్థీ బ్రహ్మఘాతకః॥

(இ-ள்.) ஸேது யாத்திரைசெய்கையில் யான் பிரமஹத்திக்காரன், கொடுந்தொழிலைச் செய்தவன், மஹாபாதகத்தைச் செய்விப்பவன், பிரமஹத்தியைச்செய்தவனாகிப் பிக்ஷையைக்கோரி வீட்டு வாயிற்படியில் நிற்கின்றேன் என்று தன்தோஷத்தைப் பிரகாசமாகச்சொல்லக்கடவன். (எ - று.) (சூசூ௨)

௨௭ யு|| గోకులేషు వసేచ్చైవ గ్రామేషు నగరేషు చ।
తపోవనేషు తీర్థేషు నదీప్రస్రవణేషు చ॥

(இ-ள்.) ஊருக்குவெளியில் அநேகமாயுள்ள பசுக்களைக் கட்டுவதற்காக ஏற்படுத்தப்பட்ட மந்தைவெளிகளிலும் காட்டிலும் ஊர்களிலும் பட்டணங்களிலும் தபோவநங்களிலும் புண்ணிய தீர்த்தங்களிலும் அல்லது ஆறுகளிலும் இளைப்பாறக்கடவன். (எ - று)

௨௮½॥ ఏతేషుఖ్యాపయన్నేనః పుణ్యంగత్వాతుసాగరమ్।
దశయోజనవిస్తీర్ణం శతయోజనమాయతమ్॥

௨௯½॥ రామచంద్రసమాదిష్టం నలసంచయసంచితమ్।
సేతుందృష్ట్వాసముద్రస్య బ్రహ్మహత్యాంవ్యపోహతి॥

(இ-ள்.) கீழ்ச்சொன்ன இடங்களில் தன்பாபத்தை வெளியிட்டுக்கொண்டு புண்ணியமான சமுத்திரத்தை அடைந்து அங்கு பத்து யோஜநதூரம் அகன்றதும் நூறுயோஜனதூரம் நீளமுடையதும் ஸ்ரீராமசந்திரனால் ஆஞ்ஞாபிக்கப்பட்டு நளனென்னும் வாநரத்தினால் கட்டப்பட்டதுமான ஸமுத்திரத்தின் அணையைக்கண்டு பிரமஹத்தியைப் போக்குகிறான். (எ-று.) (௨௮½, ௨௯½)

௩௦॥ సేతుందృష్ట్వావిశుద్ధాత్మా త్వవగాహేతసాగరమ్॥

(இ-ள்.) புண்ணியமான ஸேதுவைக்கண்டு பரிசுத்தனாகி ஸமுத்திரத்தில் அவன் ஸ்நாநம் செய்யக்கடவன். (எ-று.) (௩௦)

௩௦½॥ యజేతవాశ్వమేధేన రాజాతుపృథివీపతిః॥

(இ-ள்.) ஸேதுயாத்திரையை விதிப்படிச் செய்யச் சக்தியற்றவனான பூமண்டலத்தை ஆளுகிற அரசன் பிரமஹத்திதோஷநிவாரணத்திற்காக அசுவமேதமென்னும் யாகத்தைச் செய்யக்கடவன்.

௩௧½॥ పునఃప్రత్యాగతోవేశ్మ వాసార్థముపసర్పతి।
సపుత్రస్సహభృత్యైశ్చ కుర్యాద్బ్రాహ్మణభోజనమ్॥

௩௨½॥ గాశ్చైవైకశతందద్యా చ్చాతుర్వైద్యేతుదక్షిణామ్।
బ్రాహ్మణానాంప్రసాదేన బ్రహ్మహాతువిముచ్యతే॥

(இ-ள்.) பிரமஹத்திதோஷ நிவாரணத்திற்காக ஸேதுயாத்திரைசெய்து திரும்பிவந்தவன் தனது கிருகத்தை அடைந்து தன்பிள்ளைகளோடும் வேலைக்காரர்களோடும் கூடிப் பிராம்மணபோஜநத்தைச் செய்வித்து நான்குவேதங்களையுமறிந்த பிராம்மணன் விஷயத்தில் ஒரு விருஷபத்துடன் நூறுபசுக்களைத் தக்ஷிணையாகக் கொடுக்கக்கடவன். பிராம்மணர்களுடைய அநுக்கிரகத்தினால் அதாவது நீ பாபமற்றவனாய்விட்டாய் என்றிவ்விதமான பிராம்மணவசநத்தினால் பிரமஹத்திசெய்தவன் அந்தத்தோஷத்தினின்றும் விடப்படுகிறான். (எ-று.)

இந்தப் பிராயச்சித்தம் குணமற்றவனான பிராம்மணனைக்கொன்ற விஷயத்திலென்றறிக. இதுவிஷயத்தில் தன்னுடைய ஸகல தனத்தையுமாவது ஒருபிராம்மணன் ஜீவனத்திற்குப் போதுமான தனத்தையாவது கொடுக்கக்கடவனென்றும் இந்தவிரதம் குணமற்றவனான பிராம்மணனை அறியாமல்கொன்றவிஷயமென்றும் அறிந்து பிராம்மணனைக்கொன்ற விஷயத்தில் பிராயச்சித்தமே யில்லையென்றும் மநு சொன்னார். இந்தவதத்தை அடிக்கடி செய்தபக்ஷத்தில் இரண்டாவது வதத்திற்கு இந்த விரதம் இருபத்துநாலுவருஷம் செய்யத்தக்கதாமென்றும் மூன்றாவது தடவைக்குப் பிராயச்சித்தமே யில்லை என்றும் மநு தேவலர்கள் சொன்னார்கள். பிராம்மணன் ஒரு பிராம்மணனைத்தான் நேராக அடித்துக்கொல்லாமல் அவனை அவமானம்செய்ய அதனால் கோபித்து அவன் தற்கொலை செய்துகொண்டால் அந்தப் பிரமஹத்திக்குக் காரணமான அவமானம்செய்த பிராம்மணன் மூன்றுவருஷம் முன்சொன்ன விரதத்தை அநுஷ்டிக்கக்கடவனென்றும் அல்லது மேற்கு முகமாகப் பெருகுகிற ஸரஸ்வதி நதியிலாவது ஸ்நாநம்செய்யக்கடவனென்றும் குணமில்லாதபிராம்மணன் குணமில்லாத மற்றொருபிராம்மணன் பேரில்கோபித்துக் கொண்டு அதனால் மரித்தாலும் மூன்று வருஷம் பிரமஹத்திவிரதம்செய்யத்தக்கதென்றும் வதத்தைச்செய்யாமல் அதற்கு நிமித்தமானவன் குணவானாக இருந்து மரித்தவன் குணஹீனனாயிருந்தால் நிமித்தமான பிராம்மணன் காட்டில்சென்று ஒருவருஷம் விரதத்தை அநுஷ்டிக்கக் கடவனென்றும் ஸுமந்து சொன்னார்.

பிரமஹத்தியை அநுமதிசெய்தவன் முதலியவர்களின் பிராயச்சித்தம். பிராம்மணனை அடித்துக்கொன்றவன், அதை அநுமதிசெய்தவன், அதை உபதேசித்தவன், அதை விவரித்துச்சொல்லிக்கொடுத்தவன், அதற்கு ஒருவனை உற்சாகப்படுத்தினவன், அதற்கு ஸஹாயம்செய்தவன், அதன்வழியைக் காட்டினவன், அந்தப்பாபிக்கு ஆதரவாயிருந்தவன், அவனுக்கு ஆயுதங்கொடுத்தவன், அவனுக்கு அந்நமிட்டவன், அவனைத்தடுக்கச் சக்தியிருந்தும் உபேக்ஷித்தவன், அவனுடைய தோஷத்தை வெளியிட்டவன், அதை ஆமோதித்தவன் ஆகிய இவர்களில் ஒவ்வொருவரும் பிராயச்சித்தத்திற்கு உரியவர்களாகையால் அவரவர் பாபத்திற்குத்தக்கபடி அதாவது வதத்திற்கு நெருங்கி ஸகாயம்செய்தவனுக்கு அதிகமாகவும் ஒதுங்கி ஸகாயம் செய்தவனுக்கு அற்பமாகவும் ஆலோசித்து சிக்ஷையை

யும் பிராயச்சித்தத்தையும் விதிக்கவேண்டுமென்று பைடீநஸி சொன்னார்.

பாலன் கிழவன் முதலியவர்கள் செய்யத்தக்க பிராயச்சித்தம். எண்பது வயது சென்ற விருத்தர்களும் பதினாறுவயதிற்குட்பட்ட பாலர்களும் ஸ்திரீகளும் ரோகிகளும் பாதிப்பிராயச்சித்தமே செய்யத்தக்கவர்களென்றும் நாலுவயதிற்கு மேற்பட்டுப் பதினொருவயது ஆகாத பாபியான பாலன் செய்யவேண்டிய பிராயச்சித்தத்தை அவனுடைய பிராதா அல்லது பிதா அல்லது வேறொரு பந்து செய்யக்கடவர்களென்றும் யமமுனிவர் சொன்னார். (எகஉ, எஉ௧)

உ௩ ॥ సవనస్థాం స్త్రియం హత్వా బ్రహ్మహత్యావ్రతం చరేత్ ॥

(இ-ள்.) யாகத்திலிருக்கிற ஸ்திரீயை அதாவது யாகம்செய்துகொண்டிருக்கிற பிராம்மணோத்தமனுடைய ஸ்திரீயைக் கொன்றவன் பிரமஹத்தியின் பிராயச்சித்தத்தையே செய்யவேண்டும் (எ-று.)

உ௪ ॥ మద్యపశ్చ ద్విజః కుర్యాత్ నదీం గత్వా సముద్రగాం ।
చాంద్రాయణే తతశ్చీర్ణే కుర్యాద్బ్రాహ్మణభోజనం ॥
అనడుత్సహితాం గాంచ దద్యాద్విప్రేషు దక్షిణాం ॥

(இ-ள்.) **மத்தியபாநப் பிராயச்சித்தம்.** மத்தியமென்பது மதத்தைத் தருவதான பலா, பனை, தென்னை, திராக்ஷை, கர்ச்சூரம், கரும்பு, இலுப்பை முதலிய மரங்களினின்று முண்டான கள். அதைக்குடித்த பிராம்மணன் சமுத்திரத்தைச் சேருவதான மஹாநதியை அடைந்து அங்கு சாந்திராயண விரதத்தை அநுஷ்டித்து அது முடிந்தபின் பிராம்மணபோஜநத்தைச் செய்வித்து எருதுடன் கூடின கோதாநத்தைப் பிராம்மணர்கள் விஷயத்தில் தக்ஷிணையாகக் கொடுக்கக்கடவன். (எ-று.)

இந்தப் பிராயச்சித்தமானது அறிந்துசெய்த மத்தியபாநத்தைப் பற்றியதாகும். அறியாமல் மத்தியபாநம் செய்தபிராம்மணன் அதிகிருச்சிரத்தைச் செய்து சக்திக்கீடான பிராம்மண போஜநத்தைச் செய்விக்கவேண்டுமென்று பிரஹஸ்பதிசொன்னார். இந்த நிஷேதம் பிராம்மணவிஷயமே யன்றி க்ஷத்திரிய வைசியர்களைப் பற்றியதல்ல வென்றும் அவர்கள் மத்தியத்தையாவது சாராயத்தையாவது குடித்தால் தோஷத்தை அடையமாட்டார்களென்றும் யாக்கியவல்கியர் சொன்னார். உபநயநத்திற்குமுன் மத்தியபாநம்செய்த பாலக

னுடைய பிராயச்சித்தமான மூன்று கிருச்சிரங்களைப் பிதா, மாதா, பிராதா இவர்களில் யாரேனும் செய்யக்கடவர்களென்று ஜாதுகர்ணியர்சொன்னார். (எசுஉ)

౭౫॥ సురాపానంసకృత్కృత్వా అగ్నివర్ణాంసురాంపిబేత్ ।
సపాతయేదథాత్మాన మిహలోకేపరత్రచ ॥

ஸுராபாந பிராயச்சித்தம். (இ-ள்.) மா, வெல்லம், தேன், இவைகளினின்று முண்டாகிய திரவமானது ஸுரை அல்லது சாராயம் என்னப்படும். அதை ஒரு தரம் குடித்த பிராம்மணன் சாராயத்தைஅக்நியின் வர்ணம் உண்டாகும்வரையில் காய்ச்சிக் கொதிக்கிற சமயத்தில் அதைக்குடிக்கக்கடவன். அப்படிக்குடித்துத் தன்னைக் கொல்லக்கடவன். பின்பு அவனிந்தலோகத்திலும் பரலோகத்திலும் சுத்தனாகிறான். (எ-று.)

வெல்லம், மா, தேன் இவைகளாலுண்டான சாராயத்தைக் குடித்த பிராம்மணன் கிரமமாகத் தப்தகிருச்சிரம், பராககிருச்சிரம், சாந்திராயணம் இவைகளைச் செய்யக்கடவனென்கிற பிரஹஸ்பதிவசநம் வேறு ஒளஷதங்களால் போக்கத்தகாத வியாதி தீரவேண்டிச் சாராயத்தைக் குடித்தவன் விஷயமென்றறிக. (எருஉ)

౭౬। అపహృత్యసువర్ణంతు బ్రాహ్మణస్యతతస్స్వయమ్ ॥
గచ్ఛేన్ముసలమాదాయ రాజానంస్వవధాయతు ॥

౭౭॥ తతశ్శుద్ధిమవాప్నోతి రాజ్ఞాసౌముక్తఏవతు ।
కామతస్తుకృతంయత్స్యా న్నాన్యథావధమర్హతి ॥

பிராம்மணனுடைய ஸ்வர்ணத்தைத் திருடுவதின் பிராயச்சித்தம். (இ-ள்.) பிராம்மணனுடைய ஸ்வர்ணத்தைத் திருடின பிராம்மணன்தானே தன்னைக் கொல்லுவதின் பொருட்டு உலக்கையை எடுத்துக்கொண்டு ராஜாவை அடையக்கடவன் அதாவது நான்பிராம்மணனது பொன்னைத்திருடினவன் என்னை இந்த உலக்கையால் நீ அடிக்கக்கடவை என்று ராஜாவைக் கிட்டிச்சொல்லக்கடவன். ராஜா அந்த உலக்கையால் அவனை ஒரு அடி அடிக்க அதனால் மரித்தாலும் சுத்தனாகிறான். ராஜாவினால் அடிபட்டு விடப்பட்டாலும் சுத்தனாகிறான். அறிந்துசெய்த பொன் திருடுதலுக்கு இந்தவதம் பிராயச்சித்தமாகுமே யன்றி அறியாமல் செய்த திருடன் இந்த வதத்திற்கு உரியவனல்லன். (எ-று.)

பிராம்மணனுடைய ஸ்வர்ணத்தை என்னும் வாக்கியத்திற்குப் பொருளென்னவெனில், ஜென்னல்வழியாக விழுகிற சூரியகிரணத்தில் காணப்படுகிற ஒருதூளி திரஸரேணு என்றும், அது எட்டு கொண்டது லீக்ஷையென்றும், அது மூன்றுகொண்டது ராஜஸர்ஷபமென்றும், அது மூன்றுகொண்டது கௌரமென்றும், அது ஆறு கொண்டது யவமத்தியமென்றும், அது மூன்றுகொண்டது கிருஷ்ணலம் அல்லது குன்றிமணி என்றும், குன்றிமணி ஐந்துகொண்டது மாஷமென்றும், அது பதினாறுகொண்டது, ஸ்வர்ண மென்றும் அதாவது எண்பது குன்றிமணியளவு பொன் ஸ்வர்ணமென்னப்படு மென்பதாம். ஒருவேளை ராஜாவானவன் கையும் உலக்கையுமாகத் தன்னையடிக்கச்சொல்லி எதிரேநிற்கிற ஸ்வர்ணம் திருடினவனுடைய பரிஜனங்கள்மீது கருணையினால் அவர்களுக்கு ஆதரவான இவனை அடித்துக்கொல்லாமல் விட்ட போதிலும் அந்தத்திருடன் சுத்தனாகிறானென்று சிலர் சொல்லும் பக்ஷமானது மநுவசநத்திற்கு விரோதமாகையால் அது சிறந்ததல்லவென்பது மாதவாசாரியர் மதமென்றறிக. அறிந்துசெய்த பொன்திருட்டுக்கு வதம் பிராயச்சித்தமென்றும்அறியாமல்செய்த பொன்திருட்டுக்குப் பொன்அளவுக்கீடாக இருபத்துநால்வர் மதத்தில் சொல்லிய தபஸினால் சுத்திஎன்றும் அதுவும் கீழ்ச்சொன்ன எண்பது குன்றியணியளவு பொன்விஷயமாமென்றும் அதற்கு அதிகமான பொன்னைத் திருடினபக்ஷத்தில் பிராணாந்தமான விரதமாவது பிரமஹத்தியின் விரதமாவது செய்யத்தகுமென்றும் அல்லது தன்னளவு பொன்னைத் தானம்செய்து யாகம் செய்வதுடன் தீர்த்த யாத்திரையைச் செய்யவேண்டுமென்றும் பொன்னைத் திருடினவன் உடையவனுக்குச் சொத்தைக் கொடுத்துப் பின்பு இந்தப்பிராயச்சித்தங்களைச் செய்துகொள்ளவேண்டுமென்றும் ராஜாவுக்குத் திருடனை உலக்கையினால் அடிக்கத்துணிவு வராதபக்ஷத்தில் தாம்பிரத்தினால் செய்த ஆயுதத்தை ராஜா திருடன்கையில் கொடுத்தால் அதனால் அவன் தன்னைத்தானேகொன்று சுத்தனாகிறானென்றும் இவ்விதமாகப் பற்பல முனிவர்கள் சொன்னார்கள். (எ௬௭, எஎ௭)

௭௯௰। ఆసనాచ్ఛయనాద్యానా త్సంభాషాత్సహభోజనాత్।

సంక్రమంతిహిపాపాని తైలబిందురివాంభసి ॥

பாபியோடு உட்காருவது முதலியவற்றின் பயன். (இ-ள்.) பாபியுடன் உட்காருவதினாலும் சயனிப்பதினாலும் கூட வழிநடப்

பதினுலும் ஸம்பாஷணத்தினுலும் ஒருபந்தியில் புசிப்பதினுலும் அவனுடைய பாபமானது எண்ணெயின் துளியானது ஜலத்தில் பரவுவதுபோல் பிறரைச்சேருகின்றது. (எ-று).

பிரமஹத்திசெய்தவன் முதலிய மஹாபாபிகளுடன் ஒருவருஷ காலம் ஸகவாஸம்செய்தவன் அந்தப் பாபத்திற்குரிய பிராயச்சித்தத்தைத் தானும் செய்யக்கடவனென்று மநுசொன்னர். (எ அ௨)

௭௰௫ చాంద్రాయణం యావకంచ తులాపురుషఏవచ।

గవాంచైవానుగమనం సర్వపాపప్రణాశనమ్॥

ஸகலபாபத்திற்கும் செய்யத்தக்க பிராயச்சித்தம், (இ-ள்.) எந்தப் பாபங்களுக்குக் கீழே பிராயச்சித்தங்கள் சொல்லப்படவில்லையோ அந்தப் பாபங்களெல்லாவற்றிற்கும் நாசகமாகச் சாந்திராயணம், யாவகவிரதம், மேலே சொல்லப்போகிற துலா புருஷ கிருச்சிரம், பசுக்களைப் பின்தொடருவதாகிய விரதம் ஆகிய இவைகளிலொன்றை அந்தந்தப் பாபங்களின் கௌரவலாகவங்களுக்கீடாக ஆராய்ந்து அநுஷ்டிக்கவேண்டும். (எ-று.)

இவ்விதமாகப் பிராயச்சித்தகாண்டத்தில் ஒன்பது அத்தியாயங்களால் பிரகீர்ணகபாபந்தொடங்கி மஹாபாதகமளவாக உள்ள ஸகல பாபங்களுக்கும் ஸ்ரீபராசரமுனீந்திரர் அருளிச்செய்த பிராயச்சித்தங்களுக்கு வியாக்கியாநம்செய்துவந்த நாம் ஆங்காங்குஉதாரணமாக எடுத்துரைத்த ஸ்மிருதி வசநங்களை வியவஸ்தை செய்துவந்து அந்தப்பிரஸங்கத்தினுல் பின்னும் சிலபாபங்களுக்கு ஸ்மிருதிவசநங்களைக் கொண்டு பிராயச்சித்தத்தைச் சொல்லுகிருமென்று மாதவாசாரியர் கூறுகிருர்.

ஓதியவேதத்தை மறந்தவனுக்குப் பிராயச்சித்தம். வேதத்தை ஓதிப் பின்பு அதைச் சொல்லாமல் விடுதல், வேதத்தை நிந்தித்தல், பொய்ஸாக்ஷியம் சொல்லுதல், ஸ்நேகிதனைக்கொல்லுதல், நிந்திக்கப்பட்டதான அந்நாதிகளைப் புசித்தல் இவைகள் ஸுராபாநத்திற்கு ஸமானமாகுமென்று மநுவும், வேதத்தை ஓதி மறந்தவன் பன்னிரண்டுநாளில் பிராஜாபத்தியகிருச்சிரத்தைச் செய்து பின்பு ஆசாரியனிடத்தினின்று வேதத்தை மறுபடியும் ஓதக்கடவனென்று வஸிஷ்டரும் சொன்னர்கள். இது அறியாமல் செய்தவிஷயத்தைப்பற்றியதென்பதும் அறிந்து வேதத்தை மறந்தவன் ஸுராபாநப்பிராயச்சித்தத்தையே செய்யக்கடவனென்பதும் மநுவின் கருத்தென்றறிக.

த்தில் பசநம்செய்தயவஅரிசி அந்நத்தைவிதிப்படி புசிக்கக்கடவனெ ன்று பிரசேதர்சொன்னுர். இது அறிந்து பலதடவை செய்த விஷ யத்தைப்பற்றியது. சூத்திர வர்ணத்திற்குப் புரோகிதனுன பிராம் மணன் அவர்களிடத்தில் ஸ்நேகத்தினுலாவது பொருளாசையினு லாவது புரோகித வேலையைச் செய்தானுகில் தப்த கிருச்சிரத்தைச் செய்யக்கடவனென்று மநுசொன்னது அசக்தனைப்பற்றியது. சூத் திரர்களுக்குப் புரோகிதனுன பிராம்மணன் மூன்று பிராஜாபத்திய கிருச்சிரங்களைச் செய்யக்கடவனென்கிற மநுவசநம் முக்கியமென் பது கருத்து.

அஸத்துக்களிடத்தின்ன்று தாநம் வாங்குதலின் பிராயச்சி த்தம். பிரமசாரியானவன் அஸத்தாகிய வஸ்துவை அஸத்தான மனிதனிடத்தில் தாநமாகப் பெற்றுக்கொண்டால் அவன் பசுவின் தொழுவத்தில் ஒருமாஸம் வஸித்துப் பாலைக்குடித்து உபவாஸமிரு ந்து காயத்திரியைஜபித்தால் சுத்தனுகிறுனென்று யாக்கிய வல்கிய ரும் அவன் சுத்தியடைவதற்காக மூவாயிரம் காயத்திரி ஜபத்தைச் செய்யவேண்டுமென்று மநுவும் சொன்னுர்கள்.

விக்கிரயம் செய்யத்தகாத வஸ்துவை விக்கிரயித்தலின் பிராய ச்சித்தம். சாராயத்தை விக்கிரயம் செய்தால் நாலு சாந்திராயணங்க ளையும், அரக்கு, உப்பு, மாம்சம், இவைகளை விக்கிரயித்தால் மூன்று சாந்திராயணங்களையும், தேன், நெய், எண்ணெய், சோமமென்னும் கொடி இவைகளை விக்கிரயித்தால் இரண்டு சாந்திராயணங்களையும், பால், பாயஸம், பணியாரம் இவைகளை விக்கிரயித்தால் ஒரு சாந்தி ராயணத்தையும், தயிர், நெய், கருப்பஞ்சாறு, வெல்லம், எண்ணெயில் பசனம் செய்யப்பட்ட வஸ்துக்கள் இவைகளை விக்கிரயித்தால் ப ராககிருச்சிரத்தையும், சமைத்த அந்நத்தை விக்கிரயித்தால் பிராஜாப த்திய கிருச்சிரத்தையும், மோரைவிக்கிரயித்தால் ஒரு உபவாஸத்தை யும், பாக்கு, மஞ்சிஷ்டை என்னும் வர்ணச்சரக்கு, திராக்ஷை, கர்ச் சூரிப்பழம், பலாப்பழம் இவைகளை விக்கிரயித்தால் மூன்றுநாள் பிரா ஜாபத்திய கிருச்சிரத்தையும், வாழைக்காய், தேங்காய், நாரத்தங்காய், மாதளங்காய், எலுமிச்சங்காய் இவைகளை விக்கிரயித்தால் கால்பாகம் பிராஜாபத்தியகிருச்சிரத்தையும், கஸ்தூரிமுதலியபரிமளவஸ்துக்களை விக்கிரயித்தால்பிராஜாபத்திய கிருச்சிரத்தையும், பச்சைக்கர்ப்பூரம் மு தலியகர்ப்பூரஜாதிகளை விக்கிரயித்தால் பாதிப்பிராஜாபத்திய கிருச்சிர த்தையும், பெருங்காயம் முதலியவைகளை விக்கிரயித்தால் ஒருநாள்உப வாஸத்தையும், எள், வஸ்திரம், கிருஷ்ணுஜிநம், பசு, எருது இவைகளை

விக்கிரயித்தால் பிராஜாபத்திய கிருச்சிரத்தையும், யானையை விக்கிரயித்தால் சாந்திராயணத்தையும், கழுதை, குதிரை, ஆடு இவைகளை விக்கிரயித்தால் பராககிருச்சிரத்தையும், நாயை விக்கிரயித்தால் இரட்டிப்புப் பராககிருச்சிரத்தையும் ஸ்திரீயை விக்கிரயித்தால் சாந்திராயணத்தையும், புருஷனை விக்கிரயித்தால் இரட்டிப்பு சாந்திராயணத்தையும் பிராம்மணன் செய்யக்கடவனென்று இருபத்து நால்வர் மதத்தில் சொல்லப்பட்டது.

வேதம் வேதாங்கம் முதலியவைகளின் விக்கிரயத்தின் பி[illegible]சித்தம். [illegible]ாள் வேதத்தை விக்கிரயித்தால் சாந்திராயணத்தையும், வேதாங்கங்களை [illegible]க்கிரயித்தால் பராககிருச்சிரத்தையும், ஸ்மிருதிகளை விக்கிரயித்தால் பிராஜாபத்திய கிருச்சிரத்தையும், இதிஹாசம் புராணம் இவைகளை விக்கிரயித்தால் ஸாந்தபந கிருச்சிரத்தையும், மந்திரசாஸ்திரம், பாஞ்சராத்திரம் முதலிய ஆகமங்கள் இவைகளை விக்கிரயித்தால் பிராஜாபத்திய கிருச்சிரத்தையும், நீதிசாஸ்திரம் முதலிய மற்றுமுள்ள சகல வித்தைகளையும் விக்கிரயித்தால் கால்பாகம் பிராஜாபத்திய கிருச்சிரத்தையும் பிராம்மணன் செய்யக்கடவனென்று இருபத்துநால்வர் மதத்தில் சொல்லப்பட்டது.

விராத்திய பிராயச்சித்தம். எந்த இருபிறப்பாளருக்கு விதிப்படி காயத்திரி யுபதேசமானது காலத்தில் செய்யப்படவில்லையோ அவர்கள் விராத்தியர்களென்றும் அவர்களுக்கு மூன்று பிராஜாபத்திய கிருச்சிரங்களைச் செய்வித்துப் பின்பு விதிப்படி உபநயநத்தைச் செய்விக்கவேண்டுமென்றும் மநு சொன்னார்.

கூலிக்கு வேதத்தை ஓதுவிப்பதற்கும் கூலிவாங்கி வேதமோதுவதற்கும் பிராயச்சித்தம். கூலிக்கு வேதத்தைச் சொல்லுவித்தவனும் கூலிக்கு வேதத்தை ஓதினவனும் மூன்று பக்ஷகாலம் பால் மாத்திரத்தினால் பிராணனைத்தரிப்பவர்களாய் உபவாஸத்தை அநுஷ்டிக்கக் கடவர்களென்று ஹாரீதர் சொன்னார்,

பலிக்கின்றமரத்தை வெட்டுதலின் பிராயச்சித்தம். பழத்தைத் தருவதாகிய விருக்ஷத்தை வெட்டினவன் நூறு ருக்குகளை ஜபிக்க வேண்டுமென்றும், புதர்க்கொடிகள், புஷ்பித்தகொடிகள், உழுத நிலத்தில் முளைத்த ஓஷதிகள், உழாதநிலத்திலும் காடுகளிலும் தானே முளைத்த ஓஷதிகள் இவைகளை ஒருபலனைப்பற்றி யன்றிக்கே வீணாக வெட்டினவன் ஒருநாள் பாலைக்குடிப்பவனாய்ப் பசுவைப் பின்செல்வதாகிய விரதத்தைச் செய்யக்கடவனென்றும் மநு சொன்னார். ஒரு பலனைப்பற்றி யன்றிக்கே என்றதனால் யக்ஞயத்திற்காக ஓஷதி முத

பொய் சொல்லுவதின் பிராயச்சித்தம். தன்னிலும் உத்தமனவன் விஷயத்தில் பொய்சொல்வது பிரமஹத்திக்கும், ஸுராபானத்திற்கும் உபபாதகத்திற்கும் சமமாகுமென்று முறையே மநுவும் யாக்கியவல்கியரும் விஷ்ணுவும் சொன்னார்கள். அவைகளில் ஒருவன் தனக்குத் துவேஷியானவனைக்கொல்ல நினைத்து அவன் தண்டநாதிகாரியான ராஜாவிடத்தில் பயந்து தானே பிராணனை விடும்படியாக அவனிடத்திலில்லாத பெரியதப்புக்களையெடுத்துரைக்கும் பொய்யானது வதத்தைச் செய்ய ஏவுகிறபடியால் பிரமஹத்திக்கும், தனக்கு லாபம் பூஜை புகழ் இவைகளைவிரும்பி ராஜசபையில் தன்னிடத்திலில்லாத ஸகலசாஸ்திரக் கியாநத்தைத் தன்னிடத்திருப்பதாக ஒருவன்சொல்லும் பொய்யானது நிந்திக்கத்தக்கதாகையால் அது ஸுராபாநத்திற்கும் தன் ஸ்நேகிதன் முதலியவர்களுடைய கூட்டத்தில் ஒருவனுக்கும் பிரயோசனமாகாமல் வீணாகப் பொய்யைப் பேசுவது உப பாதகத்திற்கும் சமமாகுமென்று அறிக. இதில் முந்திய இரண்டு பக்ஷங்களுக்கும் அவைகள் எந்தப் பாபங்களுக்குச் சமமாகுமென்று சொல்லப் படுகின்றனவோ அந்தப் பாபங்களுக்குச் சொல்லிய பிராயச்சித்தங்களையே அல்பபாகம் குறைவாகச்செய்யவேண்டுமென்னும் நீதியினால் கீழேசொல்லப்பட்டது. அதாவது பிரமஹத்திக்குச் சமமென்றால்பிரமஹத்தியின் பிராயச்சித்தத்தைச் சில பாகம் குறைத்து அநுஷ்டிக்கவேண்டுமென்றறிக. மூன்றாவது பக்ஷத்திற்குத் தன்னிழலை ஜலத்தில்பார்த்து (மயிதேஜ:) என்னும் மந்திரத்தை ஜபிக்கவேண்டுமென்று யாக்கியவல்கியர்சொன்னார்.

வேதநிந்தையின் ஸ்வரூபம். பௌத்தாதிகளுடைய சாஸ்திரத்தைப்படித்து அதை அநுஸரித்து வேதம் பிரமாணமல்லவென்று சொல்வது பிரமஹத்திக்குச் சமமான ஒருவித நிந்தையென்று யாக்கியவல்கியரும், வேதம் பிரமாணமென்னும் புத்தியிருந்தும் சிலசாஸ்திரவாசனையினால் வேதத்திலும் ஸ்மிருதியிலும் விதித்திருக்கும் ஆசாரங்களை யுக்திவாதங்களால் விகல்பித்துஅலட்சியம் செய்வது ஸுராபாநத்திற்குச் சமமான ஒருவிதநிந்தையென்று மநுவும் சொன்னார்கள். ஒருவன் வேதத்தில் சொல்லியகர்மங்களால் என்ன பலனுண்டென்று அவைகளை அசிரத்தையுடன் அநுஷ்டிப்பது உபபாதகத்தில் சேர்ந்ததான ஒருவித நிந்தையென்று ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டது.

உபபாதகங்களின் பிராயச்சித்தம். உபபாதகத்தைச் செய்தவர்கள் பிராஜாபத்திய கிருச்சிரத்தை அல்லது பராககிருச்சிரத்தைச்

செய்யக்கடவர்களென்று விஷ்ணுசொன்னார். இதில் உபபாதகங்கள் அநேகங் கூடியிருக்குமானால் கோஸத்திரயாகத்தையும் ஒன்றானால் அசக்தன் பராக கிருச்சிரத்தையும் சக்தன் சாந்திராயணத்தையும் செய்யவேண்டும்.

அக்நி பரித்தியாக பிராயச்சித்தம். வேதமோதுவதையும் அக்கி யில் ஹோமம்செய்வதையும் விட்டவன் மூன்று காலத்திலும் ஸ்நா நம் செய்பவனாகித் தரையில்படுத்து ஒருதரம் பிக்ஷாந்நத்தைப் புசித் துக்கொண்டு இவ்விதமாக ஒருவருஷகால மிருக்கக்கடவனென்று விஷ்ணுவும், அக்நிஹோத்திரம்செய்த பிராம்மணன் ஒருமாஸம் அறி ந்து அக்நியில் ஹோமம்செய்வதைத் தவிர்ந்தால் சாந்திராயணத்தைச் செய்யக்கடவனென்று மநுவும் சொன்னார்கள்.

பத்திநியைக் கைவிட்டவனுக்குப் பிராயசீசித்தம். பத்திநியைக் கைவிட்டவன் ஒருமாஸம் பாலைக்குடிப்பவனாய் உபவாஸமிருந்தா ல் சுத்தனாகிறானென்று சாதாதபர் சொன்னார்.

அயலாருடைய பொருளை அபகரிப்பதின்பிராயச்சித்தம். பந் துக்களுடைய தாநியம், அந்நம், தநம், இவைகளை அவர்கள் அறியா மல் அபகரித்த பிராம்மணன் ஒருவருஷம் பிராஜாபத்திய கிருச்சிரத்தி னாலும், மனிதர், ஸ்திரீகள், நிலம், வீடு, கிணறு நடைபாவி இவைக ளின் ஜலம் ஆகிய இவைகளை அபகரித்தவன் சாந்திராயண கிருச்சிர த்தினாலும், அல்ப விலையுள்ளவைகளான சில திரவியங்களை அயலார் வீட்டினின்று திருடினவன் ஸாந்தபந கிருச்சிரத்தினாலும், பணியாரம் பின்னும் சில புசிக்கத்தக்கவஸ்துக்கள், வாசநம், சயநம், ஆஸநம், புஷ்பம், கிழங்கு, பழம், இவைகளைத் திருடினவன் பஞ்சகவிய பி ராசனத்தினாலும், புல், விறகு, மரம், அந்நம் வெல்லம், வஸ்திரம், தோல், மாம்ஸம், இவைகளைத் திருடினவன் மூன்றுநாள் உபவா ஸத்தினாலும்,ரத்திநம், முத்து, பவழம், தாம்பிரம், வெள்ளி, இரும்பு, வெண்கலம், கல், இவைகளைத் திருடினவன் பன்னிரண்டுநாள் கணமென்னும் அரிசிநொய்யைப் புசிப்பதினாலும், பருத்திப்பட்டு, கம்பளம், இரண்டு அல்லது ஒற்றைக் குளம்புடைய மிருகங்கள், பக்ஷி, பரிமளம், ஔஷதிகள், கயிறு, இவைகளைத் திருடினவன் மூன் றுநாள் பாலைக்குடிப்பவனாய் உபவாஸமிருப்பதினாலும் சுத்தராகிறா ர்களென்று மநுசொன்னார். இந்தப் பிராயச்சித்தங்கள் உடையவ னிடம் பொருளைச் சேர்த்துப் பின்பு செய்யத்தகுமென்றறிக.

யாகம் செய்விக்கத்தகாதவர்களுக்கு யாகம் செய்வித்தலின் பி ராயச்சித்தம். சூத்திரயாஜகனான பிராம்மணன்ஒருமாஸம் கோமூத்திர

லியவைகளை வெட்டினவனுக்குப் பிராயச்சித்த மில்லையென்றறிக. கலப்பைக்காக மரத்தை வெட்டுவதில் தோஷமில்லையென்று சங்கர் சொன்னார்.

நாஸ்திகனுக்குப் பிராயச்சித்தம். நாஸ்திகர் கிரியா துஷ்டரெனவும் வாக்கு துஷ்டரெனவும் மனோதுஷ்டரெனவும் மூன்று வகையினரென்றும் அடிக்கடி நாஸ்திகத்தொழிலைச் செய்பவன் கிரியா துஷ்டனென்றும் அவன் மகாபாதகம் செய்தவனாகிறானென்றும் வாக்கினால் நாஸ்திகனாய்த் தர்மத்தைப்பழிப்பவன் வாக்குதுஷ்டனென்றும் அவன் உபபாதகம் செய்தவனாகிறானென்றும் மனதினால் வேத தர்மங்களைத் தூஷிப்பவன் மனோதுஷ்டனென்றும் அவன் அநுபாதகம் செய்தவனாகிறானென்றும் இவ்விதமான நாஸ்திகர் பிராஜாபத்திய கிருச்சிரத்தைச்செய்து நாஸ்திகத் தன்மையை ஒழிக்கக் கடவரென்றும் வசிஷ்டர் சொன்னார்.

அவகீர்ணி என்னும் விரதத்தைத் தவிர்ந்தவனுக்குப் பிராயச்சித்தம். ஸ்திரீ ஸங்கமம்செய்து தன் விரதத்தினின்று தவிர்ந்தவனான அவகீர்ணி என்னும் பிரமசாரியானவன் கழுதையை ஹோமத்திற்குரிய பசுவாக்கிச் செய்யும் ராக்ஷஸயாகத்தினால் சுத்தனாகிறானென்று யாக்கியவல்கியரும், இதைக்காட்டிலாவது நாற் சந்தியிலாவது செய்ய வேண்டுமென்று வசிஷ்டரும், வியபிசாரியான பிராம்மண ஸ்திரீகமநம் செய்த இருபிறப்பாள பிரமசாரி ஆறுநாளுபவாஸமிருந்து கோதாநம் செய்யக்கடவனென்றும், க்ஷத்திரிய ஸ்திரீகமநம் செய்த பிரமசாரி மூன்றுநாளுபவாஸமிருந்து நெய்யுள்ள பாத்திரத்தைத் தாநம்செய்யக்கடவனென்றும், வைசிய ஸ்திரீகமநம்செய்த பிரமசாரி நான்காவது காலத்தில் புசிப்பவனாய்ப் பிராம்மணபோஜனம் செய்வித்துப் பசுக்களுக்குப் புல்லைக்கொடுக்கக் கடவனென்றும், சூத்திர ஸ்திரீகமநம்செய்த பிரமசாரி ஸசேலஸ்நாநம் செய்து பிராம்மணனுக்கு ஜலபூர்ணமான கும்பத்தைத் தாநம்செய்யக் கடவனென்றும், பசுவைப்புணர்ந்த பிரமசாரி பிராஜாபத்திய கிருச்சிரத்தைச் செய்யக் கடவனென்றும், விதவாகமநம்செய்த பிரமசாரி வைக்கோல்சுமை சுயம் உளுந்து இவைகளைத் தாநம் செய்யக்கடவனென்றும் சங்கரும் சொன்னார்கள். இது இருபிறப்பாளரனைவருக்கும் ஸமமானவிஷயமென்றும், இந்தத்தோஷத்தையே அடிக்கடிசெய்த பக்ஷத்தில் ஒருவருஷகாலம் அந்தந்த ஸ்திரீகமநத்துக்குச் சொல்லியவிரதத்தைத்தன்தோஷத்திற்கேற்றாகச் செய்யவேண்டுமென்றும் கண்ணுவர் சொன்னார். ஸந்நியாசி வாநப்பிரஸ்தன் இவர்கள் கீழ்ச்சொன்ன தோஷத்தைச் செய்தார்களாகில் மூன்று பராககிருச்சிரங்களைச்செய்து இங்குச் சொன்ன

பிராயச்சித்தத்தையும் தம் தோஷத்திற்கீடாகச் செய்யக்கடவர்களெ ன்று சாண்டில்யரும், ஸந்நியாஸாச்சிரமத்தை அடைந்தவன் பின்பு கிருகஸ்தாச்சிரமத்தை அடைந்தானாகில் அவன் மூன்று பிராஜாபத்திய கிருச்சிரங்களையும் மூன்று சாந்திராயணங்களையும் செய்து பின்பு ஜாதகர்மம் முதலிய ஸகல ஸம்ஸ்காரங்களையும் செய்துகொண்டால் சுத்தனாகிறானென்று விருத்த பராசரரும் சொன்னார்கள்.

பெண் முதலியவர்களை விக்கிரயித்தலின் பிராயச்சித்தம். பெண்ணை அல்லது பிள்ளையை விக்கிரயம்செய்தவன் விஷ்ணுவசநத்தின்படி உப பாதகத்திற்குப் பொதுவாகக் கீழ்ச்சொல்லிய சாந்திராயணம் பராகம் கோஸத்திரமென்னும் யாகம் இவைகளிலொன்றைச் செய்யவேண்டுமென்பது மாதவாசாரியருடைய ஸித்தாந்தம்.

சொக்கட்டான் முதலியவைகளை ஆடுதலின் பிராயச்சித்தம். அசுசியான சூதாடுதல்,ஒருவனைக்கொல்வதற்காக அபிசார ஹோமம் செய்தல் முதலியவைகளைச் செய்தவன் உபபாதகத்தின் ஸாதாரண பிராயச்சித்தத்தையே கீழ்ச்சொன்னபடி செய்யக்கடவனென்றறிக.

சூத்திரனை அடுத்துப்பிழைத்தல்முதலியவற்றின் பிராயச்சித்தம். சூத்திரனை அடுத்துப்பிழைப்பது, கடலில்யாத்திரைசெய்வது, பிராம்மணருடையபொருளை அபகரிப்பது, ஸகலவஸ்துக்களையும் விக்கிரயம் செய்வது, பூமிவிஷயத்தில் பொய்சொல்வது ஆகிய இவைகளைச்செய்தவன் நான்காவது காலத்தில் அல்பமான ஆகாரத்தைப் புசிப்பவனாய்ப் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நாநம்செய்து நியமத்துடன் மூன்று வருஷகாலம் விரதத்தை அநுஷ்டித்தால் சுத்தனாகிறானென்று போதாயநர் சொன்னார்.

ஜாதிப்பிரம்சகரங்களென்னும் பாபங்களின் பிராயச்சித்தம். பிராம்மணனுக்கு மனவருத்தத்தை உண்டுபண்ணுதல், கள் சாராயம் இவைகளை முகருதல், நடுவுநிலைமையைத் தவிர்ந்திருக்கை, பசுவைப்புணருதல் ஆகிய இவைகள் ஜாதிப் பிரம்சகரங்களென்னப்படுமென்றும் இவைகளில் எதையாகிலும் அறிந்துசெய்தால் ஸாந்தபந கிருச்சிரத்தையும்அறியாமல் செய்தால் பிராஜாபத்திய கிருச்சிரத்தையும் செய்யவேண்டுமென்றும் மநு, விஷ்ணு இவர்கள் சொன்னார்கள்.

ஸங்கலீகரணமென்னும் பாபத்தின் பிராயச்சித்தம். கிராமத்திலிருக்கும் பசுக்களையும் காட்டுமிருகங்களையும் கொல்வது ஸங்கலீ

கரணமென்னும் பாதகமாம். இதைச்செய்தவன் ஒருமாஸம் யவ அரிசி அந்நத்தைப்புசிக்கும் விரதத்தையாவது கிருச்சிராதி கிருச்சிரத்தையாவது செய்யக்கடவனென்று விஷ்ணுசொன்னார்.

அபாத்திரீகரணமேன்னும் பாபத்தின் பிராயச்சித்தம். அசுசியான சிலமுடையவர்களிடத்தில் தாநம்வாங்குதல், வர்த்தகம்செய்தல், சூத்திரஸேவை பண்ணுதல், பொய்சொல்லுதல், பயிர்த்தொழிலால் பிழைத்தல் ஆகிய இவைகள் அபாத்திரீகரணமென்றும் இவைகளைச்செய்தவன் தப்தகிருச்சிரம் சீதகிருச்சிரம் மஹாஸாந்தபநம் இவைகளிலெதாவதொன்றைச் செய்யக்கடவனென்றும் யமமுனிவர் சொன்னார்.

மலிநீ கரணமேன்னும் பாபத்தின் பிராயச்சித்தம். பூச்சி புழு இவைகளைக்கொல்வது, மத்தியஸம்பந்தமான போஜநத்தைப் புசிப்பது ஆகிய இவைகள் மலிநீ கரணமென்றும் இதற்குத் தப்தகிருச்சிரத்தையாவது கிருச்சிராதி கிருச்சிரத்தையாவது செய்ய வேண்டுமென்றும் விஷ்ணுசொன்னார். ஒரு ஆச்சிரமமுமில்லாதவனாய் ஒரு வருஷகாலம்அல்லது இரண்டுவருஷகாலமிருந்த பிராம்மணன் பிராஜாபத்திய கிருச்சிரத்தையும் மூன்றுவருஷமிருந்தவன் கிருச்சிராதி கிருச்சிரத்தையும் அதற்குமேற்பட்டிருந்தவன் சாந்திராயணத்தையும் செய்து வேறு ஆச்சிரமத்தை அங்கீகரிக்க வேண்டுமென்று ஹாரீதர் சொன்னார்.

பிரகீர்ணக ஸாதாரண பிராயச்சித்தம். சரணுகதனைக் கைவிடுவதும் வேதத்திற்கு அபார்த்தத்தைச் சொல்வதுமாகிய பிரகீர்ணக பாபத்தைச் செய்தவன் ஒரு வருஷம் யாவகவிரதத்தைச் செய்யவேண்டுமென்று மநுவும், சண்டாளன் பதிதன் முதலானவர்கள் கேட்கும்படி வேதமோதினவன் மூன்றுநாள் உபவாசமிருப்பதுடன் காயத்திரியை ஜபிப்பதினுல் சுத்தனுகிருனென்று வஸிஷ்டரும் சொன்னார்கள்.

பதிதன் முதலானவர்களோடு ஸம்பாஷித்தலின் பிராயச்சித்தம். மிலேச்சன் அசுசியாயிருப்பவன் அதார்மிகன் ஆகிய இவர்களோடு ஸம்பாஷணம்செய்தவன் புண்ணியசாலிகளான பெரியோர்களைத் தியானிப்பதையாவது பிராம்மணரோடு ஸம்பாஷணத்தையாவது செய்யக்கடவனென்று கௌதமர் சொன்னார்.

புசிக்கத்தகாதவனேடு கூடப்புசித்தலின் பிராயச்சித்தம். பந்தியில் கூட உட்கார்ந்து புசிக்கத் தகாதவனுடன் புசித்தவன் ஒரு

நாள் உபவாசமிருந்து பஞ்சகவியத்தைக் குடிப்பதினுல் சுத்தனுகிரு னென்று மார்க்கண்டேயர் சொன்னுர்.

நீலிச்சாயமேற்றிய வஸ்திரத்தைத் தரித்தலின்பிராயச்சித்தம். நீலியின் வர்ணமேற்றிய வஸ்திரத்தைப் பிராம்மணன் சரீரத்தில் தரித்தானுகில் ஒருநாளுபவாசமிருந்து பஞ்சகவியத்தைக் குடிக்கக்கடவனென்றும், நீலி ரசமானது எவனுடைய தேகத்தில் ரோம கூபங்களினின்று பெருகுகிறதோ அவன் பிராம்மணனுகிலும் க்ஷத்திரியனுகிலும் வைசியனுகிலும் தப்தகிருச்சிரத்தைச் செய்யக்கடவனென்றும், நீலியைப் பரிபாலனம் செய்தல், அதை விக்கிரயித்தல், அதுமூலமாய் ஜீவனம்செய்தல், ஆகிய இவைகளைச்செய்த இருபிறப்பாளன் மூன்று பிராஜாபத்திய கிருச்சிரங்களைச் செய்யக் கடவனென்றும், நீலியின் ஒரு நூலைத்தரித்தபோதிலும் அவனுடைய ஸ்நாநம், தாநம், ஜபம், ஹோமம், அத்தியயநம், பிதிர்பூஜை, பஞ்சமஹாயக்கியங்கள் ஆகிய இவைகளெல்லாம் வீணுகுமென்றும், நீலியின் நடுவில்சென்ற பிராம்மணன் ஒருநாள் உபவாசமிருந்து பஞ்சகவியத்தைக் குடிக்கக் கடவனென்றும், நீலியின் உலர்ந்தகொம்பானது பிராம்மணன் சரீரத்தில் குத்தி ரக்தம் வடிந்தால் அவன் சாந்திராயணத்தைச் செய்யக்கடவனென்றும், நீலிவஸ்திரத்தினுல் செய்யப்பட்டபடுக்கையானது ஸ்திரீகளுடைய ஸம்போகவிஷயத்தில் தூஷிக்கப்படாத தாகுமென்றும், நீலியின் வஸ்திரத்தைத்தரித்து அந்நத்தைப் பரிமாறினுல் அது தாநபலனைத்தருவதில்லையென்றும், புசித்தவன் பாபத்தை அடைகிருனென்றும் ஆபஸ்தம்பர் சொன்னுர். பிராம்மண ஸ்திரீயானவள் சயந காலத்தில்நீலிவஸ்திரத்தைத் தரிப்பதும், கம்பளத்திலும் வஸ்திரத்திலும் நீலிச்சாயமுள்ள நூல் ஒன்றிரண்டிருப்பதும் தோஷமாகாதென்று பிருகுவும், பலாசமரத்தினுல் செய்த கட்டில், வண்டி, ஆஸநம், பாதுகை ஆகிய இவைகளை உபயோகித்த பிராம்மணன் மூன்றுநாள் உபவாசமிருக்கக் கடவனென்றும், இரண்டு பிராம்மணர்கள் நடுவிலும் பிராம்மணன் அக்நி இவர்கள் நடுவிலும் பதி பத்நிகளின் நடுவிலும் பசு பிராம்மணர்கள் நடுவிலும் சென்ற பிராம்மணன் ஸாந்தபந கிருச்சிரத்தைச் செய்யக்கடவனென்றும் சங்கரும், தீர்த்தயாத்திரை விஷயமன்றி அங்கவங்க களிங்கஸிந்து ஸௌராஷ்டிர ஸௌவீர தேசங்களுக்குச்சென்றவன் புநருபநயநத்தைச் செய்து கொள்ளக் கடவனென்று தேவலரும் சொன்னுர்கள்.

சூரியோதயாஸ்தமய கால சயந பிராயச்சித்தம். சூரியோதயகாலத்திலும் சூரியாஸ்தமய காலத்திலும் தூங்கினவர்கள் கிரமமாக அ

ப்பியுதிதன் அபிகிர்முக்தன் என்னப்படுவார்கள். இவர்கள் ஒருநாள் உபவாஸமிருந்து பதினாயிரம்தரம் காயத்திரியை ஜபிக்கவேண்டுமென்று யமமுனிவரும், ஸந்நியாசி வாநப்பிரஸ்தர்களுக்கு இந்தத் தோஷம் ஸம்பவித்தால் அவர்கள் பிரம கூர்ச்ச பாநம்செய்து மூன்று நாள் பிரணவத்தை ஜபிக்கவேண்டுமென்று வஷிஷ்டரும் சொன்னார்கள்.

ரகஸிய பிராயச்சித்தம். பிறருக்குத் தெரியாமல்பாபம்செய்தவன் ரகசியமாகவே பரிஷத்தின் அநுமதியின்றிப் பிராயச்சித்தம் செய்துகொள்ளவேண்டுமென்றும் பாபம் பிரகாசமாயிருந்தால் பிரஸித்த பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டுமென்றும் ஹாரீதர் சொன்னார். ரகஸிய பிராயச்சித்தத்தைத் தானே சாஸ்திரமுகத்தாலாவது ஒரு வியாஜத்தினால் பெரியோர்களிடத்தில் கேட்டுத் தெளிந்தாவது செய்யத்தருமென்றறிக. பிரகாசமான பாபமுடையவன் பிரஸித்த பிராயச்சித்தங்களைச் செய்யவேண்டுமென்றும், ரகஸியமான பாபத்தையுடையவன் மந்திர ஜபத்தாலும் ஹோமங்களாலும் சுத்தனாகிறானென்றும் மநுவும், ஒருவன் மகாபாதகங்களைச் செய்தாலும் அவன் வேதாத்தியயநம் செய்தவனாயிருந்தால் அந்தப்பாதகங்களை அக்நியைப்போல் கொளுத்துகிறானென்று வசிஷ்டரும், காயத்திரி, விராஜம், வாமதேவியம், புருஷஸூக்தம், பதினொரு ருத்திரங்கள் ஆகிய இவைகளை ஜபித்தால் அந்தப் பகலில்தானே மஹாபாதகங்கள் நசிக்கின்றனவென்று யமமுனிவரும், அகமர்ஷணம், பாவமாநிகம், மண்டல பிராம்மணம், பிருஹத்ஸாமம், ஜ்யேஷ்டஸாமம், அதர்வசிரஸு, புருஷஸூக்தம், நீலருத்திரம், நாராயணம், இதிஹாஸ புராணங்கள் முதலியவைகளை ஓதுவதும் பிராணாயாமங்களைச் செய்வதும் பாதகங்களைப் போக்குமென்று இருபத்துநால்வரும் சொன்னார்கள்.

எல்லாப் பாதகங்களையும் செய்தவனேயாகிலும் ஒரு நிமிஷகாலம் ஸ்ரீமந்நாராயணனைத் தியானித்தானாகில்அவன் பந்தி பாவநரென்னும் பரிசுத்தர்களில் உத்தமனாகிறானென்று பைடீநசி சொன்னார். திரயோதசியின் ராத்திரி முதல்யாமத்தில் சங்கரனைப்பூசித்தவனும் ஏகாதசியில் உபவாஸமிருந்து சுக்கிலபக்ஷ துவாதசியில் ஜநார்த்தநனை ஆராதித்தவனும் ஸகலபாதகங்களினின்றும் விடுபடுகிறார்களென்றும் கலியுகத்தில் பாபிகளான ஜநங்களுக்குக் காசி க்ஷேத்திரவாஸம்

தவிர முக்திக்கு வேறு காரணமில்லையென்றும் கூர்மபுராணங் கூறு கின்றது. நூறு பிராணாயாமங்களைச் செய்தால் ஸகலபாபங்களுமொழியுமென்று யாக்கியவல்கியர் சொன்னார்.

யமநியமங்களின் ஸ்வரூபம்: பிரமசாரியாயிருப்பது அதாவது ஸகல இந்திரியங்களையு மடக்குவது, ஜீவகாருண்யம், பொறுமை, தானம், ஸத்தியம், நடுவுநிலைமை, ஒருவிதஹிம்ஸையையும் செய்யாமை, திருடாமை, யாவருக்கும் இனியனாயிருக்கை, அந்தக்கரணஜெயம் ஆகிய இவைகள் யமமென்றும், ஸ்நானம், மௌனம், உபவாஸம், தேவபூஜை அல்லது யாகம், வேதமோதுதல், லிங்கத்தை அடக்குதல், குருபணிவிடை, சித்தசுத்தி, கோபமில்லாமை, தான் செய்யவேண்டும் தொழில்களைப்பற்றி நிதானந்தவறாமைஆகிய இவைகள் நியமமென்றும் இவைகள் சகல விரதங்களிலும் விடாமல் அனுஷ்டிக்கத் தக்கவைகளென்றும் யாக்கியவல்கியர் மநு முதலானவர்கள் சொன்னார்கள்.

பிராஜாபத்திய கிருச்சிர லட்சணம். மூன்றுநாள் காலையிலும் மூன்றுநாள் ஸாயங்காலத்திலும் புசித்தும் மூன்றுநாள் யாசிக்காமல் வந்ததைப் புசித்தும் மூன்றுநாள் சுத்தோபவாஸமாயுமிருப்பது பிராஜாபத்திய கிருச்சிரமென்று மநு சொன்னார்.

அதிகிருச்சிரலட்சணம்: பகலில் மாத்திரம் மூன்றுநாட்களிலும், இரவில் மாத்திரம் மூன்றுநாட்களிலும், யாசிக்காமல் கிடைத்ததை மூன்றுநாட்களிலும் புசிப்பதாகிய ஒன்பதுநாட்களிலும் ஒவ்வொரு கவளத்தையே பிரதிதினமும் புசித்து மூன்றுநாள் உபவாசமிருப்பது அதிகிருச்சிரமாகுமென்றுஇருபத்துநால்வர்மதத்தில் சொல்லப்பட்டது.

கிருச்சிராதி கிருச்சிரலட்சணம். இருபத்தொருநாள் பாலைமாத்திரம் குடித்திருப்பது கிருச்சிராதி கிருச்சிரமாகுமென்று யாக்கியவல்கியர் சொன்னார்.

பராககிருச்சிர லட்சணம். பன்னிரண்டுநாள் ஆகாரமில்லாமல் மனதை ஜயித்திருப்பது பராககிருச்சிரமென்கிற ஸகல பாபநாசகரமான விரதமென்று யமமுனிவர் சொன்னார்.

பர்ண புஷ்ப பல மூல கிருச்சிரலட்சணம். பலாசம், அத்தி, தாமரை, வில்வம், இவைகளின் இலைகளை ஒன்றாகச்சேர்த்துக் கொதி

ப்பித்தஜலத்தை மூன்றுநாளுபவாசமிருந்துபின்புகுடிப்பது பர்ண கிருச்சிரமென்றும், வில்வம் முதலியவைகளின்புஷ்பங்களைச்சேர்த்துக் கொதிப்பித்தஜலத்தை ஒரு மாஸம்குடிப்பது புஷ்ப கிருச்சிரமென்றும், வில்வப்பழம் முதலிய பழங்களைச் சேர்த்துக்கொதிப்பித்த ஜலத்தை ஒரு மாஸம் குடிப்பது பல கிருச்சிரமென்றும் இவைகளின் வேரைச் சேர்த்துக் கொதிப்பித்தஜலத்தை ஒருமாஸம் குடிப்பது மூல கிருச்சிரமென்றும் மார்க்கண்டேயர் சொன்னார்.

வாருண ஸ்ரீ ஸௌமிய கிருச்சிரலட்சணம். பிரமசரிய விரதத்தை யுடையவனாய்க் கோபத்தை ஜயித்து ஆமிக்ஷையென்னும் திரிசல் தயிரின் ஜலத்தையும் மாவையும் புசிப்பது வாருண கிருச்சிரமென்றும்,மூன்றுநாள் கோமூத்திரத்தைக்குடித்து மூன்றுநாள் சாணியைப் புசித்து மூன்றுநாள் யவ அரிசி அந்நத்தைப் புசிப்பது ஸ்ரீகிருச்சிரமென்றும் யமமுனிவரும், பிண்ணாக்கு, வடித்தகஞ்சி, மோர், ஜலம், மாவு, இவைகளைத் தனித்தனியே ஐந்துநாள் புசித்து ஆறுவதுநாளில் உபவாஸமிருப்பது ஸௌமிய கிருச்சிரமென்று யாக்கியவல்கியரும்,பிண்ணாக்கு, மாவு, மோர், இவைகளைத் திநத்திற்கு ஒவ்வொன்றாக மூன்றுநாள் புசித்து நான்காவது நாளில் உபவாஸமிருப்பது ஒருவித ஸௌமியகிருச்சிரமென்று ஜாபாலியும் சொன்னார்கள். ஜாபாலிசொன்னது அசக்தனைப்பற்றியதென்றறிக.

துலாபுருஷ கிருச்சிர லட்சணம். பிண்ணாக்கு, வடித்தகஞ்சி, மோர், ஜலம், மாவு, இவைகளைத்திநம் ஒவ்வொன்றாகப்புசித்து ஆறுவதுநாள் தொடங்கி மூன்றுநாட்கள் உபவாஸமிருப்பது துலா புருஷ கிருச்சிரமென்று ஜாபாலி சொன்னார்.

வாருணஹமர்ஷணயக்கிய கிருச்சிர லட்சணம். பிரமசரிய விரதத்துடன் கோபமில்லாதவனாய் ஜலம் மாவு இவைகளை ஒருமாஸம் புசிப்பது வாருணகிருச்சிர மென்னப்படுமென்று யமமுனியும், மூன்றுநாள் மூன்றுகாலங்களிலும் ஸ்நாநம்செய்து மூன்றுதரம் அகமர்ஷண மந்திரத்தை ஜபித்து மூன்றுநாள் உபவாசமிருந்து செய்வது ஸகல பாபநாசகரமாகிய அகமர்ஷண கிருச்சிரமென்று சங்கரும், காலையில் ஸ்நாநம் செய்தபின் வியாகிருதி மந்திரங்களுடன் முதலிலும் இடையிலும் கடையிலும் பிரணவத்தைக் கூட்டிக் காயத்திரியை நின்றாகிலும் உட்கார்ந்தாகிலும் எண்ணாயிரந்தரம் ஜபித்து ஒரே

வேளை பசுவின்பால், பசுவின்தயிர், பசுவின்மோர், கோமூத்திரத்தில் பசநம்செய்த யவஅரிசி அந்நம் இவைகளில் கிடைத்ததைப்புசித்து ஒருநாளில் அநுஷ்டிக்கத்தக்கது ஸகலபாபங்களையும் போக்குவதான யக்கிய கிருச்சிரமென்று அங்கிராவும் சொன்னார்கள்.

தேவ கிருச்சிராதிலட்சணம். வடித்தகஞ்சி, யவ அரிசியின் கஞ்சி, சாகம், பால், தயிர், நெய், இவைகளை ஆறுநாள் ஒவ்வொன்றாகப் புசிப்பதும் மூன்றுநாள் சுத்தோபவாசமாயிருப்பதும் தேவ கிருச்சிரமென்றும் இது தேவதைகளுக்கு இஷ்டமான விரதமென்றும் தேவர்களும் இந்தவிரதத்தினால் சுத்தரானார்களென்றும் யம முனிவர் சொன்னார்.

கிருச்சிரகிரகணபிரகாரம். பாதகங்களின் பிராயச்சித்தத்தை அநுஷ்டிப்பதற்கு முந்தியநாள் ஸாயங்காலத்தில் ஸர்வாங்க க்ஷௌரத்தைச் செய்வித்துக்கொண்டு ஸ்நாநம்செய்து சாம்பல், சாணி, மண் இவைகளுடன் கூடிய ஜலங்களால் அழுக்கைத்தேய்த்து மறுபடி ஸ்நாநம்செய்து பின்பு தந்தசுத்திசெய்து அதன்பின் பஞ்சகவிய ஸ்நாநம்செய்து ஊருக்குவெளியில் நக்ஷத்திரோதயமான பின் ஆசமநம்செய்து மௌநவிரதத்துடன் தான் செய்தபாதகத்தைநினைத்து மிகவும் நொந்து பரிஷத்தால் விதிக்கப்பட்ட பிராயச்சித்தத்தை ஸங்கல்பித்துக்கொண்டு மறுநாள் மூன்றுகாலமும் ஸ்நாநம்செய்து அந்தந்த விரதத்திற்கு அங்கமான ஹோமாதிகளை அநுஷ்டித்துப்பிராயச்சித்தத்தை ஆரம்பிக்கவேண்டுமென்று விஷ்ணுசொன்னார். ஒரு பிராயச்சித்தத்தை ஸங்கல்பித்து அதைப் பூர்ணமாகச் செய்யாதவன் பிழைத்திருக்கையிலேயே சண்டாளனாகி மரித்தபின் நாயாகப் பிறக்கிறானென்று சாகலேயர் சொன்னார்.

பிராஜாபத்திய கிருச்சிரத்திற்குப் பதிலானவைகள். பதினாயிரம் காயத்திரிஜபம், இருநூறுபிராணாயாமங்கள், எள்ளால் ஆயிரம்ஹோமம், வேதபாராயணம், பன்னிரண்டு பிராம்மணர்களைப்புசிப்பித்தல், பாவகேஷ்டி, பவமாநேஷ்டி ஆகிய இவைகள்பிராஜாபத்திய கிருச்சிரத்திற்குப் பதிலானவைகளென்று இருபத்துநால்வர் மதத்திலும், பிராஜாபத்திய கிருச்சிரத்தை அநுஷ்டிக்கச் சக்தியற்றவன் கோதாநத்தையும்அதற்கும் சக்தியில்லாதவன் ஒருநிஷ்கம் திரவியத்தையும் கொடுக்கவேண்டுமென்றும், அல்லாதபக்ஷத்தில் அதில் பா

தியும் அல்லது அதில்பாதியும் கொடுக்கத்தகுமென்றும் பிரமபுராணத்தில் சொல்லப்பட்டது. நிஷ்கமென்பது நூற்றெட்டு ஸ்வர்ணமென்னும் அளவுடைய பொன்னாகும். ஸ்வர்ணமென்பது எண்பது குன்றிமணி அளவுடைய பொன்னாகும்.

தீர்த்தயாத்திரைமுதலிய கிருச்சிரப்பிரதிநிதிகள். புண்ணியதீர்த்தங்கள் புண்ணியக்ஷேத்திரங்கள்ஆகியஇவைகளுக்குச்சென்ற மனிதன்ஸகலபாபங்களினின்று விடுபடுகிருனென்றும் ஸமுத்திரத்தை அடைகிற மகாநதிகளும் பர்வதங்களும் புண்ணியகரங்களென்றும் தேவலர் சொன்னூர்.

கர்மவிபாகம். கர்மமென்பது புண்ணியபாபத்தொழில்களுக்குப் பொதுவான பதமேயாகிலும், இது பிராயச்சித்த பிரகரணமாகையால் இங்கு பாபமானது கர்மமென்னப்படும். அதின்விபாகமானது பலத்தைத்தருவதான தசையாகும். ஆகவே பாபத்தின் பலனைத்தருவதான தசை கர்மவிபாகம் என்பதாயிற்று. அதுஜன்மம் ஆயுள் போகம் என்று மூன்றுவகைப்படும். ஒருவன்செய்த கர்மமானது ஞானமென்னும் அக்கினியினல் கொளுத்தப் படாதபக்ஷத்தில் அது ஜன்மமாகவும் ஆயுளாகவும் போகமாகவும் பலிக்கிறது. அதெப்படிஎனில் பதிதனுக்குப்பௌரோகித்தியம் செய்தவன் புழுவாக ஜநிக்கிருனென்று ஸ்மிருதியில் சொல்லப்பட்டிருப்பதால் யாகம்முதலியவைகளைச் செய்விக்கத்தகாத பாபிக்கு அவைகளைச் செய்விப்பதாகிய பாபம் அவனைப் புழுவாகப் பிறப்பிக்கிறதென்றும்,சிலபாபம் மனிதனை அல்பாயுள் உள்ளவனுகச்செய்கிறதென்றும், சிலபாபம் யமயாதனையாகிய போகத்தைத் தருகிறதென்றுமறிக. ஒருவன் மனம், வாக்கு, காயம் இவைகளாலிங்கு அல்பமாகப் பாபத்தைச்செய்தாலும் அவன் யமலோகத்தில் கோரமாகிய நரகத்தை அநுபவிக்கிருனென்று பிரமபுராணத்திலும், பாபத்தைச்செய்து பிராயச்சித்தம்செய்து கொள்ளாதவன் மஹாநரகத்தை அநுபவிக்கிருனுகையால் பாபியானவன் தன்பாபத்திற்கீடாக ரிஷிகள்விதித்திருக்கும் பிராயச்சித்தத்தைச்செய்யக்கடவனென்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலும், பிராயச்சித்தங்களால் பாபங்கள் நசிக்கின்றனவென்றும் பிராயச்சித்தத்தைச் செய்து கொள்ளாதவர்களும் அரசர்களால் தண்டிக்கப் படாதவர்களும் நரகயாதனைகளை அநுபவித்துப்பின்பு பலதிரியக் யோநிகளில் ஜநிக்கிருர்களென்றும் விஷ்ணுதர்மோத்தரத்திலும்சொல்லப்பட்டது.

மாநஸாதி கர்மவிபாகம். அயலாருடைய பொருளை இச்சித்தல், அயலாருக்கு மனதினல் விரோதத்தை நினைத்தல், வீணனஎண்ணங் கொள்ளுதல் இவை மனதின் தோஷங்களாமென்றும் பவுருஷமாகப் பேசுதல், பொய்சொல்லுதல், கோள்சொல்லுதல், மனதுக்குத்தோன்றினபடியே பேசுதல் இவைகள் வாக்கின்தோஷங்களாமென்றும், ஒருவன்பொருளைக் கொடாமலிருக்கத்தானே அதைக் கிரகித்துக் கொள்ளுதல், அந்நியனை அடித்து இம்சைசெய்தல், பரதாரகமநம்செய்தல், இவைகள் சரீரதோஷங்களென்றும் மனிதன் மனதின் தோஷ பலனை மனதினலும் வாக்கின் தோஷபலனை வாக்கினலும் சரீரத்தின் தோஷபலனை சரீரத்தினலும் அநுபவிக்கிருனென்றும், சரீரதோஷத்தின் பலனை ஸ்தாவரமாக ஜநித்தும் வாக்கின் தோஷபலனைப் பக்ஷிகளாகவும் மிருகங்களாகவும் ஜநித்தும் மனதின்தோஷபலனை அந்தியஜாதியில்பிறந்தும்அநுபவிக்கிருனென்றும், ஸத்துவம்,ரஜஸு, தமஸு என்னுங்குணங்களில் ஒருபுருஷனுக்கு ஸத்துவத்தினல் ஞாநமும் தமஸினல் அஞ்ஞாநமும் ரஜஸினல் ராகத்துவேஷமு முண்டாகின்றனவென்றும், ஸாத்துவிகர்கள் தேவஜந்மத்தையும் ராஜஸர்கள் மனித ஜந்மத்தையும் தாமஸர்கள் மிருகஜந்மத்தையும் அடைகிருர்களென்றும் மநுசொன்னர். தகாதவனுக்கு யாகம் முதலியவைகளைச் செய்வித்தல், தகுந்தவனுக்குச் செய்விக்காமை, விஷ்ணுவிஷயமான வித்தைகளில் பற்றில்லாமை, இவைகளையுடைய மனிதன் மரித்தானகில்பிரேதகணத்தில் ஜநிக்கிருனென்று பாத்தும புராணத்திலும், தேவதாபூசையைச்செய்யாமல் புசித்தவனும் அடுத்தவர்களுக்கு அந்நத்தைக்கொடாமல் புசித்தவனும் கோட்சொல்லுகிறவனும் பொருளாசையினல் கிழவனுக்குப் பெண்ணைக்கொடுத்தவனும் பிரேதகணத்தில் ஜநிக்கிருர்களென்று ஸ்காந்தபுராணத்திலும், பிராம்மணனுக்கொருவர்தாநம்செய்ததைத் தடுத்தவனும்தேவதையின்பொருளையும் பிராம்மணர்களின் பொருளையும் தாநம்செய்தபொருளையும் அபகரித்தவனும் பிசாசயோநியில் ஜனிக்கிருர்களென்றும், மடாதிபதியாயிருந்து அஞ்ஞானத்தினல்மடத்தின் திரவியங்களை அழித்தவனும் பரஸ்திரீகமநம்செய்தவனும் பிராம்மணனுடைய பொருளை அபகரித்தவனும் யஜமாநனுக்குத் துரோகம்செய்தவனும் பாபிகளுடன் ஸகவாசம்செய்தவனும் ஜலமில்லாதகாட்டில் பிரம ராக்ஷசுகளாக ஜநிக்கிருர்களென்றும் உமாமகேசுவர ஸம்வாதத்திலும், சண்டாளன்முதலிய அந்தியஜாதிகளிடத்தில் தக்ஷிணை வாங்கின

பிராம்மணன் பூமியில் புழுவாகப்பிறக்கிறானென்று வாமநபுராண
த்திலும், தன் பரிஜநங்கள் பசித்திருக்கத்தான் ஒருவனாகப்புசித்த
வன் நாயாகப்பிறந்து பின்பு சண்டாளனாகப் பிறக்கிறானென்று ஸ்
காந்தபுராணம் ரேவாகண்டத்திலும்,தாய்தந்தைகளை அலட்சியம்செ
ய்த புத்திரன் கழுதையாகப்பிறக்கிறானென்றும், தன் மூத்தசகோ
தரனை அலட்சியம்செய்தவன் கிரௌஞ்சமென்னும் பட்சியாகப் பிற
க்கிறானென்றும்,விவாகம், யக்கியம்,ஒருவிததாநம், உற்சவம், இவை
களுக்குத் தடைசெய்த பாபியானவன் மரித்தபின் புழுவாகப் பிறக்
கிறானென்றும், செய்த நன்றியைமறந்தவன் யமலோகத்தைச்செ
ன்று கோரமாகிய யாதனைகளை நெடுங்காலம் அநுபவித்துக்காட்டு
ஈயாகவும் பின்னும் செய்த நன்றியைமறப்பவனாகவும் ஜநித்து ஸம்
ஸாரதுக்கத்தை அநுபவிக்கிறானென்றும், கிரயங்கொடுப்பதில் வஞ்
சனைசெய்தவன் கோட்டானாகப் பிறக்கிறானென்றும், பிராம்மண
னுக்குக் கொடுக்கிறேனென்று பிரதிக்கினைசெய்து அப்படியே செ
ய்யாமல் தவறினவன் செந்நாயாகப் பிறக்கிறானென்றும், ஏகோத்தி
ஷ்ட சிராத்தத்தில் புசித்தவன் நாயாகப்பிறக்கிறானென்றும், பிரம பு
ராணத்திலும், பொய்ஸாக்ஷியம் சொன்னவனும் சொல்வித்தவனும்
மலத்தில் புழுவாகப்பிறக்கிறார்களென்றும், அவர்கள் பின்பு ஸர்ப்ப
ங்களாகப்பிறந்து பிசாசஜந்ம மெடுக்கிறார்களென்றும், சந்திரசூரிய
கிரகணத்தில் புசித்தவன் யானையாகப்பிறக்கிறானென்றும் கருடபுரா
ணத்திலும், பஞ்சமஹாயக்கியங்களைச் செய்யாமல் புசித்த பிராம்ம
ணன் பன்றியாகவும் மாம்சத்தைப் புசிக்கும் வேடனாகவும் பிறக்கி
றானென்று சிவதர்மோத்தரத்திலும், வெகுவாக யாசகம்செய்யும் பி
ராம்மணன் கழுதையாகவும், சிராத்தபோஜநம் செய்கிறவன் காக்
கையாகவும் பிராம்மணனுக்குப் பழையதாகிய அந்நத்தைப்போட்ட
வன் குள்ளனாகவும் பிறக்கிறார்களென்று வாயுஸம்ஹிதையிலும், பா
யஸம் கிருஸரம் இவைகளைப் பிராம்மணனுக்கும் அக்நிக்கும் உப
யோகிக்காமல் புசித்தவன் பாம்பாகப்பிறக்கிறானென்று உபாமஹேச
வர ஸம்வாதத்திலும், பர்த்தாவின் ஸௌக்கியத்தினால் தான் சுகிக்கா
தவள் பெண்கழுகாகப்பிறக்கிறாளென்றும், பர்த்தாவின் விஷயத்
தில் தன்னிடத்திலிருக்கும் பொருளைக்கொடாதவள் மலத்தில் புழு
வாகப் பிறக்கிறாளென்றும் நாரதீயபுராணத்திலும், அன்புள்ளவர்க
ளான பதிபத்நிகளுக்குக் கலகத்தை உண்டுபண்ணினவர்கள் கு

ரூபிகளும் பழிக்கப்பட்டவர்களுமாகித் தரித்திரர்களாய்ப் பத்நிவி யோகத்தை அடைகிறார்களென்றும், கந்நிகாதாநத்திற்கு விக்கிநம் செய்தவன் விசேஷமாகப்பெண்களையே பெறுவானேயல்லது பிள் ளைகளைப் பெறமாட்டானென்றும் ஸ்காந்தபுராணம் நாகரகண்டத்தி லும், ஒருவனுக்கும் ஒன்றையும் கொடாதவன் தரித்திரனாகப் பி றக்கிறானென்றும், தாய், தந்தை, ஸோதரன், குரு, கைகால்முதலிய அங்கக்குறைவுடையவன் இவர்களை அநாதரம் செய்தவர்கள் இந்த லோகத்தில் ஏழைகளாகவும் கண் முதலிய இந்திரியங்களால் கு றைந்தவர்களாகவும் ஆகிறார்களென்றும், பகவானைத் தியாநம்செ ய்கையில் அதை அலட்சியம்செய்கிறவர்கள் ஜந்மங்கள்தோறும்செ விடராகப்பிறக்கிறார்களென்றும், பகவானுடைய ஆலயங்களைக்கண்டு நமஸ்காரம்செய்யாமல் போகிறவர்கள் பிறவிக்குருடரும் கைகால் கு றைந்தவர்களும் குஷ்டநோயுடையவர்களுமாகப் பிறக்கிறார்களெ ன்றும் விஷ்ணுவின் நிழலையும் விஷ்ணுவாலய கோபுர விமாநாதிக ளின் நிழலையும் தாண்டியும் மிதித்தும்சென்றவர்கள் பூமியில் நொ ண்டிகளாகவும், நோயாளிகளாகவும் பிறக்கிறார்களென்றும் கருடபு ராணத்திலும், தேவதைக்காக ஏற்றிய தீபத்தினால் தன்கர்மங்களைச் செய்த மூடன் கண்ணை யுடையவனாகிறானென்றும் அயலானை அ டித்தவன் தானடிபடுகிறானென்றும் அயலார்விஷயத்தில் மனோவாக் குக்காயங்களால்செய்த தோஷத்தை அவ்விதமாகவே அந்தப்பருவத் திலேயே அநுபவிக்கிறானென்றும் விஷ்ணுதர்மோத்தரத்திலும், நா ஸ்திகரும், வைதிக கிரியைகளை ஆலஸ்யத்தினால் அநுஷ்டிக்காதவர் களும் குருவையும் சாஸ்திரவிதியையும்அதிக்கிரமித்தவர்களும் தரு மத்தை அறியாதவர்களும் கீழ் எச்சிலையுடையவனாகவாவது மேலெ ச்சிலையுடையவனாகவாவது பேசுகிறவனும் வேதமோதத் தகாதகால த்தில்வேதத்தை ஓதுகிறவனும்சூரியன், அக்கினி, பசு, பிராம்மணன்இவ ர்களுக்கெதிராகவும்வழியிலும் மலமூத்திரங்களை விடுகிறவனும் அல்பா யுசுக்களாகிறார்களென்றுமகாபாரதத்திலும், தேவதையின் திரவியத்தி னால்பிழைக்கிறவன் நாவில்ரோகமுடையவனும் தேகம்முழுதும் அட ங்காததினவுடையவனும் வயிற்றில்குன்மநோயுடையவனுமாகிறானெ ன்றும் உபகாரம்செய்தவனுக்கு அபகாரம்செய்தவன் சுவாஸகாசரோ கம், ஜ்வரம், மேகம், குன்மம், முதலியரோகங்களால் வருந்தியும்,

பிள்ளைகள் பிறந்திறந்து பின்பு மலடனாகவும் ஆகிறானென்றும்; சிவதர்மோத்தரத்திலும், திவ்ய ரஸங்களோடு கூடிய அந்நத்தைச் சிறுவர்களுக்குக்கொடாமல் அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில்தானொருவனாகப்புசிக்கிறவனும் ஹோம தாநாதிகளைச் செய்யாதவனுமான பாபிகள் மழையின்றித்துர்ப்பிக்ஷத்தினால் வருந்துகின்ற தேசத்தில் பசியினால் பரிதபித்துப் பாபத்தொழிலைச் செய்கிறவர்களாகிறார்களென்று உமாமஹேசுவரஸம்வாதத்திலும், பிரமஹத்தியைச் செய்தவன் அநேக கல்பங்கள் நரகங்களை அநுபவித்துப் பின்புபற்பல புல் புதர் கொடி மரங்கள் ஆகிய ஸ்தாவர ஜந்மத்தைப் பலதேசங்களிலுமடைந்து நெடுங்காலங்கழித்துப் பாம்பாசப்பிறந்துபின்னும் துக்கத்தைத்தருகின்ற பற்பல ஜந்மங்களை அடைகிறானென்று நந்திபுராணத்திலும், ஸுராபாநம்செய்தவனும் அதைவிற்பவனும் அதற்காகக் குடிசை கட்டினவனும் அறுபதினாயிரம் வருஷம்புழுவாக ஜநித்துப்பின்பு நாயாக நூறுஜந்மமும் குள்ளநரியாகஇருபத்தைந்து ஜந்மமு மெடுக்கிறானென்று உமாமஹேசுவர ஸம்வாதத்திலும், புசிக்கத்தகாத போஜநத்தைப்புசித்த பிராம்மணன் புழுவாகப்பிறக்கிறானென்று விஷ்ணுஸ்மிருதியிலும், ஸ்வர்ணத்தைத்திருடினவன் நக ரோக முடையவனாகவும் புஸ்தகத்தைத் திருடினவன் ஊமையாகவும் அந்நத்தைத்திருடினவன் தவளையாகவும் குரு தார கமநம்செய்தவன் பன்றியாகவும் பிறக்கிறார்களென்று விஷ்ணுதர்மோத்தரத்திலும் சொல்லப்பட்டன. பாபத்தில் புத்தி பிரவேசிக்காமைக்காகவும் செய்த பாபத்திற்குப் பிராயச்சித்தத்தை அநுஷ்டிக்க வேண்டியதற்காகவும் பாபத்தின் ஸ்வபாவத்தைக் காண்பிப்பதற்காகவும் இவ்விதமான கர்ம விபாகங்கள் சில ரிஷி வசநங்களைக்கொண்டு இங்கு அல்பபாகம் தெரிவிக்கப்பட்டனவேயன்றி முழுதும் எழுதப்படவில்லை.

౭౦౪॥ ఏతత్పారాశరంశాస్త్రం శ్లోకపంచశతాధికమ్।
త్రిసప్తతిసమాయుక్తం ధర్మశాస్త్రస్యసంగ్రహం॥

இந்த ஸ்மிருதியின் அத்தியாய சுலோக ஸங்கியை. (இ-ள்) பன்னிரண்டத்தியாயங்களை யுடையதும் கலிதர்மத்தை யுபதேசிப்பவரான ஸ்ரீபராசர மஹாமுனிவரா லருளிச்செய்யப் பட்டதுமான இந்தச்சாஸ்திரமானது ஐந்நூற்று எழுபத்து மூன்றுசுலோகங்களோடு கூடியதாய் மந்வாதி ஸ்மிருதிகளைப்போல் விஸ்தாரமாகாமல் தர்ம

சாஸ்திரத்தின் ஸங்கிரகமென்றும் அதாவது வெகுவாகிய அர்த்தங்களைச் சுருக்கமான பதங்களால் விரித்துரைக்கும் நூலென்றும் சொல்லப்படும். (எ-று.) (அ௦௨)

౬౯॥ యథాధ్యయన ధర్మాణి ధర్మశాస్త్రమిదంతథా॥
అధ్యేతవ్యం ప్రయత్నేన నియతం స్వర్గగామినా॥

இந்த ஸ்மிருதியை அத்தியயநம் செய்யும் விதமும் பயனும். (இ-ள்.) வேதத்தை அத்தியயநம்செய்வது இருபிறப்பாளருக்கு எவ்விதமோ (எவ்வித நியமங்களையுடையதோ) அவ்விதமாகவே இந்தத்தர்மசாஸ்திரமும் பிரயத்நப்பட்டு நியமங்களுடன் ஆசாரிய முகத்தினல் அவசியம் ஸ்வர்க்கலோகத்தை அடையும் மஹாபுருஷனல் அத்தியயநம் செய்யத்தகும். (எ-று)

சுருதியில் சொல்லிய தர்மங்களை அநுஷ்டிப்பிக்கும் சாஸ்திரமாகையால் இந்த ஸ்மிருதியானது படித்த மாத்திரத்தில் சுருதியைப் போல் ஸ்வர்க்கமென்னும் புண்ணியலோகத்தை அடைவிக்கத்தக்க மங்களகரமானதென்பது கருத்து. (அகஉ)

ஒன்பதாவது அத்தியாயம் முற்றிற்று.

பிராயச்சித்தகாண்டம் ஸம்பூர்ணம்,

ஸ்ரீபராசர ஸ்மிருதி முற்றிற்று.

ஸ்ரீபராசர மஹா முநயே நம:

———:0:———

ஸ்ரீராம ஜயம்.

பாராசர ஸ்மிருதி.

பிழை திருத்தம்.

—.o:—

ஆசார காண்டம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௩	௧௮	நாலாவது	பிராயச்சித்த காண்டத்தின் முதலாவது
,,	௧௯	ஐந்தாவது	இரண்டாவது
,,	௨௨	ஆருவது	மூன்ருவது
,,	௨௭	எழாவது	நான்காவது
,,	௨௮	எட்டாவது	ஐந்தாவது
,,	௩௦	ஒன்பதாவது	ஆருவது
,,	௩௨	பத்தாவது	எழாவது
௪	௧	பதினொராவது	எட்டாவது
,,	௩	பன்னிரண்டாவது	ஒன்பதாவது
௩௬	௫	சொலவி	சொல்லி
௪௨	௩௦	போதயநர்	போதாயநர்
௪௫	௧௦	செம்மானம்	செவ்வானம்
௭௧	௭	பேரீச்சம்	பேரீச்சு
௮௦	௧௫	அல்து	அல்லது
௮௧	௩௨	குலாச்சாரம்	குலாசாரம்
௮௪	௫	தேவால்யம்	தேவாலயம்
௯௧	௨௮,௨௯	மேல்ப்பட்ட	மேற்பட்ட
௯௨	௩	சொல்லப்பட்டது	சொல்லப்பட்டார்கள்
௯௭	௨௦	ஒருவனுக்கு	ஒருவனுக்கு
௧௦௮	௨	ஸ்திரீக்	ஸ்திரீக்கும்
௧௦௯	௩௪	ஸுகதன்	ஸுதன்
௧௨௬	௨௧	அநுஷ்டிக்கத்தாகு	அநுஷ்டிக்கத்தக்கதாகு
௧௪௧	௧௨	ஆறுவேதம்	நாலுவேதம்
௧௭௩	௨௩	குங்கிலியம்	குங்குலியம்
௧௭௮	௩	வேண்டுமென்றும்	வேண்டும்.
,,	௫	லாகாதென்றும்	லாகாதென்று
௧௮௪	௭	தென்றறிக	தென்றுமறிக

பிராயச்சித்த காண்டம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௮	௭	சீழ்ச்சொன்ன	கீழ்ச்சொன்ன
௨௧	௨௧	எனாகிலும்	எவனாகிலும்
௩௨	௧௭	அநுஷ்டித்	அநுஷ்டித்து
௩௫	௨	சொனார்கள்	சொன்னார்கள்
௬௫	௩௨	ஸ்தாநம்	ஸ்நாநம்
௮௬	௨௫	வெதத்தை	வேதத்தை
௮௭	௧௫	அக்நியா	அக்நி
௯௫	௧௨	பாரிஷத்தின்	பரிஷத்தின்
௯௮	௨	மூள்று	மூன்று
௧௦௨	௧௧	காடடிலும்	காட்டிலும்
௧௨௧	௧௮	அவ	அவர்
௧௨௫	௪	சண்டாளியாகி	சண்டாளிகளாகி
,,	,,	இவள்	இவர்கள்
,,	௫	பிறந்தவளும்	பிறந்தவர்களும்
,,	,,	ஸ்திரீ	ஸ்திரீகள்
,,	,,	என்னப்படுவாள்	என்னப்படுவார்கள்
௧௨௬	௩	செய்யத்தக்கதென்றும்	செய்யத்தக்கதென்று
௧௮௦	௯	கிருஷ்ணாஜிநத்தை	கிருஷ்ணாஜநத்தை
௧௯௪	௧௨	பிராயசிசித்தம்	பிராயச்சித்தம்
,,	௨௪	அங்நம்	அங்நம்,
௧௯௬	௩௫	முதா	முத
௨௦௮	௩௨	வருந்தியும்	வருந்துவதன்றிப்

ஆசாரகாண்டம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
க	௨	చ్ఛె	చ్ఛె
க௫	௨௬	ఠ	ఱ
க௮	௨௯	జ్యోద్భ	జ్యోద్భ
௫௮	௩௦	స్యాధ్యా	స్యాధ్యా
௭௪	கக	హ	హ
௭௫	க௪	జ్ఘి హ	జ్ఞై హ
௭௬	௩௨	స్వ్య	స్వ
க௨௪	க௨	ద్యాం	ద్యాం
க௨௫	௩	ల్వ	ల్వి
க௩௩	க௪	పష	పష
,,	௨௬		
க௩௯	க௭		
க௫௦	௨௨		

பிராயச்சித்தகாண்டம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
க௭	௨௨	షే	షోటే
௨௨	க௨	ణ	
௨௪	௯	ష్ర	ష్ర
௨௬	௪	సు	స్తు
௨௭	௩	న్య	న్య
௩௬	௩க	చ రే	చ రే
௩௭	௨௮	భ	భు

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௩௯	௨௮	సథ	సా
௪௨	௧௭	స్తో	ణ్తో
௪௪	௨௦	మేతు	మేపతు
௪௫	௩௩	స్పై	స్పై
௫௨	௧௭	నాౖ	స్వా
௬௦	௨௯	అ	అ
,,	௨௯	దం	ద
,,	௨௮	హే	హి
௬௩	௪௦	హా	హ
,,	௧௧	వపి	వపి
௬௫	௧௪	మో	మే
,,	௧௫	హా	హ
,,	௨௪	అ	అ
,,	௨௫	దేవ	దేవ
௬௯	௧	స్త్రో	ణో
௭௨	௧௫	సైఁ	ఞ్తో
௮௩	௨௯	అ	అ
௮௮	௧௯	నో	నో
௧௦௭	௧௮	తి	తి
௧௪௧	௨௦	త్సా	త్సా
௧௪௫	௯	చ్చ	ఛ్చ
௧௫௫	௫	బ్యౌ	బ్బ
௧௯௨	௮	ఢ్య	ఢ్య
௧௩௪	௫	కౢ	కౢ
௧௩௯	௨௯	సె	సె
௧௭௯	௪	యనా	యానా

800 009
22 5 353